3. கடுமையான வறட்சியை இம் மாநிலம் எதிர்கொள்ள வேண்டியிருக்கிற இக்கட்டான நிலையை இம்மன்ற உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர முதற்கண் விரும்புகிறேன். இது குறித்து ஒரு சில வாரங்களுக்கு முன்னர் இம் மன்ற உறுப்பினர்கள் விரிவாக விவாதித்தனர். அதன்பின், இம் மாநிலத்தின் பல மாவட்டங்களிலும் வறட்சி நிலையை நேரில் கண்டு நிலைமையைத் தெளிவாக அறிய, முதலமைச்சர் அவர்களும் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களும் நானும் இம் மாநிலம் முழுவதிலும் சுற்றுப்பயணம் மேற்கொண்டோம். இவ்வாறு சுற்றுப்பயணம் செய்ததன் விளைவாகவும் அதனைத் தொடர்ந்து அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாகவும், வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள நிர்வாக இயந்திரம் முழுமூச்சுடன் செயல்படும் வகையில் முடுக்கிவிடப்பட்டுள்ளது. மக்களின் துயரைப் போக்குவதில் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்; நிதி நிலையை முட்டுக்கட்டையாகக் கருதாமல், துயர் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு உறுதியளிக்கிறேன். தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், வேளாண்மைப் பொறியியல் துறை, நில நீர் இயக்கம் ஆகிய மூன்று அமைப்புகளும் கிணறுகளைத் தோண்டுதல், ஆழப்படுத்தல் ஆகிய பணிகளை மாபெரும் அளவில் மேற்கொண்டு வருகின்றன. சில வருடங்களுக்கு முன்பு தமிழ்

நாட்டில் கடுமையான வறட்சி நிலைமை நிலவியதை இந்தத் தருணத்தில் நான் நினைவுகூற விரும்புகிறேன். ஏழை கிராம மக்கள் தங்களது கால்நடைகளையும், உடைமைகளையும் விற்று விட்டு, மற்ற மாவட்டங்களுக்குக் குடிநீர், உணவு மற்றும் வேலை தேடிக் குடியேற வேண்டிய நிலை அப்போது ஏற்பட்டது. ஆனால் இப்போது அரசு தக்க நடவடிக்கைகளை உரிய நேரத்தில் எடுத்த காரணத்தால் இந்தப் பெருங்கேடு தவிர்க்கப்பட்டுள்ளது. குடிநீர், உணவு மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் போன்றவை மக்களுக்குக் கிடைப்பதற்காக நன்கு முறைப்படுத்தப்பட்ட வறட்சி நிவாரணப் பணி தொடர்ந்து நடைமுறைப்படுத்தப் படுவதால் இந்தமாதிரியான நிலை வரும் மாதங்களிலும் உருவாகாது என்பதில் அரசுக்கு நம்பிக்கை உண்டு. வறட்சி நிலையின் கடுமையைப் பற்றியும் வறட்சி நிலைமைகளை நேரில் கண்டறிய அதிகாரிகள் குழு ஒன்றை அனுப்பி வைப்பதன் அவசியம் பற்றியும் மத்திய அரசுக்கு ஏற்கெனவே எழுதியுள்ளோம். மத்திய அரசு தன்னால் இயன்ற அளவு நிதி உதவியை இம் மாநில அரசுக்கு வழங்குமென்று நான், நம்புகிறேன். மக்களை வாட்டி வதைக்கும் வறட்சித் துயரினைக் களையும் பொதுப் பணியில் இவ்வரசின் கைகளை வலுப்படுத்தும் வகையில் இம் மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க முன்வருவரென்று உறுதிகொள்கிறேன். வறட்சி நிலை கடுமையாக இருந்தபோதிலும், அது நமது கட்டுக்குள்தான் இருந்து வருகிறது. குடி தண்ணீர், உணவு, வாழ்க்கைக்கு வேண்டிய ஏனைய தேவைகள் ஆகியவை மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படிப் பார்த்துக்கொள்வதில் இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என உறுதி கூறுகிறேன்.

## உணவு நிலைமை

4. பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, உணவு தானிய உற்பத்தி இம் மாநிலத்தில் இறங்குமுகமாக இருக்கக் கூடும். எனினும், பருவ மழை தவறாது பெய்யுமானால், 65 இலட்சம் டன் அரிசி கிடைக்கும் வகையில் நெல் உற்பத்தியும், 22·80 இலட்சம் டன் சிறு தானியங்கள் உற்பத்தியும், 4·34 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தியும் ஆக, மொத்த உணவு தானிய உற்பத்தி 92·14 இலட்சம் டன்களாக அடுத்த ஆண்டு அமையும் வகையில் ஏற்றதொரு திட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

5. பருவ மழை பொய்த்துப் போனதன் விளைவாக, நெல் விளைச்சல் இயல்பான அளவுக்கும் குறைந்து விட்டது. இதனால், பொதுப் பங்கீட்டு ஏற்பாட்டின் மூலம் ஏராளமான மக்கள் அரிசி வாங்கத் தலைப்பட்டுள்ளனர். இதனைச் சமாளிக்க, வணிகர்கள் லெவி அளக்கும் முறையை அரசு செயலுக்குக் கொண்டு



வந்தது. இதன்படி, மொத்த விற்பனை வியாபாரிகள் இம் மாநிலம் முழுவதிலும் நெல்லையும் அரிசியையும் கொள்முதல் செய்யும் முதல் முனையில் குறிப்பிட்ட அளவுள்ள தானியங்களை அரசு குறிப்பிடும் விலையில் அரசுக்கு விற்கவேண்டும். வெளிச் சந்தையில் கிடைக்கின்ற அரிசிக்கு உறு துணையாக விளங்கும் வகையில் போதிய அளவு முடையிருப்பு (Buffer stock) இருக்குமாறு பார்த்துக்கொள்வோம். இம் மாநிலத்துக்கு வெளியிலிருந்தும் அரிசி கொள்முதல் செய்வதற்குத் தமிழ் நாடு நுகர் பொருள் வாணிப நிறுவனம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப் பிரதேசம் போன்ற உபரி மாநிலங்களிலிருந்து அரிசி அல்லது நெல் கொள்முதல் செய்து எடுத்துவர, முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்தியத் தொகுப்பு ஏற்பாட்டிலிருந்து அதிக அளவு அரிசியை இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறும், ஒதுக்கீடு செய்த அளவினை இம் மாநிலத்திற்கு விரைந்து கொண்டு வர ஏற்பாடு செய்யுமாறும், மத்திய அரசை வேண்டியுள்ளோம். திங்கள் ஒன்றுக்கு இம் மாநிலத்திற்கென 3,000 டன் கோதுமை ஒதுக்குவதற்குப் பதிலாக, 10,000 டன் கோதுமை ஒதுக்குமாறும் கருத்து தெரிவித்துள்ளோம்.

## மாநிலத் திட்டம்.

6. இம் மாநிலத்தின் திட்டப் பணிகள் பற்றி ஆராயும்போது, இம் மாநிலத்தின் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் ரூ. 3,150 கோடி அளவுக்கு இருக்கவேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அறிவர். நடப்பாண்டுத் திட்டத்துக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 411 கோடி என்ற அளவிற்கே இருக்க, அடுத்த நிதி ஆண்டில் ரூ. 514 கோடி மதிப்பீட்டுச் செலவிலான திட்டத்துக்கு மத்தியத் திட்டக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஆனால், வளர்ச்சி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்கவேண்டும்; அப்போதுதான், மேலும் பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ள முடியும் என்பதே இவ்வரசின் கருத்து. எனவே, அடுத்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கென ரூ. 563·26 கோடி அளவிலான திட்டத்தைத் தீட்டியுள்ளோம். இந்த அளவுள்ள திட்டத்தை நிறைவேற்றவேண்டுமானால், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு இம் மாநில அரசு மேலும் முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ளத்தான் வேண்டும். இது பற்றி விரிவாகப் பின்னர் கூறுவேன்.

## வேளாண்மை

7. கிராமப் பகுதியில் வேளாண்மை விரிவாக்கப் பணியை மேற்கொள்வதில் சிறப்பு நாட்டம் செலுத்த வேண்டுமென இவ்வரசு கருதுகிறது. இதனை எய்தும் பொருட்டு,

வேளாண்மை விரிவாக்கப் பணியைச் சீரமைத்து வலுப்படுத்தப் புதிய திட்டமொன்றை வகுத்துள்ளோம். விரைவில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, உலக வங்கி அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். இம் மாநில நிலைமைகளுக்கு ஏற்ற, சிறந்த, நவீனப் பண்ணை முறைகளை இத்திட்டத்தின் மூலம் உழவர்கள் பெறலாம். இரண்டாண்டுக் கால அளவில் இத் திட்டம் இம் மாநிலத்தில் செயலுக்கு வருமென எதிர்பார்க்கிறோம்.

8. இப்போது இம் மாநிலத்தில் ஆண்டுதோறும் 103 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. இதனை 5 ஆண்டுக் கால அளவில் ஆண்டுதோறும் 153 கோடி காய்களாக உயர்த்துவதற்கு இவ்வரசு திட்டமொன்றைச் செயல்படுத்தி வருகிறது. இந்நோக்கத்தை எய்துவதற்காக, இம் மாநிலத்திலுள்ள தென்னம்பிள்ளை வளர்ப்புப் பண்ணைகளில் சிறந்த வகை தென்னங்கன்றுகளை உற்பத்தி செய்ய அவற்றின் நடவடிக்கைகள் கணிசமான அளவுக்குப் பெருகியுள்ளன. உள்நாட்டிலேயே பாமாலின் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஒருவகை பனை வளர்ப்பை ஊக்குவிக்கும் திட்டம் ஒன்றையும் அரசு தீட்டி வருகிறது. இச் சிறப்பு வகை பனை வளர்வதற்கேற்ற தட்ப வெப்ப நிலையுள்ளதெனத் தெரிந்தெடுத்த சில மாவட்டங்களில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டமும் சமையல் எண்ணெய் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஏனைய திட்டங்களும் சமையல் எண்ணெய் கிடைப்பதில் இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள ஓரளவு தட்டுப்பாட்டினை ஒரு சில ஆண்டுகளில் போக்கிவிடும். செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் வேர்க்கடலை உற்பத்தியைப் பத்தாண்டுகளில் பெரிதும் பெருக்க இவ்வரசு கருதியுள்ளது. இக் குறிக்கோளைக் கருத்திற்கொண்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர் இணையம் நிறுவப்பட்டுள்ளது. இந்த இணையம் தனது உறுப்பினர்களாயுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் துணை கொண்டு, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியை உழவர்கள் உயர்த்தவும், உற்பத்தியான பொருள்களுக்கு நல்ல விலை பெறவும் உழவர்களுக்கு உதவி செய்யும்.

9. சிறு உழவர் மேம்பாட்டு நிறுவன அமைப்புத்திட்டம் ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்துடன் 1980 அக்டோபர் திங்கள் முதல் இணைக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டில் வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் 20.64 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும். இதற்காகும் [illegible] மத்திய அரசும் மாநில அரசும் சமமாகப் பகிர்ந்து கொள்ளும்.



## கூட்டுறவு

10. கூட்டுறவு இயக்கம் தமிழ் நாட்டில் நன்கு வேரூன்றியுள்ளது. இத் துறைக்கு அரசு அளித்து வரும் உதவி அனைவரும் அறிந்த ஒன்றாகும். கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க அடுத்த ஆண்டில் பல திட்டங்கள் மேற்கொள்ளப்படும். ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டுவரப்படும். ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார். இத்தகைய சங்கங்கள் அளிக்கும் கடன் உதவியையும் பிற பணிகளையும் பயன்படுத்திக் கொண்டு, இச் சமூகத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்க இந்தத் திட்டம் வகை செய்யும், 1981–82 ஆம் ஆண்டில் 40,000 பேர் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படும் ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய் உதவித் தொகை அளிக்கக் கருதியுள்ளது. பயிர்க் கடன் பெறவும், பாற்பண்ணை நடத்துதல், கோழி வளர்த்தல், செம்மறியாடு வளர்த்தல் முதலியவற்றுக்கு நடுத்தர காலக் கடன் பெறவும் அச் சங்கத்துக்கு அவர் செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்தை முன்னிட்டே இந்த உதவித்தொகை அவருக்கு அளிக்கப்படும்.

11. 1981–82 ஆம் ஆண்டில் மேற்கொள்ளவிருக்கிற மற்றொரு திட்டம், இம்மாநிலத்தின் முக்கிய நகரங்களில் மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநர் சங்கங்களை அமைப்பதாகும். மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களை வாங்குவதற்கு 1,000 உறுப்பினர்களுக்கு நிதி உதவி அளிக்கப்படும். மாநில அரசு அளிக்கும் நிதி உதவி, மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷா விலையில் கால் பங்குக்கு 1,125 ரூபாய் உதவித்தொகை வடிவில் இருக்கும். விலையில் எஞ்சிய பகுதியை உறுப்பினர்கள் கடன் வாங்குவது மூலம் பெற வேண்டும்.

## கால்நடை வளர்ப்பு.

12. 1981–82-ல், 29.60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செலவில், செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டம் தொடங்கப்படும். கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், பால் உற்பத்தியைப் பெருக்கவும் ஒவ்வொரு திட்டத்தின்கீழும், ஒரு இலட்சம் கால்நடைகள் கொண்டுவரப்படும். தக்க நிலங்கள் மிகப் பரந்த பரப்பளவில் அமைந்துள்ள, அரசு நடத்திவரும் 9 கால்நடைப் பண்ணைகளை இலாபகரமாக்கப் பாசன வசதி மேம்படுத்தப்

## மீன்வளமும் மீனவர் நலமும்

15. உள்நாட்டு நீர் நிலைகளில் மீன் வளர் [illegible] திட்டம் [illegible] ஆண்டுதோறும் 10 கோடி மீன் குஞ்சுகள் [illegible] கப்படும்; முதல் கட்டப் பணி 1983-84 [illegible] செய்யும். அதன்பின், மேலும் [illegible] தொடர்ந்து நடைபெறும் [illegible] உற்பத்தி ஆண்டுக்கு 30 கோடியாக [illegible] தேக்கங்களிலும் [illegible] குஞ்சுகள் விட்டு வளர்க்கப்படும். [illegible] இளைஞர்களுக்குப் பயிற்சியளிக்கும் [illegible] பட்டுள்ளது. பயிற்சி நிலையங்களில் [illegible] 1,000 இளைஞர்கள் பயிற்சி பெறுவர். [illegible] மீன் பிடிப்பு நடவடிக்கைகளும் [illegible] 1981-82 ஆம் ஆண்டில் [illegible] கங்கள் [illegible] [illegible] பாசி, வெட்டோர் பாசி, மஞ்சள் [illegible] பகுதிகளில் கிடைக்கிற மீன்களைப் பிடி [illegible] படுத்தப்படும். மேலும், தமிழ்நாட்டு [illegible] கிழக்குக் கடற்பகுதிகளில் கிடைக்கும் [illegible] பற்றிக் கொள்ள, தமிழ்நாடு மீன [illegible] பர்ஸ்சீன் (Purse Seiner) 45 அடி நீள [illegible] வாங்கும். சென்னை நகரிலும் [illegible] கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி [illegible] போன்ற பல [illegible] விற்பனைக் [illegible] இந்த நிறுவனம் மீன் விற்பனை [illegible] யும் முனைப்பாகவும் [illegible].

16. [illegible] மீனைக் [illegible] வசதிகளும் மீன்பிடி துறைமுக வசதிகளும் [illegible] பும் பெரிதும் தேவைப்படும். சென்னை [illegible] துறைமுகம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. [illegible] சின்ன முட்டத்தில் மீன்பிடி துறைமுகம் [illegible] நோக்கத்தில் சிறிய அளவில் [illegible] படும். தஞ்சாவூர் மாவட்டத்தில் [illegible] வசதிகளை உருவாக்கப் புன்னையடி [illegible]. இத்தகைய வசதிகளை [illegible] புனலாய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன [illegible] யைப் பெருக்கவும் இன்றைக் உணவு வேளாண்மை [illegible] (F.A.O.) ஒத்துழைப்புடன் [illegible] வருகிறது. சிறு மீனவர்கள் [illegible] வதற்கு மிக வாய்ப்பான சிறு [illegible] பொருட்டு, சிறு மீன்பிடிப்புகள், [illegible].

கட்டுமரம் போன்ற படகுகள் ஆகியவற்றைக் கொண்டு முன்னோடி மீன் பிடிப்பு மேற்கொள்ளப்படுகிறது. இரு மீன்பிடி கலங்கள் இணைந்து பணியாற்றுவதன் வெற்றி வாய்ப்புகளை மதிப்பிடுவதற்காக, மண்டபத்திலும் தூத்துக்குடியிலும் சோதனைகள் நடைபெற்று வருகின்றன.

### காடு வளர்ப்பு

17. காடுகளைப் பரவலாக அழிப்பதால், பொதுவாகப் பருவ மழை பொய்த்துப் போகிறது என்பது அனைவருக்கும் தெரியும். வீட்டுப் பயனுக்காகவும் ஏனைய தொழிற் பயனுக்காகவும் மரங்களை வெட்டுவது அவசிமென்றாலும், முனைப்பாகக் காடு வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதும் அவசியமாகும். சமூகக் காடு வளர்ப்புக்கு அரசு சிறப்பு முக்கியத்துவம் அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் கால அளவில் 45 கோடி ரூபாய் செலவு ஏற்படும் சிறப்புத் திட்டம் ஒன்றை வகுப்பதற்காக, ஸ்வீடன் நாட்டு சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறோம்.

### மின் உற்பத்தி

18. இம்மாநிலத்தில் மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மாநில அரசு தலையாய முன்னுரிமை அளித்து வருகிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான 3,150 கோடி ரூபாயில், மின் உற்பத்திக்கு மட்டும் ஏறக்குறைய 1,023 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மின் இணைப்பு ஏற்பாட்டின் உற்பத்தித் திறனளவு இத்திட்ட கால அளவின் தொடக்கத்தில் 2,719 மெகாவாட்டாக இருந்தது. இது இத்திட்ட கால இறுதிக்குள் 4,769 மெகாவாட்டாக உயர்த்தப்படும். தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் இரண்டாவது இயந்திரம் இந்த ஆண்டு சனவரித் திங்களில் செயல்படத் தொடங்கியது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் மூன்றாவது இயந்திரமும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் 235 மெகர்வாட் மின் உற்பத்தி செய்யும் இயந்திரமும் செயல்படத் தொடங்கி, தமிழ்நாட்டு மின் உற்பத்தித் திறனளவு 1981–82 ஆம் ஆண்டில் 3,374 மெகாவாட்டாக உயரும். மேட்டூர் அனல் மின் நிலையத்தையும் கீழ் மேட்டூர் புனல் மின் நிலையத்தையும் நிறுவும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இவற்றின் பயன்கள் ஆறாவது திட்டக் கால அளவின் கடைசி இரு ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும். பேசின் பிரிட்ஜ் மின் உற்பத்தி நிலையத்தில் இப்போதுள்ள இயந்திரங்களுக்குப் பதிலாக, 110 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் புதிய இயந்திரம் வாங்குவதற்கான திட்ட அறிக்கை ஒப்புதல் பெற வேண்டி



இப்போது மத்திய அரசிடம் உள்ளது. 630 மெகாவாட் மின்
உற்பத்தித் திறனுள்ள அனல் மின் நிலையத்தை வட சென்னை
யில் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் 30,000
பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பதென இலக்
கிட்டிருக்க, 1981 பிப்ரவரி வரை 29,742 பாசனக் கிணறு
களுக்கு மின் இணைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில்
மொத்தம் 916,969 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்புக்
கொடுக்கப்பட்டிருப்பதால் இத்துறையில் தமிழ் நாடு தான்
இந்தியாவில் முதலிடம் வகிக்கும் சிறப்பு பெற்றுள்ளது. இம்
முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, 1981–82 ஆம்
ஆண்டில் மேலும் 30,000 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு
அளிக்கப்படும். குடிசைகளுக்கு மின்னொளி வழங்கும்திட்டத்தை
தொடங்கியதிலிருந்து ஒன்றரை ஆண்டுகளுக்குள் 2·7 இலட்சம்
குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.

19. பருவ மழை பொய்த்து, நீர்த் தேக்கங்களில் குறைந்த
அளவில் நீர் இருப்பதால், மின் வெட்டு விதிக்க வேண்டிய அவசி
யத்துக்குத் தமிழ்நாடு அரசு ஆளாக நேரிட்டுவிட்டது. ஆனால்,
தூத்துக்குடியிலும் எண்ணூரிலும் மின் உற்பத்தி உயர்ந்து வருவ
தாலும் கேரளத்திலிருந்தும் நெய்வேலியிலிருந்தும் மின்சாரம்
கிடைத்து வருவதாலும், நிலைமை சீராகுமென நம்புகிறோம்.

20. கடந்த மூன்றாண்டுகளில், நிலக்கரியின் விலை டன்
னுக்கு 82 ரூபாயாக இருந்தது 114 ரூபாயாக உயர்ந்து விட்டது.
அவ்வாறே, நிலக்கரியைக் கப்பலில் எடுத்து வரும் செலவும்
இரயில் மூலம் எடுத்து வரும் செலவும் கணிசமான அளவு உயர்ந்து
விட்டன. கேரளத்திலிருந்து மின்சாரம் வாங்குவதற்கான
செலவு உயர்வும் இத்துடன் சேர்ந்து உள்ளது. மேலும், நெய்
வேலி நிறுவனத்திடமிருந்து வாங்கும் மின்சாரத்துக்கு அதிக
விலை கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது மின்சார வாரி
யத்திற்கு கிடைத்து வரும் வருவாய் நடைமுறைச் செலவுக்
குக் கூட போதுமானதாக இல்லை. பராமரிப்புச் செலவு,
வெளி நிறுவனங்களிடமிருந்து பெற்றுள்ள கடன்களின் உரிய
தவணைத் தொகை, வட்டி ஆகிய செலவுக்கு அரசு நிதி உதவி
அளிக்க வேண்டிய நிலையில் வாரியம் இருக்கிறது. அரசிடம்
இருந்து கிடைக்கும் உதவியாக 100 கோடி ரூபாயைக் கணக்கில்
கொண்ட பிறகும் மின்சார வாரியத்தின் ஆண்டுத் திட்ட செல
வான ரூபாய் 169·59 கோடிக்கு, ரூபாய் 89.31 கோடி அளவில்
பற்றாக்குறை இருக்கும். மின் கட்டண அமைப்பைத் திருத்த
வேண்டியதன் அவசியத்தைத் திட்டக்குழு வலியுறுத்தியுள்ளது.
மின். வாரியம் சீராகச் செயல்பட வேண்டுமானால், இவ்வாறு
திருத்துவது இன்றியமையாததாகுமெனத் திட்டக்குழு கருத்து
தெரிவித்துள்ளது. தமிழ்நாடு மின்வாரியம் விதித்து வாங்கும்

1981 மார்ச் 21] [பேராசிரியர் இரா. நெடுஞ்செழியன்]

### சேதுசமுத்திரத் திட்டம்.

29. சேதுசமுத்திரத் திட்டத்தைச் [illegible] செயல்படுத்த அனுமதிக்குமாறு மத்திய அரசை [illegible] வலியுறுத்தி வருவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் [illegible] இத் திட்டத்தை மீண்டும் [illegible] அதிகாரக் குழு ஒன்றை மத்திய அரசு [illegible] என்பதை மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு [illegible] மகிழ்ச்சி அடைகிறேன்.

### [illegible] போக்குவரத்து.

30. [illegible] களில் இந்த நிதி ஆண்டில் 1981 [illegible] 1,376 பேருந்துகள் புதிதாகச் [illegible] 10 இலட்சம் பேர் பயனடை [illegible] 310 [illegible] இணைக்கின்றவாறு பேருந்து [illegible] தில்லை. போக்குவரத்து [illegible] களை, பெட்ரோலியப் [illegible] ஆகியவற்றின் விலையில் ஏற் [illegible] பாதித்துள்ளது. 1979-80 [illegible] 6.67 கோடி ரூபாயை [illegible] 1980-81 இல் ஏறத்தாழ [illegible] இழப்பை அடையலாம். இது [illegible] 16 [illegible] குறைத்துவிடவே செய்யும். [illegible] ஆண்டுத் திட்ட அளவான [illegible] 14.46 கோடி பற்றாக்குறை [illegible] பொதுமக்களுக்குச் சிறந்த [illegible] அளிக்கவும் வேண்டுமானால், [illegible] அமைப்பதைத் தவிர வேறு [illegible] உயர்வுகளை ஏற்கெனவே [illegible] கட்டணங்களைத் திருத்தி [illegible] அரசு எடுத்து வருகின் [illegible] நாட்டில் நிலவும் கட்டண [illegible] வகையில் கட்டண வீதங் [illegible] பெட்ரோலியப் பொருள்களின் [illegible] உயர்வாலும், போக்கு [illegible] பொருள்களின் பெரும் விலை [illegible] கட்டணத்தைத் திருத்தியமைப்பது [illegible] அறிவிக்கப்படுகிறது.

### [illegible]

31. [illegible] மக்களிடையே பரவலாகச் [illegible] செலாவணியை நாட்டுக்கு [illegible] தொழில்களில் இதுவும் ஒன் [illegible] வேலை [illegible] கவர்ந்து ஈர்க்கும் [illegible] சுமூகம் அபராது பாடு [illegible] வகையில் [illegible]

பட்டு வருகிறது. மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி போன்ற அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் இடங்களை மேம்படுத்துவதுடன் பிச்சாவரம், ஒகேனக்கல் முதலிய இடங்களை மேம்பாடடையச் செய்வதற்கு அரசு கவனம் செலுத்தி வருகிறது. இவ்விடங்கள் சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய வளம் பெற்ற இடங்களாகும். இராமேஸ்வரம் மேம்பாட்டுக்கென 28 கோடி ரூபாய் மொத்தச் செலவிட்டில் பெருந் திட்டம் தயாரிக்கப்பட்டு, அனைத்து நாட்டு வளர்ச்சிச் சங்க நிதி கோர இந்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சிற்பக் கலை வளர்ச்சியையும், கோயில் கட்டிடக் கலை வளர்ச்சியையும் படிப்படியாகக் காண்பிக்கின்ற வகையில், மாமல்லபுரத்தில் திறந்த வெளி அரும்பொருட் காட்சியகம் அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இளைஞரிடையே சுற்றுலாவை [illegible] இளைஞர் இல்லங்கள், சுற்றுலா முக்கியத்துவம் பெற்ற இடங்களில் இப்போது கட்டப்பட்டு வருகின்றன. சுற்றுலா வளர்ச்சியை பெரும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், முக்கியமான இடங்களில் சுற்றுலாப் பயணிகள் விடுதிகளைத் தொடர்ந்து அமைத்து வருகிறது. மதுரையில் ஐந்து நட்சத்திர விடுதி ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. மற்றொரு பெரிய திட்டம் கோயம்புத்தூரில் ஏற்படும் நிலையில் உள்ளது. சுற்றுலாப் பயணிகளை அழைத்துவர, மலேசியாவிலும் சிங்கப்பூரிலும் ஏஜெண்டுகளைச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அண்மையில் நியமித்துள்ளது. அனைத்திந்தியாவிலும் இவ்வாறு ஏஜெண்டுகளை நியமிக்கும் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குவதில் பெருமை கொள்ளலாம்.

## கல்வி

32. 1980-81 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்ட தொகையான ரூபாய் 238.88 கோடி 1981-82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 255.35 கோடி ஆக உயர்ந்துள்ளது. பொதுக் கல்வி குறித்த திட்டச் செலவு 1980-81 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 18.71 கோடி ஆக இருந்தது. 1981-82 ஆம் ஆண்டு ரூபாய் 23.58 கோடி ஆக அதிகரித்து உள்ளது. வரும் ஆண்டில், கூடுதலாகப் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 1,650 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர். அவர்களில், தொடக்க நிலைப்பள்ளி நிலையில் 1,000 ஆசிரியர்களும் உயர்நிலைப்பள்ளி நிலையில் 200 பி.டி. தர ஆசிரியர்களும் புதிதாக நியமிக்கப்படுவர். இடைநிலைப் பள்ளிகளுக்கு 200 தலைமை ஆசிரியர்கள் பி.டி. தரத்தில் நியமிக்கப்படுவார்கள். 250 உடற்பயிற்சி ஆசிரியர்கள் பதவிகள் புதிதாக உருவாக்கப்படும். 250 கைத்தொழில் பயிற்சி ஆசிரியர்கள் பதவி பகுதி



நேர நிலையிலிருந்து முழு நேரப் பதவிகளாக மாற்றி அமைக்கப்படும். வரும் ஆண்டில் இடைநிலைப்பள்ளிகளுக்கு புதிதாக 500 தமிழாசிரியர்கள் பதவிகள் உருவாக்கப்படும். பெரிய கோவில்களில் தமிழாசிரியர்களை வேலைக்கு அமர்த்தும் திட்டம் ஒன்றை அரசு தயாரித்து வருகிறது. தர்மபுரி மாவட்டத்தில் மைய சமையல் கூடத் திட்டம் ரூபாய் 49.7 இலட்சம் செலவில் தொடங்கப்படும். 50 உயர் நிலைப் பள்ளிகளில் விஞ்ஞான அறிவியல் கூடத்திற்கான சாதனங்கள் வாங்குவதற்காகவும் 5 கல்வி மாவட்டங்களில் 5 நடமாடும் அறிவியல் கூடங்களைத் தொடங்குவதற்காகவும் ரூபாய் 50.17 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 50 இலட்சம் செலவில் அரசுப் பள்ளிகள் மானியம் பெறும் தனியார் பள்ளிகள் உள்ளாட்சி நிறுவனங்கள் நடத்தும் பள்ளிகள் ஆகியவற்றுக்கான கட்டிடங்கள் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும். 86 மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டிடங்கள் ரூபாய் 2 கோடி செலவில் கட்ட அரசு திட்டமிட்டுள்ளது. அரக்கோணத்திலும் [illegible] தொழிற் பயிற்சி நிறுவனங்கள் [illegible] தொடங்கப்படும். ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1-6-1981-ல் இருந்து அரசுப் பணியாளர்கள் ஆக்கப்படுவார்கள் என்று அரசு முடிவு எடுத்திருப்பதை மன்ற உறுப்பினர்கள் அறிவர்.

33. ஆறு முதல் 14 வயது வரை உள்ளவர்களுக்கு முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் கல்வி அளிக்க [illegible] திட்ட வளர்ச்சி வட்டாரங்கள் 240 மையங்கள் வரும் ஆண்டில் புதிதாகத் தொடங்கப்படும். புதிதாக எழுத்தறிவு பெற்றுள்ளவர்களுக்கு எழுத்தறிவுக்கு அடுத்த நிலையில் கல்வி அறிவு வழங்க 100 மையங்களும் அமைக்கப்படும். முறை சாராக் கல்விக்காகவும் முதியோர் கல்விக்காகவும் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூபாய் 160 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

34. வரும் ஆண்டில் புதிய பாடப்பிரிவுகளைத் தொடங்குவதற்கு ரூபாய் 10 இலட்சமும் புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் மாலை நேரக் கல்லூரிகளில் விஞ்ஞானப் பிரிவில் பாடப்பிரிவுகளைத் தொடங்குவதற்காக ரூபாய் 5 இலட்சமும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. கூடுதல் வகுப்பு அறைகள், மாணவர் தங்கும் விடுதிகள் கட்டும் பணி 18.5 இலட்சம் ரூபாய் செலவில் வரும் ஆண்டில் மேற்கொள்ளப்படும். தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒன்றும் [illegible] நடப்பு நிதி ஆண்டில் ஏற்படுத்தப்படுமென ஆளுநர் உரையில் கூறப்பட்டிருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் தொடங்குவதென அரசு முடிவு செய்துள்ளது. இதனை அறிஞர் அண்ணா பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று இவ்வாண்டு தொடங்க அரசு முயற்சி செய்து வருகிறது. [illegible]ராக்

## மருத்துவம்.

37. கிராமப் பகுதிகளில் சுகாதார வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்கிற கொள்கைக்கு அரசு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. அடுத்த ஆண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மருத்துவமனைக்குரிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்கென, தற்போதுள்ள 14 நிலையங்கள், 82 இலட்சம் ரூபாய் செலவில் தரமுயர்த்தப்படும். [illegible] மருத்துவ [illegible] பிரிவுக்கென ஒதுக்கப்படும் தொகை 15,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். 6 முதல் 11 வயதுள்ள பள்ளிச் சிறார்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யும் திட்டம் நடப்பாண்டில் 20 தொடக்க சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டது; இது அடுத்த ஆண்டில் 50 தொடக்க சுகாதார நிலையங்களிலும் 25 நகராட்சிகளிலும் மேற்கொள்ளப்படும். முத்தடுப்பு ஊசி போட்டு, குழந்தைகளை நோய் வாராமல் பாதுகாக்கும் திட்டம், மேலும் 50 தொடக்க சுகாதார நிலையங்களுக்கு விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தால் [illegible] 1981-82-ல் 8.5 இலட்சம் குழந்தைகள் பயனடைவர். அதே சமயத்தில் நகர்ப்புறப் பகுதிகளின் தேவைகளையும் அரசு புறக்கணிக்கவில்லை. [illegible] மூன்றாம் ஆண்டாகிய இவ்வாண்டில் மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் உறுப்பு [illegible] நிலையம் ஒன்று அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கு [illegible] 24.50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். அரசு பொது மருத்துவமனையில் [illegible] பிரிவும்; [illegible] ஆய்வியல் பிரிவும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். சென்னை [illegible] பயனடைவர். [illegible] குழந்தை நோயியல் [illegible] பெரம்பூரில் 170.91 இலட்சம் ரூபாய் செலவில் [illegible] (Peripheral) மருத்துவமனை ஒன்று [illegible]. அடுத்த ஆண்டில், கல்லூரி இணைந்த மருத்துவமனைகளில் படுக்கைகளின் எண்ணிக்கை 15,050 ஆக உயர்த்தப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் [illegible] 4,631 படுக்கைகளுக்கு மேலாக 507 படுக்கைகள் [illegible]. அடுத்த நிதி ஆண்டில் [illegible] 181.38 இலட்சம் ரூபாய் செலவில் 4 மாவட்டங்களுக்கு [illegible]. மாவட்டத் தலைமையிட மருத்துவ[illegible] அமைத்திலும் [illegible]. இதற்காக, அடுத்த ஆண்டில், 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 21

38. உடல் நலம் தொடர்பான அனைத்தும் இடம் பெறும்
விரிவானதோர் உடல்நலப் பாதுகாப்புத் திட்டம் 1981-82 ஆம்
ஆண்டில் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்படும். மகப்பேறு
குழந்தை நலன். குடும்ப நலன், நோய்த் தடுப்புப் பணிகள்
ஆகியவற்றுக்குத் தனி முக்கியத்துவம் அளிக்கும் வகையில், கிரா
மப் புற மருத்துவமனைகளில் இன்றியமையா அடிப்படை வசதி
கள் செய்து கொடுப்பதும் இத்திட்டத்தில் இடம் பெறும்.
'டேனிஷ் அனைத்து நாடுகள் வளர்ச்சி நிறுவனம்' இதற்கு
நிதியுதவி செய்யும். சேலம். தென்னார்காடு மாவட்டங்களில்
ஐந்நாண்டுகளில் இத்திட்டம் செயற்படுத்தப்படும். இதற்கு
14 கோடி ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத்
திட்டம் செயற்படுத்தப்படும் பகுதியிலுள்ள மக்களின் நல வாழ்வு
சிறப்புடன் அமையவேண்டுமென்பதும் சமூகத்தின் நலிந்த பிரி
வினர் மேன்மையுற வேண்டுமென்பதுமே இதன் நோக்கமாகும்.
இத்திட்டத்திற்கு 1981-82 ஆம் ஆண்டில் 2·40 கோடி ரூபாய்
ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்திற்கு 1975-76
ஆம் ஆண்டில் 41·25 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இத்
தொகை, 1980-81 ஆம் ஆண்டில் 102·37 இலட்சம் ரூபாயாக
உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய முறை மருத்துவத்தில் இவ்வரசு
பெரிதும் அக்கறை கொண்டுள்ளது. இதைக் கருதியே, அடுத்த
ஆண்டில் 200 தொடக்கச் சுகாதார நிலையங்களில் சித்த மருந்
துவப் பிரிவுகளைத் தொடங்குவதாக அரசு அறிவித்துள்ளது.
இதற்கு 62 இலட்சம் ரூபாய் செலவாகும். இராமநாதபுரம்,
தருமபுரி, சிதம்பரம், ஆகிய இடங்களிலுள்ள மாவட்டத்
தலைமையிட மருத்துவ மனைகளில் குழந்தைகளுக்கென 15 படுக்
கைகள் கொண்ட வார்டுகள் ஏற்படுத்தப்படும். சென்னை,
அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவ மனையில், 24 படுக்கை
கள் கொண்ட வார்டு ஏற்படுத்தப்படும். திண்டுக்கல், வேலூர்
ஆகிய இடங்களிலுள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனை
களில், சித்த மருத்துவப் பிரிவுக்கென்று தனிக் கட்டிடங்கள்
கட்டப்படும். இதற்கு 5 இலட்சம் ரூபாய் செலவாகும். இத்
திட்டங்கள் அனைத்தையும் செயற்படுத்துவதற்காக, இந்திய
முறை மருத்துவம் என்பதன்கீழ் நிதி ஒதுக்கீடு 171·47 இலட்சம்
ரூபாயாக உயர்த்தப்படும்.

39. இவ்வாண்டில், 'தொடர் கதிர் வீச்சியக்க முப்பரிமாண
உருப்பதிவு கணிப்பொறி (CAT Sc[illegible]er), இதயத் துடிப்புப்பதிவுப்
பொறி (Ec[illegible]o Card[illegible]ogram)என்னும் விலையுயர்ந்த நவீன மருத்துவக்
கருவிகள் இரண்டினைப் பயனுக்குக் கொண்டுவந்த பெருமையைச்
சென்னை, பொது மருத்துவமனை பெற்றிருக்கிறது. மூளை, இதய
நோயினால் அவதியுறும் ஏராளமான நோயாளிகளுக்கு இது ஒரு
சீரிய வசதியாக அமையும். சென்னை மத்திய சிறைச் சாலை
யைச் சென்னைக்கு வெளியே ஓரிடத்தில் அமைத்துவிட்டு,



1981 மார்ச் 21]

சென்னை மத்திய சிறைச்சாலை இருக்கும் இடத்தை சென்னை
அரசினர் பொது மருத்துவ மனையில் கிடைக்கும் வசதிகளைப்
பெருக்குவதற்கான செயற்குறிப்பை அரசு ஆலோசித்து வரு
கிறது.

## குடும்ப நலன்.

40. குடும்ப நலத் திட்டம் இம் மாநிலத்தில் முனைப்புடன்
செயல்படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் 1,82,000
பேருக்குக் கருத்தடை அறுவை சிகிச்சை செய்வதென இலக்கு
குறிக்கப்பட்டது; 1981 சனவரி இறுதிவரை, 1,01,253 பேருக்குக்
கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்
தலைமையிட மருத்துவ மனைகளில் மகப்பேறுக்குப் பின்
உடனடியாக ஒரு சில நாட்களுக்குள் கருத்தடை அறுவை
சிகிச்சை செய்ய, கூடுதலாக 10 படுக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டு
உள்ளன. 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில்,
மகப்பேறுக்குப் பின் உடனடியாக ஒரு சில நாட்களுக்குள் கருத்
தடை அறுவை சிகிச்சை செய்வதற்கென 20 படுக்கைகள் கொண்ட
வார்டுகள் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றைக்
கட்ட 28·60 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்
பட்டுள்ளது. கருத்தடை அறுவை சிகிச்சை தரமானதாக இருக்
கவும், மதிப்பீட்டுக்குழு சுட்டிக்காட்டிய ஏனைய முறைகேடு
களைப் போக்கவும் ஏதுவாக, குடும்பநலத் திட்ட மும்முர
பிரச்சாரத்தைச் செம்மைப்படுத்த, அரசு இவ்வாண்டில் சிறிது
காலம் நிறுத்தி வைத்திருந்த இத்திட்டம் தற்போது ஒரு சீராக,
தொடர்ந்து ஆண்டு முழுவதும் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## இராம வளர்ச்சி.

41. 'வேலைக்கு உணவளிக்கும் திட்டமும்,' அதற்குப்
பதிலாக நிறைவேற்றப்பட்டு வரும் 'கிராமப்புற வேலை
வாய்ப்பு தேசியத் திட்டமும்', முறைப்படித் தேர்ச்சி பெற்றிராத
கிராமத் தொழிலாளர்களுக்குப் பெருமளவு வேலை வாய்ப்புகள்
அளித்து, சமுதாயத்திற்கு நிலையான சொத்துக்களை உருவாக்கி
யுள்ளது. இத்திட்டங்களின்கீழ், நடப்பாண்டில், 768·5 இலட்
சம் ரூபாயையும் 60,000 டன் அரிசியையும் இந்திய அரசு ஒதுக்கீடு
செய்துள்ளது. [illegible]-4-1980 ஆம் நாளிலிருந்து பிப்ரவரி 1981
இறுதிவரை, 8·36 கோடி ரூபாய் மதிக்கத் தக்க பணிகள் முடிக்கப்
பெற்றுள்ளன. உறுதியான வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ்,
பிப்ரவரி இறுதிவரை ஏறக்குறைய 3 இலட்சம் பேருக்கு வேலை
வாய்ப்பு அளிக்கப்பட்டது.

## தன்னிறைவுத் திட்டம்.

42. மிகவும் முக்கியமான திட்டங்களில் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும்; இத்திட்டம் கிராமப் பகுதிகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. 69 வளர்ச்சி வட்டாரங்களில் பணிகள் நடந்து வருகின்றன. இத்திட்டத்தில்—

(i) குடிநீர் வழங்கல்,

(ii) இணைப்புச் சாலைகள்,

(iii) மதகுப் பாலங்கள்,

(iv) ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடுகாடுகளுக்கும் பாதைகள்;

(v) சிறு பாசன ஆதாரங்கள் மேம்பாடு;

(vi) கிராமப்புற மருந்தகங்கள்;

(vii) மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள்;

(viii) பள்ளிக் கட்டிடங்கள்;

(ix) ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் (கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்).

ஆகிய இன்றியமையாப் பணிகள் மேற்கொள்ளப்படுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிந்திருப்பர். தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எய்தியுள்ள சாதனைகள் பாராட்டுக்குரியவை ஆகும். 6,796 கிலோ மைல் இணைப்புச் சாலைகள், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும் இடுகாடுகளுக்கும் 976 கிலோ மீட்டர் பாதைகள், 942 பள்ளிக் கட்டிடங்கள், 81 கிராமப்புற மருந்தகங்கள், 237 மகப்பேறு-குழந்தை நல நிலையங்கள் ஆகியவை குறித்த பணிகள் இந்த நிதியாண்டு இறுதியில் நிறைவு பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. இத் திட்டம் வெற்றி பெற்றுள்ளதால், 1981–82ஆம் ஆண்டில் மேற்கொண்டும் 150 வளர்ச்சி வட்டாரங்களில் இத்திட்டத்தை அரசு செயற்படுத்தும்

அரசு ஏற்படுத்தக் கருதியுள்ளது. பார்வையற்றோருக்கான பள்ளிகள் இரண்டும், காது கேளாதோருக்கான பள்ளிகள் இரண்டும், கைகால் முடமாகி மிகவும் உடலூனமுற்றோருக்கான நிலையம் ஒன்றும் அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். வேலையற்ற பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படுகிற உதவித் தொகை ஒரு சில நிபந்தனைகளைச் சிறிது தளர்த்தி உடலூனமுற்றோருக்கும் கொடுக்கப்படும். உடலூனமுற்றோர் சுயவேலை வாய்ப்பு முயற்சி மூலம் சிறு தொழிற்கூடங்களைத் தொடங்க இயலும் வகையில், அவர்களுக்கு அரசு உதவித் தொகைய அளிக்கும். செயற்கை உறுப்புகள் பொருத்தும் துணை நிலையங்கள் இரண்டும், மதுரையில் உறுப்பு இணைப்பு—மறுவாழ்வு நிலையமும், அடுத்த ஆண்டில் தொடங்கப்படும். இவர்களுக்கெனத் தகுந்த திட்டங்களைத் தயாரிப்பதற்காக, உடலூனமுற்றோர்களை இனங்கண்டறிந்து, அவர்களது எண்ணிக்கையைக் கணக்கிட்டு அறிவது இன்றியமையாததாகிறது. உடலூனமுற்றோர் எத்தனை பேர் என்பதை அரசு கணக்கெடுக்கும். தொடர் திட்டங்களைத் தவிர உடலூனமுற்றோர் நலனுக்கான திட்டங்களுக்கு 1981–82-ல் 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஊனமுற்ற சிறார்களைப் பேருந்துகளில் இலவசமாக ஏற்றிச் செல்லும் திட்டம் தமிழ்நாடு முழுவதிலும் செயல்படுத்தப்படும்.

### மகளிர் குழந்தைகள் நலன்

47. வறிய மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு திட்டங்களை அரசு செயற்படுத்தி வருகிறது. வறிய மகளிர் 1,000 பேருக்கு வணிக முறையில் கணக்கு எழுதும் தொழில் பயிற்சியளிக்கும் புதிய திட்டம் 1981–82 ஆம் ஆண்டில் செயற்படுத்த எடுத்துக் கொள்ளப்படும். கைம்பெண்களின் மக்கள் மேல்நிலைப் பள்ளிகளில் படிப்பதற்கு அவர்களுக்கு நிதியுதவி செய்யப்படும். குறைந்த விலையில் "தாலிக்குத் தங்கம்" வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்படும். 1981–82 ஆம் ஆண்டில் முதல் கட்டமாக, ஏழைக் கைம்பெண்களின் மகளிர் திருமணத்திற்குக் குறைந்த விலையில் "தாலிக்குத் தங்கம்" வழங்கப்படும். இதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

48. 1981–82 ஆம் ஆண்டில், குழந்தை நல நிலையங்கள் 100 தொடங்கப்படும்; 20 நிலையங்களுக்குக் கட்டிடங்கள் கட்டப்படும். மேலும், சென்னை மாநகரில், குழந்தை நல வளர்ச்சிப் பணி ஒருங்கிணைந்த திட்டத்தின் கீழ் குழந்தை காப்பகங்கள் (Creches) 100 தொடங்கக் கருதப்பட்டுள்ளது. பெண் தொழிலாளர்களின் சிறார்களைக் கவனித்துக் கொள்ள 50 குழந்தை காப்பகங்கள் கோயம்புத்தூரிலும், 50 மதுரையிலும் தொடங்கப்படும். உலக வங்கி, சத்துணவுத் திட்டம், 1981–82 ஆம் ஆண்டில், மதுரை மாவட்டத்திலுள்ள 33 வளர்ச்சி வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்படும். இதற்கென, வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் 8·54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. சுகாதார துணை நிலையங்கள் கட்டுவது, சத்துணவுப் பணியாளர்கள், சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுத்துப் பயிற்சியளிப்பது, துணைச் சத்துணவு வழங்குவது ஆகிய பணிகள் அடுத்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.



### ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் நலன்.

49. ஆதி திராவிட மாணவர்களுக்கு 15 மாணவர் இல்லங்கள் வரும் ஆண்டில் தொடங்கப்படும். உயர்நிலைப் பள்ளி மாணவரில்ல உணவுச் செலவை முன்னிட்டு இவ்வ மாணவர்களுக்குக் கொடுக்கப்படும் தொகை 15 ரூபாய் உயர்த்தப்படும். மானியம் பெறும் மாணவர் இல்லங்களில் தங்கிப்பயிலும் ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் படிப்புதவித் தொகை 10 ரூபாய் உயர்த்தப்படும். இதற்கு ஒரு கோடி ரூபாய் கூடுதல் செலவாகும். 1981–82 ஆம் ஆண்டில், ஆதி திராவிட, பழங்குடியினர் மாணவர், மாணவியர் இல்லங்கள் கட்டுவதற்கு 2·45 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. உயர்நிலைப் பள்ளி அளவில் ஆதி திராவிட, பழங்குடி வகுப்பு மாணவர்களுக்குத் தனிப் பயிற்சி அளிக்கும் புதிய திட்டத்தை முன்னோடித் திட்டமாக 1981–82 ஆம் ஆண்டில் அரசு மேற்கொள்ளக் கருதியுள்ளது. மாணவர்களுக்குப் பயனளிக்கும் வகையில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் இத்திட்டம் தொடங்கப்படும். ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம், வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்திலும் செயற்படுத்தப்பட்டு வருகிறது. மத்திய திட்டக்குழு நிர்ணயித்துள்ளபடி, ஆண்டுதோறும் 1.8 இலட்சம் குடும்பங்களை வறுமைக் கோட்டிற்கு மேலே உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஆதி திராவிடர் வீட்டு வசதி-வளர்ச்சிக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு செய்ய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் நன்மை பெறும் வகையில் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இதன் நோக்கமாகும். மலை வாசிகளுக்கு உதவி செய்வதற்காக சிறு தொழில்கள் தொடங்கும் தனித் திட்டம் வகுக்கப்படும்.

### பிற்பட்டோர் நலன்.

50. பிற்பட்ட வகுப்பினரைச் சார்ந்த மாணவர்களுக்காக 34 இல்லங்கள் இந்த ஆண்டு தொடங்கப்பட்டு உள்ளன. 1981–82 ஆம் ஆண்டில் 18.16 இலட்சம் ரூபாய் செலவில் 40 புதிய இல்லங்கள் தொடங்கப்படும். 3 இல்லங்களின் கட்டிடங்கள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் [illegible]

வர்கள், ஒட்டர்கள், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர்
ஆகியோர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நில எடுப்பு செய்யும்
புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக
15 இலட்சம் ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்
டுள்ளது. பிற்பட்டோர் நலன் குறித்த செலவு 1980–81ஆம்
ஆண்டு திருத்த மதிப்பீடுகளில் ரூபாய் 7,56 இலட்சமாக இருந்
தது. 1981–82ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்
பீடுகளில் ரூபாய் 7,99 இலட்சமாக உயர்த்தப்பட்டு உள்ளது.

### புயல் காப்பிடங்கள்.

51. தமிழ்நாட்டின் கடலோரப் பகுதி, புயலின் தாக்குதலுக்கு
அடிக்கடி இலக்காகிறது. ஆகவே, புயல் வீச்சுப் பகுதிகளில்
வசிக்கும் மக்களுக்குப் புயல் காலங்களில் காப்பிடங்கள் பலவும்
அமைப்பதற்காக, கடற்கரை நெடுக ஆங்காங்கே புயல் துயர்
தணிப்பு நிலையங்கள் 82 கட்ட அரசு உத்தரவிட்டுள்ளது.
செலவுத் தொகையில் 50 சதவீதத்தை நிதியுதவியாக இந்திய
செஞ்சிலுவைச் சங்கத்தின் தமிழ்நாட்டுக் கிளையும் எஞ்சிய 50
சதவீதத்தை தமிழ்நாடு அரசும் ஏற்று, அத்தகைய துயர்
தணிப்பு நிலையங்கள் 25 கட்டப்படுகின்றன. இதே அடிப்படை
யில், யுனிசெஃப் மூலம் 2 காப்பிடங்கள் கட்ட கனடா அனைத்து
நாடுகள் நிறுவனம் உதவி வருகிறது. புயல் துயர் தணிப்பு நிலை
யங்கள் 50 கட்டுவதற்கு ஒரு கோடி ரூபாய் வழங்க ஐரோப்பிய
பொருளாதார அமைப்பு முன்வந்துள்ளது. இக்காப்பிடங்கள்
கட்டும் பணி சிறப்பாக நிறைவேறி வருகிறது.

### வருவாய்த் துறை நிர்வாகம்.

52. வருவாய்த் துறை பிர்கா ஆய்வாளர்களுக்காக அலுவல
கம்—குடியிருப்புக் கட்டிடம் கட்டும் பணியை அரசு படிப்படி
யாக எடுத்துக் கொண்டுள்ளது. 1981–82இல் 50 இலட்சம்
ரூபாய் செலவில், கூடுதலாக 200 கட்டிடங்கள் கட்டும் பணி
எடுத்துக்கொள்ளப்படும். கிராமச் சாவடிகள் கட்டும் பணியும்
10 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப்படும். அடுத்த ஆண்
டில், வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் இரண்டும், வட்ட அலு
வலகங்கள் மூன்றும் 27.50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டுச் செல
வில் கட்டப்படும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட பெரியார் மாவட்
டத்திற்காக ஈரோட்டில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கும்
ஏனைய அலுவலகங்களுக்கும் புதிய கட்டிடங்கள் கட்ட அரசு
அனுமதி வழங்கியுள்ளது. இப்பணியை எடுத்துக்கொள்ள 1981–
82ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் 126 இலட்
சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மக்கள் தொகை கணக்
கெடுப்புப்பணி எடுத்துக்கொள்ளப்பட்டிருப்பதால், துணை வட்
டங்களைத் தரமுயர்த்தும் பணி 1980–81இல் நிறுத்தி வைக்கப்
பட்டது. அடுத்த ஆண்டில் சுயேச்சைப் பொறுப்புள்ள வகை

வட்டங்கள் ஆறும், துணை வட்டங்கள் பத்தும், 32.32 இலட்சம்
ரூபாய் செலவில் முழுமையான வட்டங்களாகத் தரம் உயர்த்தப்
படும்.

### காவல் துறை.

53. தமிழ்நாட்டுக் காவல் துறையினர், திறமையுடன்—பார
பட்சமின்றிக் கடமையாற்றி வருகின்றனர். மிகவும் கடினமான
சூழ்நிலைகளில் பணியாற்றும் இவர்களுக்காக நலப்பணித்திட்டப்
பலவற்றை அரசு தயாரித்து வருகிறது. மலிவு விலையில் உண
வுப் பொருட்கள் வழங்கும் ஏற்பாடு காவலர்கள் குடும்பங்களுக்
குப் பெரிதும் நன்மை பயப்பதாக உள்ளது. ஓர் ஆண்டில்
இதற்கு 4 கோடி ரூபாய் செலவாகிறது.

54. காவலர்களிடையே பணி உற்சாகத்தை வளர்க்கவும்,
கடமை கருதி வீரச் செயல் புரியும்போது ஏற்பட்ட காயத்
தினால் நிரந்தர ஊனமுற்றவர்களுக்கு 5,000 ரூபாய் கருணைத்
தொகையாக வழங்கப்படுகிறது. சிறப்புச் சூழ்நிலைகளில் கூடுதல்
தொகையும் கொடுக்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, திருப்
பத்தூர் வட்டக் காவல் நிலையம் அருகே, 1980ஆம் ஆண்டு
ஆகஸ்டு மாதத்தில் உயிரிழந்த காவல் துறை அலுவலர் சிலருக்கு
அவ்வாறு கூடுதல் தொகை கொடுக்கப்பட்டது. உயிரிழந்த ஒவ்
வொருவர் குடும்பத்திற்கும் 30,000 ரூபாய் கூடுதல் கருணைத்
தொகையாக வழங்கப்பட்டது. இவ்வாறாக, ஒவ்வொருவர்
குடும்பத்திற்கும் மொத்தம் 50,000 ரூபாய் நிதி உதவி செய்யப்
பட்டது.

அஞ்சாமை, நம்பிக்கை உணர்வுகளை ஊட்டவும் கருதி, தீரச்
செயல் புரியும்போது உயிரிழந்தவர்களுக்காக 10,000 ரூபாய்
சிறப்புக் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும்
தமிழ்நாடு அரசுப் பணியாளர் குடும்ப நல நிதித் திட்டத்தின்
கீழும் 10,000 ரூபாய் மொத்தமாக வழங்கப்படுகிறது. அதே
போன்று காயமுற்றவர்களுக்கும் 1,000 ரூபாய் முதல் 3,000
ரூபாய் வரை கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது.

55. நடப்பாண்டில் இம்மாநிலத்தில் புதிதாக காவல் நிலை
யங்கள் 16-ம், 8 புறக் காவல் நிலையங்களும், காவல் சரகத்
தலைமையிடம் ஒன்றும் தொடங்க உத்திரவிடப்பட்டுள்ளது. அத்
துடன் தற்போதுள்ள புறக்காவல் நிலையங்கள் மூன்று முழுத்
தகுதி பெற்ற காவல் நிலையங்களாக நிலை உயர்த்தப்பட்டுள்
ளன. சமூக விரோத சக்திகளிடமிருந்து கிராம மக்களைப்
பாதுகாக்க வேண்டியதைக் கருத்தில் கொண்டு கிராமப் பகுதி
களில் அவசியமான இடங்களில் காவல் நிலையங்களை அரசு
தொடர்ந்து ஏற்படுத்தி வரும். 12,000 காவலர்களை நியமிக்க
அரசு திட்டமிட்டிருந்தது. அதன் பகுதியாக, இந்த நிதி ஆண்டில்
4,000 காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

56. உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக் கருவிகள்
(V.H.F. Sets) 350, இருவழி செய்தித் தொடர்புக் கருவி
கள் (Walkie Talkies) 1,800 ஆகியவற்றை வாங்க
2 கோடி ரூபாயை அரசு அனுமதித்துள்ளது. காவல் படையை
நவீனமாக்கவும் வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவும் இவை
வாங்கப்படுகின்றன. மிக உயர் மின்னலைச் செய்தித் தொடர்புக்
கருவிகள் வாங்க 1.2 கோடி ரூபாய்க்கு அரசு ஒப்புதல்
அளித்துள்ளது.

57. காவல் படையின் மகளிர் பிரிவும் வலுப்படுத்தப்படு
கிறது. மகளிர் 60 பேரை சப்-இன்ஸ்பெக்டர்களாகவும், 60
பேரைத் தலைமைக் காவலர்களாகவும், 600 பேரைக் காவலர்
களாகவும் நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

58. தீயணைப்புத் துறை, தொடர்ந்தாற்போல் திறம்படச்
செயல்பட்டு வருகிறது. நீர் தொட்டி மோட்டார் பிரிவு (Mobile
Tank unit), பம்பு இழுவை மோட்டார் வண்டி (Trailor
Pump) வான்வழித் தொலைபேசி வசதியுள்ள கார்கள் (Wireless
Cars) போன்ற ஆயத்த நிலை தீயணைப்பு என்ஜின்களையும்,
தீயணைப்பு நவீன இன்ஜின்களையும் வாங்க முன்னுரிமை
அளிக்கக் கருதப்பட்டுள்ளது. வேறு வகை சாதனங்கள் இவையும்
இத்துறைக்கு வாங்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் செயல்
களை வலுப்படுத்தும் வகையில் தீயணைப்பு நிலையங்கள்
மேலும் அமைக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட
சில நிலைகளுக்குக் கீழேயுள்ள தீயணைப்புப் பணியாளர்களுக்கு,
மலிவு விலையில் சில உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வரு
கின்றன.

## அரசு அலுவலர்களுக்குச் சலுகைகள்.

59. மூன்றாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளைச் செயல்
படுத்துவதன் விளைவாக ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட முரண்
பாடுகளைப் பரிசீலித்து அரசுக்குப் பரிந்துரை செய்ய ஒரு நபர்
குழு அமைத்ததை மன்ற உறுப்பினர்கள் அறிவர். இக் குழு
செய்த பரிந்துரைகளின் அடிப்படையில், அரசு பின்வரும் முடிவு
களை எடுத்துள்ளது:—

(அ) சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய
விதங்கள் மாற்றியமைக்கப்படும். இவ்வாறு மாற்றியமைக்கப்
படும் ஊதிய விதங்கள் 1—4—1978 முதல் அமுல் செய்யப்பட்டு,
அதன் நிதிப் பலன் (Monetary Benefit) 1—1—1981 முதல்
அளிக்கப்படும்.

(ஆ) தற்போது ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியத்தில்
வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை கணக்கில் கொள்ளப்
படுவதில்லை. இனி, அந்த இரண்டு படிகளும் ஒப்புவிப்பு ஊதியத்
துடன் சேர்த்து அளிக்கப்படும்.



(இ) தேர்வு நிலையில் 10 ஆண்டுகளுக்கு மேல் இருப்பவர்
களுக்கும் தேக்க நிலை ஊதிய உயர்வு அளிக்கப்படும்.

(ஈ) தேர்வு நிலை அளிக்கப்படாத சாதாரண நிலைப்
பதவியிலுள்ளவர்களுக்கும், தேர்வு நிலைப் பதவியிலுள்ளவர்
களுக்கும் அவர்கள் தத்தம் ஊதிய விதத்தின் உச்ச நிலையை
அடைந்தால், தேக்க நிலை ஊதிய உயர்வு தொடர்ந்து அளிக்கப்
படும்.

(உ) தேக்க நிலை ஊதிய உயர்வுக்கான ஊதிய உச்ச
வரம்பு ரூபாய் 1,500-லிருந்து ரூபாய் 2,000 ஆக உயர்த்தப்படும்.

(ஊ) தேர்வு நிலையில் அலுவலரின் ஊதியத்தை நிர்ண
யம் செய்யும்போது, ஊதியத் தரங்கள் 8 முதல் 11 வரையில்
உள்ளவர்களுக்கு ரூபாய் 15-ம், 12 முதல் 16 வரையிலுள்ளவர்
களுக்கு ரூபாய் 10-ம் குறைந்தபட்ச நன்மையாக அளிக்கப்படும்.

(எ) கூடுதல் பொறுப்புகளை உடைய உயர் பதவிக்கு அலு
வலர் பதவி உயர்வு பெறும்போது, கீழ் பதவியில் பெற்ற ஊதியத்
தைவிட 5 சதவீதம் குறைந்த பட்ச நன்மை பெறும் வகையில்
ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

(ஏ) நிரந்தரமாக நியமிக்கப்பட்ட அல்லது தகுதிகாண்
பருவத்தை நிறைவு செய்துள்ள அலுவலர்களுக்கு விடுப்புப்
பயணச்சலுகை ஒன்று அளிக்கப்படும். இரண்டாண்டுகளுக்கு ஒரு
முறை, அலுவலர்கள் பணிபுரியும் இடத்திலிருந்து 240 கிலோ
மீட்டருக்கு மேற்பட்ட தூரத்தில் தமிழகத்திலுள்ள எந்த இடத்
திற்கும் தங்கள் குடும்பத்தினருடன் பயணம் செய்ய இச்சலுகை
அளிக்கப்படும். இரயில் கட்டணத்தில் ஒரு வழிச் செலவை அரசு
ஏற்கும். அலுவலர் குறைந்தது 15 நாட்கள் ஈட்டிய விடுப்பில்
சென்றால் மட்டுமே இச்சலுகை அளிக்கப்படும்.

(ஐ) மூன்றாவது ஊதியக் குழு அல்லது ஒரு நபர் குழுவின்
பரிந்துரைகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஊதிய விதங்
களில், 1—4—1978 முதல் 31—3—1979 வரையில் இடைப்பட்ட
காலத்தில் ஊதியத்தை நிர்ணயம் செய்ய அலுவலர் மீண்டும்
விருப்பம் தெரிவிக்க வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. இந்த
வாய்ப்பை 31—8—1981-க்குள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
இந்த முடிவுகளின் விளைவாக, அரசுக்கு ஆண்டிற்கு ரூபாய் 3
கோடி அளவில் செலவு ஏற்படும்.

60. அரசு அலுவலர்களுக்கு மகளின் திருமணத்திற்காகவும்,
மகனின் திருமணத்திற்காகவும் அளிக்கப்படும் திருமண முன் பணத்
தின் தற்போதைய வரம்பான ரூபாய் 2,000, ரூபாய் 1,000
முறையே ரூபாய் 3,000, ரூபாய் 1,500 ஆக உயர்த்தப்படும்.

61. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற்றவர்களுக்குக் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு ஓய்வூதியத் தொகையை முழுமையாக அளிக்க வேண்டும் என்று ஓய்வூதியம் பெறுபவர்கள் முறையீட்டு வருகின்றனர். சட்டப்படி இவ்வாறு முழுமையாகத் தர கட்டாயம் இல்லாதிருப்பினும், ஓய்வூதியம் பெற்றவர்களின் முறையீட்டை கருணை அடிப்படையில் ஏற்பதென்று அரசு முடிவு செய்துள்ளது. ஓய்வூதியம் பெறும் அரசு அலுவலர்களுக்கு அவர்கள் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகள் நிறைவு பெற்றவுடன் இச்சலுகை அளிக்கப்படும். மேற் குறிப்பிடப்பட்ட சலுகைகள் அனைத்தும் ஆணைகள் பிறப்பிக்கும் தேதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படும்.

62. சராசரி வாழ்க்கைச் செலவுப் புள்ளி 376-ஐக் கடந்துள்ளதால் அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்படும் அகவிலைப் படியின் அடுத்த தவணையை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது. 1980 டிசம்பர் 1 ஆம் தேதி முதல் ரூ. 650 வரை ஊதியம் பெறுவோருக்கு 2·5 சதவீதமும், ரூ. 650-க்கு மேற்பட்டவர்களுக்கு 1·875 சதவீதமும் அளிக்கப்படும்.

### ஆண்டுத் திட்டம்.

63. 1980-81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் ரூ. 438·61 கோடி அளவிலான ஆண்டுத் திட்டத்திற்கு வகை செய்தது. பிறகு மேற்கொள்ளப்பட்ட பல மாற்றங்களின் அடிப்படையில் முடிவு செய்யப்பட்டுள்ள 1980-81 ஆண்டுக்கான திருத்த மதிப்பீடுகளிலிருந்து ஆண்டுத் திட்டம் ரூபாய் 4,54 கோடியாக வெளியிடப்படுகிறது. இதற்கு எதிராக, 1981–82 ஆம் ஆண்டுத் திட்டம் ரூ. 514 கோடி அளவில் அமையலாம் என மத்தியத் திட்டக் குழு வரையறுத்துள்ளது. எனது உரையில் முன்னர் குறிப்பிட்டுள்ள தவிர்க்க முடியாததும் மிக அவசியமும் ஆன சில திட்டங்களின் உயர்வுகள் இந்த அளவிற்குள் மட்டுப்படுத்த இயலாது. வரும் ஆண்டு புதிதாக மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் ரூ. 35 கோடி ஆண்டுத் திட்டச் செலவிற்கு வித்திடுகின்றன. இத்தகைய முக்கிய ஒதுக்கீடுகளையும் ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட அளவான ரூ. 3,150 கோடி அளவையும் இணைந்து பரிசீலித்து, ரூ. 563·26 கோடி அளவில் அடுத்த ஆண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள முக்கிய செலவினங்களை ஏற்கெனவே கோடிட்டுக் காட்டி உள்ளேன். மின் உற்பத்திக்கு அரசு தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து, திட்டச் செலவில் 30 சதவீதம் இதற்கு ஒதுக்கியுள்ளது. ரூ. 169·59 கோடி மின் உற்பத்திக்கும், ரூ. 26·62 கோடி பாசனத்திற்கும் ரூ. 104·69 கோடி வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த துறைகளுக்கும் ரூ. 55·61 கோடி தொழில் துறைக்கும் ரூ. 37·61 கோடி சாலை மற்றும் போக்கு



வரத்துத் துறைகளுக்கும், ரூ. 23.58 கோடி கல்விக்கும், ரூ. 25.89 கோடி மருத்துவம், சுகாதாரம் துறைகளுக்கும், ரூ. 51.30 கோடி குடிநீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கும், ரூ. 33.83 கோடி வீட்டு வசதி, நகர் வளர்ச்சி துறைகளுக்கும் ரூ. 17.87 கோடி ஆதி திராவிடர், பழங்குடி மக்கள் நலனுக்கும், ரூ. 16.67 கோடி பிற துறைகளுக்கும் செலவிட ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### நிதி நிலைமை.

64. வருவாய்க் கணக்கில் ரூ. 15.39 கோடி அளவில் உபரி இருக்கும் வகையில் வரவுகள் ரூ. 9,62.66 கோடி என்றும், செலவுகள் ரூ. 9,57.27 கோடி என்றும் ரூ. 15.39 கோடி உபரி என்றும் 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. திருத்த மதிப்பீடுகளில் மின்சார வாரியத்திற்கு மானியமாகக் கொடுக்கப்பட்டு, அதனிடமிருந்து பெற வேண்டிய வட்டித் தொகைக்கு ஈடு செய்யப்பட்ட ரூ. 9.58 கோடி வரவுகளிலும், செலவுகளிலும் சேர்க்காமல், வரவுகள் ரூ. 1083.17 கோடி அளவிலும் செலவுகள் ரூ. 1094.47 கோடி அளவிலும் நிகரப் பற்றாக்குறை ரூ. 11.30 கோடி என்றும் வகுக்கப்பட்டுள்ளன. வரி வருவாய் ரூ. 47.32 கோடி அளவிலும் வரி அல்லாத பிற இனங்களிலிருந்து வருவாய் ரூ. 1,05.75 கோடி அளவிலும், மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவித் தொகை, ஆயத் தீர்வையில் பங்கு ஆகியவை ரூ. 38.04 கோடி அளவிலும் உயர்ந்துள்ளபோதிலும், கடன் திருப்பிச் செலுத்துவதில் விவசாயிகளுக்கு அளித்த சலுகைகளுக்காகக் கூடுதல் செலவினம் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக வருவாய்க் கணக்கில் இந்தச் சரிவு ஏற்பட்டுள்ளது. மின் வாரியம், திட்டங்கள் முதலீடு செய்துள்ள மூலதனத் தொகைக்குக் கிடைக்க வேண்டும் என நிர்ணயித்துள்ள வருவாய்க்குக் குறைவு ஏற்பட்டுள்ளதைச் சரி செய்ய அளித்துள்ள உதவித் தொகை வருவாய்க் கணக்கில் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது. இதே தொகை, மின் வாரியத்திடமிருந்து கிடைத்த வட்டியாகவும் வருவாயாகக் கணக்கிடப்பட்டுள்ளது. திருத்த மதிப்பீடுகள் மூலதனக் கணக்குகளில் ரூ. 93.33 கோடி செலவிற்கு வகை செய்துள்ளது. இச் செலவினம் வரவு-செலவுத் திட்ட மதிபபீடுகள் ரூ. 94.21 கோடியாகும். கடன் கணக்குகளில் நிகர செலவினம் வரவு-செலவுத் திட்ட கணக்குகளில் ரூ. 76.33 கோடி என்றும், திருத்த மதிப்பீடுகளில் ரூ. 77.55 கோடி என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கடன் கணக்கில் நிகர வருவாய் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 1,10.83 கோடியாக இருந்தது. திருத்த மதிப்பீட்டில் ரூ. 1,09.70 கோடியாக அமைந்துள்ளது. மொத்தமாக, தொகு நிதியில் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 44.32 கோடியாக இருந்த நிகரப் பற்றாக்குறை, திருத்த மதிப்பீட்டில் ரூ. 72.48 கோடியாக அளவிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகரமாக இருக்கும் தொகையைச் சேர்த்து நிகர உபரியாக ரூ. 38 இலட்சம் என்

விற்பனை செய்ய முன்வருவோருடன் சமமான நிலையில் தமிழ்
நாட்டிலுள்ள மேற்குறிப்பிட்டுள்ள நிறுவனங்கள் போட்டியிட
இந்த மாற்றம் வகை செய்யும்.

71. பாலிதீன் (Polyt:e.1c), பாலிப்ரோபிலின் (Polyp.opyl ne)
பாலிவினைல் குளோரைடு ஆகியவற்றிலிருந்து செய்யப்படும்
டப்பாக்கள் (Cans and blow moulded Conta:ners incid ng
closures) சுருள்கள் (F lms sheets), குழாய்கள் (Lay flat tubes)
ஆகியவற்றின் மீதான ஒருமுனைவரி 8 சதவீதத்திலிருந்து 4
சதவீதமாகக் குறைக்கப்படுகிறது.

72. இரப்பருடன் சேர்க்கப்பட்ட தென்னை நார் (Rubber se
coir) மீதான விற்பனை வரி அண்டை மாநிலங்களில் விதிக்கப்
படுவதைவிட அதிகமாக இருப்பதால், இதனை 4 சதவீதத்தி
லிருந்து 2 சதவீதமாகக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

73. 15,000-க்குக் குறைந்த விற்பனையுள்ள பத்திரிகைகளுக்
குத் தேவையான பத்திரிகைக் காகிதம் மீது விதிக்கப்படும் 8 சத
வீத வரி 4 சதவீதமாகக் குறைக்கப்படும்.

74. வணிகப் பெயர் இல்லாமல் அல்லது வணிக, வாணிப
குறிகள் 1958 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் (Trade and Merchan-
dise Marks Act) வணிகக் குறி பதிவு செய்யப்படாமல் விற்பனை
செய்யப்படும் அப்பளம், சேமியா, ரொட்டி வகைகள் (Bakery
Products) ஆகிய உணவுப் பொருள்களுக்குப் பலமுனை
விற்பனை வரியிலிருந்து அறவே விலக்களிக்கப்படுகிறது.
இந்த விற்பனை வரி மாற்றங்கள் 1981 ஆம் ஆண்டு
ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதல் செயலாக்கப்படும்.
இந்த வரி விதிப்பு-வரிக் குறைப்பு ஆகிய வரி
மாற்றங்களினால் அரசுக்கு நிகரமாக ரூபாய் 20 கோடி வருவாய்
கிடைக்குமென மதிப்பிடப்படுகிறது.

**விவசாயிகளின் கடன்.**

75. 1980–81 ஆம் ஆண்டு, அரசு விவசாயிகளுக்கு அளித்த
சலுகைகள் விளைவாகத் தக்காவிக் கடன்களில் நிலுவையாக
இருந்த ரூபாய் 21 கோடியும் (முதலில் ரூபாய் 16 கோடி என்று
அறிவிக்கப்பட்டது) சிறு விவசாயிகள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்
திருப்பிச் செலுத்த வேண்டி நிலுவையாக இருந்த ரூபாய் 50
கோடியும் (முன்பு ரூபாய் 42 கோடி என அறிவிக்கப்பட்டது)
ஆக ரூபாய் 71 கோடிக்குக் கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டன.
மேலும், சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்தியிருந்த ரூபாய் 23
கோடி அடுத்த ஆண்டுக் கடன் நிலுவைக்கு ஈடு செய்யப்படும்
எனவும் அரசு அறிவித்துள்ளது. விவசாயிகளின் கடன் சுமையை
மேலும் குறைக்கும் வகையில் இக்கண்ட சலுகைகளை வழங்க
[illegible] செய்துள்ளது.



(1) ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தைச்
சொந்தமாகவோ, குத்தகையாகவோ பயிர் செய்யும் சிறு விவ
சாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்று நிலுவை
யிலிருக்கும் குறுகியகாலப் பயிர் கடன்களில் ஏற்கெனவே செலுத்
தாமலிருந்து, அசலை 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம்
நாளுக்குள் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் திருப்பிச் செலுத்தி விட்
டால், திருப்பிச் செலுத்துகின்ற தேதி வரையில் கூடுகின்ற
சாதாரண வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்.

(2) இதர விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிட
மிருந்து பெற்றுள்ள குறுகிய காலப் பயிர்க் கடன்களை 1981-ஆம்
ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாளுக்குள், அது வரையில்
செலுத்த வேண்டிய சாதாரண வட்டியுடன் திருப்பிச் செலுத்தி
விட்டால் அவர்கள் செலுத்த வேண்டிய தண்ட வட்டி முழு
வதும் தள்ளுபடி செய்யப்படும்.

76. சிறு உழவர்கள் வாங்கும் கடனை உரிய காலத்தில் திருப்
பிச் செலுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், 1981–82 ஆம்
ஆண்டில் புதிய ஏற்பாடு ஒன்றைச் செயலுக்குக் கொண்டு வரு
கிறோம். குறுகிய காலக் கடன் தவணைகளையும் நடுத்தரக்
காலக் கடன் தவணைகளையும் உரிய நாளுக்குள் சிறு உழவர்
கள் செலுத்தினால், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டியில் 2
சதவீதம் கழித்துவிடப்படும்.

**மதுவிலக்கு.**

77. இந்த ஆண்டு நிகழ்த்தப்பட்ட ஆளுநர் உரையில், மன்ற
உறுப்பினர்கள் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி மனந்திறந்து
கருத்துக்களை வெளியிடலாம் என்றும், அதனை எவ்வாறு செம்
மைப்படுத்தலாம், திருத்தி அமைக்கலாம், மறுபரிசீலனைசெய்ய
லாம் என்றும் கேட்கப்பட்டிருந்தன. மன்ற உறுப்பினர்கள் பல
ரும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டனர். மதுவிலக்குக்
கொள்கையைச் செம்மையாகச் செயற்படுத்த வேண்டும் என்பதில்
இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உறுதி
யாகவே இருந்து வந்ததையும், என்றாலும் சட்ட விரோதமாகக்
கள்ளச் சாராயம் காய்ச்சப்பட்டும், கள்ளத்தனமாகக் குடிக்கப்
பட்டும் வந்ததையும், அனுமதியின்றி கள்ளச்சாராயம் காய்ச்சு
வதையும், குடிப்பதையும் கடுமையாகத் தண்டிக்கும் வகையில்
சட்டம் இயற்றப்பட்டதையும் மன்ற உறுப்பினர்கள் அறிவார்கள்.
ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக, ஏழை எளிய குடும்பங்கள்
பல இன்னல்களுக்கு உள்ளானதைக் கண்டு, நடைமுறையில் சில
மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அனுமதிச் சீட்டு பெற்று

மாண்புமிகு தலைவர் அவர்களே,

80. தமிழ்நாட்டின் நிலையையும், தமிழக அரசின் நிதி நிலையையும் மன்றத்திடம் தெளிவு படுத்தியுள்ளேன்; விளக்கங்கள் தந்துள்ளேன்; வேண்டுகோள்கள் விடுத்துள்ளேன். இங்கு எடுத்து வைக்கப்பட்ட கொள்கைகளையும், குறிக்கோள்களையும், திட்டங்களையும் சிறப்பாகவும், செம்மையாகவும் நிறைவேற்றிட மன்ற உறுப்பினர்கள் அனைவரின் உதவியையும், ஒத்துழைப்பையும் நல்குமாறு விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

81. வேண்டிய பொருள், ஏற்ற கருவி, தக்க காலம் கொண்ட தொழில், உரிய இடம் ஆகிய ஐந்தினையும், நீங்குகிற முறையில் எண்ணிச் செயல்படுத்த வேண்டும் சீரிய கருத்தினை உள்ளடக்கிய தன்மையில்,

> '' பொருள் கருவி காலம் வினை இடனொடு ஐந்தும்
> இருள் தீர எண்ணிச் செயல் ''

என்ற வள்ளுவர் கூறிய வாக்கிற்கிணங்க, செயல் புரிந்திட மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தங்கள் உறுதுணையான ஆதரவை இந்த அரசிற்கு அளித்திட வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

82. இந்த நிதி நிலை அறிக்கையை உருவாக்கிட எனக்குச் சிறப்பான உதவியையும், ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலாளர் திரு. கே. ஜே. எம். ஷெட்டி அவர்களுக்கும், அவருடன் இணைந்து நின்று பணியாற்றிய அதிகாரிகளுக்கும், அலுவலாளர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

83. 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஏற்குமாறு அவையினரை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை 23–3–1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை நடுப்பகல் 12–20 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்டுள்ளது. இப்போது திருத்த மதிப்பீட்டில் இது நிகரப் பற்றாக்குறை ரூ. 3.64 கோடி என்று திருத்தப்பட்டுள்ளது. ஆரம்ப இருப்பான ரூ. (—) 7.83 கோடியையும் சேர்த்து இவ்வாண்டு இறுதியில் கையிருப்பு ரூ. (—) 11.47 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

| 544 | Capital Outlay on Other Transport and Communication Services .. .. .. | 20·00 | 10·00 | 15·80 | 26·20 | 41·50 | 44·92 | 36·14 | 37·56 | 50·17 |
| | TOTAL .. | 39,54·89 | 67,96·38 | 55,30·75 | 40,52·50 | 58,34·06 | 67,59·24 | 94,21·23 | 93,33·41 | 1,35,98·83 |

## APPENDIX III.

### STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF TAMIL NADU UNDER THE FIVE YEAR PLANI.

| *Serial number and Sector Sub Sector of Development.* | *Budget Estimate,* 1980–81 | *Revised Estimate,* 1980–81 | *Budget Estimate* 1981–82. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (IN LAKHS OF RUPEES) | | |
| I. AGRICULTURE AND ALLIED SERVICES— | | | |
| Agriculture—Crop Husbandry .. .. | 15·37 | 16,11 | 18,88 |
| Research and Education .. .. .. | 96 | 105 | 1,05 |
| Land Reforms .. .. .. .. | 7 | 5 | 5 |
| Marketing Storage and Warehousing .. | 57 | 58 | 69 |
| Special Programme for Rural Development | 12,46 | 13,22 | 13,81 |
| Minor Irrigation .. .. .. .. | 3,58 | 3,87 | 3,71 |
| Social and Water Conservation .. .. | 3,76 | 3,79 | 3,80 |
| Animal Husbandry .. .. .. .. | 3,94 | 3,65 | 4,37 |
| Dairy Developemnts .. .. .. | 32 | 31 | 38 |
| Fisheries .. .. .. .. .. | 2,04 | 2,27 | ;1·99 |
| Forests .. .. .. .. .. | 6,51 | 7,04 | ;7,75 |
| Investments in Agricultural Financial Institutions .. .. .. .. .. | 1,25 | 80 | 60 |
| Food .. .. .. .. .. .. | 1,73 | ;1,78 | 1,81 |
| Community Development .. .. .. | 25,25 | 34,95 | 38,24 |
| Special and Backward Areas .. .. | 2,57 | ;3,45 | 3,80 |
| Total —I .. | 80,38 | 92,92 | 1,01,03 |
| II. CO-OPERATION— | | | |
| Co-operation .. .. .. .. | 3,61 | 3,60 | 3,66 |
| III. IRRIGATION, FLOOD CONTROL— | | | |
| Water and power Development, Irrigation and Flood Control. .. .. .. | 29,33 | 32,29 | 26,62 |
| Power Development .. .. .. | 1,55,76 | 1,55,90 | 1,69,59 |
| TOTAL—III | 1,85,09 | 1,78,19 | 1,96,21 |
| IV. INDUSTRIES AND MINERALS— | | | |
| Industries .. .. .. .. .. | 8,89 | 9,34 | 42,18 |
| Village and Small Industries .. .. | 13,83 | 13,75 | 13,19 |
| Mining and Metallurgica Industries .. | 50 | 53 | 24 |
| TOTAL—IV | ;23,22 | 23,62 | 55.61 |



## APPENDIX III—cont.

### STATEMENT SHOWING THE DETAILS OF EXPENDITURE ON PLAN SCHEMES OF TAMIL NADU UNDER THE FIVE-YEAR PLAN—cont

| *Serial number and Sector/Sub-Sector of Development.* | *Budget Estimate,* 1980-81. | *Revised Estimate,* 1980-81. | *Budget Estimate,* 1981-82. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (IN LAKHS OF RUPEES) | | |
| V. TRANSPORT AND COMMUNICATIONS— | | | |
| Ports, Lighthouses and Shipping .. | 12 | 8 | 2,18 |
| Roads and Bridges .. .. | 17,89 | 17,89 | 15,75 |
| Road and Water Transport Services. | 19,38 | 17,47 | 19,68 |
| Tourism .. .. .. .. | 51 | 52 | 73 |
| TOTAL—V .. | 37,90 | 35,96 | 38,34 |
| VI. SOCIAL AND COMMUNITY SERVICES— | | | |
| General Education .. .. .. | 18,72 | 16,43 | 20,41 |
| Art and Culture .. .. .. | 09 | 72 | 1,00 |
| Technical Education .. .. | 1,41 | 1,56 | 2,18 |
| Medical .. .. .. .. | 11,24 | 11,91 | 21,69 |
| Public Health and Sanitation .. | 1,04 | 2,56 | 4,20 |
| Sewerage and Water Supply .. | 33,36 | 36,10 | 51,30 |
| Housing .. .. .. .. | 15,99 | 16,57 | 19,28 |
| Urban Development .. .. | 7,69 | 10,86 | 14,56 |
| Information and Publicity .. | 64 | 65 | 23 |
| Labour and Labour Welfare .. | 59 | 67 | 94 |
| Welfare of Scheduled Castes, Scheduled Tribes and Other Backward Classes .. .. .. | 12,51 | 16,20 | 17,87 |
| Social Welfare .. .. .. | 1,80 | 1,06 | 2,11 |
| Nutrition .. .. .. | 1,06 | 1,48 | 5,52 |
| Other Social and Community Services .. .. .. | 28 | 42 | 38 |
| TOTAL—VI .. | 1,06,93 | 1,17,19 | 1,61.67 |
| VII. ECONOMIC SERVICES— | | | |
| Secretariat—Economic Services .. | .. | 1 | 1 |
| Other General Economic Services. | 17 | 15 | 30 |
| TOTAL—VII .. | 17 | 16 | 31 |
| VIII. GENERAL SERVICE— | | | |
| PUBLIC WORKS .. .. .. | 1,31 | 2,81 | 6,43 |
| GRAND TOTAL .. | 4,38,61 | 4,54,45 | 5,63,26 |

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை

திங்கட்கிழமை, 1981 மார்ச் 23.

பங்குனி 10, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராஜாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.''

சொற்களின் தொகுதியறிந்த தூய்மை உடையவர் அவைக் களத்தின் வகையினை அறிந்து, வல்லவர்களின் அவையில் வாய் சோர்ந்து பிழை சொல்லமாட்டார்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பெரம்பூர் தொகுதியில் குடிசைகளுக்கு தீ வைப்பு

*வினா எண். 431-அ—திரு. சு. பாலன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பூர் தொகுதியில் பெரியார் நகர், இந்திரா நகர் ஆகிய இடங்களில் குடிசைகளுக்கு 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று பகல் சுமார் 1–30 மணிக்கு சமூக விரோதிகள் தீயிட்டதும், கொள்ளையடித்ததும் உண்மையா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து போலீஸ் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று பகல் சுமார் 2–30 மணிக்கு வியாசர்பாடியில் உள்ள பெரியார் நகர், இந்திரா நகர் ஆகிய இடங்களில் உள்ள குடிசைகளுக்கு ஒரு கூட்டத்தினரால் தீவைக்கப்பட்டது. ஆனால், கொள்ளையடிக்கப்படவில்லை.

(ஆ) இதன் தொடர்பாக குற்ற எண். 1540/80-இல் இ.பி. கோ. பிரிவுகள் 147, 148, 323, 427, 436 மற்றும் 395-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு 11 பேர்கள் குற்றம் சாட்டப் பட்டனர். குற்றம் சாட்டப்பட்ட 11 பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டனர். மூவர் சரணடைந்தனர்.

புலன் விசாரணையில் மேலும் 6 நபர்கள் கைது செய்யப்பட்டு மொத்தம் 17 பேர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டு வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, 1980ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27ஆம் நாள் அன்று சென்னையிலே நடைபெற்ற இப்படிப்பட்ட துக்ககரமான செய்தி பற்றி கேள்வி கேட்டு ஏறக்குறைய 9 மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால், இப்போது தான் இந்தக் கேள்வி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. ஆகவே எவ்வளவு காலதாமதத்தை இந்த சர்க்கார் ஏற்படுத்துகிறது என் பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். அன்றையதினம் சில சமூக விரோதிகள் திடீரென தீயிட்டுக் கொளுத்தியதன் காரண மாக பல வீடுகளிலே பலபேர் புகுந்து பல்லாயிரக்கணக்கான ரூபாய் கொள்ளை அடிக்கப்பட்டிருக்கின்றது என்பதாக மனு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி இருந்தும் மாண்புமிகு முன்னவர் அவர்கள் அங்கே கொள்ளை அடிக்கப்படவில்லை என்று சொல்கிறார்கள். அதுமட்டுமல்ல, சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் சொல்லப் பட்டிருக்கிறது. அந்த வழக்கு முடிந்துவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே: கொள்ளை அடிக்கப்பட்டதா என்று கேள்வி கேட்கப் பட்டது. கொள்ளை அடிக்கப்படவில்லை ஆனால், இந்திரா நகரில் 30 குடிசைகளும், பெரியார் நகரில் 30 குடிசைகளும் ஆக மொத்தம் 60 குடிசைகள் தீயினால் சேதம் அடைந்திருக்கின்றன. அவற்றின் சேதம் 30 ஆயிரம் ரூபாய் என்று சொல்லப்பட்டிருக் கின்றது. இது சம்பந்தமாக 11 பேர்கள் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வருகின்றது.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, திடீரென்று சமூக விரோதிகள் பாய்ந்து தீயிட்டுக் கொளுத்தி இருக்கின்றனர். அங்கே பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கு முதல்வர் நிவாரண நிதியி லிருந்து ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்பதை அறிய விரும்பு கிறேன்.



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி நிதியாக ரூபாய் 100-ம் 5 கிலோ அரிசியும் வேட்டி, புடவை ஆகியவைகளும வழங்கப் பட்டுள்ளன.

### அரசு அலுவலகங்களுக்கு வார விடுமுறை

*வினா எண். 431-ஆ— **திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு அலுவலகங்கள் வாரத்திற்கு இரண்டு நாட்கள் விடுமுறை அளிப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மத்திய அரசு இது குறித்து ஒரு முடிவு எடுத்தபின் அதைக் கருத்திற்கொண்டு, மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்று கருதப்பட்டது. மத்திய அரசு தனது அலுவலகங்களில் வாரத்திற்கு 5 நாள் பணி முறையைக் கொண்டு வருவது வேண்டாமென முடிவு செய்து உள்ளதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. அது பற்றி அதிகாரப் பூர்வமான தகவல் வந்ததும் மாநில அரசு இறுதி முடிவு எடுக்கும்.

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, தற்போது குடிநீர்-வடிகால் வாரியத்தில் வாரத்திற்கு இரண்டு முறை விடுமுறை விடப்படுகிறது என்பது நம்முடைய முன்னவர் அவர்களுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலமான கர்நாடகத்தில், வாரத்தில் ஓர் நாளில் அலுவலகங்களின் வெளிக் கதவுகளை அடைத்துவிட்டு, அன்றைக்கு விசிட்டர்கள் யாரையும் அனுமதிக்காமல், அரசு அலுவல்களை மட்டும், அன்று பூராவும் அமைச்சர்களும், அரசு அலுவலாளர்களும் பார்க்கின்ற முறை—வேலை செய்கின்ற முறை அமல்படுத்தப்படுகிறது. அதைப்போலவே தமிழகத்திலும் செய்ய, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய ஆலோசனை தமிழகத்தில் தற்போது இல்லை. அரசு அலுவலர்களின் வேலை நேரம் வாரத்தில் 5 நாட்களா, அல்லது 6 நாட்களா என்பது பற்றித்தான் இங்கே கேள்வியாக எடுத்துக்கொண்டிருக்கிற பிரச்னை. அது பற்றி மத்திய அரசு ஆராய்ந்து, தற்போது நடைமுறையில் இருந்து வருவதைப்போலவே நிலைமையை நீடிக்கலாம்

[1981 மார்ச் 23

a) the steps taken by the Government to recover the dues from Congress (I), Tamil Nadu Congress Committee incurred in connection with the Lok Sabha election tour of Tamil Nadu by Mrs. Gandhi in 1977, and

b) whether any amount is still due and if so, how much ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) திருமதி இந்திரா காந்தி அவர்கள் நாடாளுமன்ற தேர்தல் நிமித்தம் 1977 ஆம் ஆண்டு தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்தபோது ஏற்பட்ட செலவில் காங்கிரஸ் (இந்திரா) கட்சி செலுத்த வேண்டிய தொகையாகிய ரூ. 69,091-ஐ கோரி அக்கட்சியின் பொதுச்செயலாளருக்கு கடிதம் எழுதப்பட்டது. தொடர்ந்து நினைவூட்டு கடிதங்களும் அனுப்பப்பட்டுள்ளன.

(ஆ) ஆம். மேற்கண்ட தொகை இன்னும் செலுத்தப் படவில்லை.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, இதே கேள்வி முன்பே இந்த அவையில் கேட்கப்பட்டபோது, இதே தொகை பாக்கியிருப்பதாக அன்று பதில் சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு அதன்மீது 1/2 மணி நேரம் விவாதம் நடைபெற்றது. முடிவில் விரைவில் வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதன் பேரில் விவாதம் ஒரு முடிவிற்கு வந்தது. அந்தக் கேள்வி 77-ல் கேட்கப்பட்டது. கிட்டத்தட்ட 4 வருடம் ஆகிவிட்டது. அப்படி இருக்கும்போது திரும்ப திரும்ப இந்த 69,091 ரூபாயை அந்தப் பார்ட்டியினுடைய—அதாவது கட்சியினுடைய கமிட்டியிடமிருந்து வசூல் பண்ண நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்கிறார்களே தவிர, நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஐப்தி நடவடிக்கை ஏன் எடுக்கவில்லை ? எடுக்காமல் இருப்பதற்கு காரணம் என்ன ? இனிமேலாவது ஐப்தி நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-10]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இதுபற்றி அரசாங்கம் பல தடவை அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறது. அவர்களிடமிருந்து எந்த பதிலும் வரவில்லை. அதுமட்டுமல்லாமல், ஆரம்பத்தில் இருந்தே அதற்கான தொகை வரவில்லை. 13 இலட்சத்து சில்லறை ரூபாய் செலவாகியிருக்கிறது என்றாலும் மத்திய அரசு ஒரு குறிப்பு தந்திருக்கிறது. எதை எதை மாநில அரசுகள் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் எதை எதை கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் ஒரு குறிப்பைத் தந்திருக்கிறது. அதன் அடிப்படையில்தான் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 13 இலட்சத்து சில்லறை ரூபாய் ஆனாலும் அதில் காங்கிரஸ் கட்சி தரவேண்டியது ரூ. 69,091 என்று வருகிறது. அதை திரும்பத் திரும்ப எழுதியும் கூட வரவில்லை, 2967 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலும்,



1981 மார்ச் 23]

2969 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களிலும், 2972 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களிலும் சுற்றுப்பயணம் செய்த தற்குக் கூட இன்னும் பாக்கி வரவேண்டியது வராமல் இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும் கடிதம் எழுதிக்கொண்டிருக்கிறோம். 1967 ஆம் ஆண்டு சுற்றுப் பயணத்திற்கு ரூ. 73,715.73 காசு. 1969 ஆம் ஆண்டு சுற்றுப் பயணத்திற்கு ரூ. 53,696. 1971ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி சுற்றுப் பயணத்திற்கு ரூ. 20,149.55 என்றிருக்கிறது. அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சியில் அதில் தலைமை தாங்கியவர்களிடையே குழப்பம் ஏற்பட்டு நீதிமன்றங்களில் வழக்கு இருப்பதன் காரணமாக யார் செலுத்துவது என்பதன் காரணமாக அவை செலுத்தப் படாமலேயே இருந்து வந்தது. அதற்குப் பிறகு அந்தச் சொத் தில் யாருக்கு உரிமை இருக்கிறதோ அவர்கள் செலுத்த வேண்டும் என்ற நிலைமை வந்து இப்போது மேல்முறையீடு செய்து திரும் பப் பெற்றுக்கொள்ளப்பட்டது அந்த வழக்கு. இதையொட்டி அரசாங்கத்திற்குச் சேர வேண்டிய பணத்தை எப்படி வசூலிப் பது என்பது பற்றி சட்டத்துறையின் ஆலோசனையின் பேரில் கூடுதல் அரசாங்க வழக்குரைஞரை அரசாங்கம் கேட்டிருக் கிறது. அவர்களிடமிருந்து அறிக்கை வந்த பிறகு அந்த அறிக்கையின்மீது தக்க நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

**திரு. ரா. உமாநாத் :** தேர்தல்களில் எல்லாக் கட்சிகளுக்கும் ஈக்வல் ஆப்பர்சூனிட்டி கொடுக்கப்படுகிறது என்பது நியதி. அதாவது சம வாய்ப்புகள் கொடுக்கப்படுவது என்பது. இப் போது அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து ஒரு கட்சிக்கு மட்டும் சர்க்கார் கஜானாவிலிருந்து கடன் கொடுப்பது என்பது —ஒரு கட்சிக்கு மட்டும் ஆளுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதால் கிடைக்கிறது என்கிற பொஸிஷன்—மற்றக் கட்சி களுக்கு அந்த வாய்ப்பு இல்லாததால் அந்த வாய்ப்பில்லை என்ற அசம்பாவிதத்தை உண்டாக்குவதால் இந்த முறை, இந்த உரிமை, இந்தச் சலுகை இனிமேல் கூடாது, அதை ரத்து செய்ய வேண்டும் அப்படி ரூல் ஏதாவது இருந்தால் என்று மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ? அல்லது அதே அளவிற்கு கடன் மற்ற கட்சிகளுக்கும் கொடுக் கப்பட வேண்டும் என்று அரசுக்கு மாநில அரசு சிபார்சு செய் யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இது கட்சி என்ற அடிப்படையில் செய்தது அல்ல. இந்தியாவினுடைய தலைமை அமைச்சர், பிரதமர் என்ற முறையில் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்கள். பிரதமர் என்ற முறையில் பல ஏற்பாடுகளைச் செய்ய வேண்டிய கடப்பாடு மாநில அரசுக்கு வருகிறது. ஆகவே அப்படி சிலபல செலவு களை மாநில அரசு ஏற்றுக்கொண்டு, தேர்தல் காலத்தில் கட்சிப் பிரசாரம் என்று அவர்கள் ஈடுபடும்போது இன்னின்ன செல

வினங்களை கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசு ஒரு குறிப்பு தந்திருக்கிறது. அந்தக் குறிப்பின் அடிப்படையில் மொத்தச் செலவு ரூ. 13 இலட்சத்து சில்லைறயானாலும் இந்தக் கட்சி செலுத்த வேண்டியது ரூ. 60,991 என்று அவர்கள் இட்டிருக்கிற குறிப்பின் அடிப்படையில்தான் நாம் அந்தப் பணத்தை செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அது இன்னும் வரவில்லை. வந்துவிடும் என்று எதிர்பார்க்கிறோம். இல்லாவிட்டால் வழக்குரைஞரின் ஆலோசனையின் பேரில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரும்.

**திரு. மு. அம்பிகாபதி :** பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சுற்றுப்பயணம் செய்த வகையில் ஏற்பட்ட செலவு பற்றி அவை முன்னவர் அவர்கள் நான்கைந்து ஐட்டம்களைச் சொன்னார்கள். அதில் ஏற்பட்டிருக்கக்கூடிய மொத்தச் செலவு எவ்வளவு? அது எவ்வளவு ஆண்டுகளாக அரசுக்கு வரவேண்டியிருக்கிறது? இதை உடனடியாக வசூலிக்க, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுமாதிரி, ஜப்தி போன்ற நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கத்திற்கு தயக்கம் இருக்கிறதா? சாதாரண விவசாயி ஒருவர் மின்சாரக் கட்டணம் இருபது ரூபாய் கட்டவில்லை என்றால் நடவடிக்கை எடுக்கிறோம். இது ஒரு பெரிய கட்சி அலுவலகத்தைப் பொறுத்தது. ஜப்தி போன்ற நடவடிக்கைகள் எடுப்பதற்கு அரசாங்கம் தயங்குகிறதா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வியோடு நில்லுங்லுங்கள், சுற்றிச்சுற்றி வரவேண்டாம்.

**திரு. மு. அம்பிகாபதி :** ஒருவர் மின்சாரக் கட்டணம் அல்லது ஹவுஸ் டாக்ஸ் பந்து அல்லது இருபது ரூபாய் கட்டவில்லையென்றால் உடனடியாக ஆக்ஷன், கதவை பிடுங்கிக் கொண்டு போகிறார்கள். இதில் கதவைப் பிடுங்குவதுபோல் நடவடிக்கை ஏதாவது எடுக்கப் போகிறீர்களா இல்லை ஏதாவது தயக்கம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, நான் அதைப்பற்றி முதலிலேயே சொன்னேன். அந்தக் கட்சி மிகப் பெருந்தன்மையோடு செலுத்திவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டதன் காரணமாக, நாமும் பெருந்தன்மையோடு அதற்கு ஜப்தி நடவடிக்கை எடுப்பதில் கொஞ்சம் மெத்தனமாக இருந்தோம். மேலும், இப்படிப்பட்ட நிலைமைக்கு 77-வது ஆண்டு செலுத்த வேண்டிய பணம் ரூ. 69,091. இப்போது இதுபற்றி நடவடிக்கை எடுப்பது குறித்து கூடுதல் வழக்கறிஞர் அவர்களின் கருத்துக்களைக் கேட்டிருக்கிறோம்



அதற்கான தஸ்தாவேஜுகளைக் கொடுத்திருக்கிறோம். அவர்
கள் அறிக்கை கிடைத்த பிறகு முறைப்படி நடவடிக்கை
எடுக்கலாம் என்று கருதுகிறோம். இந்தச் செய்தி சட்டமன்றத்
தில் வந்துவிட்ட காரணத்தினால், இந்தத் தொகையை அந்தக்
கட்சியினர் மற்றக் கட்சிகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்க
கட்டிவிடுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்தியப் பேரரசின் தலைமை
அமைச்சர் என்ற காரணத்திற்காக இவ்வளவு தொகை செல
வழித்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே
தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கொடுக்க வேண்டிய தொகை
ரூ. 69,091 என்று சொன்னார்கள். என்ன இனங்களில் செல
வழிக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்
களா? அதோடு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்தச் செலவை
ஏற்பதாகச் சொல்லி அவர்களது கோரிக்கையின் மீது இந்த
ஏற்பாடு செய்யப்பட்டதா? அப்படியானால், எவ்வளவு எந்
தெந்த இனங்களுக்காக செலவழிக்கப்பட்டது என்பதை அமைச்
சர் அவர்கள் தெரிவிப்பார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர்
அவர்களே, மத்திய அரசு ஒரு குறிப்பைத் தந்திருக்கிறார்கள்.
பிரதம அமைச்சர் அவர்கள் தேர்தல் பிரசாரத்திற்கு வருகின்றபோது, எதை எதைச் செய்ய
வேண்டும் என்று அதிலே குறிப்பு தந்திருக்கிறார்கள். அவர்களே
செய்யவேண்டுமென்று விரும்பினாலும், அரசாங்கம் அதற்கு
விடுவதில்லை. காரணம், அதை முறையாகச் செய்ய வேண்டும்.
பந்தோபஸ்து போன்ற ஏற்பாடுகளையெல்லாம் காவல் துறை
யினரும், மற்றவர்களும் முறையாகச் செய்ய வேண்டியிருப்பதால்,
அரசு இவைகளை அவர்கள் செய்ய விடுவதில்லை. ஆகவே,
பிரதம அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி, திருநெல்வேலி,
இராமநாதபுரம், மதுரை, திருச்சிராப்பள்ளி தஞ்சாவூர்,
சேலம், தென் ஆற்காடு, செங்கற்பட்டு, சென்னை ஆகிய
மாவட்டங்களின் பொதுக் கூட்டங்களிலே பேசினார்கள். பொதுக்
கூட்டங்களை அவர்கள் நடத்துகிறார்கள் என்றாலும் கூட,
அதன் ஏற்பாடுகளை அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது. அந்த
வகையில், பொதுப்பணித்துறையினர் எல்லா இடங்களிலும்
மேடை அமைத்த வகையில் ரூ. 26,658-ம், ஒரு பெருக்கிக்காக
ரூ. 41,041-ம், மற்ற வகைகளில் ரூ. 1,392-ம் ஆக மொத்தம்
ரூ.69,091 செலவாகியிருக்கிறது.

**திரு. செ. சிவசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது கேள்வியானது, இந்திரா காந்தி அவர்கள் நாடாளு
மன்றத் தேர்தல் நிமித்தம் 1977-ஆம் ஆண்டு தமிழகத்தில்
சுற்றுப் பயணம் செய்தபோது ஏற்பட்ட செலவில் தமிழ்நாடு

[1981 மார்ச் 23

காங்கிரஸ் கட்சி தரவேண்டிய தொகையைப் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது என்பதாகும். ஆனால், இன்று வரையில் 4 ஆண்டுகள், ஆகியும், அந்தத் தொகையை கட்டவில்லை. பெருந்தன்மையோடு கட்டிவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 4 ஆண்டுகள் ஆகியும் கட்டவில்லை. என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு நாவலர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லியபடி, இந்தப் பிரச்னையில் கூடுதல் அரசு வழக்கறிஞரின் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது அவர்கள் அறிக்கை வந்த பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தூத்துக்குடி அனல் மின் திட்டம்.

*வினா எண். 432—திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் எப்போது முதல் செயல்படும் ?

(ஆ) தாமதப்பட்டதற்கு காரணம் என்ன ?

(இ) இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த மின்சாரம் எவ்வளவு ? தற்போது எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) இத்திட்டத்தின் முதல் பிரிவு 1979-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ஆம் தேதி முதலும் இரண்டாம் பிரிவு ஜனவரி 1981 முதலும் இயங்கி வருகின்றன. இத்திட்டத்தின் மூன்றாம் பிரிவு 1982 மார்ச்சில் இயங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(ஆ) எண்ணெய் இயக்கத்திலிருந்து நிலக்கரி இயக்கத்திற்கு கொண்டு வருவதற்கும் சில இயந்திரக் கோளாறுகளாலும் முதல் பிரிவு 1980-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21-ஆம் தேதியன்று நிறுத்திவைக்கப்பட்டது. செப்டம்பர் 1980-லேயே இயங்க வேண்டிய இரண்டாம் பிரிவு ரோட்டாரில் ஏற்பட்ட கோளாறினால் தாமதப்பட்டு ஜனவரி 1981-ல் இயக்கப்பட்டது.



1981 மார்ச் 23]

(இ) இத் திட்டத்தின் முதல் பிரிவின் மூலம் எதிர்பார்த்த மின்சாரம் 1980-ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி வரை 935.29 மில்லியன் யூனிட்டுகள், ஆனால் கிடைத்த மின்சாரம் 503.37 மில்லியன் யூனிட்டுகள்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்த அனல் மின்சாரத் திட்டத்தில் கோடிக்கணக்கான ரூபாயை செலவு செய்தும், மிகப் பிரம்மாண்டமாக செய்யப்பட்ட இந்தத் திட்டத்தில், இப்போது செலவழிக்கப்பட்டிருக்கின்ற அடிப்படையில், மின்சாரம் எதிர்பார்த்ததைவிட கிட்டத்தட்ட பாதி தான் வருகின்றது. ஆக, இந்த அளவில் ஒரு பயங்கரமான இழப்பை, நஷ்டத்தை ஏற்படுத்துவதற்கு காரணமாக இருந்தது யார் ? ஒரு துறையா அல்லது அதிகாரிகளா என்பதை அறிய விரும்புகிறேன் ?

[முற்பகல் 9–20]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் ஒரு முறை பதில் தருகிறபோதே இதை கூறியிருக்கிறேன். நாம் வாங்குகின்ற பொருள்களின் தன்மை, 'டிசைன்', அவை இயங்குகிற தன்மை முதலிய பல்வேறு காரணங்களாலே அந்த குறைபாடுகள் இருக்கின்றன.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இப்படி நஷ்டம் ஏற்படுகின்ற காரணத்தாலே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? பி. எச். இ. எல். நிறுவனத்தினரிடமிருந்து நஷ்டஈடு வாங்குவதற்கு ஏற்பாடுகள் எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாமே அரசுத்துறை என்கிற காரணத்தாலே நஷ்டஈடு என்பது இயலாத ஒன்று. பி.எச்.இ.எல். நிறுவனத்திலிருந்து நஷ்டஈடு வாங்கினால், அந்த நஷ்டத்தை அவர்கள் சரிக்கட்ட வேண்டும். மற்றப் பொருள்களின் மீது விலையை அதிகப்படுத்திக் கொடுத்து விடுவார்கள். நஷ்டஈடு என்பது நடைமுறைக்கு சாத்தியமல்லாத ஒன்று.

திரு. எஸ். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த திட்டத்தின் மொத்த மதிப்புத் தொகை எவ்வளவு என்பதையும் இதுவரையில் இதற்காக செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும் செலவழிக்கப்பட்ட தொகையில் மொத்த மதிப்புத் தொகையில் நமது தமிழ்நாடு மாநில அரசினுடைய பங்குத்தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

[1981 மார்ச் 23

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவரங்கள் எல்லாம் மின்சார வாரியத்தின் வரவு-செலவுத் திட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போட்டால் பதில் சொல்வதற்கு இயலும்.

**திரு. ர. உமாநாத் :** பேரவைத் தலைவர் அவர்களே, 935 மிலியன் யூனிட்டுகள் எதிர்பார்த்த இடத்திலே 503 மிலியன் யூனிட்டுகள் தான் கிடைத்திருக்கிறது. இது மிகவும் அதிர்ச்சி தரக்கூடியது ; சீரியசான விஷயம் ; நம்முடைய பொருநிலத்தை பாதிக்கக்கூடியது என்கிற காரணத்தாலே மத்திய அரசினிடமிருந்து நமக்கு வரவேண்டிய நிலக்கரி எவ்வளவு ? வந்தது எவ்வளவு ? இப்போதைய ஸ்டாக் பொசிஷன் எவ்வளவு ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மின் உற்பத்தி குறைவாக இருப்பதற்கு காரணம் நிலக்கரி பற்றாக்குறை என்று சொல்வதற்கில்லை ; இயந்திரங்களின் கோளாறு தான். ஆனால் அதுவும் ஒரு வகையிலே காப்பாற்றி இருக்கிறது என்று சொல்ல வேண்டும். ஏனென்றால், தூத்துக்குடியில் நமக்கு 1980—81-ல் ஒன்பது இலட்சம் டன் தருவதாக மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுவரையில் நமக்கு கிடைத்துள்ளது 3,64,694 டன் தான். ஆகவே மின்சார உற்பத்தி ஆகாததினால் பாதுகாப்பாக இருக்கிறோமே தவிர அந்த இரண்டு யூனிட்டுகள் மின்சாரத்தை உற்பத்தி செய்ய துவங்கினால், நமக்கு 90,000 டன் தேவைப்படும். ஆனால் இப்போது வருவது 40-லிருந்து 45 ஆயிரம் டன் தான் வருகிறது.

அதைவிட எண்ணூர் பொறுத்த வரையில் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. நமக்கு 12 இலட்சம் டன் தரவேண்டிய இடத்திலே எட்டு இலட்சம் டன் தான் கிடைத்திருக்கிறது. இன்றுள்ள நிலைமை ரெயில்கள் வந்தால் தான் அங்கே மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். ஏனென்றால் இருக்கிற ஸ்டாக் ஒரு நாளைக்கு கூட போதாது.

**திரு. என். வரதராஜன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாவம் ஒரு இடம், பழி ஒரு இடம் என்பது போல மாநில அரசுகள் மின்சாரத் தட்டுப்பாட்டிலே சிக்கித் தவிக்கிறபோது, மத்திய அரசினுடைய கவனிக்காதப் போக்கின் காரணமாக எந்திரங்கள் கோளாறுகள் காரணமாக பல நூறு கோடிக்கணக்கான ரூபாய் நஷ்டம் அடைகிறபோது, ஒரு ' எக்ஸ்பெர்ட் கமிட்டி ' அமைத்து இந்த தூத்துக்குடி அனல் மின்சார செயல்பாட்டை பரிசீலித்து தேசத்திற்கு அளித்தால், இந்த தவறுகள் அபாராதம் அல்ல. தண்டனையும் அல்ல, பணத்தை அவர்கள் கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. வருகிற காலத்திலாவது இப்படிப்பட்ட தவறுகள் நேராமல் தடுப்பதற்கு உதவியாக இருக்கும் என்பதால் அரசு இதை பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர்
அவர்களே, நஷ்டத்திலே இருக்கிறதால், மத்திய, மாநில
அரசினுடைய நிபுணர்கள் அவ்வப்போது அழைக்கப்பட்டு,
இதையெல்லாம் சரிபார்க்க சொல்லப்படுகிறார்கள். இவர்களும்
அறிக்கைகளைத் தருகிறார்கள். அந்த அறிக்கைகளின் மீது
நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இருந்தாலும், இந்த
நிலைமை தொடர்ந்து இருந்து வருகிறது. இதுதான் இன்றைய
நிலைமை. வெளிநாட்டிலேயிருந்து கூட நிபுணர்களை வர
வழைத்து இவைகளை பார்க்கவேண்டுமென்று மத்திய அரசு
முடிவு செய்திருக்கிறது. அண்மையிலே பாரத் ஹெவி எலக்ட்
ரிகல்ஸ் நிறுவனம் வெளிநாட்டிலேயிருந்து நிபுணர்களை வர
வழைத்து அவர்களோடு ஒரு கருத்தரங்கம் நடத்தியிருக்கின்றது.
ஆகவே, நிபுணர்கள் ஏற்கனவே இதில் அக்கறை கொண்டிருக்கி
றார்கள், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐந்தாறு ஆகாச நீர்வீழ்ச்சியிலிருந்து மின்சாரம் எடுக்கும் திட்டம்**

*வினா எண். 433 : **திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு
மின்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா

கொல்லிமலையில் ஓடும் ஐந்தாறு ஆகாச நீர் வீழ்ச்சியில்
மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தமிழ்நாடு மின் வாரியத்தின்
ஆய்வில் உள்ளது.

**திரு. சீ. சிவப்பிரகாசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கொல்லிமலையில் அய்யாறு ஆகாச நீர்வீழ்ச்சியிலே
தண்ணீர் வருடம் முழுவதும் ஓடிக்கொண்டிருக்கிறது. அதைப்
பயன்படுத்தி தமிழகத்தின் மின்சாரத் தேவையை பூர்த்தி
செய்யக்கூடிய முறையிலே அரசு இந்தத் திட்டத்தை எப்போது
செயல்படுத்த முன்வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** கொல்லி மலையில்
3 ஆயிரம் அடிக்கு மேலே உள்ள 36.87 சதுர மைல் பரப்புள்ள
நீர்ப்பிடிப்பிலிருந்து வரும் நீரைப் பயன்படுத்தி 20 மெகாவாட்
உற்பத்தித் திறன் கொண்ட சராசரியாக ஒரு வருடத்திற்கு
90 மிலியன் யூனிட்டுகள் கிடைக்கும்படியான நிலைமை இருக்
கிறது. இப்போது அதைப்பற்றி வரைபடங்கள் மூலமாக
ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு அரசு எவ்வளவு மதிப்பீட்டுத் தொகை என்று மதிப்பீட்டுள்ளது? இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : இது ஆரம்ப நிலையில் உள்ளது. ரெக்கனைசன்ஸ் என்று சொல்வார்களே, அந்த ஆரம்ப நிலையில் தான் இருக்கிறது. ஆரம்ப சர்வே முடிந்த பிறகு தான் எவ்வளவு செலவாகும் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. செ. செம்மலை : கொல்லிமலையைத் தவிர சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற நீர்வீழ்ச்சிகளில் ஓடிக்கொண்டிருக்கின்ற நீரைப் பயன்படுத்தி புனல்மின் திட்டம் ஆரம்பிக்கும் சாத்தியக்கூறுகள் ஏதேனும் உள்ளதா? அப்படியிருக்குமானால் எந்த எந்த இடங்களில் அப்படிப்பட்ட புனல் மின் நிலையங்கள் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அய்யாறு ஆறு திட்டம் ஏர்க்காடு பம்ப்ட்ஸ்டோரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. பழமலை பம்ப்ட் ஸ்டோரேஜ் திட்டம் 100 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது. வேதாநிதி ஹைட்ரோ ஸ்கீம் 25 மெகாவாட் கிடைக்கும் என்று ஆராயப்படுகிறது.

### ஆரல்வாய் மொழி அண்ணா கலைக்கல்லூரிக்கு நிலப்பதிவு

வினா எண் 434 : திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி தொகுதி, ஆரல்வாய்மொழி அண்ணா கல்லூரிக்கு பாசன குளத்தில் இருந்து நிலம் பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் பாசனம் பாதிக்காமல் இருக்க நிலம் திரும்ப எடுக்கப்படுமா ?

(இ) பாசன வசதி பாதிக்கப்பட்டுள்ள நிலங்களின் அளவு என்ன?



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, புல எண் 108-3, புல எண் 108-4-இல் உள்ள நிலங்களை அறிஞர் அண்ணா கல்லூரிக்கு வருவாய் வாரியம் கொடுத்திருக்கிறது. இடையே 108-2 இல் ஓடை இருக்கிறது. அந்த ஓடையிலே தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. ஆகவே எந்தவிதமான பாதகமும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி தனியார் கல்லூரி என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் கல்லூரிக்கு அரசினுடைய இடங்களாக இனாமாக வழங்கப்பட்டபோது அரசு கொள்கையாக முடிவு எடுக்கப்பட்டு வழங்கப்பட்டதா, இல்லையேல் தனிப்பட்டவர் செல்வாக்கினால் இடங்கள் வழங்கப்பட்டதா அதற்கான காரணங்கள் என்ன என்பதை அரசு ஆராயுமா? இல்லையேல் தனியார்கள் நாங்கள் கல்லூரிகளைத் திறக்கிறோம் என்று சொல்லி அரசாங்கத்திடம் நிலங்களைக் கேட்டால் அரசாங்கம் இதுபோல் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகளுக்கு அரசு நிலம் கொடுப்பது வழக்கமாக இருந்தது. தனியார் கல்லூரிகள் என்றாலும் அவைகள் அரசு உத்திரவுக்கு ஏற்பதான் நடத்தப்படவேண்டும். தனியார் கல்லூரிகள் என்பதாலேயே அரசு நிலம் கொடுக்கக்கூடாது என்ற உத்திரவு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தனியார் கல்லூரிகளுக்கு இது போன்று கேட்கிறபோது கொடுக்கலாம் அப்படிக் கொடுத்துள்ளதில் எந்தவிதமான பாதகமும் விவசாயிகளுக்கு ஏற்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் உண்மையிலேயே இதுபோன்ற இடம் கொடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று மக்கள் புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது கொடுக்கப்பட்டகாலத்திலே முன்னால் அரசு இருந்த காலத்திலே தனியார் ஒருவருடைய செல்வாக்கு காரணமாக கொடுக்கப்பட்டதா? அதிலே ஏதாவது ஊழல் நடந்திருக்கிறதா என்பதைப்பற்றி நான் கேள்வி கேட்கிறேன்.

[முற்பகல் 9-30]

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, ஊழல் நடந்ததா இல்லையா என்பதைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் தனியாக விசாரித்துப் பதில் சொல்ல முடியும்.

**தீ விபத்தில் வீடிழந்தவர்களுக்கு அரசு உதவி.**

*வினா எண். 435 : **திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தீ விபத்தில் வீடு இழந்தவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகள் 10 ரூபாய்க்கு மேல் கிஸ்தி செலுத்துபவர்களுக்கு இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவ்விதியைத் திருத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே தீயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்கள் நிலவரி செலுத்துவது ரூபாய் பத்தும் அதற்கும் குறைவாக இருந்தால் அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்கிறது. சிலயிடங்களில் பத்து ரூபாய்க்கும் அதிகமாக இருந்தாலும் அங்கேயிருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு இடத்திற்கேற்றவாறு நஷ்டத்திற்கேற்றவாறு அந்த விதியைத் தளர்த்தி அவர்களுக்கு உதவி செய்வதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது.

**திருநெல்வேலி மாவட்டத்தில் 'கேர்' நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம்**

* வினா எண். 436 : **திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவியுடன் சுகாதார கல்வித்திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதற்கான திட்டத்துக்கு 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 27 ஆம் நாள் அன்று ஏற்பளிக்கப்பட்டு அது இப்பொழுது செயல்பட்டு வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் சுகாதாரக் கல்வித் திட்டத்தின் நோக்கம் என்ன ? இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா ? கேர் நிறுவனம், மத்திய அரசு, மாநில அரசு ஆகியவை மூலம் இந்தத் திட்டத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒதுக்கப்படும் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தத் திட்டமானது ஆசிரியர்களுக்கு, நோய்கள் பற்றிய, சுகாதாரம் பற்றிய பயிற்சி அளிக்கின்ற திட்டம். அதை அவர்கள் மாணவர்களுக்குச் சொல்லித் தர வேண்டும். தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு, சாதாரண நோய்கள் வருவதற்கு என்ன காரணம் என்பதைச் சொல்லி அதை வராமல் தடுக்கவும், அப்படி வந்தால் என்னென்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு அடிப்படை அறிவை, சுகாதாரம் பற்றிய அறிவைத் தருவதற்கு இது சிறப்புத் திட்டமாக ஏற்பளிக்கப்பட்டிருக்கிறது. கேர் நிறுவன உதவியோடு இதை நாம் நடத்துகிறோம். செலவு 4 இலட்சம் ரூபாயாகிறது. அதில் 1,50,000 ரூபாயை கேர் நிறுவனம் ஏற்றிருக்கிறது. இந்தத் திட்டம்—திருநெல்வேலி மாவட்டத்தில் நாம் நடத்தி வருகின்ற திட்டம் வெற்றி கண்டால், இந்தத்திட்டம் நல்ல திட்டம் என்பது நம்முடைய அனுபவத்திலே தெரிய வருமேயானால் மற்ற உதவிகளையும் கணக்கிற்கொண்டு பிற மாவட்டங்களுக்கும் இதை விஸ்தரிக்கலாம் என்று இருக்கிறோம்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவரவர்களே, சுகாதாரத் கல்வித் திட்டம் செவ்வனே செயல்படும் முறையில், வெளிநாடுகள் சுகாதாரக் கல்வித் திட்டம் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால் மாணவர்களையும், மாணவிகளையும் கல்விச் சுற்றுலா மூலம் கேர் நிறுவன உதவியுடன் வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவரவர்களே, சுகாதாரம் பற்றிய அறிவைப் பெறுவது என்கின்ற அடிப்படையில் இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்தி வருகிறோம். அதை ஒரு பிரச்சினையாகக் கருதி, நாமே எடுத்து இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்த அறிவைத் தருவதற்காக

படுத்திக் கொண்டிருக்கிற நேரத்தில் மாணவர்களை அங்கே
அனுப்புவது என்றால் அது புதுப் பிரச்னைகளை உருவாக்கும்
ஆகவே, அத்தகைய செலவை மேற்கொள்ள முடியாது. அ
தகைய நிலைமைக்குப் போக வேண்டியதும் இல்லை. நமக்கு
இருக்கின்ற பல துறை அறிவையும் மாணவர்களுக்குச் சொல்லித்
தருவது, அவர்களுக்குப் பயன்படும் அளவிற்குச் சொல்லித்தருவது
கல்வியின் ஒரு பாகம் என்ற முறையிலே கல்வி இருப்பதால் இதைச்
செய்கிறோம்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத்
தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் கேர் நிறுவன உதவி
யுடன் சுகாதாரக் கல்வித் திட்டம் எல்லாப் பள்ளிகளிலும் நடத்
தப்படுகிறதா ? இல்லையென்றால் எல்லாப் பள்ளிகளிலும் நடத்
துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற 2,600
தொடக்கப் பள்ளிகளில் பணிபுரியும் எல்லா ஆசிரியர்களுக்கும்
பயிற்சி தரும் திட்டம் இந்தத் திட்டம். ஆகவே, எல்லாந்
தொடக்கப் பள்ளிகளுக்கும் வரும்.

## தொடக்கப்பள்ளிகளில் கூடுதல் ஆசிரியர்கள் நியமித்தல்.

*வினா எண். 437—**திரு. ஏ. சாகுல் ஹமீது:** மாண்புமிகு
கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக தொடக்கப்பள்ளிகளில் பத்து ஆசிரியர்கள்
பணியாற்றும் பள்ளிகளில் கூடுதலாக ஒரு ஆசிரியர் நியமித்திட
10+1 என்று ஆணையிட அரசுக்கு எண்ணம் உண்டா ?

(ஆ) ஆம், எனில் எந்த ஆண்டிலிருந்து அமுலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** (அ) மற்றும் (ஆ)
ஆண்டுதோறும் ஓரளவுக்கே புதியதாக கூடுதல் ஆசிரியர் பதவி
களை ஏற்படுத்திட நிதி நிலை இடம் தருகிறது. எனவே, அவ்
வாறு ஏற்படுத்தும் புதிய கூடுதல் பதவிகளை பகிர்ந்தளிக்கை
யில் 10+1 அடிப்படையில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளி
களுக்குத் தேவைப்படும் ஆசிரியர் பதவித் தேவை கணக்கில்
எடுக்கப்படுவது இல்லை. தற்போதைக்கு இந்நிலையில் மாற்றம்
செய்ய இயலாது. (ஆயினும், 10-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள்
ஏற்கெனவே பணியாற்றி வரும் தொடக்க மற்றும் நடுநிலைப்
பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தொடர்ந்து பணியாற்றி வர
லாம் என்று கணக்கிடும் பொழுது 10+1 அடிப்படையில் தேவைப்
படும் பதவியும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுகிறது.



**திரு. இரா. சண்முகம் :** பேரவைத் தலைவர் அவர்களே,
தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ விடுப்பு 18 மாதங்
களுக்கு என்று இருக்கிற காரணத்தால், அவர்கள் தொடர்ந்து,
நினைத்தபோதெல்லாம் அந்த விடுப்பைப் பயன்படுத்துகிற கார
ணத்தால், மாணவர்களுக்குப் பாடம் நடத்த இடைஞ்சலாகவும்,
தடையாகவும் இருக்கின்றது. அந்தக் காரணத்தால், 10 பிளஸ்
1 என்ற விகிதத்தில் ஆசிரியர்களை நியமனம் செய்வார்களானால்
விடுப்பில் சென்றிருக்கிற ஆசிரியர்களுக்குப் பதிலாக, அந்த ஆசிரி
யர்களைப் பாடம் சொல்லிக் கொடுக்கச் செய்து, மாணவர்களுக்கு
இடைஞ்சல் இல்லாமல் அந்தப் பாடங்களைச் சொல்லிக் கொடுக்க
வாய்ப்பு ஏற்படும். ஆகவே அரசு 10 பிளஸ் 1 என்ற வீதத்தில்
ஆசிரியர்களை நியமனம் செய்ய முன் வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர்
அவர்களே, நாம் முடிந்த அளவிற்கு, நமக்கு இருக்கிற நிதி
ஆதாரங்களைக் கணக்கில் வைத்து, கடந்த 2, 3 ஆண்டுகளாகப்
புதிய பதவிகளை ஏற்படுத்தி வருகிறோம் ஆனால், 10 பிளஸ்
1-ஐ அடிப்படையாக வலியுறுத்துகிறபொழுது, ஆரிசியர்கள் எடுக்
கின்ற லீவு வசதி பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்
பிட்டார்கள். இது ஒரு பிரச்னையாகத்தான் இருந்து கொண்
டிருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொண்டு அதைத் தனியாகப்
பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதற்கு எவ்வாறு நடவடிக்கை
எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலிக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தத் தொடக்கப் பள்ளிகளிலே இப்பொழுது 20 மாணவர்
களுக்கு ஒரு ஆசிரியர் என்ற முறையை அமுல்படுத்துவது கிடை
யாது. சில பள்ளிகளில் அதிகமான மாணவர்கள் இருந்தாலும்
கூட' அரசாங்கம் எத்தனை ஆசிரியர்களை மாவட்டத்திற்கு,
ஒதுக்குகிறார்கள் என்பதைக் கணக்கிட்டுத்தான் ஆசிரியர்கள் நிய
மிக்கப்படுகிறார்கள். போன ஆண்டைவிட இந்த ஆண்டு 50-க்கு
மேல் அதிகமான குழந்தைகள் இருந்தாலும், ஒரு ஆசிரியரைக்கூட
அதிகமாக நியமிப்பது கிடையாது. ஆரம்பப் பள்ளிகளில் அஸ்தி
வாரம் நன்றாக இருந்தால்தான், பிற்காலத்தில் குழந்தைகள்,
நன்கு வளர முடியும். ஆகவே, அந்த அலாட்மெண்ட்டை வைத்து
நியமிப்பதை நீக்கி, 20 குழந்தைகளுக்கு ஒரு ஆசிரியர் என்ற
முறையில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் ஆசிரியர்களை நியமிக்க
அரசு வழிவகுக்குமா ?

ஆதாரம் இல்லை என்பதைத்தான் காரணம் காட்டினேன். ஆனால், அதற்காகப் போடாமலும் இல்லை. ஆண்டுதோறும் கூடுதலான பதவிகளை ஏற்படுத்திக்கொண்டு வருகிறோம் என் பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆசிரியர்கள் வேலை செய்கிற ஆரம்பப் பள்ளிகளில், 5 வயதி லுள்ள குழந்தைகள் படிப்பதினால், ஆசிரியர்களுடைய வேலைப் பளு மேல் மட்டத்திலேயிருக்கிற வேலைப் பளுவை விடக் கடினம் அவர்கள் விடுப்பில் இருக்கும்போது அல்லது வேறு விதமான சில இன்னல்களில் இருக்கும்போது அந்த ஆசிரியர் கள் இல்லாத நிலையில், பல பள்ளிகளிலே பாடங்கள் நடக்காமல் நின்றுவிடுகின்றன. ஆகவே, இதற்கு நிதி என்பதை ஒரு காரண மாகக் கொள்ளாமல், அடிப்படையாகவே பார்த்து ஆசிரியர்களை நியமிப்பது என்று சொன்னால், 11-ஆவது ஆசிரியரும் அந்த இடத் திற்குத் தேவை என்ற முறையில், நிரந்தரமான விதியை அரசு உருவாக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, விதி இருக்கிறது. 10 பிளஸ் 1 போட வேண்டு மென்று விதி இருக்கிறது. ஆனால், மாணவர்களின் சராசரி எண்ணிக்கை குறைகிற பொழுது, ஆசிரியர்களைக் குறைக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. அப்பொழுது இந்த விதியைப் பயன்படுத்தி, குறைக்காமல் இருக்கிறோமே தவிர, இருக்கிற மாணவர்களுடைய எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவில்லை. அந்த அளவுக்கு விதியை நாம் செயல்படுத்தாமல் இருக்கிறோம். ஆனால், புதிய ஆசிரியர்கள் பதவிகளைக் கூடுதலாக, ஏற்படுத்தி வருவதன்மூல மாக, ஓரளவுக்கு அந்தக் குறைப்பாட்டைப் போக்கி வருகிறோம்.

கரூரில் அமர்வு நீதிமன்றம்.

வினா எண் 438—**திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூரில் அமர்வு நீதிமன்றம் (Sessions Court) ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) இல்லை.



**திரு. பி. எம். தங்கவேல்ராஜ் :** மாண்புமிகு தலைவர் அவர்
களே, கரூரிலே தற்சமயம் சப்கோர்ட் இருக்கிறது. கரூர்
திருச்சியின் மேற்கு எல்லையில் இருக்கிறது. ஆகவே, கரூர்
சப்கோர்ட்டில் அதிகமான கேஸ்கள் இருப்பதால், கேஸ்கள்
டிஸ்போசல் ஆகாமல் தேங்கியிருப்பது அரசுக்குத் தெரியுமா ?
அடிஷனல் கோர்ட் அமைப்பதாக இருந்தால், மையத்திலே
யிருக்கும் குளித்தலையில் அமைக்கப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

[முற்பகல் 9–40]

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, கரூரை ஒட்டிய பகுதியிலே அதிகமான
வழக்குகள் இருக்கின்றன என்று சொல்லி, குளித்தலையிலே
அந்தக் கோர்ட்டை அமைக்க வேண்டும் என்று எந்த அடிப்
படையிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார் என்று புரிய
வில்லை. ஆனாலும் உயர் நீதிமன்றம் நடத்திய ஆய்விலே
போதிய வழக்குகள் அங்கு இல்லாத காரணத்தால் அங்கே தற்
போது துணை நீதிமன்றம் நிறுவத் தேவையில்லை என்று கூறி
இருக்கிறது.

**திரு. செ. ப. சென்னிமலை என்கிற கந்தசாமி :** தலைவர் அவர்
களே, கரூரில் அமர்வு நீதிமன்றம் அமைக்க வேண்டும் என்று
நீண்ட காலமாக கோரிக்கை இருந்து வருகின்றது. ஆகவே அதை
அரசு மீண்டும் பரிசீலனை செய்து அமைக்க முன்வருமா என்று
கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர்
அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, கரூர்
துணை நீதிமன்றம் பிறப்பித்த டிக்ரிகளுக்கும், தீர்ப்புகளுக்கும்
எதிராக 1977 ஆம் ஆண்டில் 7 சிவில் மேல்முறையீடுகளும்,
1978ல் 11 வழக்குகளும், 1979ல் 24 வழக்குகளும்
தாக்கல் செய்யப்பட்டதாக உயர்நீதி மன்றத்தில்
இருந்து தகவல் வந்திருக்கின்றது. அதைப் போலவே, கரூர்
துணை நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக திருச்சி செஷன்ஸ்
நீதிமன்றத்தில் 1977ல் 14 வழக்குகளும், 1978ல்
11 வழக்குகளும், 1979-ல் 12 வழக்குகளும் தாக்கல்
செய்யப்பட்ட காரணத்தாலும், வழக்குகள் சொற்பமாக
இருக்கின்ற காரணத்தாலும் அங்கே கூடுதல் நீதிமன்றம் அமைப்
பது உகந்ததாக இராது என்று உயர் நீதிமன்றம் கூறி இருக்கிறது.

**திரு. இரா. கருப்பையா :** பேரவைத் தலைவர் அவர்களே,
குளித்தலைக்கும், கரூருக்கும், முசிரிக்கும், துறையூருக்கும் நீதி
மன்றம் மையமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சப்-
கோர்ட்டை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்-கோர்ட்டு என்று ஒன்று தற்போது இல்லை. கருருக்கும், துறையூருக்கும் கூடுதல் நீதிமன்றம் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார் என்று கருதுகிறேன். போதிய வழக்குகள் இல்லாத காரணத்தினால் கருருக்கே வேண்டாம் என்று உயர் நீதிமன்றம் கூறி இருக்கிறது.

**கூட்டுறவு விவசாய சங்கத்தின் மூலம் வண்டி மாடுகள் வாங்க கடன்.**

*வினா எண். 439—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கலசபாக்கம் தொகுதியில் உள்ள வள்ளிவாகை, சொரகுளத்தூர் ஆகிய கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 1978–79ல் வண்டி மாடு கடன் கொடுப்பதாக அங்கத்தினர்களிடம் பங்குத் தொகை வசூலிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை? எத்தனை அங்கத்தினர்களிடம் வசூலிக்கப்பட்டது ?

(இ) அனைவருக்கும் கடன் கொடுக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம்.

(ஆ) ரூபாய் 32,793 அளவிற்கு 306 உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டது .

(இ) 238 உறுப்பினர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வள்ளிவாகை, சொரகுளத்தூர் ஆகிய இரண்டு சங்கங்களில் மட்டுமல்லாது, மாவட்டத்தில் உள்ள பல்வேறு சங்கங்களில், பல்வேறு விவசாயத் தொழிலாளர்கள், ஏழை அரிசனங்கள் உறுப்பினர்களாகி, வண்டி, மாடு பெறுவதற்காக நிறைய பேர்களிடம் பங்கு பணம் வசூலித்து, மிகவும் குறைந்த பேர்களுக்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்குக் கொடுப்பதை நிறுத்தி விட்டார்கள். அப்படி நிறுத்தப்பட்டவர்களுக்கு கடனாவது தரவேண்டும். அல்லது அவர்களிடம் இருந்து பெற்ற பங்குப் பணத்தையாவது திருப்பித் தர வேண்டும். இதுகுறித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, குறிப்பிட்ட உறுப்பினர்கள் இந்தக் கூட்டு
றவு அமைப்பிலே அங்கத்தினராக இருக்க விரும்பவில்லை என்
றால் அவர்கள் விலகிச் செல்வதாக இருந்தால் அதற்கு அரசு
தனியாக உத்தரவு இட வேண்டியதில்லை. அவர்களே விலகிச்
சென்று டெப்பாசிட் தொகையை கேட்டுத் திரும்பப் பெற்றுச்
சென்று விடலாம். ஆனால் உழவு மாடுகள், போன்றவை
வாங்குவதற்காக அவர்களுக்குப் போதிய கடன்கள் கொடுக்கப்
படவில்லை என்ற பிரச்சினையைப் பொறுத்த வரையிலும்
மத்தியக் காலக் கடன் வழங்குவதற்கு ரிசர்வ் வங்கி ஒதுக்கீட்டை
அதிகமாக செய்யவில்லை. அந்த ஒதுக்கீட்டுக்கு உட்பட்டு இந்த
உதவிகள் எல்லாம் செய்யப்பட்டுவிட்ட காரணத்தால், அதற்கும்
மேலே வழங்கவில்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, ஒருவர்
உறுப்பினராக இருக்க அந்த ஒரு ரூபாய் 12 காசு செலுத்தினாலே
போதும், அவர்கள் அங்கத்தினராக இருக்கலாம். ஆனால் அந்த
அங்கத்தினராக இருக்கிற பல்வேறு விவசாயிகள் அல்லது
ஏழை அரிசனங்கள் நடுத்தரக் குடும்பங்களிலே உள்ளவர்
களிடம் இருந்து கடன் கொடுப்பதற்காக பங்கு பணத் தொகை
யை வசூலித்து இருக்கிறார்கள். சில பேர்களுக்குத்தான் தந்திருக்
கிறார்கள். பல்பேர்களுக்குத் தரவில்லை. அப்படித் தரப்படாதவர்
களுக்கு ஒன்று கடன் தரவேண்டும். அல்லது அவர்களுடைய
பங்கு பணத்தை திருப்பித்தரவேண்டும். அதிகாரிகள் சொல்லு
கிறார்கள், விதிப்படி 3 ஆண்டுகள் கழித்துத்தான் அந்த பங்கு
பணத் தொகை திருப்பித்தரப்படும் என்று சொல்லுகிறார்கள.
இப்போது அவர்கள் அங்கே அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.
அவர்களுடைய பங்குத் தொகை இருக்கலாம். ஆனால் இந்தக்
கடனுக்காக பிரத்தியேகமாக செலுத்தப்பட்ட பங்குத் தொகை
யை, ஒன்று கடன் தரவில்லை என்றால் திருப்பித் தருவதற்கு
அரசாங்கம் தனியாக உத்திரவிடவேண்டும். அதைத்தான் அமைச்
சர் அவர்கள் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, டிபாசிட் வாங்குவதும், அதைத்
திருப்பிக் கொடுப்பதும் ஒரு சில தனிப்பட்ட விதிகளின் அடிப்
படையில் செய்யப்பெறுகின்றது. கடன் வழங்குவது என்பது
ஒரு சில தனிப்பட்ட விதிகளின் அடிப்படையில் செய்யப்படு
கின்ற . கடன் வழங்குவது என்பது குறிப்பிட்ட அளவிற்கு
ஒதுக்கப்பட்ட தொகை அளவிற்குத்தான் செய்ய முடியும்.
அப்படி ஒதுக்கப்பட்ட அளவிற்குக் கடன்கள் தந்துவிட்ட
காரணத்தால், மேற்கொண்டு கடன்கள்— மாடு, வாங்குவது
போன்றவற்றிற்கு வழங்கமுடியவில்லை. டிபாசிட் போட்ட
தற்கு இன்ட்ரஸ்ட் வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட எந்த கால

அளவிற்கு அந்த டிபாசிட் போட்டார்களோ, எந்தக் கன்டிஷனில் அந்த டிபாசிட் செய்தார்களோ அது நிறைவு பெற்றவுடன் அந்தத் தொகை திருப்பித் தரப்படும்.

### கிராம கூட்டுறவு வங்கி ஊழியர்களின் சம்பளம்

*வினா எண். 440— திரு. கு. ரமணி : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமங்களில் உள்ள கிராமக் கூட்டுறவு வங்கிகளில் வருமானம் குறைந்துவிட்டது என்ற காரணத்தால் ஊழியர்களுக்கு மாதச் சம்பளங்கள் ஏராளமான வங்கிகள் கொடுக்காமலிருந்து வருவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், மாவட்ட வாரியாக எவ்வளவு கிராம வங்கிகளில் சம்பளம் கொடுக்கப்படாமலிருக்கிறது ?

(இ) இதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) கடன் வசூலிக்காமல் இருப்பதால் சம்பளம் கொடுக்க பணம் இல்லாத நிலை கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட வாரியாகச் சம்பளம் வழங்கப்படாமல் இருக்கும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் :—

| | |
|---|---|
| செங்கற்பட்டு .. .. .. | 48 |
| வட ஆற்காடு .. .. .. | 136 |
| தென் ஆற்காடு .. .. .. | 68 |
| தஞ்சாவூர் .. .. .. .. | 136 |
| திருச்சி .. .. .. .. | 7 |
| இராமநாதபுரம் .. .. .. | 101 |
| மதுரை .. .. .. .. | 48 |
| திருநெல்வேலி .. .. .. | 134 |
| கோவை மற்றும் பெரியார் .. .. | 126 |
| சேலம் .. .. .. .. | 13 |
| தர்மபுரி .. .. .. .. | 110 |
| ஆக மொத்தம் .. | 927 |

இருக்கின்றன.



(இ) கடன் வசூலில் தீவிரம் காட்டி நிதிநிலையை உயர்த்தி தங்களுக்குச் சேரவேண்டிய சம்பள நிலுவையைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அச் சங்கங்கள் அறிவுறுத்தப்பட்டு இருக்கின்றன.

**திரு. கு. ரமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறக் கூட்டுறவு சங்கங்களில் 927 சங்கங்கள் அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு சம்பளம் சரிவர அளிக்காமல் இருக்கிறது என்கிற தகவ ல அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஒரு 'டிஸ்கிரிமினேஷன்' என்கிற முறையில் இது இருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்கள் என்பது அரை குறை அரசாங்க ஸ்தாபனமாகக் கருதப்படுகிறது. வேலை செய்கிற ஊழியர்களுக்கு வேலை செய்தால் சம்பளம் கொடுக்கவேண்டும் என்பது சட்டமாக இருந்தாலும், இபபடி சம்பளம் கொடுக்கப்படாமல் இருக்கும் அநீதியை அரசு அறிந்து அந்த நிலையைப் போக்க நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா ? அவர்கள் கடன் வசூலிக்காத காரணத்தால் சம்பளம் கொடுக்கப் பணம் இல்லை என்று சொன்னால், சம்பளம் கொடுப்பதற்கான பணத்தை அரசாங்கமே முன்பணமாகக் கொடுத்து, அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, இந்தச் சங்கங்களில் உள்ள பணியாளர்கள் எல்லாம் சம்பளம் பெறாமல் பணி செய்கிறார்கள் என்கிற தகவல் அரசுக்குத் தெரிய வந்தவுடனேயே அதைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இங்கேயுள்ள பிரச்னை என்னவென்றால், அந்தச் சங்கங்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் 'டர்ம் ஆப் ஆபீஸ்' முடிந்து விட்டது. அவர்கள் 'பாரோட் லைப்பில்' அந்த நிர்வாகத்தை மேற்கொண்டு பொறுப்பில் இருந்து வருகிறார்கள். 'தே ஆர் ஆல் அடானமஸ் பாடீஸ்' அந்தச் சங்கங்களுக்கும் அரசுக்கும் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இருந்தபோதிலும் அங்கேயுள்ள பணியாளர்கள் சம்பளம் இல்லாமல் இருக்கும் நிலை வருந்தத்தக்கது என்பதை உணர்ந்துதான் அந்தச் சங்கங்கள் 'வயபிள்ளாக' செயல்படவேண்டும் என்கிற அடிப்படையில் மைய வங்கிகள் மூலம் சில உதவிகளைச் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து இருக்கிறது. கடன் வசூலைத் தீவிரப்படுத்தியிருக்கிறோம். இந்த அடிப்படையில் அவர்களின் இந்த நிலை விரைவில் சீரடையும் என்று அரசு நம்புகிறது.

**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சங்கங்களில் உள்ள நிலைமைகளை மாற்றுவதற்கு பல்வேறு ரூபங்களில் பலவிதமான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்கள். நான் நேரடியாக ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஒரு தனி

யார் துறையில் உள்ள தொழிற்சாலையில் நஷ்டம் வந்தால் கூட அங்கே பணிசெய்கின்ற பணியாளர்களுக்குச் சம்பளம் மற்றும் போனஸ் கொடுக்கவேண்டும் என்று சட்டம் இருக்கிறபோது, ஏறக்குறைய அரசு ஸ்தாபனங்கள் என்கிற வகையில் கூட்டுறவுச் சட்டத்தின்கீழ் இயங்குகின்ற இந்த சங்கங்களில் உள்ள பணி யாளர்களின் நிலைமையைப் போக்கவும் அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறது. அதிலே இருக்கும் பல ஆயிரக்கணக்கான ஊழியர் கள் சம்பளம் இல்லாமல் பட்டினியால் அவதிப்பட்டுக்கொண்டு இருக்கிற காரணத்தால், அரசே தன்னுடைய கையில் இருந்து பணத்தை முன்பணமாகக் கொடுத்து, அந்தச் சங்கங்கள் வய பிள்ளாக மாறுகின்ற போது திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற அடிப்படையில் அந்தப் பணத்தை முன்பணமாகக் கொடுத்து அந்தப் பணியாளர்களின் கஷ்ட நிலையைப் போக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அரசே இதற்கு நேரடியாக முன் பணம் தரமுடியாது. ஆனாலும் அந்தச் சங்கங்களுக்கு முன் பணம் தருவதற்கு அந்தத் தகுதியைப் பெற்று இருக்கின்ற மாவட்ட மைய வங்கிகள் மூலம் இது குறித்து எத்தகைய நடவடிக்கையை எடுக்கலாம் என்பதை அரசு பரிசீலித்து வரு கிறது.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் கிராமங்களில் பயிர்க்கடனாகவும் அல்லது விவசாயக் கடனாக வும்தான் அதிகம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்தக் கடன்கள், அரசுத் தரப்பில் இருந்து ஒதுக்கப்பட்ட நிதி போக மற்றவை வறட்சி காரணமாக, பல மாவட்டங்களில் இருக்கின்ற நிலைமை காரணமாக வசூலிக்கப்படாமல் இருக்கின்றன. அதுவும் சம்பளம் கொடுக்காமல் இருப்பதற்கு ஒரு காரணம் என்று நினைக்கிறேன். ஆகவே, அதையும் பரிசீலித்து அந்தப் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**[முற்பகல் 9-50]**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே, வறட்சி என்பது தற்போது அண்மையிலே ஏற்பட்ட ஒன்று. ஆனால் வாங்கிய கடனை வசதி படைத்த விவசாயிகள் கூட கிட்டத்தட்ட 3,4 ஆண்டுகளாக கொடுக்காமல் இருக்கிறார்கள். ஆகவே, அதை இதோடு ஒப்பிட முடியாது. என்றாலும் வறட்சி யால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பரிகாரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.



**திரு. எம். எஸ். மாணிக்கம் :** தலைவரவர்களே, இந்தக்
கூட்டுறவுச் சங்கங்களில் 1977-க்குப் பிறகு வேலையில் சேர்ந்த
வர்களை இப்போது வேலை நீக்கம் செய்து வருகிறார்கள். அதை
அரசு கவனித்து, வேலை நீக்கம் செய்யாமல் இருக்க ஆவன
செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே,
தற்காலிகமாக ஆனால் விதிகளுக்குப் புறம்பாக யாரேனும்
அமர்த்தப்பட்டிருந்தால் அவர்களை எல்லாம் மாற்றிவிட்டு,
முறைப்படி எம்பிளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலம் பணியிலே
நியமிக்க வேண்டுமென்பதால் அவ்வாறு நீக்கம் செய்யலாம்.
இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரமான தகவல்
என்னவென்று தந்தால் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவரவர்களே, மாவட்ட மைய
வங்கிகளிலே கூட கடன் வாங்கிய வசதி படைத்த விவசாயிகள்
பணத்தைத் திரும்ப செலுத்தவில்லை. ஆகவே, மாவட்ட மைய
வங்கிகளிலே கூட பணம் இல்லாத சூழ்நிலை இருந்து வருவது
அரசுக்குத் தெரியுமா? அப்படி இருக்கும்போது கூட்டுறவுச்
சங்க ஊழியர்களுக்கு, மைய வங்கியோடு தொடர்புகொண்டு இது
வரை கொடுக்கப்படாத சம்பளத்திற்கு ஒரு மாற்று ஏற்பாடு
செய்யும் முயற்சியில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்படி
சாத்தியமாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவரவர்களே,
மத்திய வங்கிகளுக்கு முன்பணமாக சுமார் 21 கோடி ரூபாய் அரசு
தந்ததன்பேரில் மத்திய வங்கிகள் பல 'வயபிள்' வங்கிகளாக
இருக்கின்றன. அது மட்டுமல்ல. மத்திய வங்கிகளுக்கு விவ
சாயிகள் நேரடியாக பணம் செலுத்த வேண்டியதில்லை. மத்திய
வங்கிகள் பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகத்தான் விவ
சாயிகளுக்குக் கடன் தருகின்றன. கிட்டத்தட்ட 10 ஏக்கருக்கு
மேல் நிலம் வைத்திருப்பவர்கள் கூட, அந்த நிலத்திலிருந்து வரு
மானம் பெறுகின்ற நிலையில் இருக்கிற வசதி படைத்த பெரும்
விவசாயிகள்கூட கடனைக் கட்டாமல் இருக்கிறார்கள். அப்படிப்
பட்டவர்கள் எல்லாம் கடனைக் கட்டினால் நிச்சயமாக ஊழியர்
களுக்குச் சம்பளம் வழங்க முடியாத நிலை இருக்காது. ஆகையால்
தான் இந்த அரசு வசதி படைத்த விவசாயிகள் கூட்டுறவுக்
கடனைத் திருப்பித் தரவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறது.

கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் காய்கறி விற்பனை.

*வினா எண். 441—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு கூட்டுறவு—சட்ட அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் பூராவும் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் காய்கறிகளையும் விற்பனை செய்ய தமிழக அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் இது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: தலைவரவர் களே, கிராமப்புறங்களில் காய்கறிகள் விற்பனையாவதற்கு வழியில்லாமல் விவசாயிகள் உற்பத்திச் செய்யும் பொருள்கள் அழுகிப்போகிறது ஒரு பக்கம். இன்னொரு பக்கம் நகரங்களில் அல்லது கிராமங்களிலேகூட காய்கறிகள் கிடைக்காத நிலை இருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் தக்காளியை கிலோ 25 பைசாவுக்குக்கூட வாங்க ஆள் இல்லை கிராமத்தில். ஆனால் நகரங்களில் இரண்டு ரூபாய்க்கு மேல் விற்கிறது. இப்படிப் பட்ட குறைபாடுகளைப் போக்க அரசு காய்கறிகளைக் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கிராமப் புறங்களில் விவசாயிகளுக்கு உற்பத்திக்கு ஏற்ற ஊதியம் காய்கறிகளைப் பொறுத்தவரையில் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். இருந்தாலும் நகரப் புறங்களிலே அதிக விலைக்கு விற்கும் காய்கறிகளை முறைப்படுத்துவது என்பது சிரமமான ஒன்று. காய்கறிகள் 'பெரிஸ்பிள் திங்க்ஸ்'—அழுகும் பொருட்கள் என்பதால் கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலம் வாங்கிவைத்து, விற்பனை செய்ய வசதி இல்லை. இருந்தாலும் கோயம்புத்தூர், வேலூர், நீலகிரி பகுதிகளில் நடப்பாண்டில் காய் கறிகளைப் பக்குவப்படுத்தி பாதுகாத்து வைக்க வசதி செய்து, அந்த காய்கறிகளைச் சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்கும்.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவ ரவர்களே, சில குறிப்பிட்ட நகரங்களில் விற்பனை செய்வதற் கான நடவடிக்கையை அரசு எடுத்துவருவதாக அமைச்சரவர் கள் கூறினார்கள். குறைந்தபட்சம் பெருநகரங்களிலாவது அவ்வாறு காய்கறியினை விற்பதற்குரிய வகையிலே நடவடிக் கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல பெசிலிட்டீஸ் பார் பிரசர்வேஷன் அதாவது காய்கறிகளைப் பாதுகாப்பதற்குரிய போதிய வசதிகளைப் பொறுத்துதான் இதனைப் படிப்படியாகத் தான் செய்ய முடியும். காய்கறிகளை நீண்ட நாட்களுக்குப் பாதுகாப்பது என்பது பெரும் பிரச்சினை. அதிலும் கோல்ட் ஸ்டோரேஜிலே வைத்துவிட்டு எடுத்துவிடுகின்ற காய் கறிகள் இரண்டு நாட்களுக்குள்ளாகவே பெரிதும் பழு தடைந்துவிடுகின்றன என்பது பற்றிய ஆய்வுகள் கிடைத் திருக்கின்ற காரணத்தால் நாம் மிகவும் எச்சரிக்கையாக இந்தத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என்ற வகையில் ஆய்ந்துகொண்டு வருகிறோம்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக காய்கறி விற்பது பற்றி முன்பு ஒன்று சொல்லப்பட்டது. என்னுடைய ஞாபகம் சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஒரு பொங்கல் தினத்தன்று அப்போதைய உணவு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் தலைமையில் ஒரு திட்டம் தொடங்கப்பட்டது. அதாவது சென்னை நகரில் வாழ்கின்ற மக்களுக்கு காய்கறிகள் எளிதாகக் கிடைக்கின்ற வகை யில் மூன்று சக்கர வண்டிகள் மூலம் காய்கறிகள் சலோபன் பேப்பரிலே போடப்பட்டு வழங்கப்படும் என்று அறிவித் தார்கள். வீடு தேடிவரும் என்றார்கள். அதுபற்றி பத்திரிகை களிலே எல்லாம் கூட செய்திகள் வந்தன. அந்தத் திட்டம் தற்போது சென்னை மாநகர மக்களுக்குப் பயன்படுகின்ற வகை யில் பரவலாக்கப்பட்டிருக்கின்றதா? சென்னையைத் தாண்டி செங்கற்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு போன்ற இடங் களுக்கும் அவ்வாறு காய்கறிகள் கொடுப்பதற்குரிய முயற்சிகளை அரசு எடுத்திருக்கிறதா? அப்படி என்றால் அந்தத் திட்டத்தின் நிலைமை என்ன?

ஆனால் நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பதற்குரிய வகையில் அதை விரிவு படுத்தலாம் என்று முடிவு செய்து தற்போது ஆராய்ந்து வரு கிறோம். விரைவில் அது நடைமுறைக்குக் கொண்டு வரப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** தலைவரவர்களே, கூட்டுறவுக் கடையிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. சில நாட்களுக்கு முன் வடாற்காடு மாவட்டத்திற்கு விஜயம் செய்த நமது முதல்வர் அவர்கள் பல கடைகளை நேரடியாகவே சோதனை செய்திருக் கிறார்கள். கூட்டுறவுக் கடைகளின் நேரம் வரையறுக்கப் பட்டுள்ளதா ? ஒரு குறிப்பிட்ட பகுதியில் 100 கிலோ சர்க்கரை வேண்டும் என்றால் 80 கிலோ.................

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சர்க்கரை சம்பந்தப் பட்ட கேள்வி எல்லாம் கேட்க வேண்டாம். இது காய்கறி பற்றி கேள்வி.

### வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம்.

*வினா எண். 442— **திரு. அ. செல்வராசன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சென்னை துறைமுகப்பகுதியில் வள்ளுவர் நகரில் குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது துவங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



**திரு. அ செல்வராசன் :** தலைவரவர்களே, என்னுடைய தொகுதியிலே வள்ளுவர் நகரிலே குடிசை மாற்று வாரியம் வீடுகள் கட்டவேண்டும் என்று பல முறை இந்த சட்டமன்றத்திலே சொல்லி இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் அப் போது பதில் சொல்லி இருக்கிறார்கள். அதிக விரைவில் அதற் கான திட்டங்கள் தீட்டப்பட்டு அந்த வீடுகள் கட்டப்படும் என்று சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இப்போது திடீரென்று அப் படிப்பட்ட திட்டம் இல்லை என்கிறார்கள். அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, இந்த குடிசைப் பகுதி தனியார் நிலமாக உள்ளது. இந்த நிலத் தைக் கையகப்படுத்த வாரியம் தீர்மானம் செய்துள்ளது. ஆனால் தனியார் நிலங்களை நியாயமான விலைக்கு கையகப் படுத்த இயலும் வகையில் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு மற்றும் நீக்கல்) சட்டத்தைத் திருத்தும் செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது. வரைவு திருத்தச் சட்டத்தை தயாரிக்க தொடர்புடைய கோப்பு சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டம் திருத்தப்பட்டு இத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் திட்டம் மேற்கொள்ளப்படும்.

**திரு. அ. செல்வராசன் :** தலைவரவர்களே, நிலைமை இப்படி இருக்கின்றபோது அந்தப் பகுதியில் ஒரு பெரிய போர்டு போட்டு அதில் இந்தப் பகுதியின் குடிசை வீடுகள் மாற்றியமைக் கப்படும் என்று விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே தனியார் துறையினரிடமிருந்து நிலத்தை வாங்குகின்ற வரை யிலாவது அரசு அந்த போர்டை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம் :** தலைவரவர்களே, திரு. செல்வ ராசன் அவர்களின் தொகுதியைப் போன்றதுதான் என்னு டைய தொகுதியிலே உள்ள குடிசைப் பகுதியும். ஆனால் அங்கே கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்திலேயே வீடுகள் கட்டுவது பற்றி போர்டுகள்எல்லாம் போடப்பட்டன. அதன்பின் ஆட்சி மாறி விட்ட பிறகு அந்த வீடு கட்டும் திட்டம் நிறுத்தப்பட்டுவிட்டதே. அதனுடைய காரணம் என்ன ? குறிப்பாக செட்டித் தோட்டம் போன்ற பகுதிகளில் அந்தத் திட்டங்கள் நிறுத்தப்பட்டதே, அதற்குக் காரணம் என்ன ?

[1981 மார்ச் 23

[முற்பகல் 10-00]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி சென்னை துறைமுகப் பகுதியில் வள்ளுவர் நகரில் உள்ள குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுவது பற்றியது.

**தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.**

*வினா எண். 443—**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 23 பேரூராட்சிகளுக்கு கிராமக்கூட்டு குடிநீர்த் திட்டம் எப்போதிருந்து செயல் படுத்தப்படும்?

(ஆ) கால தாமதத்துக்கு காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ) மற்றும் (ஆ) இத்திட்டத்தின் தலைமைப் பணியிடமாக தேர்ந்தெடுக்கப்பட்ட சாயர்புரம் பகுதியில் ஆழ்கிணறுகள் தோண்டி நீரெடுக்க ஆட்சேபனை தெரிவித்திருக்கும் விண்ணப்பங்கள் அரசு பரிசீலனையில் இருப்பதால், திட்டம் செயற்படுத்த காலதாமதம் ஆகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் முன் அனுமதியோடு வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 23 பேரூராட்சிகளுக்கும் கிராமக்கூட்டு குடி நீர்த் திட்டத்தின் கீழ், குடிநீர் வழங்கும் பணி மிக மிக அவசியமானது, அவசரமானதும் கூட. அதை எதிர்த்து அரசுக்கு முறையீடுகள் வந்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த முறையீடுகள் மீது அரசு எப்பொழுது நடவடிக்கை எடுக்கும்? விரைவில் இந்த திட்டத்தை அமுல் செய்ய அரசு என்ன முனைப்பான நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?





**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிளர்ச்சியில்லாமல் அனைவரையும் அழைத்து சேர்த்துப் பேசி, இந்த திட்டத்தை செயல்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களைப் போன்றவர்களுடைய ஒத்துழைப்பும் இருக்குமேயானால், விரைவில் செயல்படுத்தலாம் என்று அரசு கருதுகிறது.

**வடாற்காடு மாவட்டத் தலைநகரில் புதிய மருத்துவமனை.**

*வினா எண். 444—**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்ட தலைநகரில், புதிய மருத்துவமனை 15 இலட்சம் செலவில் கட்டப்பட்டு பல மாதங்கள் ஆகியும் பயன்படுத்தாமல் இருப்பது உண்மையா?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

(இ) விரைவில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** (அ), (ஆ) மற்றும் (இ) வடாற்காடு மாவட்டத்தில்வேலூரில் 50 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் நலஈட்டுறுதிகழகத்தின் மருத்துவமனை ஒன்று கட்டி முடிக்கப்பட்டு 8-1-1981 முதல் செயல்படத் துவங்கியுள்ளது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டது 7 மாதங்களுக்கு முன்னால். அப்பொழுது அந்த மருத்துவமனை திறக்கப்படாமல் இருந்தது. இப்போது திறந்ததற்காக நன்றி, ஆனால் அந்த மருத்துவ மனையில், இன்னும் கூட சூப்பிரண்டிடென்டென்ட் போன்றவர்கள் நியமனம் செய்யப்படவில்லை என்றும், ஸ்டாப் நர்சுகள் போதுமான அளவில் நியமனம் செய்யப்படவில்லை என்றும் அதனால் வேலைகள் பாதிக்கப்படுவதாகவும் தெரிகிறது. ஆகவே உடனடியாக அவர்களை நியமனம் செய்து அந்தப் பகுதி மக்களுக்கு உதவி செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் முன் வரும்.

[1981 மார்ச் 23

# MANHOLE COVERS IN MADRAS CITY

*Q No. 44[illegible] - Thiru S. RAJARAMAN, Thiru R. THAMARAIKKANI : Will the Hon. the Minister for Labour be pleased to state the details of the steps taken by the Government to safeguard the manhole covers in Madras City.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** சென்னை நகரில் கழிவு நீர் வடிகால்களில் (Sewers) பொருத்தப்பட்டுள்ள மூடிகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியமும், மழைநீர் வடிகால்களின் (Storm Water Drains) மேல் பொருத்தப்பட்டுள்ள மூடிகளை சென்னை மாநகராட்சியும் கவனித்து வருகின்றன. வடிகால் மூடிகள் திருடப்படுவதைத் தடுக்க, காவல் துறையினரும் தனி கவனம் செலுத்தி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடைக்குள் சென்று மனிதன் சுத்தம் செய்கிற நடைமுறை இருப்பதினால்தான் இப்படிப்பட்ட சாக்கடை மூடிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஆகவே, அந்த முறையை நீக்கி இயந்திரங்களைக் கொண்டு சாக்கடைகளை சுத்தம் செய்தால், இத்தகைய மூடிகள் திருடு போகாமல் இருக்க வழி ஏற்படும். ஆகவே அப்படிப்பட்ட முறைகளை அமுல் செய்ய அரசு ஏதாவது ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயந்திரங்களின் மூலமாக கழிவுநீர் வடிகால்களை சுத்தம் செய்கிற ஒரு திட்டம் இருக்கிறது. அது 40 லட்சம் ரூபாய் செலவில் போடப்படலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இயந்திரங்கள் வரவழைக்கப்பட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எல்லா இயந்திரங்களும் வந்தவுடன் இந்த திட்டம் முழுமையாக செயல் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி திருடு போகின்ற இந்த இரும்பு மூடி களுக்குப் பதிலாக, சிமென்டால் செய்யப்பட்ட மூடிகளை பொருத்தினால் நலம் அல்லவா? அது பற்றி அரசு ஆலோசிக்குமா?



1981 மார்ச் 23]

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மழை நீர் வடிகால் மேல் பொருத்தியுள்ள தேனிரும்பாலான மூடிகள் திருட்டுப் போவதை தடுப்பதற்காக மழைநீர் வடிகால் வட்டம் வலு வேற்றப்பட்ட கற்பலகையினால் (கான்கிரீட்) ஆன மூடிகளை போடுவதாக தீர்மானிக்கப்பட்டு அதன்படி சாலைகளின் குறுக்கே போக்குவரத்து செல்லும் இடங்களில் உள்ள மழைநீர் வடிகால்கள் தவிர, மற்ற இடங்களில் வலுவேற்றப்பட்ட கற்பலகையினாலான மூடிகளை சென்னை மாநகராட்சியினர் போட்டுக்கொண்டு வருகின்றனர். சாலைகளின் குறுக்கே போக்குவரத்து செல்லும் இடங்களில உள்ள மழைநீர் வடிகால் களில் தேனிரும்பு மூடிகள் போடுவது தவிர்க்க முடியாதது. ஆயினும் இந்த இடங்களிலும் இரும்பு சட்டத்தைப் பொருத்தி அதன் மேல் வலுவேற்றப்பட்ட கற்பலகையினாலான மூடிகளை போடுவதை மாநகராட்சி பின்பற்றி வருகிறது. இதனால் தேனிரும்பு மூடிகள் திருடப்படுவதை தடுக்க உத்தேசிக் கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கடை மூடிகள் திருடு போவதின் காரணமாக, திறந்திருக் கிற சாக்கடைகளில் குழந்தைகளும் பெரியவர்களும் விழுந்து விடுகிற நிலைமை ஏற்படுகிறது. இதனால் காயமும் அடைகின்றனர். உயிர் இழக்கின்ற அபாயமும் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதாக சமீபத்தில் தினமணி பத்திரிகையின் வந்த செய்தியிலிருந்து கூட தெரிந்துக்கொள்ள முடிகிறது. ஆகவே, இப்படி சாக்கடையில் விழுந்து உயிரிழப் பவர்களுக்கு, அரசு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** அது பற்றி அரசாங் கத்திற்கு முறையிட்டு வருமானால் கவனிக்கப்படும்.

**திரு. எஸ். இராசாராமன் :** இதுவரை சென்னை மாநகராட்சியில் இந்த மூடிகளைத் திருடியதாக எவ்வளவு வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** கடந்த சில மாதங் களில் மைலாப்பூரில் மூன்று நபர்கள் அடங்கிய ஒரு கோஷ்டியை கைது செய்து அவர்களிடமிருந்து ரூ. 15,000 பெறுமான வடிகால் மூடிகளையும், கோடம்பாக்கத்திலும் மற்றும் அண்ணா நகர் பகுதியிலும் இரண்டு கோஷ்டிகளை கைது செய்து அவர்களிட மிருந்தும் வடிகால் மூடிகளை காவல்துறையினர் கண்டுபிடித் தனர். மேலும் திருடிய வடிகால் மூடிகளை வாங்குவோர்களை யும் கண்டுபிடித்து அவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

**திரு. சு. பாலன்:** ஆழமான வடிகால்களில் பொருத்தப்பட்டுள்ள இரும்பு மூடிகளை திருடியதன் காரணமாக கடந்த வாரம் கூட ஒருவர் அதில் விழுந்து இறந்ததாக செய்தி வந்திருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட பாதகச் செயல்களைச் செய்பவர்கள் கொலையாளிகளாக கருதப்பட்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதோடு இந்த இரும்பு மூடிகளை அகற்றுபவர்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது பரிசு கொடுத்தால் இத்தகைய திருட்டுகள் நிறுத்தப்படும். ஆகவே அதற்கான அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் இதில் ஒத்துழைப்புத் தந்தால் அவர்களும் அந்தப் பரிசைப் பெறலாம்.

### உப்பிலியாபுரம் தொகுதியில் அணைக்கட்டுத் திட்டங்கள்.

*வினா எண் 446—**திரு. வெ. அரங்கராசன்:** மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் ''காணப்பாடி அணைக்கட்டு திட்டம்'' அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது பணி துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** (அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் காணப்பாடி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்ட ஆய்வு மேற்கொள்ளப்பட்டு கீழ்ப்பகுதி ஆயக்கட்டுக்காரர்களின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது என சிறுபாசனத் தலைமைப்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திரு. வெ. அரங்கராசன்:** கீழ்ப்பகுதியில் இருக்கிற மக்களுடைய முறையீடுகள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அங்கே ஆதிவாசிகள் நூற்றுக்கணக்கானவர்கள் குடியிருக்கிறார்கள். அங்கே பச்சைமலையிலிருந்து தண்ணீர் அதிகமாக வருவதால் அந்தத்



தண்ணீரை அவர்கள் ஆற்றுக்கு கேட்டுக்கொண்டிருந்தாலும்
இந்த அணை கட்டுவதன் மூலம் ஆயிரக்கணக்கான கிணறு
களுக்கு நீர்ப்பிடிப்பு உருவாவதற்கான வசதிவாய்ப்புகள் இருப்ப
தால் இந்த காணப்பாடி அணைக்கட்டு திட்டத்தை அரசு
மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** உப்பிலியாபுரம்
தொகுதியில் காணப்பாடி என்ற இடத்தில் ரூ. 75,000 செலவில்
ஒரு குட்டை அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டு அதை நிறை
வேற்றுவதற்காக ஆய்வு செய்யப்பட்டபோது கீழே அந்த
ஆற்று நீரைப் பயன்படுத்தும் விவசாயிகள் அதற்கு எதிர்ப்பு
தெரிவித்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. திரும்ப
வும் வேண்டுகோள் வந்ததன் காரணமாக காணப்பாடி
ஆற்றின் குறுக்கே கிருஷ்ணாபுரம் எனும் இடத்தில் ஒரு
குட்டை கட்டலாம் என்று ஆய்வு செய்தபோது அப்போதும்
விவசாயிகள் எதிர்ப்பு அதிகமாக இருந்ததன் காரணமாக
அந்தத் திட்டமும் கைவிடப்பட்டிருக்கிறது. நிலைமை
இப்படி இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
ஒரு வேளை அங்குள்ள விவசாயிகளிடமும் பயன் அடையக்
கூடிய மக்களிடமும் கலந்து பேசி ஒரு சமாதானமான சூழ்
நிலையை உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக இந்த
அரசாங்கம் அதைப்பற்றி திரும்பவும் பரிசீலனை செய்யும்.

**திரு. வெ. அரங்கராசன்:** கலந்து பேசி நடவடிக்கை எடுத்தால்
மறுபரிசீலனை செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அவசியம்
மக்களிடம் கலந்து பேசினால் இந்த ஆண்டுத் திட்டத்திலேயே
இதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** இதை ஆண்டுத்
திட்டம் என்று யோசித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை.
ஒட்டு மொத்தமாக இப்படிப்பட்ட பாசனத் திட்டங்களுக்கு
போதுமான அளவிற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது.
சூழ்நிலை சுமுகமாக இருக்குமானால் உடனடியாக திட்டத்தை
எடுத்துக்கொள்வதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணையில்லை
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** உப்பிலியாபுரம் தொகுதி காணப்
பாடி அணைக்கட்டுத் திட்டம் சம்பந்தமாக பொது மக்களின்
ஆட்சேபணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அதனால் அந்த வேலை நடைபெறுகிறது என்றும் சொன்னார்
கள். இதேபோன்று என்னுடைய பழனி தொகுதியில்
குதிரையாறு திட்டத்திற்கு யாரும் எதிர்ப்பு சொல்லாமல் கட்டுங்
கள், கட்டுங்கள் என்று ..............

*வினா எண் 447—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு
நீர்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில்
கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டம் அரசு பரிசீலனையில்
உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது வேலை துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) இந்த் திட்டம்
தலைமைப் பொறியாளரின் ஆய்வில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) இத் திட்டம் விரிவான ஆய்வில் உள்ள
தால் இவ்வினாக்களுக்கு இடமில்லை

[முற்பகல் 10.10]

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
ஆய்வில் உள்ளதாகக் கூறுகிறார்கள். இது 1970-ஆம் ஆண்டி
லிருந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்கு மேலாக ஆய்வு செய்து
கொண்டிருக்கிறார்கள். இந்த ஆய்வு எப்போது முடிவடையும் ?
இதை விரைவிலே செய்து முடித்தால், அங்கே கிட்டத்தட்ட 2,000
ஏக்கர்கள் வரை நிலப்பரப்பு பயனடைகின்ற சூழ்நிலை இருக்கின்ற
காரணத்தினால், இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்று
வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று
அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : மாண்புமிகு தலை
வர் அவர்களே, கொல்லிமலை அடிவாரத்தில் புளியஞ்சோலை
அருகே ரூபாய் 498 இலட்சம் செலவில் ஒரு அணை கட்டி 3,300
ஏக்கர் நிலத்திற்கு நஞ்சை பாசனமும், 3,700 ஏக்கர் நிலத்திற்கு
பாசன உறுதியும் அளிக்க 1974–75 ஆம் ஆண்டில் திட்டமிடப்
பட்டது. அத்திட்டம் சிக்கனமானதல்ல என்று கருதப்பட்டதால்
அதை மாற்றி துறையூர் வட்டம் படாரப்பேட்டை கிராமத்தின்
அருகே உள்ள புதுப்பட்டி என்னுமிடத்தில் ஒரு அணை கட்ட



மறு ஆய்வு நடந்து வருகிறது. இதன் மூலமாக 5,100 ஏக்கர்
நிலத்திற்கு புன்செய் பாசனம் கிடைக்கும் வாய்ப்பிருக்கிறது.
இதற்கு சுமாராக ரூபாய் 502 இலட்சம் செலவாகும் என்று
கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. எனவே, இந்தத் திட்டம்
நல்ல திட்டமாக இருக்கின்ற காரணத்தினால், வேறு ஒரு இடத்
தில் அமைப்பதற்கான மறு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது.

திரு. வெ. அரங்கராசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது புதுப்பட்டி என்ற இடத்திலே அமைக்க மறு பரிசீலனை
செய்து, அதனால் 5,000 ஏக்கர்கள் சாகுபடி செய்வதற்கான
வசதி இருக்கின்றது என்ற காரணத்தினால், இந்தத் திட்டத்தை
இந்த ஆண்டே நிறைவேற்றுவதற்கு, இந்த ஆய்வு எந்த அளவிலே
இருக்கின்றது என்று அறிய விரும்புகிறேன் ? இந்தத் திட்டம்
இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படுமா என்றும் அறிய விரும்பு
கிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்
களே, இது தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் ஆய்வில்
இருந்து வருகிறது. அவருடைய அறிக்கை வந்ததற்குப் பிறகு,
அதை எடுத்துக் கொள்வது பற்றி அரசு முடிவு செய்யும். அது
வரை கொஞ்சம் பொறுத்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த கொல்லிமலை அணைக்கட்டுத் திட்டத்தை
கொல்லிமலை அடிவாரத்தில் ஏற்படுத்தினால், இந்த அணைக்
கட்டு மூலம் மின்சாரம் எடுக்கவும் பயனுள்ளதாக இருக்கும்.
ஆகவே, இந்தத் திட்டத்தை செயல் படுத்த மின்சாரத் துறை
யும், நீர்பாசனத்துறையும் சேர்ந்து செயல்படுத்த அரசு விரை
விலே முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்
களே, முதலிலே கொல்லிமலை அடிவாரத்தில் கட்டுவதாக இருந்
தது. என்றாலும், சிக்கனமாக இல்லாத காரணத்தினால்,
வேறு ஒரு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது
மாண்புமிகு உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.
மின்சாரம் தயார் செய்ய வாய்ப்பிருக்கிறது என்று சொல்
கிறார்கள். ஒரு வேளை அது சாத்தியமானால், அதை ஒரு
நல்ல திட்டமாகக் கருதலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்
களின் கருத்தைக் கவனத்தில் கொண்டு, இதைப்பற்றி அரசு
ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## தமிழ் நாட்டில் நீர்வழிப் போக்கு வரத்துத் திட்டம்.

*வினா எண். 448—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மைய உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக் கழகத் திடம் தமிழ்நாட்டில் நீர்வழி போக்குவரத்துக்கான தகுதி உள்ள திட்டம் தமிழக அரசு தந்துள்ளதா ?

(ஆ) பக்கிங்காம் கால்வாய்த் திட்டம் அல்லது கூவம் சென்னை நகரத்தில் இத் திட்டம் செயல்பட சாத்தியம் உள்ளதா என ஆராயப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம். வட பக்கிங்காம் கால்வாயை மைல் 10/1லிருந்து ஆந்திரமாநில எல்லை வரை மேம்படுத்துவதற்கான ரூபாய் 210 இலட்சத் திட்டமும் தென் பக்கிங்காம் கால்வாயை மைல் 1/1லிருந்து 31/0 வரை மேம்படுத்த ரூபாய் 190 இலட்சத் திட்டமும் ஆறாவது ஐந் தாண்டுத் திட்டத்தின் கீழ் தற்போது சேர்க்கப்பட்டுள்ளன.

(ஆ) சென்னை நகர எல்லைக்கும், வட பக்கிங்காம் கால் வாய் மைல் 01 முதல் மைல் 10/1 வரை ரூபாய் 106 இலட்ச செலவிலே ஏற்கெனவே மேம்படுத்தப்பட்டுள்ளது. கூவம் ஆற்றை மேம்படுத்தும் பணிகளும் ஏற்கெனவே முடிக்கப்பட்டுவிட்டன.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, கூவம் நதியிலே மக்கள் போக்குவரத்திற்காக படகு விடுவதாக ஒரு திட்டம் ஏற்கெனவே இருந்தது. அதை மறு பரிசீலனைசெய்ய அரசு முன்வருமா ? அதேபோன்று, சேது சமுத்திரத் திட்டத் தைப்பற்றி ஏதாகிலும் மத்திய வாரியத்திற்கு சிபார்சு செய்யப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, மூலக் கேள்வி உள்நாட்டு நீர்ப் போக்குவரத்தைப் பற் றியது. பக்கிங்காம் கால்வாயைப் பற்றிய குறிப்பு இருக்கிறது. கூவம் ஆற்றில் படகு விடுவதைப் பற்றிக் கேட்கிறார்கள். இப் போது கடுமையான கோடைக் காலம் ஆரம்பித்திருக்கிறது. அதி லிருந்து நாற்றத்தைப் பொறுக்காமல், மனிதர்கள் ஓடிக்கொண் டிருக்கிறார்கள் அதிலே படகு ஓட்ட முடியுமா என்பதைப் பற்றி யோசித்துத்தான் செய்ய வேண்டும். அனாலும் அது சரியாக இருக்குமா என்பதைப் பற்றி அரசு நிச்சயமாக பரிசீலனை செய் யும்.

திரு. பி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் தற்போது நீர் வழி படகுப் போக்குவரத்து நடைபெறுகிறதா ? கூவத்திலே விடப்பட்ட படகு ஓடுகிறதா? அல்லது மூழ்கிவிட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணூரிலிருந்து ஆந்திர மாநில கரையோரப் பகுதிகள் வரை விறகு, உப்பு முதலியவை எடுத்துச் செல்ல இந்த படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஏற்கெனவே, கூவத்தைப்பற்றி நான் சொல்லிவிட்டேன்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : தலைவர் அவர்களே, வேதா ரண்யம், பக்கிங்காம் கால்வாய்களை இணைத்து படகு போக்கு வரத்து அமைக்க வேண்டுமென்று முன்பு முடிவு செய்து அறிவித் தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என் பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, அதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் விளக்கமாக பதில் கொடுக்க இயலும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மைய உள் நாட்டு நீர்வழிப்போக்குவரத்துக் கழகத்திடம் தமிழ் நாட்டில் நீர்வழி போக்குவரத்துக்கான தகுதி உள்ள திட்டம் தமிழக அரசு தந்துள்ளதா என்று கேள்வி இருக்கிறது. தமிழ் நாட்டில் இருப் ஆயிரம் கிலோமீட்டர் கடல் போக்குவரத்து உள்நாட்டில் பூம்புகார் பதின் காரணமாக கடல் வழி போக்குவரத்து செய்யப் ஷிப்பிங் கார்ப்பரேஷன் மூலம் நடத்துவதற்கு ஏற்பாடு படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர் களே, உள்நாட்டு நீர்வழிப்போக்குவரத்து, இருக்கக்கூடிய ஆறு கள், கடலில் கலக்கக்கூடிய பகுதிகள் அண்டை மாநிலங்களோடு தொடர்புடையதாக இருக்குமானால் அதில் போக்குவரத்துப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால், அதற்கான பதிலை சம்பந்தப்பட்ட அமைச்சர், போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பார்கள்.

## சித்தமல்லி ஓடை நீர்த் தேக்கத் திட்டம்

*வினா எண். 449—திரு. பி. தங்கவேலு மற்றும் இரா. கருப்பையா : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி ஓடை நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டம் எப்பொழுது துவங்கப் பெறும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மற்றும் (ஆ) இத் திட்டத்திற்காக அரசு ஒப்புதல் அளித்து இப் பணியை நிறைவேற்றுவதற்காக தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கு 1981-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 6-ஆம் நாள் அன்று அரசு ஆணையிட்டுள்ளது. விரைவில், இத் திட்டத்திற்கான பணிகள், துவங்கப்பெறும்.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு ? இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் நிலத்தின் பரப்பளவு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டத்தில் சித்தமல்லி ஓடையின் ஆற்றின் குறுக்கே ரூபாய் 240 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் கட்ட 1980-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 25-ஆம் நாளிட்ட அரசாணை எண் 1883-இல் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தால் 4,202.48 ஏக்கர் புஞ்சை நிலம் புதிதாக பாசன வசதி பெறும். 846.37 ஏக்கர் நஞ்சை நிலம் பாசன வசதி பெறும்.

திரு. இரா. கருப்பையா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்தத் திட்ட வேலை எப்போது துவங்கும் ? இது வறட்சிப் பகுதியாக இருக்கிற காரணத்தாலே, வறட்சி நிவாரண உதவிகள் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்கும் என்கிற காரணத்தாலே உடனடியாக இந்த திட்டம் வேலையைத் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இது ஏற்கெனவே திட்டத்திலே சேர்க்கப்பட்ட ஒரு பகுதி. இதற்கு நிதி ஒதுக்கீடு செய்து அரசு உத்தரவிட்டிருக்கிறது. இன்றைக்கு நிதிப் பிரச்சினை இல்லை. இப்போது நிலவுகிற வறட்சியைக் கருத்திலே கொண்டு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை அரசு ஒப்புக் கொள்கிறது. உடனடியாக மேலும் விரைவு படுத்தி அரசு நடவடிக்கை எடுக்கும். ஏற்கனவே இந்தத் திட்டத்தை உருவாக்குகிறபோதே குடிநீர் வசதி அளிக்க வேண்டுமென்று இருக்கிறது. அதை ஒரு பகுதியாக சேர்த்து இருக்கிறோம். எனவே அதை கருத்திலே கொள்ளும்பொழுது விரைவாக இந்தத் திட்டத்தை எடுத்து நடத்துவது நல்லது என்று அரசு உணர்கிறது. உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



## சூட்டுப்பொத்தையில் சிமெண்ட் ஆலை.

*வினா எண். 450—திரு. இ. முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுக்கா, ராதாபுரம் தொகுதி வள்ளியூர் பகுதியில் உள்ள சூட்டுப்பொத்தையில் கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியில் சிமெண்ட் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்திலே மூலப் பொருள்கள் அதிகமாக கிடைக்கிறது என்று ஆய்விலே தெரிய வந்திருக்கிறது. அந்த அடிப்படையிலே மீண்டும் புனர் பரிசீலனை செய்து தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே பெரிய சிமெண்ட் ஆலைகள் நிறுவுவதற்கு போதுமான அளவு மூலப்பொருள்கள் இல்லை. சிறிய அளவிலே சிமெண்ட் ஆலைகள் நிறுவலாம் என்று சிமெண்ட் நிறுவனம் ஆய்வு செய்து அரசுக்கு அனுப்பி இருந்தது. ஏற்கனவே பெரிய சிமெண்ட் ஆலைகள் நடத்தினால், இவர்களுக்கு மத்திய அரசு வேண்டிய பிரத்தியேக சலுகைகளை ஆராய்ந்து அறிவித்திருக்கிற காரணத்தினால் சிறிய ஆலைகளை சிமெண்ட் கார்ப்பரேஷன் நடத்தும் திட்டம் கைவிட்டுவிட்டது. தனியார்கள் யாராவது சிறிய ஆலைகள் போட முன்வந்தால் அரசு வேண்டிய உதவிகளைச் செய்யும்.

[முற்பகல் 10–20]

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுப் பொத்தையிலுள்ள நாங்குநேரி வள்ளியூர் பகுதியில், சுண்ணாம்புக்கல் நிறையக் கிடைக்கிறது. அதை எல்லாம் தாமும்

பூத்து சிமென்ட் கம்பெனி எடுத்துக் கொண்டு போய் விடுகிறார்கள், அவர்கள் அப்படி எடுத்துச் செல்லாமல் தடை செய்து, வள்ளியூரிலேயே சிமெண்ட் உற்பத்தி செய்யக்கூடிய நிலைமையை ஏற்படுத்த அரசு முன் வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

## பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம்

*வினா எண். 451—திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பேரூர் சர்க்கரை ஆலைத் திட்டம் நிறைவேற்ற அரசு ஏதாவது முயற்சி எடுத்துள்ளதா ?

(ஆ) இல்லை என்றால், பொது மக்களிடம் வாங்கிய பங்குத் தொகையை திருப்பிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ஏஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### வினாக்களுக்கு விடையளிப்பதில் ஏற்படும் காலதாமதம்

*திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களிடமிருந்து பதிலை எதிர்பார்த்து போடப்பட்ட கேள்விகளுக்கு பதில்களை 15 நாட்களுக்குள் அளிக்க வேண்டும் என்று சொன்னீர்கள், இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னாலே, கேட்ட கேள்விகளுக்கு இன்றைக்



வரை விடைகள் வரவில்லை, உடனடியாகக் கொடுத்த கேள்விகள் சிலவற்றிற்கு பதில் வருகிறது, முன்னாலே கொடுத்த கேள்விகளுக்கு பதில் வரவில்லை. உடனடியாக 15 நாட்களுக்குள் விடை அளிக்கப்படக்கூடிய நிலைமையில் தாங்கள் செய்த அறிவிப்பை சரியாக அமல்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. கே. தனுக்கோடித் தேவர் : ஏகாதிபத்திய வெள்ளைக்காரனை எதிர்த்து வீரமரணம் அடைந்தவர்கள் தூக்குக் கயிறு ஏறியவர்கள். .. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறைய பேர்கள் தூக்குக் கயிறு ஏறியிருக்கிறார்கள். அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? அமருங்கள்.

திரு அழகர்சாமி அவர்கள் எழுப்பியதற்கு நான் பதில் சொல்லி விடுகிறேன். விடைகள் வருவதிலே காலதாமதம் ஆகிறது என்று சொன்னார்கள். அவர்களுக்கு 42 நாட்கள் நாம் கொடுத்திருக்கிறோம். அதற்குள் விடை வந்தாலும் நாம் உடனடியாக சேர்த்துக் கொள்கிறோம். எதையும் நிறுத்தி வைப்பதில்லை. விடைகள் வரவர அனுமதித்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

திரு. சோ. அழகர்சாமி : விடைகள் வர வர என்றால் வருவதற்கு தாமதம் ஆகலாம், ஆண்டுக்கணக்காக வராமலே போய்விடலாம். ஆகவே கட்டாயமாக தாங்கள் சொன்னமாதிரி விடைகள் வர வேண்டும். வரவில்லையென்றால்............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 42 நாட்கள் நாம் கொடுத்திருக்கிறோம். அதற்குள் வரவில்லை யென்றால் நாம் கேள்வியை போட்டு விடுகிறோம், அமைச்சர் பதில் சொல்ல கடமைப்பட்டிருக்கிறார், ஆகவே பதில் சொல்லியாக வேண்டும்.

திரு. ரா. உமாநாத் : ரூல்ஸிலே 42 நாட்கள் என்று இருக்கிறது. தாங்கள் அவைத் தலைவராக வந்தவுடனே ஒருநாள் ஒரு ரூலிங், டெசிஷன் கொடுத்தீர்கள். 15 நாட்களுக்குள் பதில் வரவேண்டுமென்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவை தலைவர் : மேக்ஸிமம் டைம் 42 நாட்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால் 15 நாட்களுக்குள் கொடுக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்தி வருகிறோம். அநேகமாக பல இலாக்காக்களிலிருந்து பதில்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இன்றைய தினம், 23 வினாக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கான விடைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. சுமார் ஒன்றரை மணி ஆகியிருக்கிறது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே சாதாரண கேள்விகளுக்குக் காலதாமதம் ஆவதைப்பற்றிக் கேட்டார்கள். ஆனால் ஒரு குறுகிய கால வினா ஒன்பது மாதங்களுக்கு முன்பு கேட்கப்பட்டது; அமைச்சர்களுடைய பயணப்படி குறித்து கேட்கப்பட்டது. நிதியமைச்சர் அவர்கள் கையெழுத்துப்போட்டு, ஒப்புதல் அளித்து உங்களுக்கு காப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகிய கால வினாவைப் பொறுத்து அமைச்சர் ஏற்றுக் கொண்டு பதில் கொடுக்க வேண்டும்.

திரு. து. புருஷோத்தமன் : பல இலட்சம் ரூபாய்களை அமைச்சர்கள் பயணப்படியாகப் பெற்றிருக்கிறார்கள். அதற்குப் பதிலே இல்லை என்றால் என்ன அர்த்தம்? அதற்குப் பதில் கொடுக்க மறுத்தால் என்ன ஆவது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மறுக்கவில்லை; இருக்கின்ற பிரச்னையைச் சொல்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பல இலட்சங் கணக்கான ரூபாய்களைப் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்களைக் கேள்வி கேட்க இப்பொழுது அனுமதிக்கவில்லை. அவ்வாறு கேட்பதும் முறை அல்ல. வராத கேள்வியைப் பற்றி இங்கே கேட்டால் அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டியதாக இருக்கும். எனவே அப்படிக் கேள்வி கேட்பது முறையல்ல.

திரு. து. புருஷோத்தமன் : அவையிலேயும் கேட்டேன். தங்கள் அறையிலேயும் கேட்டேன்.

திரு. க. பாலன் : தலைவரவர்களே, குறுகிய கால வினா என்று அமைச்சரிடத்தில் கையெழுத்துப் பெற்று நாங்கள் தருகிறோம். அப்படிக் கொடுத்துங்கூட இன்னும் பதில் வராமல் [illegible] நாங்கள் கேட்கிறோமே தவிர வேறு[illegible]



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கென்ன எல்லோருக்கும் சந்தேகம் வருகிறது (சிரிப்பு) அமைச்சரிடத்திலே நேராக உறுப்பினர்கள் வைத்துக் கொள்வதாக இருந்தால் நான் இங்கே இருக்க வேண்டிய அவசியமில்லை.

திரு. க. பாலன் : குறுகிய கால வினாவிற்கு கையெழுத்து வாங்குகிறோம்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, குறுகிய கால வினாவிற்குக் குறைந்த காலத்தில் விடையளிக்க அமைச்சர் தயாராக இருக்கிறாரா என்பதற்காகத்தான் அமைச்சரிடத்தில் அது காட்டப்பட்டுக் கொடுக்கப்படுகிறது. அமைச்சர் கையெழுத்துப் போட்டால் குறைந்த காலத்தில் விடையளிக்கத் தயார் என்று அதற்குப் பொருள். குறைந்த காலத்தில் முடியாவிட்டாலும் 15 நாட்களுக்குள் குறுகிய கால வினா வருவதற்குத் தலைவரவர்கள் அரசுத் துறைக்கு, அமைச்சர்களுக்குச் சொல்லி 15 நாட்களுக்குள் விடையளிக்கும்படி தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, குறுகிய கால வினாக்களை ஆளுங்கட்சியினரும் தருகிறார்கள், எதிர்க்கட்சியினரும் தருகிறார்கள். இன்றைக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வருகிறது என்றால், நாளைக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்வி வரவேண்டும். ஆனால் அப்படியில்லாமல் ஆளுங்கட்சியினரின் குறுகிய கால வினாதான் வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இரண்டு பக்கங்களையும் சமமாகப் பாவிக்கிறேன்; தப்பாக எடுத்துக்கொள்ள வேண்டாம்.

3. அரசினர் சட்டமுன்வடிவு.

மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின்சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இச் சட்ட முன்
வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு
அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10-30]

4. 1980-81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி நிலை அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 1980–81—ஆம்
ஆண்டுக்கான இறுதித் துணை நிதி நி லை அறிக்கையை மாண்புமிகு
நிதி அமைச்சர் அவைக்கு அளிப்பார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களே, 1980–81-ஆம் ஆண்டிற்கான இறு
தித் துணை மதிப்பீடுகளை இப்பேரவையில் வைக்க முன்வரு
கிறேன். இந்தத் துணை மதிப்பீடுகளில் உள்ள மொத்தத்
தொகை ரூபாய் 458.88 கோடியாகும். இதில் ரூபாய் 210.64
கோடி வருவாய்க் கணக்கிலும் மீதமுள்ள ரூபாய் 248.24 கோடி
மூலதன, கடன் கணக்கிலும் உள்ளன. பல்வேறு மானியக்
கோரிக்கைகளில் கேட்கப்பட்டுள்ள தொகைகளின் விவரமும்
அவற்றிற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள
அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. முதல் துணை மானியக்
கோரிக்கைக்குப் பின்னர் அனுமதிக்கப்பட்ட செலவினங்களுக்கும்
கூடுதல் நிதி ஒதுக்கம் தேவையான இனங்களுக்கும் சேர்த்து
இந்தத் துணை மதிப்பீடுகள் வைக்கப்பட்டுள்ளன. இதிலுள்ள
சில முக்கியத் திட்டங்களைக் கோடிட்டுக் காட்ட விழைகிறேன்.



சுமார்
படுத்தவும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மானியமாகச்
ரூபாய் 4.3 கோடி வழங்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்
பட்டுள்ள பகுதிகளில் குடிதண்ணீர் வசதிகளைச் செய்ய நக
ராட்சிகளுக்கு நடப்பு நிதி ஆண்டில் ரூபாய் 23.81 இலட்சம்
மானியமாகவும், ரூபாய் 23.81 இலட்சம் கடனாகவும் வழங்க
அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், வேலை வாய்ப்பினை
ஏற்படுத்தும் பொருட்டு, சிறுபாசன ஏரிகளை ஆழப்படுத்தல்,
மண் சாலைகள் போடுதல் போன்ற நிவாரணப்பணிகளுக்கு
ரூபாய் 3 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. கிராமப்புற மக்களின்
தேவைகளை நிறைவேற்றவும் வேலை வாய்ப்பினை உருவாக்
கவும் தன்னிறைவுத் திட்டம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. இத்திட்டத்தின் வாயிலாக வளர்ச்சி வட்டாரங்களில்
பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்ட ரூபாய் 253.83 இலட்சம் கூடு
தல் நிதி ஒதுக்கம் கோரப்பட்டுள்ளது.

3. வேளாண்மையே கிராமப் பொருளாதாரத்தின் அடிப்படை
யாக அமைந்துள்ளது. எனவே, சிறு உழவர் வேளாண்மைத்
தொழிலாளர் ஆகியோரின் நலனில் தக்க கவனம் செலுத்தி
வேளாண்மை விளைபொருளைப் பெருக்கப் பயனுள்ள பணிகளை
இவ்வரசு மேற்கொண்டு வருகிறது. நன்னிலத்திலும், நாகப்பட்
டினத்திலும் ஆக இரண்டு மண்வளப் பாதுகாப்பு உட்கோட்டங்
களை ஏற்படுத்த ரூபாய் 24.39 இலட்சம் இந்தத் துணை மானியக்
கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும், ஒருங்கிணைந்த
ஊரக வளர்ச்சித் திட்டத்திற்குக் கூடுதலாகச் சுமார் ரூபாய் 4.91
கோடி நிதி ஒதுக்கம் தேவைப்படுகிறது. சிறு உழவர்களின் கடன்
சுமையைக் குறைக்கும் பொருட்டு இவ்வரசு சுமார் ரூபாய் 21.5
கோடி தக்காவிக் கடன் பாக்கியைத் தள்ளுபடி செய்துள்ளது.

4. சமுதாயத்தில் நலிந்தோர் நலனுக்காக இவ்வரசு
தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருவதை மாண்புமிகு உறுப்
பினர்கள் நன்கு அறிவர். கிராமப்புற வீட்டுவசதித் திட்டத்தின்
கீழ் ஆதிதிராவிட மக்களுக்கு உதவித் தொகையாக ரூபாய் 3
கோடி வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது; ஈமக்கடன்களைச்
செய்ய இவர்களுக்கு உதவும் பொருட்டு மானியமாக வழங்க
ரூபாய் 35.20 இலட்சமும் ஆதிதிராவிட மாணவர்களுக்குப் படிப்
புத் திறன் குறித்த உதவித் தொகை வழங்க ரூபாய் 10.85
இலட்சமும் கூடுதல் நிதியாகத் தேவைப்படுகிறது. மேலும், முதி
யோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் ஆடைகள் வழங்க
ரூபாய் 19.46 இலட்சமும் அரிசி வழங்க ரூபாய் 50.36 இலட்சமும்
கூடுதல் நிதி ஒதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது.

5. கல்வி வசதிகளைப் பெருக்குவதற்கும் கல்வியின் தரத்தை
உயர்த்துவதற்கும் இந்த அரசு கல்வித்துறையில் பல திட்டங்
களைத் தீட்டித் திறம்பட செயல்படுத்திவருகிறது. இந்த ஆண்

டும் மேல் நிலைப் பள்ளிகளில் பெருகிவரும் பணியைச் செவ்வனே செய்ய, பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்ற பல ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, இதற்குக் கூடுதலாக ரூபாய் 81.24 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்ய வேண்டியுள்ளது. அரசு உதவி பெற்ற பல தனியார் மேல் நிலைப் பள்ளிகளைத் தொடங்குவதற்கு ரூபாய் 50.66 இலட்சமும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு அகவிலைப்படியை உயர்த்தியதாலும் அரசு உயர் நிலைப் பள்ளிகளைத் தொடங்கியதாலும் ஏற்படும் செலவிற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கமாகச் சுமார் ரூபாய் 1.08 கோடியும் இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. சென்னை, மாநகராட்சிக்குக் கல்வி மானிய நிலுவை வகையில் ஒரு கோடி ரூபாய் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அகவிலைப்படி உயர்வளித்ததால் மேலும் ரூபாய் 188.23 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட ஒரு தீவிரத் திட்டம் தீட்டி அதனைச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் முதற் கட்டமாக 2,000 பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ரூபாய் 581.7 இலட்சம் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

6. மின் வாரியத்தினுடைய நிதிநிலையைச் சீர்படுத்துவதற்காகவும் அதனுடைய பணிகளை விரிவுபடுத்துவதற்காகவும் ரூபாய் 90.58 கோடி மானியம் வழங்க ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இந்த மானியத் தொகை முழுவதும் மின் வாரியம் அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டித் தொகைக்காகக் கணக்கில் ஈடுசெய்யப்படும்.

7. அவையில் வைக்கப்பட்டுள்ள 1980--81ஆவது நிதியாண்டிற்கான இறுதித் துணை மானியக் கோரிக்கைகளில் உள்ள சில முக்கிய செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். இந்தக் கோரிக்கைகளில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி இத்திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளிக்குமாறு அவையை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.



## 5. அறிவிப்பு.

### 1980—81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கை— வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1980—81 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதி துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள், பேரவையின் 205-வது விதிக்கிணங்க 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 3—00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

## 6. வரவு-செலவுத் திட்டம் 1981—82—விவாதம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1981—82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். திரு. ரகுமான்கான்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு இந்த மன்றத்தின் பேரவைத் தலைவர் அவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சர் நாவலர், இந்த மன்றத்தினுடைய ஒப்புதலுக்காக இங்கே வைத்து இருக்கிறார்கள்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான் கவனமாகப் படித்துப் பார்த்தேன். இதில் ஏதாவது முக்கியமான அம்சங்கள் இருக்கின்றனவா என்று கேட்டால், எந்த அம்சமும் இல்லை. ஆனால் ஒரே ஒரு அம்சம் மட்டும் இருக்கின்றது. நம்முடைய தன்னிகரற்ற நாவலர் அவர்கள் இரண்டு திருக்குறள்களுக்கு நல்ல முறையிலே அர்த்தம் சொல்லி இருக்கிறார்கள். அதை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் மக்கள் பிரச்சினைகளுக்கு இதிலே தீர்வு சொல்லப்பட்டிருக்கிறதா. தொழிலாளர்கள், அரசாங்க ஊழியர்கள், ஆசிரியர்கள், விவசாயிகள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடிய ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், இவர்கள் எல்லாம் நம்பிக்கை ஒளி பிறக்கும் என்ற உணர்வோடு இந்த வரவு-செலவுத் திட்டத்தைப் பார்க்கிறபோது அவர்களுடைய பிரச்சினைக்கு எந்தவித பரிகாரமும் இல்லை. எனவே, நம்முடைய நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கக் கூடிய இந்த வரவு செலவுத் திட்டம் எப்படி இருக்கிறது என்றால், அது தாகம் தீர்க்கும் தண்ணீர்ப் பந்தலாக இல்லை '; மாறாக கண் சிமிட்டும் கானல் நீராக இருக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். நாவலர் கோபித்துக் கொள்ளமாட்டார்கள். என்று நான் நம்புகிறேன். இதை நான் அக்கவுண்டன்ட் பட்ஜெட்

என்று சொல்ல விரும்புகிறேன்.
என்பது சாதாரணமாக சொல்லவேண்டும் என்று சொன்னால் அக்கவுன்டன்ட் பட்ஜெட்
இது ஒரு சினிமா கம்பெனியினுடைய வரவு-செலவுத் திட்டம்
போல் இருக்கிறது. அதற்கு ஆதாரமாக ஒரு குறிப்பை நான்
சொல்ல விரும்புகிறேன்.

மதுவிலக்கை புனிதமான கொள்கையாக இப்போது கூட
நீங்கள் பேசிக்கொண்டிருந்தாலும் கூட, அதை இப்போது
ரிலாக்ஸ் செய்து இருக்கிறீர்கள். அதன் மூலமாக எவ்வளவு
தொகை வருமானம் வரும் என்பதை உத்தேசமாக நிச்சயமாக
கணக்கிட முடியும். அந்தத் தொகை வரவு அயிட்டத்திலே
வைக்கப்படவேண்டும். அப்படி நீங்கள் அதைக் குறிப்பிட்டிருந்
தால், இந்த 20 கோடி ரூபாய் வரி என்று சொல்லக்கூடிய சூழ்
நிலையை மாற்றி அமைத்திருக்கலாம். ஆக அது இதிலே
குறிப்பிடப்படாததாலே முறையாக இது கணக்கிலே எடுத்துக்
கொள்ளப்படவில்லை. எனவே இது ஒரு கணக்கப் பிள்ளை
பட்ஜெட்டாக இருக்கிறது என்றுதான் நான் சொல்ல விரும்பு
கிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே இன்னொரு கருத்தையும் நான்
சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்
இந்தியாவினுடைய பொருளாதாரத்தைப் பற்றி எல்லாம்
மிகச் சிறப்பாக, சுருக்கமாக சொன்னாலும் விளக்கமாகச்
சொல்லி இருக்கிறார்கள். இன்றைக்கு விலைவாசி ஏறி
யிருக்கிறது. தாங்கள் என்ன செய்ய முடியும் பண வீக்கம்
இருக்கிறது. இன்றைக்கு அத்தியாவசியமான பொருட்களுக்கு
பற்றாக் குறை இருக்கிறது என்ற கருத்தை இன்றைக்கு
அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆளுங்கட்சியிலே இருக்கிற
காரணத்தால், ஆனால், அவர்களை, இந்த சர்க்காரை நான்
பணிவோடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். திராவிட
முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த போது விலைவாசி
ஏற்றத்தை எதிர்த்து நீங்கள் அன்றைக்கு விலைவாசிப் போராட்
டம் நடத்தினீர்களே அது மத்திய சர்க்காரை எதிர்த்தா அல்லது
மாநில சர்க்காருக்கு எதிராகவா? அன்றைக்கு மாநிலசர்க்காருக்கு
எதிராக, இன்றைக்கு மத்திய சர்க்காருக்கு எதிராகப் என்ன
காரணம் என்று கேட்க விரும்புகிறேன்.



கத்தைக் அதிகாரங்களைக்
களுக்கும் இருக்கிறது. அந்தக் குறைந்த பட்ச திட்டங்களை
கொண்டு தான் அவர்கள் பல முற்போக்கான இரண்டொரு உதா
நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்காக கேரளாவை
ரணங்களைச் சொல்ல முடியும். உதாரணமாக இருக்கக்கூடிய வயதான
எடுத்துக்கொண்டால், இன்றைக்கு அங்கே பென்ஷன் வழங்கும் திட்டத்தை
விவசாயத் தொழிலாளர்களுக்கு கேரளத்து நயினாருக்கு
அந்த அரசு கொண்டு வந்து இருக்கிறது. உங்களுக்கும் இருக்கிறது.
இருக்கும் அதிகாரம் தான் இங்கே இவைகளையெல்லாம் செய்
ஆனால் தேர்தல் வாக்குறுதிகளில் நீங்கள் செய்யவில்லை. அதை நிறை
வோம் என்று சொல்லியும் என்றால் இல்லை. ஆனால் இன்
வேற்றி இருக்கிறீர்களா நிறைவேற்றத் தவறிய நிலையில் மத்திய
றைக்கு வாக்குறுதியை எதிராக ஒரு புகார் காண்டத்தை எழுப்பியிருக்
சர்க்காருக்கு மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள்
கிறீர்கள். அது மட்டுமல்ல. ஏற்கனவே ஒரு காலத்தில் சொல்லப்
வேண்டும் என்ற கோரிக்கை ஆளுநர் உரையிலும், பட்ஜெட்
பட்டு, இடையிலே உங்களுடைய இருந்தாலும், இன்றைக்கு அதைச்
உரையிலும் சொல்லப்படாமல் நிலைமை உங்களுக்கு
சொல்ல வேண்டிய ஒரு அசாதாரணமான மகிழ்ச்சி அடைகிறேன்.
ஏற்பட்டு இருப்பது கண்டு நான் மெத்த

அதிகாரங்கள் வேண்டும் என்ற
மாநிலங்களுக்கு அதிக அண்ணா அவர்கள் பிரச்னைத்
கருத்தை, நம்முடைய பேரறிஞர் சபாவில் விவாதிக்கிற போது
தடைச் சட்ட மசோதா ராஜ்ய உரையிலே போட்டு இருக்
பேசியதை எடுத்து இந்த பட்ஜெட் உறுப்பினர் உமாநாத் அவர்
கிறீர்கள். நம்முடைய மாண்புமிகு வேண்டும். மாநிலங்
கள் இங்கே அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று தனி
களுக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேண்டும் போது, திராவிட
நபர் தீர்மானம் கொண்டு வந்து வலியுறுத்திய விவாதத்தில் கலந்து
முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்த கொள்கையை ஆதரிக்
கொண்டு நாங்கள் மாநில சுயாட்சிக் நாங்கள் இந்திரா
கிறோம். இன்னும் சொல்லப்போனால், இருந்தாலும் கூட,
காங்கிரஸ் அணியில் தேர்தல் கூட்டு வைத்து சுயாட்சி. அந்தக்
எங்களுடைய அடிப்படைக் கொள்கை மாநில இப்போதும்
கொள்கையில் 1971-லும் உறுதியாக இருந்தோம். சென்னோம்.
நாங்கள் உறுதிாக இருக்கிறோம் என்ற கருத்தைச் தமிழகத்தில்
இன்னும் சொல்லப் போனால், கலைஞர் அவர்கள் ராஜமன்னார்,
அதற்கு வழிகாட்டியாக அண்ணா வழி நின்று திரு. அறிக்கையைத்
தலைமையில் ஒரு கமிட்டி, போட்டு, ஒரு நிறைவேற்றி
தயாரித்து அதன்மீது ஒரு தீர்மானமும் போட்டு, நம்முடைய
அந்த மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். கூட்டத்தில் பேசிய
அமைச்சர் திரு. காளிமுத்து அவர்கள் கூட ஒரு அவர்கள் சீறினால்
தாக கேள்வி. நம்முடைய முதலமைச்சர், மாண்புமிகு
சிங்கமாக மாறுவார் என்று எல்லாம் சொன்னாராம். எங்களுக்கு
முதலமைச்சர் அவர்கள் சிங்கமாக இருப்பதைக் கண்டு கேட்டுக்கொள்வது
ரொம்பவும் சந்தோஷம். ஆக, நான் உங்களை

எல்லாம், இந்த மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் மாநில சுயாட்சி வேண்டும் என்கிற வகையில் ஒரு தீர்மானத்தை இந்தச் சட்ட மன்றக் கூட்டம் முடிவதற்குள்ளாக கொண்டு வந்தால், ஒரு சிங்கம் சரியான நடவடிக்கை எடுத்து இருப்பதாக எண்ணி நாங்களும், நண்பர் திரு. உமாநாத் அவர்களும், மற்றவர்களும் நிச்சயமாக மகிழ்ச்சி அடைவோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அண்மையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாகூரில் ஒரு மருத்துவ மனைக்குப் பெயர் மாற்றியமைத்து, அதைத் திறந்து வைக்கிற நேரத்தில் சொன்னார்கள். அது பத்திரிகையில் வந்திருக்கிறது அந்தச் செய்தியைச் சொல்கிறேன். சப்ஜெக்ட் டு கரெக்ஷன். அது சரியல்ல என்று சொல்லலாம், அப்படிப் பேசவில்லை என்று சொல்லலாம். அது உங்களுடைய விருப்பம். நான் பத்திரிகையில் வந்ததை வைத்துச் சொல்கிறேன். நாகூரில் ஒரு மருத்துவ மனைக்கு நாகூர் ஆண்டவர் மருத்துவமனை என்று பெயர்மாற்றம் செய்து, அதன் திறப்பு விழாவில் பேசினார்கள். அது திரு.உமாநாத் அவர்கள் தொகுதியில் இருக்கிறது. அப்படிப் பேசுகிறபோது நான் உண்மையான முஸ்லீம், முழுமையான முஸ்லீம் என்று எல்லாம் சொன்னார்கள். ரொம்ப சந்தோஷம். அதிலே அவர்கள் சொன்ன அம்சம் என்னவென்றால், தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயமாக எவ்வளவு எதிர்ப்புகள் வந்தாலும் நாங்கள் நிறைவேற்றியே தீருவோம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்போது நான் கூட எண்ணினேன். பட்ஜெட் வருவதற்கு முன்பாக நாகூரில், அதுவும் நாகூர் ஆண்டவர் சந்நிதியில் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயம் கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றப் போகிறார். இந்த பட்ஜெட் உரையில் அது எல்லாம் வரப்போகிறது என்று எதிர் பார்த்தேன். ஆனால் இதிலே வரவில்லை. ஆகவே, நினைவு படுத்துகிறேன். ஏனென்றால் அது பழங்கதையாய், பழங்கனவாய் போய்விடக்கூடாது என்பதற்காக.

திரு. க. பாலசுப்பிரமணியன் : பாயின்ட் ஆப் ஆர்டரிர் சார். . மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாகூரில் பேசுகின்ற நேரத்தில் நானும் அங்கே இருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, நாங்கள் இந்த 4 ஆண்டு காலத்தில், எங்களுடைய ஆட்சி காலம் முடிவதற்குள்ளாக நாங்கள் கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றியே திருவோம் என்று பேசினார்களே தவிர, இந்த ஆண்டிலேயே, அல்லது அந்த நாகூர் நிகழ்ச்சி முடிந்து வர இருக்கின்ற பட்ஜெட்டிலேயே நிறைவேற்று வோம் என்ற சொல்லவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.



திரு. அ. இரகுமான்கான் : முதலமைச்சர் என்ன சொ[...] என்பதை நீங்களும் சொல்கிறீர்கள் ; நாங்களும் சொல்கிறோம் ; மற்றவர்களும் சொல்கிறார்கள்.

அடுத்தபடியாக, ஆளுநர் உரையிலே சொல்லும்போது சொன்னார்கள். அது என்ன அழகான கருத்து என்றால், ஏழைக் குடும்பத்திலே உள்ள ஒருவருக்காவது அரசு நிச்சயமாக வேலை தரும் என்று சொல்லியிருக்கிறார்கள். அது இந்த பட்ஜெட்டிலே இருக்க வேண்டாமா? இருக்கிறதா என்றால், இல்லை. அது மட்டுமல்ல. வறுமைக்கோட்டுக்குக் கீழே இருப்பவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒருவருக்கு ஒரு ரூபாய் தருவோம் வேலை இல்லாத நாட்களில் ; அது ஆணாக இருந்தாலும் அல்லது பெண்ணாக இருந்தாலும் தருவோம், ; வறுமைக் கோடுதான் அடிப்படையாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு அது இந்த பட்ஜெட்டிலே இடம் பெற்றிருக்கிறதா என்றால், இல்லையே. அதைப்போல பட்டினியால் சாவது போல இருந்தால் அவர்களுக்கு 100 ரூபாய் தரப்படும் ; அதிகாரிகளை சந்தியுங்கள் என்று சொன்னார்கள். இந்த பட்ஜெட்டிலே அது இடம் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை.

அதைப்போல விவசாயிகளுக்கு கடன் தள்ளுபடி என்று சொன்னார்கள். அப்போது விவசாயிகள் என்றுதான் சொன்னார்களே தவிர பெரிய விவசாயியா, சிறிய விவசாயியா என்று சொல்லவில்லை. புயலால் பாதிக்கப்பட்டவரா, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவரா, மழையால் பாதிக்கப்பட்டவரா என்று விளக்கம் சொல்லவில்லை. குறுகிய கால கடனா, மத்திய கால கடனா, நீண்டகால கடனா என்று சொல்லவில்லை. ஒட்டு மொத்தமாக விவசாயிகள் கடன் ரத்து செய்யப்படும் என்று சொன்னார்கள். ரத்து செய்யப்பட்டிருக்கிறதா? இந்த பட்ஜெட்டில் அது பற்றி சொல்லப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. தேர்தல் கால வாக்குறுதி ஒன்றையும் இதிலே காணவில்லையே.

ஆனால் ஒன்றைமட்டும் மறக்கவில்லை. அது என்னவென்றால், ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு குறைந்தவிலையில் தாலிக்கு தங்கம் தருவோம் என்று சொன்னார்கள். அது பற்றி முதலமைச்சரைக் கேட்டோம் ; நாங்கள் இந்த சட்டமன்றத்திலே கூட கேட்டோம். அன்றைக்குக்கூட விரைவிலே பட்ஜெட்டிலே பாருங்கள் என்று சொன்னார்கள். இப்போது பட்ஜெட்டைப் பார்க்கிறோம். பட்ஜெட்டில் ஏழைப் பெண்கள் திருமணத்திற்கு குறைந்த விலையில் தாலிக்கு தங்கம் தர ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எப்படி என்றால், இந்த குறைந்த விலையில் தாலிக்கு தங்கம் தருவதற்கு சில நிபந்தனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. முதலிலே, அவர்கள் ஏழைப் பெண்களாக இருக்க வேண்டும். இதற்கு என்ன வரையறை? என்ன டெஃபனிஷன் ? யார் வேண்டுமானாலும் ஏழை என்று சொல்லிவிடலாம்.

[திரு. அ. ரகுமான்கான்] [1981 மார்ச் 23

நாவலரை கேட்டால் கூட சொல்வார், நானும் ஒரு ஏழைதான் என்று. நான் மக்களுக்காக சேவை செய்ய வந்திருக்கிறேன்; என்னிடம் ஒன்றும் இல்லை. நானும் ஏழைதான் என்று சொல்வார். நம்முடைய முதலமைச்சரே கூட சொல்வார். எனக்கு என்ன குழந்தை குட்டியா இருக்கிறது சேர்த்து வைக்க என்னிடம் ஒன்றும் இல்லை. நானும் ஏழைதான் என்று சொல்வார். ஆக, ஏழை என்பதற்கு என்ன இலக்கணம் என்று சொல்லவில்லை.

அதோடு இன்னொன்று, அதையும் இந்த சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஒரு மங்களமான கருத்தைச் சொல்லும்போது எவ்வளவு அமங்கலமாகச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஒரு ஏழைப் பெண்ணின் திருமணத்திற்கு குறைந்த விலையில் தாலிக்கு தங்கம் கொடுக்கிறோம் என்று சொல்லும்போது, அது எப்படிப்பட்ட பெண்ணாக இருக்க வேண்டும் என்றால், அந்தப் பெண்ணின் தாயார் தாலி அறுத்திருக்க வேண்டும். விதவையாக இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்களே. இது எவ்வளவு அமங்கலமானது என்று யோசித்தீர்களா? (daughter of widow) என்று சொல்வது எவ்வளவு அமங்கலமானது?

இதற்கு எவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் தெரியுமா? 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது போதுமா? எந்த அளவுக்குப் போதும்? அரசின் இந்த செய்கை வாசமற்ற காகிதப்பூ கதையாகத்தான் இருக்கும். ஒரு சவரன் 1,000 ரூபாய் என்று வைத்துக் கொண்டால் கூட 10 இலட்சம் ரூபாயை எவ்வளவு பேர்களுக்கு கொடுக்க முடியும்? என்ன புள்ளிவிவரம்? ஒன்றும் இல்லை. இதையெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்காகத்தான் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, உங்கள் கவனத்திற்கு இன்னொன்றையும் கொண்டு வர விரும்புகிறேன். இது ஒரு முக்கியமான பிரச்சினை. இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே ஒரு முக்கியமான அம்சமாக இருப்பது மது விலக்குக் கொள்கை. 'இன்று ரிலீஸ் செய்யப்படுகிறது' என்று கருத்தைத்தான் பத்திரிகைகளிலே எழுதியிருக்கிறார்கள். மது அருந்தியவன் தள்ளாடுகிறான் என்றால் இன்றைக்கு உங்களுடைய மதுவிலக்குக் கொள்கையும் தள்ளாடுகிறது. அதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆரம்ப காலத்திலே உங்களுடைய நிலை எப்படி இருந்தது என்பதை நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

We are committed to the policy of Prohibition

இந்த அரசின் கொள்கை மதுவிலக்குக் கொள்கை என்று சொன்னீர்கள். அண்ணாவின் கொள்கை மதுவிலக்குக் கொள்கை, மது அரக்கனை ஒழிப்போம் என்றும், சாராய



1981 மார்ச் 23] [திரு. அ. ரகுமான்கான்]

சாம்ராஜ்ஜியம் இங்கே இருக்கக்கூடாது என்றும் சொன்னீர்கள். அது மட்டுமல்ல. தாய்மார்களின் கண்ணீர் துடைக்கப்பட வேண்டும், அதற்கு மதுவிலக்குக் கொள்கை அமுல்படுத்தப்படும் என்று சொன்னீர்கள். அப்படிச் சொன்ன அந்த மதுவிலக்குக் கொள்கையை நிறைவேற்ற ஒரு சட்டம் கொண்டு வந்தீர்கள். அதில் கடுமையான பிரிவுகள் எல்லாம் இருந்தன. 'நான் பெயிலபிள் கிளாஸ்' எல்லாம் இருந்தது. கொலை செய்தால் என்ன தண்டனையோ, அதேமாதிரி; கொள்ளையடித்தால் என்ன தண்டனையோ, அதேமாதிரி; தீ வைத்தால் என்ன தண்டனையோ, அதேமாதிரி தண்டனை வழங்குகின்ற வகையில் கடுமையான பிரிவுகளை எல்லாம் போட்டு, குடிப்பவனுக்கு தண்டனை வழங்க வேண்டும்;—'நான் பெயிலபிள்' சரத்துக்களையும் சேர்த்து—என்று சட்டம் போட்டு, சிறையிலே தள்ள வேண்டுமென்று சொன்னீர்கள்; சட்டம் போட்டீர்கள்; சிறையிலே தள்ளினீர்கள். சிறையில் என்ன நடந்தது என்று நண்பர்கள் சொன்னார்கள். பல ஊர்களிலே இருந்து வந்தவர்கள் அங்கே ஒரு மாநாடு நடத்தினார்கள். நம்முடைய ஊரில் எப்படி தயாரிக்கப்பட்டது? அந்த ஊரில் எப்படி தயாரிக்கப்பட்டது? இந்த ஊரில் எப்படி தயாரிக்கப்பட்டது என்று அங்கே விவாதிக்கப்பட்டது. அது ஒரு சிறைக்கூடமாக அல்ல, விஞ்ஞானக் கூடமான ஆராய்ச்சிக் கூடமாக அந்த நேரத்தில் இருந்திருக்கிறது.

[முற்பகல் 10—50]

அந்தமாதிரி ஒரு கடுமையான சட்டம் கொண்டு வந்தீர்கள். நீங்கள் கொண்டு வந்த சட்டம் எவ்வளவு கடுமையானது என்பதற்கு இன்னொரு உதாரணம். சைக்கிளை வாடகைக்கு விடுகின்ற கடையை ஒருவர் வைத்திருந்தால் அக்கடையில் வாடகைக்கு சைக்கிளை எடுத்துச் செல்கின்ற ஒருவர் ஒருபாத்திரத்திலே சாராயம் கடத்தினார் என்றால் அவ்வாறு சைக்கிளில் சாராயம் கடத்தியவர் மட்டும் ஜெயிலுக்குப் போக மாட்டார் என்றும் சைக்கிள் கடைக்காரரும் ஜெயிலுக்கு போக வேண்டும் என்றும் அப்படிப்பட்ட ஒரு vicarious responsibilities என்ற வகையில் அது மட்டுமல்ல. அதிலே கூட பிரிவைக் கொண்டுவந்தீர்கள். பப்ளிக் சர்வன்ட்ஸ் என்பது வேறு. இரண்டு பிரிவுகள் இருந்தன. பப்ளிக் சர்வன்ட் அதாவது கவர்மென்ட் சர்வென்ட் என்பது வேறு. நீதிபதி குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை, கலெக்டர் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை, கார்ப்பரேஷன் கமிஷனர் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை, முனிசிபல் கவுன்சிலர் குடித்தால் அவருக்கு ஒரு தண்டனை. அதாவது ஒரே சாராயம், ஒரே க்ளாஸ், ஒரேயிடத்தில் குடிக்கிறார்கள், ஆனால், தண்டனைகள் மட்டும் வேறு, வேறு. ஆகவே, அதிலேயே ஒரு டிஸ்கிரிமினேஷன் வைத்திருக்கிறீர்கள். அதற்குக்கூட வேடிக்கையான காரணங்களைச் சொல்லியிருந்தீர்கள். இது எல்லாம் கடுமை

யான சட்டம், இவை வேண்டாம், மதுவிலக்கு சம்பந்தமாக ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்கள் போதும், நாங்களும் உங்களைப்போன்ற மதுவிலக்குக் கொள்கையில் அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர்கள்தான். இது ஒரு அரக்கத்தனமானச் சட்டம் என்று சொன்னோம். அப்படிச் சொன்னபோதும் நம்முடைய முதலமைச்சரவர்கள் என்ன சொன்னார் தெரியுமா? " திருடன் கையிலேயா நான் பூட்டுச் சாவியைக் கொடுப்பேன் " என்று சொன்னார். அதாவது நாங்கள் கருத்தைச் சொல்லக் கூடாது என்ற வகையிலே சொன்னார்கள். எங்களைப் பற்றி விமர்சனம் செய்தார்கள். அதற்குப் பிறகு, மதுவிலக்கைத் தீவிரமாக அமல் செய்வதற்கு பல முயற்சிகளை எடுத்தார்கள். அது சம்பந்தமாக மனிதர்களிடத்திலேயும், போலீஸ் அதிகாரிகளிடத்திலேயும் அவர்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போய் நாய்களை நம்பினார்கள். அதாவது நாய்ப் படையை அமைத்தார்கள், மதுவிலக்கைச் சிறப்பாக நடத்துவதற்கு. அதற்குப் பிறகு ஒரு ஐ.ஜி. போட்டார்கள். அதுபற்றி பல பிரச்சாரம் செய்தார்கள். அண்ணா சாலையிலே உள்ள ஆயிரம் விளக்கு பகுதியில் போய் பார்த்தால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒரு பயங்கரமான அரக்கனைப் பார்த்துக்கொண்டிருப்பதாக ஒரு படம் போட்டார்கள். அகோரமான உருவமுடைய அந்த அரக்கன் சொல்கிறான் " நான் குடித்துக்கொண்டே இருப்பேன் " என்று. நமது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவருக்கே உரிய பாணியில், " நீ குடித்துக்கொண்டே இருப்பாயா " என்று கேட்கிற மாதிரி பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர் ஏன் அங்கே நிற்கிறார்? அதற்கு நான் ஒன்றும் சொல்ல முடியாது.

(மாண்மைமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து ஒரு தமிழ் இலக்கிய மேதையின் பிறந்தநாள் விழாவில் அவரைப் பற்றிய சுய சரிதைப் புத்தகம் ஒன்று வெளியிடப்படுகிறது. அந்தப் புத்தகம் பற்றி விமர்சனம் செய்கிறபோது அந்தப் புத்தகத்தினுடைய கதாநாயகனின் தந்தை குடித்துவிட்டு வந்து கதாநாயகனின் தாயை அடிப்பாராம்—உங்களுடைய பத்திரிக்கையிலே கூட எழுதினீர்கள்—அது மாதிரி கணவன், மனைவியை குடித்துவிட்டு வந்து அடிப்பதைப்பார்த்து விம்மி, விம்மி அழுதார் நமது முதலமைச்சர் அவர்கள் என்று படம் போட்டுக் காட்டினார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை? 25 ரூபாய்க்கு பெர்மிட், 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடிக்கலாம் என்ற வயது வரம்பு எல்லாம் கொண்டு வந்தீர்கள். அதற்குப் பிறகு ஓராண்டு கூட ஆகவில்லை. இன்னும் சிலவற்றை இது குறித்து செய்ய வேண்டி இருக்கிறது. எனவே மனம்திறந்து பேசுங்கள் என்று சொன்னார்கள். எங்களை மனம் திறந்து பேசச் சொன்னால் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் டாக்டர் சரசம் அவர்கள் மனம் திறந்து



கருத்துக்களைச் சொன்னார்கள். அப்போது 25 ரூபாய் பெர்மிட் என்பதை 5 ரூபாய் என்று மாற்றினால் கூட சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். அவர் மனம் திறந்து பேச வேண்டிய இடத்திலிருந்து மனம் திறந்து பேசியிருக்கிறார். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை என்றால் 25 வயது ஆகிய யார் வேண்டுமானாலும் குடிக்கலாம். பெயருக்குத்தான் பெர்மிட் என்று வைத்து இருக்கிறீர்கள். சிங்கப்பூரிலே கூட 16, 17 வயது உள்ளவர்கள் குடிக்க முடியாது. இங்கிலாந்திலேயும் அவ்வாறு குடிக்கக்கூடாதுதான். அங்கே அவர்களும் பெர்மிட் என்று வைத்திருக்கிறார்கள். ஆகவே, பெர்மிட் என்பது பெயரளவுக்குத்தானே தவிர அடையாளச் சின்னம் அல்ல. அந்த வகையிலே பெர்மிட் என்று ஏற்படுத்தி இருக்கிறீர்கள். புட்டியிலே அடைக்கப்பட்ட சாராயம் உரிய கடைகளின் மூலம் விற்கப்படும் என்றும் சொல்லியிருக்கிறீர்கள். மரம் ஏறுபவர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கள் இறக்கலாம் என்று இப்போது அறிவித்து இருக்கிறீர்கள். கள்ளுக்கடை திறக்கலாம். சாராயக்கடை திறக்கலாம் பெர்மிட் வயது 25 என்று இவ்வளவு அறிவித்துவிட்ட பிறகும் அரசு மதுவிலக்குக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருக்கின்றது என்றும் மதுவிலக்குச் சட்டம் ரத்து ஆகவில்லை என்று சொல்கிறீர்கள். மதுவிலக்கு இன்றைக்கு நடைமுறையில் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். முதலிலே தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்கு கடுமையானச் சட்டம் கொண்டுவரப்படும் என்று சொன்னீர்கள். இப்போது சாராயக்கடை திறக்கப்படுகிறது, கள்ளுக்கடை திறக்கப்படுகிறது. தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் இதையும் செய்கிறேன் என்று சொன்னால் நான் ஒன்றைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தாய்மார்களின் கண்ணீரைத் துடைப்பது என்பது எப்படி இரண்டுக்கும் பொருந்தும். எதற்காவது ஒன்றுக்குத்தானே பொருந்த முடியும். ஆகவே, இது சம்பந்தமான விளக்கம் என்ன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நீங்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக, அதாவது மதுவிலக்கு கொள்கை இருக்கலாமா வேண்டாமா என்பது சம்பந்தமாக ஒரு வெகுஜன வாக்கெடுப்பு—ஒரு ரெஃபரேண்டம் நடத்துவதாகச் சொன்னார்கள். அப்படி ஒரு வெகுஜன வாக்கெடுப்பு நடத்த முடியுமா? இந்தியாவினுடைய அரசியல் சட்டத்தில் அதற்கு இடம் இருக்கிறதா? இருந்தும் ஏன் சொன்னார்? எப்படியும் பேசுவதில் தன்னைக் காட்டிலும் கெட்டிக்காரர்கள் யாரும் இருக்க முடியாது என்று நிரூபிக்க வேண்டும் என்பதற்காக அப்படி அவர்கள் பேசினார்களே, தவிர அப்படி ஒரு ரெஃபரேண்டம் வைத்தார்களா? அது மட்டும் அல்ல, காஞ்சிபுரத்திலே பேசுகிறபோது கூட நமது முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—பத்திரிகைகளிலே கூட வந்திருக்கிறது. சப்ஜக்ட் டு கரெக்ஷன். இதிலே பேசுகிறபோது

சொன்னார்கள். குடித்தவனை ஜாமீனில் எடுக்க வந்தவனையும் கைது செய்ய வேண்டும் என்று நான் போலீசுக்கு உத்தரவு இட்டேன் என்று சொன்னார்கள். ஜாமீன் எடுப்பது குற்றம் என்று சட்ட விரோதம் என்று எந்தச் சட்டப் பிரிவிலாவது இருக்கிறதா? ஜாமீன் எடுப்பது எப்படி தப்பு ஆகும்? எப்படி அதை முதல் அமைச்சர் சொன்னார்? அப்படி அவர் சொன்னதற்குக் காரணம் குடிப்பது என்பது அவ்வளவு பாவம் அவருக்கு. ஆகையினால் அந்தக் காரியத்திற்கு துணை போகக் கூடாது, அவனையும் பிடி என்று சொன்னார்.

சட்டவிரோதமான காரியத்திற்கு ஜாமீன் கொடுப்பது தப்பு என்று சொல்லி போலீசை சட்ட விரோதமாக கைது செய்யச் சொல்வது முதலமைச்சர் சட்ட விரோதமான காரியத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதுதானே பொருள். ஆகவே, இதுபோன்ற அபத்தங்கள் எல்லாம் நடைபெறுகின்றன என்பதைச் சொல்லிக் கொண்டு கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நம்முடைய நாவலர் அவர்களும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் அண்ணா சமாதியின் முன் நின்று, நாங்கள் மதுவிலக்கு கொள்கையை அமல் நடத்துவோம் என்று வீரசபதம் எடுத்தார்கள். ஆனால், இன்றைக்கு என்ன நிலைமை என்று கேட்டால், நாங்கள் மதுவிலக்கு கொள்கையை அமல் நடத்துகிறோம் என்று சொல்லிக்கொண்டு, இப்படி இந்த மாதிரி காரியங்களில் ஈடுபட்டிருப்பது, நான் பிரம்மச்சாரி என்று சொல்லி விட்டு, ஒரு பெண்ணுக்குத் தாலி கட்டுவது போல் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஓட்டைப் படகுகளில் பயணம் செய்து கரையேற முடியும் என்று நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள்.

அடுத்து, சாராயக் கடைகளையும், கள்ளுக் கடைகளையும் ஏலம் விடப்போகிறோம், டெண்டர் விடப்போகிறோம் என்று சொல்லுகிறீர்கள். இந்தப் பாட்டில் சிஸ்டம் மூலமாக தனி நபர்கள் கொள்ளை அடித்து தங்கள் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவே இது இருக்குமோ என்கிற சந்தேகம் மக்கள் மத்தியில் பரவலாக எழுந்திருக்கிறது. ஆகவே, அதை தடுக்க, கேரளாவில் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக இவைகள் எல்லாம் கொடுக்கப்படுவதைப்போல, டெல்லியிலே இந்திய சிவில் சப்ளைஸ் மூலமாக இவைகள் சப்ளை செய்யப்படுவதைப் போல, இங்கேயும் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாகப் படித்து வேலை இல்லாது இருக்கிற இளைஞர்களுக்கு கொடுக்க வேண்டும். அப்படி இல்லாது தனி நபர்கள் சாராயக் கடைகள், கள்ளுக் கடைகள் எல்லாம் ஏலம் எடுத்து கொள்ளை அடிக்கின்ற ஒரு வாய்ப்பாக இதனை உருவாக்கக் கூடாது என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.





இவ்வளவுக்குப் பிறகும், ஒரு புரட்சிகரமான காரியம் செய்கிறார்கள். என்னவென்று கேட்டால், ஒரு கோடி ரூபாயை மதுவிலக்குப் பிரச்சாரத்திற்கு ஒதுக்குகிறார்கள். ஒரு புறம் கள்ளுக் கடைகள் திறப்பு, ஒரு புறம் சாராயக் கடைகள் திறப்பு, ஒரு பக்கத்தில் 25 வயது நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒரு பக்கத்தில் பெர்மிட் வழங்கப்படும் என்று ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. இவ்வளவையும் செய்துவிட்டு, ஒரு கோடி ரூபாயை மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்காக ஒதுக்குகிறார்கள் என்று சொன்னால், எப்படி அவர் குடித்துக்கொண்டே, குடிக்காதே என்று நடிப்பாரா? பிரச்சாரம் செய்வாரா? ஆகவே, இந்த 1 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்பது ஒரு கொள்ளைக்கு வழி வகுக்கிறது என்று நான் சொல்ல விரும்புகிறேன். கடுமையாக குற்றம் சுமத்துகிறேன். "It is nothing but political Hypocrisy" என்று நான் இந்த நேரத்திலே துணைத் தலைவர் மூலமாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு.)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புகை பிடிக்கக்கூடாது என்று இன்று மத்திய அரசும் கூட ஒரு கட்டளையிட்டு, அந்த பெட்டிகளில் எல்லாம், "Smoking is injurious to health" என்று தான் போட்டிருக்கிறார்கள். அதைப்போன்றுதான் இதுவும்.

**திரு. துரைமுருகன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்கிறேன். தாராளமாக பிரச்சாரம் செய்யுங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. அரசவைக் கவிஞர் இருக்கிறார். பத்துப் பாட்டு எழுதச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் இருக்கிறார். அவரைக் கொண்டு குடிக்க வேண்டாம் என்று பிரச்சாரம் செய்து நடிக்க வைத்து படம் எடுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை.

**திரு. அ. ரகுமான்கான்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினை ஒருபுறம் தள்ளாடிக் கொண்டே இருக்கட்டும்; தமிழகத்தில் இருக்கிற அடுத்த மிக முக்கியமான பிரச்சினை என்னவென்றால் வறட்சி சம்பந்தமான பிரச்சினைதான். இன்றைக்குத் தக்க நேரத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நீங்கள் சொல்கிறீர்கள். அதை நான் மறுக்கிறேன். ஏனென்றால் மாநில புள்ளி விவரத் துறை இது பற்றி அரசுக்கு 4, 5 மாதங்களுக்கு முன்பே தகவல் தந்திருக்கிறது. அந்தத் தகவல் முன்கூட்டியே கொடுக்கப்பட்டதாக எனக்கு தகவல் இருக்கிறது. அது தவறாக இருந்தால் அமைச்சர் அவர்கள் சொல்லலாம். அது மட்டும் அல்ல, அந்த அறிக்கைகளை இந்த அவையிலே நீங்கள் தெளிவாக வைத்

டும் இருக்கலாம். ஆனால் அவைகள் எல்லாம் வைக்கப்பட
வில்லை. அது மட்டும் அல்ல. இந்தப் பிரச்சினை திடிரென்று
ஒரு நாள் காலையில் ஒன் பைன் மார்னிங் என்று சொல்வார்கள்-
அப்படி திடிரென்று முதல்வர் அவர்களுடைய கண்ணில் பட்ட
செய்தி அல்ல. ஏற்கெனவே 5, 6 மாதங்களாக, கிட்டத் தட்ட
நவம்பரிலிருந்து, இந்த வறட்சி நிலைமை குறித்து முதல்வர் அவர்
களுடைய கவனத்திற்கும் சர்க்காருடைய கவனத்திற்கும் கொண்டு
வரப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 11-00].

ஆனந்தவிகடன் பொன்விழாவில் கூட முதல் அமைச்சர் அவர்
கள் வராததற்கு சொல்லப்பட்ட காரணம் வறட்சி நிலையைப்.
பார்ப்பதற்காக அவர்கள் வட ஆற்காடு மாவட்டம் போகிறார்கள்
என்று சொல்லப்பட்டிருந்தது. ஆகவே சர்க்காருக்கு தெரியாது
என்பதல்ல. ஆனால் ராஜ்யசபாவில் இது சம்பந்தமாக, தமிழ்
நாட்டில் வறட்சி இருக்கிறதா என்ற கேள்வி எழுப்பப்பட்ட
போது மத்திய அரசில் இருக்கக்கூடிய மத்திய அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள். தமிழ்நாடு சர்க்காரிடமிருந்து அப்படிப்பட்ட ஒரு
கடிதம் எங்களுக்கு வரவில்லை என்று. கால் அட்டென்ஷன்
கொடுத்திருந்தார்கள். திரு. முரசொலி மாறன் எம்.பி.,
மற்றுமுள்ள அனைத்துக் கட்சிக்காரர்களும் கொடுத்திருந்தார்
கள். அப்படி ஒரு தகவல் வரவில்லை என்று அன்று அப்போது
சொன்னார்கள். இன்று இயற்கை காரணமாக வறட்சி என்று
சொல்கிறார்கள்.

நான் அரசை குற்றம் சுமத்த விரும்புகிறேன். இயற்கையாக
வறட்சி ஒரு பக்கம் என்று சொன்னால் நீங்கள் செயற்கை வறட்
சியை உருவாக்கியிருக்கிறீர்கள். ஆப்பரேஷன் டிஸ்கனெக்ஷன்
விவசாயிகளிடம் மின் கட்டண பாக்கி இருக்கிறது என்று சொல்லி
அதற்காக நீங்கள் ஏதோ மகத நாட்டு மன்னன் மீது மருத
நாட்டு மன்னன் படை எடுத்ததுபோல் விவசாயிகள் பேரில் படை
எடுத்து அவர்களது மின்இணைப்பைத் துண்டித்ததன் காரணமாக
பல லட்சக்கணக்கான ஏக்கர்கள் வறட்சியாகி இருக்கின்றன. ஆக
இப்படி ஒரு செயற்கைப் பஞ்சத்தை ஒரு புறத்தில் உருவாக்கியிருக்
கிறீர்கள். ஒரு பக்கத்தில் இயற்கைப் பஞ்சம், இன்னொரு
பக்கத்தில் செயற்கைப் பஞ்சம். இவ்வளவையும் செய்துவிட்டு
அந்தப் பிரச்னைக்கு பரிகாரம் காணும் விஷயத்தில் மத்திய
அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறீர்களா? தாக்கீது கொடுத்திருக்
கிறீர்களா? காம்ப்ரிஹென்சிவ் மெமராண்டம் அனுப்பியிருக்கிறீர்
களா? மத்திய அரசு என்ன நடவடிக்கைகளை நீங்கள் கேட்டு
[illegible] போய் விட்டது? [illegible]



இல்லையென்றால் நாடு என்னவாகும்.?
வேண்டாமா? அப்படி பொழுதையெல்லாம்
நீங்கள் தூங்கியிருக்கிறீர்கள். நல்ல கெடுத்ததுடன் தானும் கெட்
தூங்கிக் கெடுத்தவன் நாட்டைக் கெடுப்பதோடு தானும்
டான் என்று சொல்வது போல் நாட்டைக் நிலையை மத்திய
கெடக்கூடாது. ஆகவே வறட்சிபற்றிய சொல்லவேண்டுமென்று கேட்டுக்
அரசுக்கு தெளிவாக எடுத்து.
கொள்கிறேன்.

அடுத்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏமாற்று வேலை
கள் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. நான் ஆதாரத்
தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உணவு நிலைமை பற்றி
நமது நாவலர் அவர்கள் ஒரு திட்டம் வருவதாகச் சொன்னார்கள்.
என்ன திட்டம் தெரியுமா? 65 இலட்சம் டன் அரிசி கிடைக்கும்
வகையில் நெல் உற்பத்தியும், 22.80 இலட்சம் டன் சிறு தானியங்
கள் உற்பத்தியும், 4.34 இலட்சம் டன் பயறு வகைகள் உற்பத்தி
யும் ஆக, மொத்த உணவு தானிய உற்பத்தி 92.14 இலட்சம்
டன்களாக இருக்கும், அப்படியிருக்கிறவிதத்தில் ஒரு திட்டத்தை
உருவாக்கியுள்ளோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத்
திட்டம் எப்போது வரும்? பருவமழை பெய்யாமல் இருந்தால்.
பருவ மழை பொய்த்தால் தான் இந்தத் திட்டத்திற்கு உயிர்
வருகிறது. அதுவரை அது காகிதத்தில் தான் இருக்கும்.
பருவமழை தவறாது வருமானால் விளைச்சல் இருக்குமென்று.
சொல்வதற்கு ஒரு அரசாங்கமா? பருவமழை பொய்த்தால் தான்
இந்தத் திட்டத்திற்கு உயிர்வரும். அதுவரை என்ன நிலை?
இதைத்தான் கேட்க விரும்புகிறேன். பருவமழை இப்போது
எப்படி இருக்கிறது என்றால் இப்போது பருவமழை பொய்த்துக்
போயிருக்கிறது. அது எப்போது வரும்? இன்று நாடு முழுவதும்
மழை பெய்கிறது என்றால் மகான் ஆட்சியில் இருக்கிறார், மழை
பெய்கிறது என்று சொன்னார்கள். இப்போது வறட்சி இருக்
கிறது என்றால் யார் இப்போது ஆட்சியில் இருக்கிறார்கள்? பெரி
யாருக்கு விழா நடத்தும் நீங்கள், பகுத்தறிவுக் கொள்கையை
ஏற்றுக் கொள்கிறீர்கள், பரவாயில்லை.

அடுத்து, மத்திய அரசு கோதுமைக்கு குவிண்டால் ரூ. 117 ஆக
இருந்ததை இன்று ரூ. 130 ஆக ஆக்கியிருக்கிறது. அதேபோல்
இங்கே நெல்லின் விலையை உயர்த்த வேண்டும் என்று கேட்டிருக்
கிறோம். கேட்டால் மட்டும் போதாது. விலை நிர்ணயம்
செய்வது அக்ரிகல்சுரல் கமிஷன் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்
களில் உற்பத்தி செய்கிற செலவினங்களில் வித்தியாசம் இருக்
கின்றது. ஆகவே ஒரு முடிவிற்கு வர முடியாமல் இருக்கிறது.
நெல்லுக்கு அதிக விலைபெற்றாக வேண்டும். எங்களை விட
இந்த அரசுக்கு அதிக அக்கறை இருக்கிறது என்ற காரணத்தால்
அதற்கு பொறுப்பேற்று அதிக விலை பெற்றுத் தரவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று 'பஃபர் ஸ்டாக்'கிற்கு வியாபாரிகளிடம் இருந்தும் விவசாயிகள் மூலமாகவும் லெவி கொள்முதல் செய்யப்படுகிறது. எப்படி நெல்லுக்கு அதிக விலை மத்திய அரசுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறோமோ அதேபோல் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கொடுத்தால்தான் நியாயம். இல்லையென்றால் வியாபாரிகள் உங்களிடம் லெவி அளக்கும்போது நீங்கள் நிர்ணயிக்கிற விலை கொடுத்துவிட்டு பிறகு மார்க்கெட்டில் விற்கும்போது விலையை ஏற்றி ஒரு செயற்கை பஞ்சத்தை ஏற்படுத்துவிடக்கூடிய அபாயம் இருக்கிறது. இது குறித்து நமது நிதி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும்.

கூட்டுறவுத்துறையில் தேர்தலே கிடையாது. ஆகவே கூட்டுறவில் கூட்டாக கொள்ளைகள் நடக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவே கூட்டுக் கொள்ளை நடப்பதைத் தடுப்பதற்கு தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே இன்றைக்கு நீங்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். மோட்டார் பொருத்தப்பட்ட ஆயிரம் சைக்கிள் ரிக்ஷாக்களை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். நான் ஒன்றை இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். கை ரிக்ஷாக்களை முதன்முதலில் ஒழித்தது டாக்டர் கலைஞர் தான்; திராவிட முன்னேற்றக் கழகம் தான்; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான். திரு. டாங்கே அவர்கள் கூட அண்மையில் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மேற்கு வங்கத்தில் இடதுசாரி சர்க்கார் இருக்கிறது: ஆனாலும்கூட, அங்கே இந்த சைக்கிள் ரிக்ஷாக்கள் ஒழிக்கப்படவில்லை. அங்கே ஓட்டுகின்றவன், பீகாரியாக இருக்கிறான்; அதிலே ஏறி உட்காருகிறவன் வங்காளியாக இருக்கிறான் என் அந்தக் கருத்தை டாங்கே அவர்கள் சொன்னார்கள். சுயமரியாதை அடிப்படையில் தான் இங்கே தான் கை ரிக்ஷாக்கள் ஒழிக்கப்பட்டு, சைக்கிள் ரிக்ஷாக்கள் தரப்பட்டன. இது கலைஞர் அவர்கள் காலத்தில்தான். மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்கள் கொடுப்பதால் பிரச்சினை தீர்ந்துவிடாது. எல்லோருக்கும் நீங்கள் அந்த மோட்டார் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்கள் தர வேண்டும். மதுவிலக்குப் பிரசாரத்திற்காக ஒதுக்கப்பட்டத் தொகையை, இந்த ஏழை எளிய மக்களுக்கு பயன்படும் வகையில் மோட்டார்கள் பொருத்தப்பட்ட சைக்கிள் ரிக்ஷாக்களை கொடுப்பதற்கு செலவழிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.



இன்னொரு அற்புதமான வேலை இந்தத் திட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், நீர்ப்பாசனத்தைப் பற்றியது. நீர்பாசனத்தைப் பற்றி மந்திரிகள் எல்லாம் பேசினார்கள். திரு. குண்டு ராவ் அவர்களோடு பேசினார்கள். முதலமைச்சர் அவர்களும் பேசினார்கள். மத்திய சர்க்காருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினார்கள். ஆனால், அதைப் பற்றி ஒரு அறிக்கை வேண்டாமா? ஒரு குறிப்பு வேண்டாமா? ஆனால், நான் இன்னொன்றையும் சொல்ல முடியும். இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை. கட்டளைக் கால்வாய் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இப்போது அது என்னவாயிற்று? அதைப் பற்றிய குறிப்பு இங்கே இருக்கிறதா என்றால் இல்லை.

அடுத்து, இன்னொரு முக்கியமான பிரச்னை. முதலமைச்சர் அவர்கள் கேரளாவிலிருந்து தண்ணீர் கொண்டு வரப் போகிறேன் என்று சொன்னார்கள். மேற்கே நோக்கி ஓடுகின்ற அந்த 8 ஆறுகளின் தண்ணீர், கடலிலே கலக்கின்றது, வீணாகப் போகின்றது. அப்படி வீணாகப் போகும் தண்ணீரைத் தமிழகத்திற்கு பயன்படும் முறையில் பேச்சுவார்த்தைக்காக கேரளா போகிறேன் என்று சொன்னார்கள். அதைப் பற்றி பத்திரிகைகளிலே மிகப் பெரியதாகப் போடப்பட்டது. 1,500 டி.எம்.சி. தண்ணீர் கடலிலே வீணாகக் கலக்கின்றது என்றும், அதிலே 83 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்தால் மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்கள் பயனடையும்என்று சொன்னார்கள். ஆனால், அதைப்பற்றி ஒன்றும் இதிலே குறிப்பிடவில்லை.

அது மட்டுமல்ல. இதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்று கேட்டால், 6-வது திட்ட காலத்திலே பெரும் பாசனத் திட்டங்களுக்கும், நடுத்தர பாசனத் திட்டங்களுக்கும் என ஒதுக்கியுள்ள ரூபாய் 150 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய திட்டங்களுக்கு அந்தப் பணம் ஒதுக்கப்படவில்லை. இந்த 150 கோடி ரூபாயோடு, சிறுபாசனத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருப்பது 18 கோடி ரூபாய். இது திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், பட்ஜெட்டின் கடைசி பாராவிலே ரிப்பேருக்காக செலவழிக்கப்படும், மாடர்னைசேஷனுக்காக செலவழிக்கப்படும் என்று சொன்னால் என்ன அர்த்தம்? பெரியாறு, வைகை அணைக்கட்டுகளிலே நீர்க்கசிவு இருக்கிறது, அதற்கு சிமெண்ட் பூசப் போகிறோம், காண்ட்ராக்ட் விடப்போகிறோம், அதன் மூலமாக சரி செய்யப்போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், ஒதுக்கப்பட்ட இந்தத் தொகை எதற்காக? நீர்ப்பாசனத்திலே புதிய திட்டங்களுக்காக இந்தத் தொகை செலவழிக்கப்போவதில்லை. மாறாக, ரிப்பேர் செய்வதற்காக செலவழிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதற்குப் பெயர் சாதனையா?

இன்னொன்றையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பேச
ஆரம்பித்து 35 நிமிடங்கள் ஆகிவிட்டன. இன்னும் 10 பேர்
களுக்கு மேல் பேச வேண்டும்.

**திரு. அ. ரகுமான்கான் :** நான்தான் ஆரம்பித்திருக்கிறேன்.
கொஞ்சம் அதிக நேரம் கொடுக்க வேண்டும். மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே பெரிய
தொழிற்சாலையைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த
மந்திரி அவர்கள் இங்கே இருக்கிறார்கள். இதிலே என்ன சொல்லப்
பட்டிருக்கிறது என்றால், மதுரை மாவட்டத்திலே அரசுத் துறை
யிலே மூன்றாவது சிமெண்ட் ஆலையை நிறுவப் போகிறோம்
என்று சொல்லியிருக்கிறார்கள். அது என்ன நிறுவப்பட்டிருக்
கிறதா ? இல்லை . மியர் லெட்டர் ஆப் இன்டென்ட். அதை
ஒரு சாதனையாகச் சொல்லியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல.
சேலத்திலே ஸ்டீல் பிளாண்ட் கலைஞர் அவர்கள் காலத்
திலே கொண்டு வரப்பட்டது. அதை இந்திரா அம்மையார்
அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்த சேலம் ஸ்டீல் பிளாண்
டிலே இன்றைக்கு 10,000 பேர்கள் வேலை செய்கிறார்கள்.
இன்றைக்கு அங்கே அந்த ஸ்டீல் பிளாண்ட், ரோலிங் மில்லாக
மாறியிருக்கிறது. இன்றைக்கு அங்கே தொழிலாளர்கள்
போராட்டம் நடத்துகிறார்கள். திரு. ஜோதி பாசு கேட்கிறார் ;
திரு. பிஜு பட்நாயக் கேட்கிறார். ஆனால், அது துர்க்காபூரிலே
சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அது அவர்
களுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர
விரும்புகிறேன். நம்முடைய கைத்தறி நெசவாளர்கள் போராடு
கிறார்கள். நம்முடைய அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள்
தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக சட்டம் வரப்போவதாகச்
சொன்னார்கள். பினாமி நிலச்சட்டத்தை ஒப்புதல்கொடுப்பதற்கு
மத்திய சர்க்கார் இவ்வளவு காலதாமதப்படுத்தலாமா என்று
சொல்கிறார்கள். ஆனால், இந்தச் சட்டம் கொண்டு வருவதில்
ஏன் இவ்வளவு நாட்கள் ஆகிறது ? செலக்ட் கமிட்டிக்கு விட்டு,
எவ்வளவு நாள் ஆகிறது ? அதைத்தான் நான் கேட்கிறேன் ?
சுண்டைக்காய் போன்ற இந்தப் பிரச்னைக்கு மாநில சர்க்கார்
இவ்வளவு காலம் எடுத்துக்கொள்ளும் போது, மத்திய சர்க்கார்
பல மாநிலங்களில் உள்ள பிரச்னைகளை கவனிக்க வேண்டி
யிருக்கிறது. அவர்களுக்காக நான் வக்காளத்து வாங்கவில்லை.
பினாமி நிலங்களை ஒழிப்பதில் கருத்து வேறுபாடும் இல்லை,
தொழிலாளர் பாதுகாப்பிற்காக உள்ள சட்டத்தை
கொண்டு வருவதற்கு என்ன தயக்கம் ? அதற்கு என்ன காரணம்
சொல்கிறார்கள். இன்னும் செலக்ட் கமிட்டியில் இருக்கிறது.



[முற்பகல் 11 10]

அதுமட்டுமல்ல. இன்னொன்று முக்கியமான சம்பவம்
குமாரபாளையத்தில் நடந்த சம்பவம். அங்கே இருக்கக்கூடிய
எஸ்.எஸ்.எம். பிராசசிங் யூனிட்டிலே மஸ்டர் ரோல் கிடையாது.
டைம் கார்டு கிடையாது, ஈ.எஸ்.ஐ. கிடையாது. இது யார்
என்று கேட்டால் திரு. சுப்பிரமணியம் செட்டியார். நம்முடைய
முதல் அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நம்பு
கிறேன். நம்முடைய நாவலர் அவர்களுக்கும் தெரியும் என்று
நம்புகிறேன். (குறுக்கீடு). ........

**திரு. இ. கணேசன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்
களே, அவையில் இல்லாதவர்களைப் பற்றிச் சொல்லக்கூடாது
என்று ஒரு மரபு இருக்கிறது........

**திரு. அ. ரகுமான்கான் :** ஆகவே இன்றைக்கு 'பாக்டரி லா'
விற்கு விரோதமாக காரியங்கள் நடைபெறுகின்றன. இவற்றை
இந்தச் சர்க்கார் பரிசீலிக்க வேண்டும். இன்றைக்கு சேஷசாயி
பேப்பர், கார்டு போர்டு, இருக்கிறது; அன்றைக்கு சிம்கோ மீட்
டர் பற்றிய விவகாரம். அங்குதான் ஏராளமான தொழில் தகராறு,
சிக்கல்கள் எல்லாம் இருந்து கொண்டிருக்கின்றன. 'காண்ட்ராக்ச்
சுவல் லேபர்' இன்றைக்கும் இருந்து கொண்டிருக்கிறது.
ஆனாலும் இன்றைக்கு புகளூர் சர்க்கரை ஆலைக்கு அவர்
எம்.டி.-யாக நியமிக்கப்படுகிறார். காரணம் அப்படிப்பட்டவர்
தேவை என்று நினைக்கிறாரோ அமைச்சர் அவர்கள் எனக்குத்
தெரியாது. அடுத்து முக்கியமான பிரச்சினை. நம்முடைய
தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இல்லை. ஆகையால்
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு
வருகிறேன். ஹவுசிங் போர்டு, ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு
ஊழியர்களின் பிரச்சினை. நந்தனம் ஆர்ட்ஸ் கல்லூரிக்கும்,
பல்லவன் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கும் தகராறு வரு
கிறது. அதை தடுப்பதற்கு போலீஸ் வருகிறது. போலீஸ்
என்ன செய்கிறது என்றால், ஹவுசிங் போர்ட், ஸ்லம் கிளீய
ரன்ஸ் போர்டு இருக்கக்கூடிய காம்பவுண்டுக்குள்ளே போய்,
அங்கே இருக்கக்கூடிய ஊழியர்களை, எம். டி.யி
னுடைய அனுமதியில்லாமல், அடித்து உதைத்து, காயப்படுத்து
கிறார்கள். இதை கண்டித்து அவர்கள் போராட்டம் நடத்து
கிறார்கள். அமைதியான முறையில் மவுன ஊர்வலம் வரு
கிறார்கள். உடனே நம்முடைய மரியாதைக்குரிய தொழிலா
ளர் இலாகா அமைச்சர் அவர்கள் நீங்கள் வருத்தப்படக்கூடாது;
உங்கள் மீது பட்ட அடி என் மீது பட்டது போல என்று சிவ
பெருமான் புராணத்திலே வருவது போல—புராணத்தைப் பற்றி
உதாரணமாகச் சொல்ல விரும்பவில்லை. ரகுமான்கானுக்கும்
புராணத்திற்கும் என்ன சம்பந்தம் என்று நண்பர்கள் கேட்க
லாம். பாரதியார் பாணியிலே சொல்வதென்றால், 'உன் கண்
ணில் நீர் வழிந்தால், என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி' என்று

சொன்னதைப் போல அமைச்சர் மாண்புமிகு திரு. இராகவானந்தம்
அவர்கள் சொன்னார். அவ்வாறு சொன்ன பிறகு, இன்றைக்கு
என்ன நிலைமை, அந்த ஊழியர்களுடைய நான்கு நாட்கள்
சம்பளத்தை பிடித்து விட்டார்கள். சம்பளம் என்பது பிராப்
பர்ட்டி ரைட், அதை பிடிக்கலாமா? அவ்வாறு பிடிக்கக்கூடாது
என்று கல்கத்தா ஹைகோர்ட்டிலே ஜட்ஜ்மெண்ட் வந்திருக்
கிறது. மதராஸ் ஹைகோர்ட்டிலே ஜட்ஜ்மெண்ட் வந்திருக்
கிறது. ஆகவே, அந்த நான்கு நாட்கள் சம்பளத்தை உடனே
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்
துக்கொள்ளுங்கள். நேரமாகிவிட்டது.

திரு. அ. ரகுமான்கான் : இன்றைக்கு காவல்துறையைப்
பொறுத்தமட்டில் மலிவு விலையில் உணவு பொருள்களை எல்
லோருக்கும் தரவேண்டும். அவ்வாறு தரவில்லையென்று மற்ற
வர்களுக்கும் வருத்தம் இருக்குமேயானால், அவர்களுடைய
சம்பளத்தை உயர்த்த வேண்டும். போராட்டம் நடத்திய
போது டிஸ்மிஸ் செய்யப்பட்டவர்களுக்கு எட்டு மாதம் சம்பளம்
தரப்படவில்லை. அது உடனே தரப்பட வேண்டும். மகளி
ருக்கு போலீஸ் பயிற்சி அளிக்கப்படும் என்று சொன்னார்கள்.
இன்றைக்கு எஸ்.ஐ. ஆகவும், பி.சி. ஆகவும். அறுபதுபேரைத்தான்
போட்டிருக்கிறீர்கள்,

கோவை மத்திய சிறையில் ஒரு சம்பவம். எனக்குக்கிடைத்த
தகவலை தெரிவிக்க விரும்புகிறேன். திருமதி சுப்புலட்சுமி
அவர்கள் இன்றைக்கு அங்கு இருக்கிறார்கள். அங்கே இருக்கக்
கூடிய சிறை அதிகாரிகள் அவர்களுடைய தாலியை கொடுத்து
விட்டுத்தான் உள்ளே போகவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்
கள். பூணுல் அணிந்து உள்ளே போனால், அந்த பூணுலை
கழட்டு என்று சிறைச் சட்டம் சொல்வதில்லை. ஏனென்றால்
அது 'சேக்ரட் திரட்டு'; அதைப்போலவே தான் தாலியும். அந்த
சிறைச்சாலையில் இந்தக்கொடுமை நடைபெற்றிருக்கிறது. இதை
சர்க்காரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன். இது
முறைதானா என்று சிந்தித்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்
டிருக்கிற சலுகைகள் மேலோட்டமாக சிறப்பாகத் தெரியலாம்.
58 வயதில் ஓய்வு பெற்று அதற்கு பிறகு 15 ஆண்டுகள் கழித்து 73
வது வயதில் இந்தச் சலுகைகளை கிடைக்கும்படி கொடுத்தால் அவர்
கள் செத்துசுடுகாட்டிற்குப் போகிற காலம் அது. எவ்வளவு பேர்கள்
உண்மையாகப் பெறமுடியும் என்பதைப் பார்க்கவேண்டும், அதுவும்



ஏற்கெனவே கொடுத்திருக்கிற சலுகைகளைத் திரும்பப் பெற்று
விட்டு இப்போது கொடுக்கிறீர்கள் என்றால் சரியாக இருக்குமா.
அடுத்து பயணச் சலுகைகள் என்றல் ப்புரபேஷன் பூர்த்தி செய்தவ
ர்கள் 240கிலோமீட்டருக்கு மேலே தான் போகலாம், அதுவும் ஒரு
தடவைதான்போகலாம், அதுவும் தமிழ்நாட்டிற்குள்ளே தான்போக
வேண்டும், ரயிலிலே தான்போகவேண்டும், பேருந்திலே போக முடி
யாது, அதுவும் 15 நாட்கள் எர்ன்ட் லீவ் எடுத்துதான்போகவேண்டும்,
இவ்வளவும் செய்தால் தான் அந்தச் சலுகை என்றால் என்ன
நியாயம்? ஆகவே ஏதோ அரசாங்க ஊழியர்களுக்கு சலுகை
செய்திருப்பதைப்போல் காட்டப்படுகிறதே தவிர வேறு
ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை
முடித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டிற்கான
நிதிநிலை அறிக்கையின்மீது ஒன்றிரண்டு கருத்துக்களைப் பேசு
கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்தமைக்காக நான் நன்றி கலந்த
வணக்கத்தை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு
முன்னாலே பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்
திரு. ரகுமான்கான் அவர்கள் பல்வேறு குறைபாடுகளைச் சொன்
னார்கள். புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலே இந்தியத்
துணைக் கண்டம் வியக்கும் அளவுக்கு ஊராட்சி ஒன்றிய ஆசிரி
யர்களை அரசுத் துறையினராக மாற்றியமைத்து இருக்கிறார்
கள். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தபோது
A யையும் B யையும் கூட இணைக்க முடியாதவர்கள் இங்கே
பல்வேறு குறைபாடுகளை சொல்கிறார்கள், என்கிறபோது பெரிய
வியப்பாக இருக்கிறது.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள். ஒன்றியங்களுடைய சேர்மன்
களுடைய கட்டுப்பாட்டில் இருப்பதால் பல்வேறு பிரச்சினைகள்
ஏற்படுகின்றன. எனவே அவற்றையெல்லாம் பரிசீலித்துப்
பார்த்து அவர்கள் சிரமப்படுகிறார்கள் என்பதை உணர்ந்த
புரட்சித் தலைவர் அவர்கள், அவர்களை அரசுத் துறையினராக
மாற்றியமைத்து இருக்கிறார்கள், அந்த முறையிலே நிதிநிலை
அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். திரு. ரகுமான்கான் பேசு
இறபோது நாகூரிலே முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதியை
நிறைவேற்றவில்லை என்று சொன்னார். புரட்சித் தலைவர்
, அவர்கள் பேசும்போது, நான் முஸ்லீம் நடைமுறைகளை ஆதரிக்
கிறேன். ஆனால் குர்ரானில் மற்றவர்களின் பொருள்களைக்
கையாடல் செய்தாலோ அல்லது தகாத தவறுகளைச்செய்தாலோ
அவர்களின் கரங்களைத்துண்டிக்க வேண்டும் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. அப்படிச் செய்தால் இன்று இருக்கின்ற பலரது
கரங்களை துண்டிக்க வேண்டியிருக்கும், அதனால் தான் அதை
[illegible] இல்லை என்றுதான் சொன்னார்கள். அரசு

துறையிலே இருக்கின்றவர்கள் பல்வேறு குற்றங்களைச் செய்கிறவர்கள், அரசியல்வாதிகளாக இருக்கிறவர்கள் பல்வேறு குற்றங்களைச் செய்கிறவர்கள் இவர்கள் மீது குர்ரானிலே, சொல்லப்பட்டிருப்பதைப் போன்று தண்டிக்க வேண்டுமென்றால் அவர்களுடைய கைகள் துண்டிக்கப்பட வேண்டுமென்பது பற்றி தன்னுடைய கருத்தைச் சொன்னார்கள். ஆனால் இங்கே திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். அவர்கள் ஆட்சியிலே இருந்தபோது என்ன நிலைமைகள் என்பதைப் பற்றி எண்ணிப் பார்க்க வேண்டும்.

தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது கிராமப்புறங்களிலே, பேருந்துகள் விடவில்லை. இன்றைக்குப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் கிராமங்களில் வாழ்கிற ஏழை எளிய மக்களுக்கு அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு பேருந்து வசதிகளைச் செய்து தரவேண்டுமென்ற முறையிலே கிராம மக்கள் நகரங்களுக்கு வரவேண்டும், கல்வியறிவு பெறவேண்டும், வசதிகளைப் பெற வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்தை உணர்ந்து பல்வேறு பேருந்துகளை விட்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது கார்ப்பரேஷனிலே 8 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது, நகரத்திலே தார் ரோடுகளிலே கூட கார்கள் போக முடியாதபடி இருந்தது. ஆனால் இன்றைக்குப் புரட்சித் தலைவர் ஆட்சியிலே கிராமப் புறங்களிலே பேருந்துகள் செல்கின்றன.......

**திரு. துரைமுருகன் :** திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக் காலத்திலே கார்ப்பரேஷன் நட்டத்திலே ஓடிக் கொண்டிருந்தது என்று சொல்கிறார்கள், இப்போது கார்ப்பரேஷன் லாபத்திலே போகிறதா என்பதை அவர்கள் விளக்க வேண்டும்.

(முற்பகல் 11–20)

**திரு. கு. அ. செங்கோட்டையன் :** துணைத் தலைவரவர்களே, பெட்ரோல் விலை ஏறுவதற்கு முன்னாலே இலாபம் காட்டியது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு 10 பிளஸ் 2 என்ற கல்வி முறையை வகுத்து, கிராமத்திலே இருப்பவர்கள் நல்ல முறையிலே கல்வியறிவு பெற வேண்டுமென்ற அடிப்படைத் தத்துவத்திலே ஆங்காங்கு இருக்கின்ற உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றித் தந்திருக்கிறது.



வேண்டும் என்பதற்காக இந்தியத் துணைக் கண்டத்திலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்திலே தன்னிறைவுத் திட்டம் அமலாக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமத்திலே இருக்கின்றவர்களுக்கு நல்ல பள்ளிக்கூடங்கள் இல்லை, அவர்கள் மரத்தடியில் அமர்ந்து கல்வி அறிவு பெறுகிறார்கள் என்பதை உணர்ந்து அதற்காக இந்த நிதியாண்டில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்கிறது.

கிராமத்திலே இருக்கின்ற மக்கள் நல்ல குடிதண்ணீர் பெற வேண்டும் என்பதற்காகப் பல்வேறு குடிதண்ணீர்த் திட்டங்களை உருவாக்கிக் கூட்டுக் குடிநீர்த்திட்டம் என்ற அடிப்படையில் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கிராமத்திலே இருக்கின்றவர்கள் கோழி வளர்க்கிறார்கள், அந்தக் கோழிகளுக்கு நோய் வருகிறது, அதற்காகப் பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோட்டில் கோழி நோய்க் குறியியல் ஆய்வுக் கூடம் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கிராமத்தில் இருப்பவர்கள் நல்ல குடிதண்ணீர் வசதி பெற வேண்டும் என்ற அடிப்படையில் பல்வேறு திட்டங்களை உருவாக்குகின்ற வகையில் நீர்ப்பாசன வசதிகளைச் செய்வதற்காக இந்த ஆண்டு 150 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இது பல்வேறு ஏழை எளிய விவசாயிகளுக்கும் நலம் பயக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு பல்வேறு சலுகைகளைச் செய்திருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த வரையில் 16 பைசா என்று முன்னர் மின் கட்டணம் இருந்தது. இந்த ஆட்சி வந்த பிறகு 5 ஏக்கர்களுக்குக் கீழே உள்ள சிறு விவசாயிகளுக்கு 12 பைசாவாக குறைத்திருக்கிறார்கள் ; ஐந்து ஏக்கர்களுக்கு மேலே இருப்பவர்களுக்கு 14 பைசாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்த பொழுது 13 பைசாவாக இருந்த மின் கட்டணத்தை 1 பைசா குறைக்க வேண்டுமென்று சொன்னபொழுது, பெருமாநல்லூரில் 13 விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டு, இன்றையதினம் அவர்களது நினைவாக ஸ்தூபிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 5 ஏக்கர்களுக்குக் கீழே இருக்கின்ற விவசாயிகள் நலம் பெற வேண்டுமென்பதற்காக 40 கோடி ரூபாய் தக்காவிக் கடன்களை ரத்து செய்திருக்கிறார்கள். இன்றைய தினம் சிறு விவசாயிகளாக இருக்கின்றவர்களுக்கு 60 கோடி ரூபாய் அளவிற்குப் பல்வேறு சலுகைகளைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நிதி நிலைமைக்கேற்ப இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு நல்ல பல திட்டங்களைச் செய்துக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறியக் கூடும்.

வனத்துறையைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால் காடுகள் அழிக்கப்படுவதால் மழை சரியாகப் பெய்யவில்லை என்பதற்காக, 45 கோடி ரூபாயை ஒதுக்கி வனத்துறை காடுகளை வளர்க்கின்ற திட்டங்களை வைத்து அந்தக் காடுகளின் மூலமாக இயற்கையாக நல்லமுறையில் மழை பெய்கின்ற வாய்ப்பைத் தரும் வகையில் புரட்சித் தலைவரவர்கள் திட்டத்தை வகுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

குடிசையிலே வாழ்கின்ற மக்கள் மின்னொளி பெற வேண்டும், குடிசையிலே வாழ்கின்ற ஏழை எளிய மக்களின் குழந்தைகள் வீதி விளக்கிலே சென்று படிக்கின்ற நிலைமைகள் மாற வேண்டும் என்பதற்காக குடிசையிலே இருப்பவர்கள் மின்னொளி பெற வேண்டுமென்பதற்காக 2,70,000 குடிசைகளுக்கு மின்னொளி வழங்கப்பட்டுள்ளது.

மின்னிணைப்பைப் பொறுத்தவரையில், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்றபொழுது, பல்வேறு பகுதிகளில் வசதி படைத்தவர்கள் பணத்தைக் கொடுத்து மின் இணைப்பு பெறுகின்ற நிலைமை இருந்தது. எட்டு கம்பங்கள், ஒன்பது கம்பங்கள் என்று போர்களைப் போட்டிருப்பவர்கள்கூட மின்சாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் அதற்கு முன்பு போடப்பட்ட மனுக்கள் பத்தாண்டுக் காலமானாலும்கூட பரிசிலிக்கப்படாமல் ஏழை எளிய விவசாயிகள் அல்லல் பட்டார்கள். இதை உணர்ந்த புரட்சித் தலைவரவர்களின் ஆட்சி அரசுப் பீடத்தில் ஏறிய பிறகு சீனியாரிட்டி என்ற முறையில் மின் இணைப்புக் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அன்றைய ஆட்சியில் தங்களுக்கு யார் வேண்டியவர்கள் என்ற அடிப்படையிலே பல்வேறு மின்னிணைப்புகள் கொடுக்கப்பட்டன; 16 கம்பங்கள் [illegible]திலே இன்றாலும் தங்களுக்கு வேண்டியவர்க[illegible]



றால் அவர்களுக்கு மின்னிணைப்பு கொடு என்று உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால் புரட்சித் தலைவரவர்கள் ஆட்சி யாராக இருந்தாலும் சீனியாரிட்டி அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்ற முறையைக் கொண்டு வந்து, தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் பலன் பெற வேண்டுமென்ற தத்துவத்தில் இந்த முறையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.

நம்முடைய ரகுமான்கான் பேசுகின்ற பொழுது, இந்த நிதி நிலை அறிக்கை கண் சிமிட்டுகிற கானல் நீர் என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், இந்தியப் பொருளாதாரம் தான் சிக்கிக் கொண்டிருக்கிற கானல் நீராக இருந்துக் கொண்டிருக்கிறதே தவிர, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலும் மலர்ந்த தாமரையாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லி, வாய்ப்பினை உருவாக்கித் தந்த தலைவருக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, 1981–82-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே என்னுடைய கருத்துக்களை மாமன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையிலே, இந்த ஆண்டினுடைய மொத்த வரவுகள் ரூபாய் 1,128·27 கோடி என்றும், செலவுகள் ரூபாய் 1,137.84 கோடி என்றும், நிகரப்பற்று ரூபாய் 9.57 கோடி என்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், ஆண்டின் இறுதி நிதிப் பற்றாக்குறை ரூபாய் 111.49 கோடியாகவும், ஆண்டின் இறுதிக் கையிருப்பு ரூபாய் 122.96 கோடி பற்றாக்குறையாகவும் இருக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பற்றாக்குறையினை இந்த அரசு இந்த ஆண்டிலே எப்படிச் சரிக்கட்டப் போகிறது என்கிற விவரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே இல்லை. மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறது. அதன் மூலமாக, எத்தனை கோடி ரூபாய் இந்த ஆண்டு அரசாங்கத்திற்கு வரப் போகிறது என்ற விவரம் இல்லை. அதைப் போல, சிறு விவசாயிகளுக்கு வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்கிறோம். விவசாயிகள் குறித்த காலத்தில் அசலைச் செலுத்துவார்களானால், வட்டியை நாங்கள் தள்ளுபடி செய்கிறோம் என்று சொல்கிற அதே நேரத்தில், அதன் மூலம் எத்தனை கோடி ரூபாய் அரசுக்குச் செலவு ஏற்படும் என்ற விவரம் இதிலே இல்லை. ஆகவே, ஏதோ அவசரத்திலே தயாரித்த அறிக்கையாக, அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்த அறிக்கையாக இருக்கிறதே தவிர, முறையாக, நிறையாக இல்லை என்பதை அவர்களுக்கு நான் முதலாவதாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்,

வளர்ச்சியை அடிப்படையாகக்கொண்ட நிதி நிலை அறிக்கையாக, Development oriented Budget ஆக இது இல்லையென்று சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள் தமிழகத்திலே தான் அதிகமாக இருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. இந்த நிதி நிலை அறிக்கையிலே, அந்த வறுமைக்கோட்டிற்குக் கீழேயுள்ள மக்களை உயர்த்த, உருப்படியான எந்த முயற்சியும் கொடுக்கப்படவில்லை. அரசாங்கம் முயற்சிக்கிறது என்ற குறிப்புகள் கூட இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழகத்தை எதிர்நோக்கியுள்ள கடுமையான பொருளாதார சிக்கலை இந்த அரசு எப்படி சமாளிக்கப்போகிறது என்ற விவரம் இல்லை. நாட்டிலே பெருகிவருகின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை இந்த அரசு எப்படி சந்திக்கப் போகிறது என்ற விவரம் இல்லை. மத்திய அரசாங்கத்தைக் குறைகாண்கின்ற போக்குதான் இந்த நிதிநிலை அறிக்கையிலே மீண்டும் சொல்லப் படுகிறது என்று கூற விரும்புகிறேன். தமிழகத்தின் தொழில் வளர்ச்சியைப் பொறுத்த வரையிலும் இந்த அரசு கடந்த ஆண்டு, 1980–81 ஆம் ஆண்டு, தொழில் வளர்ச்சிச் செலவினங்களுக்காக ரூ. 4 கோடியே 75 இலட்சம் ஒதுக்கியிருந்தார்கள். ஆனால், இந்த ஆண்டு செலவினத்தில், ரூ. 4.20 கோடியாக அது குறைக்கப்பட்டிருக்கிறது. அண்மைக்காலத்திலே, தமிழகத்திலே தொழில் துறையிலே தேக்க நிலை இருந்து வருவதை மாமன்றம் நன்றாக அறியும். எதிர் பார்த்த அளவிலே, தமிழகத்திலே தொழில்கள் தொடங்கப்படவில்லை.

அத்துடன், ஏற்கனவே உள்ள தொழில்களை விரிவாக்கம் செய்ய போதுமான மின்சாரம் கிடைக்கவில்லை. மின்சார உற்பத்தியிலே இந்த அரசு கடந்த காலத்திலே போதிய கவனம் செலுத்தாவிட்டாலும், இப்போது, ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட மொத்த நிதி ஒதுக்கீடான ரூ. 3,150 கோடியில், மின் உற்பத்திக்கு மட்டும் ஏறக்குறைய ரூ. 1,023 கோடி ஒதுக்கியிருப்பதற்காக, காலங்கடந்தாவது இந்த அரசு விழிப்புணர்ச்சியோடு செயல் படுகிறது என்ற காரணத்திற்காக, இந்த அரசை நான் பாராட்ட விரும்புகிறேன்.

எனினும், தேர்தல் காலத்திலே சொல்லப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் இந்த இரண்டாவது நிதி நிலை அறிக்கையிலே முழுமையாக நிறைவேற்றப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனாலுங்கூட, அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முனைப்பான முறையான முயற்சிகள் இந்த இரண்டாவது நிதிநிலை அறிக்கையில் இல்லை என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.



அதோடு இந்த நிதிநிலை அறிக்கையிலே, மின்சாரக் கட்டண உயர்வுக்கான சூசகமான அறிவிப்பு தெரிகிறது. அதே போல் பெட்ரோல், டீசலினுடைய வணிகவரி உயர்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தாலே, பஸ் கட்டண உயர்வு எதிர்காலத்திலே வர இருக்கிறது என்பன போன்றவைகள் எல்லாம், இந்த நிதி நிலை அறிக்கை, பொதுமக்களை, ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11-30]

இந்த அரசாங்கம் தாலிக்குத் தங்கம் கொடுப்பதாக தேர்தல் காலத்திலே சொன்னது. ஆனால் இன்றைக்கு மீண்டும் அதை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். தாலிக்குத் தங்கம் கொடுக்கும் முயற்சிக்கு 10 லட்ச ரூபாய்கள் ஒதுக்கீடு செய்திருப்பதாக நிதி நிலை அறிக்கையிலே குறிப்பு இருப்பதாக நான் காண்கிறேன். அந்த நேரத்திலே சென்ற ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே தாலிக்குத் தங்கம் வழங்குகின்ற முயற்சியிலே, நாட்டிலே இருக்கிற வேலையில்லாத பொற்கொல்லர்களின், பட்டியல் தயாரித்து அவர்களை கூட்டுறவு சங்க அமைப்பின்கீழ் கொண்டுவந்து அதன் மூலமாக தாலிக்குத் தங்கம் வழங்கும் முயற்சியினை அரசு மேற்கொள்ளும் என்று மாண்புமிகு நாவலர் அவர்கள் சென்ற நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் இந்த ஆண்டு அப்படி நிதி நிலை அறிக்கையிலே எவ்வளவு பேர்களுக்கு வேலை இல்லாத பொற்கொல்லர்களை இந்த கூட்டுறவு சங்க அமைப்பின்கீழ் கொண்டு வந்தார்கள் என்றும், இந்த தாலிக்குத் தங்கம் கொடுக்கும் முயற்சிக்கு எவ்வளவு செலவழிக்கப்படும் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்களானால் அது மிகவும் உதவிகரமாக இருக்கும் என்று நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் பற்றி விரிவாக விமர்சனம் செய்வதைவிட ஒரே வரியிலே விமர்சனம் செய்ய வேண்டுமானால், மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்ற பெயரிலே மதுவிலக்கை ரத்து செய்கின்ற நிதி நிலை அறிக்கை என்று குறிப்பிட விரும்புகிறேன். குடிப்பதற்கு அரசு பர்மிட் வழங்க இருக்கிறது. பாட்டில்களில் சாராயம் அடைக்கப்பட்டு உரிய கடைகளிலே, ஏலம் விடப்படுகின்ற கடைகளிலே விற்பதற்கு அனுமதி வழங்கப்படும். கள் இறக்குவதற்கு கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள். சாராயம், கள் தயாரித்தல் விற்பனை தொடர்பான திருத்தச் சட்டம் விரைவிலே வரும். ஆக இவ்வளவு அறிவிப்புகளை அடுக்கடுக்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லி, நம்பிக்கைகளை அழுத்தமான ரத்து செய்வதாகவிட்டு, மதுவிலக்கு கொள்கையிலே அழுத்தமாக கொண்டிருக்கிறது. மதுவிலக்கு சட்டத்தை ரத்து செய்வதாக கூறுகிறார்கள். இல்லை என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே

நான் கேட்டுக் கொள்கிறேன். மதுவிலக்கிலே இனி ரத்து
செய்வதற்கு என்ன இருக்கிறது. அது மட்டுமா? இன்னமும்
சொல்கிறார்கள். குடிப்பதால் விளையும் தீமைகளைப் பற்றிய
பிரச்சாரத்தைத் தீவிரமாக அரசு மேற் கொள்ளும். அதற்காக
முதல் தவணையாக ஒரு கோடி ரூபாய் செலவு செய்யப் போகி
றது. ஒரு புறம் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, மறுபுறம் தொட்
டிலையும் ஆட்டுகின்ற முயற்சியாக இது இருக்கிறது என்று
நான் சொல்ல விரும்புகிறேன்.

தமிழகத்திலே காங்கிரஸ் அரியாசனத்திலே இருந்த காலத்
திலே அந்தப் பொற்காலத்திலே மதுவிலக்கைத் தீவிரமாக அமல்
படுத்திய காரணத்தினாலே தான் ஏழை எளிய மக்கள் வாழ்
விலே மறுமலர்ச்சி ஏற்பட்டது. குடிசையிலே வாழ்கின்ற குப்ப
னும், சுப்பனும் தங்களுடைய பிள்ளைகளை பள்ளிகளிலே, கல்லூரி
களிலே படிக்க வைக்க முடிந்தது என்பதை நான் மிக அழுத்த
மாகக் குறிப்பிட விரும்புகிறேன். குடிசையிலே இருந்த மண்பாண்
டம், தகரக் குவளைகளெல்லாம் இன்றைக்கு ஓரளவுக்கு எவர்
சில்வர் பாத்திரங்களாக மாறி இருக்கின்றன என்று சொன்னால்
அது காங்கிரஸ் கட்சிக் காலத்திலே மதுவிலக்கைக் கொண்டு
வந்ததன் விளைவுதான் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.
அதுமட்டுமல்ல. ஏழை மக்களுடைய நகை நட்டுகளை, பண்டம்
பாத்திரங்களை அடகுக் கடைக்குப் போகாமல் இருந்ததற்குக்
காரணம் மதுவிலக்கை அன்றையதினம் காங்கிரஸ் கட்சி அழுத்த
மாக அமுல்படுத்தியது தான் என்று சொல்வதில் நான் மெத்த
பெருமையடைகிறேன். தமிழகத்தின் மேம்பாட்டுக்குக் காரணம்
மதுவிலக்கு தளர்த்தப்படாமல் இருந்ததே ஆகும். இந்த அரசு
கள், சாராயக் கடைகளைத் திறப்பதாலே கிராமப் பொருளாதா
ரம் சீர்குலைவதோடு மக்கள் ஒழுக்கம், பண்பாடு சீர் குலைந்து,
சட்டம் ஒழுங்கு சீர் குலையும் என்று நான் சொல்ல விரும்பு
கிறேன். இந்த அரசு இந்த நிதி நிலை அறிக்கையிலேயும் கடந்த
நிதிநிலை அறிக்கையிலேயும் தமிழகத்துக்கு எத்தனையோ நன்மை
களை செய்திருப்பதாக, செய்வதாக தம்பட்டம் அடித்தாலும்கூட
அத்தனையும், அரசு மதுக் கடைகளைத் திறக்கின்ற இந்த முயற்சி
யிலே, அந்தப் பாதகச் செயலாலே, குடிப்பழக்கம் என்றால்
என்னவென்றே தெரியாத ஒரு தலைமுறையை குடிக்கப் பழக்கு
கின்ற முயற்சியில், வருங்கால சந்ததியினர் வாழ்விலே இருள்
கவ்வும் என்று வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். ஏழை
எளிய மக்களை குறிப்பாக தாய்மார்களை நிரந்தரமாக கண்ணீரும்
கம்பலையுமாக செய்வது, சாராய கடைகளை திறப்பதிலே ஏற்படு
மென்றும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த மதுக்கடைகளை திறப்ப
தாலே அல்லது மதுவிலக்கு சட்டத்தை தளர்த்துவதாலே வரு
மானம் நிறைய வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
சொல்லியிருக்கிறார்கள். இதிலே வருமானம், நிறைய இருக்கும்
[illegible] போகின்ற மானம் அளவிட முடியாது.



டாக்டர் கே. சமரசம்: பாயிண்ட் ஆப் ஆர்டர், மதுவிலக்கு பற்றி
மாண்புமிகு காங்கிரஸ் நண்பர் சொல்லுகிறார்கள். அது அவருடைய
தனிப்பட்ட கருத்தா அல்லது காங்கிரஸ் கட்சியின் கருத்தா ஒன்று
இருளிலே மூழ்கும் மதுவிலக்கை இங்கே தளர்த்தப்படுவதாகக்
கூறினார்கள். இந்தியாவிலே இன்றைய தினம் இந்திரா காங்கிரஸ்
கட்சி ஆட்சி செய்யும் மாநிலங்களில் மதுவிலக்கு தளர்த்தப்பட்ட
நால் இருளிலே மூழ்கி இருக்கிறது என்பதை அவர் ஒத்துக் கொள்
கிறாரா? இன்றைய தினம் காந்தியவாதி என்று சொல்லுகிறோம்.
ராணுவத்துக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவு
செய்கின்ற நீங்கள் காந்தியவாதி இல்லையென்று சொல்லுகிறீர்
களா? அல்லது நேதாஜி சுபாஷ் வாரிசு என்று பேசுகிறீர்களா?
எது உண்மை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவையின்
துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்கின்ற இந்தக் கருத்து
என்னுடைய கருத்தா, காங்கிரஸ் பேரியக்கத்தின் கருத்தா என்று
டாக்டர் சமரசம் அவர்கள் கேட்டார்கள். நான் அவர்களுக்கு
மிகத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது என்னுடைய
கருத்து, இந்த மன்றத்திலே இருக்கின்ற காங்கிரஸ் பேரியக்கத்திலே
இருக்கின்ற உறுப்பினர்களின் கருத்து, காங்கிரஸின் சந்நிதானத்தி
லே இருக்கின்ற கடைசி தொண்டனின் கருத்து என்பதை நான்
அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள். காங்கிரஸ் ஆளுகின்ற
மாநிலங்களில் அமல்படுத்துகிறார்களா? உதாரணம் சொல்லட்டு
மா? குஜராத் மாநிலத்தில் அமல்படுத்துகிறார்கள். நீங்கள்
கேட்பீர்கள், ஏனைய மாநிலங்களில் அமல்படுத்தப்படுகிறதா
என்று. அதற்கும் பதில் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு
சம்பவத்தை இங்கே நினைவுபடுத்துவதில் தவறு இல்லை என்று
கருதுகிறேன். நான் கல்லூரியில் படிக்கின்றபோது, கல்லூரி மாண
வனாக இருந்தபோது, ஒரு மாணவன் சுருட்டுப் பிடிப்பான்.
இந்த இளம் வயதில் சுருட்டுப்பிடிப்பது சரியா என்று கேட்டால்,
அவன் உடனே கேட்பான் வில்சன் சர்ச்சில் சுருட்டு பிடிக்கவில்லை
யா நான் பிடிப்பது மட்டும் தவறா என்று. வில்சன் சர்ச்சிலை
உதாரணத்துக்கு எடுத்துச் சொல்பவன் அவரிடத்திலே இருந்த
எத்தனையோ நல்ல குணங்களை எடுத்துச் சொல்லியிருக்கலாம்.
ஆனால் அவன் இதை எடுத்துச் சொன்னது, வருந்தத்தக்கது.
அதைப்போல் பல்வேறு மாநிலங்களில் உள்ள நல்ல நிலைமைகளை
எடுத்துச் சொல்லாமல் இதைமட்டும் உதாரணமாகச் சொல்வது
வேதனைப்படத்தக்கதாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்
கிறேன். தமிழகம் தான் இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்
களுக்கு வழிகாட்டியாக இருந்து இருக்கிறது. ஆரம்பகாலம்
முதற் கொண்டு தமிழகத்திலே தான் முதன் முதலாக மதுவி
[illegible] கொண்டு வந்தோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர்
அவர்களிடத்தில் நான் சிறு விளக்கம் கேட்க விரும்புகிறேன். மது
விலக்கு தீவிரமாக அமல் நடத்த வேண்டும் என்பது
தமிழகத்தில் இருக்கிற இந்திரா காங்கிரஸ் கட்சியின் கொள்கையா
அல்லது அகில இந்தியாவிலும் இருக்கிற இந்திரா காங்கிரஸ்
கட்சியின் கொள்கையா? அல்லது அகில இந்திய அளவில் அவரவர்
களுடைய விருப்பப்படி கடைபிடித்தால் போதும் என்பது
கொள்கையா? காங்கிரஸ் கட்சிக்கு அகில இந்திய ரீதியில் ஏதே
னும் கொள்கை உண்டா அல்லது இடத்திற்கு இடம், நிலை
மைக்கு, நிலைமை அது மாறுபடும் என்பதா? விளக்க வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: நாம் அத்தனை பேருமே இந்த
மாமன்றத்துக்குப் பொறுப்புள்ளவர்கள், தமிழகத்திற்குப் பதில்
சொல்ல வேண்டியவர்கள். ஆகவே, தமிழகம் தான் இந்தியாவி
லேயே முதன் முதலாக மதுவிலக்கை அமல் படுத்திய மாநிலம்
என்பதிலே நமக்குப் பெருமை இருக்கிறது. தமிழகம் இதிலே
மட்டுமல்ல, பல்வேறு நிலைமைகளிலே அத்தகைய பெருமை
பெற்றிருக்கிறது. ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவுத்
திட்டம் கொண்டு வந்தோம். இலவசக் கல்வி அதிக அளவில்
கொண்டுவந்தோம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் தமிழகம்தான்
தொழில் துறையில் முன்னணியில் இருந்தது. இன்னும் சொல்
வேன், எங்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் இந்தியாவிலேயே
மின்சார உற்பத்தியை தமிழகம் அதிக அளவில் பெற்று இருந்தது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தான் கம்யூனிட்டி டெவலப்
மெண்ட் தமிழகத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதைப் பார்த்துத்
தான் மற்ற மாநிலங்கள் அதனைச் செய்தார்கள். ஆகவே மற்ற
மாநிலங்களைப் பின்பற்றி நடக்க வேண்டிய அளவிற்கு தமிழகம்
இன்னும் தாழ்ந்துவிடவில்லை என்பதை நான் இங்கே சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, உங்களுக்கு ஆதரவாக இன்னொன்றையும்
சொல்வேன். முன்பு அரசவைக் கவிஞராக இருந்த நாமக்கல்
இராமலிங்கம் பிள்ளை— சொன்னார்கள். தமிழன் என்றொரு
இனமுண்டு, தனியே அவர்க்கொரு குணம் உண்டு. "அமிழ்தம்
அவர்தம் மொழியாகும், அன்பே அவரது வழியாகும்." ஆகவே
தமிழனுக்கு என்று தனியாக ஒரு பண்பாடு இருக்கிறபோது,
ஏன் நாம் மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடாது
என்று கேட்க விரும்புகிறேன்.



இங்கே இருக்கிறது.
மூதறிஞர் ராஜாஜி அவர்கள் படம் இங்கே இருக்
பெரும் தலைவர் காமராஜர் அவர்களுடைய படம் இங்கே இருக்
கிறது. பேரறிஞர் அண்ணா அவர்களின் படம் இங்கே இருக்
கிறது. இத்தகைய பெரிய தலைவர்களையெல்லாம் எந்த ஒரு
மாநிலமும் நாட்டுக்கு அளிக்கவில்லை. என்பதிலே இருவேறு
கருத்துக்கு இடம் இருக்க முடியாது என்று நான் நினைக்கி
றேன். இந்த மூன்று தலைவர்களுமே மதுவிலக்குக் கொள்கையில்
எவ்வளவு தீவிரமாக இருந்தார்கள் என்பதை நாம் அறிவோம்.
தேசப் பிதா காந்தியடிகளைக் கூட நாம் விட்டுவிடலாம்.
அண்ணாவின் வழி நின்று ஆட்சி நடத்துகிறோம் என்று சொல்கி
றீர்களே உங்களைக் கேட்கிறேன் பேரறிஞர் அண்ணா அவர்கள்
தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மதுவிலக்கை
தீவிரமாக அமுல் படுத்துவேன் என்று சொன்னார்கள். நீங்கள்
அண்ணா வழியில் செல்கிறீர்களா அல்லது அவர் காட்டிய வழியில்
இருந்து பிறழ்ந்து விட்டீர்களா, பிரிந்து சென்றுவிட்டீர்களா?
ஆக, வாதங்கள் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். மது
விலக்கு கொள்கையால் ஏற்படும் தீமைகள் மிகவும் அதிகம்.
ஆகவே அரசின் வருவாய் பெருகவேண்டுமானால் அநாவசியச்
செலவுகளை தவிர்க்கவேண்டும். புதிய தொழிற்சாலைகளை
உருவாக்கவேண்டும். ஏழை எளிய மக்களை கள், சாராயத்தில்
மூழ்கச்செய்து அவர்களின் அறிவை மழுங்கச்செய்து அதன்மூலம்
கிடைக்கின்ற பணம் நமக்கு வேண்டாம். மது விற்பதால்
அரசுக்குக் கிடைக்கும் வருவாய் குஷ்டரோகியின் கையில்
இருக்கிற வெண்ணெய் என்கிற அளவில் கருத வேண்டு
மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அரசு மேற் கொள்ள
விருக்கின்ற இந்த மாற்றத்தின் மூலமாக எந்த நன்மைகள்
விளையும் என்பதை இந்த நிதி நிலை அறிக்கையின்
55 வது பக்கத்தில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "அரசு
மேற்கொள்ளவிருக்கும் இந்த மாற்றங்களின் மூலம் கள்ளச்
சாராயம் காய்ச்சுவோர் அனுமதியின்றி விற்பனை செய்வோர்
கள்ள மது நடமாட்டத்திற்கு உடந்தையாக இருப்போர்
ஆகியோரிடமிருந்து பொதுமக்களுக்கு உண்டாகும் இன்னல்கள்
விலகும் என்று அரசு எதிர்பார்க்கிறது. யாரை ஏமாற்ற இதைச்
சொல்லுகிறீர்கள்.

[முற்பகல் 11·40]

ஆகவே உள்ளபடியே அரசு தன்னைத்தானே ஏமாற்றுகிறதா
அல்லது மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக இப்படி
ஒரு சமாதானத்தைச் சொல்ல முற்பட்டிருக்கிறதா என்று
கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் கூட 'மத்திய
அரசு சிகரெட் பிடிப்பதினால் தீங்கு இல்லை' என்று சொல்லி
யிருக்கிறதே என்று சொன்னார்கள். நான் கேட்கிறேன்,
சிகரெட்டும் கள்ளும் ஒன்றாக முடியுமா ? சிகரெட் அறிவை
மழுங்கச் செய்யவில்லை; புத்தியை மயங்கச் செய்யவில்லை.
ஆகவே, சிகரெட்டையும் கள்ளையும் ஒன்றாகக் கருதுவது
எந்தவகையில் பொருத்தமாகும் ?

தேர்தல் காலத்திலே மதுவிலக்கு ரத்து பற்றி மக்களிடம்
நீங்கள் ஒன்றும் சொல்லவில்லை. அந்த ஏழை எளிய மக்கள்
உங்களை நம்பி வாக்களித்தார்கள். இப்போது மதுவிலக்கு
ரத்து அல்லது தளர்த்துகிறோம் என்று சொல்லி, அந்த
மக்களை எல்லாம் நீங்கள் ஏமாற்றுகிறீர்கள் என்று நான் இங்கே
குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நம்
முடைய முதலமைச்சர் அவர்கள், முன்னாள் இந்திய பிரதமர்
மொரார்ஜி தேசாய் பற்றிச் சொல்லும்போது ''காந்தியத்
திட்டங்களுக்கு அவர்கள் என் வழிகாட்டி' என்று குறிப்பிட்ட
தாகக் கருதுகிறேன். ஆனால் இப்போது அந்த மொரார்ஜி
தேசாய் அவர்கள் தமிழகத்தில் மதுவிலக்கு பற்றிக் குறிப்பிடும்
போது

'May God help M.G.R. The people would not forgive
M.G.R.'

என்று சொல்லியிருக்கிறார். அது இந்துப் பத்திரிகையில்
வந்திருக்கிறது.

விவசாயிகள் கடன்களைக் குறைக்கின்ற வகையில் அரசு,
ஐந்து ஏக்கர் அல்லது அதற்குக் குறைவான நிலத்தைச் சொந்த
மாகவோ அல்லது குத்தகையாகவோ பயிர் செய்யும் சிறு
விவசாயிகள் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்று
நிலுவையிலிருக்கும் குறுகிய காலப் பயிர்க் கடன்களில் ஏற்கனவே
செலுத்தாமலிருந்து, ஜூலை 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள்
30-ம் நாளுக்குள் திருப்பிச் செலுத்திவிட்டால் சாதாரண வட்டி
யுடன் தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும்; இதர விவ
சாயிகளுக்கு தண்ட வட்டி முழுவதும் தள்ளுபடி செய்யப்படும்;
சிறு உழவர்கள் வாங்கும் கடனை உரிய காலத்தில் திருப்பிச்
செலுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்கள்
கொடுக்க வேண்டிய கடன் தவணைகளை உரிய நாளுக்குள்
செலுத்தினால் வட்டியில் 2 சதவீதம் கழித்துவிடப்படும் என்று



இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதன்
மூலம் கடன் சுமையை குறைத்துவிட்டோம் என்று ஆட்சிக்
கட்சியினர் சொல்வது அவர்களுடைய பிரச்சாரத்திற்குப் பயன்
படுமே தவிர விவசாயிகளுடைய கடன் சுமையை இது குறைக்
காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் ஆளுநர் உரையிலே இதுபற்றி குறிப்பிடும்போது
''யானைப் பசிக்கு சோளப் பொரிபோல்'' என்று சொன்னேன்.
அதனால் ஆளும் கட்சியினருக்கு கோபம் வந்தாலும் வரலாம்.
ஆகவே, இப்போது அப்படிச் சொல்ல விரும்பவில்லை; ''பெரிய
மலையளவில் இருக்கிற சுமையில் கடுகு அளவு குறைத்திருக்
கிறது'' என்று சொல்லி, தேர்தல் கால வாக்குறுதியை இது
பூர்த்தி செய்வதாக இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன்.
அரசுக் கடன், கூட்டுறவுக் கடன், தனியார்க் கடன், பயிர்க்
கடன், சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று தேர்தல் காலத்
திலே சொல்லவில்லை; விவசாயக் கடன் முழுவதும் ரத்து
என்றுதான் சொன்னார்கள். அதை நம்பிக்கொண்டிருந்த
மக்களை இப்போது ஏமாற்றுகிறீர்கள்.

அது மட்டுமல்ல. தமிழ்நாட்டிலே இன்று பெருமளவில்
வறட்சி பாதித்திருக்கிறது. அதுபற்றி இதுவரையில் முனைப்
பான நடவடிக்கை எடுக்கவில்லை என்று இந்த அரசின்மீது நான்
குற்றஞ்சாட்டுகிறேன். மூன்று மாதங்களுக்கு முன்னாலேயே
இந்த துயர்தணிப்பு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அப்
போதே நானும் சொன்னேன், மற்றவர்களும் சொன்னார்கள்.
தமிழ் நாட்டில் வறட்சி கடுமையாக இருக்கும் என்று சொன்
னோம். ஆனால் அதைப்பற்றிக் கவலைப்பட்டதாகத் தெரிய
வில்லை. இப்போது சுற்றுப்பயணம் செய்த முதலமைச்சர்
வறட்சி கடுமையாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார். இந்த
வறட்சிப் பணிக்கு 75 கோடி ரூபாய் தேவைப்படும் என்றும்
கணக்கு சொல்லியிருக்கிறார். ஆனால் தமிழ்நாட்டின் வறட்சி
பற்றி பத்திரிகை நிருபர்களிடம் பேசும்போது மத்திய அர
சுக்கு இன்னும் வறட்சி பற்றிய அறிக்கை அனுப்பப்படவில்லை
என்று மத்திய அரசின் சார்பிலே சொன்னதாக நான் நினைக்
கிறேன். தமிழக அரசு வறட்சி பற்றி சில மாதங்களுக்கு முன்
னாலேயே நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்; தவறிவிட்டது.
மத்திய அரசின் கணிசமான உதவி இல்லாமல், மத்திய அரசின்
ஒத்துழைப்பு இல்லாமல் இந்த துயர்தணிப்புப் பணியைச் செய்ய
முடியாது. அப்படி இருக்கும்போது, இனிமேல் அறிக்கை அனுப்பி,
அவர்கள் நிபுணர் குழுவை அனுப்பி, எப்போது மக்களுக்கு நிவா
ரணம் அளிக்கப்போகிறார்கள் என்று தெரியவில்லை. அரசு
உரிய நேரத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை
வந்திருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக மதுரை மாவட்டத்திலே நான் சார்ந்திருக்கிற திருமங்கலம் தாலுகா, உசிலம்பட்டித் தாலுகா, இன்னும் பல தாலுகாக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இன்னும் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவிக்கப்பட வில்லை. 50 சதவீதத்திற்கு குறைவாக விளைச்சல் இருந்தால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படும் என்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டவையாக அறிவிக்கப்படவில்லை. இதுபற்றி நான் நம்முடைய முதலமைச் சருக்கும் எழுதியிருக்கிறேன்; வருவாய்த்துறை அமைச்சருக்கும் எழுதியிருக்கிறேன்; மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் எழுதி யிருக்கிறேன்; இந்த மன்றத்திலும் பல்வேறு சமயங்களில் நான் பேசியிருக்கிறேன். இருந்தபோதிலும் இன்னும் வறட்சிப் பகுதி என்று அறிவிக்கப்படவில்லை; அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை.

தமிழ்நாட்டில் வறட்சி மிகக் கடுமையாக இருக்கும். இப் போது குடிதண்ணீர் ஒரு குடம் 20 காசு, 30 காசு என்று விற் கிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஒரு விளக்கம். குடிதண்ணீர் 20 காசு, 30 காசுக்கு விற்கப் படுகிறது என்று சொல்கிறார்கள். எந்த இடத்தில் எப்போது விற்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்ல வேண்டும். ஏனென்றால் அப்படிப்பட்ட நிலைமை தமிழ் நாட்டில் இன்னும் வரவில்லை என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களின் குறிக்கீட்டுக்கு நன்றி. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை எந்தத் தொகுதி மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்களோ அந்த மதுரைத் தொகுதியிலேதான் விற்கப்படுகிறது. பத்திரிகை களிலே எல்லாம் செய்திகள் வந்திருக்கின்றன.



*திரு. எஸ். சிவராமன்: துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கே விற்கப்படுகிறது என்று கேட்டார்கள். என்னுடைய தொகுதியான சின்னசேலம் பகுதி யில் உள்ள சந்தைகளில் குடம் தண்ணீர் 25 காசு, 50 காசு என்றெல்லாம் விற்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவ ரவர்களே, சின்னசேலத்தில் விற்கிறார்கள் என்று சொன்னால் அதற்கு ஏதாவது ரேஷன் கார்டு கொடுக்கப்பட்டிருக்கின்றதா, அல்லது அவ்வாறு வாங்கியதற்கு ரசீது ஏதாவது கொடுக்கப் பட்டிருக்கிறதா? You must come with facts (கூச்சல், குழப்பம்).

*திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அங்கே ரேஷன் கார்டு கொடுக் கப்பட்டிருக்கிறதா என்று கேட்கிறார்கள். அல்லது வேறு ஏதாவது தஸ்தாவேஜுகள் இருக்கிறதா என்று கேட்கிறார்கள். அந்தக் கடைகளிலே தண்ணீர் கொடுப்பதற்கு ரசீது கொடுப்ப தில்லை என்று நினைக்கிறேன். ஆனால் தண்ணீர் விநியோகிப்ப தற்கும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தின் ஆட்சியிலே ரசீது பெறவேண்டும் என்று அமைச்சரவர்கள் சொல்வார்களேயானால் நாங்கள் ரசீது கேட்டு வாங்கிக் கொடுப்ப தற்குத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப குழந்தைவேலு: நான் ஒரு செய்தியை இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். சமீபத்தில் சில தினசரிப் பத்திரிகைகளிலே வேண்டும் என்றே இந்த அரசாங்கத்திலே இப்படிப்பட்ட மோசமான நிலைமை இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட வேண்டும் என்றும் அரசுக்கு களங்கம் உண் டாக்க வேண்டும் என்றும் செய்திகள் போடப்பட்டன. குறிப் பாக சேலம் மாவட்டத்தில் சங்ககிரி பகுதியில் ரேஷன் கார்டுகள் கொடுத்து தண்ணீர் விநியோகிக்கப்படுகிறது என்று கூடச் சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலைமை இல்லை. ஆனால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சிக்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சில தினசரிப் பத்திரிகைகள் வேண்டும் என்றே இப்படிப்பட்ட செய்திகளை நாளும் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் உண்மையில் அப்படிப்பட்ட நிலைமை இல்லை. நேற்றைய தினம் கூட நான் சேலம் சென்று வந்தேன். அங்கே இருக்கக் கூடிய அதிகாரிகளையும், மாவட்ட ஆட்சித் தலைவரை யும் சந்தித்து இதுபற்றி கேட்டேன். அப்படிப்பட்ட ரேஷன் கார்டு [illegible] எங்குமே கொடுக்கப்படவில்லை. ஆகவே எங்குமே

இப்படிப்பட்ட ரேஷன் கார்டோ, அல்லது வேறு கார்டுகளோ தண்ணீர் வினியோகிப்பதற்கோ அல்லது விற்பதற்கோ இந்த அரசாங்கத்தின் மூலம் வழங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் அதற்கு விளக்கம் கேட்டார்கள், ஆகவே அதற்கு திரு. சித்தன் அவர்கள்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர எல்லோருமே எழுந்து விளக்கம் சொல்லவேண்டும் என்று நினைப்பது சரியாக இருக்காது. (கூச்சல், குழப்பம்) திரு. சித்தன் அவர்களிடம் தான் அமைச்சரவர்கள் விளக்கம் கேட்டார்கள். அதற்கு சித்தன் அவர்களே பதில் சொல்லலாமே, ஆகவே அதைவிட்டுவிட்டு ஒவ்வொருவராக எழுந்து சந்தேகங்களைக் கேட்டால், எல்லோருடைய சந்தேகத்திற்கும் எப்படிப் பதில் சொல்ல முடியும்? மற்ற உறுப்பினர்களின் கருத்துக்களையும், சந்தேகங்களையும் அவர்கள் பேசுகின்றபோது சொல்லிக்கொள்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இப்போது ஒரே நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும்.

**திரு. அன்பில் தர்மலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போது ஒரு விளக்கம் சொன்னார்கள் அட்டை வழங்கப்படவில்லை என்று. நான் தங்கள் மூலமாக இந்த அவையின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். அதாவது தண்ணீர் விநியோகத்திற்காக அட்டை வழங்குகிற பேருராட்சியின் பெயர், வார்டு நம்பர், தெரு நம்பர், போன்ற விவரங்கள் இருக்கின்றன. கார்டு நம்பர் 2001, நிர்வாக அதிகாரி ஒவ்வொரு நாளும் எவ்வளவு குறிப்பிட்ட தண்ணீரை அந்தந்த தேதியிலேயே பைசல் செய்யவேண்டும் என்ற முறை இருக்கிறது. இதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்களிடம் கொடுக்க விரும்புகிறேன்.

[முற்பகல் 11-50]

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அருமை அண்ணன் அன்பில் அவர்கள் இங்கே ஒரு கார்டைக் கொடுத்திருக்கிறார்கள். அது ரேஷன் கார்டு அல்ல என்பதை அவர்கள் தெரிந்து கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அடையாளக்



கார்டு எனப்படும் ஐடெண்டிட்டி கார்டுதான் அது. அது எதற்காகக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால், அங்கே வரக்கூடிய கூட்டத்தை ரெகுலேட் செய்வதற்காகத்தான் கொடுக்கப்பட்டதே தவிர, ரேஷன் கார்டு அல்ல. ரேஷன் கார்டுகள் வழங்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கிற செய்தி தவறு. அது ரேஷன் கார்டு அல்ல. ஆகவே தயவு செய்து நான் அந்தப் பத்திரிகைகை நண்பர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களே இதற்கு ஒரு அவசியமான நல்ல விளக்கத்தை கொடுத்து, கொடுக்கப்பட்டிருப்பது ரேஷன் கார்டு அல்ல அடையாள கார்டுதான் என்று வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்தகைய ஒரு விளக்கம் தினசரிகளில் வரவேண்டும் என்றும் வேண்டிக் கொள்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சித்தன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள் திரு. சுந்தரராஜன் அவர்களும் பேச வேண்டும் என்று கேட்டார்கள். எல்லா உறுப்பினர்களும் பேச வேண்டும் என்று இப்படி கூச்சலிடுவது சரியல்ல. முறையும் அல்ல. இப்படி ஒவ்வொருவராக பேசிக் கொண்டிருந்தால், விவாதமே முடியாது. நான் அனுமதிக்காமல் யாரும் பேசக்கூடாது.

**திரு. துரைமுருகன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இந்த அடையாளக் கார்டைத்தான் ஏன் கொடுக்கிறார்கள்? பஞ்சம் இருக்கிறது என்றுதானே கொடுக்கிறார்கள்? ஆகவே அதை அடையாளக் கார்டு என்று மட்டும் சொல்லி—தவறான தகவலைத் தந்து அவையைத் திசைத் திருப்புகிறார் என்று.......(மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரேஷன் கார்டுகள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். அது ரேஷன் கார்டுகள் அல்ல. வெறும் அடையாளக் கார்டுகள் தாம் என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். அதைக் கொடுத்தது தவறு என்று குறிப்பிட்டுப் பேசுவதற்கு உங்கள் அனைவருக்கும் உரிமை இருக்கிறது. நியாம் என்று எடுத்துச் சொல்வதற்கு ஆளும் கட்சியிலிருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் குறிப்பாக இங்கே சொல்லப்பட்டது, அது அடையாளக் கார்டு என்பதுதான். மாண்புமிகு அன்பில் தர்மலிங்கம் அவர்கள் கொடுத்திருக்கிற இந்த கார்டிலும் அது 'அடையாளக் கார்டு' என்றே குறிப்பிடப் பெற்றிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் இனி தொடர்ந்து பேசலாம் என்று உங்கள் மூலமாக கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய பேச்சிலே மிக எச்சரிக்கையாகவும் தெளிவாகவும் குறிப்பிட்டேன். தமிழகத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை இதற்கு முன்னால் இல்லாத அளவுக்கு பெரும் அளவு தட்டுப்பாட்டில் வந்திருக்கிறது. சில இடங்களில் குடம் தண்ணீர் இந்தந்த விலையில் எல்லாம் விற்கப்படுகிறது என்று சொன்னேன்......

(மணியடிக்கப் பட்டது)

திரு. என். வி. என். சோமு : துணைத் தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும் போது, வேண்டும் என்றே அரசாங்கத்திற்கு களங்கம் கற்பிக்க வேண்டும் என்று சில பத்திரிகைகள் இப்படி செய்தி வெளியிட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். ஆனால் இந்து பத்திரிகையில் இந்த மாதம் 15 ஆம் தேதியன்று, முதல் பக்கத்தில் கட்டம்போட்டு குடிநீர் பஞ்சத்தைப்பற்றி செய்தி வந்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவதுபோல், ஏதோ சில பத்திரிகைகள் அல்ல. இந்துப் பத்திரிகை மிகப் பொருப்புள்ள பத்திரிகை. நூற்றாண்டு விழாவினை கொண்டாடிய பத்திரிகை. இன்னும் கேட்டால் ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்கும் பத்திரிகை. அந்தப் பத்திரிகையிலே இந்தச் செய்தி முதல் பக்கத்தில் கட்டம்போட்டு வெளிவந்திருக்கிறது. ஆகவே இது ரேஷன் கார்டு அல்ல அடையாளக் கார்டு என்று சொல்வது இந்தப் பிரச்னையை வேண்டும் என்றே திசை திருப்புவதற்காகவா என்று கேட்கவிரும்புகிறேன் ?

திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, இந்துப் பத்திரிகை மிகப் பொறுப்புள்ள பத்திரிகை. ஆனால் அமைச்சர் அவர்கள், (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அங்கத்தினர் திரு. சோமு அவர்களின் கேள்விக்கு அமைச்சர் அவர்கள் முதலில் பதில் சொல்லிவிடட்டும். நீங்கள் உட்காருங்கள். (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்துப் பத்திரிகை ஒரு பொருப்புள்ள பத்திரிகை என்று ஏற்றுக் கொண்டதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும் இந்த அடையாளக் கார்டுகள் கொடுக்கப்படுவது என்பது, ஏதோ புதிதாக இந்த வருடத்திலேதான் கொடுக்கப்படுகிறது என்று அல்ல. பல ஆண்டுகளாக திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலிருந்தே கூட இந்த அடையாளக் கார்டுகள் கொடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னை திருத்திக்
கொண்டதற்காக நன்றி. இந்தக் கார்டுகள் திராவிட முன்
னேற்றக் கழக காலத்திலே கொடுக்கப்பட்டதா இல்லையா என்ப
பது இங்கே எழுப்பப்பட்ட பிரச்னை அல்ல. இன்றைய
தினம் தமிழகத்திலே நிலவுகிற வறட்சியின் காரணமாக
கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. தமிழ்
நாட்டில் சேலம் மாவட்டத்தில் வெண்ணந்தூரில் குடம் ஒரு
ரூபாய்க்கு விற்கப்படுகிறது....

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அதை அரசாங்கம்
கொடுக்கவில்லை....

திரு. க. அன்பழகன் : அரசாங்கத்திற்கு அந்த** இல்லை..

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அப்படிச் சொன்னதை
நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** என்று சொன்
னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவு இடுகிறேன்.

*திரு. க. அன்பழகன் : அந்த வார்த்தையை எடுப்பது
பற்றி எனக்கு மறுப்பு கிடையாது. அரசாங்கத்தை அவமதிப்ப
தற்காக எந்த வார்த்தையையும் நான் சொல்லவில்லை.
அரசாங்கம், தண்ணீர் கிடைக்காதமக்களுக்கு தண்ணீர் கொடுக்கக்
கூடிய நிலையில் இல்லை. அப்படி இல்லாத காரணத்தால்
யார் யாரோ வண்டிகளில் கொண்டுவந்து தண்ணீர் விற்கக்கூடிய
நிலையில் வெண்ணந்தூரில் குடத்திற்கு ஒரு ரூபாய் என்று விற்கப்
படுகிறது. ராசிபுரம் பகுதியில் குடிநீர் வேண்டுமானால் ஐம்பது
பைசா கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதை,
நேற்று நான் சேலத்தில் இருந்தபோது அந்தப் பகுதியில் உள்ள
தோழர்கள் என்னிடம் சொன்னார்கள். இன்னும் பல பகுதி
களில் தனிப்பட்ட முறையில் விற்கப்படும் அந்தத் தண்ணீரை
வாங்கித்தான் குடிநீருக்குப் பயன்படுத்தவேண்டிய நிலை
இருக்கிறது. அரசாங்கம் விற்கிறதா என்று கேட்ட கார
ணத்தால் அரசாங்கம் அந்தத் திறமையோடு செயலாற்றவில்லை
என்பதற்காக நான் சொன்ன வார்த்தை. மக்களுடைய தேவை
யை நிறைவேற்ற அரசாங்கம் விலைக்காவது தண்ணீர்
கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து சில பகுதிகளில் கொடுக்கு
மானால் எப்படி மாநகராட்சியிலும் வேறுசில இடங்களிலும்
தண்ணீருக்கு கட்டணம் வைத்து வசூலிக்கிறோமோ அதேபோல்
மிக நெருக்கடியான ஒரு கட்டம் ஏற்பட்டால் அப்படியாவது

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்
கிணங்க அகற்றப்பெற்றது.

தண்ணீர் அரசாங்கம் கொடுக்குமானால் அது வேறு. அதை
தனிப்பட்டவர்கள் விற்பனை செய்யவேண்டிய நிலைமை,
அதை மக்கள் வாங்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள்.
என்றுதான் தெரிவித்தேன்.

மற்றொன்று. அமைச்சர் அவர்கள் முன்னாலிருந்தே
இங்கே வாதாடிக் கொண்டிருக்கிறார். அரசாங்கம் தண்ணீர்
பங்கீட்டுக்கொடுக்கிற காரியத்தில் ஈடுபடவில்லை என்று
வாதாடினார்கள். ரேஷன் கார்ட் இல்லையென்று சொன்னால்
பொருட்களை பங்கீட்டுத் தரவில்லை என்பதுதான் கருத்து.
ரேஷன் கார்ட் மூலம் அரிசி, பருப்பு போன்றவைகள் தரப்படு
கின்றன. அந்த ரேஷன் கார்ட் மூலம் தண்ணீர் தரப்படவில்லை
என்பதை மறுத்து யாரும் வாதாடவில்லை. தண்ணீரே கிடைக்
காத இடங்களில் ரேஷன் கார்டில் தரப்படுகிறது என்று
நண்பர்கள் சொன்னார்கள். அடையாள அட்டை, கார்ட் என்
றால் அது முகம் பார்ப்பதற்காக அல்ல. அடையாள அட்டைகள்
மூலம் தண்ணீர் பங்கிட்டு இருபது லிட்டர் தண்ணீர் ஒருவருக்கு
அல்லது இரண்டு குடம் தண்ணீர் என்று வரையறுக்கப்பட்டு
சங்ககிரியில் தரப்படுகிற முறை ஏற்படுத்தப்பட்டு அதை வாங்க
மக்கள் இன்று கூட்டமாக நிற்கிறார்கள். அடையாள அட்டை
என்றால் அதிகமான தண்ணீர் ஒருவருக்கு போகாமல் இருப்பதற்
குத்தான். ஆனால் அமைச்சர் அவர்கள் ஏதோ வறட்சியால்
மக்கள் பாதிக்கப்படாதது போலவும் தண்ணீர் தாராளமாகக்
கொடுப்பது போலவும் இங்கே மறுத்துப் பேசுவது உண்மையான
நிலவரத்தை எடுத்துக்காட்டுகிற வார்த்தையல்ல என்பதற்
காகத்தான் அந்தத் திறமை அரசாங்கத்திற்கு இல்லை என்று
நான் சொன்னேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொன்ன கருத்திலிருந்து
கொஞ்சம் மாறுபட்டு போயிருக்கிறார்கள். குறிப்பாக, சங்க
கிரியில் கொடுக்கப்பட்டது அடையாளக் கார்ட். அடையாளக்
கார்ட் கொடுப்பது என்பது இப்போது ஏதோ இந்த ஆண்டில்
கொடுப்பதல்ல. ஏற்கனவே பல ஆண்டுகளாக கொடுக்கப்பட்டு
வருகிறது. இரண்டாவதாக, இருபது லிட்டர்தான் என்று மாண்பு
மிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவ்ர் அவர்கள் சொன்னார்கள்.
அந்தக் கார்டில் கூட 20 லிட்டர் அல்லது இரண்டு குடம் என்று
அதில் போடவில்லை. அவர்கள் ஏதோ ஒருவர் சொன்ன
கருத்துக்களை வைத்துக்கொண்டு சொல்கிறார்கள். நேற்று
அவர்கள் சேலத்தில் என்னோடு இருந்தார்கள், நானும்



போயிருந்தேன். அவர்களும் வந்திருந்தார்கள். நேற்று கூட
மழைபெய்தது அவர்கள் கண்டுகளித்திருப்பார்கள் என்று நினைக்
கிறேன். வறட்சியைப் பொறுத்தவரையில் எடுக்கப்பட்டிருக்கிற
நடவடிக்கைகள் போர்க்கால நடவடிக்கைகளாக எடுக்கப்
பட்டு எங்கெங்கே எந்தெந்தப் பகுதிகளில் தண்ணீர் இல்
லையோ அங்கே உடனடியாகக் கொடுக்கப்பட்டு வருகிறது.
ஆனால் இதுபோன்ற திட்டங்களையெல்லாம் முன்பிருந்த
அரசாங்கங்கள் செய்யவில்லை. அப்படி செய்திருந்தால்
இப்படிப்பட்ட நிலைமைகள் கண்டிப்பாக உருவாகாது
என்பதைத்தான் இந்த நேரத்தில் நான் எடுத்துக்கூற
விரும்புகிறேன்.

**திரு. க. அன்பழகன் :** நல்லவேளை சேலத்தில் நேற்றைய
தினம் மழை பெய்தது ஓரளவு, அது எந்தளவு கிராம மக்களின்
குடிநீர் பிரச்னையைப் போக்கும் என்று தெரியாவிட்டாலும்
மழை பெய்ததால் நல்லவேளையாக அரசாங்கத்தைவிட மழை
யால்தான் ஏதாவது நன்மை கிடைக்கும் என்று நான் நம்பிக்கை
தெரிவிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நேற்று சென்னை
யில் அண்ணா நகரில் மட்டும் மழை பெய்தது.

[நண் பகல் 12—00]

**திரு. க. அன்பழகன் :** அண்ணா நகரில் மட்டும் மழை
பெய்தது என்று தெரிவிக்கிறார்கள். பெய்த அளவில் மகிழ்ச்சி.
அது எந்த அளவிற்கு நிவாரணம் அளிக்கப் போகின்றது என்பதிலே
எந்த மாறுபாடும் இல்லை. ஆனால், மக்களுக்கு குடி தண்ணீர்
கிடைப்பதிலே இருக்கின்ற கஷ்டத்தை, மிகக் கடுமையான நிலை
மையை சட்ட மன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லுகின்ற
போது, அந்தக் கடுமையான நிலைமையை மறுப்பதோடு, அர
சாங்கம் இந்தக் குடிநீர் பிரச்சினையை தீர்த்துவிட்டதுபோல்
மறுத்து, பேசுவதுடன் அடையாள கார்டுகள் வழங்கி, தண்ணீர்
கொடுக்கும் வழக்கம், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலே வழங்கியிருந்தாலும் சரி; இன்றைக்கு வழங்கி
னாலும் சரி, தண்ணீர் பங்கிட்டுக் கொடுக்க வேண்டிய நிலைமை
சங்கரி வட்டாரத்திலே உள்ளது என்பது அமைச்சர் அவர்களுக்
குத் தெரிந்திருக்கிறது, தெரிந்தும் அப்படிப் பங்கிடுவதை
'ரேஷன் அல்ல, ரேஷன் அல்ல' என்று வாதாடுவதில் அர்த்த
மில்லை என்பதைச் சொல்வதற்காகத் தான் நான் குறுக்கிட
நேர்ந்தது என்பதைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த குடிதண்ணீர் பிரச்சினையை பற்றிப் பேசுகின்றபோது நான் மெத்த பொறுப்புணர்ச்சியோடு தான் பேசினேன். இந்த அரசாங்கத்திற்கு களங்கம் கற்பிக்க வேண்டுமென்பது என் நோக்கமல்ல. ஆனால், தமிழகம் முழுவதும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலிலேயே உங்களுடைய தொகுதியைப் பற்றிப் பேசியிருந்தால் பரவாயில்லை. அமைச்சர் அவர்கள் அரசாங்கத்தினுடைய கருத்தை சொல்லிவிட்டார். அந்தக் கருத்தைத் தான் ஆதரித்தாக வேண்டும்.

**திரு. ப. தனபால்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே இப்போது என்னுடைய தொகுதி சங்கரியைப் பற்றி, அங்குள்ள மக்களுக்கு அடையாள கார்டுகள் மூலமாக குடிநீர் வழங்கப்படுவதாக விவாதம் நடைபெற்று, முடிவு பெற்றிருக்கிறது. அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே ஒரே ஒரு வார்த்தைப் பற்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கின்ற காரணத்தினால், அடையாள கார்டுகள் இந்த ஆட்சியில் மட்டும் கொடுக்கப்படவில்லை. இதற்கு முன்னாலும் கொடுக்கப்பட்டதுதான். * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் உங்கள் கருத்தை ஏற்கனவே சொல்லிவிட்டார்கள். முதலிலேயே நீங்கள் கேட்டிருந்தால், பேச வாய்ப்புக்கொடுத்திருப்பேன்

***திருமதி த. இராசாம்பாள்:** பேரவை உபத் தலைவர் அவர்களே, இங்கே குடிதண்ணீர் கிடைப்பது எவ்வளவு பிரச்சினையாக உள்ளது, அதை மக்களுக்கு விநியோகிப்பதில் எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் இங்கே பேசப்படுகிறது. அதை விட்டு விட்டு, 5 பைசா, 20 பைசா, 30 பைசாவிற்கு விற்கப்படுகின்றது என்று சொல்லப்பட்டது. அப்படி பேசுவதற்கு இடமில்லை. அதுவும், குறிப்பாக பெண்களுக்கு இதிலே எவ்வளவு சிரமங்கள் இருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்த ஒரு உண்மை. என்ற போதிலும், சேலம் மாவட்டத்தில் நேற்று மழை பெய்ததாக அமைச்சர் அவர்கள் மூலம் கேள்விப்பட்டேன். அதனால், ஆற்றிலே தண்ணீர் வந்துவிட்டதா? கிணற்றிலே தண்ணீர் ஊற்று எடுத்து விட்டதா? பைப்புகள் ரிப்பேர் செய்யப்பட்டு தண்ணீர் வர ஆரம்பித்து விட்டதா?....



சொல்ல வேண்டுமென்பதற்காகச் சொன்னேனே தவிர, வெள்ளம் வந்துவிடும்; குடிநீர் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று சொல்லவில்லை. ஆனால், இது ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாகும். நேற்று மழை துவங்கியிருக்கிறது; இது மீண்டும் தொடர வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாதப் பிரதிவாதம் எல்லாம் போதும். திரு. சித்தன்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடி தண்ணீர் பிரச்சினைப் பற்றி சொல்லுகின்ற நேரத்திலே, தமிழகத்திலே இப்போது கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கிறது, பல்வேறு இடங்களில் குடிதண்ணீர் விற்கப்படுகிறது என்பதை மெத்தப் பொறுப்புணர்ச்சியோடு சொன்னேன். நான் நடத்துகின்ற விவாதம் பற்றி பத்திரிகைகளிலே வந்து, தமிழகத்திலே உள்ள மக்கள் அதை உணர்ந்து கொள்வார்கள். இத்தோடு இந்த விவாதத்தை விட்டு விடுகிறேன்.

அரிசி விலை நாள்தோறும் உயர்ந்துக் கொண்டே போவது கவலையை அளிக்கிறது. பாதிக்கப்பட்ட வறட்சி பகுதிகளில் போதுமான அளவிற்கு நியாய விலைக் கடைகளைத் திறந்து, இந்தப் பகுதி மக்களுக்கு உணவுப் பொருள்களை மலிவுவிலையில், நியாயமான விலையில் கொடுக்க வேண்டும். நியாயமான முறையில் உணவுப் பண்டங்களை கூட்டுறவுக் கடைகளில் வழங்க வேண்டும் என்று சொல்லுகின்றபோது, அரிசி ஒரு சில நேரங்களில் மோசமாக இருக்கிறது. கெட்ட அரிசியாக, உளுத்துப்போன அரிசியாக, புழுக்கள் நிறைந்த அரிசியாக இருக்கிறது. உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான திருமங்கலத்திலே உள்ள, சிக்கனூர் அரசினர் மகளிர் விடுதியிலே, அங்கே தங்கிப் படிக்கின்ற பெண்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசியிலே புழுக்கள் நெளிந்து கொண்டிருக்கின்றன. கடந்த வாரம் அங்கே சென்ற நேரத்திலே அந்த விடுதியிலே இருக்கிற மாணவிகள், வார்டன் முதலிய அத்தனை பேரும் என்னிடம் கொடுத்தார்கள். ஏழைக் குழந்தைகள், படிக்கிற வயதிலே இருக்கின்றவர்கள், இவர்களுக்கு இவ்வளவு மோசமான அரிசி விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லி, இதை வழங்கிய உணவு பொருள் வழங்குத் துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, வருகின்ற காலத்திலே நல்ல அரிசி கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1981 மார்ச் 23

அடுத்ததாக, வரி பிரச்சினையைப் பொறுத்தவரை, இந்த அரசாங்கம் சென்னையைச் சுற்றி 30 கிலோ மீட்டர் வரை உள்ள இடங்களில் தற்போது விதித்துள்ள 10 சதவீதம் வணிகவரி மீதான மேல்வரியை, சர்சார்ஜை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெட்ரோல், டீசல் மீதான வணிக வரியை உயர்த்துவதையும் அரசு ரத்து செய்ய வேண்டும். இதன் மூலமாக இன்றைக்கு நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார் கள். டீசல், மீது வரி போடப்படுவதால் பஸ் கட் டணம் நிச்சயமாக உயரும். ஆகவே, டீசல், பெட்ரோல் மீது அரசு விதிக்க உத்தேசித்துள்ள வரியை ரத்து செய்ய வேண்டு மென்றும் கேட்டுக்கொள்கிறேன். சென்ற ஆண்டு அரசாங்கம். சைக்கிள் பாகங்கள் மீதான வரியை 6 சதவிதத்திலிருந்து 3 சதவீதமாக குறைத்தது. அண்டை மாநிலமான கர்நாடகம் சைக்கிள் பாகங்கள் மீதான வரியை முழுமையாக ரத்து செய் திருக்கிறது. அதனை முன்மாதிரியாக எடுத்து கொண்டு எஞ். சிய 3 சதவீத வரியையும் அரசு ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறு தொழில்களாக செய்யப்படும் தீப்பெட்டிக்கு தற்போது 2 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் விதிக்க படுகிற வரி விதிப்பை விட குறைவானது என்று ஒரு வாதம் இருந்தாலும், மற்ற மாநிலங்களில் அந்த மாநிலங்களில் செய்யப் படும் தீப்பெட்டிக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப் படுகிறது. நமது மாநிலத்தில் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகள் அங்கே செல்கிற நேரத்தில், விதிக்கிற 2 சதவீதத்தோடு, நம் முடைய மாநிலத்திலிருந்து வரும் தீப்பெட்டிகளுக்கு 5 முதல் 8 சதவீதம் வரை வரி விதிக்கப்படுகிற காரணத்தாலே சிறு தொழில் களால் செய்யப்படுகிற தீப்பெட்டிகளுக்கு நல்ல மார்க்கெட் இல்லாமல் அந்த தொழில் நசிந்து கொண்டிருக்கிற காரணத்தாலே 2 சதவீதம் வணிகவரியை அரசாங்கம் உடனடியாக ரத்துசெய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எரிசாராய ஊழல் சம்பந்தமாக உண்மை நிலையைக் கண்டறிய மத்திய அரசு விசாரணை கமிஷன் அமைப்பதற்கு எதிர்ப்பு தெரி க்கப்படுகிறது. அண்ணா திராவிட முன்னேற்ற கழகப் பொதுக்குழு கூட ஒரு கண்டன தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்களிலே முறைகேடுகள், ஊழல்கள் நடை பெறும் போது மத்திய அரசு விசாரணை கமிஷன் அமைப்பது என்பது ஏற்றுக்கொள்ளபட்ட ஒரு முறை ஆகும். நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய நண்பர் ஆட்சி மாலத்திலே நடந்ததை நினைவு படுத்த விரும்புகிறேன். கர்நாடக மாநிலத்திலே மதிப்பிற்குரிய தேவராஜ் அர்ஸ் அவர்கள் மீது அவர்களுடைய ஆட்சியின் மீது சாட்டப்பட்ட குற்றச் சாட்டு





நியமனம் செய்தார். மீது விசாரிக்க ஒரு விசாரணை கமிஷன் நியமனம் செய்தார்.
மத்திய அரசு சுப்ரீம் கோர்ட் நீதிப இதில் திருப்தி அடையாத மத்திய அரசு சுப்ரீம் கோர்ட் நீதிப
குரோவர் கமிஷன் குரோவர் அவர்களை நியமனம் செய்து குரோவர் கமிஷன்
அமைத்தது. மத்தியில் அப்போது ஆட்சியில் நாங்கள் சார்ந்
இருக்கிற காங்கிரஸ் இயக்கம் இல்லை. நமது மாண்புமிகு
முதல்வர் அவர்களால் காந்திய திட்டங்களுக்கு வழிகாட்டி
என்று சொல்ல பட்ட ஜனதா கட்சியினுடைய தலைவராக
இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் அப்போது பிரதமராக
இருந்தார். அவ்வாறு ஜனதா கட்சி நியமனம் செய்த போது
வாய் மூடி மவுனமாக இருந்த இந்த ஆட்சிக்கட்சி இன்றைக்கு தன் *
னுடைய கட்சிக்கு என்று வந்த உடனே தன்னுடைய * என்று
உங்கள் சின்னம் தான் இரட்டை இலை இரட்டை
நினைக்கிறேன். ஆனால் அரசியலிலே கூட விரும்புகிறேன்.
நிலை தான் என்பதை வருத்தத்தோடு தெரிவிக்க இன்னொரு
அண்ணாவின் பெயரால் ஆட்சி நடத்தும் உங்களுக்கு
சம்பவத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன் (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் இரண்டு நிமிடங் களில் முடித்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முதுகுளத்தூரில்.........................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கூறு வதற்கு அமைச்சர்கள் அவ்வப்போது பதில் சொல்வது வழக்கம். உறுப்பினர்களுக்கு உறுப்பினர் கள் பதில் சொல்வது என்று ஆரம் பித்தால் நாம் எப்படி அவையை நடத்த முடியும். சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் முதுகுளத்தூர் துப்பாக்கி சூடு நடைபெற்றதை விசாரிக்க அர சாங்கம் ரெவின்யூ போர்டு மெம்பரை நியமித்தது. ஆனால் எதிர் வரிசையில் பிளவு படாத திராவிட முன்னேற்ற கழகம் இருந்தது.

[பிற்பகல் 12–10]

திரு. பக்தவத்சலம் அவர்கள் உள்துறை அமைச்சராக இருந்தார். அப்போது பேசிய அண்ணா அவர்கள் ஒரு உதாரணம் சொன்னார் கள். இராமபிரான் சீதாபிராட்டியின் கற்பை சோதிக்க அக்னி பிரவேசம் செய்யச் சொன்னார் அதைப்போல் அரசாங்கம் நீதி

* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது)

விசாரணை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். அண்ணா வின் பெயரால் கட்சி நடத்துகிற உங்களைக் கேட்டுக் கொள் கிறேன், இது ஒன்றல்ல, இரண்டல்ல, நான்கு மாநிலங்கள் சம்பந் தப்பட்ட பிரச்சினை என்ற காரணத்தினால் நீங்களே மத்திய அரசாங்கத்தை வலுவிலே அழைத்து விசாரணை கமிஷன் ஏன் அமைக்கச் சொல்லக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

Ce ser's w fe must be above suspicion.

சீசருடைய மனைவி சந்தேகத்திற்கப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும். நீங்கள்தான் உங்கள் மடியிலே கனம் இல்லை என்று அன்றைக்கே சொன்னீர்களே. மத்திய அரசாங்கம் இந்த கமிஷன் அமைப்பதிலே தலையிடவில்லை, ஆனால், ஒன்றுக்கு மேற்பட்ட மாநிலங்கள் சம்பந்தப்பட்டிருப்பதால் கமிஷன் அமைக்கக்கூட இல்லை, அமைக்கலாமா என்று பரிசீலனை செய்கிறோம் என்று மத்திய அமைச்சர் டெல்லியிலே சொன்னதற்கு எத்தனை கோபம் வருகிறது. மத்திய அரசு தலையிடலாமா என்று கேட் கிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன். தமிழகத்திற்கு அரிசி வேண்டுமா மத்திய அரசாங்கம் வேண்டும்; வறட்சியா, மத்திய அரசாங்கம் வேண்டும், அதிக நிதி உதவியா மத்திய அரசு வேண் டும். (குறுக்கீடு). நான் என்ன சொன்னேன் என்றால் தமிழகத் திற்கு அரிசி அதிகம் வேண்டுமென்றால் மத்திய அரசாங்கம் உதவி வேண்டுமென்று சொல்கிறீர்கள். வறட்சி கடுமையாக இருக்கிறது, 75 கோடி ரூபாய் வேண்டுமென்றால் மத்திய அர சாங்கம் உதவி வேண்டுமென்று சொல்கிறீர்கள். நதி நீர்ப் பங்கீட்டிலே மத்திய அரசாங்கம் தலையிட்டு தீர்வு காணவேண்டு மென்று சொல்கிறீர்கள். ஒருங்கிணைக்கப்பட்ட மின்சாரப் பங் கீடு என்றால் மத்திய அரசாங்கம் உதவிக்கு வர வேண்டுமென்று சொல்கிறீர்கள். வேலைக்கு உணவு திட்டமா மத்திய அரசு உதவிக்கு வரவேண்டுமென்று சொல்கிறீர்கள். (குறுக்கீடு). ஆக உணவுப் பிரச்சினை, நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினை, ஒருங் கிணைந்த மின்சாரப் பங்கீடு, வேலைக்கு உணவுத் திட்டம் இவை களுக்கு எல்லாம் மத்திய அரசாங்கம் உதவிக்கு வரவேண்டும். எரிசாராய ஊழல், மத்திய அரசாங்கம் வரக்கூடாது. பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன நியாயம்? தங்கள் [illegible] மூலமாக நான் கேட்க விரும்புகிறேன்.   *   *   *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளியிலே நடக்கிறவை களைப் பற்றி எல்லாம் இங்கே வாதப் பிரதிவாதங்கள் செய்ய நான் அனுமதிக்கவில்லை. அதை எல்லாம் அவைக்குறிப்பி லிருந்து நீக்க வேண்டும்.



திரு. என். எஸ். வி. சித்தன்: [illegible]   *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாராக இருந்தாலும் சரி, யாராக இருந்தால் என்ன? அதற்கு விளக்கம் வேண்டாம்.

திரு. துரைமுருகன்: சென்ட்டர் ஸ்டேட் விவகாரம் எப்படி பேசக்கூடாது என்று சொல்லலாம்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் சென்டரோடு சம் பந்தப்பட்டவர் அவருக்கு நீங்கள் ஏன் அடியெடுத்துக் கொடுக்க வேண்டும்.   *   ?   *

திரு. என். எஸ். வி. சித்தன்: கண்காணிக்க வேண்டுமென்று அதிலே என்ன தவறு இருக்கிறது? அமைச்சர் சொன்னவுடனேயே கோபம் வந்து விடுகிறதே ஏன்? என்ன சொல்கிறார் என்றால்,   *   *   *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் ஏற்கனவே சொன் னேன், வெளியிலே சொன்னதைப் பற்றி இங்கே பேசி திரும்பத் திரும்ப அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்குமாறு செய்யாதீர்கள். இப்பொழுது அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்குகிறேன்.

திரு. பி. முசிறிபுத்தன்: தமிழ்நாட்டில் காங்கிரஸ் இயக்கம் நடக்கிறதா என்பதை அவர்கள் சொல்ல வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற வரிசை யிலே இன்றைக்குத் தமிழ்நாட்டிலே எதிர்க்கட்சியாக இருக் கின்ற நாங்கள் அரசாங்கப் பணி சரியாக நடக்கிறதா என்பதைக் கண்காணிக்கத்தானே எங்களை அனுப்பி இருக்கி றார்கள். கண்காணிக்க வேண்டுமென்று சொன்னவுடன் ஏன் கோபம் வருகிறது? அந்தக் கோபம் தேவையில்லை. மக்கள் எங்களை அனுப்பியிருக் கிறார்கள். கண்காணிக்கத்தானே

இந்த அரசாங்கத்தின் நிலை என்னவென்பதைச் சொல்ல வேண்டும். மத்திய அரசில் இன்றையதினம் இந்திய பிரதமராக இருக்கின்றவர்களை ஜனவரி மாதத்திலே மீனாட்சி என்று சொல்கிறார்கள். ஆனால் இன்னொரு அமைச்சர் சொல் கிறார்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதெல்லாம் வேண்டாம்
நிதிநிலை அறிக்கையி மீது பேசுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஜனவரி மாதத்திலே பேசிய
பேச்சுக்கும், மார்ச் மாதத்திலே பேசுகின்ற பேச்சுக்கும்
இடையில் ஆளுங் கட்சியிலே பெரிய வித்தியாசம் இருக்கி
கிறதே, இந்த இடைப்பட்ட காலத்திலே ஏற்பட்டது என்ன?
அதுதான் எரிசாராயப் பிரச்சினை. வேறு காரணம்
இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

இங்கே ஆட்சியில் இருப்பவர்களைப் பார்த்துக் கேட்
விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்திற்கு நீங்கள் நண்பர்கள்
அல்லது எதிரிகளா? இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டும்
நண்பர்களாக இருந்தால் நிச்சயமாக எங்களுக்கு மகிழ்ச்சி
ஆனால் மத்திய அரசோடு மோதித்தான் பார்க்க வேண்
மென்ற முடிவுக்கு வந்துவிட்டால் நான் தெளிவாகச் சொல்
விரும்புகிறேன். காங்கிரஸ் பேரியக்கம் வெள்ளையர்களை
எதிர்த்த இயக்கம். சூரியனே உதிக்காது என்று சென்
வெள்ளையனை எதிர்த்து வெற்றி கண்டவர்கள் நாங்கள்
(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்குத்தான் திரு
சித்தன் அவர்கள் தீவிரமாகப் பேசுகிறார்கள். காங்கிரஸ்
இயக்கத்தைப் பற்றிப் பேசுகிறார்கள். பேசட்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆகவே, இங்கேயிருக்கின்ற இந்த
அரசு மத்திய அரசை எதிர்க்குமேயானால் இதைச் சந்திக்க
நாங்கள் தயாராக இருக்கிறோம்.

இந்த அரசாங்கம் இந்த மாமன்றத்தின் மூலமாகத் தமிழகத்
திற்குக் கொடுத்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையானது
சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுக்கு
ஏழை எளிய மக்களுக்கு, தாய்மார்களுக்கு அல்லது அரசு
களுக்கு, என்.ஜி. ஓக்களுக்கு, இன்னும் சொல்லப்போனால்
எந்தச் சமுதாயத்திற்கும் நன்மை செய்வதாக இல்லை என்று
சொல்லி என்னுடைய உரையை நிறைவு ஆக்குகிறேன்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, மத்திய அரசை
எதிர்த்தால் பார்த்துக் கொள்கிறோம் என்று மிரட்டுகிறார்
கள். மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாதப் பிரதி
வாதங்களை அனுமதிப்பதில்லை. நினைத்த நேரத்தில்
எழுந்து பதில் சொல்லிக் கொண்டிருப்பதை அனுமதிப்பதில்லை.
கட்சித் தலைவராக இருக்கின்ற உறுப்பினரவர்கள், குறிப்பு
எடுத்து வைத்திருந்து, அவர்கள் பேசும்பொழுது பதில் சொல்
லலாம்.

[பிற்பகல் 12-20]

THIRU DURAI MURUGAN ; I am going to raise a point
of order. A Member has got a right to raise a point of order. You
know the Parliamentary practice.

MR. SPEAKER : Because I know the Parliamentary practice.
I say that there is no point of order.

திரு. துரைமுருகன் : நான் இந்த விவகாரம் பற்றி கேட்க
வில்லை. வேறு விவகாரம் பற்றிக் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேறு விவகாரம் என்ன
இருக்கிறது? நீங்கள் ஏன் புதிதாக ஒன்றை எழுப்புகிறீர்கள்?
ஏதாவது விவகாரம் இருந்தால் என் அறையில் வந்து கேளுங்
கள் அடுத்து, திரு எம்.ஆர். கோவேந்தன்.

* திரு. எம். ஆர். கோவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், பொன்
மனச் செம்மல், புரட்சித் தலைவரின் அண்ணாவின் அரசு
சார்பில், மாண்புமிகு நிதியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்
களால் இம் மாமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட, ஏழை,
எளிய, நடுத்தர மக்களின் இன்னலைத் தீர்த்த, 1981–82-ஆம்
ஆண்டின் நிதி நிலை அறிக்கையினை வரவேற்று, எனது பாராட்
டினைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மதுரை மாநகரில் ஒரு
சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கம் அமைக்க
கோடி ருபாய் செலவில் உலகத் முதல்வர் அவர்களைப்
முடிவு செய்துள்ள மாண்புமிகு தமிழ்நாட்டில்
பாராட்டுவதில் மகிழ்ச்சி அடைகிறேன். தமிழுக்கு, தஞ்சை
எந்த முதல்வரும் செய்யாத சாதனையாக அமைக்க வழி செய்த,
தரணியிலே தமிழ்ப் பல்கலைக் கழகம் அவர்களை, உலகெங்கும்
தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் என்றென்றும் பாராட்டுவார்
உள்ள தமிழர்கள் அனைவரும் பெயர் தமிழக வரலாற்றில்
கள். புரட்சித் தலைவர் இச்சீரிய செயலுக்கு, தமிழக
என்றென்றும் நிலைத்திருக்கும். பாராட்டுதல்களைத் தெரிவித்துக்
மக்கள் சார்பாக எனது
கொள்கிறேன்.

[திரு. எம். ஆர். கோவேந்தன்] [1981 மார்ச் 2

வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கும் மக்களின்
துயரைப் போக்குவதில், நிதிநிலையினை முட்டு கட்டையாகக்
கருதாமல், போர்க்கால முஸ்தீப்புகள் போல, அவசர நட
வடிக்கைகளை மேற்கொண்டு, குடிநீர், வடிகால் வாரியம்,
வேளாண்மைப் பொறியியல் துறை, நிலநீர் இயக்கம், ஆகிய
அமைப்புகள் கிணறுகளைத் தோண்டுதல், ஆழப்படுத்துதல்,
ஆகிய மாபெரும் பணிகளை மேற்கொண்டு குடிநீர்ப் பிரச்சி
னைக்குத் தீர்வு கண்டமைக்கு இந்த அரசை எவ்வளவு பாராட்
டினாலும் தகும்.

தமிழகத்தின் கல்வி வளர்ச்சிக்காக, 255·35 கோடி ரூபாய்
ஒதுக்கி இருப்பதும், சுமார் 1,650 ஆசிரியர்களுக்கு, வேலை
வாய்ப்புக்கு வழி வகுத்திருப்பதும், 250 பகுதி நேர கைத்
தொழில் பயிற்சி ஆசிரியர் பதவிகளை, முழுநேர பதவிகளாக
மாற்றியிருப்பதும், 500 தமிழ் ஆசிரியர் பதவிகளை உருவாக்கி
யிருப்பதும், இந்த ஆட்சிக்குக் கல்வி வளர்ச்சியில் உள்ள
அக்கறையைப் பெரிதும் எடுத்துக் காட்டுகிறது. பொதுவாக,
விஞ்ஞான அறிவியல் கூடத்திற்கான சாதனங்களை வாங்குவதற்
கும், பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், புதிய தொழில்
பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கும், முறைசாராக்
கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்தமைக்கும், தொழில்
நுட்பக் கல்வி வளர்ச்சிக்கும், அதிக முக்கியத்துவம் கொடுத்தி
ருப்பதற்கும், நான் பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன்.

இளைஞர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும்
பொருட்டு, மாவட்டங்களில் திறந்த வெளி விளையாட்டு
அரங்கம், ஊராட்சி ஒன்றியத்களிலும், கிராம விளையாட்டு
அரங்கம் அமைத்து, இளைஞர்களை விளையாட்டுத் துறையில்
ஊக்குவிக்கும் இந்த அரசினைப் பாராட்டுகிறேன்.

ஏழை, எளிய கிராமமக்கள் எளிதாக மருத்துவ வசதி
பெறும் வகையில், மருத்துவ ஊர்திகள் பிரிவுக்கென ஒதுக்கப்
படும் தொகையினை உயர்த்தி, கிராம மக்கள் அதிக
மருத்துவ வசதி பெற வழிவகை செய்த இந்த அரசினைப்
பாராட்டுகிறேன்.

மீன் பிடி துறைமுகம் கட்டுதல், புயல் பாதுகாப்பு
இல்லங்கள் கட்டித் தருதல், வழிகாட்டி விளக்குகள் அமைத்தல்
போன்ற பல்வேறு திட்டங்களை மீனவர் சமுதாயத்திற்காக
செய்துவரும் இந்த அரசினைப் பாராட்டுகிறேன். ஆழ்கடல்
மீன்பிடிக் கலங்கள் நான்கும். (மாண்புமிகு பேரவைத்
துணைத் தனலவர் தலைமை) பர்ஸினர் என்ற 45 அடி நீளமுள்ள
5 கலங்கள் வாங்குவதற்கு வழி வகை செய்திருப்பதோடு,
ஆண்டுதோறும் 10 கோடி மீன் குஞ்சுகளை நீர்நிலைகளில்
வளர்ப்பதற்கும் இதன் மூலம் மீன்குஞ்சு உற்பத்தியை 30 கோடி
யாக் ஆக்க, இந்நிதி நிலை அறிக்கை வழிவகை செய்திருப்பதை
பாராட்டுகிறேன்.



1981 மார்ச் 23] [திரு. எம். ஆர். கோவேந்தன்]

படித்த 1,000 கிராம இளைஞர்களுக்கு இரால வளர்ப்பில்
பயிற்சி அளிப்பதன் மூலம் வேலை வாய்ப்பு ஏற்படுத்துவதுடன்
அன்னிய செலாவணிக்கும் வழிவகுத்திருப்பதை பாராட்டுகிறேன்.

மின் உற்பத்தியில் எதிர்காலத் தேவைகளையும் கவனத்தில்
கொண்டு அடிப்படையான திட்டங்களைத் தயாரித்திருப்பதற்
கும், பெருந்தொழில் வளர்ச்சிக்கும், சிறு தொழில் வளர்ச்சிக்
கும், கிராமத் தொழிற் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து
செயல்படுவதற்கு இந்த அரசினை பாராட்டக் கடமைப்பட்டுள்
ளேன்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்திற்கு மத்திய அரசினால்
நியமிக்கப்பட்டுள்ள குழு தனது அறிக்கையினை விரைவில் சமர்ப்
பித்து, அத்திட்டத்தினை விரைவாக நிறைவேற்றித் தர எடுத்து
கொண்டிருக்கும் இந்த அரசின் முயற்சியினை வரவேற்கிறேன்.
இந்த சந்தர்ப்பத்தில் சென்னையிலிருந்து-இராமேஸ்வரம்
வரையிலான கடற்கரை ஓர தேசிய நெடுஞ்சாலை திட்டத்தை
விரைவு படுத்தி செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். சேது சமுத்திரத் திட்டம் செவ்வனே செயல்பெற
இந்தச் சாலைத் திட்டம் மிக மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்
றாகும்.

புரட்சித் தலைவரின் புகழ்பாடும் கிராமப்புற மக்களை
பிரமிக்க வைக்கும் கிராமத் தன்னிறைவுத் திட்டம் மேலும் விரிவு
படுத்தப் படுவது குறித்து பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.
கிராமப்புற வீட்டு வசதி திட்டத்தின் கீழ், ஏழை மக்கள் வீட்டு
வசதி பெற இவ்வாண்டில் 40,000 வீடுகள் கட்ட திட்டம் தீட்டி
யுள்ள அரசினை பெரிதும் பாராட்டுகிறேன்.

உடல் ஊனமுற்றோருக்கு உதவி செய்யும் பொருட்டு பல
திட்டங்களை அறிவித்தமைக்கும் குறிப்பாக உடல் ஊனமுற்ற
சிறார்களுக்கு இலவச பேருந்து வசதி அளித்தமைக்கும், இவ்வர
சின் நல்லெண்ணத்தைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.
வறிய கைம்பெண்களின் மக்கள் மேல் நிலைப் பள்ளியில் படிப்ப
தற்கும், அவர்களின் மகளிருக்குத் தாலிக்குத் தங்கம் கிடைக்க
வழிவகை வகுத்தமைக்கும், இந்த அரசினை பாராட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். இதேபோன்று மகளிர் குழந்தைகள் நல
னுக்கும், ஆதி திராவிடர் பழங்குடி மக்களின் நலனுக்கும் பல
ஆக்கபூர்வமான செயல் திட்டங்களை வகுத்தமைக்குப் பெரிதும்
பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களின் துயரினைப் போக்க பல திட்டங்
களையும், கைத்தறி நெசவாளர் வேலை, நிலைமை பல்வகை
விதித் துறைச் சட்டம் இயற்ற அரசு முன் வந்திருப்பதை எண்
ணற்ற ஏழை நெசவாளர் குடும்பம் வாழ்த்தி வரவேற்கின்றன
என்பதில் ஐயமில்லை.

சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் தொழிலாளர்களுக்கு மோட்டார் பொருத்தப்பட்ட 1,000 சைக்கிள் ரிக்ஷாக்களுக்கு நிதி உதவி அளிக்கும் திட்டமும் பாராட்டிற்குரியதாகும்.

வரலாறு காணாத வறட்சியினால் தமிழகம் பாதிக்கப்பட்டுள்ள இக்கட்டான நிலைமையிலும் கூட அரசு ஊழியர்களுக்கு வாரி வழங்கியிருப்பதை அரசு ஊழியர்கள் பெரிதும் பராட்டுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை. எந்த மாநில அரசும் செய்யாத விடுமுறை பயணப்படி, சலுகைகளை அளித்து மற்ற மாநிலங்களுக்கு தமிழகம் வழிகாட்டியாக விளங்குவது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

குடும்ப நலத் திட்டம் தமிழகத்தில் கொண்டு வந்தபோது தோன்றிய எதிர்ப்பையும் முழு அளவு செயல்படுத்த முடியாமையும் பொருட்படுத்தாது அரசு மேற்கொண்ட தீவிரப் பிரச்சாரத்தின் பயனாக இதன் தேவையை மக்கள் உணர்ந்து செயல்படத் தொடங்கி உள்ளனர் என்பதை தற்போது முடிந்த மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் அறிகின்றோம். அதுபோல கள்ளச் சாராயத்திற்கும், ஏழையர் கண்ணீருக்கும் முடிவு கட்டி மதுவிலக்கை தளர்த்தினாலும் தீவிரப் பிரச்சாரத்தின் மூலம் மக்களது மனதை மாற்ற முடியும் என்ற அசையாத நம்பிக்கை கொண்டு அதற்கென ஒரு கோடி ரூபாய் ஒதுக்கியதற்காக இவ்வரசினை பாராட்டுகிறேன்.

ஏற்கெனவே விவசாயிகளுக்கு 71 கோடி ரூபாய்களை ரத்து செய்த புரட்சித் தலைவர் அரசு, மேலும் 23 கோடி ரூபாய்களை தள்ளுபடி செய்கிறது என்ற இனிக்கும் செய்தி தமிழக விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்தது போலாகும். வட்டியையும் அபராத வட்டியையும் அறவே ரத்து செய்து வாங்கியகடனைத் திருப்பிக் கட்டினால் போதும் என்ற அரசின் முடிவு விவசாயிகளின் மீது இவ்வரசுக்குள்ள கருணையைக் காட்டுகிறது.

தமிழகத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ள இந்த நேரத்திலும் தமிழகத்தின் வருங்கால தேவைகளைக் கவனத்தில் கொண்டு ஆக்கப் பூர்வமான பல செயல் திட்டங்களை மிகத் தீவிர சிந்தனையோடு தெளிவாகச் செயல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏழை, எளிய திக்கற்றோர், மற்றும் நடுத்தர மக்களுடைய நல்வாழ்விற்காக தீட்டபட்டுள்ளமை குறித்து பெரிதும் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

சுருங்கக் கூறின் மாண்புமிகு தமிழக முதல்வர், பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவரின், அண்ணாவின் அரசின் நிதிநிலை அறிக்கை ஏழை மக்களுக்கோர் ஒளிவிளக்காக, திக்கற்றோருக்கு [illegible] காட்டியாக நடுத்தர மக்களுக்கோர் நல்ல வழிகாட்டி



யாக, தமிழகத்திற்கு ஓர் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குதாக அமைந்துள்ளது என்று கூறி இந்த அரசைப் பாராட்டி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[பிற்பகல் 12-30]

*திரு. கு. ரமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின்முன் நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1981-82-ஆம் ஆண்டிற்காக வைத்துள்ள நிதி நிலை அறிக்கை மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில முக்கியமான கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த அறிக்கையைப் படித்துப் பார்க்கிறபோது, இந்த அரசாங்கத்தின் கொள்கைப் போக்கில் ஒரு சிறு மாற்றம் தென்படுகிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்ட விழைகிறது. அதற்கு உதாரணமாகச் சொல்லவேண்டுமானால், சென்ற சனவரி மாதம் 21-ம் தேதி இருமன்றங்களும் கூடிய கூட்டத்தில்மேதகு ஆளுநர் அவர்கள் நிகழ்த்திய உரையைக் உங்களின் ஞாபகத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதன்பிறகு நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் நிகழ்த்திய உரையை கொஞ்சம் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கவர்னர் உரையில் 8-வது பாராவில் 'விலைவாசி ஏறுமுகத்தையும் அதைத் தொடர்ந்து பண வீக்க நிலை தொடர்ந்து இருப்பதையும் கண்டு, இவ்வரசு மிகவும் கவலை கொண்டுள்ளது. பண வீக்கம் ஏற்பட்டுள்ளபோது ஊதிய உயர்வுகளினால் உண்மையில் பயன் ஏற்படாது; அதற்கு மாறாக ஊதிய உயர்வு பணவீக்கம் என்கிற தீயை மேலும் வளர்ப்பதாக அமைந்து விடுகிறது. விலைவாசி உயர்வும் ஊதிய உயர்வும் ஒன்றையொன்று தொடர்ந்து வரும் ஒரு நச்ச வட்டமாகவே தோன்றுகிறது. என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அந்தக் கொள்கையைக் குறித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அன்றைக்கே விமர்சனத்தைக் கொடுத்து இருக்கிறது. அப்போது அது குறித்துத் தெளிவாகச் சொன்னோம். உழைப்பாளி மக்களுக்குக் கொடுக்கும்படியான ஊதிய உயர்வு, அதன் காரணமாக விலைவாசி ஏற்றம், அதைத் துரத்திக்கொண்டு சம்பள உயர்வு என்பது நச்சு வட்டம் என்று சொல்வது தவறு. அத்தகைய கருத்தை ஏகபோக முதலாளிகள், நிலச்சுவான்தார்கள் ஆகியோர்தான் சொல்வார்கள். அத்தகைய ஒரு கொள்கையை இந்திய அரசாங்கம்தான் நடைமுறைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றிக் கொண்டு இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையை, அந்தக் கொள்கையைத் தமிழக அரசு எடுத்துக்கொள்வது முறையாகாது. தமிழக அரசு அந்தக் கொள்கைக்கு தன்னை இரை

யாக்கிக் கொள்ளக் கூடாது என்று நாங்கள் தெரிவித்தோம்.
தமிழக அரசின் கொள்கை பாட்டாளிகளை, உழைப்பாளிகளை,
ஏழை எளிய மக்களைப் பாதுகாக்கவும் ஜனநாயகத்தைப் பாது
காக்கவும் வழிகோலுவதாக இருக்கவேண்டும். அப்படியில்லா
மல் இப்படிப்பட்ட உழைப்பாளி மக்களை நசுக்குவதற்குச் சாதக
மான கொள்கையாக இருக்கக்கூடாது என்று அன்றைக்கே மார்க்
சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மிகத் தெளிவாக எடுத்துச்சொல்லி
இருக்கிறது. தன்னுடைய விமர்சனத்தைக்கொடுத்து இருக்கிறது
என்பதை இங்கே நான் நினைவுபடுத்தி இப்போது நம்முடைய
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவைமுன் வைத்
துள்ள நிதி நிலை அறிக்கை மீது கூறியிருப்பதை தங்களின்
கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

"அகில இந்திய அளவில் ஏற்பட்டுள்ள இன்றியமையாப்
பொருட்களின் விலைவாசி உயர்வும், பண வீக்கமும் பயன்படுத்
தப்படவேண்டிய பொருள்களின் பற்றாக் குறையும் தமிழ் நாட்
டைப் பெருமளவுக்கு பாதித்துள்ளன". என்று குறிப்பிட்டு
விட்டு, 'தமிழகத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் ஏற்பட்டுள்ள
கொடிய வறட்சி நிலைமை' பற்றியும் கொஞ்சம் எடுத்துக்கூறி,
மாநில அரசு தனக்குக் கிடைத்துள்ள அதிகாரம், வாய்ப்புகள்,
வசதிகள், நிதி ஆதாரங்கள் ஆகியவற்றைக் கொண்டு இவை
களைச் சமாளிக்கவேண்டிய சூழ்நிலை இருக்கிறது என்றும்
சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இதனை மாண்புமிகு நிதி
அமைச்சர் அவர்கள் மிகுந்த கஷ்டத்தோடும், வேதனையோடும்
கூறியிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லவேண்டியிருக்கிறது.

மாநில அரசுகளுக்கு இருக்கிற அதிகாரங்கள் குறைவு, நிதி
ஆதாரங்கள் குறைவு, அவர்களுக்கு இருக்கும் வசதி வாய்ப்புகள
குறைவு, ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வரையரைக்குள்ளேதான்
செலவுகள் செய்யவேண்டியிருக்கிறது. மக்களுக்குப் பாதிப்பு
ஏற்படுகின்றபோது அவர்களுக்கு வாழ்வு அளிக்க இருக்கின்ற
நிதியை வைத்துத்தான் செய்யவேண்டியிருக்கிறது வறட்சியை
சாமாளிக்கவேண்டியிருக்கிறது. இதனைக் கஷ்டத்தோடு
எடுத்துச் சொல்லி ஒரு உதாரணம் தருகிறார். "மாநில
அரசுகள் வெறும் சுங்கம்பெறும் மாநகராட்சி மன்றங்களைப்
போல் மிக விரவாக மாறிவருகின்றன" என்று குறிப்பிட்டு
முன்பு தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த
மாண்புமிகு திரு. சி. என். ஏ. அவர்கள் நாடாளுமன்றத்தின்
உறுப்பினராக அங்கே இருந்தபோது பேசிய பேச்சையும் குறிப்
பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகும் ஒரு கருத்தைச்
சொல்கிறார். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டிய பொறுப்
பும், கடமையும், மாநில அரசுக்கு நேரிடையாக ஏற்படுவதால்,
அதற்குத் தேவையான அதிகாரங்கள் அனைத்தையும் அளிக்க
மத்திய அரசு முன் வரவேண்டும் என்ற வேண்டுகோளையும்
வைத்து இருக்கிறார்கள்.





இதிலே இருந்து நாம் நிலைமையைத் தெளிவாகத் புரிந்து
கொள்ள முடியும். மாநில அரசுகள் ஒரு கட்டுப்பட்ட எல்லைக்
குள்ளே இருந்துதான் இந்தப்பிரச்சினைகளைச் சமாளிக்க வேண்டி
யிருக்கிறது. அதற்கு ஆதரவாக சி.என்.ஏ. குறிப்பிட்ட கருத்
தைச் சொல்லியிருக்கிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் ராஜாஜி
அவர்கள் கூறியிருக்கிறார்கள். என்று மாநில அரசுகள் எல்லாம்
'சம்திங் லைக் குளோரிபைட் முனிசிப்பாலிட்டீஸ்'—நகராட்சி
மன்றங்கள் போல் இருக்கின்றன. அதற்கு அதிகாரங்கள் இல்லை
இப்போதும் அந்த நிலைமை இருப்பதால் நாம் ஏற்கெனவே
அப்படி பேசிய பெரும் தலைவர்களின் பேச்சுக்களை ஞாபகத்
திற்குக் கொண்டு வரவேண்டியிருக்கிறது.

அந்த நிலையில்தான் இந்த மாநில அரசு இருக்கிறது.
இப்படித்தான் மாநில அரசுகள் எல்லாம் இருக்கின்றன.
மத்திய சர்க்காரின் இத்தகையப் போக்கை எதிர்த்து, மக்களு
டைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் பெரும் பொறுப்பை ஏற்று
உள்ள மாநில அரசுக்கு சகல வசதிகளும் கொடுக்கப்படவேண்டும்.
சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டும், மாநிலத்தில்
இருந்து வசூல் செய்கிற மொத்த வருமானத்தில் 75 சதவீதத்
தொகையை மாநில அரசுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்
என்று கேட்கிறோம்; அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்று கேட்கிறோம். அன்று தான் மாநிலங்கள் மாநிலங்களாக
இருக்கும்; இல்லாவிட்டால் மாநிலங்கள் முனிசிபாலிட்டிகளாகத்
தான் இருக்கும் என்று சொல்கிறோம்.

அருமை நண்பர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் எல். எஸ். வி.
சித்தன் அவர்கள் குறிப்பிடும்போது எல்லா காரியங்களுக்கும்
நீங்கள் மத்திய அரசையே நாடுகிறீர்கள்; ஆனால் இந்த எரி
சாராய ஊழலில் மட்டும் மத்திய அரசு தலையிடக் கூடாது
என்று சொல்லுகிறீர்களே என்று குறிப்பிட்டார்கள். அவர்
களுடைய பேச்சிலிருந்து நமக்கு ரொம்பத் தெளிவாகத் தெரி
கிறது. வேறு எங்கும் போக வேண்டியதில்லை; அதுவே நமக்கு
சாட்சியாக இருக்கிறது. எந்த ஒரு சின்ன காரியத்திற்கும், ஒரு
சுண்டு விரலை அசைப்பதாக இருந்தாலும் கூட மத்திய அரசை
நாடவேண்டி இருக்கிறது. டெல்லிக்குப் போக வேண்டியிருக்கிறது
என்று இருக்கும் போது இந்த எரிசாராய வழக்கைமட்டும் ஏன்
விடவேண்டும்? அதையும் தங்களிடமே தள்ளிவிட வேண்டும்
என்று கேட்கிறார். எந்தப் பிரச்னையாக இருந்தாலும், நல்லது
கெட்டது எதுவாக இருந்தாலும் மத்திய சர்க்காரின் அனுமதி
இல்லாமல் செய்ய முடியாது என்ற ஒரு நிலையை எந்த நேரத்
திலும் மாநில அரசு ஏற்க முடியாது. ஒன்றல்ல, இரண்டல்ல
ஐந்து மாநிலங்கள் எரிசாராயத்தில் சம்பந்தப்பட்டிருந்தாலும்
மத்திய அரசு தலையிடுவதை நாங்கள் ஏற்கவில்லை. அப்படி
யானால் வறட்சி நிவாரணம் ஏன் கேட்க வேண்டுமென்று

சொல்லலாம். வறட்சி துயர் துடைப்புக்கு இந்த மாநில அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்; எடுக்கும். ஆனால் ' கான்ஸ்டிடியூஷனல் அப்ளிகேஷன் டு ஹெல்ப் ஆல் தி ஸ்டேட் கவர்ன்மென்ட்ஸ் '' என்று இருக்கிறதே. அந்தப் பொறுப்பு மத்தியிலே இருக்கிறது. அப்படிப்பட்டப் பொறுப்பு அவர்களுக்கு இருக்கக் கூடாது; அதை திருப்பிக் கொடுக்க வேண்டும். அதிகாரங்களை '' டிசென்ட்ரலைஸ் '' பண்ண வேண்டும் என்று சொல்வது மத்திய—மாநில அரசுகளின் உறவை எந்த வகையிலும் பாதிக்காது; உறவை மேலும் வலுப்படுத்தும் என்பதுதான் விஞ்ஞான பூர்வமாக நாம் சொல்லக் கூடிய விஷயம். அப்படிச் சொல்லி, சொல்லி, அடிபட்டு, அடிபட்டு, அடிமேல் அடிபட்டு, '' நகர்ந்ததடி அம்மானே '' என்று சொல்வார்களே, அதைப் போல ஒவ்வொரு அடியாக நகர்ந்து, நகர்ந்து இன்றைக்கு அதிக அதிகாரம் மாநிலங்களுக்கு வேண்டுமென்று சொல்லக் கூடிய பல மாநிலங்கள் வந்திருக்கின்றன என்பதை திரு. சித்தன் அவர்களுக்கும் மத்திய சர்க்காருக்கும் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் நிதி அமைச்சர் பட்ஜெட்டை இந்த அவையிலே வைத்திருக்கிறார். அதில் குறிப்பிடும் போது இந்தக் கஷ்டங்களை எல்லாம் நீக்குவதற்காக மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார் ஆனால் நாங்கள் என்ன சொல்ல விரும்புகிறோம் என்றால் இந்த நிலைக்கு எல்லாம் காரணம் என்ன? மத்திய அரசின் பிடிப்பு தான், மாநிலத்திற்குப் போதிய நிதி வசதி இல்லாததுதான் என்று சொல்லும்போது, அந்த நிலையை மாற்றுவதற்கு என்ன மாற்றுக் கொள்கை வைத்திருக்கிறீர்கள் என்பது மிக முக்கியமானது.

அண்மையிலே அரசாங்கத்தின் போக்கில் வந்துள்ள மாற்றம் ஒரு சிறு மாற்றம் என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறேன் முன்பெல்லாம் சகலவிதமான உணவுப் பொருட்களும் விலை ஏறியிருக்கிறது, கூலி ஏறியிருக்கிறது, தேவைப் பண்டங்கள் விலை ஏறியிருக்கிறது, இது ஒரு '' நச்சுவட்டம் '' என்று மக்களிடம் சொல்வது போய், இன்று விலையேற்றம், பணவீக்கம் போன்ற பிரச்னைகளினால் இந்தியப் பொருளாதார நெருக்கடியிலே தமிழ் நாடு மாட்டிக் கொண்டிருக்கிறது. இதைச் சமாளிக்க நமக்கு அதிகாரம் இல்லை என்று எடுத்துக் காட்டியிருப்பது ஒரு நல்ல அம்சம். அதற்கு உதாரணமாகத் தான் திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்ட எரிசாராயம் பற்றி நான் கூறியிருக்கிறேன். மத்திய சர்க்கார் தலையிடுவது எரிசாராயப் பிரச்சனையில் மட்டும் அல்ல. திரு. சித்தன் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி உட்பட பிரதான எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக்





கழகம் உட்பட, நாம் அத்தனை பேர்களும் சேர்ந்து, ஏகமனதாக நிறைவேற்றி அனுப்பி வைத்த பினாமி ஒழிப்புச் சட்டம், ஏழை எளிய மக்களுக்கு, நிலமற்ற விவசாய மக்களுக்கு நிலத்தை எடுத்துக் கொடுப்பதற்காக நிறைவேற்றி அனுப்பி வைத்த சட்டம், பெரிய பெரிய நிலமுட்டைகள், பண மூட்டைகள் கையிலே சிக்கியிருக்கிற நிலத்தை எடுப்பதற்காகப் போடப்பட்ட சட்டம் இன்னும் ஜனாதிபதி கையெழுத்தாகவில்லை. அந்தச் சட்டத்திற்கு கையெழுத்துப் போட்டு அனுப்பி வைக்காமல் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இது ஒரு வகையான நிர்பந்தம் தானே.

[பிற்பகல் 12-40]

அடுத்து இந்தியை மறைமுகமாக திணிப்பது. அது பற்றி எங்களுடைய கட்சியைச் சேர்ந்த இந்தச் சட்டமன்றத்தின் எங்களது கட்சியின் துணைத் தலைவராக இருக்கின்ற மாண்புமிகு தோழர் திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். மதுரையிலே நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிலே மார்க்சிஸ்ட் கட்சியின் முக்கியமான தலைவர்களில் ஒருவரான திரு. நாயனார் அவர்கள் பேசுகின்றபோது இந்தியை மறைமுகமாகத் திணிப்பதைச் சுட்டிக்காட்டினார். இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று பிரதமர் திருமதி இந்திரா காந்தி 10 இலட்சம் மக்கள் கூடியிருக்கின்ற கூட்டத்திலே சொன்னாலும் கூட டிப்பார்ட்மென்ட் மூலமாக இந்தி திணிக்கப்படுகிறது. இது அபாயகரமானது மாநிலங்களுக்கு என்று நாயனார் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்குக் கூட நமது மாண்புமிகு மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் நாயனார் சொல்லக் கூடிய விஷயம் எவ்வளவு கவுரவமானது என்று அந்த அளவிலே அதைப் பார்க்காமல் திருமதி இந்திராகாந்தி அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். வாக்குறுதி கொடுத்து எந்தக் காரியம் இந்த நாட்டிலே 33 வருஷமாக நடந்திருக்கின்றது. ஆகவே வாக்குறுதியும் இருக்கின்றது. அந்த வாக்குறுதி நிறைவேறாத நிலைமையும் இருக்கின்றது. இதுதான் உண்மை. இதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இப்படிப் பட்ட சூழ்நிலையில் மத்திய அரசின் கொள்கை மாநிலங்களின் மென்னியைப் பிடிப்பதாக இருக்கின்றது. மத்திய அரசின் கொள்கையைத் தெரிந்துகொள்ள அவர்கள் சமீபத்திலே வெளியிட்டிருக்கின்ற பட்ஜெட் ஒன்றே போதும். அவர்கள் கையாண்டு வரக்கூடிய பொருளாதாரக் கொள்கை ஏகபோக பெரு முதலாளிகளுக்கும் நிலச் சுவான்தார்களுக்கும் கோடி கணக்கில் பணம் சம்பாதித்துக் கொடுக்கக்கூடிய கொள்கைதான். 23 ஆயிரம் கோடி ரூபாய்க்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்ற பட்ஜெட்டிலே 1,810 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கிறது. இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்டியிருக்கிறார்களா? அதைத் தான் அமலாக்குகிறார்கள். அதிலே 271 கோடி ரூபாய்க்கு வரியைப் போட்டு 1,539 கோடி ரூபாய் கம்மி.

[திரு. கு. ரமணி] [1981 மார்ச் 23

இங்கே நமது மாநிலத்தில் பற்றாக்குறை இருக்கின்றது. ஆனால் இங்கே மதுவிலக்கினைத் தளர்த்துவதன் மூலமாக ஓரளவுக்குச் சரிக்கட்டலாமா என்ற நிலைமை இருப்பதை நாமும் பார்க்கிறோம். ஆனால் மத்திய அரசிலே 1,539 கோடி ரூபாய் பற்றாக்குறையை எப்படி சரிகட்டப் போகிறார்கள். நாமெல்லாம் சின்னப் பிள்ளைகள் அல்ல, நமக்குத் தெரியும் அவர்கள் என்ன செய்வார்கள் என்று. நோட் அடிப்பது ஒன்றுதான் செய்யப்படும். ஆனால் அதோடு இந்தப் பற்றாக்குறையைச் சரிக்கட்ட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. இந்த பட்ஜெட்டில் 6,229 கோடி ரூபாய் கீழ்க்காணும் வருவாய் இனங்களாகப் போட்டிருக்கிறார் நமது மத்திய நிதியமைச்சர் அவர்கள். இதில் வெளிநாட்டுக் கடன் ரூ 1,379 கோடி ரூபாய். அடுத்து உள்நாட்டுக் கடன் அதாவது ஜனங்களிடமிருந்து பிய்த்துப் பிடுங்கி சேர்த்த கடன் ரூ.2,800 கோடி. சிறு சேமிப்பின் மூலம் ரூ 1,250 கோடி. அடுத்து கள்ளப் பணத்தை வைத்திருப்பவர்களை நல்லவர்களாக மாற்றுகின்ற பாண்டு, அதாவது 'பெயரர் பாண்டு' ஒரு அடி கூட தாண்ட முடியாதவருக்கு தாண்டவராயப்பிள்ளை என்று பெயர் வைத்திருப்பது போன்றது இது. இந்த வகையிலே ஒரு ரூ. 800 கோடி. இந்தப் பணம் எல்லாம் வருமா? யார் உத்தரவாதம் கொடுக்க முடியும்? வராவிட்டால் என்ன ஆகும்? வராததற்கு முழுவதற்கும் நோட்டு அடிக்கப்படும். இதுதான் நிலைமை என்பது உலகம் முழுவதும் தெரியும். அதை நிரூபிப்பதற்கு நாங்கள் தயார். மத்திய அரசுக்கும் இது தெரியும். இப்படிச் செய்தால் விலைவாசி என்ன ஆகும்? பண வீக்கம் வீங்கி, வீங்கி என்ன கதியாகும்? பயங்கரமான நெருக்கடி மாநிலங்களுக்கு ஏற்படும். மாநிலங்கள் செயல்படுத்த வேண்டிய திட்டங்கள் செயல்படுத்தப்படாமல் போகின்ற அளவுக்கு நெருக்கடி ஏற்படும். ஆகவே இந்தக் கஷ்டங்களை எல்லாம் தீர்ப்பதற்கு மக்கள் ஆதரவைத் திரட்டித்தான் தமிழக அரசு முன்னேற வேண்டும்.

இந்த வகையிலே உங்களிடத்திலே இப்போதுதான் ஒரு சிறு மாற்றம் ஏற்பட்டுள்ளது. இது நீண்ட காலம் நிற்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஆனால் அதற்கு மாறாக மத்திய அரசின் அதாவது காங்கிரஸ் அரசோடு நாம் கொஞ்சம் கொஞ்சமாக அரசியலாகச் சேர்ந்து போகலாமா என்று ஏற்படக்கூடிய சலனங்கள், சஞ்சலங்கள், வேறான வழுக்கல்கள் உங்களுக்கு ஏற்படுகிறது. அவர்களோடு போய் சேர்ந்து கொள்ளுகிற போட்டி போராட்டங்கள் இப்படி ஒரு பயங்கரமான கட்டத்திலே நிலைமை போய்க் கொண்டிருக்கின்றது. எரி சாராயம் சம்பந்தமாக மத்திய அரசு விசாரணை வைக்க வேண்டும் என்று பொறுப்பான எதிர்க்கட்சிகள் போய் அவர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வருகின்ற நிலைமை இருக்கின்றது என்று சொன்னால் அது என்ன ஆகும்? நாளைக்கு ஒவ்வொருவருக்கும் அது பாதகமாகத்தானே



1981 மார்ச் 23] [திரு. கு. ரமணி]

அமையும். ஆனால் காற்றுள்ள போதே தூற்றிக்கொள் என்ற அடிப்படையில் அவர்களும் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு நாங்களும் ஒரு [illegible] மங்கலாமா [illegible]கிறார் என்று யோசித்துக் கொண்டு இருக்கிறோம். [illegible] இரண்டு [illegible]களும் மோதி கள். எரி சாராயப் பிரச்சினையில் [illegible] பெரிய பிரச்சினையாக, இமாலயப் மோதி இன்றைக்கு அது மகா பிரச்சினையாக மாறிவிட்டிருக்கிறது.

மக்கள் விலைவாசி ஏற்றத்தினால் தவிக்கிறார்கள். அதைப் [illegible] மார்க் [illegible] மக்களின் பற்றிக் கவலை இல்லை. [illegible] கவலை இல்லை. மற்றும் [illegible] வேலை இல்லா [illegible] பற்றிக் கவலை இல்லை. பண வீக்கத்தைப் தரித்திரங்களைப் பற்றிக் கவலை இல்லை. [illegible] முக்கிய திண்டாட்டத்தைப் பற்றிக் கவலை இல்லை. எரி சாராயப் பிரச்சினைதான் [illegible]கிற பற்றிக் கவலை இல்லை. நான் நல்லவனா? இப்படிப்பட்ட மாக இருக்கிறது. நீ நல்லவனா? நடைபெறுகிறது. நல்ல [illegible] முக்கியமாக நம்முடைய தமிழக மக்களுடைய அக்கறை நடவடிக்கைகளை விட்டு விட்டு, திருத்தி அமைப்பதில் இப்படிப்பட்ட உரிமைகளை, நல் வாழ்வுகளைக் சொல்லாமல் அதனைக் [illegible] கவிட காட்டுங்கள். அதற்குப் பதில் நியாயம் அல்ல, அன்றைக்கும் போக்கினை கொண்டிருப்பது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வருகிறது. உண்மை வேண்டும் என்று மார்க்சிஸ்ட் சொல்லி வருகிறது. ஒவ் இன்றைக்கும் [illegible]டுவோம். சொல்லியிருக்கிறது. [illegible] செய்வோம். செய்யும் தவறுகளை யாக மக்களுக்கு [illegible] இருக்கும்போது செய்யும் தவறுகளை ஒரு கட்சியும் ஆட்சியில் இருக்கும்போது நமக்கென்று சில உரிமை எடுத்துச் சொல்ல, தப்புகளைத் திருத்த நமக்கென்று தயாராகுவோம். அதற்குப கள் இருக்கின்றன. அதை நாம் [illegible] தலையிட வேண்டும் என்று பதிலாக மத்திய சர்க்காருடைய அழைப்புகளை என்றைக்கும் சொல்லக் கூடிய அப்படிப்பட்ட அனுமதிக்காது, அதை எதிர்ப் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அனுமதிக்காது, அதை எதிர்ப் போம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே இன்றைக்கு நான் மாநில அரசுக்கு ஒன்றை ஞாபகப்படுத்தவிரும்புகிறேன். தமிழகத்தில் இருக்கும்படியான உழைப்பாளி மக்கள், விவசாய மக்கள், தொழிலாளி மக்கள், மாணவர்கள், படிப்பாளிகள், மத்திய தர மக்கள், இப்படிப் பட்ட மக்களுடைய விருப்பத்தின் பேரில்தான் ஜனநாயக அடிப் படையில் நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இப்படிப்பட்ட மக்களுடைய ஆதரவுதான் இந்த சர்க்காருக்கு அடிப்படையான ஆதாரமாக இருக்கிறது. ஆனால் இந்த நிலைமைக்கு ஊறு செய்கிற நடவடிக்கைகளை இந்த சர்க்கார் எடுத்து வருகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.

இதற்கு ஒரு உதாரணம் சொல்லவேண்டுமானால், இப்படி ஒரு விலை வாசி ஏற்றத்திற்கு உழைப்பவர்கள் அழைத்துச் செல்லப்படுகிறபோது, அந்த விலைவாசி ஏற்றத்தை ஈடுகட்டித் தர வேண்டும் என்ற கோரிக்கையை உழைப்பாளி மக்களும், தொழிலாள மக்களும், விவசாயிகளும், அரசாங்கத் தொழில்களில் வேலை செய்யக் கூடியவர்களும், கோடி தங்களுடைய பிரச்னை தீர்க்கப்பட முடியவில்லை என்று ஏற்பட்டால், அவர்களுக்கு இருக்கிற ஒரே ஒரு வழி, அவர்களுடைய ஸ்தாபனங்களின் மூலமாக ஒன்றுபட்டு போராடுவதுதான். ஆனால் அப்படிப்பட்ட போராட்டங்கள் அனைத்தும் சட்ட விரோதம் என்கிற அவசரச் சட்டத்தை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது தவறு. அங்கே மத்தியில் அவர்கள் தேசியப் பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரால், தங்கள் சர்க்காரைப் பாதுகாக்க, எதிர்த்துப் போராடுகிற கட்சித் தலைவர்களையும், உழைப்பாளிகளின் தலைவர்களையும் சிறையில் தள்ளுகிறார்கள். இங்கே இப்படி ஒரு சட்டம். ஆனால் அந்தச் சட்டம் இப்போது காலாவதியாகி விட்டது. ஆகையினால் அதை மறுபடியும் சட்டமாகக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டாம் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெற்று, ஒரு சர்வாதிகாரத்தை எதிர்த்து நடத்துகிற போராட்டத்தில், மத்திய சர்க்கார் மாநிலங்களை நசுக்குகிற போக்கை எதிர்த்து போராட நீங்கள் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அப்படி ஒரு மக்கள் ஒற்றுமை தேவை என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அடுத்து இருக்கிற பிரச்னை. தமிழகம் முழுவதிலும் ஏற்பட்டிருக்கும்படியான வறட்சி. ஒரு வார்த்தை இந்த நேரத்தில் சொல்லியாகவேண்டும். இந்த வறட்சியைப் பற்றி அரசு ஆழமாக தெரிந்துக் கொள்ளவில்லை என்பது என்னுடைய கருத்து, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் வேண்டுமானால் சேர்த்து பதில் சொல்லட்டும். அந்த வறட்சி நிலையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று, இச்சபையின் அங்கத்தினர்கள் பலர், சபாநாயகர் மூலமாக, கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் ஆகியவைகளைக் கொடுத்தோம். அப்பொழுது சபாநாயகர் அவர்கள் கூறினார்கள். வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் வறட்சியைப் பற்றிய அறிக்கையினை சமர்ப்பிக்கப்போகிறார். அதற்குப் பிறகு வேண்டுமானால் யோசிக்கலாம், என்று சொன்னார்கள். ஆனால் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அவையில் வைத்த அறிக்கையில் என்ன இருக்கிறது? அந்த அறிக்கையை இன்றைக்கு வேண்டுமானாலும் எடுத்துப் படித்துப் பாருங்கள். அதிலே, கோயம்புத்தூரிலிருந்து கலெக்டர் ரிப்போர்ட் வரவில்லை. திருநெல்வேலியிலிருந்து ரிப்போர்ட் வரவில்லை. நீலகிரியிலிருந்து ரிப்போர்ட் வரல்லை என்று இருக்கிறது.



வந்திருக்கிறதாக சொல்லப்பட்ட ரிப்போர்ட்டுகளிலாவது உண்மையான நிலவரம் கொடுக்கப்பட்டிருந்ததா? இல்லை. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மற்ற அமைச்சர்களும் தமிழகத்தைச் சுற்றி வந்தபோது, அவர்கள் நேரிலே கண்ட அந்த நிலைமைகளுக்கும், அதிகாரிகள் கொடுத்திருக்கிற ரிப்போர்ட்டுகளுக்கும் சம்பந்தமே இல்லை என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கூறியிருக்கிறார்கள். இதை நான் குற்றம் சாட்டுவதற்காகக் கூறவில்லை. குறையாகச் சொல்லவில்லை, எந்த நிலைமைக்கு நாம் போய்கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக் காட்டச் சொல்கிறேன். அது கிட்டத்தட்ட என்னுடைய கணிப்பு.

"With formal understanding we are nearing famine condition.

ஒரு வறட்சி நிலையைத் தாண்டி ஒரு பஞ்ச நிலையை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். இதை அரசாங்கத்தைக் குறை கூறுவதற்காகச் சொல்லவில்லை. 1943 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு பஞ்சம் ஏற்பட்டபோதுதான் மேற்கு வங்கத்தில் 35 லட்சம் மக்கள் பஞ்சத்தால் செத்து அழிந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு நிலைமை தமிழகத்தில் ஏற்பட்டுவிடக் கூடாது என்று நினைத்துத் தான் சொல்கிறேன்.

எப்படி பெருமழை வந்தபோது, எல்லா அமைச்சர்களும் விரைந்து சென்று ஆங்காங்கே செயலாற்றினீர்களோ அப்படி செயலாற்றவேண்டும். ஒரு அமைச்சர் தண்ணீரிலே நீந்திச் சென்றார் என்று பத்திரிகைகளிலே கூட செய்தி வந்தது. அப்படி ஒரு அவசர முக்கியமாகக் கருதி இதற்கும் நீங்கள் செயலாற்ற வேண்டும். நேரிடையாக அமைச்சர்கள் அனைவரும் சென்று பார்வையிட்டு, மக்களுடைய கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். காலையில் கூட இங்கே சங்ககிரியில் குடிநீர்ப்பஞ்சம் பற்றியெல்லாம் விவாதம் நடைபெற்றது. அதிலே அடங்கியிருக்கும்படியான உண்மைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். 20 லிட்டர் தண்ணீர் ஒருவருக்கு ஒரு நாளைக்கு சங்ககிரியில் கொடுக்கப்படுகிறது என்பது உண்மை.

[பிற்பகல் 12-50]

அதை என்ன சொன்னாலும் மறுக்க முடியாது. விலைக்கு விற்கிறார்களா அல்லது காசுக்கு விற்கிறார்களா என்பதல்ல பிரச்னை. காசு செலவழித்தால்தான் தண்ணீர் வரும் என்ற நிலைமை இருக்கிறது. லாரிகளில் கொண்டுவந்து தண்ணீர் கொடுக்கிறார்கள். கொடுப்பதில் தவறு இல்லை. அதிகப்படியாக க்யூவில் நிறுத்தி அவர்கள் தண்ணீர் எடுத்துக்கொள்ளாமல்

தண்ணீர் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது ஏற்பாடு. இந்த நிலைமை மாற வேண்டும். அதற்காக இந்த அரசு ஒதுக்கப்பட வேண்டும் என்று சொல்வது தவறு. அதுவல்ல பிரச்னை. பிரச்னையைப் புரிந்துகொள்ள வேண்டும். இப்போது நிலைமையைப் புரிந்து கொண்டு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்து வருகிறது என்பது உண்மை. ஆனால் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் போதாது. இந்த மன்றத்தில் இரண்டு நாட்கள் வறட்சி பற்றி நடத்திய விவாதத்தில் 75 உறுப்பினர்கள் பங்கு கொண்டு இந்த விஷயம் பற்றிய அநேக விவரங்களும் வெளிவந்துவிட்டன. அதற்குப் பிறகு அரசாங்கம் ஜாக்கிரதையான நடவடிக்கை எடுத்து முதல் அமைச்சர் அவர்களே பொறுப்பெடுத்து சுற்றுப்பயணத்தை ஆரம்பித்தார்கள். இப்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலையைச் சமாளிக்க ஏராளமான பணம் தேவை. இந்தப் பணத்தை மத்திய அரசாங்கம் கொடுத்தே தீரவேண்டும். கொடுப்பது அவர்கள் இஷ்டமல்ல. அது அவர்கள் நமக்கு தயக்கூடிய தர்ம காசு அல்ல. இந்திய நாட்டு மக்களின் பணம் 23,000 கோடி ரூபாய் அவர்கள் கஜானாவிற்குப் போயிருக்கிறது. அதிலிருந்து நமக்குக் கிடைக்கவேண்டியது நமது உரிமை. அந்த உரிமையை வலியுறுத்தி நாம் பணத்தை பெற்றேயாக வேண்டும்.

வறட்சிப் பிரதேசம் என்று பிரகடனம் செய்யுங்கள் என்று அன்றே சொன்னோம். அமைச்சரவைக்கு அதில் ஏதோ ஒரு சங்கடம், அது என்னவென்று தெரியவில்லை. இன்னும் புரியவில்லை. வறட்சி ஏற்பட்டுவிட்டது என்று சொன்னால் நமது அந்தஸ்தை மத்திய சர்க்கார் குறைத்து மதிப்பிடுவார்களோ என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அப்படியே நினைத்துக்கொண்டு இருந்துவிட்ட பிறகு பஞ்சம் ஏற்பட்டு பட்டினிச் சாவு வந்தால் முன்னாலே ஏன் எங்களிடம் வறட்சிநிலை இருக்கிறது என்று சொல்லவில்லை என்று அவர்கள் உங்களை குற்றஞ்சாட்டக்கூடிய நிலை ஏற்படலாம். மக்களுக்கு முன்னால் அவர்கள் உங்களை அம்பலப்படுத்தலாம். அதற்கு நாம் இடம் கொடுக்கக்கூடாது. இப்படி வறட்சி நிலை இருக்கிறது என்று சொல்லுங்கள், அவர்கள் வந்து பார்க்கட்டும். அவர்கள் வந்து பார்த்தபிறகுதான் பணம் கொடுப்பார்கள். வறட்சி நிலையைப் போக்குவதற்காக பெரும் பகுதி தொகையை மத்திய சர்க்கார்தான் தரவேண்டும். மாநில சர்க்காரால் சமாளிக்க முடியாது. போர்க்கால நடவடிக்கைகள் போல் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். மாடுகளின் தீவனத்திற்காக பஞ்சாப், ஹரியானா போன்றவிடங்களிலிருந்து சோளத்தட்டை, கோதுமை வைக்கோல் போன்றவற்றை கொடுக்கட்டும். மக்களுக்கு வேண்டிய அரிசியைக் கொடுக்கட்டும். 16,000 கிராமங்களுக்கு 16,000 கடைகள் இருப்பதாகச் சொல்லலாம். ஆனால் கிராமங்களில் உள்ள அந்தக் கடைகளுக்குச் சென்று பார்த்தால் அங்கே போதிய அளவு உணவு தானியங்கள் இல்லை. அரிசி இல்லை என்ற நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலை மாற்றியமைக்கப்படவேண்டும். அவர்களிடத்தில் கொஞ்சம்



கோதுமை கொடுங்கள் என்று தயங்கித் தயங்கிக் கேட்பானேன்?
இந்திய சர்க்காரின் சேமிப்பில் ஏராளமாக அரிசி இருக்கிறது.
பஞ்சாப் மாநிலத்தில் விளைந்த அரிசி முழுவதையும் கொடுத்து
விட்டார்களாம். ஆக, அவர்களிடம் அரிசிக் குவியல் இருக்கிறது.
அதிலிருந்து ஐந்து லட்சம் டன் அரிசி வேண்டுமென்று கேளுங்கள்.
மத்திய அரசாங்கம் அதைத் தரவேண்டும். அதற்கு மேல் நமக்கு
வேண்டிய அளவிற்குக் கோதுமையைக் கேட்டுப் பெறவேண்டும்.
தயங்கி தயங்கிக் கேட்கவேண்டிய அவசியமில்லை.

அமைச்சர் அவர்கள் 10,000 டன் கோதுமை தரவேண்டும்
என்று மத்திய அரசைக் கேட்டிருப்பதாகச் சொல்லியிருக்
கிறார்கள். ஐந்து லட்சம் டன் அரிசியைக் கொடுங்கள், பின்னால்
கோதுமையைக் கொடுங்கள் என்று கேட்கவேண்டும். அதை
விநியோகிக்க கிராமங்களில் மலிவு விலைக் கடைகள் இருக்க
வேண்டும், நியாயவிலைக் கடைகளுக்குப் பதிலாக. கட்டுப்படி
யான விலைக்கு மக்களுக்கு உணவுப்பொருட்கள் கிடைக்க வழி
வகை செய்ய வேண்டும். உணவு கொடுப்பது, குடிநீர் கொடுப்பது
வேலைகள் கொடுப்பது போன்றவற்றில் அமைச்சர்களே முன்கை
எடுத்து அவற்றில் கவனம் செலுத்த வேண்டும். சட்டமன்ற
உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள் இவர்களைக்
கொண்ட குழு போட்டு அவற்றைக் கண்காணிக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். அந்த முறையில் நாம் ஏற்பாடு செய்து
சமாளிக்காவிட்டால் இந்த வறட்சிப் பிரச்சினை நம்மையே
விழுங்கிவிடும்போல் இருக்கிறது. பொருட்கள் சரியான முறையில்
விநியோகிக்கப்படும் விதத்தில் சரியான விநியோக முறை
அமைய வேண்டும்.

இந்தியாவிலே இந்த மாநிலத்திலே மதுவிலக்கு இருக்கிறது. மற்ற மாநிலங்கள் பூராவிலும் மதுவிலக்கு இருக்கிறதா? 1980 ஜனவரியில் டெல்லி பாராளுமன்றத்தில் அமைக்கப்பட்ட அமைச்சரவையில், தமிழகத்தைச் சார்ந்த நிதி அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் சொன்னார்கள். மாநிலங்களில் மதுவிலக்கை அமுலாக்குவதற்குப் பணம் கேட்டால், ஒரு சல்லி காசுகூட தர மாட்டேன் நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இதிலே தீர்மானிக்கலாம். கொள்கை வைத்துக் கொள்ளலாம் அல்லது விட்டு விடலாம், அது உங்கள் இஷ்டம் என்று சொன்னார்கள். மத்திய சர்க்காருக்கு மது விலக்குப் பிரச்னையில் ஒரு கொள்கை இல்லை. இப்படி இருக்கும்போது இந்திய நாட்டிலுள்ள 67 கோடி மக்களுக்கு அன்றைக்கு மகாத்மா காந்தி சொன்ன இந்த நல்ல காரியத்தை காங்கிரஸ் கட்சியால் செய்ய முடியவில்லை. அதை விட்டு விட வேண்டுமென்றும் சொல்ல முடியவில்லை.

[பிற்பகல் 1-00]

இதை உலகத்திலே இருக்கிற பல நாடுகள் நடத்திப் பார்த்து மூக்கை உடைத்துத் திரும்பினர். 25 வயது ஆனவர்கள் தான் குடிக்க முடியும் என்றால், எல்லோருடைய ஜாதகத்தையும் போலீஸ் வைத்துக்கொண்டு, எத்தனை ஊழல் கேஸ்கள் போட்டு அவர்கள் பணம் சேர்ப்பார்கள். வேதனையோடு செல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதே மாமன்றத்திலே சென்ற தடவை பேசுகிறபோது சொன்னேன். என்னுடைய தொகுதியிலே ஒரு போலீஸ் ஸ்டேஷனில் ஒரு மாதத்தில் ஒரு இலட்சத்து பத்தாயிரம் ரூபாய் கைக்கூலியாக பெறுகிறார்கள் என்று அந்த நிலை நீடிக்கவேண்டாம். என்ற நல்ல எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதை நாங்கள் வரவேற்கிறோம். கொள்கையாக வைத்துக்கொள்ளுங்கள். ஆனால் அமுல் நடத்தமுடியாத ஒன்றாக வைத்துக்கொள்ளுங்கள். ஆகவே மது விலக்கை முழுமையாக எடுத்துவிட்டு, ரத்து செய்துவிடுங்கள். லைசென்ஸ் பெற்று கடைகளில் விற்பது என்பதற்கெல்லாம் நீங்கள் ''கண்டோன்'' செய்ய வேண்டும். அப்போதுதான் அந்தப் பணம் உங்களுக்குக் கிடைக்கும். இல்லையென்றால் ஊரில் கண்டவர்கள் கொண்டு போய் விடுவார்கள். மதுவிலக்கை ரத்து செய்துவிட்டு மக்களுக்கு உதவி செய்யவேண்டும். விலைவாசிப் பிரச்சினை, உணவுப் பிரச்சினை, வறட்சி நிலைமை ஆகியவை இன்றைய தினம் உங்களுக்குக் கவனத்தில் பிரதானமாக இருக்கவேண்டும். அதற்கு எங்களுடைய ஒத்துழைப்பைத் தர தயார். இதில் ஆழமாக இருங்கள். இடையில் வந்த கொள்கை மாற்றம் தடம் புரண்டு விடாது பாருங்கள் போகாதீர்கள்; போகாதீர்கள் டெல்லியை மேலும், மேலும் நெருங்கி கைகோர்த்து விடவாம் என்று போகாதீர்கள் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.



திரு. தி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களால் அளிக்கப்பெற்றிருக்கிற 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வரவேற்று என்னுடைய கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு நாடு எப்படி இருக்கவேண்டும் என வள்ளுவர் கூறிய இலக்கணப்படி, நோய் இல்லாது இருத்தல், செழிப்பு செல்வ, விளை பொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல், ஆகிய ஐந்தும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தேவைகளை நிறைவு செய்கிற வகையிலே பல சிறப்பானத் திட்டங்களும், கருத்துக்களும் இந்த நிதி நிலை அறிக்கையில் சிறப்பாக எடுத்துக் காட்டப்பெற்றிருக்கிறது. பேரறிஞர் அண்ணா அவர்கள் கொள்கைகளை, திட்டங்களை, நிறைவேற்றி வருகிற நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, மாநிலத்திற்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற அண்ணா அவர்களின் கொள்கையை எடுத்து வைத்திருக்கிறது. மாநில அரசிற்கு தேவையான அதிகாரங்களை அளிக்க மத்திய அரசு முன் வரவேண்டும் என்று வலியுறுத்தி இருப்பதையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். கோதுமை கொள்முதல் விலையை உயர்த்தியதை போல நெல் கொள்முதல் விலையை யும் உயர்த்த வேண்டுமென்று கேட்டிருப்பது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். எல்லாவற்றிற்கும் மத்திய அரசை நாடுகிற நிலை இருக்கிறது என்று மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர் சித்தன் அவர்கள் இங்கே சொன்னார்கள். இன்றைக்கு மக்களுடைய வரி பணத்தை மாநில அரசும், மத்திய அரசும் பெற்று வருகிறது. எங்களைப் பொறுத்த வரையில் உரிமை களைப் பெறுவதை கடமையென்று கருதுகிறோம். அதே நேரத்தில் உரிமைகளைப் பறிப்பதை கடமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. இதை தான் நாங்கள் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இயற்கை ஏமாற்றத்தால், பருவ மழை தவறிய காரணத்தால் தமிழகத்தில் பல இடங்களில் வறட்சி நிலைமை இருந்து வருகிறது. அதனால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களுக்குத் துயர் களைக் களைகிற வகையிலும் இந்த அரசு பல பணிகளை எடுத்திருக்கிறது. இந்தப் பணியை மேற்கொள்கிறபோது நிதிநிலை எப்படி முட்டுக்கட்டையாக இருந்தாலும், அதை பொருட்படுத்தாமல் அரசு பணிகளை மேற்கொள்ளும் என்று இந்த அரசு எடுத்துச் சொல்லியிருப்பதை வரவேற்று, அதே நேரத்தில் மக்களுக்குக் குடிநீர், உணவு பிரச்சினைகளில் தட்டு பாடின்றி கிடைக்க இந்த அரசு எல்லா வழிவகைக்களையும்

அடுத்து, இன்றைக்கு 20 கோடி ரூபாய் அளவிற்கு ரீ ரோப்
பட்டிருக்கிறது. அதைப்பற்றிச் சொல்லும்போது, சென்னை
மாநகராட்சிக்கு அதன் அபிவிருத்திக்காக, சென்னை மாநகரத்
திலும், அதைச் சுற்றியுள்ள 32 கிலோ மீட்டர் பகுதியிலும்,
விதிக்கப்படும் விற்பனை வரி மீதான மேல்வரி தற்போதுள்ள 5
சதவிதத்திலிருந்து 10 சத விகிதமாக உயர்த்தப்படுகிறது. இந்த
விற்பனை வரியினால், அந்த அப்பாவி மக்களான அன்றாடம்
உப்பு, புளி, மிளகாய், அரிசி வாங்கக்கூடிய 90 சதவிகித மக்கள்
பாதிக்கப்படுவார்கள். சாதாரண பொருட்களின் விலையெல்
லாம் கடுமையாக ஏறும். 6 வது ஐந்தாண்டுத் திட்டத்தை
நிறைவேற்ற வேண்டுமென்றால், அதற்கான பொருளாதார
ஆதாரங்களைத் திரட்டவேண்டும். அதாவது ரிசோர்ஸ் மொபி
லைசேஷன் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொல்லுகிறார்கள்.
அந்தமாதிரி திரட்ட முயற்சிக்கும்போது, வேறு வழியில்லாமல்
விற்பனை வரியின்மீது கைவைக்க வேண்டியிருக்கிறது. மாநக
ராட்சிக்கு, உண்மையிலேயே பணம் கொடுக்கப் போகிறீர்கள்.
அப்படிக் கொடுக்க வேண்டுமானால், மாநகரத்திலே உள்ள
மாபெரும் கட்டிடங்களை வைத்திருப்பவர்கள், பெரிய பணக்
காரர்கள், பெரும் தொழில் நடத்தக்கூடியவர்கள், அதாவது பல
லட்ச ரூபாய் முதலீடு போட்டு தொழில்களை நடத்தக் கூடிய
வர்கள் ஆகியோர்மீது வரி விதியுங்கள். மாறாக சிறிய அளவிலே
வருமானம் உள்ள நடுத்தர மக்கள்மீதும், மற்றவர்கள் மீதும்,
அவர்கள் பாதிக்கக்கூடிய வகையிலே விற்பனை வரி உயர்ந்தால்,
அவர்கள் அத்தனைபேர்களும் அரசை குறைகூறுவார்கள். அதிலே
நியாயம் இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூற விரும்பு
கிறேன்.

அதேமாதிரி, பெட்ரோல், டீசல் மீதான வரி 11 சதவிகித
மாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களைவிட இங்கே
குறைவாக இருக்கிறது என்று கூறி, வரியை உயர்த்துவது சரி
யல்ல. மற்ற மாநிலங்களில் அவர்கள் சில நல்ல காரியங்களைச்
செய்கிறார்கள். நீங்கள் இப்படிச் செய்தால், அவர்கள் செய்த
நல்ல காரியங்களைச் செய்யவில்லையே என்று கேட்பார்கள்.
அப்படி கம்பாரிசன் செய்வதில் பிரயோஜனமில்லை. அதற்குப்
பதிலாக நீங்கள் இப்படி பெட்ரோல், டீசல் மீது வரியைப்
போடுவதால், சாதாரணமாக மக்கள் செல்லும் பஸ் கட்டணங்கள்
உயரும், பொருள்களின் விலை உயரும், லாரிகள் மூலமாக
பொருள்கள் கொண்டு வரப்படுவதால், அவைகளின் விலை
உயரும், சகலவிதமான பொருள்களின் விலையும் உயருவதற்கு
இது உதவியாக இருக்கும்.



டிக்கு ஒரு ரூபாய் வீதம் உயர்த்தினார்கள். அதனால் அப்போது
300 கோடி ரூபாய் வருமானம் வந்தது. மத்திய சர்க்கார்
கஜானாவிற்கு வந்தது. 'ஒபேக்' (Opec) நாடுகளில் அப்
போது பெட்ரோல் விலையை உயர்த்தவில்லை. ஆனால், இங்கே
பட்ஜெட் பற்றாக்குறையை நிவர்த்திப்பதற்காக, எரிபொரு
ளின்மீது விற்பனை வரியைப் போட்டார்கள். அது தப்பு என்று
விசாரணைக் குழுவால் ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது. அவ்
வாறு மத்திய அரசு ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய் உயர்த்தி
யிருக்கும்போது, இந்த பெட்ரோல் மீதான எக்சைஸ் வரியை
ஏன் குறைக்கக் கூடாது என்று நாம் கேட்கக் கூடாதா? மாநில
அரசு கேட்கக் கூடாதா? இதனால், மத்திய அரசினுடைய
உறவு முறிய வேண்டியதில்லை. மத்திய அரசாங்கம்தான்
இந்த விலையேற்றத்திற்குக் காரணம். எனவே, அவர்கள் எக்
சைஸ் டியூடியைக் குறைக்கவேண்டும்.

Let them reduce their exc se rates. இப்படிக்
குறைப்பதன் மூலமாக சகல பொருள்களின் விலையும்
குறையும் என்று நாம் யோசனையாகச் சொல்ல
லாம். இந்த வரி ஏற்றத்தினால், சிறிய சிறிய தொழில்களைச்
செய்பவர்கள், பஸ் கட்டணங்கள் போன்ற சகலத்திற்கும்
இடையூறு ஏற்படும். சாதாரண மக்கள் இதனால் பெரிதும்
பாதிக்கப்படுவார்கள் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்பு
கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட முறையில் இந்த அரசாங்கம்
தன் பட்ஜெட்டிலே செய்திருப்பதை புரட்சிகரமான பட்ஜெட்
என்று எங்களால் சொல்ல முடியவில்லை. உண்மை நிலை என்ன
வென்றால், கடுமையான அழுத்தத்திற்கு, நெருக்கடிக்கு, சிக்க
லுக்கு மத்தியில் உள்ளதைச் சமாளிக்கிற பட்ஜெட் இது. பொருள்
களை விலையேற்றத்திற்குக் கொண்டு செல்லத்தான் வாய்ப்
பிருக்கிறது. முடிந்தால் மேலும் சில சலுகைகளைச் சொல்லுங்
கள். சிறு விவசாயிகளுக்குச் சலுகைகள், ஆசிரியர்களுக்கு சில
புதிய சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

எனவே, இதை ஒரு சாதாரண பட்ஜெட் என்று சொல்ல
லாமே தவிர, முற்போக்கான பட்ஜெட் என்று சொல்ல முடி
யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக, மதுவிலக்கு இன்னும் இதிலே இருக்கின்ற ஆசை
விடவில்லை. வாக்குறுதிகளை நிறைவேற்றி கவுரவமாக நடக்க
வேண்டிய அரசாங்கம், ஆளும் கட்சியாக இருக்கின்ற அ.தி.மு.க.
முக்கியமாக இந்தப் பிரச்னையை உறுதியான கொள்கையாக
வாதிட்டுச் சொல்லுகிறார்கள். ஆனால், கொள்கைகளை
நடைமுறையில் அமுல்படுத்தமுடியவில்லை. உண்மையில்
இந்த மதுவிலக்கு வெற்றிபெறாது என்று நாங்கள் இதற்கு முன்
னரே எடுத்துச் சொன்னோம். சர்க்கார் இந்தப் பிரச்சினையில்
தோற்றுவிட்டது.

செயல்படுத்தி வருகிறது. போர் கால நடவடிக்கைகள் போல
பணிபுரிகின்ற நேரத்தில் காலதாமதத்தை ஏற்படுத்தி இந்த
அரசுக்குக் கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டுமென்று பணி
புரிகிற ஊழியர்களையும், அதிகாரிகளையும் கண்காணித்து
அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கையால் ஏற்பட்ட இந்த நிலைமையைக்கூட செயற்
கையாக மாற்றி அரசியலாக காட்டுகின்ற நிலையிலேதான்
எதிர்க்கட்சி இருந்து வருகிறது. இயற்கையின் சீற்றங்களும்
மாற்றங்களும் இந்த அரசினுடைய கட்டுப்பாட்டுக்கு உகந்த
தல்ல. இயற்கை பழியை செயற்கையாக மாற்றி இந்த
அரசின் மீது பழியைப்போடாமல் இந்த அரசுக்கு ஆக்கப்பூர்வ
மான கருத்துக்களைச் சொல்லுங்கள், நியாயமான குறைபாடு
கள் இருந்தால் சொல்லுங்கள், நாங்கள் அவற்றை ஏற்றுக்
கொள்கிறோம், இயற்கையால் ஏற்பட்ட நிலைமையை செயற்
கையாக மாற்றி வறட்சிக்கு அரசுதான் காரணம் என பழி
போட்டால் உங்களுடைய காழ்ப்புணர்ச்சியைத்தான் அது காட்டு
கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய அரசு இந்தத் துயர் துடைப்புப் பணிக்கு மேலும்
அதிகமான நிதியை ஒதுக்கித்தரவேண்டும். தமிழகத்திலே
மின் உற்பத்தியை எடுத்துக்கொண்டால் தமிழக அரசு அதற்கு
தலையாய முன்னுரிமை கொடுத்து செயல்பட்டுவருகிறது.
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடான
3,150 கோடி ரூபாயில் மின் உற்பத்திக்காக 1,023 கோடி
ரூபாய் அளவுக்கு ஒதுக்கியிருப்பதிலிருந்தே இது நன்றாகத்
தெரிகிறது 1981–82 ஆம் ஆண்டிலே தமிழகத்திலே மின்
உற்பத்தி 3,374 மெகாவாட் அளவுக்கு உயரும் என எதிர்
பார்க்கப்படுவதாகவும் நடப்பு ஆண்டிலே 30 ஆயிரம் பாசன
கிணறுகளுக்கு மின்வசதி அளிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்
பட்டிருப்பது பாராட்டுக்குரியது. சென்ற ஒன்றரை
ஆண்டுக்காலத்திலே 2·7 இலட்சம் குடிசைகளுக்கு மின் வசதி
அளித்திருப்பது பாராட்டுக்கு உரியது. அதே போல் மின்
வாரியத்திலே மின்வாரிய உபரிச் செலவுகள் அதிகமாக
சென்று கொண்டிருந்தாலும்—மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிற
நேரத்திலே தமிழகத்திலே தான் மின் கட்டணம் மிகக் குறைவாக
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு—இப்படிப்
பட்ட சோதனையான காலத்திலே கூட இந்தத்துறை
சாதனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் பாராட்டுகிறேன்.



நியமிக்கப்படுவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருப்பது
பாராட்டத்தக்கது. தொழில் நுட்பக் கல்வி வளர்ச்சி
குறித்து அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது. 1981-82
ஆம் ஆண்டிலே 21.3.71 லட்சம் கூடுதல் நிதி ஒதுக்கும் செய்யப்
பட்டிருக்கிறது, அது மட்டுமல்ல. 50 உயர்நிலைப் பள்ளிகளில்
விஞ்ஞான அறிவியல் கூடத்திற்கான சாதனங்கள் வாங்குவதற்
காகவும், 5 கல்வி மாவட்டங்களில் 5 நாடமடும் அறிவியல்
கூடங்களைத் தொடங்குவதற்காகவும் ரூபாய் 50.17 லட்சம்
ஒதுக்கப்பட்டிருக்கிறது. 86 மைல் நிலைப்பள்ளிகளுக்கு கூடுதல்
கட்டடங்கள் கட்டுவதற்காக 2 கோடி ஒதுககப்பட்டிருப்பதையும்
நான் வரவேற்கிறேன். அதே நேரத்திலே பல இடங்களிலே
கட்டட வசதிகள் இல்லாமல் இருக்கிற இடங்களிலே புதிய
பள்ளி கட்டடங்கள் கட்டுவதற்கு வசதி செய்து கொடுப்ப
தற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

ஆசிரியர்களுடைய பிரச்னையிலே மிகச் சிறப்பான தனி
கவனத்தை அரசு செலுத்தி செயல்பட்டு வருகிறது. ஊராட்சி
ஒன்றிய ஆசிரியர்களை எல்லாம் அரசு ஊழியர்களாக
1—6—1981 இல் இருந்து ஆக்கப்போவதை நான் பாராட்டி
வரவேற்கிறேன். அதே நேரத்திலே தஞ்சையிலே ஒரு
தமிழ் பல்கலைகழகத்தையும் மதுரையிலே உலகத் தமிழ்ச்சங்கத்
தையும் அமைக்க இருப்பது வரவேற்கத் தக்கது. பாராட்டுக்
குரியது.

மருத்துவத் துறையைப் பொறுத்த வரையில் கிராமப்
பகுதிகளிலே அதிகம் சேவை செய்யக்கூடிய முறையிலே
நம்முடைய அரசு பணியாற்றி வருகிறது. நகரங்களுக்கும்
கிராமங்களுக்கும் இடையே வேறுபாடுகள் இல்லாத நிலை
மையை உருவாக்கி வருகிறது. கிராமங்களுக்கு தனி கவனம்
செலுத்தப்பட்டு வருகிறது. சுகாதார நிலையங்களைப்
பொறுத்தவரையில் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள்
ஆரம்பிக்க இருப்பதை நான் பாரட்டுகிறேன். ஒன்றியத்திற்கு
ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையிலே இப்
பொழுது இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே திருப்பத்தூர்
ஒன்றியம் 70 ஊராட்சி மன்றங்களைக் கொண்டது
ஆகும்—இன்னொரு ஆரம்பச் சுகாதார நிலையத்தை புதுப்
பேட்டையிலே ஆரம்பிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு இந்த அரசு நல்ல முறையிலே பாடு
பட்டு வருகிறது. புதிய தொழிற்சாலைகளை உருவாக்கு
வதற்கும் தொடங்குவதற்கும் வசதிகளையும் வாய்ப்புகளையும்
ஊக்கத்தையும் அளித்தாக வேண்டும். தமிழகத்திலே 3 வது
[illegible] ஆலை வரவிருப்பதை நான் பாராட்டுகிறேன். வட

[திரு. தி. அன்பழகன்] [1981 மார்ச 23

ஆற்காடு மாவட்டத்திலே 20 கோடி ரூபாய் செலவிலே வெடி மருந்து தொழிற்சாலை வரவிருப்பதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். அதை என்னுடைய தொகுதியிலே நாட்டாம் பள்ளியிலே ஆரம்பிப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கேற்ற சூழ்நிலையும் இடவசதியும் அங்கே இருப்பதால் அங்கே இதை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 1,500 மக்கள் கொண்ட கிராமங் களுக்கு பயன் தருகிற வகையில் சாலை வசதியை செய்து வருகிறது. தன்னிறைவு வளர்ச்சித் திட்டத்தை பொறுத்த வரையில் அரசு நல்ல முறையிலே அதை செயல்படுத்தி வருகிறது. அதற்காக நான் அரசைப் பாராட்டுகிறேன். 1981—82 ஆம் ஆண்டிலே சாலைகளுக்காக 13 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. ஆகவே பேருந்துகள் செல்ல முடியாத அளவுக்கு மேசமாக இருக்கக்கூடிய சாலை களை உடனடியாக செப்பனிடுவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-10]

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் திருப்பத் தூரிலேயிருந்து வெலகல்நத்தம் செல்லுகின்ற பாதையும், அதே போல புத்துக்கண்ணிலிருந்து ஆவாரங்குப்பம் செல்லும் பாதை யையும் உடனடியாகச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அலுவலர்களைப் பொறுத்தவரையில் மற்றவர்களெல் லாம் பாராட்டத்தக்க அளவிற்குத் தன்னுடைய பணியைச் சிறப்பான முறையில் அரசு செய்து வருகிறது. மூன்றாவது ஊதி யக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதன் விளைவ க ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்ட முரண்பாடுகளைப் பரிசீலித்து, அரசுக்குப் பரிந்துரை செய்ய அமைக்கப்பட்ட ஒரு நபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் சுமார் 3 கோடி ரூபாய் அளவிற்குச் சலுகைகளை நிறைவேற்ற இருக்கிறது.

அரசு அலுவலர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வு, சுமார் நூற்றுக்கு மேற்பட்ட பதவிகளின் ஊதிய விதங் களை மாற்றிய மத்தல், விடுப்புப் பயணச் சலுகை, ஒப்படைப்பு ஊதியத்தில் வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவை சேர்த்து அளிக்கப்படுதல், திருமணக்கடன், தேர்வு நிலையில் பத்தாண்டு ஆகிய சலுகைகளை அளித்து 7 இலட்சம் அரசு ஊழியர்கள் பயன்பெறும் திட்டத்தை அரசு செயல்படுத்த விருப்பதை நான்



1981 மார்ச் 23] [திரு தி. அன்பழகன்]

கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத விவசாயிகளின் கடன் களை ரத்து செய்வோம் என்று புரட்சித்தலைவரவர்கள் அளித்த வாக்குறுதியின்படி ஏற்கெனவே 71 கோடி ரூபாய்க்கான கடன் களை ரத்து செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. சிறு விவசாயிகள் திருப்பி செலுத்தியிருந்த 23 கோடி ரூபாயை அடுத்த ஆண்டுக் கடன் நிலுவைக்கு ஈடு செய்யப்படும் என்றும் கூறியிருப்பதை நான் வரவேற்கிறேன்.

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து கடன் பெற்ற விவ சாயிகள் அசல் தொகையைக் கட்டினால் சாதாரண வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்திருப் பதும், குறுகிய காலக் கடன் தவணைகளையும், நடுத்தர காலக் கடன் தவணைகளையும் உரிய நாளுக்குள் சிறு உழவர்கள் செலுத் தினால், அவர்கள் கொடுக்க வேண்டிய வட்டியில் 2 சதவீதம் கழித்துவிடப்படும் என்ற அறிவிப்பும் பாராட்டுதற்குரிய செய லாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகளின் தேவையை அறிந்து பணி செய்த இந்த அரசு மேலும் அவர்களுக்கு உதவி செய்யும் வகையில் பல நல்ல காரியங் களை செய்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த நிதி நிலை அறிக்கையில் எதுவும் இல்லை என்று கூறுகிறார் கள். என்னைப் பொறுத்த வரையில் மக்களின் தேவையை அறிந்து எந்த எதை செய்ய வேண்டுமோ அதை நிறைவேற்ற, சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்ற அரசு முனைப்பாக இருக்கிறது என்ற வகையில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்று சொல்லி இந்த நிதிநிலை அறிக்கையை மன்றத்திற்கு அளித்த நிதியமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து அமர்கிறேன், வணக்கம்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981-82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில முக்கியமான கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1981—82 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் வரவுகள் ரூபாய் 1,137.84 கோடி என்ற அளவிலும், செலவுகள் ரூபாய் 1,128.27 கோடி என்ற அளவிலும், நிகரப்பற்று ரூபாய் 9.57 கோடி என்ற அளவிலும் மதிப்பிடப்பட்டுள்ளன. மூலதனக் கணக்கில் நிகரச் செலவு ரூபாய் 135.99 கோடியாக உயர்ந்துள்ளது. கடன் கணக் கில் ரூபாய் 121.02 கோடி நிகரச் செலவிற்கு வகை செய்யப் பட்டுள்ளது. பொதுக் கடன் கணக்கில் கிடைக்கும் நிகர வரு

வாயான ரூபாய் 112.62 கோடியையும் சேர்த்து, தொகு நிதியில் நிகரப்பற்றாக்குறை ரூபாய் 153.96 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. பொதுக் கணக்கில் நிகர ரூபாய் 42.47 கோடி உபரியைச் சேர்த்து இறுதி நிகரப் பற்றாக்குறை ரூபாய் 111.49 கோடி என்ற அளவிலும், ஆண்டு இறுதிக் கையிருப்பு ரூபாய்(—) 122.96 கோடி அளவிலும் அமைய 1981—82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இன்றைக்கு நமக்கு இருக்கின்ற பற்றாக்குறைக்கு மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் 20 கோடி ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள் பெட்ரோல், டீசல் மீது. அது தேவையில்லாதது. சாதாரணமாகப் போக்குவரத்துக் கட்டணங்கள் உயர அது வாய்ப்பை ஏற்படுத்தும். ஆகவே, விதித்திருக்கின்ற வரிகளை ரத்து செய்ய உடனடியாக அரசு முன்வரவேண்டும். குறிப்பாக தமிழகத்திலே இந்த நிதிநிலை அறிக்கையைத் தாக்கல்செய்திருப்பவர்களும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். மத்தியிலே நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிற மதிப்பிற்குரிய மத்திய நிதியமைச்சர் வெங்கட்டராமன் அவர்களும் பட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள். மத்திய நிதியமைச்சர் மிக சாதுரியமாக உரத்தினுடைய விலை, பூச்சி மருந்தினுடைய விலை, சிமெண்டினுடைய விலை, சர்க்கரையினுடைய விலை, உருக்கினுடைய விலை, இரும்பினுடைய விலை, அனைத்து விலைகளையும் உயர்த்திவிட்டு, அதன்பிறகு, ஒரு பட்ஜெட்டைப் போட்டு, பற்றாக்குறைக்கு நோட்டு அடிப்பதற்கான இயந்திரத்தையும் நாசிக்கிலே வைத்துவிட்டு, அதற்கு வேண்டிய தயாரிப்போடு மத்திய அரசு இருக்கிறது. அதன் விளைவாகக் கடுமையான விலைவாசி ஏற்றம் ஏற்படப்போகிறது.

நம்முடைய நிதியமைச்சரவர்கள் மிகத் தைரியமாக இருக்கிறார்கள். ஏனென்றால், மது விலக்குக் கொள்கையினுடைய விளைவாக, ரூபாய் 120 கோடியிலிந்து, ரூபாய் 150 கோடி கிடைக்கும் என்று கருதப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அதிலே, முழுக்க நனைந்த பிறகு, முக்காடு தேவையா என்று சிவாஜி கணேசன் தூக்குத்தூக்கியிலே பாடுவார். மதுவிலக்கு என்பதை முழுமையாக ரத்துசெய்வதிலே ஏன் நீங்கள் வெட்கப்படுகிறீர்கள்? மதுவிலக்கு என்பது ஒரு கொள்கை. குடிப்பழக்கம் என்பது கேடு என்பதை எதிர்த்து அரசாங்கம் பிரச்சாரம் செய்ய வேண்டும். எங்கள் கட்சியைப் பொறுத்த வரை குடிப்பழக்கம் உள்ளவர்கள் கட்சியிலே அங்கத்தினராக இருக்க முடியாது. அது தெளிவான ஒன்று. எனவே, மக்கள் குடிப்பழக்கத்திற்கு ஆளாகக் கூடாது என்பதைப் பிரச்சாரம் செய்வதற்கு ரூபாய் 1 கோடி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் மதுவிலக்கை முழுமையாக ரத்து செய்வதற்கு ஏன் நீங்கள் வெட்கப்படுகிறீர்கள்? அது ஒரு சமுதாயம் பற்றிய பிரச்னை, சட்டம் பற்றிய







மதுவிலக்கை
பிரச்னை அல்ல. அமெரிக்க போன்ற நாடுகளில் மதுவிலக்கை அமுல்படுத்த முடியமல்
ரத்து செய்து, அந்த நாட்டிலே அதை அமுல்படுத்த முடிய மதுவிலக்கு
கடைசியிலே கைவிட்டார்கள். சோஷலிச நாடுகளில் குறிப்
என்கிற பேச்சே கிடையாது. அங்கே விழாக் காலங்களில் மதுவில
பிட்ட காலங்களில், கடைகள் அடைக்கப்படுவதும், போன்ற
இருக்கக்கூடிய ஆல்கஹால் கன்டென்டை குறைப்பது இன்றைக்குத்
நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். எனவே, பெரிய வறட்சி
தமிழகத்திலே, ஏற்பட்டிருக்கக்கூடிய மிகப் மதுவிலக்குக்
போன்றவற்றை நம் சமாளிப்பதற்குக்கூட வேண்டும்.
கொள்கையை பூரணமாக நீங்கள் ரத்து செய்ய அதைப்பற்றி மூச்சு
ஆந்திரவிலே இருக்கிற காங்கிரஸ் ஆட்சி இருக்கிற அரசு
விடாது, பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலே எந்தக் கட்சிக்
அதைப் பற்றி பேசாது. பாண்டிச்சேரியிலே பேசுவதற்குத் தைரியம்
காரரும் போய் மதுவிலக்குப் பற்றி பாண்டிச் சரியில் பேசினால் அவர்கள்
கிடையாது. ஏனென்றால், முன்பு ஒருவரை அனுப்
நேராக ஜிப்மருக்கு அனுப்பிவிடுவார்கள் போய் நின்றார். இப்பொழுது
பினார்கள். அவர் கடலூரிலே இருக்கிறார். அவர் மதுவிலக்கைப்பற்றி
ஆளுங் கட்சியிலே பாண்டிச்சேரிக்குள்ளே நுழைந்தவுடன்
டெல்லியிலே பேசிவிட்டு, விரட்டி துரத்த ஆரம்பித்த
அங்கேயிருந்தவர்கள் ஊரை விட்டு கடலூருக்கு வந்து சேர்ந்தார்.
வுடன், ஜிப்மர் வழியாகக் மனிதனுடைய வாழ்க்கையிலே
எனவே, மதுவிலக்கு என்பது கொள்கையை சமுதாயம்
இருக்கிற ஒரு கொள்கை. அந்தக் கட்டுப்பாட்டு திருத்துவேம்
பற்றிய பிரச்னையை, சட்டத்தைப் தேவையில்லை. சுத்தமாக
என்பது சரியல்ல. பர்மிட் முறை பகிரங்கமாக ஏலத்தில் விட்டால்
மதுவிலக்கை ரத்து செய்து, 30 ஆண்டுக்காலத்தில், கிட்ட
ரூபாய் 200 கோடி ரூபாய் வரும். இழந்திருக்கிறது. இது
தட்ட 3000 கோடி ரூபாயை தமிழகம் அமைந்திருக்கிறது.
வளர்ச்சிப் பணிகளுக்குக் குந்தகமாக 30 ஆண்டுக் காலத்தில்
மதுவிலக்கை அமுல் படுத்துவதற்கு மதுவிலக்கால் பாதிக்கப்
ஆயிரம் கோடி ரூபாய் செலவு. இந்த தொழிலாளர்களைப் பாது
பட்டிருக்கின்ற 15 இலட்சம் மாநிலத்திலிருந்தும் பனைவெல்லக்
காப்பதற்கு மத்தியிலிருந்தும், ஆயிரம் கோடி. ஆக,
கூட்டுறவுச் சங்கத்திற்கு அளித்தது. மதுவிலக்குக் கொள்கை என்ற
மொத்தம் 5000 கோடி ரூபாய் தமிழகத்தினுடைய வளர்ச்சி,
பெயரால் தமிழகம் இழந்து, வேலையில்லாத்
தொழில் வளர்ச்சி பாதிக்கப்பட்டிருக்கிறது போக்குவதற்கான திட்டம்
திண்டாட்டம் போன்றவற்றைப் வெறும் வரட்டுத்தனமான
தீட்டுவதற்குப் பதிலாக, தள்ளியிருக்கிறோம்.
கொள்கையைப் பேசி தமிழகத்தைப் பின் வேண்டாம். மதுவிலக்கை
எனவே, இனியும் அந்தக் கொள்கை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
முழுமையாக ரத்து செய்யுங்கள்.
சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம்.

பதினைந்து இலட்சம் மது மரத் தொழிலாளர்கள் நல்வாழ்வு பெற முடியும் கிராமத்திலே முன்னேற்றம் செய்ய முடியும், சாலை அமைக்க முடியும், பள்ளிக் கட்டடங்களை கட்ட முடியும் என்று நான் கூறிக்கொள்கிறேன்.

ஆளுநர் உரையிலேயிருந்து ஆளுங்கட்சியினுடைய அந்தச் சிந்தனை ஓட்டம் கொஞ்சம் திரும்பியிருக்கிறது இந்த பட்ஜெட்டில். மத்திய அரசை தாஜா செய்யலாம், அல்லது கொஞ்சம் அட்ஜஸ்ட் செய்யலாம் என்ற சிந்தனை இருந்திருக்குமோ என்னவோ எங்களுக்குத் தெரியாது.

இன்றைக்கு மத்திய அரசு என்றால் என்ன என்று தெளிவாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தெரியும். அவர்களையும் கலைத்தவர்கள்தான். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் தெரியும். அவர்களையும் கலைத்தவர்கள்தான் கலைப்பதற்கு மத்திய அரசில் இருப்பவர்களுக்கு மிகுந்த விருப்பமும் ஆசையும் இருக்கிறது என்பதால்தான் இந்திய அரசியல் சட்டத்தில் அதற்கென இருக்கிற பிரிவையே திருத்த வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கட்சியும் கூறுகிறது. மக்களுடைய விருப்பப்படி ஒரு அரசு வருகிறது. அதைக் கலைப்பதற்கு அவர்கள் யார்? பாராளுமன்றத் தேர்தலில் இந்திராகாந்தி வரவேண்டுமென்று வாக்களித்த தமிழக மக்கள், அதே இந்திரா காந்தியினுடைய கட்சியைச் சட்ட மன்றத் தேர்தலில் தவிடுபொடியாக்கிவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சி கூட்டணிக்கு ஓட்டளித்தார்கள் என்றால், இந்திரா காந்திக்கு எதிராகத் தமிழக மக்கள் தீர்ப்பளித்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 1-20]

மீண்டும் கலைப்பாம் என்று காங்கிரஸ் நண்பர்கள் மிரட்டுகிறார்கள். கலைத்தப் ப ... கலைத்தால் தமிழக மக்கள் நீங்கள் இருக்கின்ற ... த்தில் இருந்து உங்களை காலி செய்வார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பாயின்ட் ஆப் ஆர்டர், நம்முடைய பொதுவுடைமைக் கட்சி தோழர் மாண்புமிகு அம்பிகாபதி அவர்கள் கலைப்போம் என்று காங்கிரஸ் கட்சியினர் சொன்னார்கள் என்று சொன்னார்கள். யார் சொன்னார்கள்? எங்கே சொன்னார்கள்? எப்போது சொன்னார்கள்?





**திரு. மு. அம்பிகாபதி:** நீங்கள் கலைக்கவே இல்லையா?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** காங்கிரஸ் கட்சியினர் கலைப்போம் என்று சொன்னதாக சற்றைக்கு முன்பு சொன்னார்கள், எங்கு, எப்போது, சொன்னார்கள் என்று சொன்னால் உதவிகரமாக இருக்கும்.

**திரு. மு. அம்பிகாபதி:** கலைப்போம் என்று சொன்னார்கள் என்று நான் சொல்லவில்லை. அந்த மாதிரி, அந்த பாணியில், நாங்கள் கவனித்துக் கொள்வோம் என்று சொன்னார்கள். நாங்கள் கவனித்துக் கொள்வோம் என்று சொன்னால் என்ன அர்த்தம்? ஓராண்டுக்கு முன்னால் கலைத்திருக்கிறோம் ஜாக்கிரதை என்று எச்சரிக்கை செய்கிறீர்களோ என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். அதுதான் விஷயம். ஏனென்றால் உங்களிடத்தில் அந்த அதிகாரம் இருக்கின்றது. மக்கள் இதே மத்திய அரசாங்கத்தைப் பதம் பார்த்திருக்கிறார்கள். ஞாபகம் இருக்கட்டும். எந்த அரசையும் கலைப்பதாலேயே அதை அழித்து விடலாம் என்று யாராவது நினைத்தால், ஒரு கொடி மரத்தை வெட்டுவதனாலேயே அந்தக் கட்சியை அழித்து விடலாம் என்று யாராவது நினைத்தால் அவனை விட பெரிய புத்திசாலி இருக்க முடியாது. அதைப் போல ஒரு ஆட்சியை கலைத்துவிட்டால் அந்தக் கட்சி அழிந்து விடும், தடை செய்தால் அந்தக் கட்சி அழிந்து விடும் என்று கருதுகின்ற சிந்தனை ஓட்டம் இந்த ஜனநாயக யுகத்துக்குத் தேவையற்றது. எனவேதான் கலைக்கின்ற அதிகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று நாங்கள் கருதுகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்கு ஆளுங்கட்சியினுடைய சிந்தனை ஓட்டத்தில் மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தை நகராட்சி மன்றங்களாக நடத்துகிறது என்று மரியாதைக்குரிய அண்ணா அவர்கள் ராஜ்யசபாவிலே தெரிவித்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். உண்மைதான். இங்கே இருந்து சகலவிதமாக வரிகளை வசூலிக்கின்ற அதிகாரம் அவர்களிடம் இருக்கிறது மெட்ராஸ் ஏர்போர்ட்டிலே இருந்து ஒருவன் சிங்கப்பூர் பிளேன் ஏற வேண்டும் என்றால் ஏர்போர்ட் டாக்ஸ் 100 ரூபாய். ஏர் போர்ட்டு மெட்ராசில் இருக்கிறது. வசூலிக்கின்ற அதிகாரம் சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு,

வறட்சி, வெள்ளம், புயல் இவைகள் எல்லாம் இயல்பானவை. சோவியத் நாட்டிலே வறட்சி வராது. அங்கே பெய்யெனப் பெய்யும் மழை. நினைத்தால் பெய்யும். There is no b min in Ru...

போய் வேண்டுமானால் பாருங்கள். வறட்சி கிடையாது. புயலும் கிடையாது. புயலைக் கட்டுப்படுத்துகின்ற விஞ்ஞான முறைகள் வெள்ளத்தைத் தடுத்து நிறுத்துகின்ற விஞ்ஞானம் அது சோவியத் யூனியனிலே இருக்கிறது. மற்ற சோவியத் நாடுகளிலும் இருக்கின்றன. இங்கே வறட்சி வந்தால்

பெய்யென சொன்னாலும் மழை பெய்யாது. அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அதைச் சொல்வதிலே நமக்கு என்ன வெட்கம். அதைச் சொல்வதிலே நமக்கு என்ன துயரம். தமிழகத்திலே வறட்சி வந்திருக்கிறது. ஹைதராபாத்திலே கூட லாரியிலே தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கப்படுகிறது. தினமலர் பத்திரிகையிலே போட்டோவைப் பார்த்தேன். தமிழகத்திலே மதுரையிலே குடகனாறு பகுதியிலே வெள்ளம் வந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் புயல் வீசியது. மக்கள் கடுமையகாப் பாதிக்கப்பட்டார்கள். புயல் வெள்ளம், வறட்சி என்பது இங்கே இருக்கக்கூடிய சீதோஷ்ண நிலைக்கு இயல்பானது. இயற்கையானது. தமிழகத்திலே இருக்கக்கூடிய வறட்சி கட்டுக்குள் இருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்படி அது கட்டுக்குள் இருக்கிறது? எப்படி இருக்க முடியும்? மத்திய அரசாங்கத்திடம் முதல் தவணையாக 100 கோடி ரூபாய் கேட்டோம். மத்திய அரசாங்கத்துக்கு வேறு என்னதான் வேலை. யாரின் ரூர் பண்ணுவதா வேலை. சென்ட்ரல் கவர்ன்மென்டுக்கு இங்கே இருந்து வரிகளை வசூல் பண்ணி பகிர்ந்து கொடுப்பதுதான வேலை. எங்களிடம் ராணுவம் இருக்கிறது. ஜாக்கிரதை என்று சொல்லுகிறீர்களா. ராணுவம் வைத்திருப்பதும் நோட் அடிப்பதும் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பு . மக்கள் தேர்ந்தெடுத்து மத்திய அரசாங்கத்தை அமர்த்தி இருக்கிறார்கள். இங்கே உள்ளவர்கள் தேர்ந்தெடுத்து மாநிலத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள்.

வறட்சி காரணமாக இன்றைக்கு பல இடங்களில் வெளியேறியிருக்கிறார்கள். திருச்சியிலிருந்து வெளியேறியிருக்கிறார்கள். மன்னார்குடிக்கு வந்திருக்கிறார்கள். மக்கள் ஆடுமாடுகளை விற்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிடுகிறது. இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் இருந்து வெளியேறி இருக்கிறார்கள்.

அதனால்தான் திருப்பத்தூர் தேர்தலை ஜீன் மாதத்திலே நடத்தக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இன்றைக்கு பட்ஜெட்டிலே விவசாயத் தொழிலாளர்களுக்கு கேரளாவில் சில நன்மைகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே இன்னும் அவர்களுக்குக் குடிமனைப் பட்டாக்கள் பல இடங்களிலே கொடுக்கப்படவில்லை. திருப்பரங்குன்றத்தில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர்களுடைய சங்கத்தினுடைய மாநாடு நேற்றிலிருந்து நடத்து கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு விபத்துக்களில் நஷ்ட ஈடு போன்ற இன்னும் பல்வேறு திட்டங்கள் இதிலே குறிப்பிடப்படவில்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு என்று ஒரு சட்டம் வந்தது. அது செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டது. அந்த செலக்ட் கமிட்டி நாங்கள் இருக்கும்போது கலைக்கப்பட்டது. சர்க்காரும் கலைக்கப்





பட்டது. இப்போது அந்த சட்டம் என்ன ஆயிற்று. அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருப்பதைப் கருத்தில் கொண்டு தீவிரமான முறையில் மாற்றங்களைச் செய்வதற்கான முறையிலே இன்றைக்கு இந்த பட்ஜெட்டிலே இன்னும் பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அடுத்து மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளுக்கு ஜெனரேட்டர் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது போதாது. தாலுக்கா தலைமையிட மருத்துவ மனைகளுக்கும் ஜெனரேட்டர் கொடுக்கப்பட வேண்டும். ஆபரேஷன் நடக்கும்போது கரண்ட் போய்விடுகிறது. அல்லது தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த பிளான்டில் எகுப்மென்ட் சரியாக இல்லை என்று சொல்வார்கள். சோவியத் யூனியனில் இது எல்லாம் சரியாக இருக்கிறது. சினிமாக்கொட்டகைகளில் இந்தக் காலத்தில் ஜெனரேட்டர் இருக்கிறது. சினிமா இந்த நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியம் அங்கே ஜெனரேட்டர் இல்லை என்றால் மக்கள் உயிர் போய் விடும். சினிமாக்கொட்டகைகளில் இருக்கிறபோது மருத்துவமனைகளில் இருக்கிற ஆபரேஷன் தியேட்டர்களில் இருக்கக் கூடாதா? கும்பகோணத்தில் கொடுத்த ஜெனரேட்டர் செட்டை பொருத்துவதற்கே ஜாதகம் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். ரோட்டரி சங்கத்தின் ஆதரவில்,மாண்புமிகு உறுப்பினர் பக்கீர் முகமது அவர்களின் முயற்சியால் அங்கே ஒரு ஜெனரேட்டர் ப்ரியாகக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை பிட்டிங் செய்வதற்கு டெகனிகல் ஸ்பெஷலிஸ்ட் ஆராய்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** [குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்களுக்குத் தெரியும். நான் கூட அண்மையில் கும்பகோணம் மருத்துவ மனைக்குச் சென்று பார்த்தேன். அப்போதே சொல்லி இருக்கிறேன். உடனடியாக அந்த ஜெனரேட்டர் அங்கே பொருத்தப்பட்டு விடும். அதே மாதிரி 100 படுக்கைகளுக்கு மேற்கொண்டு எங்கெங்கு மருத்துவமனைகள் இருக்கின்றனவோ அது தாலுக்கா மருத்துவ மனையாக இருந்தாலும் அதற்கெல்லாம் ஜெனரேட்டர் இரண்டாவது பேசில் கொடுக்க வேண்டும் என்கிற முறையில் சிந்தனை செய்து கொண்டு இருக்கிறோம். முன்பு இருந்த மந்த நிலை இல்லாமல், மிக விரைவில் ஜெனரேட்டர் கொடுப்பதற்கான திட்டங்கள் தீட்டிக் கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** சார், ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சபையில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் சம உரிமை உண்டு. மாண்புமிகு அமைச்சர்களுக்கு வேண்டுமானால் கூடுதலாக இருக்கலாம். ஆனால்

[திரு. மு. அ. ரகுநாதன்] [1981 மார்ச் 23

உறுப்பினர்களிடையே எந்தவிதமான பாரபட்சம் இருக்கக் கூடாது. இங்கே இரண்டாவது வரிசையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மட்டும் பாம்புத் தலை மைக் வைத்து விட்டு, எங்களுக்கு மட்டும் மத்து மைக் வைத்திருப்பது நியாயமா? எங்களுக்கும் அந்த மைக் வைக்கக் கூடாதா?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. ரா. உமாநாத்:** அவர் சொல்வது உண்மைதான். அங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் குனிந்து கொண்டு பேச வேண்டி இருக்கிறது. அவர்களுக்கும் இந்த மாதிரி மைக் வைக்க அரசு ஏற்பாடு செய்யவேண்டும். ஏற்கனவே அது பற்றி கேட்டு இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பற்றி யோசிக்கலாம் உட்காருங்கள். திரு அம்பிகாபதி, சீக்கிரம் முடித்து விடுங்கள்.

**திரு. மு. அம்பிகாபதி:** நான் இதுவரையில் 10 நிமிடம் தான் பேசியிருக்கிறேன். நாளைக்குப் பத்து நிமிடம் பேச அனுமதிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை (1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 24 ஆம் நாள்) 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

226. சென்னை நகர 12.10 திட்டப்பிரிவின் ஔவை நகர் பிரிவிற்கு விரிவான மேம்பாட்டுத் திட்டத்தை வெளியிடுவது குறித்து வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளிடப்பெற்ற 1313 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு.

[தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



1981 மார்ச் 23]

227. வட ஆற்காடு மாவட்டம் கரிகிரியிலுள்ள சிப்லின் தொழுநோய் ஆராய்ச்சி பயிற்சி நிலையத்திற்கு சிகிச்சைக்காக தேவைப்படுகிற மருந்துகள் இரசாயன பொருட்கள் வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது விற்பனை வரி விலக்களிப்பது குறித்து வணிக வரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 6 ஆம் நாளிடப்பெற்ற 25 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

228. சென்னையிலுள்ள திருவாளர்கள் யூனியன் கார்பைடு இந்தியா நிறுவனம் ஆவடியிலுள்ள பத்மா பேக்கேஜஸ் நிறுவனத்திற்கு 508 மெட்ரிக் டன் எடையுள்ள பிளாஸ்டிக் நுணுக்குகள் விற்பனை செய்வதன் மீது விதிக்கத்தக்க விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரிகள்—மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 13 ஆம் நாளிடப்பெற்ற 43 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு, [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

229. முன்னாள் பொது (காவல்) துறையின் 1935 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று தோன்றி, 1935 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 20 ஆம் நாளிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் 1-ல் வெளியான 173 ஆம் எண் அறிவிப்பில் திருத்தம் ஒன்று செய்வது குறித்து வணிக வரிகள் மற்றும் அறக்கட்டளைகள் துறையின் 1981 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 5 ஆம் நாளிடப்பெற்ற 16 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1935 ஆம் ஆண்டு பந்தைய வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 20/1935) 10 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

230. சென்னை ஜாம்பஜார் பகுதிக்கு விரிவான மேம்பாட்டுத் திட்டம் வெளியிடுவது குறித்து, வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித்துறையின் 1980 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாளிடப்பெற்ற 1288 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர்—நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

231. தமிழ்நாடு பஞ்சாலைகள் கழகத்தின் 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் வரையிலான ஆண்டறிக்கையும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தில் 1979 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு மார்ச்

திங்கள் 31 ஆம் நாள் வரையிலான செயல்முறை குறித்த அரசின் மறு ஆய்வும். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

232. நெருக்கடி நிலைக்கு முன்னால் 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 1 ஆம் நாளிலிருந்து 1975 ஆம் ஆண்டு மே திங்கள் 31 ஆம் நாள் வரை மூன்றரை ஆண்டு காலத்தில் நடந்த அத்துமீறல்கள் குறித்து விசாரிப்பதன் பொருட்டு நீதிபதி திரு. W. S. கிருஷ்ணசாமி நாயுடுவைக் கொண்டு அமைக்கப்பட்ட தனி நபர் குழுவின் ஆறாவது இடைக்கால அறிக்கை. (தமிழ்) (1952 ஆம் ஆண்டு விசாரணைக் குழுச் சட்டத்தின் (மத்திய சட்டம் 60/1952) 3 (4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

67. 1981–82 ஆம் ஆண்டிற்கான 1 முதல் 16 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

68. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண் 17 இன் விரிவான மானியக் கோரிக்கைகள்,

69. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 18 மற்றும் 19 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

70. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 20, 22 மற்றும் 48 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

71. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 21 25, 45 மற்றும் 54 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

72. 1981–82 ஆம் ஆண்டிற்கான 23, 28 முதல் 35 வரையிலான கோரிக்கைகளின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

73. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 24, 26, 27 மற்றும் 49 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

74. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 36 மற்றும் 50 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

75. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37, 38 மற்றும் 51 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்,



76. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39, 52 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

77. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 40 முதல் 44 வரை மற்றும் 46, 47, 53 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

78. 1981 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 43, 55, 56 ஆகியவற்றின் விரிவான மானியக் கோரிக்கைகள்.

79. பதவிகள், சம்பள வீதங்கள் பற்றிய விவர அறிக்கை (1981–82) (ஆங்கிலம்).

80. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 37—பொதுப்பணிகள்—கட்டிடங்கள் மற்றும் 51—பொதுப்பணிகள் — கட்டிடங்கள் குறித்த மூலதனச்செலவு ஆகியவற்றின் பணி குறித்து விவரங்கள் (ஆங்கிலம்).

81. 1981–82 ஆம் ஆண்டிற்கான கோரிக்கை எண்கள் 39—சாலைகளும் பாலங்களும், 52—சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு ஆகியவற்றின் பணி குறித்த விவரங்கள் (ஆங்கிலம்).

82. 1981–82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசின் ஆண்டு நிதி நிலை விவரம் (வரவு செலவுத் திட்டம்).

83. 1981–82 ஆம் ஆண்டில் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு தமிழ், ஆங்கிலம்).

84. 1981–82 ஆம் ஆண்டின் நிதி நிலைக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

85. 1981–82 ஆம் ஆண்டிற்கான நிதி நிலைக் குறிப்பின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

86. 1981–82 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களின் பட்டியல் (பகுதி II திட்டங்கள்) (தமிழ்—ஆங்கிலம்).

87. 1981–82 ஆம் ஆண்டுத் திட்டம் (நிதி-நிலைக் குறிப்பு திட்ட இணைப்பு) (தமிழ், ஆங்கிலம்).

88. 1981–32 ஆம் ஆண்டில் வருவாய் குறித்த விரிவான வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகள்.

[1981 மார்ச் 23

89. வரவு செலவுத் திட்ட விளக்க நூல், 1981–82 (தமிழ், ஆங்கிலம்).

90. தமிழகத்தின் ஆறாவது ஐந்தாண்டுத்திட்டம் பற்றிய சுருக்கம், 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

91. 1981–82 ஆம் ஆண்டு (நிதி நிலை அறிக்கை குறித்து நிதியமைச்சர் மாண்புமிகு டாகடர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்.)

92. 1981–82 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட உரையின் இணைப்புகள் (தமிழ், ஆங்கிலம்).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1981 மார்ச் 24.

பங்குனி 11, ரௌத்திரி—திருவள்ளுவர் 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

'' இளைதாக முள்மரம் கொல்க, களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து ''.

முள்ளையுடைய மரத்தை அது சிறியதாக இருக்கும்போதே களைந்து எறிதல் வேண்டும். அது முதிர்ந்தபோது தன்னை வெட்டுகிறவர்களின் கையையே வருந்துமாறு செய்யும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மறைமலை நகரில் டான்சி தொழிற்சாலை.

*வினா எண். 452—திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்தில் உள்ள மறைமலை நகரில் டான்சி தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

(ஆ) அதன் மதிப்பீடு என்ன ?

(இ) கட்டிட வேலை முடிவுபெற்றதா ?

(ஈ) தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) தற்போது இண்டியில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் டான்சியின் சார்பு நிறுவனமான தமிழ்நாடு மோபெட்ஸ்க்காக மறைமலை நகரில் நிறுவப்படவிருக்கும் தொழிற்சாலைக்கான கட்டுமான வேலைகள் 1976-ஆம் வருடம் ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

(ஆ) ரூ. 17,39,000.

(இ) வடக்குப்புறம் ஒளிக்கண்ணாடி பதித்தல் மற்றும் மின் கம்பிகள் இழுத்தல், ஓய்வுக் கூடத்திற்கான மின் இணைப்பு ஆகியவைகளைத் தவிர மற்றபடி, தொழிற்சாலைக் கட்டுமான வேலைகள் முடிவடைந்துவிட்டன.

(ஈ) இத்திட்டம் கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தொழிற் பிரிவுகளில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 18 ஆம் தேதியிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. மறைமலை நகரில் எழுப்பப்படும், அதன் நிரந்தர தொழிற்சாலைக் கட்டடங்கள் மற்றும் மின் வசதிகளுக்கான வேலைகள் முடிவடைந்த பின் இத்திட்டம் அங்கு செயல்படும்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் 1976 ஆம் ஆண்டிலே அந்தக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் 1976 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்ட அந்தக் கட்டிடம் இதுவரையில் கட்டப்பட்ட கட்டிடமாக இருக்கிறதே தவிர அந்தக் கட்டிடத்தில் தொழிற்சாலை தொடங்கப்படவில்லை. காலியாக இருக்கும் அந்தக் கட்டிடத்தில் பலர் புகுந்து அசுத்தப்படுத்தவும் நாசப்படுத்தவும் செய்கிறார்கள். அது மட்டுமல்ல. குறிப்பாக அந்தத் தொழிற்சாலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, விரைவில் அது ஆரம்பிக்கப்படும்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** துணைத் தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலை விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று சொன்னார்கள். அதுவும் எப்போது என்று சொல்லவில்லை. மறைமலை நகரில் ஆரம்பிக்கப்படும் அந்தத் தொழிற்சாலையில் எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும்? அந்தத் தொழிற்சாலையில் என்னென்ன உறுப்புகள் தயாரிக்கப்படும்? அந்தத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும்போது அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவரவர்களே, எவ்வளவு பேர்களுக்கு அந்தத் தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு நல்க முடியும் என்று இப்போது அறுதியிட்டுச் சொல்லமுடியாது. ஆனால் அந்தத் தொழிற்சாலை தொடங்கும்போது அங்கே 20,000 மோபெட்ஸ் வாகனங்கள் தயாரிக்கும் ஒரு தன்னிறைவு நிலையமாக அதை ஆக்குவதற்கு அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.



காட்டாம்பூண்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம்.

*வினா எண். 453—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கம் துவங்கப்பட்டது முதல் காட்டாம்பூண்டி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வேலூர் கூட்டுறவு மைய வங்கி மூலம் கறவை மாடு கடன் எத்தனை நபருக்கு வழங்கப்பட்டது?

(ஆ) வழங்கிய நபர்களுக்கு கடன் தொகையில் மானிய தொகை எத்தனை நபருக்கு வரவு வைக்கப்பட்டது?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) பன்னிரெண்டு நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) பன்னிரெண்டு நபர்களுக்கு வரவு வைக்கப்பட்டுள்ளது.

**திரு. பாபு ஜனார்த்தனன்:** துணைத் தலைவரவர்களே, இந்த மானியத் தொகை அரிசன மக்களுக்கு மட்டும் தரப்படுகிறதா? அல்லது மற்ற நலிந்த பிரிவினருக்கும் தரப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, அந்தச் சங்கத்தில் இருக்கிற தகுதி வாய்ந்த அனைத்து உறுப்பினர்களுக்கும் இந்த மானியம் தரப்படுகிறது. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற விவரத்தின்படி பன்னிரெண்டு உறுப்பினர்கள் 24,000 ரூபாய் அளவுக்கு பெற்றிருக்கிறார்கள். அதில் 9,120 ரூபாய் மானியமாக பன்னிரெண்டு பேர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கறவை மாடு வாங்குவதற்காகச் செய்யக்கூடிய உதவி சிறிய விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் கிடைக்காமல் இருக்கின்றது. இதற்காக மத்திய அரசு ஒதுக்கிய அதிகமான மானியத் தொகைகூட சென்ற ஆண்டு செலவழிக்கப்படாமல் விடுபட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா? கூட்டுறவு வங்கிகள் போன்றவை இவ்வாறு சிறிய விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் கடன் கொடுப்பதைப் பொறுத்தவரையில் கொஞ்சம் தாராளமாக கொடுத்து மானியத் தொகையை பூரணமாக பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன விவரங்கள் என்னிடத்திலே இல்லை. ஆனால் அவர்கள் சொன்ன மானியப் பிரச்சினை பற்றி அரசு அனுதாபத்தோடு கவனித்துத் தக்க நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஸ்ரீ பாகம்பிரியாள் கோவில் நிர்வாகம்.

*வினா எண். 454—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டுதோறும் பல லட்சக்கணக்கான ரூபாய் வருமானம் வரும் திருவாடாணை தாலுக்கா திருவெற்றியூர் ஸ்ரீபாகம்பிரியாள் கோவில் நிர்வாகத்தை அரசு எடுத்துக் கொள்ளும் யோசனை பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருவாடாணை வட்டம், திருவெற்றியூர் அருள்மிகு வால்மீகநாத சுவாமி சமேத அருள்மிகு பாகம்பிரியாள் கோயில் அறநிலயைத்துறை ஆளுகைக்குள் ஏற்கெனவே உள்ளது.

(ஆ) சிவகங்கை தேவஸ்தான கோயில்களில் இதுவும் ஒன்று, பரம்பரை அறங்காவலர்களாக திரு. கார்த்திகேய வெங்கடாசலபதி ராஜா இருந்து வருகிறார்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கோவில் தர்மகர்த்தாக்கள் இன்றைக்கு பரம்பரை பரம்பரையாகத்தான் ஆயிரக்கணக்கான கோவில்களில் வந்துகொண்டிருக்கிறார்கள். இந்தப் பரம்பரை முறையை ஒழித்துவிட்டு, தற்போது கிராம முன்சிப், கர்ணம் ஆகிய பதவிகளை ஒழித்தது மாதிரி, வேறு முறையில் நியமிக்கின்ற வகையில் இதற்கும் ஒரு சட்டம் கொண்டு வர அரசு உத்தேசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் இருக்கின்ற கோயில்களில் பல்வேறு தவறுகள் நடப்பதாக அரசுக்குக் குற்றச்சாட்டுகள் வந்துகொண்டு இருக்கின்றன. அதுபற்றித் தீவிரமாக அரசு பரிசிலித்துக்கொண்டு வருகிறது. அரசு தக்க சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது.

திரு. செ. சிவசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே இந்தப் பரம்பரை முறையை ஒழிப்பதற்கு தக்க நடவடிக்கையை அரசு எடுப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தப் பரம்பரை முறையின் காரணமாக பல இடங்களிலே பல்வேறு வகையான ஊழல்கள் நடந்துகொண்டிருக்கின்றன.



கோயில் சொத்துக்களை பலவகைகளில் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். ஆகவே இந்த மாதிரி நிலைமைகளை ஒழிப்பதற்காக அரசே நேரடியாக அந்தக் கோயில்களை எடுத்துக்கொள்ள உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோயிலின் பரம்பரை அறங்காவலரைப் பற்றிக் கூட சுமார் 41 குற்றச்சாட்டுகள் பொது மக்களிடத்திலே இருந்து அறநிலையத்துறைக்கு வந்திருக்கின்றது. அதைப் பற்றி விவரங்கள் கேட்கப்பட்டு அது சம்பந்தமாக தக்க பதில்கள் இன்னும் கிடைக்கப்பெற வில்லை. ஆனால் இப்படி பரம்பரை பரம்பரையாக அறங்காவலர்கள் இருக்கின்ற ஆலயங்களை அறநிலையத்துறை எடுத்துக்கொள்வதிலே பல சட்டச் சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணைகளைப் பெற்றுவிடுகிறார்கள். இந்தத் திட்டம் கூட உயர்நீதிமன்றத்திலே ஏற்படுத்தப்பட்ட ஒரு முடிவின் கீழ்தான் பரம்பரை பரம்பரையாக அறங்காவலர்களாக இருந்து வருகிறார்கள். ஆகவே இதிலே பல்வேறு சட்டப் பிரச்சினைகளும், நடைமுறைப் பிரச்சினைகளும் இருக்கின்ற காரணத்தால் அரசு இதுபற்றித் தீவிரமாகப் பரிசீலித்துக் கொண்டு இருக்கின்றது. ஏதாவது சட்டத்தின் மூலம் இத்தகைய முறைகளை மாற்ற இயலுமா என்பதைப் பற்றி அறநிலையத் துறையும் அரசும் தீவிர கவனம் செலுத்திவருகின்றது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டதைப் போல பல்வேறு கோயில்களும் அவற்றின் நிர்வாகமும் மிகவும் பரிதாபப்படக்கூடிய அளவுக்கு சீர்கெட்டு இருக்கின்றன. இந்த ஸ்ரீ பாகம்பிரியாள் கோவில் நிர்வாகம் என்பது மட்டுமல்ல, எனது தொகுதி மேலநெட்டூரில் 15 ஆண்டு காலமாக பெரிய கோவில் தேர் ஓடாமல் இருக்கின்றது. திருப்புவனத்தில் உள்ள புகழ்பெற்ற சவுந்திரநாயகி அம்மன் கோயில் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. ஆகவே இப்படிப் பட்ட கோயில்கள் மிகவும் சீர்கெட்ட நிலையில் இருப்பதாலும், அரசு அவற்றை எடுத்துக்கொள்வதிலே பல்வேறு சட்டச் சிக்கல்கள் இருப்பதாலும் இதுபற்றி அவசரமாக யோசித்து இதற்கான மிக நல்ல சட்டத்தை விரைவிலே கொண்டுவருவதன் மூலமாக சிக்கல்களைத் தீர்க்க அரசு முன்வருமா ?

[முற்பகல் 9–10]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சிவகங்கைச் சமஸ்தானத்திற்கு உட்பட்ட ஆலயங்கள் 83. அறக்கட்டளைகள் 22. ஆகவே, இந்த அளவுக்கு மிகப் பெரிய அளவில் ஆலயங்களையும், அறக்கட்டளைகளையும் ஒருவர் தான் நிர்வகித்து வருகிறார்.

மாண்புமிகு உறுப்பினர் திரு பாரமலை அவர்கள் தெரிவித்ததைப் போல இந்த ஆலயத்தில் 8,16,717 ரூபாய் 1388-வது பசலிக்கு வருமானம் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலயத்தில் ஒரு ஆண்டிற்கு உண்டியலில் மாத்திரம் 2,54,242·51 ரூபாய் என்று தகவல் சொல்கிறார்கள். பிரார்த்தனை மூலம் பொன் மாத்திரம் 380 கிராம், என்றும், வெள்ளி 14 கிலோ 235 கிராம் வருமானம் என்றும் சொல்கிறார்கள். இது தவிர மற்றப் பொருள்களை ஏலங்கள் விடுவதன் மூலம் ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை வருமானம் வருகிறது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி மிகப் பெரிய அளவிலான ஆலயங்களை நிர்வாகத்தில் வைத்துக் கொண்டிருக்கிற ஒருவர், அந்த ஆலயங்களுக்கு பல்லாயிரக்கணக்கில் வருகிற மக்களுக்கு எந்தவித வசதியையும் செய்து தருவதில்லை என்றும், எந்தவிதமான பராமரிப்பும் செய்வது இல்லை என்றும், மிகப் பெரிய அளவில் புகார்கள் அரசுக்கும், அறநிலையத் துறைக்கும் வந்து கொண்டிருக்கின்றன. இதுபோல் பல குற்றச்சாட்டுகள். இப்படிப்பட்ட பரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரால் இருப்பவர்கள் மீது வருகின்றன. அவர்கள் சட்டப்படி மேல் அதிகாரிகளை உள்ளே நுழைய விடாமல், தக்க பாதுபாப்புகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே சட்டத்தின் துணையோடுதான் அங்கே நாம் உள்ளே நுழைய வேண்டியிருக்கிறது. அதற்கான தீவிர முயற்சிகளை அறநிலையத்துறையும், அரசும் எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, இதிலே ஏற்படக் கூடிய பல்வேறு ஊழல்கள் சம்பந்தமாக 41 குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்று சொன்னார்கள். பூராவும் சொல்லத் தேவையில்லை. என்றாலும், அந்த 41 குற்றச்சாட்டுகளில் எது சிவியராக--பிரதான குற்றச்சாட்டுகளாக இருக்கிறன. அவற்றின் நேச்சர்-தன்மை என்ன என்பதைப் பற்றிக் கூறுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக குற்றச்சாட்டுகளின் எண்ணிக்கை தான் இங்கே குறிப்பாக இருக்கிறதே தவிர வேறு விவரங்கள் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் அதற்கான தகவல்களை சேகரித்து தரமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆண்டித்தேவர் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தமிழகம் முழுவதிலும் உள்ள பல ஆலயங்களில், அறங்காவலர்களாக இருக்கும் தனியார்கள் மீது பல ஊழற்



குற்றச்சாட்டுகள் இருப்பதாகச் சொன்னார்கள். அவர்கள் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களை தாங்களாகவே இஷ்டப்படி விற்றுக் கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு அந்த நிலங்களை விற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலங்களை எல்லாம் அரசோ, அறநிலையத் துறையோ எடுக்க வேண்டும் என்று பல மனுக்கள் கொடுக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் இல்லை. அவர்கள் நிலங்களைத் தொடர்ந்து விற்றுக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த நிலங்களைக் கைப்பற்றி, அவைகளையெல்லாம் கோவில் சொத்துக்களாக மாற்ற, இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் பற்றி வருகிற குற்றச்சாட்டுகளின், மிகப் பெரிய குற்றச்சாட்டுகளில் ஒன்று, இப்படி ஆலய சொத்துக்களை தங்கள் இஷ்டப்படி இஷ்டப்பட்டவர்களுக்கு விற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது, அப்படிப்பட்ட நடவடிக்கைகளை தடுத்து, விற்கப்பட்ட சொத்துக்களை திரும்ப ஆலயங்களுக்கு பராதீனம் செய்வதற்கு பல் வேறு நடைமுறை சங்கடங்கள், சட்ட சிக்கல்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் அவர்கள் வழக்கறிஞர். அவருக்கு நன்றாகத் தெரியும், நாம் நியாயமாக இந்தக் காரியங் களுக்குகாக சட்டத்தின் துணை கொண்டு கோர்ட்டுக்குப் போனால் அங்கே அவரைப் போன்ற வழக்கறிஞர்கள், ஆலயங்களுக்கும், ஆண்டவனுக்கும் விரோதமாக வழக்காடி, தனிப்பட்டவர்களுக்கு வெற்றியைத் தேடித் தருகிறார்கள் என்பது. ஆகவே அப்படிப் பட்ட செயல்களை, ஆண்டவனுக்கும், ஆலயங்களுக்கும் விரோதமாக வழக்கறிஞர்கள் வழக்காடும் செயல்களைச் செய்ய வேண்டாம் என்று, மாண்புமிகு உறுப்பினர் ஆண்டித் தேவர் போன்றவர்கள் வெளியே எடுத்துச் சொல்லி, உதவி செய்தால், அது அரசுக்கும் அறநிலையத் துறைக்கும் மிகுந்த பலனைக் கொடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பழைய, புராதனயான கோவில்கள், மற்றும் பிரசித்திபெற்ற, பாடல்பெற்ற பாண்டியன் ஸ்தலம் பதினான்கு என்று சொல்லக்கூடிய அத்தனை பெரிய கோவில களிலும், சிவகங்கை தேவஸ்தானத்தால் நிர்வகிக்கக்கூடியது. பரம்பரை அறங்காவலர்களையும்—அறங்காவலர்களை பூர்ணமாக ஒழித்துக் கட்ட வேண்டும் என்று சொல்லவில்லை— எங்கெங்கு தவறுகள் நடக்கின்றனவோ அந்தத் தவறுகளை நீக்குவதற்கு சட்டப்படி சரியான முறையில் நடைமுறையில் கொண்டுவராத கோவில்களை நல்ல முறையில் சரியான முறையில் பராமரிக்காத தேவஸ்தானங்களை கண்காணிப்பதற்கு எச். ஆர். ஆண்ட். ஸி. இ. இருந்தும் இப்போதுள்ள சட்டத்திற்கு உட்பட்டு அவற்றைக் கண்காணிப்பதற்கு, கடுமையான முறையில் கண்காணிப்பதற்கு

உடனடியாக வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படுமா? இப்போது பல கோவில்களில் வருடாந்திர, மாதாந்தர கட்டளைகள் எல்லாம் சரியாக நடத்தப்படவில்லை என்பதையும் கவனித்து உடனடியாக அவற்றையும் சீர்திருத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** இதுபோன்ற அற நிலையங்களில் அதுவும் பரம்பரை அறங்காவலர்கள் இருக்கிற அறநிலையங்களில் அறநிலையத்துறையின் நேரடி ஆதிக்கத்திற் குட்பட்ட நிர்வாக அலுவலர்களை நியமிக்க முடிவதில்லை. இந்த தேவஸ்தானத்தில் கூட உயர்நீதிமன்ற விதிகளின்படி அந்த ஸ்கீம்படி அந்த தேவஸ்தான பரம்பரை அறங்காவலரே ஒரு நிர்வாகியை நியமித்துக்கொள்ளலாம் என்பது விதி. ஆகவே, நமது நேரடி நிர்வாகத்தின் கீழ் அந்த ஆலயங்கள் வர முடிவ தில்லை. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பற்றி பரம்பரை அறங்காவலர்களிடம் துணை ஆணையர் கேள்விகள் எழுப்பி விளக் கங்கள் கேட்கிறார்கள். பரம்பரை அறங்காவலர்கள் உங்களுக்கு கேட்க அதிகாரம் இல்லை என்று பதில் தருகிறார்கள். அதற்கு மேல் ஆணையரிடம் மனு செய்தார்கள். அவர்கள் அதைத் தள்ளு படி செய்திருக்கிறார்கள். இப்போது அரசாங்க மட்டத்தில் அவர்கள் அப்பீல் செய்யும் நிலைமையில் இருக்கிறார்கள். இப் படித்தான் நிலைமை நீண்டுகொண்டிருக்கிறது. ஏதாவது சட்ட திட்டங்கள்படி இவைகளுக்குப் பரிகாரம் கண்டாலொழிய இப் படிப்பட்ட தவறுகளை நீக்க முடியாத ஒரு சூழ்நிலை, ஒரு பரிதாபத்திற்குரிய சூழ்நிலை, கோடிக்கணக்கான சொத்துக்களை பல பேர்கள் தெரிந்தோ, தெரியாமலோ கொள்ளையடிக்கிறார் கள் என்று சொல்கிற அளவிற்குத்தான் நிலைமைகள் தமிழகத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஆண்டவன்தான் வழி காட்ட வேண்டும்.

**கோடிக்காட்டிலுள்ள கோயில், மற்றும் கிராமக் காடுகளை காட்டிலாக்கா வில் சேர்த்தல்.**

*வினா எண். 455—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமி மிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோடியக்காட்டில் உள்ள கோயில் மற்றும் கிராமக் காடுகளை காட்டிலாக்காவில் சேர்க்க உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(ஆ) கோடியக்காட்டில் உள்ள வன விலங்குப் புகலிடத்தின் பராமரிப்புக்காகவும், வன விலங்குகளின் பாதுகாப்புக்காகவும், வனவிலங்குப் புகலிடத்தை ஒட்டியுள்ள கிராமக் காடுகளையும், கோயில் நிலங்களையும் அரசு எடுத்துக்கொள்ள' முடிவு செய் துள்ளது.



**திரு. எம். எஸ். மாணிக்கம் :** அந்தக் கிராமத்தில் இருக்கிற
கிராமக் காடுகளை, கோவில் காடுகளை எடுத்துக்கொள்வதில்,
கிராம மக்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், கிராமக்காடு
களிலிருந்துதான் அந்த கிராம மக்கள் தங்கள் இறுதிகாலத்
திற்கு வேண்டிய விறகுகளை வெட்டி அதைப் பயன் படுத்தி
வருகிறார்கள். ஆகவே, அதை மறுத்துவிடாமல் அதற்கு மட்டு
மாவது விட்டுவைக்க அரசு முடிவு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** கோடியக்கரைப்பகுதி
என்பது வனப்பகுதி. அது வன விலங்குகள், பறவைகள் புக
லிடங்களாக, சரணாலயங்களாக சர்க்காரால் சட்டம் இயற்றப்
பட்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அங்கிருக்கிற மிக
உயர்ந்த அதிசயமான பிராணிகளை, மிருகங்களை, பறவைகளைக்
காப்பாற்றுவதற்கு அந்த சுற்றியுள்ள நிலங்களை எடுத்துக்கொள்ள
வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பி
னர் அவர்கள் சொன்னது போல், அந்தப் பகுதி மக்கள் தொடர்ந்து
விறகுகளை காடுகளிலிருந்துதான் பெற வேண்டும் என்பதில்லை
அந்தக் காடுகளிலிருந்து விறகுகளுக்காக வெட்டினால், இப்
போதே காடுகள் அழிந்துகொண்டிருக்கும் நிலை இருக்கிறது.
ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதற்கு மாற்று ஏற்
பாடுகள் தெரிவித்தால் அல்லது வேண்டுகோள் வைப்பார்களா
னால் அதற்குரிய மாற்று ஏற்பாடுகளை அரசு கவனித்து அந்தப்
பகுதி மக்களுக்கு விறகு தருவதற்கான ஏற்பாடுகளை மேற்
கொள்ளும்.

**திரு. எம். எஸ். மாணிக்கம் :** இந்தக் கிராமக் காடுகள்தான்
அந்த கிராம மக்களுக்கு அவர்கள் வளர்க்கிற ஆடுமாடுகளுக்
கெல்லாம் மேய்ச்சல் நிலங்களாகப் பயன்படுகிறது. ஆகவே,
அவற்றை அரசு எடுத்துக்கொண்டால் மேய்ச்சல் நிலத்திற்கு
நிலம் இல்லாமல், அவற்றை மேய்ச்சல் நிலமாக பயன்படுத்தப்பட
முடியாமல் போய்விடும். எனவே, மேய்ச்சல் நிலம் என்று மேய்ச்
சலுக்காகக் கொஞ்சம் இடமாவது ஒதுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அந்தப் பகுதியிலே
எந்தளவிற்கு அந்த எல்லைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன
என்ற விவரங்களைக் கேட்டறிந்து மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் வைத்திருக்கிற கோரிக்கையை ஏற்க இயலுமா என்பது பற்றி
வனத்துறையோடு அரசு பரிசீலித்து திட்டத்தை மேற்கொள்ளும்.

[முற்பகல் 9—20]

**திரு. என். பழனிவேல் :** தலைவர் அவர்களே, இத்தகைய
கிராமக் காடுகளை வனத்துறை எடுப்பதிலே எந்தவிதமான ஆட்
சேபணையும் இல்லை. ஆனால், சாதாரண ஏழை எளிய
மக்கள் சில இடங்களில், காடுகள் இல்லாத புறம்போக்கு
புல்வெளி தரிசுகள் போன்ற இடங்களில் 1 ஏக்கர், 2 ஏக்கர்களை
வைத்துக்கொண்டு வாழக்கூடிய இடங்கள் தமிழகத்தில் நிறைய

இருக்கின்றன. குறிப்பாக, மதுரை மாவட்டத்திலே மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியை யொட்டி பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். வனத் துறைக்குத் தேவையில்லாத, காடுகள் அல்லாத இம்மாதிரி யான நிலங்களை சர்வே செய்து, அவைகளை ஏழைகளுக்கு ஜாரி செய்து கொடுப்பதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு இது தொடர்பற்றக் கேள்வி. என்றாலும், இதன் விளக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். காலியாக அல்லது காடுகள் அல்லாத பகுதி களில்வசிப்பதாக மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறார்கள். நம்முடை நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பங்கு பகுதி காடாக இருக்க வேண்டுமென்பது உலக நியதி. அதை இந்திய அரசும், மாநில அரசும் ஏற்றுக்கொண்ட நியதி. ஆனால், 16 சதவீதம் தான் நாம் காடாக வைத்துக்கொண்டிருக்கிறோம். மற்றப் பகுதி களைக் காடுகளாக்க மரங்கள் வளர்க்கும் திட்டத்தை ஆண்டு தோறும் பல கோடி ரூபாய் செலவழித்து நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம். ஆகவே, அப்பேர்ப்பட்ட பகுதிகளில் காடுகளாக்க மரங்களை நடும் திட்டத்தை அரசு மேற்கொண்டிருக்கிறது. ஆகவே, நீண்ட காலமாக அங்கே ஏழை எளிய மக்கள் விவசாயம் செய்துகொண்டு, வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்கின்ற விவரங்களைத் தனியாகக் குறிப்பிட்ட பகுதிகளைக் காட்டி, அரசாங்கத்திற்குத் தெரிவித் தால், சம்பந்தப்பட்ட இடத்தைப் பற்றித் தனியாக விவரங்கள் சேகரித்து, ஆணைகள் பிறப்பிப்பதற்கோ அல்லது மாற்று ஏற் பாடுகள் செய்வதற்கோ அரசு முயலும்.

வேடந்தாங்கல் பறவைகள் புகலிடம்.

* வினா எண். 456—திரு. து. புருஷோத்தமன் : மற்றும் திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடந்தாங்கல் பறவைகள் புகலிடத்தை மேம்படுத்தி பார்வையாளர்கள் வசதிக்காக அங்கு தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நடைமுறைப்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



**திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல், பறவைகள் சரணாலயம் சுற்றுலாப் பயணிகளை கவரத்தக்க வகையில் உள்ள ஒரு முக்கிய மான கேந்திரமாகும். அந்த இடத்தில் ஒரு சுற்றுலா பயணிகள் விடுதியும், பறவைகள் சரணாலயமும் பல ஆண்டுகளாக சரியான முறையில் பராமரிக்கப்படாமல், அங்கே சுற்றுலாப் பயணிகள் வருவது குறைந்து விட்டது. அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அங்கே ஏற்கெனவே 1,73,000 செலவில் ஒரு ஓய்வு விடுதி கட்டப்பட்டுள்ளது. அங்கே வருகின்ற பார்வை யாளர்கள், குறிப்பாக வேடதாங்கலில் யாரும் ஒரு நாள் முழு வதும் அல்லது இரண்டு நாட்கள் தங்கும் நிலையில் இல்லை. போய்ப் பார்த்துவிட்டு, உடனே திரும்பி விடுகிறார்கள். சமீப காலத்தில் அங்கே பறவைகள் வருவது குறைந்திருக்கிறது என்று தகவல் தந்திருக்கிறார்கள். அதைப் பற்றி அரசு வனத் துறை பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. மேலும் அங்கே மரங்களும், தண்ணீரும் எப்போதும் இருப்பதற்கு ஏற்றவகையில், அப்படிப் பட்ட முயற்சியை வனத்துறை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. சு. பாலன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேடதாங்கல் பறவைகள் சரணாலயத்தில், இந்தப் பறவைகள் தங்கும் சீசனில் அந்தப் பறவைகளைப் பார்ப்பதற்கு குழந்தை கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். ஆனால், போக்குவரத் திற்கு அதிகமாகச் செலவாகின்ற காரணத்தினால், சுற்றுலாத் துறை மூலம் குறைந்த செலவில் போய்ப் பார்ப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோ சனையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர் களோடு கலந்து, அவ்வாறு ஏற்பாடு செய்ய இயலுமா என்பதைப் பற்றி சுற்றுலாத் துறை பரிசீலிக்கும்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் போன்று தமிழ் நாட்டில் வேறு இடங்களில் பறவைகள் சரணா லயம் இருக்கின்றதா? இந்தப் பறவைகள் அங்கே இயற்கை யாகவே வருகின்றனவா ? அல்லது செயற்கையாக வரவழைக்கப் படுகின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்?

[1981 மார்ச் 24

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் போன்ற மிகப் புகழ்பெற்ற மிகப் பெரிய பறவைகள் சரணாலயம் தஞ்சாவூர் மாவட்டத்திலே கோடிக்கரையிலே உள்ளது. உலகத்தின் பல்வேறு பாகங்களிலே இருந்து, பல ஆயிரக்கணக்கான மைல்களிலே இருந்து பறவைகள் ஒவ்வொரு காலங்களிலும், ஒவ்வொரு இடங்களுக்கும் வருவதை வழக்கமாக வைத்துக் கொண்டிருக்கின்றன. அவைகள் இயற்கையாக வருகின்றனவே தவிர, யாரும் செயற்கையாக அந்தப் பறவைகளை அழைத்து வருவதில்லை.

## தூத்துக்குடி சிவன் கோவில் திருப்பணி.

* வினா எண் 457—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, சிவன் கோவில் தெருவில் உள்ள அருள்மிகு சிவன் கோவில் திருப்பணி செய்யும் உத்தேசம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி, அருள்மிகு சிவன் கோயி-லில் உடனடியாக திருப்பணி செய்ய வேண்டிய திருப்பணி வேலைகள் இல்லையாதலால், தற்போது திருப்பணி செய்யும் திட்டம் இல்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது முன்னோர்கள் கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஊரிலும் மூன்று கோயில்கள், நான்கு கோயில்கள் என்று இருக்கின்றன. இவைகள் மிகவும் பழமையான கோயில்கள். திருப்பணி செய்யப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் திருப்பணி வேலை பாதியிலேயே நிற்கிறது. இதை நிவர்த்தி செய்ய என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. திருப்பணிக்காக இந்த அரசு பதவிக்கு வந்த பிறகு எவ்வளவு ரூபாய் தமிழ்நாடு முழுவதற்கும் ஒதுக்கியுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** துணைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, சிவன் கோயிலைப் பற்றிய கேள்வி இது. தமிழகத்தைப் பற்றிய மொத்த விவரமும் அறிய விரும்புகிறேன். தனி கேள்வி போட்டால் எல்லா விவரங்களையும் சேகரித்துத் தர வசதியாக இருக்கும்.



1981 மார்ச் 24]

## வட ஆற்காடு, சேலம் மாவட்டங்களில் மாம்பழ உற்பத்தி.

* வினா எண். 458—திரு. இல. பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் உற்பத்தியாகும் மாம்பழம் அளவு, ஆண்டுக்கு, சராசரி எத்தனை டன்?

(ஆ) இப்பழங்களை, அந்நிய நாடுகளுக்கு அதிகம் ஏற்றுமதி செய்ய, அரசு ஏதாகிலும் செயற்குறிப்பு வைத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) தமிழ்நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 67,000 டன் மாம்பழங்களும், சேலம் மாவட்டத்தில் சுமார் 6,000 டன் மாம்பழங்களும் ஆண்டின் சராசரி உற்பத்தி ஆகும்.

(ஆ) தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

**திரு. இல. பலராமன் :** துணைத் தலைவர் அவர்களே, இதைப் போன்று விவசாயப் பொருள்களை கவர்ச்சிகரமாக, விவசாயிகளின் நன்மையைக் கருதி அன்னியச் செலாவணியைப் பெறும் வகையிலும், பக்குவப்படுத்தி, டப்பாக்களில் அடைத்து, கூட்டுறவுத் துறை மூலமாக மேலை நாடுகளுக்கு அனுப்ப செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி வட ஆறகாடு, சேலம் மாவட்டங்களில் மாம்பழ உற்பத்தியைப் பற்றியதாகும். தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் மாம்பழங்கள் உள் நாட்டில் செலாவணி ஆகி விடுகிறது என்ற போதிலும் உற்பத்தியில் பாதி அளவு கர்நாடகம், கேரளம் போன்ற அண்டை மாநிலங்களுக்கு அனுப்பப் படுகிறது. எதிர்காலத்தில் இவைகளை வெளிநாட்டிற்கு அனுப்பக்கூடிய சாத்தியக் கூறு இருக்கிறதா என்பதை அரசு ஆராயும்.

**திரு. க. இரா. சின்னராசு :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மாவட்டங்கள் வாரியாக மாம்பழம் விளைச்சல் என்ன? தருமபுரி மாவட்டத்தில் கிடைக்கிற மாம்பழத்தை வைத்து, பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிடம் ஏதும் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, உத்தேசம் இல்லை.

[1981 மார்ச் 24

திரு. சேலம் மு. ஆறுமுகம் : துணைத் தலைவர் அவர்களே,
உலகப் பிரசித்திப் பெற்ற சேலத்து மாம்பழங்கள், 30 ஆயிரம்
டன்கள் விளைந்த, சேலம் நகரில் இன்றைக்கு ஆறாயிரம் டன்
னாகக் குறைந்திருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே இந்தப் புள்ளி
விவரங்களின் அடிப்படையில், உற்பத்தியைப்பெருக்க வேளாண்
மைத் துறை மூலமாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படுமா என்
பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்
களே, உற்பததி குறைத்திருக்கிறதா என்பதை ஆராய்ந்து, அப்படி
குறைந்திருந்தால் உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சிகளை அரசு
மேற்கொள்ளும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : துணைத் தலைவர் அவர்
களே, சேலம், வட ஆற்காடு மாவட்டங்களில் ஏராளமாக மாம்
பழங்கள் சீசனில் வருகின்றன. அதிகமாக அவ்வாறு வருகின்ற
காலக்கட்டங்களிலே நல்ல விலை போவதில்லை. அவைகளை
நிறுத்தி வைத்து விற்பதற்குரிய வசதிகளும் இல்லை. இதனால்,
வேலூர், சேலம் மாவட்டங்களில் மாம்பழ சீசன் நேரத்தில், மாம்
பழங்களை கெட்டுப்போகாமல் வைத்திருந்து பிறகு விற்பதற்கான
நவீன வசதிகளை உடைய கொடவுன்களை ஏற்படுத்தித் தர
அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்
களே, அதற்காகத் தான் உலக வங்கியின் உதவியோடு நம்
முடைய ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களில் சேகரித்து,
சேமித்து, கெட்டுப் போகாமல் பாதுகாப்பாக வைத்து விற்றுத்
தரக்கூடிய ஏற்பாட்டை அரசு செய்து வருகிறது.

திரு. ஏ. கி. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே, தர
மான மாம்பழங்களை உற்பத்தி செய்யும் வகையில் வீரியமுள்ள
ஒட்டு மாங்கன்றுகளைத் தயாரிக்க, நாற்று பண்ணை அமைக்க
அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தெரிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்
களே, தனிக் கேள்வி போடவும்.

[முற்பகல் 9-30].

திரு. இரா. தாமரைக்கனி : வட ஆற்காடு சேலம் மாவட்டங்
களில் உள்ள மாம்பழங்கள் பார்ப்பதற்குத்தான் அழகாக இருக்
கும், இனிப்பாகவும், ருசியாகவும் இருக்கின்ற மாம்பழங்கள் ராஜ
பாளையம், ஸ்ரீ வில்லிப்புத்தூர் பகுதியில் செண்பகத்தோப்பு,
உமாபட்டி, கான்சாபுரம் போன்ற இடங்களில் சப்பட்டை, பஞ்ச
வர்ணம் போன்ற மாம்பழங்கள் ருசியாக இருக்கும். அமைச்சர்



1981 மார்ச் 24]

அவர்கள்கூட சாப்பிட்டுப் பார்த்திருக்கிறார்கள். லெட்டர்
போட்டு வெளிநாடுகளிலிருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள்.
ஆகவே அரசே அதைக் கொள்முதல் செய்து வெளிநாடுகளுக்கு
அனுப்புவதற்கு ஏற்பாடுசெய்யப்படுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ராஜபாளையம் மாம்
பழங்களும் சுவையானவை, சேலம் மாம்பழங்களும் சுவையா
னவை. மாம்பழங்களுக்குள்ளே பாகுபாடு பார்க்க வேண்டாம்.

டாக்டர் கே. சமரசம் : துணைத் தலைவர் அவர்களே,
சேலம், வட ஆற்காடு மாவட்டங்களைத் தவிர, தர்மபுரி
மாவட்டத்திலே அதிகமாக மாம்பழம் உற்பத்தியாகிறது. அப்படி
உற்பத்தியாகிற மாம்பழங்களை வைத்து உணவுப் பண்டங்கள்
தயாரித்து வெளிநாடுகளுக்கு தனியார்கள் ஏற்றுமதி செய்து
கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலிலே பலர் இன்
றைக்கு ஈடுபட்டுக் கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே அரசே
தனியாகவோ அல்லது கூட்டுறவுத் துறையிலோ நிறுவனத்தைத்
தொடங்கி அவைகளைக் கொள்முதல் செய்து உணவுப் பண்டங்
களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதற்கு மார்க்கட் கொண்டு
வருவதற்கு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : அதைப்பற்றி அரசு
ஆராயும்.

**சிறு விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் கீழ் மரக்காணம் ஒன்றியம்.**

*வினா எண் 459—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு
வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா—

திண்டிவனம் வட்டம் மரக்காணம் ஒன்றியத்தை சிறு
விவசாயிகள் மேம்பாடு திட்டத்தின் ஒன்றியமாக அறிவிக்கும்
குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : குறிப்பிட்ட வட்டாரங்களில்
செயல்படுத்தப்பட்டு வரும் சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டத்
தையும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தையும்
இணைத்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் என்ற
பெயரில் 1980-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள்
முதல் மாநிலத்திலுள்ள எல்லா வட்டாரங்களிலும் செயல்படுத்த
முடிவு எடுக்கப்பட்டுள்ளது. எனவே இத்திட்டத்தை மரக்காணம்
ஒன்றியம் உட்பட எல்லா வட்டாரங்களிலும் நிறைவேற்ற
நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[1981 மார்ச் 24

**நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் கம்பளிப் புழுக்களை ஒழிக்க மருந்து.**

* வினா எண் 460— திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நிலக்கடலை செடிகளில் விழும் கம்பளிப் புழுக்களை ஒழிப்பதற்குப் பயன்படும் வகையில் மருந்துகள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) இதன் காரணமாகப் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :**

(அ) நிலக்கடலைப் பயிரைத் தாக்கும் சிகப்பு கம்பளிப் பூச்சியைக் கட்டுப்படுத்த மருந்துகள் விவசாய கிடங்குகளிலும் தனியார் கடைகளிலும் போதிய அளவு கிடைக்கிறது.

(ஆ) விவசாயிகளுக்கு நட்ட ஈடு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**திரு. தி. கா. நல்லப்பன் :** துணைத் தலைவர் அவர்களே இந்தக் கம்பளிப் பூச்சி சிறிய பூச்சியாக இருக்கின்ற காலத்திலே தான் இறக்கிறது. செம்புழுவாக மாறுகிற நேரத்திலே அது செடியைத் தின்று குறிப்பிட்ட காலம் வாழ்ந்து தான் இறக்கிறது. அப்படி மாறிவிட்ட நிலையில் அவைகளை அழிப்பது கடினம் என்ற காரணத்தினால் அதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நட்ட ஈடு கொடுப்பதற்கு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** துணைத் தலைவர் அவர்களே, நிலக்கடலை அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டங்களான வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், பெரியார், கோவை மற்றும் மதுரை மாவட்டங்களில் பூச்சி மருந்து தெளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றன. பயனடையும் விவசாயிகளுக்கு மருந்து மற்றும் அதை தெளிக்க ஆகும் செலவுகளில் 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகின்றது. ஒரு ஹெக்டேருக்கு மருந்துக்கு ஆகும் செலவு ரூபாய் 50 ஆகவும் மருந்து தெளிக்க ஆகும் செலவு ரூபாய் 30 ஆகவும் இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மருந்து மற்றும் அதைத் தெளிக்க ஆகும் மொத்தச் செலவில் 50 சதவீத மானியத்தை கழித்து மீதியை இத்திட்டத்தைச் செயல்படுத்தும் மாவட்டங்களில் உள்ள பயன் அடைந்த விவசாயிகளிடமிருந்து கிஸ்தி மூலமாக வசூல் செய்யப்படுகின்றது. 1980—81 ஆம் ஆண்டில் 6,000 ஹெக்டேரில் இத்திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.



1981 மார்ச் 24]

**திரு. என். எஸ். வி. சித்தன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கடலையிலே விழுகின்ற புழுவை ஒழிக்க ஒவ்வொரு ஆண்டும் முயற்சி செய்தாலும் ஒழிக்க முடியவில்லை. மதுரை மாவட்டத்திலே உசிலம்பட்டி, திருமங்கலம் ஆகிய பகுதிகளிலே இதனால் விவசாயிகளுக்கு பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அறவே ஒழிப்பதற்கான முறையிலே விரிந்த முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா ? இந்த ஆண்டு இருக்கின்ற பூச்சி முட்டையிட்டு அதிலிருந்து வருகின்ற பூச்சி அடுத்த ஆண்டு வளருகின்ற பயிர்களைப் பாதிக்கிறது என்ற காரணத்தினாலே பெரிய அளவிலே இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அறவே ஒழிப்பதற்கான திட்டங்களைத் தீட்டிச் செயல்பட அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அப்படிப்பட்ட ஆராய்ச்சி ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தக் கம்பளிப் புழு தாக்குவதை எப்படித் தடுப்பது என்பது பற்றியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. செ. செம்மலை :** துணைத் தலைவர் அவர்களே, தி.மு.க. ஆட்சியிலே கம்பளிப் பூச்சி, பூச்சி இவைகளை ஒழிப்பதற்கு ஹெலிகாப்டர் மூலமாக மருந்து தெளித்ததன் மூலமாக ஏதாவது பலன் ஏற்பட்டதா ? அப்படியானால் யாருக்கு ஏற்பட்டது என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

**திரு. தி. கா. நல்லப்பன் :** இந்தப் புழுக்களைக் கொல்வதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளைப் பற்றி ஒன்றியங்கள் மூலமாக விவசாயிகளுக்குத் தெரிவிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** ஒன்றியங்களின் தீர்மானத்தைப் பெற்றுத்தான் இந்த ஒட்டுமொத்த மருந்து தெளிப்பு முயற்சி நடைபெற்று வருகிறது.

**திரு. என். வரதராஜன் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு எண்ணெய் வித்துக்கள் தட்டுப்பாடு உள்ள ஒரு பகுதி. நிலக்கடலை இங்கே பெரும் அளவுக்குப் பூச்சியினால் பாதிக்கப்படுகிறது. அரசு 50 சதவீதம் மானியம் கொடுத்து மருந்து தெளிக்கிற முயற்சியின் மூலமாகக் கிடைக்கிற பலன் குறைவாக இருக்கிறது. மதுரை மாவட்டத்திலே இதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம். 1981—82 ஆம் ஆண்டிலே முழுச் செலவையும் அரசே ஏற்றுக் கொண்டு நிலக்கடலைக்குப் பாதுகாப்பு செய்யக் கூடிய முறையிலே ஏற்பாடு செய்து பலன் ஏற்படுகிறதா என்

பதை அரசு பரிசீலனை செய்து பார்த்து அடுத்து வருகிற நேரத்திலே தமிழ் நாட்டிலே எண்ணெய் வித்துக்களைப் பாதுகாப்பதற்கான முன் முயற்சிகளை எடுக்க முடியாதா ?

அது சம்பந்தமாக அரசு மீண்டும் மறு பரிசீலனை செய்து நிலக்கடலைக்குப் பாதுகாப்புக் கொடுக்க முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, எண்ணெய் வித்துக்களை அதிகமாக மேம்படுத்த வேண்டுமென்றுதான் அதற்காக இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கும் யோசனை நிதி ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ள யோசனையாகும். அடுத்து வரும் ஆண்டுகளில்தான் அதைப் பற்றிப் பரிசீலிக்க வேண்டும்.

திரு. இரா. சண்முகம் : துணைத் தலைவரவர்களே, நிலக்கடலைச் செடிகளில் விழும் கம்பளிப் புழுக்களைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கத்தால் அளிக்கப்படும் அந்த மருந்தின் வீரியம் குறைவாக இருப்பதால் புழுக்கள் செடிகளிலே உண்டாகி, அதிலேயே வளர்ந்து அதன் மூலமாக முட்டையிட்டு மண்ணுக்குள்ளாக ஓராண்டு இருந்துவிட்டு, பிறகு கடலைச் செடியைப் போட்டவுடனே மண்ணிலேயிருக்கும் முட்டை வெடித்து பெரிதாக அந்தச் செடிகளுக்குப் பாதகமான நிலை உருவாகி விடுகிறது. ஆகவே, மண்ணுக்குள்ளே இருக்கும் அந்த மூல வித்தை எடுக்கின்ற திட்டத்தை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## கிண்டி—மேடவாக்கம் நெடுஞ்சாலை.

*வினா எண் 461—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை கிண்டியிலிருந்து வேளச்சேரி வழியாக மேடவாக்கம் செல்லும் நெடுஞ்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் உடனே பழுது பார்க்க அரசிடம் செயல் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து சென்னை மாநகராட்சி உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது.



திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கிண்டியிலேயிருந்து மேடவாக்கம் வரையில் பல்வேறு தொழிற்கூடங்கள் இருக்கின்றன. அந்தப் பாதையில் அதிகமான போக்குவரத்து இருக்கிறது. அந்தப் பாதையை அகலப்படுத்தாத காரணத்தால் போக்குவரத்தில் அடிக்கடி ஆக்சிடென்ட் ஏற்பட்டு தடங்கல் ஏற்படுகிறது. அதனால் போக்குவரத்திற்கே இடைஞ்சல் விட்டால் நீண்ட நேரம் போக்குவரத்து முடியுமா என்று ஏற்பட்டு வருகிறது. அதை அகலப்படுத்த முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். அதோடு, மேடவாக்கத்திலிருந்து ஒட்டியம்பாக்கம் வரை உள்ள ரோட்டைச் சீர்படுத்த முன் வருமா என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, குறுகலான சாலைகளை யெல்லாம் விரிவுபடுத்துவதற்காகவும், இருபுறத்திலும் விரிவுபடுத்தி நடைபாதைகளை அமைப்பதற்காகவும் ஏறத்தாழ 1,78,500 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது ; வேலைகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

## மணிமுத்தா நதியில் தரைப்பாலம்.

*வினா எண் 462—திரு. ஆர். தியாகராசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதியில் எறுமனூருக்கு அருகில் மணிமுத்தா நதியில் தரைப்பாலம் அமைத்து போக்குவரத்து வசதியற்ற அப்பகுதியில் உள்ள பத்து கிராமங்களை விருத்தாசலத்துடன் தொடர்பு கொள்ள உதவ வேண்டுமென்று மக்களிடமிருந்து விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்பட்டதா?

(ஆ) ஆம் என்றால் தரைப்பாலம் அமைத்து கொடுக்க அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

## தனியாருக்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்குதல்.

*வினா எண் 463—திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன், டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகராட்சி மற்றும் பேருராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியார்க்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்கி

நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் நிதி நிலையை பெருக்குவதற்கு வசதியாக அவர்களிடம் ஒப்படைப்பது பற்றி செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பேரூராட்சி மற்றும் நகராட்சி போன்றவைகளிலே அவர்களுடைய சொந்தப் பணத்திலேயிருந்து சந்தை அமைக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது நிதி நிலைமை இல்லாத காரணத்தால் அவர்கள் அந்தச் சந்தைகளை ஏற்படுத்த முடியவில்லை. ஆகவே, அவர்களுடைய நிதி நிலைமையைப் பெருக்க, சந்தை இல்லாத பகுதிகளில் அரசாங்கமே செலவு செய்து சந்தை ஏற்படுததிக் கொடுக்க முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவரவர்களே, மூலக்கேள்வி, தனியாருக்குச் சொந்தமான சந்தைகளை நகராட்சிகள், பேரூராட்சிகள் எடுத்து அதன் மூலமாக வருமானத்தைப் பெருக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பது பற்றியது. இதுவரையிலும் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியிலே பென்னிங்டன் அங்காடியை, அது சரியாக நடைபெறவில்லை என்கின்ற காரணத்திற்காக அதை எடுத்து நகராட்சியிலேயே நடைபெறுவதற்கு உண்டான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போலவே பாக்கியுள்ள ஊர்களிலேயும் இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. மி. வின்சென்ட் :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியாருக்குச் சொந்தமாக உள்ள சந்தைகளில் அவரவர்கள் விருப்பத்திற்கேற்றவாறு கட்டணம் வசூல் செய்கிறார்கள். இதனால் சிறு வியாபாரிகள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஆகவே, தனியாருக்குச் சொந்தமான சந்தைகளை அரசுடைமையாக்கி நகராட்சி மற்றும் பேரூராட்சிகளின் நிதி நிலைமையைப் பெருக்க ஆக்கபூர்வமான பணியை மேற்கொள்வது பற்றித் தெளிவான பதிலை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற நிலைமை பல்வேறு பகுதிகளிலேயும் இருந்து கொண்டிருக்கின்றது. தனியாருக்குச் சொந்தமான சந்தைகளில் கட்டண விகிதங்கள் சீர்படுத்தப்படாமல் அவர்களுக்கேற்ற முறையில் அதிக கொள்ளை இலாபம்





அடிக்கும் முறையில் அந்த விகிதக் கட்டணமெல்லாம் இருந்து கொண்டிருப்பது அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது. ஆகவே, எந்தெந்த நகராட்சிப் பகுதிகளில் தனியார் சந்தைகள் இருக்கின்றனவோ, எந்தெந்தப் பேரூராட்சிப் பகுதிகளிலே தனியார் சந்தைகள் இருக்கின்றனவோ அவைகளையெல்லாம் நகராட்சிகள், பேரூராட்சிகள் எடுத்து நடத்துவதற்கு உண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

[முற்பகல் 9-40]

**திரு. என். இட்டப்பா :** துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி மற்றும் பேரூராட்சி எல்லைக்குள் இருக்கும் தனியார்களுக்குச் சொந்தமான சந்தைகளுக்கு அனுமதி அளிக்க வேண்டிய பொறுப்பு அந்தந்த நகராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் இருக்கிற காரணத்தினாலே அதனைத் தடுத்து நிறுத்தி, அந்த வருமானத்தை அரசாங்கமே நேரிடையாகப் பெறுவதற்கு ஏற்றவகையில் அத்தகைய ஒரு சட்டத்தினை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அதுதான். நான் ஏற்கனவே பதில் சொன்னது போல், வருமானத்தைப் பெருக்க வேண்டும், வசதிகளை அதிகப்படுத்த வேண்டுமென்கிற காரணத்திற்காக இது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**டாக்டர் கே. சமரசம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் கொள்ளை இலாபம் அடிப்பதைத் தடுக்கக்கூடிய வகையில், தனியார் சந்தைகளை அரசு ஏற்க அதற்கான சட்டத் திருத்தம் இந்தப் பேரவைக் கூட்டத் தொடரிலேயே கொண்டு வரப்படுமா? அல்லது அது உடனே இயலாதென்றால், புதுச் சந்தைகளை ஆரம்பித்து ஊராட்சி பேரூராட்சி நகராட்சிகளின்மூலம் அரசு வருவாயைப் பெருக்க அரசு முயற்சிக்குமா? ஏற்கனவே, எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் தனியார் நடத்துகிற சந்தைகளின் மூலம் கிடைக்கும் கொள்ளை இலாபம் அவர்களுக்குப் போகிறது என்கிற காரணத்தினால், புதுச் சந்தைகளை, உருவாக்கி ஊராட்சி, பேரூராட்சி, மற்றும் அரசுக்கு வருவாய் அளிக்கவேண்டுமென்று மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் திட்டம் கொடுத்திருக்கிறோம். அதைப் பரிசீலனை செய்து, உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர அரசு முயற்சிக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** துணைத் தலைவர் அவர்களே, அதுபோன்றவற்றின்மீது நடவடிக்கை எடுக்கத்தான் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. வேறு ஏதாவது சட்டத்

திருத்தங்கள் கொண்டுவர வேண்டுமென்று சொன்னாலும் அதைக் கொண்டு வருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, சந்தை என்று சொல்கிறபொழுது வாரச் சந்தை இருக்கிறது, தினசரி சந்தையும் இருக்கிறது. பெரிய நகரங்களிலே தக்காளி மார்க்கெட், பூ மார்க்கெட் போன்ற பல்வேறு சந்தைகளின்மூலம் வருகின்ற வருவாய், நகராட்சி மன்றங்கள், பேரூராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்களுக்குப் போய்ச் சேராமல், சில தனி நபர்களுக்குப் போய்க் கொண்டிருக்கிறது. ஆகவே, சட்டத் திருத்தம் கொண்டு வரும்போது, சந்தைகளின்மூலம் கிடைக்கின்ற வருவாய் பொதுச் சொத்து என்ற முறையிலே, நகராட்சிகளுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும் கிடைக்கும் வகையில் ஏலம்விட அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது புது வரிகள் போடாமல் வருமானத்தை அதிகரிக்க வேண்டும். வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற காரணத்தினால்தான் இதுபோன்ற நிலைகளில் வருமானத்தை எவ்வளவு தூரம் பெருக்கமுடியும் என்பதை அரசு பரிசீலித்து வருகிறது. ஆகவே, தேவையான நடவடிக்கைகளை எடுத்து வரும்போது, சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டுமென்றால் தயங்காமல் சட்டத் திருத்தம் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. இரா. சின்னராசு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் குந்தாரப்பள்ளி கிராமத்தில் வெள்ளிக்கிழமை தோறும் ஒரு வாரச்சந்தை கூடுகிறது. நாள் ஒன்றுக்கு ரூபாய் 5,000 வருமானம் தரக்கூடிய சந்தை அது. பல ஆண்டுகளாக அதை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று முயற்சி எடுத்து இதுவரை அரசு ஊராட்சிக்குக் கொடுக்காமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மொத்தமாக சந்தைகளைப் பற்றி நான் சொன்னேன். தனிப்பட்ட சந்தைகளைப் பற்றிய குறிப்புகள் இல்லை. ரூ. 5,000 மட்டும் வருமானம் அல்ல இலட்சக்கணக்கில் வருமானம் அளிக்கக்கூடிய சந்தைகளும் உண்டு. ஆகவே, அவற்றைக் கவனத்திலே கொண்டு தனிப்பட்டவர்கள் இலாபம் சம்பாதிப்பதைத் தவிர்த்து கொள்ளை அடிக்கிற இலாபப் பணம் பரவலாக்கப்பட வேண்டும், ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமென்கிற காரணத்தினால்தான் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



தெருப் பெயர்களில் சாதியைக் குறிக்கும் சொற்களை நீக்குதல்.

*வினா எண். 464—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தெருப்பெயர்களில் சாதியைக் குறிக்கும் சொல்லை நீக்கும்படி அரசு எல்லா நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, தெருப் பெயர்களில் சாதியைக் குறிக்கும் சொல்லை நீக்கும்படி அரசு எல்லா நகராட்சி, ஊராட்சி மன்றங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். ஆனால், எத்தனை தொகுதிகளில், எத் தனை ஊராட்சித் தொகுதிகளில், அல்லது நகராட்சித் தொகுதி களில், இந்தத் தெருப் பெயர்களில் சாதியைக் குறிக்கும் சொல் நீக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புவதுடன், அதை உடனடியாகச் சொல்ல முடியாது என்றாலும், பல இடங் களிலே, செயல்படுத்த முடியாமல், அல்லது செயல்படுத்த இய லாமல், ஜாதியின் பெயராலேயே தெருப் பெயர்கள் இன்னும் வழங்கப்படுவதை, ஊர்களின் பெயர்கள் இன்னும் வழங்கப்படு வதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? அந்த நிலையைப் போக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அல்லது, நமது அமைச்சரவை எடுத்துக்கொள்ளவிருக்கும் நட வடிக்கையை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல்வேறு சாலைகள், வீதிகள், தெருக் கள் இவைகளிலே அந்தப் பெயரோடு ஜாதிப் பெயர்களும் சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. இவைகளிலே எல்லாம் ஜாதிப் பெயர்கள் அழிக்கப்பட வேண்டும், ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்காகத் தான் அந்தப் பெயரோடு ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட வேண்டும் என்பதற்கு ஒரு ஆணை 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 3 ஆம் நாளில் இந்த அரசின் மூலம் அனுப்பப்பட்டது. அதன் காரணமாக மாநகராட்சியாக இருந்தாலும், நகராட்சிகளாக இருந்தாலும், பேரூராட்சி மன்றங்களாக இருந்தாலும் அந்தப் பகுதிகளிலே ஜாதிப் பெயரோடு, சாலைகள் தெருக்கள் இருக்கக் கூடாது என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு சாலைகளில் இந்த ஜாதிப் பெயர்கள் நீக்கப்பட்டிருக்கிறது. அழிக் கப்பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துச் சொல்ல முடியும்.

[1981 மார்ச் 24

திரு. ந. குலசேகரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீதிகளுக்கு ஜாதிப் பெயர்கள் இருக்கக்கூடாது அதை நீக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. சில கிராமங்கள் ஜாதியின் பெயராலேயே இருக்கின்றன. உதாரணமாக என்னுடைய கிராமம் சான்றோர் குப்பம் என்றிருந்தபோதிலும் சாணார்குப்பம் என்றுதான் அழைக்கப்படுகிறது. எனவே, ஜாதியின் பெயராலே இருக்கின்ற கிராமங்களின் பெயர்களை நீக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட ஜாதியின் பெயரைப் பழிக்கின்ற வகையில், அவதூறு நினைக்கின்ற வகையில் அப்படிப்பட்டப் பெயர்கள் இருக்குமானால், அதைக் கண்டிப்பாக, உடனடியாக அரசு பரிசீலிக்கும். ஆனால், ஒரு புகழ்வாய்ந்த ஜாதியினுடைய பெயராக அது இருக்குமானால், எந்த முறையிலும் அதற்கு இழுக்கு ஏற்படாது. இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவர் அவர்களே, கிராமத்திற்கு ஜாதிப் பெயர் இருக்கக்கூடாது, தெருவுக்கு ஜாதிப் பெயர் இருக்கக்கூடாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால், நம்முடைய மனிதர்கள் அவர்களுடைய பெயர்களோடு ஜாதிப்பெயரையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். அவைகளை நீக்குவதற்கு அரசு வருங்காலத்திலாவது நடவடிக்கை எடுக்க முன் வருமா ? அது மட்டுமல்லாமல் செட்யூல் வகுப்பு என்று ஒரு சமுகத்தினருக்கு அரசு பதிவு பெற்றிருந்தாலும், அந்த சமூகத்திலேயே பல்வேறு பிரிவினராகப் பிரிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருவதை அரசு அறியுமா ? அதை வருங்காலத்திலாவது நீக்குவதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு சமுதாய சீர்திருத்தப் பிரச்சினை. ஆகவே தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா போன்றவர்களும் தங்களுடைய வாழ்நாளில் இதற்கு அதிக நேரம் ஒதுக்கி இத்தகைய சமுதாய சீர்திருத்தப் பணிகளைச் செய்து வந்தார்கள். அப்படி ஜாதிகளை ஒழிப்பதிலும், சமுதாயச் சீர்திருத்தப் பணிகளிலும் நாம் நாட்டம் கொண்டால், கண்டிப்பாக இது ஒழிந்துவிடும்.

திரு. எல். இளையபெருமாள் : My question was not answered properly. My question is, "Will this be avoided atleast in future." என்னுடைய கேள்வி, வருங்காலத்தில் இவைகள் ஒழிக்கப்படுமா என்பது. அமைச்சர் அதற்குப் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1981 மார்ச் 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப் போல இது ஒரு சமுதாய சீர்திருத்தப் பிரச்சினை. மைய அரசும் மாநில அரசோடு ஒத்துழைக்க வேண்டும். அப்போதுதான் இதுபோன்ற நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திரு. எஸ். ஆண்டித்தேவர் : துணைத் தலைவர் அவர்களே, தெருக்களின் பெயரில் ஜாதிப் பெயர் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். ஆனால், பெரிய தலைவர்கள் பெயராலே கிராமங்களின் பெயர்கள் இருக்கின்றன. உதாரணமாக சுப்பிரமணியப்பிள்ளைத்தெரு என்பதில் அந்தப் ''பிள்ளை''ன்ய எடுத்துவிட்டால், எந்த காரணத்திற்காக அந்தத் தலைவர் பெயர் வைக்கப்பட்டதோ அந்த நோக்கமே போய்விடுகிறது. அந்தத் தெருக்களில் ஜாதியின் பெயர் குறிக்கிறது என்று சொல்லி அவைகள் அழிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ? இனிமேலாவது, அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல அவர்களுடைய பெயர்களுக்குக் களங்கம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளப்படும். குறிப்பாக வ. உ. சிதம்பரம் பிள்ளை என்று இருப்பதில் வ. உ. சிதம்பரம் என்று இருந்தால் யாருக்கும் தெரியாமல் போய்விடாது. இவைகளை எல்லாம் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-50]

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதியின் பெயரால் நடக்கும் மாநாடுகளுக்கும், கூட்டங்களுக்கும் மாண்புமிகு அமைச்சர்கள் போய் கலந்து கொண்டு வருகிறார்கள். இனிமேல் அப்படிப்பட்ட மாநாடுகளுக்குச் சென்று கலந்து கொள்ளாமல் இருப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. என். வரதராஜன் : துணைத் தலைவர் அவர்களே, ஜாதியின் பெயரால் இருக்கும் தெருக்களின் பெயர்களை மாற்றுவது என்பது மிக முக்கியமானது. ஆயினும், நம்முடைய நாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் வீறுகொண்டு எழுந்த மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்தும் வகையில், பல்வேறு தெருக்கள் அந்நிய நாட்டினரின் பெயரில் குறிப்பாக— ''எல்லிஸ் ரோடு'', ''வெல்லிங்டன் ரோடு'' என்று இருப்பதையும் உடனடியாக மாற்றுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட சில சாலைகளின் பெயர்கள் ஏற்கெனவே மாற்றப்பட்டு இருக்கின்றன. ஆகவே, எவ்வளவு துரித

மாக அவற்றை மாற்றுவதற்கு முடியுமோ அவ்வவு துரிதமாக அந்தப் பணி செய்யப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜாதிப் பெயர்களை அவ்வப்போது மக்களுக்கு நினைவூட்டுகிற வகையில் இருக்கும் தெருக்களின் பெயர்களும், மற்ற இடங்களின் பெயர்களும் மாற்றப்பட்டு வருவது வரவேற்கத்தக்க ஒன்றாகும். ஆயினும், அண்ணா பிள்ளைத் தெரு என்று இருந்தது, தற்போது " அண்ணா " தெரு என்று மாறியிருக்கிறது. நல்ல மாற்றம் தான். வளர்ச்சிதான். இருப்பினும், அண்ணா பிள்ளை தெரு என்று இருந்ததை அண்ணா தெரு என்று மாற்றுவது பொருத்தம் இல்லாத ஒன்றாக இருக்கிறது. அதைப் போலவே, ஹேமில்டன் பிரிட்ஜ் என்று இருப்பது, பழக்கத்தில் அம்பட்டன் வாராவதி என்று அழைக்கப்பட்டு, இன்றும் அது அம்பட்டன் வாராவதி என்றே எழுதப்பட்டு, ஒரு ஜாதியின் பெயரால் வழங்கப்பட்டு வருகிறது. ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தபோதிலும், ஜாதியின் பெயரால் நடக்கும் மாநாடுகளில் அமைச்சர்கள் போய் கலந்துகொள்கிறபோது, இந்தத் தெருக்களில் இருக்கும் ஜாதிகளின் பெயர்களை மட்டும் எடுத்து விடுவதால் ஜாதி எப்படி ஒழியும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் போன்றவர்களுக்கு எல்லாம் இருக்கும் சங்கடங்கள் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்குத் தெரியாதது அல்ல. அவர்களும் அமைச்சர்களாக இருந்த நேரத்தில் இப்படிப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இருப்பார்களோ இல்லையோ (குறுக்கீடு) எனக்குத் தெரியாது. இருக்கின்ற சங்கடங்களைத் தவிர்க்க வேண்டும் என்கிற அடிப்படையில் ஒரு சில நேரங்களில் நாங்கள் செல்லவேண்டி இருக்கிறது. இருப்பினும், இதுபோன்ற மாநாடுகளில் கலந்து கொள்கிற நேரத்தில் எங்களுடைய பேச்சு ஜாதியின் உணர்வுகளை தூண்டிவிடுவதாக இல்லாமல், அந்த ஜாதி உணர்வுகள் வளர்க்கக் கூடாது என்கிற அடிப்படையில் தான நாங்கள் பேசிக்கொண்டு வருகிறோம். ஏனெனில் நாங்கள் திராவிட பாரம்பரியத்தில் வந்தவர்கள். ஜாதி ஒழிக்கப்பட வேண்டும் ; சமத்துவம் ஏற்பட வேண்டும் என்கிற அடிப்படையில்தான் எங்கள் பேச்சின் கருத்தை மையமாக வைத்துப் பேசிக்கொண்டு வருகிறோம். குறிப்பாக, ஹேமில்டன் பிரிட்ஜ் என்பது அம்பட்டன் வாராவதி என்று இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே எனக்குத் தெரியாது. ஹேமில்டன் பிரிட்ஜ் என்று தான் அழைத்து வருவதாக நினைக்கிறேன். அப்படி இருந்தால் உடனடியாக அதைப் பரிசீலிக்கலாம்.



துணைத் தலைவர் அவர்களே,
திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாநாடுகளில் திராவிட முன்
ஜாதியின் பெயரால் நடைபெற்ற காலத்தில் அமைச்சர்கள் பலர்
னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த இருக்கிறார்கள். எதிர்க்கட்சித்
சென்று கலந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே,
த ...ர்கூட சென்று கலந்து கொண்டு நடத்தக் கூடாது என்று
ஜாதியின் பெயரால் மாநாடுகள் முன் வருமா ?
அரசாங்கம் சட்டம் கொண்டு வர

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, அப்படிப்பட்ட நோக்கம் இதுவரையிலும் இல்லை.

துணைத் தலைவர் அவர்களே,
டாக்டர் மு. கருணாநிதி : கேள்வி இருப்பதால், அரசின்
தெருப்பெயர்கள் என்கிற முறையில் கொண்டு வர விரும்புகிறேன்.
கவனத்திற்கு நான் ஒன்றைக் சாலை என்று தமிழில் பெயர்
சென்னையில் கவிஞர் பாரதிதாசன் ஆனால், அதன் கீழே ஆங்
பலகை போடப்பட்டு இருக்கிறது. " என்று போடப்பட்டு
கிலத்தில் " கே. பி. தாசன் ரோடு
இருக்கிறது. இந்தக் குறைபாடு நீக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, நீக்கப்படும்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, ஏற்கனவே ஜாதியின் பெயரால் உள்ள பெயர்களை
மாற்றுகின்றபோது, அந்த ஜாதியின் பெயரை எடுத்து விட்
டால் அந்தத் தெருக்களின் பெயர்களை அழைக்கின்றபோது
அது சரியாக அமைவது இல்லை. குறிப்பாக 'கிருஷ்ண
மாச்சாரி ரோடு' என்று இருப்பது தற்போது 'கிருஷ்ணமா'
ரோடு என்று இருப்பது நியாயமா ? ஆகவே, அதைப்போல்
தெருப் பெயர்களில் உள்ள ஜாதிகளை எடுக்கிறபோது சரியாக
வரவில்லை என்று சொன்னால், அந்தத் தெருக்களுக்குப் புதுப்
பெயர் வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது
போல் 'கிருஷ்ணமாச்சாரி ரோடு' என்று இருப்பது 'கிருஷ்ணமா'
ரோடு என்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி
இருந்தாலும் இருக்கலாம். அப்படி இருந்தால் அது பற்றி
உடனடியாகப் பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவரவர்களே, ஈரோட்டில் பாவாடை நாயக்கன் தெரு இப்போது பாவாடைத் தெரு என்று அழைக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ? அதை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, 'பாவாடை' நல்ல சொல்தான்.

திரு. து. புருஷோத்தமன் : துணைத் தலைவரவர்களே, சென்னையிலே அதிலும் குறிப்பாக என்னுடைய தொகுதியில் 'நாயுடு தெரு' என்று இருந்ததில் 'நாயுடு' என்பதை அடித்துவிட்டார்கள், வெறும் 'தெரு' என்று இப்போது இருக்கிறது. அதைப்போல டி.என். நாயர் தெரு என்ற பெயரில் 'நாயர்' என்பதை எடுத்துவிட்டார்கள். அதனால் அது டி.என். தெரு என்று இருக்கிறது. அதனால் பல குழப்பங்கள் ஏற்படுகின்றன. ஆகவே ஜாதிப் பெயரை மாற்றும் போது வேறு பெயரை வைத்துவிட்டு அதை எடுக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட நிலை இல்லை என்று நான் கருதுகிறேன். வெறும் தெரு என்று போடமாட்டார்கள். தெருவுக்கு ஏதாவது பெயர் இருக்கும். பெயர் இல்லாமல் எந்தத் தெருவும் இருக்காது. ஆகவே, மாநகராட்சியினுடைய ஆதாரங்களை எல்லாம் பார்த்தால்தான் அது தெரியும்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, தெருக்களுடைய பெயர்களை மாற்றும் போதும் ஊர்களின் பெயர்களை மாற்றும் போதும் அரசினுடைய சார்பில் அமைக்கப்பட்டிருக்கிற ஆலோசனைக் குழுக்களைக் கூட்டி, அங்கே இருக்கிற தனி அதிகாரிகள், நகராட்சி மன்ற, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் எல்லாம் ஒன்றாக இருந்து, இந்த இந்த தெருவுக்கு இந்த இந்த பெயர் மாற்றம் செய்ய வேண்டுமென்று ஆலோசனை கூறி முடித்தப்பிறகுதான் பல இடங்களில் பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. சில நேரங்களில் அப்படிப்பட்ட கூட்டங்களைக் கூட்டி, முடிவு எடுக்காமல் பெயர் மாற்றம் செய்யப்படுவதால் இப்படிப்பட்ட குறைபாடுகள் வருகின்றன. ஆகவே, அனைத்து ஆலோசனைக் கூட்டங்களையும் கூட்டிய பிறகு, அவர்கள் ஆலோசனை வழங்கிய பிறகு இந்த பெயர் மாற்றம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய அரசு அனைத்து நகராட்சிகளுக்கும், ஊராட்சிகளுக்கும் ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்களே, இது நல்ல யோசனை, அரசாங்கம் பரிசீலனை செய்யும்.



திரு. ஏ. சி. சண்முகம் : தலைவரவர்களே, ஜாதியை ஒழிக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில், தேர்தல் நேரத்திலே வேட்பாளர்களே தங்கள் பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரையும் சேர்த்துக் கொள்கிறார்கள் ; 'பேலட் பேப்பரிலும்' அது அச்சாகிறது. முதலில் இந்த முறையை நீக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, அது அவரவர்களுடைய விருப்பத்தைப் பொறுத்தது. ஏனென்றால் இங்கே பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய பெயருக்குப் பின்னால் ஜாதிப் பெயரையும் வைத்திருக்கிறார்கள். ஆகவே, அது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் தொகுதியில் வெள்ளைப்பட்டி, தேவன்பட்டி, காட்டு நாயக்கன்பட்டி என்று அங்கே இருக்கிற கிராமங்களுக்கு பெயர் வைத்திருக்கிறார்கள். அவை முன்னோர்களுடைய பெயர்கள். ஜாதிப் பெயரை எடுக்கிறோம் என்ற பெயரால் அந்த முன்னோர்களுடைய பெயர்களை மாற்றாமல் இருக்க அரசு பாதுகாப்பு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஊர் பெயர்களை மாற்றுவதாக இதுவரை உத்தேசம் இல்லை.

### கிராமத் தன்னிறைவுத் திட்டங்களை ஒலிபரப்புதல்.

*வினா எண். 465— திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம தன்னிறைவுத் திட்ட வளர்ச்சிப் பணிகளை வானொலியில் ஒலிபரப்ப வானொலியினரை அரசு வலியுறுத்தியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை அடங்கிய கடிதம் சென்னை வானொலி நிலையத்தினருக்கு அரசால் எழுதப்பட்டுள்ளது.

[1981 மார்ச் 24

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவரவர்
களே, தன்னிறைவுத் திட்ட வளர்ச்சிப் பணிகளுக்கு உதவி செய்
கின்ற வகையில் அது போன்ற பணிகளில் முதலீடு செய்கிற தனி
யார் அல்லது தனியார் நிறுவனங்களுக்கு ஏதாவது சலுகை
கொடுக்கப்படுகிறதா ? அப்படிப்பட்டவர்களை ஊக்குவிக்கின்ற
வகையில் அவர்களுடைய சேவைகளை விளம்பரப்படுத்துகிற
வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவ
ரவர்களே, தனியாருக்கு எந்தச் சலுகையும் இதுவரை காட்டிய
தாகக் குறிப்புகள் இல்லை. ஆனால் அதே நேரத்தில் தன்னிறை
வுத் திட்டத்தை விரிவாக வெளியே விளம்பரப்படுத்த வேண்டும்;
அதன் மூலம் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது,
எப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுகிறது என்பது எல்லாம்
மக்களுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக வானொலி மூலம்
இந்தப் பிரச்சாரத்தை முடுக்கிவிட நடவடிக்கை எடுக்கப்பட்
டிருக்கிறது.

[முற்பகல் 10—00]

திரு. மி. வின்சென்ட் : துணைத் தலைவரவர்களே, தமிழகத்
தில் கிராமத் தன்னிறைவுத் திட்டம் நல்ல முறையில் செயல்
படுத்தப்பட்டு காந்தி கண்ட கிராம ராஜ்யம் ஏற்படுத்தப்பட்
டிருக்கின்றது. இது இந்திய நாட்டின் மற்ற மாநிலங்களுக்கு
வழிகாட்டியாக அமையத்தக்க வகையில் தன்னிறைவுத் திட்
டங்கள் பற்றிய திரைப்படங்களை எடுத்து இதனைப் பரப்ப
அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவரவர்
களே, அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. திரைப்
படம் எடுத்து அதன் மூலமாகத் தன்னிறைவுத் திட்டம் தமிழகத்
தில் நன்னிகரில்லாத திட்டமாக செயல்படுத்துவது பற்றியும்
இந்திய உபகண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத
அளவுக்கு எதை 30 ஆண்டுகாலமாக மக்கள் எதிர்
பார்த்து இருந்தார்களோ அந்த அடிப்படை வசதிகளை இந்தத்
திட்டம் செய்கின்ற காரணத்தால் இதுபற்றி விளம்பரப்படுத்த
இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின்
அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, நம்முடைய
மாநிலத்தில் தன்னிறைவுத் திட்டம் சம்பந்தமாக பிரச்சாரம்
செய்வதற்காக வானொலியை அணுக வேண்டும் என்று அமைச்ச
ரவர்கள் சொன்னார்கள். தமிழ்நாட்டில் நம்முடைய மாநிலத்
தின் திட்டங்களைப் பற்றி பிரச்சாரம் செய்வது சம்பந்தமாக,



1981 மார்ச் 24]

அதாவது வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது மாதத்திற்கு
ஒரு முறையோ பிரச்சாரம் செய்வது பற்றி வானொலித்துறை
நம்மோடு உறவு வைத்துக்கொண்டு விவாதிக்கிறார்களா ? அல்
லது அவர்களாகவே தங்கள் இஷ்டத்திற்கு அவர்களுடைய பிரச்
சார முறையை வைத்துக்கொண்டிருக்கிறார்களா ? அப்படியா
னால் வானொலித் துறை தமிழ்நாட்டிலே இயங்குவது பற்றி
மாநில அரசினுடைய ஆலோசனையைப் பெற வேண்டும் என்று
வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
பொதுவாகவே வானொலித் துறையைப் பற்றி மாண்புமிகு
உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அது மத்திய அரசினு
டைய ஒரு ஸ்தாபனமாக இருந்துகொண்டிருக்கின்றது. மேலும்
ஒவ்வொரு மாநிலத்திலும் நடக்கக்கூடிய செயல்களையும், முக்
கியமான பணிகளையும் மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்
டும் என்ற வகையில்தான் வானொலி செயல்பட வேண்டும் என்ப
தாலும் அதன் மூலமாக மக்களுக்கு அன்றாட நிகழ்ச்சிகள்
தெரிய வேண்டும் என்ற காரணத்தாலும்தான் வானொலி
மன்றமே நடைபெற்று வருகிறது. குறிப்பாக இந்தத் தன்னி
றைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் உரிய பிரச்சாரம்
கொடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே கேட்கப்பட்டது. எப்
படி வேளாண்மைத் துறையின் பணிகள் வயலும் வாழ்வும்
என்ற தலைப்பு நிகழ்ச்சிகள்மூலம் ஒலிபரப்பப்படுகின்றனவோ
அதைப்போன்று தன்னிறைவுத் திட்டப் பணிகள் பற்றியும்
வானொலி மூலம் ஒலிபரப்ப வேண்டும் என்ற கோரிக்கையினை
நாம் ஏற்கெனவே வைத்திருக்கிறோம்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டம் என்பது தமிழகத்
தின் கிராமங்களுக்கு மிகவும் தேவையான ஒரு திட்டம் என்
பதை அமைச்சரவர்களும் சொல்கிறார்கள். நாங்களும் அதை
வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் இந்தத் தன்னிறை
வுத் திட்டம் என்பது 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம்
நாள் அன்று முடிக்கப்பட வேண்டும் என்று கட்டாயப்படுத்தி
மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்தில் வற்புறுத்தப்பட்டு
வருவதாகவும் அதன் காரணமாக அவசரத்தில் அள்
ளித் தெளிப்பது போன்று வேலைகள் நடந்து வருவதாகவும்
சொல்லப்படுகின்றதே, இந்த நிலைமையைப் போக்குகின்ற
வகையில் ஏற்பாடு செய்யப்படுமா ? குறிப்பாக, தஞ்சை மாவட்
டத்தில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்தகாரணத்
தால் ரோடுகளில் லாரிகள் செல்ல முடியவில்லை. ஆனால் இப்
போது வறட்சி காரணமாக தண்ணீர் கிடைப்பதே கஷ்டமாக
இருக்கின்றது. ஆகவே, அந்தந்த மாவட்டத்தின் நிலைமை
களுக்கேற்ப வேலையின் கால அளவை நீட்டித்துக் கொடுக்கின்ற
அளவில் கால அவகாசம் கொடுப்பதற்கு அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் கூட வருகிற 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதிக்குள் 69 ஒன்றியங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பணிகளை உடனடியாக முடிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. மேலும் ஆங்காங்கே மாவட்டங்கள்தோறும் நாங்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கின்றபோது 'க்வாலிட்டி மஸ்ட் பி மெயின்டைய்ண்ட்' என்ற வகையில் பணியின் தன்மை பாதிக்கப்படாமல் கண்காணித்துக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, எந்த விதமான பாதிப்பும் உண்டாகாமல் நல்ல கட்டடங்களாகத்தான் கட்ட வேண்டும் என்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தபட்சம் அவற்றின் பணிகளைப் பொறுத்து ஒரு வாரம் அல்லது 10 நாட்கள் நீட்டித்துக் கொடுக்கின்ற வகையிலும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

திரு. செ. குப்புசாமி : குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் இப்பணிகள் வேலை நிறுத்தம் காரணமாக ஒருசில தினங்கள் தாமதப்படுத்தப்பட்டு விட்டன. ஆகவே அங்கே நாட்களை மேலும் நீட்டித்துத்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்தில் எந்த விதமான மந்த நிலைமையும் இல்லை. முன்பு மந்த நிலை இருந்தது, அது போக்கப்பட்டு விட்டது.

திரு. கே. உச்சி : தலைவரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நீலகிரி மாவட்டம் மலைப் பகுதியாக இருப்பதால் வேலைகளை முடிக்க முடியாத சூழ்நிலை இருக்கின்றது. அதற்குக் காரணம் சிமெண்ட் போன்ற பொருட்கள் வேறு இடங்களிலிருந்து வரவேண்டி இருக்கின்றது. அவைகள் வந்து சேருவதில் காலதாமதம் ஆவதால் அங்கே அந்தப் பணிகளை முடிப்பதற்கு இரண்டு மாதம் என்ற அளவிலேயாவது நீட்டித்துத் தருவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்த அளவில் விதிவிலக்குக் கொடுக்கலாம்.

திரு. க. முத்துக்கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கேள்வி கிராம தன்னிறைவுத் திட்ட வளர்ச்சிப் பணிகளை வானொலியில் ஒலிபரப்புவது சம்பந்தமாக உள்ளது.



தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த அளவிலே மக்கள் மத்தியிலே இன்னும் நல்ல முறையில் விளம்பரம் செய்ய, அந்தப் பகுதியிலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் வானொலியில் பிரச்சாரம் செய்து பேசுவதற்கு ஆவன செய்யப்படுமா? அரசு அதற்கான ஏற்பாடுகளை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரையிலும் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றியே அதிகமாக வானொலியில், மக்கள் புரிந்துகொள்ளும் வகையல் நிகழ்ச்சி அமைப்புகள் எடுத்துக்கொள்ளப் பெறவில்லை. அதன் காரணமாகத்தான் உடனடியாக அவைபற்றியும் ஒலி பரப்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கு அனுமதி கிடைத்தவுடன், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்தத் தொகுதிகளைப் பற்றி பேசுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதைப் பற்றி பரிசீலனை செய்யலாம்.

திருமதி டி. யசோதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டத்திற்கு காட்டுகிற சலுகையை எங்களுடைய மாவட்டத்திற்கும் காட்ட வேண்டும். ஏனென்றால் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த அளவில் எங்கள் தொகுதியில் இன்னும் சிறப்பாக நிறைவேற வேண்டும் என்றால், 10 நாட்கள் நீட்டிப்பு என்பது போதாது என்ற காரணத்தால், 2 மாதங்களாவது, குறைந்தபட்சம் அதிகரித்துத் தர ஏற்பாடு செய்வாரா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவகாசம் கொடுப்பது பற்றி பிரச்னை இல்லை. அவகாசம் இப்படி நீட்டித்துக் கொடுத்துவிட்டால் அடுத்த ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய 150 ஒன்றியங்களின் பணிகள் பாதிக்கப்படும். அதன் காரணமாகத்தான் எவ்வளவு சீக்கிரம் இந்தப் பணிகளை முடிக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் இந்தப் பணிகளை முடிக்கின்ற வகையில் ஆணைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய உங்களுடைய ஒத்துழைப்பும் தேவை. உங்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் இன்னும் சீக்கிரமாக முடிக்க முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டத்தை நம்முடைய மாநில அரசு முதன்முறையாக எடுத்துக் கொண்டு செயலாற்றி வருகிறது. பத்தாவது மாதம்தான் இந்தத் திட்டத்தை நிறைவேற்றக் கூடிய அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 6 மாதம் அல்லது 7 மாதங்களுக்குள்ளாக எந்த வேலையையும் முடிக்க முடியாது. குறைந்தபட்சம் ஒரு

வருடமாவது தேவை. 6 மாத தவணை மிகவும் குறைவு. அதிலே சேலம் மாவட்டம் தலைவாசல் தொகுதியைப் பொறுத்த அளவிலே, தண்ணீர் பஞ்சம் மிக அதிகமாக இருப்பதினால் சாலை கள் அமைபபது மிக சிரமமாக இருக்கிறது வெகு தொலைவில்ருந்து, அதுகூட விவசாயத்திற்கு பயன்படும் கிணறுகளிலிருந்து தண்ணீர் கொண்டு வந்து இந்தச் சாலைகளை அமைப்பது என்பது மிக சிரமமான காரியமாக இருப்பதால், சேலம் மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குறைந்தது 3 மாதங்களுக்கு இநதப் பணிக் காலத்தை நட்டித்து கொடுக்கும்படி வேண்டிக் கொள்கிறேன். அப்படிக் கொடுக்க இயலுமா என்றும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடினமான காரியம், சிரமமான காரியம் என்று தெரிந்துதான் இந்தக் காரியங்களை நாம் எடுத்து நடத்திக் கொண்டு வருகிறோம். சிரமமான காரியங்கள் என்பதி னால் வேலைகள் நடக்காது என்றோ, அல்லது குறித்த காலத்திற் குள் முடிவு அடையாது என்றோ நம்பக்கூடாது. அந்த வேலை கள் மிக துரிதமாக நடைபெற்று வருகின்றன. அந்தந்த ஆட்சித் தலைவர்கள் செயல் அதிகாரிகளும் கூட வேலைகள் எல்லாம் 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குள் முடிந்து விடும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே தயவுசெய்து காலத்தை நீட்டிததுக் கொடுக்கும்படி கேட்கவேண்டாம். நாமே அதற்கு முயற்சி செய்தால், அந்தந்தப் பணிகளில் உள்ளவர்கள், இன்னும் மெத்தனமாக அதிக காலத்தை நீட்டித்துக்கொண்டே போய்விடக்கூடிய நிலைமை ஏற்பட்டு விடும். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். சிவராமன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வரவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பற்றி இங்கே நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். முழுமையாக தன்னிறைவுத் திட்டம் சம்பந்தமாக வானொலியில் விளம்பரம் செய்யப்படுமா என்பது கேள்வி. அப்படி விளம்பரம் செய்தால் நலமாகத்தான் இருக்கும். அந்தந்த தொகுதியிலே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்களின் பணிகள் பாராட்டப்பட வேண்டியது ஒன்று. ஆகவே அந்த வகையிலே, அந்தந்த சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதியிலே சுறுசுறுப்பாக பணியாற்றி எடுத்துக் கொண்ட முயற்சிகள் என்ன என்பதை எல்லாம் விவரித்து வானொலியில் தன்னிறைவுத் திட்டத்தை பிரச்சாரம் செய்யும்வகையில் ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்று கேட்பதோடு இப்போது வறட்சி நிலை அதிகமாக இருப்பதனால், சாலைகள் போட, ஜல்லிகள் போட்டு சமன் செய்ய, தண்ணீர்





கிடைப்பதில்லை என்ற பிரச்னை பரவலாக இருக்கிறது. அப்படிப்பட்ட இடங்களுக்கு தண்ணீரை லாரிகளில் கொண்டு போய் கொட்டி, பணிகளை நடத்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களின் பணியைப் பொறுத்த அளவில் நான் கூட பாராட்டிச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசுக்கு தன்னி றைவுத் திட்டத்தில் எந்த அளவுக்கு ஒத்துழைப்புக் கொடுக்க முடியுமோ, உதவி செய்ய முடியுமோ, அவ்வளவையும் சட்ட மன்ற உறுப்பினர்கள் செய்து வருகிறார்கள். குறிப்பாக இந்தத் தன்னிறவுத் திட்டபபணிகள் மிக மிக வேகமாக நடைபெறு கிறது என்று சொன்னால், அதற்குச் சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் ஒத்துழைப்பும், காட்டும் அக்கறையுமே காரணம் என்று சொல்லலாம். அதே நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தந்த தொகுதிப் பணிகள் பற்றிய பிரச்சாரத்தை வானொலி மூலம் வழங்க முடியுமா என்பது குறித்து, அரசு பரிசிலனை செய்து வானொலியில் பிரச்சாரம் செய்வதற்கான அனுமதி கிடைத்ததும் ஏற்பாடு செய்யும்.

[முற்பகல் 10–10]

**திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் :** தன்னிறைவுத் திட்டம் செயல்படுகிற வட்டாரங்களில் உள்ள அதிகாரிகள், அவர்கள் உறவினர்கள் பொறுத்து தன்னிறைவுத் திட்டம் நிறை வேற்றப்பட்ட பிறகு அந்த அதிகாரிகள் அல்லது அவர்கள் உறவினர்கள் சொத்துக்களை ஆராய அரசாங்கம் முயலுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுக்கள் கூடாது. ஆனாலும் இதுபோன்ற நிலைமைகள் பற்றி அடிக்கடி உறுப்பினர்களைப் போன்றவர்கள் அல்லது வேறு வெளியே இருக்கிறவர்கள்கூட அனுப்பக்கூடிய மனுக்களில் இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்றன என்று காண்பித்தால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு குறிப்பிட்ட அதிகாரிகள் தற்காலிக வேலை நீக்கம் எல்லாம் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** தன்னிறைவுத் திட்டம் ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக செயல் படுத்தப்பட்ட திட்டம் பற்றிய அந்த அறிக்கையையும் அந்தந்த ஒன்றியங்களில் செய்யபபட்டுள்ள பணி மதிப்பீடுகள் பற்றியும் பொறுத்து, அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் வெளியிடுவதற்கு அரசு விளம்பரம் செய்ய துண்டுப் பிரசுரங்கள் ஆணையிடுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** ஏற்கனவே மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கெல்லாம் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் என்னென்ன வேலைகள் எடுத்துக்

[1981 மார்ச் 24

கொள்ளப்பட்டன, எவ்வளவு ஒன்றியங்களில் வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைப் புத்தக வடிவில் போட்டு ஒவ்வொரு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே எந்தெந்தத் தொகுதிகளில் என்னென்ன வேலைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன முடிக்கப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியவேண்டும் என்பதற்காகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்த மாவட்டத்தில் இந்தக் குறைபாடு இருந்து இது போன்ற புத்தக வடிவில் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று தெரிவித்தால் உடனடியாக நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம்.

**ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பஸ்களை தேசிய மயமாக்குதல்.**

*வினா எண் 466—திரு. ஆர். கே. பெருமாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளை தேசியமயமாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த வழித்தடங்களில் எடுககப்படும்?

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) ஸ்கீம் வழித்தடங்களில் ஓடும் பேருந்துகளை மட்டுமின்றி அனைத்துப் பேருந்துகளையும் மாவட்டவாரியாகநாட்டுடமையாக்க 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் (மற்றும்) ஒப்பந்த பேருந்துகள் (கையகப்படுத்தல்) சட்டம் வகை செய்கிறது. இச்சட்டத்தின் மீது டெல்லி உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. ரமணி : அரசாங்கத்தினுடைய போக்குவரத்து தேசியமயமாக்கும் நல்ல திட்டம் வெற்றி பெறக்கூடிய முறையில் வழித்தடங்களில் ஓடுகிற தனியார் பஸ்களுடைய உரிமங்கள் காலாவதியாகும்போது அந்த இடத்தில் அரசாங்கத்தினுடைய போக்குவரத்துக் கழகங்கள் விண்ணப்பித்தால் அவர்களுக்கு முதல் உரிமம் கிடைக்கும்படி நடவடிக்கை எடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா? அப்படிப் போட்டும் ஒரு வருடம், இரண்டு வருடங்கள் அந்த விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிக்காமல் தனியாருக்கு மறுபடியும் சில நிபந்தனைகளோடு அனுமதி அளித்துள்ள பிரசினை தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களில் வந்துள்ளதை அமைச்சர் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? அதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



1981 மார்ச் 24]

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : நான் ஏற்கெனவே சொல்
லியபடி உச்ச நீதிமன்றத்தில் இதுபற்றிய தீர்ப்பை எதிர்பார்த்துக்
கொண்டிருக்கிறோம். இருந்த லும் பல சட்டங்களை நாம்
வைத்துக் கொண்டு தனியார் பேருந்துகளை நாம்
கையகப்படுத்த வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுக்க
வேண்டும் என்று அரசு எண்ணினாலும் கூட, தேசிய
மயமாக்குவதை ஒரு கொள்கையாக அரசாங்கம் கொண்டிருந்
தாலும் கூட இன்றையதினம் இருக்கும் சூழ்நிலையில்
நடைமுறையில் பார்த்தால் சட்டமன்ற உறுப்பினர்களும்
பொதுமக்களும் பேருந்து வேண்டுமென்று, பேருந்து இல்லாத
கிராமங்கள் நிறைய இருக்கின்றன என்று சொல்லி மனு கொடுத்
துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கு முக்கியத்துவம்
கொடுத்து முதலில் பேருந்துகளை நாம் கொடுத்து, அதில் ஓர்
தன்னிறைவு பெற்ற பின்பு தனியார்களுடைய பேருந்து
களை எடுக்கலாம் என்ற நடவடிக்கைகள் எடுப்போமானால் அது
வெற்றிகரமாக இருக்கும், சிறப்பாக இருக்கும் என்று அரசு
எண்ணிக் கொண்டிருக்கிறது. எவ்வளவோ கிராமங்களில் பேருந்து
இல்லாமல் பேருந்துகள் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கும்
போது அவர்களுக்குக் கொடுக்காமல் ஏற்கெனவே ஓடிக்கொண்
டிருக்கிற பேருந்துகளை எடுக்க அரசு செலவழிப்பது என்பது
அவ்வளவு பொருத்தமாயிருக்காது என்ற அடிப்படையில்தான்
தன்னிறைவு ஏற்படுத்திய பின்பு அந்த நடவடிக்கைகள் படிப்
படியாக எடுக்கப்பட வேண்டும் என்று அரசு திட்டமிட்டுள்ளது.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அரசினுடைய திட்டத்தின்படி போக்கு
வரத்து சாலைகளை தமிழ்நாடு ஸ்கீம் சாலைகளை தேசிய மய
மாக்கப்பட்டதன் காரணமாக, அதற்கு முன்னுதாரணமாக
மதுரை ராஜபாளையம், மதுரை-திருநெல்வேலி, மதுரை-தூத்துக்
குடி ஆகிய மூன்று சாலைகளையாவது எடுத்துக் கொண்டு, அந்த
சாலைகளிலே தனியார் பேருந்துகளுக்குப் பதிலாக அரசுப்
பேருந்துகளாக மாற்றும் உத்தேசம் உண்டா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. முத்துசாமி : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தைப் பொறுத்த வரை
யில் எங்கெங்கே பேருந்து இல்லாமல், கிராமங்களுக்குப் பேருந்து
கள் வேண்டுமென்று கேட்கின்றார்களோ, அங்கேயெல்லாம் அர
சாங்கம் பேருந்துகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. எல்
லாக் கிராமங்களுக்கும் கொடுக்கப்பட்டு, வேறு கிராமங்கள்
பேருந்துகளே இல்லாமல் இல்லை என்ற நிலை வரும்போது,
தனியார் பேருந்துகளை விடுவதற்கான நடவடிக்கை எடுப்போம்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, பேருந்துகள் இல்லாத கிராமங்களிலே அர
சாங்கப் பேருந்துகள் கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள்
சொன்னார்கள், நன்றி. ஆனால், அரசாங்கத் திட்டத்தின்படி
தேசியமயமாக்கப்பட்ட சாலைகளை நாம் எப்படியும் எடுக்க

வேண்டுமென்று ஒரு மையக் கருத்தாக வைத்திருக்கிறோம். அதற்கு முன்னுதாரணமாக, நான் குறிப்பிட்டுள்ள சாலைகளை எடுத்தால் நலமாக இருக்கும். எனவே, இதைப்பற்றி மறு பரிசிலனை செய்து, இந்தத் தேசியமயமாக்கப்பட்ட சாலைகளில் அரசுப் போக்குவரத்துக் கழகம் மூலமாக பேருந்து விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே அப்படிப்பட்ட சாலைகளில் நாம் பேருந்துகளை இயக்கிக் கொண்டிருக்கிறோம். அது போக, எப்படியாவது தனியார் போக்குவரத்துக்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்பது மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை என்று கருதுகிறேன். இதிலே, தன்னிறைவு ஏற்பட்டதற்குப் பிறகு, அவைகளும் எடுத்துக் கொள்ளப்படும். அதைப்பற்றி கவலை வேண்டாம் என்பதை மறுபடியும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு விமானப் போக்குவரத்துக் கழகம்.

*வினா எண் 467—திரு. சு. முத்துகிருஷ்ணன் திரு. இல. பலராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இதன் மூலம் தமிழகத்தில் எந்த எந்த இடங்கள் சுற்றுலாவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது?

(இ) 1976-க்கு முன்பு விமானப் போக்குவரத்துக் கழகம் அமைக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டதா?

(ஈ) ஆம் எனில், அதன் முடிவு யாது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் என தனி அமைப்பு அமைக்கும் திட்டம் பரிசிலனையில் இல்லை.

எனினும், இந்திய விமானப் போக்குவரத்தில் சேராத, சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் மாவட்டங்களின் தலை நகரங்களை இணைக்கும் குறுகிய விமானப் போக்குவரத்தை நடத்துவதற்கு (Feeder Airlines Service) மைய அரசின் அனுமதி கோரப்பட்டது. மேலும், இதன் தொடர்பாக மூன்றாவது நிலை விமானப் போக்குவரத்து அமைப்பு (Third Level Air Services) மத்தியத் துறைத் திட்டத்தின் கீழ் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க மைய அரசுக்கு கோரிக்கை அனுப்பப்பட்டது. மூன்றாவது நிலை விமான போக்குவரத்து அமைப்பை வடகிழக்கு பகுதியில் முதலில் அமைக்க மத்திய அமைச்சரவை ஏற்றுக்கொண்டுள்ளது என்றும், மற்ற



மாநிலங்களில் அத் திட்டத்தை விரிவாக்க தற்சமயம் கருத்துரு ஏதும் இல்லை எனவும், இச்சூழ்நிலையில் இத்தகைய திட்டங்களை ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க தற்சமயம் மத்திய அரசால் இயலவில்லை எனவும் மைய அரசு தெரிவித்துள்ளது.

(ஆ), (இ) மற்றும் (ஈ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் விமானப் போக்குவரத்துக் கழகம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க அனுமதி கோரி மைய அரசுக்கு வேண்டப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நன்றி. அப்படி ஆரம்பிக்கின்றபோது, நம்முடைய தமிழகத்தில் இருக்கின்ற, அதிலும் குறிப்பாக, தஞ்சாவூர், வேலூர் போன்ற இடங்களில் எல்லாம் ஏற்கெனவே விமான தளங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. அவைகளைப் பயன்படுத்தவில்லை மைய அரசு. இது போன்று சென்னையிலே சோழவரம் என்ற இடத்திலும் விமான தளம் பயன்படுத்தாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, இந்த அரசு நல்ல முறையிலே இதற்கான குழுவை அமைத்து, இதை நல்ல முறையிலே பயன்படுத்த, தமிழகத்திலே கன்னியாகுமரி முதல் தொடர்பான அனைத்துப் பகுதிகளிலும் தமிழக அரசின் சார்பாக சிறந்த முறையில் இந்த விமான சர்வீசை சுற்றுலாத் துறையின் மூலமாக அமைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே அரசாங்கம் அப்போர்ப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், மத்திய அரசின் அனுமதியைக் கோரி ஏற்கெனவே எழுதியிருக்கிறது. என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்தையும் அதிலே சேர்த்து மத்திய அரசுக்கு மீண்டும் எழுதலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விமானப் போக்குவரத்தை ஏற்படுத்துவதற்காக மத்திய அமைச்சர் ஒருவர் நெல்லை மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் வந்து, தூத்துக்குடி-நெல்லை நெரு வழித்தடம், கயத்தாறு போன்ற இடங்களில் விமான தளம் அமைக்கப் பார்வையிட்டுச் சென்றார்கள். அதனுடைய விவரங்கள் என்ன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? தவிர, நெல்லை மாவட்டத்திலேயே பல்வேறு தொழில்கள் நடைபெறுகின்ற காரணத்தினால், இந்த இடத்தில் ஒரு விமான தளம் அமைக்க மத்திய அரசுக்கு சிபார்சு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய கருத்தை நானும் பத்திரிகையிலே பார்த்தேன். ஆனால் அதிகாரபூர்வமாக

வரவில்லை. என்றாலும், அதைத் தெரிந்து, அதன் மீது நடவடிக்கை எடுக்க முடியுமானால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, இந்தியாவிலே எந்தெந்த மாநிலங்கள் தன்னுடைய சொந்தப் பொறுப்பிலே விமான சர்வீசுகள் நடத்துகின்றன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா? அதுபோல், இந்த விமான தளம் அமைக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு பல்வேறு தனியார் நிறுவனங்கள் சார்பிலே, பல்வேறு கழகங்கள் சார்பிலே ஆலோசனைகள் ஏதாவது கூறப்பட்டிருக்கிறதா அல்லது அதற்கான கருத்து அரசால் வேண்டப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-20]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களில் யார், யார் நடத்துகிறார்கள் என்ற விவரம் என்னிடம் இலை. அவ்வாறு அமைப்புகளை யோசனை கேட்கக்கூடிய திட்டம் அரசிடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். அரசாங்கமே இப்படிப்பட்ட திட்டம் ஒன்றை மனதிலே வைத்திருக்கிறபோது, தேவையென்றால் மற்றவர்களைக் கேட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேக்கல் முடியில் இருந்து துரித பேருந்து.

*வினா எண் 468— திரு. ஏ. டி. கருப்பையா: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேக்கல் முடியிலிருந்து வால்பாறை, பொள்ளாச்சி வழியாக மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரிக்கு துரித பேருந்து விடும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



[முற்பகல் 10·20]

திரு. ஏ. டி. கருப்பையா: துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியான சேக்கல்முடி, வால்பாறை பகுதிகளில் ஏராளமாக அணைக்கட்டு வேலை நடந்து கொண்டிருக்கின்றன என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதிகளில் வேலை செய்து கொண்டிருக்கிற தோட்டத் தொழிலாளர்கள் திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி போன்ற பகுதிகளிலிருந்து வந்தவர்கள். அவர்களுக்கு வசதியாக சேக்கல் முடியிலிருந்து கன்னியாகுமரி வரை துரித பஸ் வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் அளித்திருப்பதாகத் தெரிய வருகிறது. அவர்களின் விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு, என்னுடைய வேண்டுகோளையும் ஏற்றுக் கொண்டு சேக்கல் முடியிலிருந்து மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களுக்குத் துரித பஸ் விட அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் பொறுத்த வரை ஓட்ட வேண்டுமென்ற எண்ணம் எங்களுக்கே வந்தாலும் கூட, நடைமுறையிலே இருக்கிற சிக்கல்தான் எங்களைச் செய்ய விடாமல் தடுக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேக்கல்முடியிலிருந்து, வால்பாறை வழியாகப் பேருந்து விட வேண்டுமென்று கேட்கிறார்கள். அது மலைப் பகுதி, மலைப் பகுதியில் சிறிய பேருந்துகளைத்தான் விட முடியும். இங்கு ஓடிக் கொண்டிருக்கிற திருவள்ளுவர் போக்குவரத்து பேருந்துகளை அதில் இயக்க முடியாது. அப்படி நாம் விரைவுப் பேருந்துகளை விடவேண்டுமென்று சொன்னால் சிறிய பேருந்துகளை விடுகிறபோது எண்ணிக்கை குறையும். இவைகளை இலாபகரமாக இயக்க முடியாது. இவர்கள் பொள்ளாச்சியிலிருந்து கேட்கிற இடங்களுக்கு ஏறத்தாழ 22 பேருந்துகளை 42 முறைகள் நாம் இயக்கிக் கொண்டிருக்கிறோம். பொள்ளாச்சியிலிருந்து சேக்கல் முடிக்கு பல சேரன் போக்குவரத்து பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இங்கேயிருந்து மற்ற இடங்களுக்குச் சிரமம் இல்லாமல் செல்ல வசதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இதை நடத்தி வைப்பதற்கு அதிகச் சிரமம் இருக்கிறது என்று சொன்னார். ரெயில்வே நிர்வாகம் 'டீ கார்டன் எக்ஸ்பிரஸ்' என்ற ஒரு எக்ஸ்பிரஸ் வண்டியை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு முக்கியமான காரணம், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதிலேயே வருகிறது. திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, சேலம், கோயம்புத்தூர் போன்ற ஜில்லாக்களில் இருக்கும்படியான சாதாரண, தாழ்த்தப்பட்ட மக்கள் ஏராளமாக நீலகிரி,

வால்பாறை மலைப் பகுதி தோட்டங்களிலே இருந்து வருகிறார்கள். இவர்களுக்கு வசதியாக— சிறிய பஸ்ஸாக இருந்தாலும் பரவாயில்லை— எக்ஸ்பிரஸ் பஸ்விட என்ன கஷ்டம். இப்போது சி.டி.சி போன்ற ஸ்தாபனங்களில் பஸ்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி, அவர்களுக்கு சேசிஸ் அதிகம் கிடைத்திருக்கிற இந்த சமயத்தில் .... (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியாக கேட்கவும்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். விட வேண்டுமென்று எங்களுக்கும் ஆசை இருக்கிறது. சிறிய பேருந்துகளை மலைப் பகுதிக்கு மட்டும்தான் இயக்கிக் கொண்டிருக்கிறோம். சிறிய பேருந்துகள் கீழே சாதாரணப் பகுதிக்கு வருகிறபோது இலாபம் இல்லாமல் ஓடக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தேவையான அளவிற்கு வால்பாறை போன்ற இடங்களிலிருந்து பேருந்துகள் இருக்கின்றன. அங்கே வந்துவிட்டால் தேவையான இடங்களுக்குப் போவதற்கு ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்று இருக்கும்பொழுது நேரடியாக பஸ் வேண்டுமென்று கேட்பது எவ்வளவு பொருத்தமானது என்பதை எங்களால் உணர முடியவில்லை.

**திரு. எம். ஆறுமுகம் :** துணைத் தலைவர் அவர்களே, வால்பாறையிலிருந்து கன்னியாகுமரி வரை நேரடி போக்குவரத்து வசதி தேவையென கோரிக்கையினை விடுத்திருக்கிறார்கள். வால்பாறை பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பகுதியான மக்கள் வெளி மாவட்டங்களிலிருந்து சேர்ந்திருக்கிற காரணத்தாலே, மேலும், இதற்கு முன்னரே பல்லவன் போக்குவரத்து கழக துரித பஸ் விடப்பட்டு, இரண்டு மாத காலம் ஓடிய பின்னாலே நிறுத்தப்பட்டது. எனவே துரித பேருந்து விடக்கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே துரித வண்டி விடுவதற்கு அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** ஏற்கனவே துரித வண்டி ஓடிக் கொண்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட தகவல் எனக்கு இல்லை. ஓடிக் கொண்டிருந்ததை 2 மாதத்தில் நிறுத்தியிருக்கிறார்கள் என்றால் மக்களைப் பழி வாங்க வேண்டும் என்பதால் அல்ல. சிக்கல் ஏற்பட்டதால் நிறுத்தியிருக்கிறார்கள். அதையும் கவனிக்க வேண்டும். அதை மீண்டும் அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**திரு. ஏ. டி. கருப்பையா :** துணைத் தலைவர் அவர்களே, சேக்கல்முடியிலிருந்து கோவைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் ஓடிக் கொண்டிருப்பது அமைச்சர் அவர்களுக்கு நன்கு தெரியும் என்று நினைக்கிறேன். சேக்கல்முடியிலிருந்து கன்னியாகுமரிக்கு விடுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

(பதில் இல்லை)

**பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய டிப்போ.**

*வினா எண் 469— **திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போடியில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திற்குப் புதிய டிப்போ கட்டுவதற்கான இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டதா ?

(ஆ) வேலை எப்போது துவக்கும் ?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** (அ) இன்னும் இல்லை.

(ஆ) இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, வருவாய் அதிகாரிகள் இடத்தைப் பாண்டியன் சாலைப் போக்குவரத்துக் கழகத்தினிடம் ஒப்படைத்த பின்னர் வேலைகள் தொடங்கும்.

**திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் :** துணைத் தலைவர் அவர்களே, போடி நகரத்திலே அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலிருந்தும் வருகின்ற 60 பஸ்கள் நிறுத்த வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே விரைவாக நிலத்தை ஆர்ஜிதம் செய்ய அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :** அங்கே இருக்கின்ற சிக்கலைப் பார்த்துத்தான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. விரைவாக அரசாங்கம் செய்வதற்கு மீண்டும் அவர்களைத் துரிதப்படுத்தும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** அரசுப் போக்குவரத்துக் கழகங்களைச் சேர்ந்த டெப்போக்களில் ஒரு கழகத்தைச் சேர்ந்த டெப்போவைச் சேர்ந்த வண்டியை இன்னொரு டெப்போவிலே பழுது பார்க்க மறுக்கிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஒரு டெப்போ வண்டி பழுது பட்டால் அதைப்

பழுது பார்க்கவும் அதற்குத் தேவையான டயரோ, டியூப்போ அல்லது மற்ற உதிரிப் பாகங்களோ தேவையென்றால் அதைக் கொடுக்க மறுக்கிறார்கள். இதன் காரணமாக வீண் காலதாமதமும் பயணிகளுக்கு கஷ்டமும் ஏற்படுவதை உணர்ந்து எந்த டெப்போ வண்டியாக இருந்தாலும் இன்னொரு டெப்போவிலே உதிரி பாகங்களைப் பெற்றுக் கொண்டு பழுது பார்க்க வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஒரு போக்குவரத்துக் கழகத்தினுடைய டெப்போ வண்டிக்கு இன்னொரு டெப்போவிலிருந்து கொடுத்தால் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படும், கணக்குகள் சரியாக வைத்துக் கொள்ள முடியாது. தவறுகள் ஏற்படும் என்பதை எண்ணித்தான் அதைத் தடைப்படுத்தி வைத்திருக்கிறோம். இருந்தாலும், சிறிய வேலைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பது நடைமுறையில் இருக்கிறது. பெரிய வேலைகளாக இருந்தால் சிக்கல் வரும், தவறுகள் நடக்கும் என்பதால் நிறுத்தி வைத்திருக்கிறோம்.

திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன் : சென்னையிலிருந்து போடிக்கு சூப்பர் எக்ஸ்பிரஸ் விட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களிடம் பலமுறை கேட்டிருக்கிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் அதுகுறித்து ஆணை பிறப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி என்பதாக தங்களுக்குத் தேவையானவைகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் அவர்களுடைய ஆர்வத்தை மனதிலே கொண்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கு. பெருமாள் : பாண்டியன் போக்குவரத்துக் கழகத்திலே தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு நிரம்பப் பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன, ஆனால் டெப்போக்கள் தொடங்கப்படவில்லை, அதனால் கிராமங்களுக்கு பேருந்துகள் விட முடியவில்லை, எனவே இந்த நிதியாண்டிலாவது அதிகமான டெப்போக்களைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுமா ? சாத்தூரில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : டெப்போக்கள் நிறைய வேண்டுமென்று சொல்லித்தான் அரசாங்கம் எங்கெங்குத் தேவையோ அங்கே இடங்களை ஆர்ஜிதம் செய்து கொண்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் எங்கே தேவை என்று சொல்கிறார்களோ அதை ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்கிறோம்.





## பேரணி இராம கால்நடைப் பராமரிப்பு நிலையம்.

*வினா எண் 470—திரு.கே.எம். தங்கமணி கவுண்டர்: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் சட்டமன்ற தொகுதி மைலம் பஞ்சாயத்து யூனியன் பேரணி கிராமத்தில் இயங்கி வந்த கால்நடை பராமரிப்பு நிலையம் சமீபத்தில் மூடப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) அப்பகுதியில் ஏராளமான கால்நடைகள் இருப்பதால் இந்நிலையம் மீண்டும் இயங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) அறியும். நிர்வாக காரணங்களால் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாள் முதல் இந்நிலையம் செயல்படவில்லை.

(ஆ) பேரணி கிளை நிலையத்தில் பணிபுரிந்து வந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டதால் கிளை நிலையம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையம் மீண்டும் இயங்க ஆவன செய்யப்படும்.

[முற்பகல் 10-30]

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அந்தக் கால்நடைப் பராமரிப்பு நிலையம் மூடப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன? அங்கிருந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டு விட்டார் என்பதால் கால்நடை பராமரிப்பு நிலையம் மூடப்பட்டது என்று சொல்வது சரியா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே விடையில் குறிப்பிட்டேன், பேரணி கிளை நிலையத்தில் பணிபுரிந்து வந்த கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டதால் கிளை நிலையம் இயங்காத நிலை ஏற்பட்டுள்ளது என்று. இந்நிலையம் மீண்டும் இயங்குவதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. கே. எம். தங்கமணி கவுண்டர் : துணைத் தலைவரவர்களே, அங்கே பணியாற்றிய கால்நடை உதவியாளர் மாற்றப்பட்டார் என்பது அரசுக்குத் தெரிந்தவுடன் வேறொருவரை ஏன் நியமனம் செய்யவில்லை? அதற்கான காரணம் என்ன? அவரை ஏன் மாற்றினார்கள்? உடனடியாக ஏன் அவரை ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை? இனிமேல் என்றையதினத்திலிருந்து அந்தக் கால்நடை பராமரிப்பு நிலையம் இயங்கும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அவர் மாற்றப்பட்டவுடன் ஏன் அந்த இடத்தில் வேறொரு உதவியாளர் பதிவியை ஏற்று வேலை செய்யவில்லை என்று கேட்டார்கள். பல கிளை நிலையங்கள் கால்நடை ஆய்வாளர்கள் இல்லாமல் இருந்து வருகின்றன. (சிரிப்பு) நான் பதில் சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே ஏன் சிரிக்க வேண்டும்? நான் இன்னும் பதிலை முடிக்கவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க அரசு ஆவன செய்து வருகிறது. அத்துடன் 'புல் ஸ்டேஷனி'ல் அதிகப்படியாக உள்ள கால்நடை ஆய்வாளர்களைத் திரும்பப் பெற்றுக் காலியாக உள்ள கிளை நிலையங்களிலே அமர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆகவே, காலியாக உள்ள கிளை நிலையங்களில் விரைவில் ஆய்வாளர்களைக் கொண்டு நிரப்பப்படும் என்பதை உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு ஆர். தியாகராசன்: மரியாதைக்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்தக் கால்நடை மருத்துவமனைகளில் அலுவலர்கள் இல்லாததால் பல ஊர்களில், குறிப்பாக எங்கள் பகுதியில் விருத்தாசலம் பகுதியில் ஒரு ஊரிலே இதைப்போலவே மூடப்பட்டிருக்கிறது. கோபாலபுரம் என்ற இடத்திலே மூன்று மாதங்களுக்கு மேலாக கால்நடை ஆய்வாளர்கள் இல்லாததால் மூடப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியிலே உள்ள கால்நடைகள் கோமாரி போன்ற பல நோய்களால் தாக்கப்பட்டு இறந்திருக்கின்றன. இது அமைச்சவரர்களுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை ஆய்வாளர்க்ள் அதிக எண்ணிக்கையில் இம்மாத காரணத்தினால்தான் மீண்டும் ஆய்வாளர்கள் பயிற்சியைத் தொடங்க ஆவன செய்து வருவதாக ஏற்கனவே ஒரு உறுப்பினர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது கூறியிருக்கிறேன். அடுத்து, கோமாரி நோய் பற்றிக் கூறிப்பிட்டார்கள், அந்த இடத்தில் கோமாரி நோயால் பாதிக்கப்பட்ட கால்நடைகளைப்பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை; தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கிறேன்.

வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை.

*வினா எண் 471 —திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலுக்கா வாழைப்பந்தல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் ஏதேனும் உண்டா ?

(ஆ) அத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும்



மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

(அ) கோட்டையிலுள்ள முதலமைச்சரின் அறை தனியார் ஒருவரால் நாசம் செய்யப் பெற்றுள்ளது.

திரு. ஏ. உமாநாத் : துணைத் தலைவரவர்களே, இந்த அவையினுடைய செக்யூரிட்டி சம்பந்தமாகவும், முதலமைச்சருடைய செக்யூரிட்டி சம்பந்தமாகவும் அவசரமாக இந்த அவைக்கு அவைத்தலைவரவர்கள்ஒரு அறிக்கை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கொஞ்சம் நேரத்திற்கு முன்னால்தான் எனக்குத் தகவல் கிடைத்து, நான் மேலே போய்ப் பார்த்தேன். முதலமைச்சருடைய ஆபீஸ் பூர்ணமாக நொறுக்கப்பட்டிருக்கிறது. அது, சித்தரிப்பதற்கு முடியாத அளவிற்கு கம்ப்ளீட்டாக. ransack பண்ணி அது நடந்திருக்கிறது. அவருடைய லைப்க்கு நிச்சயமாக ஆபத்து உண்டு என்பது நிச்சயம். இந்த அவைக் கட்டிடத்திற்குள்ளே அது நடக்கிற பொழுது இந்த அவையினுடைய செக்யூரிட்டிக்கும் நிச்சயமாக அதிலே security implications உண்டு யாராவது ஒருவர் அங்கே நுழையலாம் என்பது ஆகிவிட்டது, இந்த அளவிற்குச் செய்வதற்கு, That means ஒரு time explosive device கூட. அதற்குள்ளே ஒரு டைம்பாம் கூட வைக்கலாம். அந்த மாதிரி வைக்கலாம் அங்கே தெரியாமல் வைத்தாகிவிட்டது என்று சொன்னால், அதேமாதிரி அப்படி ஒரு டிவைஸ் ஒன்றை இங்கே வைக்க முடியும். நாம் யாரும் இல்லாத நேரத்திலே என்று சொன்னால், whole House-க்கு விசிட்டர்ஸ் உள்பட அவ்வளவு சீரியஸான பிரச்னை. இம்ப்ளிகேஷன்ஸ் ஏற்பட்டு இருக்கிறது. உடனே அறிக்கை கொடுக்கவில்லையென்று சொன்னால், பல Misunderstandings மாநிலம் பூராவும் வரும். அந்தக் கட்சி செய்ததா? இந்தக் கட்சி செய்ததா? என்று So many problems வரும். அந்தப் பிரச்னைகளுக்கும், சந்தேகத்திற்கும் இடம் இல்லாத நிலைமை உண்டாக்க வேண்டும். பதட்டம் தணிய வேண்டுமென்பதற்காக அவை முன்னவர் தயவு செய்து—எங்களுடைய கவலை பூராவும் நாங்கள் தெரிவிக்கிறோம்—அது சம்பந்தமாக அவசரமாக ஒரு அறிக்கை கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

[1981 மார்ச் 24

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் குறிப்பிட்டது போன்ற ஒரு நிகழ்ச்சி நேற்று இரவு, இன்று விடியற்காலை 4 மணி அளவில் நடைபெற்றது. இன்று காலை 4 மணி அளவில் யாரோ ஒருவன் கோட்டைக்குள் நுழைந்து அமைச்சர்கள் வருகின்ற வாயில் எண் 2-ல் மாட்டப்பட்டிருந்த போர்டைக் கழட்டி கீழே போட்டு அங்கேயிருந்த சில பூந்தொட்டிகளை உடைத்துள்ளான். அதன் பிறகு, அடுத்திருந்த வாயில் எண் 10-க்கு அருகில் உள்ள சில பூந்தொட்டிகளை உடைத்து விட்டு அங்கேயிருந்த கம்பி வேலிக்கு மேல் ஏறி, அதன் வழியாக மாடிப் படிக்குச் சென்று, பிறகு மாடி மேல் காபினட் அறைக்கும் முதல்வர் அறைக்கும் இடையிலுள்ள 'காரிடார்' வழியாகச் சென்றுள்ளான். அங்கு சுவரிலிருந்த மின் விசிறிகளின் ரெகுலேட்டர்களை உடைத்துக் கீழே தள்ளியிருக்கிறான். அதன் பிறகும் முதல்வர் அறையின் 'பாத்' ரூம் அருகில் வைக்கப்பட்டிருந்த தீ அணைப்புக் கருவியை எடுத்து, பாத் ரூமின் கதவிலிருந்த கண்ணாடியை உடைத்து உள்ளே சென்றுள்ளான். பாத் ரூமிலிருந்த பல பொருட்களைச் சேதப்படுத்தியுள்ளான். அதன் பிறகு பாத் ரூம் வழியாக முதல்வர் அறைக்கு உள்ளே சென்று அங்கேயிருந்த பெரிய கடிகாரம், சட்டமன்ற நடவடிக்கைகளைக் கேட்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கி, மற்ற பல பொருட்களுக்குச் சேதம் விளைவித்துள்ளான். அதன் பிறகு அங்கிருந்த சோபாவில் நிர்வாணமாக உட்கார்ந்திருந்ததாகத் தெரிகிறது. இந்த சத்தங்களைக் கேட்டு அருகில் சுண்ணாம்பு அடித்துக் கொண்டிருந்த பையன்கள் கூறியதைக் கேட்டு காவலாளிகளும் கான்ஸ்டபிள்களும் மேலே சென்று அவனைப் பிடித்துள்ளார்கள். அவன் இப்பொழுது கோட்டை காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளான். இது விஷயமாக போலீசார் புலன் விசாரணை செய்து வருகிறார்கள். அவன் தமிழ், தெலுங்கு, இந்தி ஆங்கிலம், என்று பல்வேறு மொழிகளைத் திரும்ப, திரும்பப் பேசிக் கொண்டிருக்கிறான் என்று சொல்கிறார்கள். அந்த முழு விசாரணையும் முடிந்ததற்குப் பிறகுதான் முழு நிலைமைகளை அவைக்கு அறிவிக்க முடியும். இப்பொழுது கிடைத்திருக்க அளவிற்கு, இந்த அளவிற்குத்தான் செய்தி வந்திருக்கிறது. அதுபற்றிய முழு விவரமும் வந்ததற்குப் பிறகு மீண்டும் அவைக்கு அதுபற்றிய விளக்கத்தை நான் தருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இதிலிருந்து நமக்கு ஏற்படுகின்ற பாடத்தினை அடிப்படையாக வைத்து எந்த அளவிற்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள், அவை உறுப்பினர்களுக்கும் சரி, அவைக்கும் சரி, இந்தக் கோட்டையிலே இருக்கிற அமைச்சர்கள் அறை, மற்ற அலுவலாளர்கள் அறை ஆகியவற்றிற்கு, செய்ய இயலுமோ அதைப் பற்றி முடிவு எடுப்பதற்கும் அரசு ஆயத்தமாக இருக்கும். ஆனால், அதுபற்றிய முழு விவரத்தையும் முழு விளக்கங்கள் கிடைத்த பிறகு அவைக்கு அறிவிக்க இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1981 மார்ச் 24]

***டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, இன்று விடியற் காலை 4 மணி அளவில் நடைபெற்றதாக அவை முன்னவர் அவர்கள் இங்கே விவரித்துள்ள நிகழ்ச்சி கண்டிக்கத் தக்கதும் வருந்தத்தக்கதுமான ஒரு நிகழ்ச்சியாகும். எனக்கு இதிலே இருக்கிற வியப்பெல்லாம் விடியற் காலை 4 மணி அளவில் இந்தக் கோட்டைக்குள்ளே நுழைந்து முதலமைச்சர் அறையிலே உள்ள போர்டையும் கழட்டி எறிந்து, உள்ளேயும் நுழைந்து, கண்ணாடிகளை நொறுக்கி, மின் விசிறிகளை நொறுக்குகின்ற அளவுக்கு ஒருவன் இவ்வளவு ஆரவாரங்கள், ஆர்ப்பாட்டங்கள் செய்திருக்கும்பொழுது, இங்கேயிருந்த காவல் துறை என்னவாயிற்று ? அதற்காக நியமிக்கப்பட்ட பாதுகாவலர்கள் தங்கள் பொறுப்பிலேயிருந்து எப்படி தவறினார்கள் என்பனவைகளையும் ஆராய்ந்திட வேண்டும், ஏனென்றால், அந்த அளவிற்குப் பொறுப்பற்ற தன்மையிலே இங்கு பாதுகாப்பிருந்த காரணத்தினாலேதான் இவ்வளவு நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. இல்லாவிட்டால், ஒருவன் வந்தான், ஓடினான், பிடித்தார்கள் என்கிற அளவோடு நிகழ்ச்சிகள் முடிந்திருக்கும். அந்த அளவிற்கு இங்கிருந்த பாதுகாப்புத் துறை தூங்கி விட்டதா ? அதுபற்றியும் ஆராய்ந்திட வேண்டும். ஏனென்றால், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால்தான் வருங்காலத்திலே அவர்கள் எச்சரிக்கையாக இருப்பதற்கு அது உதவிகரமாக இருக்கும். அந்த நடவடிக்கையையும் இந்த அமைச்சரவை மேற்கொள்ளுமா என்று நான் அவை முன்னவரிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இந்தப் புலன் விசாரணை நடக்கிற பொழுது அந்த நிலைமைகள் எல்லாம் தெரியும். ஆகவே, 4 மணிக்கு, இந்தக் காவல் துறை, இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவர்கள், என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பதும், அவர்களைப் பற்றிய முழு விவரங்களும், இந்தப் புலன் விசாரணை மூலமாக வரும். அப்படி வருகின்றபொழுது, அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுத்து, எதிர்காலத்தில் அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தவிர்ப்பதற்கு முன்னெச்சரிக்கையாக என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அவைகள் மேற்கொள்ளப்படும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று எச்சரிக்கையாக இருந்து, அந்த அறிக்கையினுடைய முழு விவரம் வந்த பிறகு, தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10—40]

**டாக்டர் திரு. கே. பி. இராமலிங்கம் :** * * * *

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கு இணங்க அகற்றப்பெற்றது.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திற்கும், சட்டமன்றத்தைச் சுற்றி இருக்கிற அமைச்சர்களுடைய அறைகளுக்கும் போதுமான பாதுகாப்பு எதிர்காலத்திலே தரப்படும் என்று அவையினுடைய முன்னவர் அவர்கள் கூறினார்கள். அதைப்போல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கி இருக்கிற விடுதிகளிலும் இதுபோன்ற பாதுகாப்பை அளிக்கும்படி அவையினுடைய முன்னவர் அவர்களை மிகுந்த பணிவன்போடு கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், போதுமான பாதுகாப்பு அங்கே இல்லாத காரணத்தால், பல் வேறு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே குடியிருந்து வருகிற காரணத்தால் மாச்சரியங்கள் வாயிலாக ஏதேனும் விளைவுகள், நடைபெறா வண்ணம் அதைத் தடுப்பதற்கு நல்லதொரு பாதுகாப்பு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கி இருக்கின்ற விடுதிகளுக்குத் தரப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கி இருக்கும் விடுதியில் பாதுகாப்பு குறைவாக இருக்குமானால், அங்கேயும் பாதுகாப்பு ஏற்படுத்துவதற்கு என்ன முயற்சிகள் மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி தக்க முடிவுகள் எடுக்கும். அங்கே இருக்கின்ற பொருள்கள்தான் அவ்வப்போது காணாமல் போகின்றன என்ற குற்றச்சாட்டுகள் தான் வந்து கொண்டிருக்கின்றன. மேலும் அங்கே நிறைய பேர்கள் வந்து போகின்ற காரணத்தால் அதைக் கண்டிப்பதிலே பல தகராறுகள் ஏற்படுகின்றன. என்று சொல்லப்படுகின்றது. என்றாலும்கூட, காவல் துறையின் மூலம் எந்த அளவுக்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த அளவுக்கு ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் இராம லிங்கம் பேசிய வார்த்தைகளை அவைக்குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. நா சுந்தரராஜ்** துணைத் தலைவர் அவர்களே இன்று காலையிலே முதலமைச்சர் அவர்கள் அறையிலே ஏற்பட்ட சம்பவம் குறித்து நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெளிவாகவும் விளக்கமாகவும் கண்டித்து இருக்கிறார்கள். *

* * * * *

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் சொல்லியாகிவிட்டது. ஒவ்வொரு கட்சியாகப் பேசிக் கொண்டு இருந்தால் நேரம் அதிகமாகும். நான் டாக்டர் இராம லிங்கம் பேசியதையும் நீக்கி விட்டேன். தற்போது திரு. சுந்தர ராஜ் பேசிய பகுதியும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று காலையில் 4 மணி அளவுக்கு நடைபெற்றது என்றும் அதற்கான நிலைமை எல்லாம் நான் விளக்கிக் காட்டினேன். அதைப் பற்றி புலன் விசாரணை நடைபெறும் என்றும் சொல்லி இருக்கிறேன். இந்த நிலையில் அரசியல் பற்றியோ அதன் பின்னணி பற்றியோ எந்தப் பிரச்சினையையும் எழுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட பிரச்சினையைப் பற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை. முழு உண்மை தெரியாத நிலையில் நாமே ஒரு முடிவுக்கு வருவது தவறு. புலன் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதன் முடிவு வந்ததற்குப் பிறகு தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னதற்குப் பிறகு இந்த அளவோடு விட்டுவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** டாக்டர் இராம லிங்கம் சொன்னதையும், திரு. நா. சுந்தரராஜ் அவர்கள் சொன்ன சில வார்த்தைகளையும் நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

ஆ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை.

(திரு. ரகுமான்கான் எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான் கான் கொடுத்துள்ள பிரச்சினை என் ஆய்வில் இருக்கிறது.

***திரு. க. அன்பழகன் :** சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, பிரச்சினையை நான் எடுத்துச் சொல்வது முறை அல்ல. ஆனால், கொடுத்திருக்கிற பிரச்சனை சாதாரண பிரச்சனை அல்ல. ஆய்வில் இருக்கிறது என்று சொல்லக்கூடிய பிரச்சனை அல்ல. சட்டமன்றத்தில் இருக்கின்ற ஒரு உறுப்பினரின் நியாய மான உரிமைகள் பாதிக்கப்படத்தக்க வகையில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்று இருக்குமானால் அது அவையின் கவனத்திற்குக் கொண்டு வரப்படுகிற அளவிற்கு வாய்பபு அளிக்க வேண்டியது சபையின் தலைவர் சபை உறுப்பினர்களுக்குத் தரவேண்டிய பாதுகாப்பு ஆகும். ஆகவே, தாங்கள் ஆய்வில் இருக்கிறது என்று சொல்வதன் மூலம், அதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர வாய்ப்பு இல்லாமல் தவறிப்போகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[1981 மார்ச் 24

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரகுமான் கான் அவர்கள் அந்தத் தீர்மானத்தை காலையில் 8–45 மணிக்குத்தான் கொடுத்தார்கள். 15 நிமிடத்திற்குள் என்ன செய்ய முடியும்.

**திரு. அ. ரகுமான்கான் :** எந்தப் பொருள் குறித்து கொடுத்து இருக்கிறேன் என்று சொல்லக்கூடாதா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படிச் சொல்வதாக இருந்தால், அதை இப்போதே அனுமதித்து விடலாமே.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :** அவர் எதைப பற்றிக் கொடுத்தார் என்று எங்களுக்குத் தெரிய வேண்டாமா ? தாங்கள் கூறினால் தானே தெரியும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பிரச்னையை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம், இன்றுதான் அதைக் கொடுத்து இருக்கிறார்கள். அரசுத் தரப்பில் அது குறித்து தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இங்கே அதை எழுப்ப அனுமதி அளித்து விட்டால, அதற்கு பதில் அளிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருப்பதால், நாளைக்கு அதை எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** அது எந்தப பிரச்சினை குறித்து என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் வீடு தாக்கப்பட்டது குறித்து திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். அது என் ஆய்வில் இருக்கிறது.

### 3. வரவு செலவுத் திட்டம் 1981–82 விவாதம்—தொடர்ச்சி

**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மீது நான் சில முக்கியமான கருத்துக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் குறிப்பிட்டேன். மத்திய அரசாங்கத்திற்கு எந்த ஒரு மாநில அரசாங்கத்தையும் கலைக்கின்ற அதிகாரம் இருக்கக் கூடாது என்றும், அதேபோல் மாநிலங்களுக்கு அதிகமான அதிகாரங்கள் கிடைக்கவேண்டும் என்றும், நேற்றைக்கு வலியுறுத்திக் கூறியதைத் தொடர்ந்து இன்றைக்கும் சில முக்கியமான விஷயங்களை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.



1981 மார்ச் 24] [திரு. மு. அம்பிகாபதி]

இன்றைக்கு நாடு முழுவதும் ஏற்பட்டு இருக்கும் பொருளாதார நெருக்கடி, இந்தியாவில் ஏற்பட்டு இருக்கக்கூடிய கடுமையான நெருக்கடி, விலைவாசி ஏற்றம் போன்ற பிரச்சினைகள், இன்றைக்குத் தமிழ்நாட்டையும் கடுமையாக பாதிக்கும் நிலைமைக்கு ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெளிவாக நாங்கள் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறோம். இந்திய அரசாங்கம் கடைப்பிடிக்கின்ற பொருளாதாரக் கொள்கைதான் இந்த நாட்டையும் இந்த நாட்டு மக்களையும் பெருமளவிற்கு பாதிக்கச் செய்து இருக்கிறது என்பதைத் தெளிவாகவும், திட்டவட்டமாகவும் நாங்கள் எடுத்துச் சொல்ல விரும்புகிறோம். மத்திய அரசாங்கம் எக்காரணத்தைகொண்டும் மாநில அரசுகளைக் கலைக்கக்கூடாது என்று நாங்கள் தீர்மானம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அரசு அதை ஆதரிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். மத்திய அரசாங்கம் எக்காரணத்தைக் கொண்டும் மாநில அரசுகளைக் கலைக்கக்கூடாது என்ற தீர்மானத்தை நாங்கள் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அரசு அதை ஆதரிக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

காரணம், மேற்கு வங்கத்தில் நேற்றையதினம் மதிப்பிற்குரிய ஜோதி பாசு அவர்களுடைய தலைமையில் பிரமதாஸ் குப்தா போன்ற தலைவர்களின் துணையோடு இடது சாரி கட்சிகளின் கூட்டம் கல்கத்தாவில் நடந்து இருக்கிறது. மத்திய அரசாங்கம் மேற்கு வங்க அரசை கலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதைக் கண்டிக்கும் முறையில் இந்த இடதுசாரி கட்சிகளின் சார்பில் அந்தக் கூட்டம் நடைபெற்று இருக்கிறது. மேற்கு வங்கத்திற்கு இன்றைக்கு வரும் நிலைமை தமிழ் நாட்டிற்கு நாளைக்கு வராது என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது. எனவே, காக்காய் போன்று நோக்கு அறிந்தவர்கள் கம்யூனிஸ்ட்கள். காக்காய் நோக்கு அறியும், கொக்கு டப்பு தான் அறியும். அதை விளக்க விரும்புகிறேன். காக்காய் ஒருவன் உட்கார்ந்தால் அதை நோக்கும். அவன் கல் எடுத்தால் கொஞ்சம் நகரும். கல் எடுத்தஉடனே அதற்கு அப்பாலே தள்ளிப் போகும். பிறகு அவன் கல் வீசும்போது பறந்து போகும். காக்காய் போன்று நோக்கு அறிந்தவர்கள் கம்யூனிஸ்ட்கள். இந்திரா காந்தி அம்மையார் தமிழ்நாடு அரசைக் கலைத்தார்கள் அல்லது சுட்டார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சுடப்படுகிற சத்தம் கேட்ட உடனேயே காக்காய் ஆக இருந்தால் பறந்து போகும். கொக்காக இருந்தால் குண்டடி பட்டு கீழே விழுகிறபோதுதான் ஆகா, குண்டு நம்மீது போடப்பட்டு விட்டதா என்று சொல்லிச் சாயும்போதுதான் அதை உணரும்.

[திரு. மு. அம்பிகாபதி] [1981 மார்ச் 24

[முற்பகல் 10-50]

அதுபோல தி. மு. கழக ஆட்சியை முதலில் இந்திரா காந்தி கலைத்தார். பிறகு அண்ணா தி. மு. க. ஆட்சியை கலைத்தார். ஆனால் அந்த குடுரெக்கை ஒரமாகப்பட்டு, அண்ணா திமுகாவை மக்கள் காப்பாற்றி விட்டார்கள். மீண்டும் ஆட்சியில் அமர்த்தி யிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அண்ணா தி. மு. க. மீண்டும்ஆட்சிக்கு வந்தது இந்திராகாந்தி தயவால் அல்ல; தமிழக மக்கள் அளித்த தெளிவான தீர்ப்பினால் மீண்டும் அண்ணா தி. மு. க. ஆட்சிக்கு வந்திருக்கிறது. எனவே அந்த மக்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும்? அவர்களுக்காக பல்வேறு காரியங்களை செய்வதற்கு ....................

திருமதி டி. யசோதா : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். ஆட்சியைக் கலைத்ததுபற்றிச் சொல்கிறார்கள்...........

திரு. ப. நெடுமாறன் : துணைத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது இப்படி இடையிலே இன்னொரு உறுப்பினர் குறுக்கிடலாமா? அதை அனுமதித் தால் ஒவ்வொருவரும் குறுக்கிடவார், என்றாகிவிடும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தப் பிரச்சினையில் பாயின்ட் ஆப் ஆர்டர் வேண்டாம். அவர் பேசியதற்கு விளக்கம் சொல்ல வேண்டுமானால் உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் பேசும்போது விளக்கம் சொல்ல லாம். திரு. மு. அம்பிகாபதி அவர்கள் தொடர்ந்து பேசலாம். (குறுக்கீடுகள்). இது முறையல்ல. எல்லோரும் இப்படி பேச வேண்டுமென்றால் அவையை ஒழுங்காக நடத்த முடியாது.

* திருமதி டி. யசோதா : துணைத் தலைவரவர்களே, ஒரு சிறிய சந்தேகம், அதை மட்டும் கேட்டு விடுகிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை கலைப்பதற்கு மத்திய அரசு காரணம் என்று சொல்லுகிற அதே நேரத்தில் இன்றைக்கு தமிழக முதலமைச்சராக இருக்கிற அண்ணா தி. மு. க. தலைவருமான எம். ஜி. ஆர். அவர்களும் கம்யூனிஸ்ட் கட்சியின் அன்றைய தலைவராய் இருந்த திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் மனு கொடுத்தது உண்மையா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது விவாதம்; பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உங்கள் கட்சி யிலிருந்து யாராவது பேசும்போது பதில் சொல்லலாம்; உட்காருங்கள்.

திரு. நா. சுந்தரராஜ் : துணைத் தலைவரவர்களே, இது மிக முக்கியமானப் பிரச்சினை. (குறுக்கீடுகள்).



1981 மார்ச் 24]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். இப்போது அதுபற்றி குறுக்கிட்டுப் பேச வேண்டாம். உங்களுடைய கட்சியிலிருந்து பேசுகிறபோது அதற்கு விளக்கம் சொல்லலாம். (குறுக்கீடுகள்) நாம் சட்ட திட்டத்திற்கு உட்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு அவையை நடத்துகிறோம். அதை மீறினால் அவையை ஒழுங்காக நடக்க முடியாது. ஆகவே, எல்லோரும் உட்காருங்கள்.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவரவர்களே, ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு இருக்கிறபோது சந்தேகம் தெரிந்துகொள்ளவோ அல்லது விளக்கம் பெறவோ இன்னொரு உறுப்பினர் விரும்பினால், பேசிக்கொண்டிருக்கிற உறுப்பினர் சம்மதம் தெரிவித்து உட்கார்ந்தால், கல்டானால், அதாவது அவையில் விளக்கம் பெறுவதற்காக பேச அனுமதிப்பது இந்த அவையின் மரபாக இருக்கிறது. நேற்று ரகுமான்கான் அவர்கள் பேசும் போது ஆளும்கட்சித் தரப்பில் குறுக்கிட்டு, விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. அதை அனுமதித்திருக்கிறீர்கள் அதைப் போல திரு. அம்பிகாபதி அவர்கள் கல்டானால், விளக்கம் பெறுவதற்காக குறுக்கிட்டுப் பேசுவதில் தவறு இல்லை என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் சொல் கிற கருத்து ஒன்று. ஆனால் இவர்கள் எழுப்புகிற கருத்து வேறு. அதுமட்டுமல்ல. திரு. அம்பிகாபதி அவர்கள் கல் டாகவில்லை. ஆகவே, மற்றவர்கள் குறுக்கிட அனுமதி இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : ஐ ஆம் நாட் யீல்டிங். எனவே துணைத் தலைவர் அவர்களே, எங்கள் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எந்த ஆட்சியையும் கலைக்க வேண்டும் என்ற நோக்கம் இல்லை. அரசியல் சட்டத்திலே இருந்து அந்தப் பிரிவையே அகற்ற வேண்டும் என்பதுதான் இந் இயக் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை. முன்பு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைத்ததைக் கூட நாங்கள் வர வேற்றுத் தீர்மானம் போடவில்லை என்பதையும் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே இன்றைக்கும் சரி, அன்றைக்கும் சரி குற்றச்சாட்டு கொடுப்பது என்பது வேறு. இது பற்றி வேண்டும் என்றால் தனியாகப் பேசுவோம். ஆனால் இன்றைய தினம் தமிழகத்தின் மக்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை ஆதரித்து வாக்களித்து இருக்கிறார்கள். கேரளாவிலே பொருள் பங்கீட்டு முறை திரு. அச்சுத மேனன் தலைமையிலே ஆட்சி நடந்திய காலத்திலே இருந்து திரு. நாயனார் அவர்களுடைய ஆட்சி நடைபெறுகின்ற இன்று வரை மிகவும் முறையாக செய்யப்பட்டு வருகின்றது

[திரு. மு. அம்பிகாபதி] [1981 மார்ச் 24

இதை இந்தியாவிலுள்ள அனைத்து பத்திரிகைகளும் பாராட்டு கின்றன. அதுபோன்று தமிழகத்திலுள்ள அமுதம் அங்காடி களை முறைப்படுத்தி மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்கள் அவ்வளவையும் விநியோகிப்பதற்கு துரித மாக நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

என். ஜி. ஓக்களைப் பொறுத்த வரையில் அவர்களுக்கு அளிக்க வேண்டிய மூன்று தவணைப் பஞ்சப்படி களை ஒரு தவணை பற்றித்தான் இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது. எனவே இது பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பரிசீலித்து என். ஜி. ஓ.க் களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து பட்டதாரி ஆசிரியர்கள் சென்னை கடற்கரையிலே உண்ணாவிரதம் இருப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் கள். அவர்கள் 9 அம்ச கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஓய்வு பெறுகிற காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்பது அதிலே ஒரு கோரிக்கை.

அடுத்து அரசு ஊழியர்கள் ஓய்வு பெறுகின்றபோது அவர் களுக்கு 10,000 ரூபாய் கொடுக்க வழிவகை இருக்கின்றதா என் பது பற்றி அரசு பரிசீலிக்க வேண்டும். குறிப்பாக இன்றைக்குத் தமிழகத்தில் குடிக்கத் தண்ணீர் இல்லாதநிலைமை ஏற்பட்டிருக் கின்றது. திடீரென்று, ரோடு ரோடாக புயல்பாதுகாப்பு இல் லங்கள் கட்டுகிறார்கள், அதுபோன்று வறட்சி ஏற்படாமல் தடுப்ப தற்காக, அல்லது வறட்சி ஏற்பட்டால் தண்ணீர் கொடுத்து மக் களைப் பாதுகாப்பதற்குரிய சிறப்புத் திட்டங்களை தீட்டி செயல் படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குறுவை அறுவடை காலத்தில் ஒரு மூட்டை அதாவது 64 கிலோ 45 ரூபாய், 50 ரூபாய், என்று விற்றது. இன்றைக்கு 85 ரூபாய் என்ற அளவில் விற்கப்படுகின்றது. வேறு சில இடங் களில் இன்னும் அதிகமாக விற்கப்படுகின்றது. எனவே அரசாங்கமே நெல் முழுவதையும் கொள்முதல் செய்து தகுந்த முறையிலே மக்களுக்கு உணவு தானியத்தை வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அடுத்து இங்கே பணியாற்றுகின்ற காவலர்களுக்கு 4 ரூபாய் படி கொ●க்கப்படுகின்றது. அவர்களுக்கு இன்னும் ஒரு ரூபா உயர்த்த வேண்டும். அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

அடுத்து சென்னை நகரத்தில் இருந்து 32 கிலோ மீட்டர் வரை 5 சதவீதம் விற்பனை வரி உயர்வு செய்திருப்பதை ரத்து செய்ய வேண்டும். இந்த வரியை உயர்த்தக் கூடாது. விற்பனை வரி என்பது ராஜாஜி அவர்களுடைய காலத்தில் மதுவிலக்குக்



1981 மார்ச் 24] [திரு. மு. அம்பிகாபதி]

கொண்டு வரப்பட்டபோது ஏற்படுத்தப்பட்டதாகும். இப்
போது மதுவிலக்கை சுத்தமாக ரத்து செய்யப் போகிறோம்.
அதன் மூலம் நமக்கு 200 கோடி ரூபாய் வரப்போகிறது. விற்
பனை வரி முழுவதையும் ரத்து செய்ய வேண்டாம். இந்த விற்
பனை வரியை ஒருமுனை வரியாக மாற்றி வரியைக் குறைக்க
வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களைக்
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவல் துறையைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்கு
தனியாக மீட்டர் வைக்காமல் ப்ளாட் ரேட்டாக 20
ரூபாய் என்று மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அது
பற்றி மின்சார வாரியம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டும்.

அடுத்து தஞ்சை மாவட்டத்தில் பல்கலைக் கழகம் நஞ்சையும்,
புஞ்சையும் கொஞ்சி விளையாடும் தஞ்சைத் தரணிக்கு புகழ்
சேர்க்கின்ற வகையில் சோழ மண்டலத்தில் தமிழ் பல்கலைக்
கழகம் துவங்குவதற்கு அரசு முடிவு எடுத்திருப்பதை தஞ்சை
மாவட்டத்தில் மக்களின் சார்பில் வாழ்த்துகிறேன். பாராட்டு
கிறேன். ஏனென்றால் இந்தப்பல்கலைக் கழகம் வர வேண்டும் என்
பதற்காக நான்தான் முதல் முதலில் டி.டி.சி.யில் தீர்மானத்தைத்
தாக்கல் செய்தேன். எல்லா உறுப்பினர்களும் அதை ஆதரித்
தார்கள். ஆகவே இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் பல்கலைக்
கழகம் வருகின்றது என்பது எனக்கு ரொம்பவும் பெருமையாக
இருக்கின்றது. ஆகவே தஞ்சை மாவட்ட மக்களின் சார்பிலே
நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு
நிதியமைச்சரவர்கள் பட்டுக் கோட்டையைச் சேர்ந்தவர்கள்,
ஆனால் தமிழ்நாடு முழுவதற்கும் அவர்கள் நிதியமைச்சர்தான்
இருந்தாலும் தஞ்சை மாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக திட்
டம் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகின்ற காரணத்தால் அவர்
களைப் பாராட்டுகிறேன். மத்தியிலே இருக்கின்ற நமது
தமிழகத்தைச் சேர்ந்த நிதியமைச்சரவர்கள் வரியைப் போட்டு
பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். ஆனால் இவர்கள் வரியைப்
உயர்த்தாமல் பட்ஜெட் போட்டிருக்கிறார்கள். ஆனால் இனி,
மேல்தான் வரியை ஏற்றுவோம் என்று சொல்கிறார்கள், வேண்
டாம் என்று நாங்கள் கூறுகிறோம். ஆகவே டீசல் விலையை
உயர்த்தக்கூடாது. பஸ் கட்டணத்தை உயர்த்தக்கூடாது.
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். சோழன் போக்கு
வரத்துக் கழகத்தில் டீசலை முறைப்படுத்திச் சிக்கனமாக பயன்
படுத்துவது பற்றி புதிய பயிற்சி கொடுக்கிறார்கள்
ஆகவே இதுபோன்று சிக்கனப்படுத்துகின்ற முறைகளைக் கை
யாள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து,
பல் பிரச்சினைகள் பற்றி இந்த பட்ஜெட்டிலே தெரிவித்திருக்
கிறார்கள்.

[திரு. மு. அம்பிகாபதி] [1981 மார்ச் 24

[முற்பகல் 11-00].

தஞ்சை மாவட்டத்தில் கட்டுகிற பள்ளிக் கூடங்களின் கூரைகளை ஆஸ்பெஸ்டாஸ் ஓடுகளைக் கொண்டு போட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். புயல் அடிக்கடி வீசக் கூடிய தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய கூரைகளை அது கிளப்பிக் கொண்டு போய்விடக் கூடும். ஆகையினால் கான்கிரீட் போட்ட சிமென்ட் தளம் ஒட்டிய மேற்கூரைப் பகுதிகளை போடக் கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த திட்டங்களை உடனடியாக சிறப்பாக நடவடிக்கை எடுத்து நிறைவேற்றுவதற்கான முறையில் முயலவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக் கொண்டு, கடைசியாக, சகல மருத்துவ மனைகளுக்கும் ஜெனரேட்டர்கள் போடவேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே; 1981—82 ஆம் ஆண்டிற்கான, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசினுடைய நிதி நிலை அறிக்கையினை மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். அந்த நிதி நிலை அறிக்கையினை வரவேற்று பேசுகின்ற நல்வாய்ப்பினை எனக்கு உருவாக்கித் தந்தமைக்கு முதலில் உங்களுக்கு என் நன்றியைத் தெரித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஜே. எஸ். இராசு) — தலைமை)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பேசுகிற நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேசிய நண்பர்கள், 'கண்ணைச் சிமிட்டும் கானல் நீர்' என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில், இந்திய துணைக் கண்டம் இப்போதிருக்கும் சூழ்நிலையில், விலைவாசி ஏற்றத்தின் மத்தியில் பணவீக்கம் அதிகமாகியிருக்கும் நேரத்தில், மற்றைய மாநிலங்களில் கொண்டு வரப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில், நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கத்தின் சார்பாக மாண்புமிகு நிதியமைச்சர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்த நிதிநிலை அறிக்கை 'பாலைவனத்தில் மத்தியிலே ஒரு சோலைவனமாகத்தான்' இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவாகச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய மாநிலத்தில் சரியாக மழை பெய்யாததின் காரணமாக பல்வேறு இடங்களிலும் கடுமையான வறட்சி ஏற்பட்டு விட்டது. அந்த வறட்சியை நீக்குகிற வகையில் தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களும், ஏனைய அமைச்சர் பெருமக்களும், மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, மக்களின் துயரைப் போக்க எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டு



1981 மார்ச் 24] [திரு. ப. தனபால்]

வறட்சியை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ள நிர்வாக இயந்
திரத்தை முழு மூச்சுடன் முடுக்கிவிட்டது, அதனால் இந்த வறட்சி
நிலையை ஒரு கட்டுக்குள் கொண்டு வந்ததைப் பாராட்டக்
கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இந்த வறட்சியைப் பற்றி பேசுகின்ற நேரத்
திலே, என்னுடைய தொகுதியான சங்கரியைப் பற்றி, அங்கே
ஏற்பட்ட குடிதண்ணீர் பஞ்சத்தைப் பற்றி இங்கே பலரும்
எடுத்துச் சொன்னார்கள். என்னுடைய தொகுதி சங்கரியில் மிகக்
கடுமையான அளவு குடிதண்ணீர் பஞ்சம், தட்டுப்பாடு, ஏற்
பட்டது உண்மைதான். ஆனால் நம்முடைய மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களின் அரசாங்கம் எடுத்த நற்காரியங்
களின் விளைவாக, துரிதப் பணிகளின் விளைவாக, சங்கரியில்
ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்னை ஒரு கட்டுக்குள் வந்திருக்கிறது
என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். அதற்காக
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்கு என்னு
டைய நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாக செலுத்தக்
கடமைப்பட்டிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்
கிறேன்.

அரசாங்கத்தில் இப்படிப்பட்ட காரியங்களை மேற்கொள்
ளும்போது, அதற்கான உதவிகளையும், தகுந்த ஆலோசனை
களையும் சொல்ல வேண்டியது எதிர்க்கட்சிகளின் கடமையா
கும். ஆனால் அரசோடு இந்த நிவாரணப் பணிகளில் ஒத்து
ழைக்காமல், இந்த மிகப் பெரிய மக்கள் பிரச்னையை, வறட்சிப்
பிரச்னையை அரசியல் பிரச்னையாக ஆக்கி அவர்கள் பேசிக்
கொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளில் செய்திகளாக
வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

1974—75ஆம் ஆண்டிலே, தமிழகத்தில் வறட்சி ஏற்பட்ட
போது, அப்போது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக் காலத்
தில் இருந்தது. அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம், கட்சி வித்தியாசம் பாராமல் வறட்சியைப்
போக்க பாடுபட்டது. புயலால் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட
காலத்திலும், மக்களின் துயரங்களை சிரமங்களை களைய, பல
பணிகளை செய்தது. கஞ்சித் தொட்டிகளை கூட திறந்து மக்க
ளுக்கு தொண்டாற்றியது. அப்போது கட்சி வித்தியாசம் பாரா
மல் மக்கள் பணியை முதன்மையாக நினைத்து தொண்டாற்றி
யது, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம். ஆனால் இப்
போது வறட்சி ஏற்பட்டது என்று, சங்கரியில் குடி தண்ணீர்
பஞ்சம் ஏற்பட்டது என்று, அந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண
ஆலோசனைகளை கூறாமல், உதவி செய்ய முன் வராமல்,
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் அதை
அரசியல் பிரச்னை ஆக்கி, செய்திகளை இன்றைக்கு வெளியிட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே

[திரு. ப. தனபால்] [1981 மார்ச் 24

ஏதோ சங்கரியில் பாலும் தேனும் ஆறாகப் பெருகி ஒடியனதைப்
போல, இப்போதுதான் தண்ணீருக்கே பஞ்சம் ஏற்பட்டுவிட்ட
தைப் போல, அட்டைகளைக் கொண்டு வந்து காட்டிக் கொண்
டிருக்கிறார்கள். உங்களால் சங்கரியில் சரியாக தண்ணீர் வினி
யோகிக்க முடியவில்லை, அதனால் அடையாளக் கார்டுகளை
வழங்கியிருக்கிறீர்கள் என்று குற்றம் சுமத்தினார்கள். அந்தத்
தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் பணிவோடு
தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இப்படிப்பட்ட அட்டைகளை வைத்து குடிநீர் வழங்குவது
என்பது இந்த ஆட்சியில் ஏற்பட்டதல்ல. 1974, 1975ல்
என்று மட்டுமல்ல, 1967 ல் கூட வறட்சி ஏற்பட்டு,
வறட்சிக் கார்டுகள் கொடுத்து குடிநீர் வழங்கப்பட்
டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப் பட்டிருக்
கிறேன். நேற்று ஒரு கார்டை காட்டினார்கள். இன்று நான்
காட்டுகிற கார்ட் 1974 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்ற
கழகம் ஆட்சியில் இருந்தபோது சங்கரியில் குடிநீருக்காக வழங்கப்
பட்ட அடையாள அட்டை என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன். ஆகவே இந்த ஆட்சியில்தான் அடையாள
அட்டைகள் வழங்கி குடிதண்ணீர் வழங்குகிறார்கள் என்பதல்ல.
இதற்கு முன்னால் இருந்த ஆட்சியாளர்கள் நல்ல முறையில்
குடிநீர் பிரச்னையைத் தீர்க்க முறையாக திட்டங்கள் போடாத
காரணத்தால்தான் இதுபோன்ற பிரச்னைகள் இன்று ஏற்பட்
டிருக்கின்றன என்று திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீது
குற்றஞ்சாட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். திராவிட முன்
னேற்றக் கழக ஆட்சியில்தான் ஊர் ஊராக துளைக் கிணறுகள்
போடப்பட்டு குடிநீர் வழங்கியதைப் போல் எதிர்க்கட்சியைச்
சார்ந்த தலைவர்கள் பல்வேறு மேடைகளில் விளக்கமாக, விளம்
பரமாகப் பேசி வருகிறார்கள். நான் இந்த மாமன்றத்தின் முன்
னால் பணிவோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைபட்டிரு
கிறேன், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் சங்கரி நகரில்
ஒரு துளைக் கிணறு கூடப் போடவில்லை என்பதை ஆதாரத்
தோடு தெரிவிப்பது எனது நீங்காத கடமையாகும். புரட்சித்
தலைவர் அவர்கள் ஆட்சி ஏற்பட்ட பிறகுதான், அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகு
தான் 1977—78ல் முதன் முதலாக சங்கரி நகரில்
30 துளைக் கிணறுகள் ரூ. 4,50,000 செலவில் போடப்பட்டன.
இன்று அந்தத் துளைக் கிணறுகள் மூலம் மக்களுக்கு குடிநீர்
கொடுக்கிற முயற்சியைச் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அது
மட்டுமல்ல. குடிநீர் பிரச்னையைத் தீர்க்க புரட்சித் தலைவர்
அரசு இன்று ஏறக்குறைய 45 இலட்சம் ரூபாய் செலவில் பள்ளிப்
பாளையம்—சங்கரிக்கு குடிநீர் கொண்டுவரும் திட்டத்தை அமல்
படுத்தி பணிகள் விரைவாக சீராக நடைபெற்றுக்கொண்டிருக்
கின்றன. இன்னும் ஆறு மாத காலத்தில் அது முடிவடைந்து
சங்கரி நகர் மக்களின் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கக்கூடிய அள



1981 மார்ச் 24] [திரு. ப. தனபால்]

விற்குள்ள சூழ்நிலை புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில்
ஏற்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்
இன்று குடிநீர்ப் பிரச்னையைப் போக்க 15,000 மக்கள்கொண்ட
சங்கரி நகரில் நாள் ஒன்றுக்கு 70,000 லிட்டர் குடிநீர் கொண்டு
வந்து விநியோகிக்கப்படுகிறது. இன்னும் அதிகப்படியாகக்
கொடுத்து, ரேஷன் முறை இல்லாமல், எந்தவிதமான கட்டுப்
பாடும் இல்லாமல் மக்களுக்குப் போதுமான அளவு குடிநீர் தண்ணீர்
வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை புரட்சித் தலைவர் அவர்கள்
அரசு ஏற்படுத்தித் தந்திருக்கிறது. இப்படி புரட்சித் தலைவர்
அரசு செய்கிற நல்ல காரியங்களைப் பாராட்டாமல் அவர்களுக்கு
ஒத்துழைப்பு தராமல் அதற்கு மாறாக சிலர் ஏசிப் பேசுகிறார்கள்.
ஆனால் தமிழக மக்கள் புரட்சித் தலைவர் அரசு செய்யக்கூடிய
நல்ல காரியங்களைப் பாராட்டி அப்படிப்பாராட்டு தெரிவிப்
பதோடுகூட புரட்சித்தலைவர் அவர்களை அவர்கள் தங்கள்
இதய சிம்மாசனத்தில் வைத்து போற்றிப் புகழ்கிறார்கள்
என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அடுத்து, இந்திய துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்தி
லும் இல்லாத ஒரு புதிய திட்டம், புரட்சித் தலைவர் அவர்கள்
சிந்தனையில் உருவாகிய திட்டம், தமிழ்நாட்டில் சீரோடும் சிறப்
போடும் நடைபெற்று வருகிறது, அதுதான் தன்னிறைவுத் திட்டம்
இந்தத் திட்டம் வேறு எந்த மாநிலத்திலும் நடைபெறவில்லை.
இந்தத்திட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்துவதன்
மூலம் இந்தியத் துணைக்கண்டத்திற்கே நம் மாநிலம் ஒரு 'மாடல்
ஸ்டேட்' டாக வழிகாட்டும் மாநிலமாக இருக்கிறது என்பதைச்
சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை
பலர் பாராட்டியுள்ளார்கள். குடிநீர் வசதி, சாலை வசதி,
போக்குவரத்து வசதி, மின்சார வசதி, மருத்துவமனைகள்
ஏற்படுத்துதல், பள்ளிக்கூடங்கள் அமைத்தல், தாழ்த்தப்பட்ட
வர்களுக்கு வீடுகள் கட்டுதல் போன்ற பல்வேறு பிரச்னைகள்
ஒருங்கிணைந்து செயல்படுகிற ஒரு திட்டமாகும் இந்த, தன்னிறை
வுத் திட்டம். பல மாநிலங்களில் இந்தத் திட்டங்கள் தனித்தனி
யாக செயல் பட்டாலும்கூட ஒருங்கிணைத்ததொரு திட்டமாக
தமிழகத்தில் மட்டும் மட்டும்தான் புரட்சித் தலைவர் அவர்கள்
ஆட்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டம் 69 ஊராட்சி ஒன்றியங்களில் நிறைவேற்றப்
பெற்று இன்னும் 150 ஒன்றியங்களில் விஸ்தரிக்கப்பட இருக்கிறது.
அப்படி விஸ்தரிக்கப்படும் போது சமுதாயத்தில் உள்ள அடித்
தள மக்களுக்கு அது ஒர் பேருதவியாக இருக்கும். சமுதாயத்
தில் அடித்தளத்தில் உள்ள மக்களை முன்னேற்றுவதற்காகத்
தான் இந்தத் திட்டத்தைப் புரட்சித் தலைவர் அரசு அமைத்திருக்
கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-10]

இந்தத் திட்டத்தைப் பொருளாதார நிபுணர்கள் பாராட்டு
கிறார்கள்; மத்திய அரசாங்கத்திலே இருக்கின்ற அமைச்சர்
பெருமக்கள், மற்ற மாநிலங்களிலே இருக்கின்ற அமைச்சர்
பெருமக்கள் இந்தத் திட்டத்தின் சிறப்பினை, வியந்து பாராட்
டிப் போயிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் படிப்படியாக
மற்ற மாநிலங்களிலும் விஸ்தரிக்க வேண்டுமென்று விரும்பு
கின்ற சூழ்நிலை இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது
இந்தத் திட்டத்தை திட்டக் குழு உறுப்பினர்கள் பாராட்டி
யிருக்கிறார்கள். தமிழகத்தில் நிறைவேற்றப்படும் இந்த
ஒரு முக்கியமான திட்டத்தை வேறு எந்த மாநிலத்திலும்
நிறைவேற்ற முடியாத அளவுக்கு சீரோடும், செம்மையோடும்
புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் இந்தப் புரட்சித்
தலைவர் ஆட்சியின் சாதனைகளில் வைரக்கற்களாக பதிக்கப்
பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக நிதி நிலை அறிக்கையில் ஒரு இலட்சம்
ஆதித் திராவிட பழங்குடி மக்களை கூட்டுறவு இயக்கத்தில்
கொண்டுவரப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1981-82
ஆம் ஆண்டில் 40,000 ஆதித் திராவிட பழங்குடி மக்களை
கூட்டுறவு இயக்கத்தின், அமைப்புகளின் உறுப்பினர்களாகக்
கொண்டு வரப்படுவார்கள் என்ற செய்தி, தமிழகத்திலே
இருக்கின்ற ஆதித் திராவிட பழங்குடி மக்களின் காதுகளிலே
தேனாகப் பாய்கிறது. அவர்கள் உறுப்பினர்களாக சேருவதற்கு
இந்த அரசாங்கம் 100 ரூபாய் பங்குத் தொகை மூலமாக உதவித்
தொகை அளித்து கூட்டுறவு அமைப்புகளில் அவர்களையும் உறுப்
பினர்களாகச் சேர்ப்பதன் மூலம், அவர்கள் பயிர்க் கடன், பால்
பண்ணைக்கடன், கோழிப் பண்ணைக் கடன், இன்னும் பல்வேறு
கடன்கள் இந்தக் கூட்டுறவு அமைப்பின் மூலம் பெற்று, தாங்களும்
வளர்ந்து, தங்கள் குடும்பங்களும் வளர்ந்து, வாழ்க்கையிலும்,
பொருளாதாரத்திலும் முன்னேறி, அதே சமயத்தில்
அவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறிய மற்றவர்களுடன்
போட்டி போட்டு வரக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலையை உரு
வாக்கும் என்பதோடு, இந்தத் திட்டம் சமுதாயத்தில் இருக்
கின்ற ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதிலும், சீரோடும் சிறப்
போடும் பயன்படும் என்ற அந்த நம்பிக்கையோடு தாழ்த்தப்
பட்டமக்களுக்குச் சமுதாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தும்
என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, ஆதித்திராவிட பழங்குடி மாணவர்கள்
விடுதியில் தங்கிப் படிக்கிறார்கள். அப்படித் தங்கிப் படிக்கும்
மாணவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்தியிருப்பது ஒரு
சிறப்பான அம்சமாக இருக்கிறது. அந்த மாணவர்கள் உயர்
நிலைப் பள்ளிகளில் கற்கும் அடிப்படையில், அந்தப் பழங்குடி
மாணவர்கள் தங்கள் கல்வியில் அதிகக் கவனம் செலுத்தும்
வகையில் 500 உயர்நிலைப் பள்ளிகளில் சிறப்புப் பயிற்சித்



திட்டம் தொடங்கப்பட இருக்கிறது. அந்தப் பயிற்சித் திட்டத்தை
அரசாங்கமே நிறுவி. வாழ்க்கையில் வாய்ப்பும் வசதியும்
இல்லாமல் இருக்கும் மாணவர்களுக்கு மேலும் மேலும் பய
னளிக்கின்ற வகையிலே, அவர்கள் எதிர்காலத்திலே தங்கள்
வாழ்க்கையைச் சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கு இந்தத்
திட்டம் சீரோடும், செம்மையோடும் பயன்படும் என்பதை நான்
இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இவ்வளவு சிறப்பான அம்சங்கள், திட்டங்கள் நிதி நிலை
அறிக்கையிலே இருந்தாலும், சேலம் மாவட்டம் ஒரு வளர்ந்து
வருகின்ற மாவட்டமாக, தொழில்கள் பெருகிவரும் மாவட்டமாக
இருக்கும் இந்த மாவட்டத்தில் ஒரு மருத்துவக் கல்லூரி இல்லா
தது ஒரு மிகப் பெரிய குறையாக இருக்கிறது என்பதை நான்
இந்த நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசாங்கத்தின்
கவனத்திற்கு கொண்டுவருவது என்னுடைய கடமை என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கனவே ரயில்வே செஸ் நிதி
அங்கே இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டு
மென்று, மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே தீர்மானம்
போட்டு நம்முடைய அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறோம்.
எனவே, வரும் நிதி ஆண்டிலாவது புரட்சித் தலைவர் அரசாங்
கம் சேலம் நகரில் ஒரு மருத்துவக் கல்லூரியை நிறுவுகின்ற
ஒரு திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று நான் புரட்சித்
தலைவர் அவர்களை இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல், சேலம் மாவட்டத்தில் இரும்பாலைத்
திட்டத்தின் மூலமாக அதன் தொடர்பாக பல்வேறு துணைத்
தொழில்கள் வருவதற்கும், பெருகுவதற்கும் வாய்ப்பும்,
வசதியும் உருவாகிக் கொண்டிருக்கிறது. அப்பேர்ப்பட்ட
தொழில் நகரத்திலே, வணிகப் பெருமக்கள் வாழ்ந்து வருகின்ற
சேலம் மாநகரத்திலே இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலங்
களை இணைக்கின்ற. ஒரு விமானத் தளம் அமைப்பது அவசியம்.
என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட கடமைப்
பட்டிருக்கிறேன். ஏற்கனவே மத்திய அரசாங்கம் சேலத்திற்கு
ஒரு விமானத் தளம் அமைக்கின்ற திட்டத்தைக் கையில் வைத்
திருக்கின்றது. அப்படிப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்த மத்திய
அரசாங்கத்தை நமது புரட்சித் தலைவர் அவர்கள் அரசாங்கம்
வற்புறுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் பணிவன்
போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல்வேறு சிறிய பிரச்னைகள்
இருந்தாலும், ஒருசில பிரச்னைகளை மட்டும் இந்த நிதி நிலை
அறிக்கையில் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருது
கிறேன். என்னுடைய தொகுதியான சங்கரியில், மல்லசமுத்
திரத்தில் ஒரு பாசனத் திட்டம் பாதியிலேயே நிறுத்தப்
பட்டியிருக்கிறது. இந்த திருமணிமுத்தாறு வாய்க்கால் திட்டம்

[திரு. ப. தனபால்] [1981 மார்ச் 24

பாதியிலே நிற்கிறது. பாதியிலே நிறுத்தி வைத்திருக்கிற இந்தத் திட்டத்தின் மூலமாக ஏறக்குறைய 10,15 ஆயிரம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அவர்களுடைய வாழ்விற்குப் பெரும் தடைகல்லாக இருக்கிறது. திட்டத்தை நிறைவேற்றித் தருவதின் மூலம் 15 ஆயிரம் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்விலே ஒளி விளக்காக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற சங்ககிரி பகுதியிலே பல்வேறு தொழில்கள் உருவாகிற முறையில் ஒரு தொழிற்பேட்டையை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கிற தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய, அடித்தளத்தில் இருக்கிற மக்களின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றுகின்ற சிறப்பான திட்டங்களைக் கொண்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை, சமதர்ம சமுதாயத்தைப் படைக்கிற வகையிலே அமைத்திருக்கிறது என்று கூறி, முழு மனதோடு பாராட்டி, இதனை வரவேற்று, விடைபெறுகிறேன், நன்றி.

* திரு. ஜே. எஸ். இராசு: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற 1981–82-ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது, தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வில் மற்ற எவரைக் காட்டிலும், எந்தக் கட்சியைக் காட்டிலும் குறையாத அளவிற்கு ஆர்வமும், அக்கறையும் கொண்டிருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின் போது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்ட ஆளும் கட்சித் தரப்பில் இருக்கிற மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறி புத்தன் அவர்கள், எங்களுக்கு ஓட்டு போட்டவர்கள் அல்லவா நிதி நிலைபற்றி விமர்சிக்க வேண்டும். குற்றம் குறைகளைச் சொல்ல வேண்டும், என்று, ஜனநாயக தத்துவத்திற்கே ஒரு புதிய இலக்கணம் வகுக்கின்ற வகையில் இங்கு பேசினார். மாண்புமிகு நாவலர் அவர்கள் கூட அதை அப்போதே கண்டித்தார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் இரண்டு நாள் விவாதத்தில் ஆளும் கட்சியில் யாரும் அவ்வாறு பேசவில்லை என்பதை அறிய மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அவ்வாறு இனியும் பேசமாட்டார்கள் என்று நம்புகிறேன். காலம் தாழ்த்தி இந்த நிதிநிலை அறிக்கை இங்கு வைக்கப்பட்டுள்ளது. கால தாமதத்திற்கான காரணத்தை அறிக்கையில் சொல்லியிருந்தால் நாகரீகமாக இருந்திருக்கும். அப்படி தெரிவிக்க வேண்டுமென்றும், அது அரசின் கடமை என்பதையும் முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு பக்தவத்சலம் அவர்கள் கூட ஒரு கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். அவ்வாறு காரணம் சொல்லப்படாமைக்கு உள்ளபடியே மிகவும் வருத்தப்படுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில்



1981 மார்ச் 24] [திரு. ஜே. எஸ். இராசு]

இது அவசரக் கோலத்தில் அள்ளித் தெளிக்கப்பட்ட ஒன்றாகும்.
நல்ல அச்சகம், நமது அரசின் கையிலே இருக்கிறது. நல்ல
தொழிலாளர்கள் அச்சகத்திலே பணியாற்றுகிறார்கள். ஆனால்
பிழை மலிந்த புத்தகம் போல் இந்த நிதி நிலை அறிக்கை காட்சி
யளிக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டக் விரும்புகிறேன்.

நிதிநிலை அறிக்கையை வாசிக்கிற போதே நல்ல தமிழ் கற்ற
நம்முடைய நாவலர் அவர்கள் பலமுறை குறிப்புகளை திருத்திக்
கொள்ளுங்கள். புள்ளி விவரங்களை மாற்றிக் கொள்ளுங்கள்
என்று உறுப்பினர்களை வேண்டிக் கொள்கிற நிலையில் இருந்தார்
என்பதை மறுப்பதற்கில்லை. ஆளும் கட்சி தரப்பினர் இந்த
நிதிநிலை அறிக்கையை நாவலர் அவர்கள் வாசிக்கிறபோது
கை தட்ட வேண்டும், பாராட்ட வேண்டும், ஆர்ப்பரிக்க
வேண்டும் என்று இயற்கையாக எழும் உணர்ச்சியோடு தங்க
ளுடைய கரங்களை எல்லாம் தயாராக வைத்துக் கொண்டிருந்
தார்கள். ஆனால் எந்த ஒரு இடத்திலேயும் இந்த அரசு,
புரட்சித் தலைவர் அரசு, புரட்சி பட்ஜெட்டைத்தருகிறது என்று
சொல்லிக் கொள்கிற இந்த அரசு, அளித்த பட்ஜெட்டிற்கு எந்த
ஒரு கட்டத்திலேயும் ஆளும் தரப்பிலேயிருந்து ஒரு முறை கூட
கைதட்ட முடியாமல் போனது என்பதை இந்த நேரத்திலே நான்
மட்டும் அல்ல, இந்த நாட்டு மக்களும் அறிந்திருக்கிறார்கள்.
கை தட்ட வேண்டும், ஆர்ப்பரிக்க வேண்டும் என்று இருந்த
நம்முடைய ஆளும் கட்சி தரப்பினர்களுக்கு என்னுடைய அனு
தாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

அது மட்டுமல்ல, படிக்கிறபொழுது நாவலரிடத்திலே எப்
போதும் இருக்கிற புன்னகை ஏனோ அன்று மறைந்து விட்டது.
நம்முடைய முதல்வர் அவர்கள் கூட முழு நேரம் உட்கார்ந்திருந்
தார்கள். அவர் வந்தபோதும் பார்த்தோம், படிக்கிற போதும்
திரும்பிப் போகிற போதும் அவரிடத்திலே இருக்கிற பொலிவும்
புன்னகையும் இல்லாமலே போய்விட்டது. ஆளும் கட்சிக்குத்
தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற கட்சிகள் கூட இன்றுவரை
இந்த பட்ஜெட்டைப் பாராட்டவில்லை. பாராட்டக் கூடிய அள
வுக்கு புதுமையோ, செயல் திட்டங்களோ மக்கள் வாழ்வு பெறு
வதற்கான யோசனைகளோ இல்லை என்பதை ஆளுங்கட்சியை
ஏதோ ஒரு வகையிலே இன்னமும் ஆதரித்துக் கொண்டிருக்கின்ற
எதிர்க்கட்சிகள் மிக அழுத்தமாக பட்ஜெட்டின் மீது கருத்துக்
களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

விலைவாசியைக் கட்டுப்படுத்தவோ நியாய விலையில் உணவுப்
பண்டங்கள் கிடைப்பதற்கோ பட்ஜெட்டில் வழிவகை ஏது
மில்லை. விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட சலுகைகள் போதாது.
சிறு விவசாயிகளுக்கு அசல் பூராவையும் ரத்து செய்திருக்க

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 மார்ச் 24

வேண்டும். விவசாயத் தொழிலாளருக்கு பென்ஷன் வழங்க ஏற்
பாடு செய்திருக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு.
அழகர்சாமி அவர்கள் தனது மேலான கருத்தைத் தெரிவித்திருக்
கிறார்கள். “ஏழை விவசாயிகளுக்கு அதிகச் சலுகை இல்லாத
பட்ஜெட்” என்று பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்த திரு.
ஆண்டித் தேவர் அவர்களும் அழகாகக் குறிப்பிட்டு இருக்கிறார்
கள். “விலைவாசி ஏற்றத்தால் அவதிப்படும் ஏழை நடுத்தர
மக்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முற்போக்கான திட்டங்கள்
பட்ஜெட்டில் ஏதுமில்லை” என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி
யின் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் தெரிவித்திருக்கிறார்
கள்.

ஒரே ஒரு அகவிலைப்படி மட்டும் தந்திருப்பதும் ஓய்வு பெறும்
காலத்தில் 10,000 ரூபாய் தர வேண்டுமென்ற கோரிக்கை
மறுக்கப்பட்டிருப்பதும் பெருத்த ஏமாற்றமாக இருக்கிறது என்று
அனைத்து ஆசிரியர் சங்கத் தலைவர்களும், என்.ஜி.ஓ. சங்கத்
தலைவர்களும் கூறியிருக்கிறார்கள். வணிகப் பெரு மக்களுக்கு
வேதனை தரும் பட்ஜெட் என்று தமிழ்நாடு வர்த்தக சபைத்
தலைவர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் கூறியுள்ளார்கள்.
இதிலே ஒன்றும் இல்லை என்று வணிகப் பெருமக்கள் ஏமாற்றம்
தெரிவித்திருக்கிறார்கள். நடைமுறையில் இருப்பதை அப்படியே
சொல்லியிருக்கிறார்கள். எதை எதையோ செய்வதாகக் கூறி
னார்கள். தொழில் வளர்ச்சிக்கு ஒரு திட்டமும் இல்லை. பிறகு
எப்படி வேலையில்லா திண்டாட்டம் போகும் என்று இந்திரா
காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஹாஜா செரீப் அவர்கள்
அழுத்தமாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டால்
நாட்டிற்கு நன்மையில்லை, ஆகவே அரசுக்கு எதிராக மக்களைத்
திரட்ட வேண்டும் என்று ஜனதாக் கட்சித் தலைவர் இஸ்மாயில்
அவர்கள் தீவிரமாகக் கூறியுள்ளார்கள்.

நான் இந்த நேரத்திலே இன்னொரு கருத்தையும் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். இந்த பட்ஜெட் மட்டுமல்ல, 1977 ஆம்
ஆண்டிலே முதல் முறையாக முதல்வராகத்தமிழ்நாடு அரசாங்கத்
தின் பொறுப்பை அ.இ.அ.தி.மு.க. ஏற்றுக் கொண்டபோது
அளிக்கப்பட்ட பட்ஜெட்டைக் கூட எந்த நடுநிலை ஏடும்
பாராட்டவில்லை. வந்த புதிதிலே அதாவது, 1977–78 ஆம்
ஆண்டில் கொடுக்கப்பட்ட நிதிநிலை அறிக்கை கூட அவ்வாறு
தான் இருக்கிறது என்று இடையிலே நின்று மீண்டும் வந்திருக்கிற
கல்கி பத்திரிகை அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறது. பெரிய
அளவுக்கு மக்களின் ஆதரவோடு ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க.
ஆட்சி தனது நிதிநிலை அறிக்கையில் பல நல்ல காரியங்கள்
செய்யத் தவறிவிட்டது” என்று கல்கி பத்திரிகை அப்போது குறிப்
பிட்டது.



1981 மார்ச் 24] [திரு. ஜே. எஸ். இராசு]

“நடுத்தர மக்கள், கடை நிலை மக்கள், கிராமப்புற மக்கள்
விலைவாசி உயர்வால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தவிர
படித்த பட்டதாரிகள் ஒரு பக்கம் வேலையில்லாமல் திண்டாடு
கிறார்கள். தொழிலாளர்களின் பிரச்சினைகளும் வெடிக்கத்
தெ ங்கியுள்ளது. விவசாயிகள் அ.தி.மு.க. அரசின்
தேர்தல் வாக்குறுதிகளை நம்பி ஏமாற்றம் அடைந்து விட்டனர்.
பல தரப்பு மக்களும் உங்கள் தேர்தல் வாக்குறுதியை நம்பி
பெரிதும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். எப்படியும் வெற்றிபெற
வேண்டுமென்ற ஒரே குறிக்கோளில் தேர்தல் நேரத்தில் வாக்
குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அ.தி.மு.க. வினர் ஆட்சிக்கு
வந்துவிட்டனர். ஆனால் பொறுப்புள்ள முதல்வர் எம்.ஜி.ஆர்.
இப்போது அதைத் தட்டிக் கழிக்கிறார். காரணங்கள் கூறுகிறார்.
இது அரசியல் அல்ல. எம்.எல்.ஏ. க்கள் இதுபற்றி சட்டமன்றத்
தில் பேச வேண்டும். பொதுமக்களும் தேர்தல் வாக்குறுதிகளை
எம்.ஜி.ஆர். அரசு நிறைவேற்ற வற்புறுத்தி போராட முன்வர
வேண்டும்.

இல்லாவிட்டால் இந்த ஆட்சியால் ஒரு பலனும் இருக்காது
என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அல்ல, ஆட்சியை
விமர்சிக்கின்ற வேறு தரப்பிலே இருக்கின்ற பேச்சாளர் அல்ல,
கம்யூனிஸ்ட் கட்சியிலே நீண்ட காலம் பணியாற்றி வருபவரும்,
இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்து பணியாற்றியவருமான
திரு கே. டி. கே. தங்கமணி அவர்கள் கடந்த ஆண்டு 1980 ஆம்
ஆண்டு செப்டம்பர் 4 ஆம் தேதி தூத்துக்குடியிலே பேசியிருக்
கிறார்கள். 1980 செப்டம்பரிலே திரு கே. டி. கே. தங்கமணி
அவர்கள் பேசியது இன்றைக்கும் பொருத்தமாக இருக்கிறது என்
பதை இந்த நிதிநிலை அறிக்கை எடுத்துக் காட்டுகிறது.

இந்த பட்ஜெட்டைக் குறித்து மாண்புமிகு ஆளுங்கட்சி
உறுப்பினர் திரு. செங்கோட்டையன் அவர்கள் மலர்ந்த தாமரை
போல் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவருடைய
கற்பனையில் உதித்த அழகான உவமானத்தை மறுக்க நான்
விரும்பவில்லை. ஆனால் அதிலே ஒரு திருத்தம் செய்வதற்கு
அவர் அமைதி வழங்குவார் என்று நான் கருதுகிறேன். மலர்ந்த
தாமரை என்று நான் ஒப்புக்கொண்டாலும் அது மணமற்ற
தாமரையாக இருக்கிறது என்பதை நான் எடுத்துக் காட்டிய
சான்றுகள் தெரிவிக்கும் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு வி.வி. சுவாமிநாதன்
தலைமை).

அதனால்தான் பாராட்டுப் பெறாத, நாட்டு வளர்ச்சிக்கு
வகை செய்யாத ஒரு பட்ஜெட்டைத் தனது அரசு கொண்டு
வரப்போகிறது என்பதை உணர்ந்த மதிப்பிற்குரிய முதலமைச்சர்
அவர்கள் நாவலர் அவர்களைக் கூட ஒரு வகையிலே இடறி
விட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்

[திரு. ஜே. எஸ். இராசு] [1981 மார்ச் 24

பட்டிருக்கிறேன். சில நாட்களுக்கு முன்பு மதுரையில் முதல் வரைப் பார்த்து நிருபர்கள் கேட்கிறார்கள். வரப்போகிற நிதி நிலை அறிக்கை எப்படி இருக்கும் என்று. எப்படியோ ஒரு வகையிலே சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும் என விரும்பிய முதலமைச்சரவர்கள் சுருக்கமாக, '' காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு '' என்று கூறியிருக்கிறார்கள். இதில் எனக்குத் தெரிந்த அர்த்தம் என்னவென்றால், ஏதோ எங்களால் முடிந்தது இதுதான்; இவ்வளவுதான் போட முடியும் என்ற அர்த்தம் தொனிக்கும் வகையில்தான் அப்படிச் சொல்லியிருக்கிறார்.

காக்கைக் குஞ்சு அழகாக இல்லாமல் இருந்தாலும், கறுப்பாக இருந்தாலும், பார்ப்பதற்கு அவலட்சணமாக இருந்தாலும் அந்தக் காக்கைக் குஞ்சைப் பெற்றெடுத்த தாய்க் காகம் '' என்னுடைய காக்கைக் குஞ்சுதான் உலகத்திலே அழகான காக்கைக் குஞ்சு என்று தான் கருதும். ஆகவே அதுபோல் என்னுடைய அரசால் தயாரிக்கப்பட இருக்கின்ற பட்ஜெட் இப்படித்தான் இருக்கும் என்று அந்த விஷயத்தை, அந்த நோக்கத்தை, அதன் அழகைப் பற்றி அப்பொழுதே முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து விட்டார்கள். என்னதான் அழகாக பூத்த தாமரை என்றோ, பாலைவனத்தில் பூத்த பசுஞ்சோலை என்று திரு. தனபால் அவர்கள் சொன்னது மாதிரியோ பாராட்டினாலும் காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்பதுபோல் இவ்வளவு தான் முடியும். மேலும் எதிர்பார்க்காதீர்கள் என்று முதல்வர் ஏற்கனவே சொல்லிவிட்டதால் நிச்சயமாக நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இறுதி உரையிலே பாராட்டினாலும், புகழ்ந்து போற்றினாலும், காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு என்று குறிப்பிட்டு விட்டதால் முதலமைச்சரவர்களே இந்த அறிக்கையால் தனக்கே நிம்மதி இல்லை, திருப்தி இல்லை என்று சொல்லிவிட்டதால் நிதிநிலை அறிக்கை பாராட்டுக்கு உரியதல்ல என்று தான் கருதப்படும்.

அரசு சில உறுதிமொழிகளைக் கொடுக்கும் நேரத்தில் நம்மால் அதை நிறைவேற்ற முடியுமா என்று கவனித்துத் தர வேண்டும். எத்தனை உறுதி மொழிகளைத் தந்தீர்கள். '' விழிப்போடு உள்ள மக்களுக்கு துடிப்போடு எனது அரசு செயலாற்றும் '' என்றும், '' அமைந்துள்ள என் அரசு அமரர் அண்ணா அவர்களின் கொள்கைகளை நிறைவேற்ற ஆர்வம் பூண்டுள்ளது'' என்றும், '' வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் அனைத்து மக்களின் வாழ்விலும் விளக்கேற்றி வைக்க தன்னாலான எல்லாவற்றையும் செய்ய இந்த அரசு உறுதி பூண்டுள்ளது '' என்றும் இரண்டாவது முறையாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தபொழுது 26—6—1980-இல் மதிப்பிற்குரிய ஆளுநர் திரு. பட்வாரி அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அவரது அழகான உரைக்கு, அவர் சொன்ன இலக்கணத்திற்கு ஏற்ற வகையில் அரசு நடைபோடுகிறதா? என்று ஆளுங் கட்சி நண்பர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 24] [திரு. ஜே. எஸ். இராசு]

மக்கள் என்னவோ தற்போது உங்கள் ஆட்சியை விழிப்போடு தான் கவனித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அரசுப் பொறுப்பிலே உள்ள நீங்கள் தான் துடிப்போடு செயல் படாமல் இருக்கிறீர்கள்.

நேற்று மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பேசிய நேரத்தில், '' வறட்சி பற்றி ஆழமாக இந்த அரசு தெரிந்து கொள்ளவில்லை, சரியாக வறட்சியைக் கணிக்கவில்லை, வறட்சியைப் போக்கும் பணி, எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை போதாது என்று தோழமைக் கட்சியைச் சேர்ந்த அனுபவம் மிக்க திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். திரு. ரமணி அவர்களின் குற்றச்சாட்டுக்கு என்ன பதிலை இந்த அரசாங்கம் சொல்லப்போகிறது என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.
'' We a e ne r,r g f. mi c co diti o . ''

வறட்சி நிலையைக் கடந்து பஞ்ச நிலையை அடைந்துள்ளோம் என்றும் திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இது எதைக் காட்டுகிறது? துடிப்பாகச் செயலாற்றும் உங்கள் திறமையையா இது காட்டுகிறது?

'' பொறுப்புள்ள மனிதர்கள் தூக்கத்தினால் பல பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா '' என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பாடியது அல்ல—அவர் நடித்து அந்தப் பாடலுக்கு வாயசைத்த அந்தப் பாடலுக்கு முதல்வரே இலக்கியமாக, எடுத்துக் காட்டாகத் திகழ்கிறாரே. இதை அறியும்பொழுது உள்ளபடியே நான் பரிதாபப்படுகிறேன்.

அண்ணாவின் கொள்கைகளை நிறைவேற்ற ஆர்வம் கொண்டிருப்பதாக் 26—6—1980 இல் கூறினீர்கள். ஆனால் 23—3—1981 இல் மது விலக்கைத் தளர்த்தி யிருக்கிறீர்கள்.

[முற்பகல் 11—30]

தமிழகத்தில் உண்மையிலேயே தற்போது மதுவிலக்கு இல்லை. இப்பொழுதே மது விலக்கு இல்லை. அதைத் தளர்த்தியதாகச் சொல்வது ஒரு புதிய அறிவிப்பே தவிர, வேறில்லை. உங்களுக்கு இந்த கொள்கையில்தான் எவ்வளவு குழப்பம்? உங்களையும் குழப்பி, எதிர்க்கட்சிகளையும் குழப்பி, தோழமைக் கட்சிகளையும் குழப்பி, மக்களையும் குழப்பி, ஒரு புதிய திட்டத்தை அறிவித்திருக்கிறீர்கள். தளர்த்தி இருக்கிறோம். என்று சொல்கிறீர்கள். அண்ணாவின் கொள்கையைக் காப்பாற்றுவோம் என்ற உறுதி இதயத்திலே தெளிவாக இருக்குமானால், நாங்கள் பூரணமாக அமல்படுத்துவோம் என்று சொல்லுங்கள். அல்லது அதிலே தோல்வி கண்டு விட்டோம், எங்களாலே இயலாது,

நாங்கள் நிச்சயமாக மது விலக்கை ரத்து செய்கிறோம் என்று துணிந்து சொல்லுங்கள். ஏன் அரைக் கிணறு தாண்டுகிறீர்கள்? கேட்டார், அம்பிகாபதி, நேற்று, "முழுக்க நனைந்தபின் முக்காடு எதற்கு" என்று. நானோ, என்னுடைய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களோ அதைக் கேட்டிருந்தால் எகிறிக் குதித்திருப்பீர்கள், எட்டடி பாய்ந்திருப்பீர்கள். ஆனால் அவர் கேட்டார், சூடாகக் கேட்டார். அம்பிகாபதிக்கு என்னுடைய வாழ்த்துக்கள். அரசாங்கத்தைப் பற்றிய அவருடைய 'கமென்ட்ஸ்' வளர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

"ஆகா—என் கணவர் எவ்வளவு உத்தமமானவர்? பர்மிட் வாங்கி, பாட்டிலில் வாங்கி வந்து, வீட்டுக்குக் கொண்டு வந்து கதவைப் பூட்டி, எவ்வளவு பத்திரமாக, பவ்வியமாகக் குடிக்கிறார் இவரன்றோ என் மனதிற்கு ஏற்ற மணாளன் என்று தாய்க்குலம் இப்பொழுது ஆனந்தக் கண்ணீர் வடிக்கப் போகிறதா? கள்ளச் சாராயம் குடித்து விட்டு வந்தாலும் மனைவிக்கு அடிதான், அன்றைக்கும் குடும்பத்திலே வறுமைதான். பர்மிட் வாங்கிக் குடித்தாலும் அன்றைக்கும் அடிதான். அதே உதைதான். அன்றும் அதே கண்ணீர்தான். வேதனைக் கண்ணீர். பர்மிட் வாங்கிக் குடித்து வாங்குகிற அடியும் அடிதான்; அப்பொழுதும் வேதனைக் கண்ணீர்தான். இந்த இரண்டு வகையான கண்ணீரும் குடிப்ப தால் வருவதுதான். ஆனால், முதலமைச்சர் சொல்கிறார்கள். மது விலக்கைத் தளர்த்துவதுகூட, "தாய்மார்களின் கண் ணீரைத் துடைக்கவே தளர்த்தினேன்" என்று. இது வேடிக்கை மட்டுமல்ல. வேதனை மட்டுமல்ல. மன்னிக்க வேண்டும். துணைத் தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல நகைச்சுவையுங் கூட.

பர்மிட் குடியன், பர்மிட் இல்லாத குடியன் என்று இரண்டு ஜாதிகளைத் தோற்றுவிக்கிறீர்கள். ஏற்கனவே இந்த நாட்டில் ஆயிரம் ஜாதிகள். அது போதாது என்று நீங்கள் கருதி இன்னும் இரண்டு ஜாதியை ஏற்படுத்துகிறீர்கள். பர்மிட்டை எப்பொழுதும் மடியிலே கட்டிக் கொண்டு போக முடியுமா? பாக்கெட்டிலே வைத்துக் கொண்டிருக்க முடியுமா? பர்மிட் கையிலே இல்லாத நேரத்திலே குடிக்க வேண்டுமென்ற எண்ணம் வராதா? ஆகவே, இவ்வளவு குழப்பமான ஒரு முடிவை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள் என்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். மதுவிலக்குக் கொள்கையில் தெளிவில்லை. மேலும் குழப்பாதீர்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

உங்கள் உறுதிமொழிகளைப் பற்றி நான் மேலும் தெரிவிக்க ஆசைப்படுகிறேன். எத்தனை உறுதி மொழிகள்? தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக, அவர்கள் பல்வேறு தொழில்களைத் தொடங்குவதற்காக, தொடங்கி நடத்துவதற்காக, ரூபாய் 1 கோடி தாழ்த்தப்பட்டோர் வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கு, கூடுதல்



மூலதனமாக வழங்கியுள்ளதாக, 1980—81, நிதிநிலை அறிக்கையில் தெரிவித்திருக்கிறீர்கள். அப்போதே நாங்கள் கேள்விப்பட்டோம் மாநில அரசு ஒதுக்கிய ரூபாய் 1 கோடிக்கு ஈடாக. மாச்சிங் கிராண்டாக மத்திய அரசு ரூபாய் 1 கோடி உதவியதாக. ஆகவே, இரண்டு கோடிகளும் உங்கள் கையிலே ஓராண்டாக இருந்திருக் கிறது. அதைச் செலவு செய்ய என்ன திட்டம் தீட்டினீர்கள்? எத்தனை பேருக்குக் கடன் வழங்கப்பட்டது? எத்தனை தொழிற் சாலைகள் துவங்கப்பட்டன? அதிலே எத்தனை பேர்கள் புதி தாக வேலைவாய்ப்பு பெற்றார்கள்? மத்திய அரசு ரூபாய் 1 கோடி தந்ததா, இல்லையா? ஏன், எனக்கு இந்தச் சந்தேகம் என்றால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலும், "ஆதி திரா விடர் வீட்டு வசதிக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு செய்ய ரூபாய் 1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்கள் நன் மைபெறும் வகையில் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கை களை மேற்கொள்வதுதான் இதன் நோக்கமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

1980—81-லே ரூபாய் 1 கோடி, இப்பொழுது ரூபாய் ஒரு கோடி; அப்படியென்றால், நீங்கள் முன்பு 1 கோடி ஒதுக்கி னீர்கள். அல்லது, ஒதுக்கியதையே செலவிடாமல், திட்டமிடா மல், மறுபடியும் அதை ஒதுக்கி, இந்த ஆண்டு புதிதாக, ஏதோ மறுபடியும் ரூபாய் 1 கோடி ஒதுக்கியதாகக் குறிப்பிடுகிறார்கள் என்றுதான் கருத முடிகிறது. இது பற்றி நான் நிதியமைச்ச ரிடத்திலே தெரிந்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். போன ஆண்டு திட்டங்கள் தீட்டப்படுவதாகக் கூறினீர்கள். அதற்கு ரூபாய் 1 கோடி என்றீர்கள். இந்த ஆண்டும் நடவடிக்கை மேற் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, போன ஆண்டு மத்திய அரசு ரூபாய் 1 கோடி தந்தது, மாநில அரசு ரூபாய் 1 கோடி போட்டிருக்கிறது. தற்பொழுது மாநில அரசு ரூபாய் 1 கோடி தந்திருப்பதாகச் சொல் கிறீர்கள். ஆக, மொத்தம் ரூபாய் 3 கோடியை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். நான் எல்லா அறிக்கைகளையும் ஐந்தாண்டுத் திட்டச் சுருக்க அறிக்கைகள் உட்பட, நாவலர் அளித்த அறிக்கை உட்பட படித்துப் பார்த்தேன். எந்த இடத் திலேயும் அந்தச் சிறப்புத் திட்டம் வகுக்கப்பட்டதாகவோ, செலவு செய்யப்பட்டதாகவோ காணப்படவில்லை, இத்தகைய மந்தமான போக்கு அரசாங்கததிலே வளரலாமா?

"அறிவியல் ஆய்வுகளின் துணையால், வேலை வாய்ப்பு களை உருவாக்குவதற்கும், நடைபெற்றுவரும் தொழில்களைச் செம்மைப்படுத்துவதற்கும், புதிய தொழில்களைத் தொடங்கு வதற்கும் ஏற்ற வகையில் ஒரு ஆய்வு நிலையம் (Centre of Appropriate Technology) தொடங்க அரசு முடிவு செய் துள்ளதாக, 1980 ஜூன் 21 ஆம் நாள் ஆளுநர் உரையிலே குறிப்பிட்டார்கள். அது என்ன ஆயிற்று என்று நிச்சயமாகத் தெரியவில்லை துருவித்துருவிப்பார்க்கிறேன். Centre of Appropriate

[திரு. ஜே. எஸ். இராசு]      [1981 மார்ச் 24

Technology என் கண்ணுக்குத் தெரியவில்லை ஆளுங்கட்சி உறுப்
பினர்களுக்குத் தெரிந்து சொன்னால், நான் நன்றியைத் தெரி
விக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ''ஏழை எளியோர், வகை
ஏதுமின்றி பட்டினி கிடந்தால் கிராம வளர்ச்சி அலுவலரிடம்
சென்று தன் நிலையை எடுத்துக்கூறி, ரூபாய் 100 உதவித்
தொகை பெறலாம் என்று, 1980--81--நிதிநிலை அறிக்கையிலே
கூறப்பட்டிருந்தது.

வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் பட்டினிச்
சாவைத் தடுத்துக்கொள்வதற்காக எத்தனை பேர்கள் எத்தனை
கிராம அலுவலர்களைச் சந்தித்தார்கள். எவ்வளவு பேர்கள் 100
ரூபாய் பெற்றார்கள். பெற்றவர்களிலே எவ்வளவு பேர்கள்
உயிர் வாழ்கிறார்கள் என்ற கணக்கையெல்லாம் இந்த மன்றத்
திற்குத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அறுபது (60) வயதிற்கு மேற்பட்டு வேலை செய்ய இயலாத
நிலையில் உள்ள ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்களுக்குப்
பொருந்தும் முறையில் ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1980-81-லே
அறிவிக்கப்பட்டது. அதனுடைய தலைவிதி என்ன ஆயிற்று ?

கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்
டம் 1980--81-லே அறிவித்தீர்கள். நாங்கள் ஆசையோடு தமி
ழகம் முழுவதற்கும் அததிட்டம் என்று எதிர்பார்த்தோம். ஆனால்
அது மதுரை மாவட்டத்திலே 1980--81-க்கு கொட்டாம்பட்டிக்கு
தான் என்று சொன்னீர்கள். அதற்கு அப்போது 2.13 இலட்சம்
ஒதுக்கினீர்கள். நான் இந்த ஆண்டு அறிக்கையை அநேகமாக
முழுவதும் படித்தேன். ஆனால், இந்தத் திட்டத்திற்கு கூடுதல்
உதவியோ தொடர் செலவுகளுக்கான ஒதுக்கீடோ இல்லை. திரு
நெல்வேலி, இராமநாதபுரம், மதுரையிலே சில பகுதிகள், புதுக்
கோட்டைக்கு எல்லாம் அடுத்த ஆண்டு வரும் என்று 1980--81-லே
அறிவித்தீர்களே, அதுபோல் அந்த இடங்களுக்கும் வரும் என
எதிர்பார்த்தேன். ஆனால், அப்படியே நின்றுவிட்டது. நான்
கேட்க விரும்புகிறேன், கருவுற்ற தாய்மார்கள் ஏழைத் தாய்
மார்கள் கொட்டாம்பட்டியிலே மட்டும்தான் இருக்கிறார்களா,
அல்லது இன்னும் அவர்களுக்கு குழநதை பிரசவம் ஆகவில்லையா?
நாட்டின் பிற பகுதிகளில் சததுணவு குறைந்த தாய்மார்கள்
கருவுறவே மறுக்கிறார்களா ? என்னதான் கருதி இந்தத் திட்
டத்தை சொன்னீர்கள் என்பதற்கு விளக்கம் அளிக்க வேண்டு
கிறேன். இப்படி ஆயிரம் கருத்துக்களைச் சொல்லி அதை நடை
முறைப்படுத்த தவறிவிட்டீர்கள். (மணி அடிக்கப்பட்டது).
விலைவாசிக்கு ஏற்றத்திற்கு ஏற்றவாறு பஞ்சப்படியை மத்திய
அரசு உயர்த்துகிறது. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள்
1 ஆம் தேதி, 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் தேதி,
1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1 ஆம் தேதி ஆகிய 3
தேதிகளில் மத்திய அரசு உயர்த்தியது. அதே போல நாமும்



1981 மார்ச் 24]      [திரு ஜே. எஸ். இராசு]

அளிக்க வேண்டும் என்பது நீண்டகாலமாகஇருந்து வரும் தமிழக
அரசின் கொள்கை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும்
ஒப்புக்கொண்ட கொள்கை. ஆனால், மூன்று பஞ்சப்படிக்குப்
பதிலாக ஒரே ஒரு பஞ்சப் படி மட்டும் 1980 ஆம் ஆண்டு டிசம்பர்
திங்கள் 1 ஆம் நாள் முதல் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.
அரசு ஊழியர்களை அந்த வகையில் சரியாக ஏமாற்றி இருக்கிறீர்
கள். அதனால், 530 ரூபாய் அடிப்படை சம்பளம் வாங்கும்
ஒரு அலுவலருககு 26 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. நீங்கள்
தருவது 13 ரூபாய்கள்தான். 26-ம் 13-ம் சேர்ந்து 39 ரூபாய்
கள் பெறவேண்டிய ஒரு என்.ஜி.ஓ. நீங்கள் கொண்டு வந்த இந்த
திட்டத்தினால் 26 ரூபாயை இழக்கிறார்கள். ஆகவே, விடு
பட்ட இரண்டு பஞ்சப்படியையும் தருமாறு கேட்டுக்கொள்கி
றேன்.

அடுத்து சட்டமன்றத்தினுடைய விஷயமாக இருப்பதால்
ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். பல நாட்களாக
நம்முடைய தமிழ்நாடு ஏடுகளில் தலைநகர் மாற்றம் பற்றி நிரம்ப
செய்திகள் வருகின்றன. அருள்கூர்ந்து இந்த விஷயத்தை நம்
முடைய அமைச்சரவையும் மாண்புமிகு உறுப்பினர்களும் கவ
னிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் இந்த
மன்றத்தில் இருக்கிறோம். நாம் எல்லாம் இந்த மன்றத்தி
னுடைய மாண்புமிகு உறுப்பினர்கள். நமக்கே தெரியவில்லை,
தலைநகர் மாற்றம் பற்றி. ஜனவரியிலே கூடினோம். பிறகும்
கூடினோம், இன்றைக்கும் கூடி இருக்கிறோம். கவர்னர்
உரையிலும் அறிவிப்பு இல்லை. பட்ஜெட்டிலும் அறிவிப்பு
இல்லை. ஆனால், நாடு பூராவும் தலைநகர் மாற்றம் பற்றி
பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. இது அரசாங்கத்தினுடைய
கொள்கையா ? முடிவெடுத்து விட்டீர்களா ? அப்படி என்றால்
யாரைக் கேட்டு முடிவெடுத்தீர்கள் ? இது ஒரு கட்சியினுடைய
முடிவா ? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகக்
காரர்கள தீர்மானம் போட்டு இருக்கிறார்களா? நாங்கள்
இதை நிறைவேற்றப்போகிறோம் என்று. அப்படி எனககுத்
தெரிந்த வரையில் இல்லை. ஆனால், டெல்லியிலே மேலவை
யிலே இராமகிருஷ்ணன் என்ற அண்ணா தி.மு.க. உறுப்பினர்
பேசுகிறார். தமிழ்நாடு அரசு தலைநகரத்தைத் தஞ்சைக்கும்,
திருச்சிககும் இடையிலே உள்ள ஒரு இடத்துக்கு மாறறுவதற்குத்
தீர்மானித்து இருக்கிறது. ஆகவே, 400 கோடி ரூபாய் பணம்
தேவை. அந்தப் பணத்தை நீங்கள் தாருங்கள் என்று உதவி
கேட்டிருக்கிறார். நமக்குத் தெரியாமல், இந்த சபைக்குத் தெரி
யாமல், ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, தோழமைக்கட்சி ஆகிய எந்த
கட்சிக்கும் தெரியாமல் ஆட்சி நடக்கிறதா ? பொது மக்கள்
எங்களைப் பார்த்து கேட்கிறார்கள், தலைநகர் மாற்றம் பற்றி

[திரு ஜே.எஸ். இராசு] [1981 மார்ச் 24

நாங்கள் விழிக்கிறோம். ஏதோ ஒரு பாமரனைப்போன்று ஒன
றும் தெரியாதவர்களைப் போல விழிக்கிறோம். இப்படி இந்த
மன்றத்தையே அவமதிக்கிற அளவுக்கு மிகப் பெரிய முடிவுகளை
எடுப்பது என்ன நியாயம் என்று கேட்டுக்கொண்டு, நிச்சயமாக
இந்த நிதிநிலை அறிக்கையில் வரவேற்கத்தக்க அம்சங்கள்
இல்லை என்று கூறி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்
கொள்கிறேன். நன்றி.

[முற்பகல் 11-40]

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு தலைவரவர்களே,
1981-82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பேசு
கின்ற ஒரு வாய்ப்பினை அளித்ததற்காக முதலில் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ஆண்டுத் திட்டமானது, ஏற்கெனவே திட்டமிடப்
பட்ட 514 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்து, இந்த
அரசு இப்போது வளர்ச்சித் திட்டங்களுக்காக 563.26 கோடி
யாக அதை உயர்த்தி இருக்கிறது என்றால் தமிழக மக்கள் மீது
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் எந்த அளவுக்குப் பற்றும்
பாசமும் கொண்டிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத்
தெரியும். ஆனால் இந்த உண்மையை எதிர்க்கட்சிக்காரர்கள்
பேசமறுக்கிறார்கள். பேச மறுப்பது மட்டுமல்ல. நேற்று பேசும்
போது ஒரு நண்பர் சொன்னார், இந்த பட்ஜெட் வாசம்
இல்லாத மலர் என்று. இது வாசம் இல்லாத மலர் அல்ல;
இது நெருப்பிலே பூத்த மலர். இந்த அரசைப் பொறுத்த
வரையில், நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே
தேர்தல் களம் என்ற நெருப்பிலே ஈடுபட்டு, அதிலே பூத்த
மலர்தான் இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
அரசு என்பதைத் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்துக் கொள்ள
விரும்புகிறேன்.

இப்படி இந்த அரசு வெகு அருமையாக இந்த பட்
ஜெட்டை ஏழை எளிய மக்கள், நலிந்த மக்கள் பயன்படும்
வகையிலே கொண்டு வந்திருக்கிறது. அது மட்டுமல்ல.
இந்த அரசைப் பொறுத்தவரைலே சாமானியர்கள், சாமா
னியர்களுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று நாங்கள்
சொல்லிக் கொள்கின்ற முறையில் உண்மையிலே தமிழகத்
திலுள்ள சாமானிய மக்களுக்காக அருமையான இந்த
பட்ஜெட்டைக் கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு என்ற
காரணத்தால் தமிழக மக்கள் இன்று புரட்சித் தலைவருக்கு
நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள்.



1981 மார்ச் 24] [திரு. சு. முத்துக்கிருஷ்ணன்]

அது மட்டுமல்ல. தமிழகத்திலே வறட்சி என்று கேள்வி
பட்ட உடனே ஒரு தாய் தன்னுடைய குழந்தையைப்
பேணுவாளே, அதைப்போல புரட்சித் தலைவரவர்கள் தன்
னுடைய கடமைகள் பல இருந்தாலும் மாவட்டம் மாவட்ட
மாகச் சென்று வறட்சி பற்றிய நிலமைகளை எல்லாம்
அறிந்துகொள்கிறார்கள். அறிந்து கொள்வது மட்டுமல்லாமல்,
அதற்கு நிவர்த்திகாண உடனடியாக உத்தரவிட்டு, இந்த
அரசின் மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்
என்று சொன்னால் அது எளிய காரியம் அல்ல; சாதாரண
காரியம் அல்ல. இப்படிப்பட்ட புரட்சித் தலைவர் அவர்கள்
இந்த தமிழக மக்களுக்காக பல்வேறு நல்ல திட்டங்களைக்
கொண்டு வந்து, அதையும் இந்த பட்ஜெட்டிலே அருமை
யாகச் சொல்லியிருக்கிறார்கள்.

நேற்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும்போது இங்கே
சொன்னார்கள். இந்த அரசைப் பொறுத்த அளவிலே. இது
மத்திய அரசுக்கு நண்பனா, பகைவனா என்று கேட்டார்கள்.
நான் சொல்கிறேன். உங்களுக்கு நண்பனாக இருக்க வேண்டு
மென்பது மட்டுமல்ல. இந்த அரசைப் பொறுத்தவரையில்,
மீனவ சமுதாயத்தைப் பொறுத்த மட்டில், மீனவ சமுதாயத்
திற்கு நண்பனாக இருக்கிறது; விவசாயிகளைப் பொறுத்த
மட்டில், விவசாயிகளுக்கு நண்பனாக இருக்கிறது; தொழி
லாளர்களைப் பொறுத்த மட்டில், தொழிலாளர்களுக்கு
நண்பனாக இருக்கிறது. அதைப்போல அத்தனை தரப்பினர்
களையும் சேர்ந்த மக்களுக்கெல்லாம் நண்பனாக இருப்பதைத்
தான் இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு
தன்னுடைய கொள்கையாகக் கொண்டிருக்கிறது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. நேற்று திரு. சிததன் அவர்கள் பேசும்
போது அதைக்கூட எச்சரிக்கின்ற வகையிலே சொன்னார்கள்.
நீங்கள் நண்பனாக இருக்கிறீர்களோ, இல்லையோ, பகைவ
னாக இருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அவர் கடந்த
காலத்தை நினைவுபடுத்துகின்ற வகையிலே எச்சரிக்கை
செய்கிறாரா என்று தெரியவில்லை. நடந்து முடிந்த
தேர்தலுக்கு முன்னால், அண்ணா திராவிட முன்னேற்றக்
கழக அரசைக் காரணம் கூறாமல் கலைத்தாலும், மத்திய
அரசின் பொறுப்பிலே காங்கிரஸ் அரசு இருக்கிற ஒரே
ஒரு காரணத்தினாலே அந்த நேரத்திலே நடைபெற்ற
ஒன்றிரண்டைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு அரசு தேர்தெடுக்கப்படுவதற்கு முன்பு அரசு விழாக்
கள் அந்த மாநிலத்திலே நடத்தப்படக் கூடாது என்று
தெள்ளத் தெளிவாகத் தேர்தல் கமிஷன் ஆணை பிறப்பித்
திருக்கிறது. ஆனால் இந்த அரசு கலைக்கப்பட்ட பிறகு,

[திரு. சு. முத்துக்கிருஷ்ணன்] [1981 மார்ச் 24

31—5—1980-ல் தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு, கன்னியா குமரி மாவட்டத்தில் இந்த தமிழக அரசு சார்பிலே, அதுவும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு இல்லாத சந்தர்ப்பத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் காங்கிரஸ் கட்சியினரும் சேர்ந்து தீ அணைப்பு நிலையம் ஒன்றை திறப்பதற்கு ஏற்பாடு செய்தார்கள். இதை நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். 16—5—1980 அன்று கன்னியாகுமரியில் ஒரு தீ அணைப்பு நிலையத்தை திறந்திருக்கிறார்கள். * * *

இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால்......

**திரு. அ. ரகுமான்கான் :** பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்ப விரும்பு கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த * * அவர்கள் அதில் சம்பந்தப்பட்டிருக்கிறார், என்று சொல்லி ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். இந்தச் சபையிலே அவர் இல்லை. சபையிலே இல்லாதவர்களைப் பற்றிப் பேசக்கூடாது எனறு ஏற்கெனவே தீர்ப்பு சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப் பேசுவது சரியாக இருக்காது. ஏனென்றால் * * * சபையிலே இல்லை என்று சொல்லப்படிருக்கின்றது. ஆகவே இது சம்பந் தமாகத் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஏதோ ஒரு பிரச்சினையைத் தொட்டு, வேறு பிரச்சினைக்குப் போவது சரியல்ல. மீண்டும் மீண்டும் இப்படி உள்நோக்கம் கற்பிக் கின்ற வகையிலே வேண்டும் என்றே பேசிக்கொண்டிருப்ப தும் ஆளும் கட்சியினர் அதற்கு எதிர்த்தாற்போல பேச வேண்டும் என்று எண்ணுவதும் சரியல்ல. மேலும்** அவர்கள் இந்தச் சபையிலே இல்லாவிட்டால் கூட மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பொறுப்பு ஏற்கின்ற வகையிலே சொன்னால் அதை உண்மையிலேயே இந்தச் சபை ஏற்றுக் கொள்ளலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, ஏற்கனெவே இந்தச் சபையிலே இல்லாதவர்களைப்பற்றி பிரச்சினைகளைக் கிளப்புகிறபோது பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று சொல்லியும் கூட குற்றச்சாட்டுக்களை அனுமதிக்கவில்லை என்பது அவை நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கின்றது. அப்படி இருக்கும் போது சொல்பவர்கள் பொறுப்பேற்றுக்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் இணங்க அகற்றப்பெற்றது.



1981 மார்ச் 24] [திரு. அ. ரகுமான்கான்]

கொண்டால் சபையிலே இருந்தாலும் இல்லாவிட்டாலும்,
யாரைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம் என்று அமைச்ச
ரவர்கள் சொல்வார்களேயானால் அதையே தாங்களும் தீர்ப்பு
என்று சொல்வீர்களேயானால் நான் மனப்பூர்வமாக அதை
ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவரவர்களே,
எந்தெந்தப் பிரச்சினைகளுக்குப் பொறுப்பேற்றுக் கொள்வது
என்று விதிமுறை இருக்கின்றது. அதற்குரிய சம்பிரதாயமும்
இருக்கின்றது. ஆகவே அதற்குத் தகுந்தாற் போல் தான்
பொறுப்பேற்றுக் கொள்ளவதும் ஏற்றுக் கொள்ளாததும்.
இங்கே என்னைப் பொறுத்த வரையில் கூட ஒரு புகார் சொன்
னார்கள். அந்தப் பிரச்சினையில் நான் இல்லை என்று மறுத்
தேன். அது உண்மை என்று சொன்னால் இந்தச் சபையிலே
எப்போது வேண்டுமானாலும் அவர்கள் நிரூபிக்கலாம். அப்படி
நிரூபிக்கத் தகுதியற்றவர்களாக இருப்பவர்கள் வேண்டும் என்றே
ஒரு பிரச்சினையைச் சொல்லி இந்த அவையைத் திசை திருப்ப
வேண்டும் என்ற எண்ணத்தோடு சொன்னால் அதை சபை
ஏற்றுக் கொள்ளக் கூடாது என்பதைத்தான் நான் பணிவன்போடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, மாண்புமிகு
அமைச்சர் அவர்களைப் பற்றிய குற்றச்சாட்டில் நான் உண்மை
தான் என்று சொல்லி அது உரிமைக் குழுவிற்குப் போய் இருக்
கின்றது. அப்படி உரிமைக் குழுவிற்குப் போனதற்குப் பிறகு
அந்தக் குழுவின் முடிவுகள் வரவேண்டும். அதற்குள்ளாக
அந்தப் பிரச்சினை பற்றிய மாண்புமிகு அமைச்சரவர்கள் பேச
வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் இப்போது நான் கேட்பது
எல்லாம் சபையிலே இல்லாத ஒரு உறுப்பினர் மீது குற்றச்சாட்டு
வருகிற போது அந்த உறுப்பினர் சபையிலே இருந்தால் பதில்
சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். அப்படி சபையில் இருந்து
பதில் சொல்ல வாய்ப்பு இல்லாதபோது அந்தக் குற்றச்சாட்டு
எந்த வகையிலே இருந்தாலும் அதை அனுமதிக்கலாமா?
அது தான் முறையா? அதை சபை அனுமதிக்கிறதா? அது
குறித்துத் தாங்கள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவரவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு
கருத்தைச் சொல்கிறார்கள். நான் ஒரு கருத்தைச் சொல்ல
விரும்புகிறேன். அது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தாகத்தான்
இருக்கும் என்று கருதுகிறேன். இந்த அவையிலே 234 உறுப்
பினர்கள் இருக்கிறார்கள். சில நேரங்களில் சில உறுப்பினர்கள்
வெளியே கூட போய் இருக்கலாம். அந்த மாதிரி அமைச்சர்கள்
கூட வெளியே போய் இருக்கலாம். அப்படி ஒரு அமைச்சர்
வெளியே போய் இருக்கின்றபோது அந்த அமைச்சரின் இலாகா
சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர்கள்

[டாக்டர் எச். வி. ஹண்டே] ]1981 மார்ச் 24

சொல்வதற்கு உரிமை இல்லை என்று யாரும் சொல்ல மாட் டார்கள். என்னுடைய இந்தக் கருத்தை மாண்புமிகு உறுப்பினர் ஏற்றுக் கொள்வார்கள். என்று கருதுகிறேன். அப்படி வெளியே சென்ற அமைச்சரவர்கள் இங்கே வந்த பிறகு என்னுடைய இலாகாவைப் பற்றி திரு. ரகுமான்கான் அவர்கள் பிரச்சினையை எழுப்பினார்கள், அதற்கு இதுதான் என்னுடைய விளக்கம் என்று சொல்லலாம். அதே மாதிரியாக * அவர்கள் இந்த அவையில் இப்போது இல்லை. ஆகவே அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு கருத்தைச் சொல்கிறார்கள். அவர் இப்போது தற்காலிகமாக இல்லை என்ற ஒரே ஒரு காரணத்திற்காக அவரைப் பற்றிச் சொல்வதற்கு உரிமை இல்லை என்று சொல்கின்ற அந்த வாதத்தை பற்றி மட்டும் நான் பதில் சொல்ல விரும்புகிறேன். மற்ற பெரிய விஷயத்திற்கு நான் வருவதற்கு விரும்பவில்லை. Just because a Member is not here, nothing about the Member should be allowed to be raised here. (interruption). I know Mr. Raghumankhan is a sport. I appreciate it. Let me be allowed to say what I want. அதாவது குறிப்பிட்ட அமைச்சர் இருக்கின்ற போதுதான் அவர் சம்பந்தப்பட்ட இலாக்கா பற்றிய குற்றச் சாட்டுகளைச் சொல்ல வேண்டும் என்பது இல்லை. அவர் இல்லா விட்டாலும் கூட அது பற்றிச் சொல்லலாம். ஆகவே சம்பந்தப் பட்ட உறுப்பினர் இருக்க வேண்டும் என்று அந்த வாதத்தை இது வரையிலே சபையிலே ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை பணிவன்போடு திரு. ரகுமான்கான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. ஹண்டே அவர்கள் சொல்லிய கருத்து என்னவென்றால் அதிகாரிகளைப் பற்றி குற்றச்சாட்டு சொல்கிறபோது அந்த அதிகாரிகள் சபையில் இல்லாத போது கூட குற்றச்சாட்டுகள் சொல்கிறார்கள், அதைப் பற்றி சம்பந்தப் பட்ட அமைச்சர்கள் பதில் சொல்கிறோம் என்று சொல்கிறார் கள். அவர்களும் ஒரு சிறந்த பார்லிமெண்டேரியன் என்ற முறையிலே அவர்களுக்கும் முறைகள் எல்லாம் தெரியும். அது கன்ஸ்ட்ரக்டிவ் லையபிலிட்டி. அதிகாரியைப் பற்றிச் சொல் கின்ற போது அந்த இலாகா சம்பந்தப்பட்ட அமைச்சர் பொறுப் பேற்றுக் கொள்கிறார்கள். ஆகவே அமைச்சரவர்கள் தான் அதற்குப் பதில் சொல்ல வேண்டும். ஆனால் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவையிலே இல்லாதபோது கலெக்ட்டிவ் ரெஸ் பான்ஸ்பிலிட்டி இருக்கின்ற காரணத்தால் அவர்கள் பதில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால் இங்கே குற்றச்சாட்டு சொல்லப்பட்டிருக்கின்ற * அவர்கள் இந்தச் சபையிலே உறுப்பினரே அல்ல அவர் தற்காலிகமாகவோ அல்லது நிரந்தர மாகவோ வெளியே போய் இருக்கிறார், வந்து பதில் சொல்லலாம் என்று சொல்வதற்கான வாய்ப்பு கூட இல்லை.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 மார்ச் 24] [திரு. அ. ரகுமான்கான்]

இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய குற்றச்சாட்டு உண்மையா, தவறா என்பது பற்றி பதில் சொல் வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும்.

(முற்பகல் 11-50)

அன்றைய தினம் எரி சாராயப் பிரச்சினையில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் பேசுகிற போது, அவையிலே இல்லாத நபரைப் பற்றிப் பேசக் கூடாது என்று சபைக் குறிப்பிலே இருந்து நீக்கம் செய்தீர்கள். இல்லாதவர்களைப் பற்றி பேசி னால், அவர்கள் பதில் சொல்ல முடியாது, வழக்கு போட முடியாது, ஆகையினால் அவர்களைப் பற்றிச் சொல்லக்கூடாது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னதன் பேரில்........ (குறுக்கீடு) (மணியடிக்கப்பெற்றது).

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** He is substantiating arguments.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் : (திரு வி. வி. சுவாமி நாதன் ):** Already he has made.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:** Hon'ble Speaker, Sir, There is already a ruling by the Speaker as well as Deputy Speaker so many times here that there should not be serious allegations against persons who are not here. This has been decided long ago. அன்றைக்கு நான் பேசும் போது அவையில் இல்லாதவர்களைப் பற்றிப் பேசக் கூடாது என்று சொன்னீர்கள். அதை அனுமதிக்க வில்லை. இன்றைக்கு * பற்றி பேசினால் மட்டும் அதை நாங்கள் அனுமதிக்க விடுவோமா ? பேரவைத் தலைவர் அவர்களின் ரூலிங் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, சூடான விவாதம் என்று இல்லாமல், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் சொல்லும் போது, மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். அவர்களும் வெகு நாட்களாக இந்த அவையில் உறுப்பினராக இருப்பவர்கள். நடை முறை வழக்கங்களை தெரிந்தவர்கள். சீரியஸ் அலிகேஷன் என்று வருகையில், உறுப்பினர்கள் அவையில் இருந்தால்தான் சொல்ல வேண்டும் என்று சொல்வது சம்பந்தப் பட்ட அங்கத்தினர்களுக்கு பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற வகையில் தெரிவித்த கருத்தை நானும் முழு மையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஐடெண்ட்டிடி ஆப் வியூஸ் வேறு. மாண்புமிகு உறுப்பினர் முத்துக் கிருஷ்ணன்

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1981 மார்ச் 24

அவர்கள் ஒரு சம்பவம் நடை பெற்றது. அப்போது அந்தக் கூட்டத்தில் அவரும் இருந்தார்கள் என்றுதான் சொன்னாரே தவிர இன்னும் முழுமையாக அவர் எதையும் அலிகேஷனாகச் சொல்லிவிடவில்லை. நான் அங்கத்தினர்களை தயவு செய்து கேட்டுக் கொள்வது, அவர் முழுமையாக பேசட்டும், அதற்குப் பிறகு என்ன தீர்ப்பு, அவைத் தலைவர் அவர்கள் வழங்குகிறாரோ அதை ஏற்றுக் கொள்ளலாம் என்பதுதான்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினையைக் குறித்து பேச எனக்கு அனுமதி அளிக்க வேண்டும். ஒரே ஒரு நிமிடம்..... (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :** The Hon. Member has already spoken.

**திரு. அ. ரகுமான்கான் :** நான் கேட்கப் போவது வேறு ஒரு பிரச்சினை குறித்து. தயவு செய்து அனுமதிக்க வேண்டும். எந்த விதமான சூடான விவாதத்தையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை. உங்களுடைய அனுமதியோடு ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு பிரச்சினை எழுப்பப்படும் போது அதில் சீரியஸ் இருக்கிறதா ? இல்லையா ? என்று யார் நிர்ணயம் செய்வது ? உங்களுக்கு சீரியஸாக இருக்காது, ஆனால் எங்களுக்கு அதில் சீரியஸ்னெஸ் இருக்கும். ஆகையினால்தான் சபையிலே இல்லாதவர்களைப் பற்றி குற்றச்சாட்டுகளை பேசக் கூடாது என்று ஏற்கெனவே இங்கே கூறப்பட்ட தீர்ப்பை நினைவுகூர்ந்தேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முத்துக்கிருஷ்ணன் பேசுகிறபோது, * அவர்கள் மீது எந்தவிதமான குற்றச்சாட்டையும் சொல்லவில்லை. அவருடைய தொகுதியிலே ஒரு விழா நடைபெற்றது என்பதையும், அதற்கு பல பேருக்கு அழைப்பு அனுப்பப்பட்டிருந்தது என்பதையும், அந்தப் பத்திரிகையிலே* அவர்களின் பெயரும் இருந்தது என்றும் சொன்னார்கள். அவ்வளவுதான், தன்னுடைய சொந்த தொகுதியில் தனக்கு அழைப்பு இல்லை. தன் பெயர் இல்லை என்று குறிப்பிடத்தான் உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே தவிர, குற்றச்சாட்டாக எதையும் சொல்லவில்லை. அப்படி யாருடைய பெயரையும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடாது என்று இது வரை எந்த விதமான தீர்ப்பும் வழங்கப் பெறவில்லை. அப்படி வழக்கமும் இல்லை. தனிப்பட்ட முறையிலே ஒருவர் மீது அவருடைய

* மாண்புமிகு பேரவை துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1981 மார்ச் 24] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

கேரக்டரை டேமேஜ் செய்கிற வகையில் குற்றச்சாட்டுகள் சொன்னால், அப்படி சொல்கிற நேரத்தில் சம்பந்தப்பட்டவர் அவையில் இருக்க வேண்டும். இல்லையென்றால் சொல்லக் கூடாது என்று தான் தீர்ப்பு இதற்கு முன்பு வழங்கப் பெற்றிருக்கிறதே தவிர, எந்தப் பெயரையுமே சொல்லக் கூடாது என்று அல்ல.

**திரு. அ. ரகுமான்கான் :** * அவர்களின் பெயரைச் சொல்லி, குற்றச்சாட்டாக சொன்னதன் காரணமாகத்தான் இந்தப் பிரச்சினையே எழுந்தது.

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :** மாண்புமிகுஉறுப்பினர் திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் பேசுகிற போது தேர்தல் நடக்கிற காலத்தில் தேர்தல் நடைமுறை விதிகளை மீறி ஒரு கூட்டம் நடந்தது, அந்தக் கூட்டத்தில் மாண்புமிகு மேலவை உறுப்பினர் —

** ** ** **

திரு. சு. முத்துகிருஷ்ணன் அவர்கள் தொடர்ந்து பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக எப்படியும் இந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணியை தோற்கடிக்க வேண்டுமென்ற ரீதியில் காங்கிரஸ் கட்சியும் அதனோடு கூட்டு சேர்ந்த திராவிட முன்னேற்றக் கழகமும் என்னென்ன நடவடிக்கைகள் எடுத்தது, எந்தெந்த அதிகாரிகளை அது பயன்படுத்தியது என்று சொல்வதற்காகத்தான் நான் ஆதாரத்தோடு சொல்கிறேன். கையில் அந்த நிகழ்ச்சிக்கான அழைப்பிதழ்களை வைத்துத்தான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். இதில் இருக்கிறது. 16—5—1980 தேதியில் இந்த விழா நடந்திருக்கிறது. அந்த விழாவில் கலந்துகொண்டவர்கள் ............

**மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பட்ஜெட் விவரங்களைப்பற்றி பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன். கூட்டம் நடந்தது, கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்கள் என்பது பற்றியெல்லாம் சொல்லியாகி விட்டது.

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : இப்படி இந்த முறையில் அவர்கள் அரசாங்க இயந்திரத்தை அவர்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்தத் தியணைப்பு நிலையம் திறக்கப்படுவதற்கு அரசாங்கத்திலிருந்து எந்த உத்தரவும் இல்லை அந்தச் சந்தர்ப்பத்தில். எந்த நிதியும் அரசாங்கத்திலிருந்து ஒதுக்கப்படவில்லை. இந்த அதிகாரிகளும் அவர்களோடு சில பேர்களும் சேர்ந்து ஏறத்தாழ ஒன்றரை லட்சம் ரூபாய் பிரிக்கப்பட்டு அந்த ஒன்றரை லட்சம் ரூபாயில் எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டது என்பதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், அரசாங்க அனுமதியில்லாமல்........

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தாங்கள் தீர்ப்பளித்ததற்குப் பிறகு தாங்கள் அது சம்பந்தமாக உங்கள் தீர்ப்பை சரி என்று ஏற்றுக் கொண்டு இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.

* * * * * * * * ஆனால் ஒன்றரை இலட்சம் ரூபாய் பிரிக்கப்பட்டிருக்கிறது என்றால் that amounts to misappropriation * * * * ஒன்றரை இலட்சம் ரூபாய் பிரிக்கப்பட்டிருக்கிறது என்றால் What does it mean * * * * *

MR. TEMPORARY CHAIRMAN (THIRU V. V. SWAMINATHAN) :Let the hon. Member explain.

THIRU V. KRISHNAMURTHY : You allow him to go on

... ... ... ...

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : எங்கள் கட்சி அணியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற ரீதியில் இப்படி அந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்க இயந்திரம் பயன்படுத்தப்பட்ட அந்த நிகழ்ச்சியைத்தான் நான் சொல்லிக் கொண்டிருந்தேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால் நேற்று கூட காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகிற போது நண்பனா பகைவனா என்று கூட கேட்டார்கள். நாங்கள் அதையெல்லாம் பார்த்துக் கொண்டுதானிருந்தோம். நான் இதை ஏன் சொல்கிறேன் என்றால், அப்படிச் சொல்வதால், இல்லை நீங்கள் எங்களுக்கு பகைவர்களாக ஆகிவிட்டாலும் நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமோ அதோடு சேர்ந்த கூட்டணிக் கட்சிகளோ நிச்சயமாக யாரைக் கண்டும் பயப்படப் போவதில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



அது மட்டுமல்ல. இப்படிச் சொன்னவர்கள் இன்னொன்றையும் சொன்னார்கள். இந்த அரசின் சார்பாக நான் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்தை குற்றஞ் சாட்டுகிறேன். இந்தச் சபை மூலமாக பினாமி நிலங்களை ஒழிக்க வேண்டும் என்ற சட்டம் இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி மாதக் கணக்கிலாகிறது. ஆனால் தமிழக மக்களின் நலனில் இவர்கள் உண்மையில் பற்றுக் கொண்டிருந்தால் நிச்சயமாக இதற்கு முன்பாக அந்தச் சட்டத்திற்கு இவர்கள் ஒப்புதல் அளித்து இதற்கு முன்பாகவே அனுப்பியிருக்க முடியும். ஏன் செய்யவில்லை என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ் கட்சி நண்பர்களும் அவர்களைச் சார்ந்திருக்கிற மேலிடத் தலைவர்களிடம் சொல்லி தமிழக மக்களுக்கு அந்த உத்தரவை சீக்கிரமாக கிடைக்கிற விதத்தில் நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[நண்பகல் 12-00]

அது மட்டுமல்ல, கொள்முதல் லெவியைப் பொறுத்தவரையில், கோதுமைக்குக் கொள்முதல் விலையைக் கூட்டியிருக்கிறார்கள் என்று சொன்னால், தமிழகத்திலுள்ள விவசாயிகளின் நெல்லுக்கு கொள்முதல் விலையைக் கூட்டாமல், அந்த உரிமையை, உத்தரவை மத்திய அரசு தன்னுடைய கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. இந்த உத்தரவைப் பிறப்பிக்காமல், காலங்கடத்திக்கொண்டு, நெல்லுக்கான கொள்முதல் விலையை உயர்த்தாமல் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே மத்திய அரசாங்கம் நெல்லுக்கான கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று தமிழக விவசாயிகளின் சார்பாகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே இன்னொன்றையும் சொன்னார்கள். மதுவிலக்கைப் பொறுத்தவரையில், இந்த அரசு அதைத் தளர்த்துகின்ற ரீதியிலே, காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே குடியானவர்கள் தாங்கள் உபயோகித்து வந்த மண்பாண்டங்களிலிருந்து. அலுமினியப் பாத்திரங்களாக வாங்கினார்கள் என்று சொன்னார்கள். நான் சொல்கிறேன். இந்த அரசைப் பொறுத்தளவிலே, அதற்கும் மேலே அவர்கள் நல்ல பாத்திரங்களை வாங்குவதற்கு, எவர்சில்வர் பாத்திரங்களாக வாங்குவதற்கு இந்த அரசாங்கம் அதற்கான சூழ்நிலையை நல்ல முறையிலே உதவி செய்யும். ஆனால், எவர்சில்வர் பாத்திரம் வாங்க முடியாத அளவிலே மத்திய அரசு விலையையும், வரியையும் கூட்டியிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

[திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1981 மார்ச் 24

செலவழிக்க இருக்கின்ற நீங்கள் ஏன் அரிசனங்களுக்கும், மற்ற பிற்பட்டோருக்கும் அந்தப் பணத்தைச் செலவழிக்கக் கூடாது என்று கேட்க நான் ஆசைப்படுகிறேன்..

[பிற்பகல் 12-20]

ஆகவேதான் இந்த அரசின் மூலம் அரிசன மக்களுக்கு எந்த விதமான நன்மையும் ஏற்படவில்லை. மாறாக, இந்த அரசு, ஜாதி இந்துக்களை அரிசன மக்களுக்கு விரோதமாகத் தூண்டிவிடுகிறது என்ற குற்றச்சாட்டை நான் தீவிரமாக, வன்மையாக, இந்த அரசின் மீது சொல்ல முடியும். ஏனெனில், தமிழகம் முழுவதும் எங்கு பார்த்தாலும் ஜாதி இந்துக்களால் அரிசன மக்கள் தாக்கப்படுகிறார்கள். அதை ஏனென்று கேட்க இந்த அரசு முன்வரவில்லை. ஆகவே, இதையெல்லாம் நாம் நோக்கும்போது, இந்துக்களால் அரிசனங்கள் தாக்கப்படும் இடங்களில் இந்த அரசு போதிய முன்னெச்சரிக்கையாக, எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல், வேண்டுமானால், அரிசனங்கள் தாக்கப்படட்டும்; நாம் வேண்டுமானால் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கலாம் என்ற நிலைமையில்தான் இந்த அரசு இருந்து கொண்டிருக்கிறது என்று எண்ணத் தோன்றுகிறது.

எனவேதான் இந்த அரசு தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சரியான தொகை ஒதுக்காமல், அநாவசியமாக, சினிமா எடுப்பதற்கும், டிராமா எடுப்பதற்கும், செலவு செய்து கொண்டிருக்கிறது.

எனக்கு முன் பேசிய அருமை நண்பர் மாண்புமிகு முத்துக்கிருஷ்ணன் அவர்கள் மத்திய அரசு பினாமி நிலங்களை ஒழிப்பதற்கான சட்டத்திற்கு ஆதரவு தரவில்லையென்று மத்திய அரசைக் குறை கூறினார்கள். பினாமி நிலச் சட்டத்தில் என்ன, என்ன குறைகள் இருக்கின்றன. மத்திய அரசால் ஏன் அது ஒத்துக் கொள்ளப்படவில்லை? ஜனாதிபதியால் ஏன் கையெழுத்திடப் படவில்லை. அதிலே என்ன ஓட்டை, உடைசல் இருக்கிறது என்று இந்த அரசு தீவிரமாகப் பார்த்து, மத்திய அரசுக்கு எடுத்துக்கூறினால், நிச்சயமாக இந்தச் சட்டம் ஒப்புக் கொள்ளப்படும். அதை நாங்களும் ஒத்துக் கொண்டுதான் பாஸ் செய்திருக்கிறோம் என்பதை நான் அறிவிக்க விரும்புகிறேன்.

இந்த அரசு கொண்டு வந்த எந்த ஒரு சட்டமும் நேரிடையான சட்டமாக இல்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 'டெட் ரிலீஃப் ஆக்ட்' என்ற சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆக்ட் கொண்டு வந்த 2 ஆண்டுகளுக்குள்ளே 6 திருத்தச்சட்டங்கள் கொண்டு வந்தார்கள். ஆக்ட் 8/1978, ஆக்ட் 60/1978, ஆக்ட் 40/1979, ஆக்ட் 13/1980. அக்ட் 35/1980,



1981 மார்ச் 24] [திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]

அண்ட் ஆர்டினன்ஸ் 11/1980. ஆக, இந்தக் கடன் நிவாரணச்
சட்டத்தைக் கொண்டு வந்த 2 ஆண்டுகளுக்குள்ளே, அந்தச்
சட்டத்தைத் திருத்தி, 6, 7 சட்டங்களைக் கொண்டு வந்திருக்
கிறார்கள். அதே போன்றுதான் பினாமி டிரான்சாக்ஷன் சட்டத்
தைக் கொண்டு வந்தபொழுது ஏராளமான ஓட்டைகள் இருக்
கின்றன என்பதுதான் எங்களுடைய எண்ணம். ஆகவே, அந்த
ஓட்டைகளை நீக்கி, அதைத் திருப்பி அனுப்பினால், நிச்சயமாக
ஏற்றுக்கொள்ளப்படும், நாங்களும் ஆதரிப்போம் என்று சொல்
லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்
மரியாதைக்குரிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்
மாண்புமிகு திரு. அம்பிகாபதி அவர்கள் ஒன்று குறிப்பிட்டார்கள்.
எதற்கெடுத்தாலும் மத்திய அரசு, மாநில அரசைக்
கலைக்கிறது; ஆகவே அதைத் தடுக்க வேண்டும், நாங்கள்
அதை எதிர்த்துப் போராடத் தயார் என்று வீராவேசமாக
நேற்றும், இன்றும் சபையிலே பேசினார்கள். அதை நாம்
அனைவரும் பார்த்தோம். மேலும் அவர்கள் கூறும்போது,
காக்கையைப் பற்றி மிகவும் தெளிவாகவும், நல்லமுறையிலும்
எடுத்துக் கூறினார்கள். மத்திய அரசைக் கலைப்பதற்கும்
திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதற்கும் காரண
மாக இருந்தவர்களே, மாண்புமிகு திரு. அம்பிகாபதி கட்சியைச்
சேர்ந்தவர்களும், மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்
களும்தான் அதற்கான மனுவைக் கொடுத்தார்கள் என்பதை
அவர்கள் நிச்சயமாக மறந்திருக்க முடியாது. ஆனால், இன்று
மாநில அரசு தவறு செய்யும்போது, அதைத் தட்டிக் கேட்கக்
கூடாது, மத்திய அரசுக்கு அந்த அதிகாரம் இல்லையென்று
நாம் சொல்லக் கூடாது. அதே நேரத்திலே மாநில அரசு
எதற்காக, பஞ்சாயத்துக்களைக் கலைத்தது? நகரசபைகளைக்
கலைத்தது? சொசைட்டி, பாங்கு போன்றவைகளைக் கலைத்
தது? இவர்களுக்குள்ள அதிகாரம் மத்திய அரசுக்கு ஏன் இருக்கக்
கூடாது? அதை, இந்த அரசோடு சேர்ந்திருக்கும் சி. பி. ஐ.,
சி. பி. எம். போன்ற கட்சிகளைச் சேர்ந்தவர்கள் ஏன் அறிவுரை
யாகக் கூறக் கூடாது? நாங்கள் 1976-லே திராவிட முன்னேற்றக்
கழக அரசைக் கலைத்தாலும், அல்லது, 1980-லே அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைத்தாலும்,
உடனடியாக, ஒருசில மாதங்களுக்குள்ளே தேர்தல் வைத்தோம்.
ஆனால், கலைக்கப்பட்டு, ஏறத்தாழ 5, 6 வருஷங்களாகியும்
நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் போன்றவைகளுக்கு நீங்கள்
இன்னும் தேர்தல் கொண்டு வரவில்லை. ஏன் கொண்டு வர
வில்லை? நீங்கள் மக்களைக் கண்டு பயப்படுகிறீர்கள் என்பது
தானே அர்த்தம்? அல்லது மக்களைச் சந்திக்க நீங்கள்
தயாராக இல்லை; மக்களைக் கண்டு அஞ்சுகிறீர்கள்
என்றுதானே அர்த்தம். ஏதோ ஒரு காரணத்தைக் கண்டு
பிடிக்கிறீர்கள். இன்று சென்சஸ் எடுக்கிறார்களாம், 6 மாதம்
தள்ளிப்போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். 18 வயது
வந்தவர்களுக்கு ஓட்டுரிமை வேண்டுமாம், ஆகவே, 2 வருஷம்

நலிந்த மக்கள் நலன்களைப் பாதுகாக்கின்ற வகையில் திட்டங் களைத் தீட்டியிருக்கிறது. 75 கோடி ரூபாய்க்குச் சலுகைகளை அள்ளி அள்ளி வழங்கியிருக்கிறது என்பதை தெரிவித்துக் முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளும் கட்சியின் உறுப்பினர் திரு. முத்துகிருஷ்ணன் அவர்கள், நேற்றைய தினம் இந்த அரசாங்கம் மதுவை தளர்த்தியதிலே முன்னாள் இந்தியப் பிரதம ராக இருந்த திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைக் குறித்து ....(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : தயவு செய்து உட்காரும்படி கேட்டுக் கொள் கிறேன். இந்திரா கட்சியின் உறுப்பினர் திரு. பி. எம். தங்க வேல்ராஜ் அவர்கள் பேச இருக்கிறார்கள். அவர்கள் பதில் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாற்றுத் தலைவர் அவர் களே, எங்களுடைய கட்சியைப் பற்றி பேசியிருந்தால் எங்கள் கட்சிக்காரர் பதில் சொல்லலாம். ஆனால் என்னுடைய பேச்சைப் பற்றி சொல்லியிருக்கிறார். நான் தானே அதற்கு பதில் சொல்ல முடியும். பொது குற்றச்சாட்டாக இருந்தால் அவர்கள் பேசலாம். என்னுடைய பெயரை குறிப்பிட்டு நான் பேசியதை குறிப்பிட்டு பேசியிருக்கிறார்கள். (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. வி. வி. சுவாமிநாதன்) : மாண்புமிகு உறுப்பினர் சித்தன் மட்டும் ஏதாவது சொல்ல வேண்டியிருந்தால் சொல்லட்டும். மற்றவர் கள் உட்காருங்கள்.

[பிற்பகல் 12-10].

திரு. என். எஸ். வி. சித்தன்: திரு. மொரார்ஜி தேசாய் அவர்களைப் பற்றிப் பேசிய திரு. முத்துகிருஷ்ணன் அவர்கள் முன்னாள் இந்தியப் பிரதமராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள் நாங்கள் எல்லாம் பெரிதும் மதித்துப் போற்றுகின்ற அன்னை இந்திரா காந்தி அவர்கள் மீது வழக்குகளைத் தொடர்ந் தார்களே அந்த வழக்குகளை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று





அவர்கள் கேட்டார்கள். அந்த வழக்குகள் கோர்ட்டிற்குப் போய் தள்ளுபடி செய்யப்பட்டன. அதற்குப் பின்னாலே நாடாளுமன்றத் தேர்தல் வந்தபோது இந்திய நாட்டின் பெரும்பான்மையான மக்கள் அன்னை இந்திரா காந்தி அவர்களையே மீண்டும் அரியாசனத்திலே அமர்த்தியதன் காரண மாக எந்தவிதக் குற்றச்சாட்டும் இல்லை என்பது நிரூபணமாகி விட்டது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார் ............... (கூச்சல், குழப்பம்).

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் — தலைமை).

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர், ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. முத்துக் கிருஷ்ணன் அவர்கள் இந்தச் சபையிலே இல்லாத * அவர்களைப் பற்றி ஒரு பயங்கரமான குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார். நான் அந்தப் பிரச்சினைக்குள்ளே போகவில்லை. உறுப்பினர் ஆதாரத்தோடு பொறுப்பேற்றுக் கொள்கிறாரா ? அப்படிப் பொறுப்பேற்றுக் கொள்ளாவிட்டால் உரிமைப் பிரச்சினை கொண்டுவர நேரிடும். இல்லாவிட்டால் சபைக் குறிப்பிலிருந்து அதை நீக்க வேண்டும். இதற்குத் தங்களிடமிருந்து நான் ரூலிங்கை எதிர்பார்க்கிறேன்.

திரு. சு. முத்துக்கிருஷ்ணன்: நான் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். இந்த ஆதாரத்தை உங்கள் மத்தியிலே தரு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து விசாரித்துச் சொல்கிறேன். இப்போது திரு. தங்கவேல்ராஜ் பேசட்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : அது வரையில் பப்ளிஷ் பண்ணா மல் இருக்க வேண்டும். தாங்கள் இந்த அவையிலே இல்லாத சமயத்திலே * * என்ற முறையிலே கூறியிருக்கிறார்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்சினையை விளக்க வேண்டாம். அமருங்கள்.

---

(*) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த அவையிலே இல்லாதபோது ஒரு குற்றச்சாட்டு கூறப்பட்டதாக நாங்கள் அறிகிறோம். அந்தக் குறிப்பைத் தாங்கள் வாசித்துப் பார்த்து விட்டு, அது இந்த அவையினுடைய சட்ட மரபுகளுக்கு எவ்வளவு ஏற்றது தானா என்பதைப் பற்றித் தாங்கள் தீர்ப்பளிக்க வேண்டும். அது வரையில் பத்திரிகையிலும் வெளியிட வேண்டாம் என்று உத்தரவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் சொன்னது போல், குறிப்புகளைப் பார்த்து விட்டுச் சொல்லும் வரையிலும் அதைப் பிரசுரிக்க வேண்டாம் என்று உத்தரவிடு கிறேன்.

திரு. த. இராமசாமி : துணைத் தலைவரவர்களே, திரு. முத்துக்கிருஷ்ணன் அவர்கள் பேசும் பொழுது இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திரு. தியாகராஜன் அவர்கள் குறுக்கிட்டு * என்று கூறியிருக்கிறார்கள். அதைச் சபை குறிப்பிலேயிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்த மாதிரி வார்த்தையைச் சொல்லியிருந்தால் அதை நீக்கிவிடும்படி உத்தர விடுகிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற உறுப் பினர்கள் நிறைந்த கண்ணியம் உள்ள சபையில் * அப்படிச் சொல்லக்கூடாது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : ** (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியது அவைக் குறிப்பிலே ஏறாது.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித் திருக்கிறார்கள். அதன் மீது இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள் கிறேன். இந்த பட்ஜெட் பற்றி எல்லாப் பத்திரிகைகளும் தங்களது ஒப்பினியனைச் சொன்னது போல, இது ஒரு எம். டி. பட்ஜெட், மக்களுக்கோ, இந்தத் தமிழ்நாட்டிற்கோ எந்தவிதமான பயனும் அளிக்காத பட்ஜெட் என்பதை நிரூ பித்துக் காட்ட என்னுடைய பேச்சை ஆரம்பிக்கிறேன்.

(*) மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டுமென்றால் பத்து ரூபாயைக் கொண்டுபோய் ஒரு குடும்பத் தலைவியிடம் கொடுத்து, இந்தப் பத்து ரூபாயை இன்றைய செலவுக்கு வைத்து கொள் என்று கொடுக்கும் போது, அவள் நல்ல குடும்பத் தலைவி யாக இருந்தால் அரிசி எவ்வளவு வாங்க வேண்டும், பருப்பு எவ்வளவு வாங்க வேண்டும், புளி எவ்வளவு வாங்க வேண்டும், உப்பு எவ்வளவு வாங்க வேண்டும் என்ற அடிப்படையில் கணக்குப் பார்த்து வாங்கி, குடும்பத் தலைவனுக்கும், தன் னுடைய குழந்தைகளுக்கும் உணவு கொடுப்பாள். ஆனால் நல்லக் குடும்பத் தலைவியாக அல்லாது இருந்தால் அவளிடம் சென்று பத்து ரூபாயைக் கொடுத்தால் இந்தப் பத்து ரூபாய் எப்படிப் போதும் என்று கூறி பத்து ரூபாயும் உப்பு வாங்கத் தான் பயன்படும் என்று சொல்லி உப்பை மட்டும் வாங்கி வந்து ஒரு குடும்பத் தலைவி வீட்டில் உட்கார்ந்திருந்தால அந்த தலைவியின் நிலைமை என்னவென்பதைச் சொல்ல முடியாது. ஆகவே, கொடுக்கப்பட்டிருக்கின்ற தொகைக்கேற்ப எந் தெந்தத் திட்டத்திற்கு எவ்வளவு எவ்வளவு ஒதுக்க வேண்டும், எந்தெந்த திட்டத்திற்கு எந்தந்த அளவிற்கு ஒதுக்க வேண்டும், அதனால் தமிழ்நாட்டிற்கு எவ்வாறு பயன் உடையதாக இருக்கும் என்று ஆராயாமல் செய்திருக்கிறார்கள். அவ்வாறு கணக்கிட்டு ஒவ்வொரு திட்டத்திற்கு இந்த வரவு-செலவுத் திட்டத்திலே அவர்கள் ஒதுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் இந்த அரசு மதுவிலக்கை ரொம்பத் தீவிரமாகத் தளர்த்தியிருக்கிறது. அவ் வாறு தளர்த்தியும் விட்டு, மதுவை யாரும் குடிக்க வேண்டாம் என்று சொல்வதற்காக சினிமா போன்றவற்றிற்காக ஒரு கோடி ரூபாய் முதல் தவணையாக ஒதுக்கப்படும் என்று அறிவித்திருக் கிறார்கள். முதல் தவணையே ஒரு கோடி ரூபாய் என்றால் இன்னும் பல கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்பதுதானே இதன் அர்த்தம் ? மது விலக்கைத் தளர்த்தி விட்டு, மதுவைக் குடிக் காதே என்று சொல்வதற்காகக் பல கோடிக்கணக்கான ரூபாய் களை அள்ளி வீசி சினிமா முதலியவற்றின் மூலம் யார் யாருக்குப் போகப் போகிறதோ நமக்குத் தெரியாது. நான் இதைக் கூற வேண்டியதற்குக் காரணம் என்னவென்றால், அரிசனக் குடி யிருப்புகள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலேயும், காங் கிரஸ் ஆட்சியிலேயும் கட்டிக்கொடுத்த இலவச வீட்டு மனைத் திட்டம் இப்பொழுது அமலாக்கப்படவில்லை, அதை நிறுத்தி விட்டார்கள். இதுபற்றி மாண்புமிகு முன்னாள் முதல்வர் கலை ஞர் கருணாநிதி அவர்கள் கேட்டபொழுது நமது மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் குறிப்பிட்டார்கள், எங்களிடம் அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப் பணம் இல்லை, மற்ற இதர ஜாதி இந்துக்கள் எதிர்க்கிறார்கள் என்று அன்றைக்கு அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் மது பற்றிய தீமையைப் பிரச்சாரம் செய்வதற்காக கோடிக் கணக்கான ரூபாய்களைக்

ஒத்திப் போடுவோம் என்று சொல்கிறீர்கள். அதற்காக, ஒவ்
வொரு காரணமாகத் தேடிக் கண்டு பிடித்துக் கொண்டிருக்
கிறீர்களே தவிர, நகரசபைகளுக்கான தேர்தலைக் கொண்டு
வர அரசு தயங்குகிறது, ஆகவேதான், நான் கூறிக்கொள்
கிறேன், இன்று பஞ்சாயத்து போர்டுகள் இல்லாததால், என்ன
நடக்கிறது ?

மத்திய அரசு வறுமை ஒழிப்பு வேலைக்கு உணவுத்
திட்டத்திற்காக, கோடிக்கணக்கான, இலட்சக்கணக்கான
அரிசி மூட்டைகளையும், பணத்தையும் கொடுத்தது
அந்தத் திட்டம். கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று என்று
கிராமங்களிலே சொல்கிறார்களே, அதைப் போல், ஒவ்வொரு
யூனியனுக்கும் நாம் அள்ளி, அள்ளிக் கொடுத்தோம். அந்த
யூனியனில், ஒவ்வொருவரும் ரூ. 100 மதிப்புள்ள வேலை
செய்தல் மக்களுக்கு ரூ. 25 மதிப்புக் கூட போய்ச்சேர
வில்லை. அதை யாரும் மறுக்க முடியாது. எல்லா மாண்புமிகு
அங்கத்தினர்களும் அதனை ஒத்துக் கொள்வார்கள்.

ஆகவேதான் இதற்காக மத்திய அரசு கொடுத்த பணம் வீணான
தற்கு முக்கியமான காரணம் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட
தலைவர்கள் இல்லை. தேர்தலே இல்லை. சொசைட்டிகளில்
ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. காரணம் அங்கேயும் தேர்ந்
தெடுக்கப்பட்ட தலைவர்கள் இல்லை. எனவே நான் மாண்புமிகு
உறுப்பினர் திரு அம்பிகாபதி அவர்களுக்கும், அவர் சார்ந்திருக்
கின்ற கட்சிக்கும் சொல்லிக் கொள்வேன், நீங்கள் பஞ்சாயத்து
நகரசபை மற்றும் சொசைட்டிகளுக்கு உடனடியாகத் தேர்தல்,
நடத்துவது பற்றி அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசுக்குச் சொல்லுங்கள். பிறகு இந்த
ஆட்சியைக் கலைப்பதைப் பற்றிப் பேசுங்கள்.

மேலும் இந்த அரசு எந்தத் திட்டத்தையும் நல்ல முறையில்
செயல்படுத்தத் தயங்குகிறது. உதாரணமாக டிரான்ஸ்போர்ட்
கார்ப்பரேஷனை எடுத்துக் கொள்ளுங்கள். முன்பெல்லாம்
பஸ் ரூட் கொடுப்பதற்கான அதிகாரம் கலெக்டர்களிடம் இருந்
தது. மாவட்ட கலெக்டர்கள் ஐ. ஏ. எஸ். படித்தவர்கள்.
நல்ல திறமை படைத்தவர்கள். ஆனால் என்ன ஆயிற்றோ
தெரியவில்லை, திடீரென்று அவர்களிடம் இருந்த அந்த பவரை
ஆர்.டி.ஏ. அவர்களிடம் கொடுத்துவிட்டார்கள். ஆர்.டி.ஏ-க்கள்
அலுவலகத்தைப் பற்றி நமக்கு நன்றாகத் தெரியும். அவர்
களுடைய செயல், திறன், ஆக்கப் பணிகள் முதலியன நாடறிந்த
உண்மையாகும். அப்படிப்பட்டவர்களிடம் இந்த பவரை,
கலெக்டர்களிடம் இருந்து பிடுங்கிக் கொடுத்திருக்கிறீர்கள். இவர்
களிடம் இருந்து நிச்சயமாக நியாயம் கிடைக்காது. மாவட்ட
கலெக்டர்கள் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்கின்ற
வர்கள். அவர்களுக்குத்தான் தெரியும் எந்தெந்த இடங்களுக்குப்
பஸ்கள் தேவை என்று. எனவே கலெக்டர்களிடம் இருந்த





அதிகாரத்தைப் பிடுங்கி ஆர்.டி.ஏ-க்களிடம் கொடுத்தது தவறு
என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனவே அந்த
அதிகாரத்தை மீண்டும் கலெக்டர்களுக்கே கொடுக்கவேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகவும்
குறைவாக உள்ளது. நாட்டிலே ஹைஸ்கூல்களுக்கு பள்ளிகளில்
கட்டிடங்கள் இல்லை. ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் பள்ளிகள்
அதிகமாக இல்லை. இருக்கின்ற பள்ளிகளும் பெரும்பாலும்
நகரங்களிலேதான் இருக்கின்றன. அவைகளைப் பரவலாக
கிராமப்புறங்களில் அமைத்து மக்களுக்கு வாய்ப்பளிக்க
வேண்டும். சென்ற பட்ஜெட்டிலே கல்வி இலாகாவைப்
பற்றி பேசும்போது மிகவும் விவரமாகச் சொன்னார்கள். திருச்
சியிலே பல்கலைக் கழகம் அமைப்பதற்கு 1 லட்ச ரூபாய் ஒதுக்கப்
பட்டது. இப்போது மது குடிப்பது சாராயம் குடிப்பது தவறு
என்று பிரச்சாரம் செய்வதற்கு முதல் தவணையாக ஒரு கோடி
ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பிறகு படிப்படியாக பல கோடி
ரூபாய்கள். கோவையிலே பல்கலைக் கழகம் அமைக்கும்
திட்டம், இந்த பட்ஜட்டிலே இடம் பெறவில்லை. எனவே
நீங்கள் வாய்க்கு வந்ததை எல்லாம் வாக்குறுதியாக வருடா
வருடம் கொடுத்துவிட்டு, மக்களிடம் இருந்து தப்பித்துக் கொண்
டிருக்கிறீர்கள்.

அடுத்து மருத்துவத் துறையை எடுத்துக் கொண்டால்,
நிறைய இடங்களில் டாக்டர்கள் இல்லை. ஆஸ்பத்திரிகளிலே
மருந்துகள் இல்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்
என்னுடைய தொகுதியில் பஞ்சாயத்து யூனியன் ஆஸ்பத்திரி
இருக்கின்றது. ஆனால் அதிலே மருந்துகள் இல்லை. பஞ்சப்பட்டி
கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரியிலே 6 மாத காலமாக அங்கே
உள்ள டாக்டர் லீவிலே இருக்கிறார். கவர்ன்மெண்ட் மைலம்
பட்டியிலே $2\frac{1}{2}$ ஆண்டு காலமாக 2 டாக்டர்களும் இல்லை.
மாற்று டாக்டர்களும் இல்லை. அந்த அளவில் இருக்கின்றன.
ஆகவே நீங்கள் ஆஸ்பத்திரிகள் திறக்கிறோம், டாக்டர்கள் போடு
கிறோம் என்று வெறும்பேச்சுப் பேசக்கூடாது. இதை
எல்லாம் மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். மேலும் பல குறைபாடுகள் இருப்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரிசன மக்களிடையே
தோன்றுகின்ற டாக்டர்களில் முக்கால்வாசிப் பேர்கள், 75
சதவிகிதம் பேர்கள் பிரைமரி ஹெல்த் சென்டரில்தான்
பணிபுரிகின்றார்கள். அரிசன டாக்டர்களுக்கு முக்கியத்துவம்
கொடுக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதைத் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்....

[1981 மார்ச் 24

[பிற்பகல் 12-30]

* **மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** அது முற்றிலும்
உண்மைக்கு மாறான கருத்து. இந்த இலாகாவைப் பொறுத்த
வரையில் அந்த அடிப்படையில் பார்க்காமல்தான் தொடர்ந்து
ஒரு மருத்துவரை ஒரு இடத்திற்குப் போடுகிறோம். அவர்
இந்த இனத்தைச் சேர்ந்தவர் என்று பார்ப்பது கிடையாது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் இது தெரிந்து இருக்கும்
என்று நினைக்கிறேன். இருந்தாலும் யாராவது தவறான தக
வல் அவருக்குக் கொடுத்து இருக்கக் கூடும். சில நேரங்களில்
நாங்கள் போடுகிற இடங்களுக்கு மருத்துவர்கள் செல்ல மறுக்
கிறார்கள். அதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். தற்
போது டாக்டர்களுக்குப் பற்றாக்குறை இருப்பதால், ஒரு
நீண்ட பட்டியல்—கிட்டத்தட்ட 1,400 டாக்டர்கள். புதிதாக
எடுக்க இருக்கிறோம். எந்தெந்த இடங்களில் டாக்டர்கள்
பதவிகள் காலியாக இருக்கின்றனவோ அந்தந்த இடங்களில்
இவர்களை நியமிக்க இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு
உறுப்பினர் சொன்ன அந்த அடிப்படையை கருத்தில் கொண்டு
இந்த இலாகாவோ அல்லது இந்த அமைச்சரவையோ பணியாற்ற
வில்லை என்பதைத் திட்டவட்டமாக நான் சொல்லிக்கொள்
கிறேன். வாதத்திற்காக இதை நான் சொல்லவில்லை. உண்மை
யாகச் சொல்கிறேன். உறுப்பினர்கள் முழுமையாக இதை
ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் அளித்த விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்
கிறேன். அந்த மாதிரி பாகுபாடு இல்லை என்று குறிப்பிட்டார்
கள். நான் ஒரு உதாரணத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.
டாக்டர் பெருமாள் என்பவர் 10 ஆண்டுகாலமாக ஜி.எச்.-இல்
வேலை செய்து கொண்டு இருந்தார். அவரைத் திருச்சிக்கு
அருகில் உள்ள செந்துறை பிரைமரி ஹெல்த் சென்டருக்கு
மாற்றினார்கள். குறிப்பாக பிரைமரி ஹெல்த் சென்டர்கள்
சிறிய சிறிய கிராமப்புறங்களில்தான் இருக்கின்றன. ஆகவே
அந்த மருத்துவர்கள் அங்கேதான் பணி செய்ய வேண்டும்.
இந்த டாக்டர் அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் என்பதால்
அந்தப் பகுதியில் உள்ள ஜாதி இந்துக்களால் இவர் தாக்கப்
படுகிறார். அங்கேயுள்ள அரிசன மக்கள் பாதுகாப்பு கொடுத்
தார்கள். அவரை வேறு ஊருக்கும் 6 மாதத்திற்குள் மாற்றி
யிருக்கிறார்கள். ஆகவேதான் அப்படிக் குறிப்பிட்டேன்.

அடுத்து. இண்டஸ்டிரி பற்றி இந்த அறிக்கையில் அதிகம்
சொல்லவில்லை. மாண்புமிகு இண்டஸ்டிரிஸ் மினிஸ்டர்
கரூரில் ஒரு பேப்பர் மில் ஏற்படுத்தப்படும் என்று சொன்னார்கள்.
ஆனால் அது இந்த பட்ஜெட் உரையில் காணோம். இண்டஸ்டிரி
மூலமாகத்தான் மக்களுக்கு அதிகமான வேலை வாய்ப்புகளை



1981 மார்ச் 24] [திரு. பி. எம். தங்கவேல்ராஜ்]

அளிக்க முடியும். தொழில்கள் பெருகினால்தான் நாட்டு
மக்களின் வாழ்வும் உயரும் வளமும் பெருகும். ஆகவே, தொழில்
களைப் பெருக்குவதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களுக்கான சிபார்சு மத்திய அரசுக்குச் செய்யப்பட்ட
பின்பு, அதற்கான அனுமதி பெறுவதில் காலதாமதம் ஆகிறது
என்று ஏற்கெனவே குறிப்பிட்டார்கள். ஒரு தொழில் தொடங்க
லைசென்சு வேண்டும் என்று மனு போட்டுவிட்டால் மட்டும்
போதாது. அந்த பாக்டரி ஆரம்பிக்கத் தேவையான இடம்,
மூலப்பொருள்கள் கிடைக்கின்ற நிலைமை, ஆகிய அனைத்து
விவரங்களும் கொடுக்கவேண்டும். மத்திய அரசினால் காலதாமதம்
ஏற்படுகிறது என்று சொன்னால், நீங்கள்தான் அடிக்கடி
டெல்லிக்குப் போகிறீர்களே, அப்படிச் செல்கிறபோது, அது
குறித்து வலியுறுத்தி பெற்று வரவேண்டும் என்று சொல்லிக்
கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் 1967-க்கு முன்பு அதிகமான தொழில்கள்
ஆரம்பிக்கப்பட்டன. மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர்
திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இங்கே தொழில் அமைச்ச
ராக இருந்த நேரத்தில்தான் பி.எச்.இ.எல். போன்ற பெரும்
பெரும் தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன. அத்தகைய அக்க
றையும், கவனமும் இப்போது காட்டப்படவில்லை என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அளவிற்குத் தற்போது
அரசு அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக்
கொள்கிறேன்.

இரிகேஷனை எடுத்துக்கொண்டால், சாதாரண வாய்க்
கால்கள் வெட்டுவதற்குக்கூட இந்த அரசாங்கம் திட்டமிட
வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான
எந்தவிதமான திட்டமும் அறிவிக்கவில்லை என்பதையும் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். உங்கள் அனைவருக்கும் தெரியும்.
இந்த நாட்டில் உள்ள மக்களில் 75 சதவிகிதம் மக்கள் விவ
சாயத்தை நம்பித்தான் வாழ்க்கை நடத்துகிறார்கள். விவ
சாயம் பெருகவேண்டுமானால் அணைக்கட்டுகள் கட்டவேண்
டும். தூர்ந்துபோய் இருக்கிற குளங்கள், ஏரிகள், வாய்க்கால்
கள் சீர்திருத்தப்படவேண்டும். அப்படிப்பட்ட காரியங்களைச்
செய்தால் விவசாய மக்கள் இந்த அரசுக்கு நன்றி செலுத்தக்
கடமைப்பட்டவர்களாக இருப்பார்கள் என்று சொல்லிக்
கொள்கிறேன்.

அடுத்தபடியாக தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடி
யாக நெசவுத் தொழிலைத்தான் அதிகம் பேர் செய்கிறார்கள்.
சென்ற பட்ஜெட்டில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்
விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், நெசவாளப் பெருங்குடி
மக்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டித்தரப்படும் என்று சொன்
னார்கள். சலுகைகள் தரப்படும் என்று சொன்னார்கள்.

[திரு. பி. எம். தங்கவேல்ராஜ்] [1981 மார்ச் 24

நெசவாளர் மக்கள் அடிக்கடி டி.பி. நோய் வந்து கஷ்டப்படுவதால், சுகாதார வசதியோடு கூடிய இல்லங்கள் தரப்படும் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டிலே நெசவாளர்களைப்பற்றி அதிகமாகச் சொல்லவில்லை. சென்ற பட்ஜெட்டிலே அறிவித்த பிறகு நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டதா? எவ்வளவு கட்டப்பட்டது? மேலும் என்னென்ன உதவி செய்யப் போகிறீர்கள் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. அதற்காக தொகை ஒதுக்கப்படவில்லை. ஆகவே, இந்த அரசு விவசாயிகளையும் நெசவாளர்களையும் மறந்துவிட்டது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், நான் ஏற்கெனவே சொன்னதைப்போல உலகத் தமிழ் மாநாட்டுக்கு ரூ 15 கோடி, 20 கோடி செலவிடப்பட்டிருக்கிறது. ஆனால் நல்ல பல திட்டங்களை நிறைவேற்ற இந்த அரசு தவறிவிட்டது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காட்டிய அன்பரசு டேப் ரிக்கார்டு என்னவாயிற்று என்று கேட்க விரும்புகிறேன். (அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

திரு ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பளித்ததற்காக முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைத் தமிழக மக்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் 'கானல் நீர் பட்ஜெட்' என்று சொல்லியிருக்கிறார்கள். வறட்சி நிலையைப் பற்றி முன்கூட்டியே திட்டமிட்டு செயல்பட்ட காரணத்தினால், வறட்சியால் மக்கள் அவ்வளவாகப் பாதிக்காத அளவில் வேலைகள் நடைபெறுகின்றன. மேலும், தமிழகம் எங்கும் பரவலாக மழை பெய்திருக்கிறது. இது நமக்குச் சாதகமாக இருக்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த 6-வது திட்டத்திலே பாசனத்திற்கு 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டப்படக்கூடிய ஒன்றாகும். அதனால் சிறு சிறு ஏரிகள், அணைகள் கட்டி, தமிழ்நாட்டில் வறட்சிப் பகுதிகளுக்குக் குடிதண்ணீர் கொடுக்க முடியும், விவசாயத்திற்கும் பயன்படும். அதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் செய்து, நன்மை செய்ய இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகரப்புறங்களில் சைக்கிள்ரிக்ஷாக்களுக்கு மோட்டார் பொருத்தும் திட்டம் மிகவும் பாராட்டக் கூடியதாகும். இதனால் ஏழை மக்கள் பயனடைவார்கள். இத் திட்டத்தைக் கொண்டுவந்ததற்காக நான் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.



1981 மார்ச் 24] [திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி]

விவசாயிகளுக்கு வாக்குறுதி கொடுத்தபடி தண்ட வட்டி, வட்டி போன்றவைகளை ரத்து செய்யப்படக்கூடிய திட்டம் பாராட்டக்கூடியதாக இருக்கிறது.

அதைப்போல ஆதி திராவிடர் வீட்டு வசதி-வளர்ச்சிக் கழகத்தில் பங்கு மூலதன முதலீடு செய்ய ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் கிராமப் புறங்களில் ஆதி திராவிட மக்களுக்கு வீடு கட்ட கடன் வழங்குவதை இன்னும் தீவிரப் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு அலுவலர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தையும் நான் பாராட்டுகிறேன்.

போக்குவரத்துத் துறையில் இந்த அரசு முன்னேற்றம் செய்வதற்காக திட்டமிட்டிருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நகரப் பேருந்து 25 கிலோமீட்டர் என்று இருந்ததை 30 கிலோமீட்டராக மாற்றி, கிராம மக்கள் நகரப் புறங்களோடு தொடர்பு கொள்ள நல்ல தொரு வசதியை ஏற்படுத்திக் கொடுத்திருப்பதற்காக கிராம மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள்.

அதைப் போலவே பஸ்களே இல்லாத கிராமங்களில் போக்குவரத்துத் துறை நல்லமுறையில் செயல்பட்டு, எல்லாக் கிராமங்களுக்கும் வழித்தடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்; போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களையும் பாராட்டுகிறேன்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் 20 கோடி ரூபாயில் வடார்க்காடு மாவட்டத்தில் வெடிமருந்து தொழிற்சாலை தொடங்க இருப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையில் பார்த்தேன். அதுபற்றி மிகவும் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல கரூர் அருகே பரிசீலனையில் இருக்கிற காகிதத் தொழிற்சாலையை இந்த ஆண்டு அமைக்க அரசு முன்வரும் என்று எதிர்பார்த்தேன். ஆனால் என்ன காரணத்தாலோ அது இடம்பெறவில்லை. அமைச்சரவர்கள் அதையும் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மதுவிலக்குக் கொள்கையை நாம் கொஞ்சம் தளர்த்தி இருப்பதாக திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் கூறினார்கள். அவர்கள் ஆளுகின்ற அனைத்து மாநிலங்களிலும் மதுவிலக்கைத் தளர்த்திவிட்டு, தமிழ்நாடு மட்டும் அதற்கு விதிவிலக்கு என்று சொன்னால் அதன் பொருள் என்ன? அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். முதலிலே அவர்கள் ஆளுகின்ற மாநிலங்களிலே அமுல்படுத்திவிட்டு, மற்றவர்களைக் கேட்டால்

[திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி] [1981 மார்ச் 24

பாராட்டலாம். ஆனால் எல்லா மாநிலங்களிலும் தளர்த்தி
விட்டு, தமிழகத்திலே அமுல்படுத்த வேண்டும் என்று சொல்
வது நியாயமே அல்ல.

அதைப்போல திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் குறை
கூறி இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டபோதுதான் தமிழ்
நாட்டிலே குடிகாரர்களை உருவாக்கினார்கள் என்பது எல்
லோருக்கும் தெரியும். என்னைப் பொறுத்த வரையில் இந்த
மதுவிலக்கை அடியோடு ரத்து செய்ய வேண்டுமென்பதுதான்
என்னுடைய விருப்பம். அதனால் பல சங்கடங்கள் தீர வழி
ஏற்படும்.

வரும் ஆண்டில் நரிக்குறவர்கள், ஒட்டர்கள், முடிதிருத்து
வோர், சலவைத் தொழிலாளர்கள் ஆகியோர்களுக்கு வீட்டு
மனைகள் வழங்க இந்த அரசு முன்வந்திருப்பதனால் அவர்
களுக்கு பல நன்மைகள் கிடைக்கும் என்பதால் இதைப் பாராட்ட
நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-40].

அடுத்து தேர்தல் கால வாக்குறுதியில் தாலிக்குத் தங்கம்
குறைந்த விலையில் கிடைக்கும் என்று புரட்சித்தலைவர் அவர்கள்
அறிவித்திருந்தார்கள். அது இந்த நிதிநிலை அறிக்கையில் வந்
திருப்பது குறித்து பொதுமக்கள் மிகவும் பாராட்டிக்கொண்டிருக்
கிறார்கள். அதைப்போலவே தமிழகத்தில் தேங்காய் உற்பத்தி
பெருகுகின்ற வகையில் சிறந்த தென்னம் கன்றுகளை உற்பத்தி
செய்ய முன்வந்திருப்பதையும் பாராட்டுகிறேன். செழிப்பான
இடங்களில் பாதை ஓரங்களில் கூட நிறையத் தென்னை மரங்
களை வளர்க்கலாம் என்ற என்னுடைய கருத்தைக் தெரிவித்துக்
கொள்கிறேன்

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் முய
லாற்று திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும். அதேபோன்று
அமராவதியில் மயில்ரங்கம் அருகே ஒரு அணை கட்டினால்
அது விவசாய மக்களுக்குப் பயன்படுவதாகவும் இருக்கும், வறட்சி
என்ற நிலை ஏற்படாமல் அந்தக் குளங்களிலே தண்ணீர் இருப்
பதற்கும் வாய்ப்பு ஏற்படும்.

அடுத்து திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் குடகனாறு
அணையைக் கட்டி அது உடைந்துவிட்டது, உடைந்துவிட்ட
அந்த அணையை மீண்டும் செப்பனிட்டு உடனடியாகக் கட்டித் தர
வேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாநில சுயாட்சிபற்றி ஒவ்வொருவரும் கருத்துக்களை
கூறிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய கருத்
துக்களைத் தெளிவாகச் சொல்லவேண்டும். கம்யூனிஸ்ட் கட்சி
யைச் சார்ந்தவர்கள்தான் அதற்கு ஆதரவு தெரிவித்தார்களே



1981 மார்ச் 24] [திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி]

தவிர மாநில சுயாட்சி பற்றிச் சொல்கின்ற திராவிட முன்னேற்றக்
கழகம் மத்தியிலே போய் வேறு விதமாகச் சொல்கிறார்கள்.
ஆகவே அவர்களுடைய கருத்தைத் தெளிவாகச் சொல்லவேண்
டும்.

அதுபோலவே மதுவிலக்கு சம்பந்தமாகவும் அவர்களுடைய
கருத்தைத் தெளிவாகச் சொல்லவேண்டும். மதுவிலக்கு வேண்டும்
என்று திராவிட முன்னேற்றக்கழகத்தினர் சொல்கிறார்களா
அல்லது வேண்டாம என்றும் அதை எடுத்துவிடவேண்டும் என்றும்
சொல்கிறார்களா என்பது தெரியவில்லை. அவர்கள் குழப்பத்
திலே இருக்கிறார்கள். அதுபற்றி அவர்கள் தெளிவாக அறி
விக்கவேண்டும். அதேபோன்று காங்கிரஸ்காரர்களும் மது
விலக்கு பற்றிப் பேசுகின்றபோது மயக்கத்திலே பேசுகிறார்களா
என்பது தெரியவில்லை. ஏனென்றால் பக்கத்து மாநிலமான
புதுவை, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற எல்லா மாநிலங்
களிலும் மதுவிலக்கு இல்லை. தமிழகத்தில் மட்டும் இருக்கவேண்
டும் என்று சொன்னால் அதை எந்தவகையிலே ஏற்றுக்கொள்ள
முடியும் என்பதைக் கேட்க விரும்புகிறேன். காங்கிரஸ்
கட்சிக்கு இதிலே ஏன் தேசியக் கொள்கை.......... (கூச்சல்,
குழப்பம்).

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, மதுவிலக்கு சம்
பந்தமாக காங்கிரஸ்காரர்கள் ஏதோ ஒரு மயக்கத்தில் இருக்
கிறார்கள் என்றும் அவர்கள் சரியாகச் சொல்லவில்லை என்றும்
சொன்னார்கள். நான் சொல்கிறேன், உங்களுக்குத்தான் புதிதாக
மதுமீது மயக்கம் ஏற்பட்டிருக்கிறது, அந்த மயக்கத்தின் காரண
மாகத்தான் இன்றைக்கு அதை ரத்து செய்வதற்குரிய வகையில்
ரிலேக்ஸ் செய்திருக்கிறீர்கள். ஆனால் எங்களைப் பொறுத்த
வரையில் எங்களுடைய கொள்கை மதுவிலக்கைத் தீவிரமாக
அமல்படுத்தவேண்டும் என்பதுதான்.

வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : இந்தக்
கொள்கை தமிழ் நாட்டிற்கு மட்டுமா ? அல்லது இந்தியா முழு
வதற்குமா ? (கூச்சல், குழப்பம்)

திரு. கு. அ. செங்கோட்டையன் : தலைவரவர்களே, மது
விலக்குக் கொள்கை பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தர
ராஜ் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கொள்கை இந்தியத்
துணைக்கண்டம் முழுவதற்குமா ? அல்லது தமிழகத்திற்கு
மட்டுமா ?

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, நாம் இருப்பது
தமிழ்நாட்டில். அதுவும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இருக்
கிறோம். இங்கே கொண்டு வரப்பட்டிருக்கின்ற பட்ஜெட்
தமிழ்நாட்டின் நல்வாழ்வுக்காக கொண்டுவரப்பட்ட பட்ஜெட்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தை வளர்த்துக் கொண்டே போகவேண்டாம்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: தலைவரவர்களே, இந்தியா முழுவதையும் நாங்கள்தான் ஆளுகிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் இதிலே மட்டும் என்ன வேறுபாடு என்பதை அவர்கள் தெளிவாக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம். உங்களது கருத்தை மட்டும் சொல்லுங்கள் போதும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தனது கருத்தைச் சொல்லிக் கொண்டு வரலாமே தவிர, என்ன என்று கேள்வி கேட்கவேண்டிய தில்லை. அவ்வாறு கேட்கின்றபோதுதான் பதில் சொல்ல வருகிறார்கள். ஆகவே உறுப்பினர்கள் பேசுகின்றபோது கேள்வி கேட்காமல் தங்களது கருத்தை மட்டும் சொன்னால் நல்லது என்ற எனது கருத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: அகில இந்தியாவை ஆளுகின்ற கட்சி தமிழ்நாட்டிலே மட்டும் தன்னுடைய நிலையை இவ்வாறு சொல்வது என்றால்...............

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, * * (கூச்சல், குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வேண்டாம். இதுபற்றிய விவாதத்தை வளர்த்த வேண்டாம். அனைவரும் தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * * * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினரைப் பேச அனுமதிப்பதும் அனுமதிக்காமல் இருப்பதும் பேரவைத் தலைவருக்குள்ள உரிமை. என்னுடைய உரிமையில் நீங்கள் தலையிட முடியாது.

(கூச்சல், குழப்பம்).

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, * * *

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதத்தில் கலந்துக் கொண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். அதில் இடையிலே திரு. நெடுமாறன் அவர்கள் புதியதொரு பிரச்னையை எழுப்பியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. இருந்தாலும் அவர்கள் பேசும்போது விளக்கங்கள் சொல்லலாம். ஆகவே, அந்தப் பேச்சும் வேண்டாம், மற்றைய பேச்சுக்களும் வேண்டாம். இதை இதோடு நிறுத்தி விட்டு, விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசும் உறுப்பினர் தொடர்ந்து பேசட்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, என்னுடைய பேச்சை நீக்குவதை நான் ஆட்சேபிக்கிறேன். அது அவைக்குறிப்பில் இருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசியது மட்டுமல்ல. இது சம்பந்தமான விவாதம் இப்போது தேவையில்லை. அதனால் நீங்கள் குறிப்பிட்டதையும் அது சம்மந்தமாக எழுந்த விவாதம் அனைத்தையும் நீக்கிவிட உத்தரவிடுகிறேன். திரு. கந்தசாமி அவர்கள் தொடர்ந்து பேசட்டும்.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய அருமை நண்பர் தங்கவேல்ராஜ் அவர்கள் பேசுகிறபோது, கூட்டுறவுத் துறையில் ஊழல்கள் நடைபெறுகிறது என்று சொன்னார்கள். (கூச்சல், குழப்பம்).

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்ற விதிகளுக்கு விரோதமாக, மரபுகளுக்கு புறம்பாக பேசும் பேச்சுக்களைத்தான் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். நான் அப்படி எதுவும் பேசவில்லை. அதனால் என்னுடைய பேச்சை நீக்கியது சரியல்ல. அது இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் கூறிய கருத்து தவறு என்று காரணம் காட்டி நான் நீக்கவில்லை. நீங்கள் விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசும்காலத்தில் இதைக் குறிப்பிட்டு பேசுங்கள் அப்போது இது அவைக்குறிப்பில் ஏறும், இப்படி வேறு ஒருவர் பேசும்போது இடையில் ஒவ்வொருவருக்கும் பேச

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

அனுமதி அளித்துக் கொண்டே வந்தால், இந்த விவாதம் தான் தொடர்ந்து நீடித்துக் கொண்டே போகும். இதற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என்றுதான், நீங்கள் பேசியதை அவைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கியிருக்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற மரபுகளுக்கு எதிராக தவறான வார்த்தைகள் எதையும் நான் சொல்லவில்லை. அவர் எழுப்பிய வினாவிற்கு தான் பதில் சொன்னேன். அதை நீக்குவது என்பது.......

(மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்றால், அவைத் தலைவர் என்ற முறையில் சேரைப் பார்த்து பெர்மிஷன் வாங்கிக் கொண்டு இங்கே யாரும் பேசுவது இல்லை. நீங்களாகவே எழுந்து நின்று கொண்டு, யாரையும் அழைப்பதற்கு முன்பு பேசுகிறீர்கள். பின்னால் நீக்கினால், பேசியதை நீக்குகிறீர்களே என்று வாதிடுகிறீர்கள். யாரையும் நான் பெயர் சொல்லி அழைத்த பிறகு தான் பேச வேண்டும் என்று விதி இருக்கிறது. ஆனால் நான் அனுமதிப்பதற்கு முன்பு, பிரச்னை ஏதாவது வந்தது என்றால், நீங்களாகவே எழுந்து நின்று பேசுகிறீர்கள். அப்படி பேசுவதினால்தான் இப்படிப்பட்ட விவகாரங்கள் எழுகின்றன. வரைமுறை கடைபிடிக்கப்பட வேண்டும் என்றுதான் நீக்கச் சொன்னேன். உங்கள் கருத்தில் எந்தவித வேறுபாடு கொண்டும் நீக்கச் சொல்லவில்லை. வேண்டுமானால், நீங்களே விவாதத்தில் கலந்துக் கொண்டு பேசும் போது, அல்லது உங்கள் கட்சி உறுப்பினர்கள் பேசும்போது, இதை மீண்டும் எழுப்பி பேசுங்கள். அப்போது இந்திரா காங்கிரஸ் கட்சியினரும் பதில் சொல்வார்கள். இப்படி வேறு உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கையில் குறுக்கிட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினர்கள் பேசுகிறபோது, பேச்சிலே ஏதாவது ஐயப்பாடு ஏற்பட்டால், வேறு உறுப்பினர் எழுந்து நின்று கேட்கலாம். அதற்கு அவர் ஈல்டு ஆனால் பதில் சொல்லலாம். ஈல்டாக மாட்டேன் என்று சொன்னால் தொடர்ந்து பேசலாம். அவை உரிமைகளை பாதிக்கின்ற வகையில் பேசினால், இடையிலே எழுந்து பேச உரிமை உண்டு. யார் பேசுகிறார்களோ அவர்கள் நேரிடையாக கேட்கிறபோது வேண்டுமானால் விளக்கங்கள் தரலாமே தவிர, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன், அவர்கள் குறுக்கிட்டுப் பேசியது போல் இருக்கக் கூடாது. அவர் பேசிய கருத்துப் பற்றி ஒன்றும் பிரச்னை இல்லை. அதில் தவறான பொருள் இருக்கிறது என்ற காரணமும் பிரச்னை இல்லை. இந்தக் கருத்தை அவர் விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில்





வெளியிடலாம். ஆனால் அவர் இந்திரா காங்கிரஸ்காரர்களைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்டுவிட்டு உட்கார்ந்து விட்டார். உடனே அவர்கள் அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்று வருகிறபோது, நியாயமாக விவாதத்தில் கலந்து கொண்டு பேசிக் கொண்டிருக்கிற உறுப்பினரை ஒரு பக்கத்தில் அப்படியே விட்டு விட்டு, வேறு ஒரு பக்கத்தில் வேறு விதமான கேள்வி கேட்டு, அதற்கு பதில் அளித்துக் கொண்டே போனால், அவையின் நடைமுறை சரியாக இருக்காது என்பதே தவிர, மாண்புமிகு உறுப்பினர் நெடுமாறன் அவர்கள் எழுப்பிய பிரச்னை பற்றிய பிரச்னை அல்ல இது. அவர் எழுப்பிய பிரச்னைக்கு இது நேரமும் அல்ல. அவர் விவாதத்தில் கலந்து கொண்டு பேசும்போது, அல்லது அவர்கள் கட்சிக்காரர்கள் பேசும்போது, இதே கருத்தை எடுத்துச் சொல்லலாம். அதற்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்காரர்கள் பேசும்போது அதற்கான பதிலை அவர்கள் தரலாம். அந்த வகையிலே எழுந்த விவகாரமே தவிர, இதிலே ஒன்றும் சொல்லைப் பற்றியோ, பேச்சைப் பற்றியோ இல்லை என்பதை உங்கள் மூலமாக விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-50]

திரு. ச. பெ. சென்னிமலை என்கிற கந்தசாமி : தலைவர் அவர்களே, எனக்கு முன்னால் பேசிய திரு. தங்கவேல்ராஜ் அவர்கள், கூட்டுறவுத் துறையில் ஊழல் நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னார்கள். ** ** ** இப்போது கடன்கள் அதிகமாகக் கொடுக்க முன்வரவில்லை. அப்போது எப்படி ஊழல் நடக்க முடியும்? (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வரவு-செலவுத் திட்டத்தின் மீது பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்). அவர்கள் குறிப்பிட்ட ஒரு கட்சி பற்றிப் பேசியதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. ச. பெ. சென்னிமலை என்கிற கந்தசாமி : எனக்கு முன் பேசிய உறுப்பினர் சொன்னதற்காகத்தான் சொன்னேனே தவிர அவர்களுக்கு பேசுவதற்குள்ள உரிமை எனக்கும் உண்டு. ஆதாரத்தோடுதான் கூறுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை தமிழக மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். போற்றுவோர் போற்றட்டும், புழுதி வாரி தூற்றுவோர் தூற்றட்டும் என்பது போல் இவர்கள் தூற்றிக் கொண்டுதானிருப்பார்கள், ஆனால் தமிழக மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறார்கள் என்று கூறி எனக்கு இந்த வாய்ப்பு அளித்தமைக்கு தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

*திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்: மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது காந்தி-காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் எனது கருத்துக்களைச் சொல்ல விழை கிறேன். நிதி நிலை அறிக்கை ஆரம்பத்திலேயே நாடாளு மன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசிய பேச்சினை எழுதிவிட்டு, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டிய பொறுப் பும், கடமையும் மாநில அரசுக்கு நேரிடையாக ஏற்படுவதால், அதற்குத் தேவையான அதிகாரங்களையும் அளிக்க மத்திய அரசு முன்வர வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த வாய்ப்பில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன் என்று கூறியிருப்பதை நான் வரவேற்றுப் பேசுகிறேன்.

பொதுவாக மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும் என்று சொல்கிற துணிவு இன்றைய தினம் அனைத்திந்திய அண்ண திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வந்திருப்பது பற்றி எனது மனம் கனிந்த பாராட்டுதல்களை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதே நேரத்தில் மத்திய அரசு கோதுமையின் விலையை ரூ. 17-ல் இருந்து ரூ. 130 ஆக உயர்த்தியிருப்பது போல் நெல்லின் விலையையும் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருப்பது மட்டும் போதாது. நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 150-க்குக் குறைய மல் விலை நிர்ணயிக்க வேண்டும் என்று மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியைப் பொறுத்தவரையில் நல்ல பல திட்டங்கள் இங்கு தீட்டப்பட்டிருக்கின்றன. குடி தண்ணீர், உணவு, வாழ்க் கைக்கு வேண்டிய ஏனைய தேவைகள் ஆகியவை மக்களுக்குத் தட்டுப்பாடின்றிக் கிடைக்கும்படி பார்த்துக் கொள்வதில் இவ் வரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என உறுதி கூறுகிறேன் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. வறட்சி நிலையைப் பொறுத்த வரையில் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் எத்தகைய வறட்சி நிலை உள்ளன என்பது பற்றி எல்லாம் இதற்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் தெள்ளத் தெளிவாக எடுத்துச் சொல்லி விட்டார்கள். குடிநீரைப் பொறுத்தவரையில் இன்றைய தினம் தமிழக அரசு அதை நிவர்த்தி செய்ய வேண்டிய பொறுப்பில் இருந்தாலும் கூட அதன் பொறுப்பு மத்திய அரசுக்கும் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியா விலே 95 லட்சம் கிராமங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இதில் ஒரு இலட்சம் கிராமங்களுக்குத்தான் குடிநீர் வசதி செய்யப்பட்டிருப்பதாகப் பேசப்படுகிறது. மத்திய அரசு பட்ஜெட்டில் மனக்கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் குடும்பங் களைக் கட்டுப்படுத்த வேண்டும். என்று விளம்பரம் செய்ய வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலை இருக்கிறது. அதற்கு ரூ. 155 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள்.





கன்னியாகுமரி வரை பரந்து ஆனால், காஷ்மீரிலிருந்து 68 கோடி ஜனங்களுடைய குடி கிடக்கும் இந்த பாரததாட்டின் 110 கோடி ரூபாய் ஒதுக்கி நீர் பிரச்னையைப் போக்குவதற்கு அதை நாங்கள் வன்மையாகக் இருக்கிறது என்று சொன்னால், பொறுத்த வரையில் கண்டிக்கிறோம். குடிநீர் பிரச்னையைப் இருக்கிறதோ, அந்த மாநில அரசுக்கு எவ்வளவு கடமை இருக்கிறது. மைய அரசு அளவுக்கு மைய அரசிற்கும் கடமை போதாது. அதனால் 110 கோடி ரூபாய் கொடுத்திருப்பது செய்யச் செய்து, குடி தமிழகத்திற்கு கூடுதலான நிதி ஒதுக்கீடு செயல்பட வேண்டு நீர் பற்றாக்குறையை போக்குகின்ற வகையில் விரும்புகிறேன். மென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ள

உணவு நிலையைப் பொறுத்தவரையில், நாம் ஆரம்பத்தி லேயே சொன்னது போல், சொல்ல விரும்புகிறேன். இந்தச் சமாளிக்க வணிகர்கள் லெவி அளக்கும் முறையை அரசு செயலுக் குக் கொண்டு வந்தது என்று பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்குச் சொல்வதெல்லாம், இந்தத் திட்டத்தினால் இன்றைய தினம் பொது மக்கள் எவ்வளவு துன்பப்படுகிறார்கள் என்பதை விளக்கிக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 40 சதவீதம் லெவி போடும் போது, சாதாரணமாக 140 ரூபாய்க்கு நெல்லை வாங்கி, குவிண்டால் ஒன்றுக்கு அதை 110 ரூபாய்க்கு அரசுக்குக் கொடுக் கும்போது, அதனால் ஏற்படுகின்ற 30 ரூபாய் இழப்பை, அவர்கள் பொது மக்கள் தலையிலேதான் சுமத்துகிறார்கள். அது மட்டுமல்ல. அதிகாரிகளுடைய கெடுபிடி இந்தத் திட்டத்திற்கு ஆதரவாக இருக்கிறது. சமீபத்திலே நான் திருச்சிக்குப் சென்ற போது, அங்கே மணச்சநல்லூர் அரிசி மில்கள் மூடப்பட்டிருப்ப தாகவும், அங்குள்ள தொழிலாளர்கள் வேலையிழந்து உண்ணா விரதம் இருக்கின்ற ஒரு செய்தியைக் கேட்டேன். காரணத்தை அறிய முற்பட்ட நேரத்திலே, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மணச்சநல்லூர் அரிசி மொத்த வியாபாரிகளிடம் அட்வான்ஸ் லெவி வேண்டுமென்று கேட்டதாகவும், அவர்கள் தர மறுத்ததாகவும், அதனால் மூடப்பட்டதாகவும் சொன்னார்கள். ஏற்கனவே தஞ்சை மாவட்டத்திலே 40 சதவீத லெவி கொடுத்து வாங்கி வந்து நெல்லை அறைக்கிறார்கள். தஞ்சை மாவட் டத்தில் லெவி டார்ஜெட்டை அடைந்து விட்டார்கள் என்பதற் காக திருச்சியில் அந்த டார்ஜெட்டை அடைய கட்டாயமாக வசூல் செய்ய முற்படுகிறார்கள். இத்தகைய நிலைமைகளைப் போக்குவதற்கு தயவு செய்து இந்த லெவி முறையை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று, கூட்டுறவு இயக்கத்தைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையிலே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு இலட்சம் வேளாண் மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வரப்படும்

[திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன்] [1981 மார்ச் 24

ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர், வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்க உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இத்தகைய சங்கங்கள் அளிக்கும் கடன் உதவியையும், பிற பணிகளையும் பயன்படுத்திக் கொண்டு, இச்சமூகத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்க இந்தத் திட்டம் வகை செய்யும்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதே நேரத்தில், போடுகின்ற திட்டங்களை அதிகாரிகள் சரியாகச் செயல்படு கின்றார்களா என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய ஆலங்குளம் தொகுதியைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 500-க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு தென்காசி கூட்டுறவு சொசைடி மூலம் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டு எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, 6 மாத காலமாகியும் இன்னும் ஒரு ரூபாய் கூட கடன் வழங்கப்படவில்லை. அதுவும் ஒரு வீட்டிற்கு 5,000 ரூபாய் கடன் என்று இருந்தது. இப்போது ரூ. 3,000 ஆக குறைத்திருக்கிறார்கள். 3,000 ரூபாயில் இந்த காலத்தில் எந்த அளவிற்கு வீடு கட்டிக்கொள்ள முடியும் என் பதை எல்லாம் பரிசீலிக்க வேண்டும். அதிகாரிகளை வேகமாகத் துரிதப்படுத்தி மிக விரைவிலே காரியங்களைச் செய்ய முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசனத் துறையைப் பொறுத்த வரையில், ''20,500 ஏக்கர் கள் பாசன வசதி ஏற்படுத்தப்படும். இதன் மூலம், பாசனப் புன்செய் பயிர்கள் 20,500 டன் விளையுமென எதிர்பார்க்கப் படுகிறது'' என்று சொல்லியிருப்பதையெல்லாம், தமிழகத்தினு டைய நன்மையைக் கருதி நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதே நேரத்தில் வறட்சிப் பணிகளில் ஈடுபடுகின்ற நேரத்தில், ஏரிகளை ஆழப்படுத்துவதற்கு 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது காணாது என்பது எங்களுடைய கருத்து, குறிப்பாக, இன்றைய தினம் பாசனத்தைப் பொறுத்தவரை குளங்களை ஆழப்படுத்து வதில் அக்கறை செலுத்தவேண்டும். என் தொகுதியைப் பொறுத்தவரை செழியநல்லூர் குளத்தை மராமத்து பார்க்க வேண்டும். பல ஆண்டுகாலமாக அதைச் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டு வந்தது; ஆனால் இன்றுவரை அது சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் தலைமைப் பொறியாளர் அவர்களை அணுகிக் கேட்டபோது, அவர்கள் அந்தப் பைல் இன்னும் கீழ் மட்டத்திலிருந்து வரவில்லை என்று சொன்னார்கள். நான் மறுபடியும் திருநெல்வேலிக்குப் போய்க் கேட்டபோது, அவர்கள் மேல் அதிகாரிக்கு அனுப்பியிருக்கிறோம் என்று சொன்னார்கள். அந்தப் பைல் என்னவாயிற்று என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. அதேபோன்று, இன் னும் பல குளங்கள் இருக்கின்றன. தென்கலம் பள்ளமடைக்





 [திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] மராமத்து செய்யப்படாமல் இருக்கின்
குளம் போன்ற குளங்கள் மராமத்து செய்யப்பட வேண்டிய குளங்களில்
றன. அவைகள் மராமத்து செய்யப்பட வேண்டிய குளங்களில்
ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-00]

வனத் துறையைப் பொறுத்தவரையில் 45 ஆயிரம் ரூபாய்
செலவில் சிறப்புத் திட்டம்ஒன்றை வகுப்பதற்கு ஸ்வீடன் நாட்டு
சர்வதேச மேம்பாட்டு நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்து
வருகிறோம் என்று இந்த நிதி நிலை அறிக்கையில் கூறப்பட்டிருக்கி
றது. ஆனால் ஏற்கெனவே வனத்துறை, கிராமங்களில், பேரூராட்சி
கள், ஊராட்சிகளில் உள்ளகுளங்களில் கருவை மரங்களைபோட்டு,
அந்த மரங்களை ஏலம் விடுகிற நேரத்திலே அதில் பாதித்
தொகையை பேரூராட்சிக்கோ, ஊராட்சிக்கோ கொடுப்பது என்று
ஒப்புதல் கேட்டு. அன்றைய தினம் கருவை மரங்களை போட்
டார்கள். கீழ்ப்பா ஊர் பெரியகுளத்தில் ஏறத்தாழ 50
ஆயிரத்திற்கு மேல் கருவை மரங்களைப் போட்டு, ஐந்தாறு,
ஆண்டுகள் கழித்து அந்த மரங்களை ஏலம் விட்டு விட்டார்கள்.
ஏலம் விடப்பட்ட தொகை எவ்வளவு என்று எங்களுக்குத் தெரிய
வில்லை. ஏலம் விடப்பட்ட அத்தாட்சிகளை யாருக்கும் தராமல்,
யாருக்கும் தெரியாமல் ஏலம்விட்டு விட்டார்கள். பஞ்சாயத்துக்குச்
கேட்டபோது, இது பொதுப் பணித் துறையைத் சேர்ந்த குளம்,
அங்கு அனுப்புவோம் என்று வனத் துறையினர் சொல்லுகிறார்கள்
கள். பொதுப் பணித் துறையில் இந்த பணம் வரவில்லை என்று
சொல்லுகிறார்கள். இந்த நிலைமைகளை மாற்றுகிற வகையிலே
செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போன்று சுகாதார வசதி குடும்ப நலம் போன்ற
வற்றிலும் இந்த அரசு அக்கறை எடுத்து வருவதை நான் பாராட்டு
கிறேன். எனது தொகுதியிலே வீரகேரளன் புதூர் மருத்துவ
மனையில் டாக்டர் இல்லை என்பதை இந்த சட்டமன்ற உறுப்பி
னரான நாளிலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறேன். இன்னும்
டாக்டர்கள் போடப்படவில்லை. கேட்டால் ஆரம்ப சுகாதார
நிலையத்திலிருந்து டாக்டர்கள் கேட்டிருக்கிறேன். என்று
சொல்லுகிறார்கள். அவர்களைக் கேட்டால் நாங்கள் எங்க
ளுடைய பொறுப்பிலிருந்து எப்படி அனுப்புவது என்று கேட்கி
றார்கள். டாக்டர்கள் இல்லாத காரணத்தால் மக்கள் அவதிப்
படுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு
கேட்டுக்கொள்கிறேன். இந்த பட்ஜெட்டைப் பொறுத்தவரை
யில் இது சரியாக செயல்படுமேயானால் மக்களுக்கு நன்மைகளைச்
செய்தது இந்த அரசுதான் என்று சொல்கிற அளவிற்குச் சரியான
முறையில் பட்ஜெட் திட்டப்பட்டிருக்கிறது. ஆனால் திட்டங்கள்
சரியாக செயல்படுகிறதா, அதிகாரிகள் செயல்படுத்துகிறார்களா
என்பதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்] [1981 மார்ச் 24

பல்வேறு சாலைகளைப் பொறுத்தவரையில் இன்றையதினம்
தேசிய நெடுஞ்சாலை சிறப்பாக செப்பனிடப்பட்டு வருகின்றது.
ரூரல் சாலைகளைப் பொறுத்தவரையில் செப்பனிடப்படவில்லை.
இதனால் பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. இதை
நிவர்த்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாதா
ரண ஏழை, எளிய மக்களுக்கு நன்மை செய்கிற அரசு என்று
மக்கள் சொல்கிற அளவிலே. சிறந்து விளங்குகின்ற வகையிலே
செயல்பட வேண்டுமென்று சொல்லி அமர்கிறேன்.

*திரு. கே. தனுக்கோடித்தேவர்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, இந்த 1981—82 ஆம் ஆண்டு நிதிநிலை
அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கும் அகில இந்திய பார்வர்டு
பிளாக் கட்சியின் சார்பாக பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
என்னுடைய கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த மாமன்றத்தில் 1981—82 ஆம் ஆண்டில் நிதிநிலை
அறிக்கை குறித்து, ஒரு பக்கம் கண் சிமிட்டும் கானல்
நீர், என்றும், தாகம் தீர்க்காத தண்ணீர் பந்தல் என்றும் அதை
பேசுகிற நேரத்தில், அதை கணித்து பார்க்கிற போது, இதற்கு
முன்னால் ஆண்ட அரசு மக்களின் வரிப்பணத்தை மக்களுக்
காகவே செலவழித்ததைப் போலவும், இப்போது ஆளுகிற அரசு
வரிப்பணத்தை ஆழ்கடலில் அள்ளிப்போட்டு விடுகிறதைப் போல
வும் பேசியிருக்கிறார்கள். அதை நான் வேதனையுடன் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன். இதற்கு முன்னால் ஆண்ட அரசும்
இப்போது ஆளுகிற அரசும் இந்த நாட்டுமக்களின் வாக்
குரிமையைப் பெற்று, அமைந்தது ஆச்சரியம். யார் யார் எந்
நிலையில் இந்த நாட்டை நடத்தினார்கள் என்பதைநாட்டு மக்க
ளுக்கும், இந்த மன்றத்து உறுப்பினர்களுக்கும் தெரியும். குறை
கூறுங்கள், முறையோடு குறை கூறுங்கள், குறை கூறுகிறவர்கள்
இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த மாதிரி இருப்பது தவறானது.
அதை இந்த முறையில் அமைக்க வேண்டும் என்று யாரும் சொன்ன
தாகத் தெரியவில்லை. இன்றைக்கு வறுமைச் சூழ்நிலையின்
நிலைமை என்ன என்று பார்க்கிறபோது, இந்த நாடு சுதந்திரம்
அடைந்தபின் நாம் எப்படி இருக்கிறோம் என்று பார்த்தால் என்
வாழ்க்கை சரித்திரத்தில் நான் அனுபவித்த உண்மைகளை சொல்
லாமல் இருக்க முடியாது—இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்
னால் தமிழகத்தின் கடைசி நிலையில் இருக்கின்ற முகவை மாவட்
டத்திலே உள்ள கடலோரப் பகுதிகளான முதுகளத்தூர், கட
லாடித் தொகுதிகளில் வாழுகின்ற மக்கள் இதுவரையில் எப்படிப்
பட்ட சூழ்நிலையில் வாழ்கிறார்கள் என்பது ஆண்ட அரசுக்
கும் தெரியும், இப்போது ஆளுகிற அரசுக்கும் நன்றாகத் தெரியும்.

இன்றைக்கு அங்கே உள்ள வறட்சி நிலையில் குடிநீர் இல்லை
சரியான முறையிலே அரிசி கொடுக்கப்படவில்லை என்று குறை
சொல்லுகிறார்கள். ஆனால் 1954 முதல் 1964 ஆம் ஆண்டு



1981 மார்ச் 24] [திரு. கே. தனுக்கோடித் தேவர்]

வரையிலும் புழுத்த அரிசியை க்யூ வரிசையிலே நின்று ரேஷன்
கார்டுகள் மூலமாக ரேஷன் கடையிலே நின்று வாங்கிய நண்பர்
களிலே நானும் ஒருவன் என்பதை நான் இந்த நேரத்திலே தெரி
வித்துக் கொள்கிறேன். புழுத்த அரிசி மட்டுமல்ல, சோளம்,
செஞ்சோளம், உளுத்துப்போன சோளத்தை வாங்கி சாப்பிட்ட
வர்கள் அந்தப் பகுதி மக்கள் என்பதை இந்த மன்றமும் அறியும்
நாடும் அறியும். 1970—71 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட வறுமை
யின் கொடுமையில், வறட்சி நிலையால் எப்படிப்பட்ட பெரிய
பயங்கரமான சூழ்நிலை இருந்தது என்பது எல்லோருக்கும் தெரி
யும். 1973—74 ஆம் ஆண்டிலே நடந்த மிகப் பெரிய வறட்சி
யினால் மக்கள் வாழமுடியாமல் கால்நடைச் செல்வங்களை விற்று
வருங்கால சந்ததியினரை ஏந்திக்கொண்டு தஞ்சை திருநெல்வேலி
மாவட்டங்களுக்குச் சென்று வாழ்க்கை நடத்தினார்கள் அப்படிப்
பட்ட இன்னல்களை அனுபவித்தார்கள் என்பதையும் இந்த
நேரத்திலே நான தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதோ மத்திய அரசு தங்கள் ஒருவருக்குத்தான் சம்பந்தப்பட்
டது என்ற முறையிலே பேசினார்கள். எல்லோருக்கும் மத்திய
அரசிலே உரிமை இருக்கிறது. ஏதோ ஒருவருக்கு மாத்திரம் சொந்
தம் என்பதைப் போல பேசுகிறார்கள், அதைப்பற்றிச் சொல்கிற
போது ஏதோ அவர்களுடைய சொத்தாக அதைக் கருதி மறுப்புக்
கொடுக்கிறநிலைமையில் நாம் இங்கே பார்க்கிறோம். அவர்களுக்கு
மாத்திரம் தான் சொந்தம் என்ற எண்ணம் ஏற்பட்டிருப்பதைப்
போன்று பேசுகிறரர்கள். இந்த நாட்டிலே உள்ள மக்களுக்குச்
சொந்தமான மத்திய அரசை அவர்களுக்கு மாத்திரம் சொந்தம்
என்று எண்ணுவது அவ்வளவு நல்லதல்ல என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். குறிப்பாக இங்கே பேசிய நண்பர்கள் அவரவர்
களுடைய கருத்துக்களைச்சொல்வதற்கு உரிமை படைத்தவர்கள்
இந்த நாட்டின் பிரஜைகளினுடைய வாக்குகளைப் பெற்று
வந்தவர்களுக்கு அந்த உரிமை இருக்கிறது. இந்த அரசு தவறு
செய்தால் தட்டிக் கேட்பதற்கு உரிமை இருக்கிறது. ஆனால்
இப்போது வறட்சி மனிதனைக் கவ்விக்கொண்டிருக்கின்ற நிலை
யில் எந்த நிலையில் போக வேண்டும், எப்படி மக்களைக்
காப்பாற்ற வேண்டும் என்று சொல்வதை விட்டுவிட்டு
எதையெதயோ சொல்லி அரசின்மீது பழி சுமத்துகின்ற சூழ்
நிலையைப் பார்க்கிறபோது மக்களைக் காப்பாற்றுகிற
நிலையில் அவர்களுக்குக் கவலையில்லை எப்படியாவது
இந்த அரசின் மீது பழிபோடுதல் வேண்டும் என்ற
நிலைமையிலேதான் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். நான்
குற்றமாகச் சொல்கிறேன் என்று நினைக்கவேண்டாம் வறுமை
யால் வாடுகின்ற முகவை மாவட்டத்தைப் பற்றி எல்லோரும்
அறிவோம். இதற்கு முன்னால் ஆண்ட அரசும் என்ன செய்தது
என்பதைப் பார்க்க வேண்டும். இப்போது முதுகளத்தூர், கட
லாடி தொகுதிகளிலே மக்கள் குடிதண்ணீருக்காக அலைகிறார்கள்
அப்படி அலைகிற தாய்மார்களின் கண்ணீரைப் பார்த்து ரத்தக்
கண்ணீர் வடித்துவிட்டுத்தான் நான் இங்கே வந்து இருக்கிறேன்.

[திரு. கே. தனுக்கோடித் தேவர்] [1981 மார்ச் 24]

இப்போது ஏழை எளியவர்களின் நல்ல எண்ணத்தைப் பெற்று இருக்கிற இந்த அரசின் தலைவராக இருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் 18 ஆம் தேதி அங்கே சுற்றுப் பயணம் செய்தார்கள். அவர்கள் பார்த்து இருப்பார்கள் மற்ற அமைச்சர்களும் சென்றிருப்பார்கள், அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அங்கே மக்கள் எந்தச் சூழ்நிலையில் வாழ்கிறார்கள்? அவர்கள் இந்த நாட்டிலே பிறக்கவில்லையா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்..

[பிற்பகல் 1—10]

பிழைப்பிற்காகத் தஞ்சை மாவட்டத்திற்குச் சென்ற மக்கள் அங்கேயும் பிழைப்பு கிடைக்காமல் இப்பொழுது நெல்லை மாவட்டத்தை நோக்கிச் சாரிசாரியாகச் செல்கிறார்கள். கால்நடைச் செல்வத்தை இழந்துவிட்டு, தங்களுடைய குடும்பத்தின் வருங்காலச் செல்வத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்திற்குச் சென்றவர்கள் இப்பொழுது நெல்லை மாவட்டம் மதுரை மாவட்டம் ஆகிய மாவட்டங்களை நோக்கிச் செல்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்குவதற்கு அப்பொழுதிருந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தார்கள். இந்த நாட்டின் பிரஜைகள் அவர்களுக்கு எதிராளிகளாக ஆகிவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

ஆனால் இப்பொழுதிருக்கின்ற இந்தத் தமிழக அரசு அங்கேயிருக்கின்ற வறுமையின் கொடுமைகளை அகற்ற வேண்டும். குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்க வேண்டும். ஓராண்டு மழை பெய்தால் பிறகு ஐந்தாண்டுகளுக்கு அங்கே மழை பெய்யாது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அங்கேயிருக்கின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்க, வைகை ஆற்றில் பெரிய திட்டத்தைத் தீட்டி, மக்களுக்கு முதல் கடமையாகச் செய்ய வேண்டும். இந்த ஆண்டு எந்த வகையிலேயாவது தப்பித்துக்கொண்டாலும் கூட அடுத்த ஆண்டாவது நிரந்தரமாகக் குடிதண்ணீர் கிடைக்க இந்த அரசு முன் வர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்குள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் கீழ்நிலையில் உள்ளது. அங்கே இயற்கை பொய்த்து விட்டால் அங்கேயுள்ள மக்களின் வாழ்வும் பொய்த்து விடும் என்பது நாமெல்லோரும் அறிந்த ஒன்று. அவர்களுக்குத் தொழில் வளமும் கிடையாது. நீர் வளமும் கிடையாது. குறிப்பாக முதுகளத்தூர், கடலாடி ஆகிய இரண்டு பகுதிகளும் தொழில் வளமும், நீர்வளமும் இல்லாத பகுதிகளாகும். சுதந்திரமடைந்து இத்தனை ஆண்டுகள்



[திரு. கே. தனுக்கோடித் தேவர்]

1981 மார்ச் 24]

கொடுமை இருப்
கழிந்தபிறகு இந்த அவல நிலைமை, கோரக் பார்த்திருப்பார்கள்
பதை இங்கேயுள்ளவர்கள் தாராளமாகப்
என்று கருதுகிறேன்.

அதிகம் சொல்லத்
அங்குள்ள நிலைமைகளைப்பற்றி நான் உள்ள முதுகளத்தூர்
தேவையில்லை. முகவை மாவட்டத்தில் ஒரு தூதுக் குழுவை
கடலாடி ஆகிய இரண்டு பகுதிகளிலும் அந்த மக்களைப்
அனுப்பி அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து, திட்டங்களைத் தீட்டி,
காப்பாற்றுகின்ற முறையில் பெரிய மக்களாகக் கருதி
அவர்களையும் இந்த நாட்டிலே வாழும் எடுக்க வேண்டுமாய்க்
அவர்களை வாழ வைக்க நடவடிக்கை
கேட்டுக்கொள்கிறேன்.

கொண்டு வரப்பட்டதைப்போல,
நில உச்சவரம்புச் சட்டம் உச்சவரம்பு கொண்டு
நகர்ப் புறங்களிலே செல்வத்திற்கும் சார்ந்திருக்கின்ற அகில இந்திய
வரப்பட வேண்டும் என்று நான் சார்பாகக் கேட்டுக்கொள்
பார்வார்ட் பிளாக் கட்சியின் ஏரைப் பிடித்து வாழுகின்ற
கிறேன். ஏனென்று கேட்டால், ஆனால் அதே நேரத்
தொழிலாளிக்கு 5 ரூபாய் சம்பளம்; தொழிலாளியோ 30 ரூபாய்
தில் நகர்ப்புறத்திலே வாழும் வாழ்க்கை நடத்துகிறார்கள்.
வரையில் சம்பளம் பெற்று கொஞ்சம் நேரம்
(மணியடிக்கப்பட்டது) எனக்கு இன்னும் வறண்டு இருக்கிறது
கொடுங்கள்; எங்கள் பகுதி ஈரமில்லாமல் எனவே, நில உச்ச
அதைப்பற்றிச் சொல்ல வேண்டாமா? போன்று, நகரப்
வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டதைப் புறங்களிலே
புறங்களிலே உள்ள பொருள்களுக்கும், நகரப் கொண்டு வரு
உள்ள முதலாளி வர்க்கத்திற்கும் உச்ச வரம்பு இந்த மாநில
மாறு மத்திய அரசைக் கேட்க வேண்டுமென்று
அரசை நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

தொகுதியில் துயர் தணிப்பு வேலை
குறிப்பாக என்னுடைய வருகின்ற நேரம் வரையில்
19-ஆம் தேதி நான் புறப்பட்டு அந்தத் தொகுதியைப்
துரிதப்படுத்தப்படவில்லை. என்னுடைய அரசு ஏழை எளிய
பொறுத்தவரையில், இந்தத் தமிழக தலைவராக இருக்
மக்களின் நம்பிக்கையைப் பெற்றிருக்கின்ற கொண்டிரு
கின்ற புரட்சித் தலைவரை முதலமைச்சராகக் தீட்டி அந்த
கின்ற இந்த அரசு நல்லதொரு திட்டத்தைத் கேட்டுக்கொண்டு அமர்
மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று
கிறேன். வணக்கம். ஜெய்ஹிந்த்.

## 4. அறிவிப்பு

### பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

| | |
|---|---|
| 25—3—1981 (புதன்) முதல் 30—3—1981 (திங்கள்) முடிய | ஏற்கனவே அறிவித்தபடி—மாறுதல் இல்லை. |
| 31—3—1981 (செவ்வாய்) 1—4—1981 (புதன்) | மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்:<br>28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.<br>39—சாலைகளும் பாலங்களும்.<br>52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 2—4—1981 (வியாழன்) 3—4—1981 (வெள்ளி) | ஏற்கனவே அறிவித்தபடி.<br>36—பாசனம்.<br>50—பாசனம் குறித்த மூலதனச் செலவு |
| 4—4—1981 (சனி) | அரசினர் சட்ட முன் வடிவுகள்.<br>1. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு கால் நடை மருத்துவர்கள் பதிவு (திருத்த) சட்டமுன்வடிவு.<br>2. கோவை மாநகராட்சி சட்டமுன் வடிவு.<br>3. 1981ஆம் ஆண்டு சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு.<br>4. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர நாட்டுப்புற திட்ட அமைப்பு (திருத்த) சட்டமுன்வடிவு.<br>5. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மின் சார வாரியம் (நிலுவைத் தொகைகளை வசூலித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு. |
| 5—4—1981 (ஞாயிறு) | விடுமுறை. |
| 6—4—1981 (திங்கள்) 7—4—1981 (செவ்வாய்) | அரசினர் சட்ட முன்வடிவுகள்.<br>1. 4—4—1981 அன்று முடிவு பெறாது விடுபட்ட சட்ட முன் வடிவுகள்.<br>2. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்ட முன் வடிவு. |





மற்ற மானியக் கோரிக்கைகள் என்று எடுத்துக் கொள்ளப் படும் என்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்கனவே அறிவித்தபடி 31—3—1981, 1—4—1981, 2—4—1981 மற்றும் 3—4—1981 அன்று எடுத்துக் கொள்ளப் பெறும் மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களைக் கொடுப்பதற்கான கடைசி நாள்—26—3—1981, பிற்பகல் 3 மணி.

ஏனைய மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பதற்கான கடைசி நாள் 28—3—1981 பிற்பகல் 3 மணி.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

### 3. வரவு-செலவுத் திட்டம், 1981-82 விவாதம்—தொடர்ச்சி.

*திரு. ஆர். ரங்கசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடுமையான வறட்சி தமிழகத்தைக் கவ்வியுள்ள இந்த நேரத்தில் போர்க்கால நடவடிக்கையாகத் திட்டங்களைத் தீட்டி, கிராமங்களிலே

[திரு. ஆர். ரங்கசாமி] [1981 மார்ச் 24

குடிதண்ணீர் பிரச்சினையை இந்த அரசு வேகமாகத் தீர்த்து வருகிறது. கிராமப் புறத்திலே இருக்கிற மக்கள் வாழ்க்கை வளம் பெற அங்கேயிருக்கிற குட்டைகளைத் தூர் வாருதல், சாலை அமைத்தல் போன்ற பணிகளை, வறட்சி நிவாரணப் பணிகளாக ஏற்று இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. இந்த நேரத்தில் நம்முடைய மாண்புமிகு நிதி யமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை சிறப்பான முறையிலே வரவேற்கின்ற முறையிலே இந்த அவையிலே வைத்திருக்கிறார்கள்.

நேற்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கை மீது பேசிய திரா விட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் இதிலே ஒன்றுமே இல்லை இது ஒரு சினிமா கம்பெனியின் வரவு செலவு கணக்கு. இது ஒரு கணக்குப்பிள்ளை பட்ஜட் என்று கூறினார்கள். எனக்கு ஒரு சந்தேகம் எழுந்தது. சென்னையிலேயிருக்கிற அஞ்சுகம் பிக்சர்ஸ் போன்ற சினிமா கம்பெனிகளுக்கு மாண்புமிகு உறுப்பினர்தான் கணக்குப் பிள்ளை யாக வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாரோ என்ற சந்தேகம் கூட எனக்கு இந்த நேரத்திலே எழுந்தது.

மத்திய அரசு இந்த நேரத்திலே கோதுமைக்கு ரூ. 117 என்று இருந்ததை, ரூ. 130 ஆக உயர்த்தியது. கோதுமையை விட அதிக செலவு செய்து, அதிக உழைப்பைத் தந்து நெல்லை விளைவிக்கின்ற தமிழக விவசாயிக்கு ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 105 கிடைக் கிறது. தெளிவாக சொல்லப் போனால் இது ஒரு கண்ணுக்கு வெண் ணெயும் ஒரு கண்ணுக்குச் சுண்ணாம்பும் என்ற ஒரு நிலையை மத்திய அரசு கடைப்பிடிக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைச் சுட்டிக்காட்டுகிற வகையிலே கோதுமைக்கு நிகராக நெல்லுக்கு விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று விவசாயிகள் அரசான இந்தத் தமிழக அரசு, புரட்சித் தலைவருடைய அரசு, கோதுமைக்கு நிகராக விலையை உயர்த்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறது.

வேளாண்மைத் துறையை பொறுத்தமட்டிலே சிறப்பாக திட்டங்களை இந்த அரசு அறிவித்திருக்கிறது. சொந்தப் பிள்ளை சோறு போடவில்லையென்றாலும், தென்னம்பிள்ளை சோறுபோடும் என்று கிராமத்திலே இருக்கிற ஏழை விவசாயிகள் சொல்வார்கள். இந்த அரசு, ஆண்டுக்கு 103 கோடி தேங்காய் கள் உற்பத்தி செய்வதை 5 ஆண்டுகளில், 153 கோடி தேங்காய்களாக உற்பத்தியைப் பெருக்க திட்டமிட்டு இருப்பது வரவேற்க வேண்டிய திட்டம் என்று இந்த நேரத்திலே குறிப்பிடுகிறேன்.



1981 மார்ச் 24] [திரு. ஆர். ரங்கசாமி]

அதே போல் சமையல் எண்ணெயை நாம் வெளி நாடுகளி லிருந்து வெளி மாநிலங்களிலிருந்து வாங்கி வருகின்றோம். நமது தேவையை நாமே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில், பாமாலின் ஆயில் உற்பத்தியைப் பெருக்க ஒருவித பனைமரங் களைப் பயிர் செய்யும் திட்டம் சிறப்பான திட்டமாகும். அது சுய தேவைகளைப் பூர்த்தி செய்ய எடுத்துள்ள புரட்சிகரமான முன்னேற்ற முயற்சியாகும் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிட விரும்புகிறேன். பாமாலின் ஆயில் கிடைக்கும் பனை மரங்களைப் பயிர் செய்வதற்கான வாய்ப்புகள் என்னுடைய தொகுதியிலே மலைப் பகுதியிலே இருக்கிறது. அந்தப் பகுதியை அதற்காகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே, நான் ஒரு கோரிக் கையாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

சிறு உழவர் மேம்பாட்டுத் திட்டம், ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்டத்தோடு, 1980 அக்டோபர் முதல் இணைக்கப் பட்டிருக்கிறது. இந்த ஆண்டு எல்லா வளர்ச்சி வட்டாரங்களி லும், ரூ. 20.64 கோடி செலவிடப்பட்டுள்ளது.

[பிற்பகல் 1-20]

இதன் மூலம் சிறு விவசாயிகளுக்கு மிகப் பெரிய நன்மை ஏற் பட்டுள்ளது. கிணறு வெட்டக் கடன், பாம்பேரி கட்டக் கடன், பம்ப் செட்டு வைக்கக் கடன், பைப்லைன் போட கடன், வீடு கட்ட கடன், வண்டி மாடு வாங்கக் கடன், ஏன் முன்பு வாங்கிய அதிக வட்டிக்கு வாங்கிய கடன், பூமியை மீட்க முடியாது இருந்த அந்த பூமியை மீட்பதற்குக் கடன், பக்கத்திலே இணையாக உள்ள பூமியை வாங்குவதற்குக் கடன், இப்படி பல நன்மைகளை சிறு விவசாயிகளுக்கு இந்த அரசு செய்வ தோடு, சிறு விவசாயிகளுக்கு 25 சதவீதமும், குறு விவசாயி களுக்கு 33 சதவீதமும் மானியம் அளிக்கும் திட்டம், இது வரையில் எந்த அரசும் செய்யாத ஒரு பெரும் திட்டம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1981—82-ல் 29.60 லட்சம் செலவில் கால்நடை தீவிர வளர்ச்சித் திட்டம் அமைப்பதும், பால் உற்பத்தியைப் பெருக்க வும் 19.08 லட்சம் செலவில் 20 கால்நடை மருந்தகங்களை தொடங்குதல், 4 கால்நடை மருந்தகங்களை மருத்துவ மனை களாக மேம்படுத்துதல் போன்ற பணிகள் மிகவும் சிறப்புள்ள தாகும். பால்வளம் பெருக்கத் திட்டமிடப்படுகிறது. ஆனால் கறவை இனத்தைப் பெருக்க வகை செய்வதில்லை. அந்தக் குறையைப் போக்க இந்தத் திட்டம் பயன்படுகிறது. அத்தோடு கோழி வளர்க்க 31.53 கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ளது

[திரு. ஆர். ரங்கசாமி] [1981 மார்ச் 24

இது கிராமப் புற விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் வளம் பெறும் திட்டமாகும் என்று ஏழை விவசாயப் பெருங்குடி மக்கள், புரட்சித் தலைவரை தங்கள் இதயத்தில் வைத்து வாழ்த்துகின்றார்கள்.

அதே போல ஆதிதிராவிடர்கள் நலன் காக்க 3 கோடி ரூபாயை மானியமாகவும், கிராமப்புற வீட்டுவசதி சங்கத்தின் மூலம் கடன் கொடுப்பதற்கு மானியம் வழங்குவதற்கு இந்த அரசு வகை செய்திருக்கிறது.

கல்விக்காக 10.80 லட்சம் ரூபாய் வழங்குவதோடு கூட்டுறவுத் துறையின் மூலம் ஆதிதிராவிடர்களை உறுப்பினர் ஆக்கி நபர் ஒன்றுக்கு 100 ரூபாய் மானியம் கொடுத்து பயிர்க் கடன் பெறவும், பால் பண்ணை வைக்கவும், கோழி வளர்க்கவும் கடன் பெற வழிவகை செய்கிறது. கிராமப்புற பொருளா தாரத்தை வளர்க்க இது மிகவும் சிறப்பான திட்டமாகும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

6ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 168 கோடி ரூபாய் பாசனத் திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 26.62 கோடி ரூபாய் செலவு செய்து 20,500 ஏக்கர் நிலம் பாசனம் பெற வகை செய்திருப்பது பாராட்டுக்குரியது. என்னுடைய தொகுதி யில் பாசனத்திற்கான ஆய்வுகள் கடந்த 10 ஆண்டுகளாக அக்கூர்ஜோரை, நமமலை, புதுபீர்கடவு, குய்யனூர், பெரும் பள்ளம், கோம்புபள்ளம், பெரிய குளம், புளியங்கோம்பை, கெம்பநாய்க்கன்பாளையம், பெரும்பள்ளம், கணக்கம்பாளையம், போன்ற திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பின்தங்கிய தொகுதியான என் னுடைய தொகுதியில் உள்ள இந்த திட்டங்களை நிறைவேற்றித் தரவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையைப் பொருத்தமட்டில், இந்த அரசு எடுத்திருக்கும் நிலை தமிழக மக்களுக்குக் கிடைத்திருக்கும் புரட்சிகரமான திட்டம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். புதுமையும் இல்லை புரட்சியும் இல்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் கருத்து தெரிவித்துள்ளார். அவருடைய பாணியில் எது புரட்சி என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் என் தலைவன் புரட்சித் தலைவரின் பாணியிலே இதுதான் புரட்சி என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1969 ஆம் ஆண்டு முதல் 1976 வரையில் விவசாயிகள் மின் இணைப்பு கேட்டு போட்ட விண்ணப்பங்கள் சுமார் 2½ லட்சம். அவர்களுக்கு 1977 வரையில் மின் இணைப்பு கொடுக்கப் படவில்லை. புரட்சித்



1981 மார்ச் 24] [திரு. ஆர். ரங்கசாமி]

தலைவர் ஆட்சியில் சென்ற ஆண்டு மட்டும் 30,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க இலக்கிடப்பட்டது. 30,742 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் பட்டது. 1981–82ஆம் ஆண்டில் இன்னும் 30,000 கிணறு களுக்கு மின் இணைப்புக் கொடுக்க இந்த நிதிநிலை அறிக்கையில் திட்டமிடப்பட்டுள்ளது. இதைத்தான் கிராமப் புரட்சி என்று நாங்கள் சொல்லுகிறோம்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மொத்த ஒதுக்கீடான 3,150 கோடியில் 1,023 கோடி ரூபாய் மின்சாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1981–82ஆம் ஆண்டில் மட்டும் மின்சார வாரியத்துக்கு 90.58 கோடி ரூபாய் மானியமாக வழங்கப் பட்டிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்று.

மின்சாரத் துறையில் இந்த ஆட்சி காட்டும் அக்கறை எந்த வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஊழல் அற்ற ஆட்சி என்பதற்குச் சான்று என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு ஒரு விளக்கம் தரக் கடமைப்பட்டு இருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போது, இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள், அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஒருவன் விண்ணப்பம் போட்டு மின்சார இணைப்புப் பெற 5 ஆண்டுகள் ஆனாலும் ஆகும். உடனே மின்சார இணைப்பு கிடைக் காது. மின்சார இணைப்பு வேண்டும் என்று சொன்னால் கொடுக்க வேண்டிய இடத்தில் கொடுக்கவேண்டியதைக் கொடுத் தால் 5 மாதத்திற்கு முன்பு விண்ணப்பம் போட்டவனுக்குக்கூட மின்சார இணைப்புக் கிடைத்துவிடும். (குறுக்கீடு) அப்படிப்பட்ட புரட்சிதான் அன்றையதினம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. ஆனால் புரட்சித் தலைவர் ஆட்சியில் என்ன நடைபெற்றுவருகிறது என்று சொன்னால், 1969ஆம் ஆண்டு காலத்தில் இருந்து 1977ஆம் ஆண்டு வரை மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் போட்டவர்களின் பட்டியலைத் தயாரித்து, வரிசைக்கிரமமாக அதனைப் பரிசீலனை செய்து கிட்டத்தட்ட 29,742 பாசனக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் பட்டு இருக்கிறது. இதைத்தான் மக்கள் புரட்சி என்று நாங்கள் சொல்கிறோம். இது தான் புரட்சித் தலைவரின் சாதனை என்று குறிப்பிடுகிறோம்.

தொழில் துறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு சிறப்பான ஒரு அணுகுமுறையை வைத்துக்கொண்டு இருக்கிறது என்பதற்கான எடுத்துக்காட்டுதான் இப்போது இருக்கும் தொழிற்சாலைகள் சிறப்பான முறையில் இயங்குவது என்று சொன்னால் அது மிகையாகாது. அத்தோடு, வரும் ஆண்டு களில் தமிழகத்தில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை 32 கோடி ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளதும், அதனால் 1000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதும் சிறப்பான

[திரு. ஆர். ரங்கசாமி] [1981 மார்ச் 24

திட்டமாகும். இத்திட்டத்திற்கான. அனுமதியை மத்திய அரசு கொடுக்காமல் இருக்கிறது. இங்கே இருக்கும் மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் அந்த அனுமதியை உடனடியாகப் பெற்றுத் தர முயற்சி எடுத்து, தமிழக அரசுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன.

அடுத்து, 20 கோடி ரூபாய் செலவில் வெடிமருந்து தொழிற்சாலை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது வரவேற்கத்தக்க தொன்றாகும். கூட்டுறவுத் துறையில் 3 நூற்பாலை தொடங்கும் திட்டமும், நாள் ஒன்றுக்கு 1,250 டன் கரும்பு பிழியும் சர்க்கரை ஆலை ஒன்று 1 கோடியே 70 லட்சம் செலவில் பெரியார் மாவட்டத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. என்னுடைய தொகுதியில் கரும்பு பயிரிடும் விவசாயிகள் அதிகம் இருப்பதால், அந்த ஆலையை என்னுடைய தொகுதியில் அமைக்க வேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் தனக்கென திட்டமிட்டு தன்னிறைவு பெற்றார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் கிராமப்புற மக்கள் வாழ்வு வளம் பெற தன்னிறைவுத் திட்டம் தீட்டி அதனை நிறைவேற்றி வருகிறார்கள். இன்றைய தினம் இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் முறையாக தன்னிறைவுத் திட்டம் என்ற புரட்சிகரமான திட்டத்தை அறிவித்ததே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தான் என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்கிறேன். இத்திட்டத்தின் மூலம் நடப்பு ஆண்டில் 69 வளர்ச்சி வட்டாரங்கள் பயன் அடையும். குடிநீர் வழங்கல், இணைப்புச்சாலை அமைத்தல், மதகுபாலங்கள் அமைத்தல், ஆதித்திராவிடர் குடியிருப்புகளுக்கு பாதை அமைத்தல், சிறு பாசன ஆதாரங்களை மேம்படுத்துதல், கிராமப்புற மருந்தகங்கள் அமைத்தல், மகப்பேறு குழந்தைகள் நல விடுதிகள் அமைத்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், ஆதித் திராவிடர் குடியிருப்பு கட்டுதல், கிராம வீட்டு வசதி சங்கத்தின் மூலம் வீடு கட்டுதல் ஆகிய திட்டங்கள் எல்லாம் இந்தத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட இருக்கின்றன. என்னுடைய தொகுதியான சத்தியமங்கலத்தில் தன்னிறைத் திட்டம் நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்பட 40 லட்சம் ரூபாய் செவிடப்படவுள்ளது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். பல முனைப்புத் திட்டங்கள் அந்தப் பகுதியில் நிறைவேற்றப்பட்டது.

கிராமத் தொழில்கள் வளர தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம் ரூபாய் 27 கோடி கடன் வழங்குவது, தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் மூலம் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள மூலப் பொருள்களை வழங்குவது, கதர் கிராமத் தொழில்கள் பிரிவு விற்பனையை 45 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்துவது, 13, 19 கோடி ரூபாய் அளவிற்கு திட்ட நிதி



[திரு. ஆர். ரங்கசாமி]

1981 மார்ச் 24]

ஒதுக்கீடு செய்வது ஆகியவைகள் மூலம் கிராமங்களில் சிறு தொழில்கள் பெருக வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் செருப்புத் தைப்பவர்கள், தச்சுத் தொழிலாளர்கள், கூடை பின்னும் தொழிலாளர்கள், பனை, வெல்லம் தயாரிக்கும் தொழிலாளர்கள், சுண்ணாம்புச் சூளை, வைப்பவர்கள், இன்னும் பல தரப்பட்ட தொழில் செய்யும் ஏழைகளுக்கு கடன் வழங்குவது, மானியம் வழங்குவது ஆகிய பணிகள் வளர்ச்சி அடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி புரட்சிகரமான திட்டங்கள் பல்வற்றைச் செய்து கொண்டு வருகிற இந்த அரசைப்பார்த்து, ஒன்றும் செய்யவில்லை என்று எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் பேசுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. ஜே. எஸ். இராசு அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள்—நான் எதிரிலே உள்ள நிதி அமைச்சரைப் பார்க்கிறேன்., முதலமைச்சரைப் பார்க்கிறேன், ஏதோ அவர்கள் முகம் வாடி விட்டது, இந்த நிதிநிலை அறிக்கை மீது திருப்தி இல்லை என்கிற வகையில் வருத்தத்தோடு அவருக்கு உரிய பாணியில் தெரிவித்தார்கள். அந்த அளவிற்கு அவர்கள் ஆராய்ந்து இருக்கிறார்கள். நான் கூட ஆராய்ந்து பார்த்தேன்.

[பிற்பகல் 1-30].

எதிரிலே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர் தேவை இல்லாமல் சிரிக்கிறார்; தானே அமைதி ஆகிறார். ஏதோ ஆர்வத்தோடு பேசுவது போல பேசுகிறார்; திடீரென்று முகத்தைத் தொங்கப் போடுகிறார் (குறுக்கீடுகள்). ஒரு வேளை எதிர்க்கட்சித் தலைவர் தங்களுக்கு ஆதாரம் இல்லாமல் போனால் என்ன செய்வது என்று நினைக்கிறாரோ ........

திரு. ஜே. எஸ். இராசு: சார், பாயிண்ட் ஆப் ஆர்டர் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் பேசுவது தேவையா? ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துக்கிருஷ்ணன் பேசும்போது, சில பகுதிகள் அவைக் குறிப்பில் இடம் பெறலாமா என்ற விவாதம் ஏற்பட்டது. அப்போது, அவைக் குறிப்பைப் பார்த்து தீர்ப்பு அளிப்பதாகச் சொன்னேன். இப்போது என்னுடைய தீர்ப்பைத் தெரிவிக்கிறேன்.

* * *

என்ற பகுதியையும், அதை ஒட்டி வருகிற பகுதிகளையும் இந்த பெயர்கள் வருகிற பகுதிகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி உத்தரவிடுகிறேன்.

(*) மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[பேரவைத் துணைத்தலைவர்] [1981 மார்ச் 24

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 25—3—1981 ஆம் தேதி காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

5. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

233. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படத்) துறையின் 5—6—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1591 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

234. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் (திரைப்படங்கள்) துறையின் 24—4—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1295 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ் நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

235. தருமபுரி மாவட்டம் ஹரூர் திருமதி டி. முத்துலட்சுமிக்குச் சொந்தமான டி.எம்.கியூ. 901 ஆம் பதிவெண்ணுடைய பயணியர் சிறு பேருந்தைப் பொறுத்த வரையில் செலுத்தத் தக்க வரியைக் குறைப்பது குறித்தும், செலுத்தத் தக்க வரியின் மீது மேல் வரி விதிப்பது குறித்தும் உள் துறையின் (போக்கு வரத்து-1) 12—1—1981 ஆம் தேதியிடப் பெற்ற 68 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகள் வரி விதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

236. தமிழ்நாடு 1944 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வருவாய்த் துறையின் 26—12—1980 ஆம் தேதியிடப் பெற்ற 2838 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1943 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரர் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் [illegible]/1943) [illegible] (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].



1981 மார்ச் 24]

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பதிப்புரிமை எழுத்தாளர்

237. தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு பதிப்புரிமை எழுத்தாளர்
உரிம விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள்-
சமய அறக்கட்டளைகள் துறையின் 21—1—1981 ஆம் தேதியிடப்
பெற்ற 57 ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு
[1908 ஆம் ஆண்டு பத்திரப் பதிவுச் சட்டத்தின் (மத்தியச்
சட்டம் 16/1908) 89 'அ' (4) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப்பெற்றது].

238. பல்லவன் பொறியியல் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்
கான ஐந்தாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள்
சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/956) 619-'அ' பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

93. 1980—81 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை
மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ்
ஆங்கிலம்).

94. 1980—81 ஆம் ஆண்டில் கூடுதல்செலவிற்கான மானியக்
கோரிக்கைகளின் அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்).

*95. 1980—81 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள்
பற்றிய மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்
செழியன் அவர்களின் உரை (தமிழ், ஆங்கிலம்).

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புதன்கிழமை, 1981 மார்ச் 25.

பங்குனி 12, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.''

கற்றவரின்முன் தாம் கற்றவைகளை அவருடைய மனத்தில் பதியுமாறு சொல்லவல்லவர், கற்றவர் எல்லாரிலும், கற்றவராக மதித்துச் சொல்லப்படுவர்.

## (1) ஒழுங்குப் பிரச்சினை.

### வினா-விடை நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவையில் இல்லாதது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினா எண்கள். 472 மற்றும் 473 ஆகியவை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன. அடுத்து வினா எண். 474....

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, ஒரு ஒழுங்கு பிரச்சினை, கேள்வி நேரம் ஆரம்பித்துவிட்ட பிறகும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் யாருமே வரவில்லை. மாண்புமிகு நிதியமைச்சர் மட்டும்தான் இங்கே வந்திருக்கிறார். ஆகவே தலைவர் அவர்கள் இதற்கு ஏதாவது ஒரு வழிவகை செய்தால் நன்றாக இருக்கும். அவையைக் கால் மணிநேரம் ஒத்திவைக்கலாமா ? அல்லது வேறு ஏதாவது செய்யப் போகிறீர்களா ?

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, கேள்வி போடப்பட்டிருக்கின்றது. 'நோ மினிஸ்டர் இஸ் அவய்லபிள். லீடர் ஆஃப் தி ஹவுஸ்' மட்டும் தான் இருக்கிறார். அவர் கவர்மென்டை ரெப்ரசென்ட் செய்கிறார். கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டிய ஒரு அமைச்சர் கூட இல்லாவிட்டால் அது வெரி சீரியஸ் மேட்டர். மினிஸ்டர்ஸ் யாரும் இல்லை என்று சொன்னால் அது 'அன்ப்ரிசிடென்டட் சிட்சுவேஷன்' ஆகவே

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 25

அமைச்சர்களுக்கு ஒரு பாடமாக இருக்கின்ற வகையில் அவையை
அட்ஜர்ன் பண்ணி அவர்கள் வந்த பிறகு ஆரம்பிக்கலாம். அப்
போதுதான் 'மினிமம் ரெஸ்பெக்ட் டு தி ஹவுஸ்' இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, இப்படிப்பட்ட ஒரு நிலை
ஏற்பட்டது மிகவும் வருந்துவதற்குரியது தான். குறிப்பிட்ட
நேரத்தில் உரிய அமைச்சர்கள் வரவேண்டும் என்பதுதான் நியதி.
எதிர்பாராத வகையில் இவ்வாறு ஏற்பட்டுவிட்டது. இது
வரையில் இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது இல்லை.. (குறுக்கீடு)
. . ...மூலக்கேள்விக்கு வேண்டுமானால் என்னால் பதில் சொல்ல
இயலும். ஆனால் துணைக்கேள்விகளுக்கு சம்பந்தப்பட்ட
அமைச்சர்தான் பதில் சொல்ல இயலும். ஆகவே அவையை
அரை மணி நேரம் ஒத்திவைத்துவிட்டு பிறகு மீண்டும் கூட்டும்படி
கேட்டுக்கொள்கிறேன். அதோடு உரிய அமைச்சர்கள் உரிய
நேரத்தில் வந்து சேரவேண்டும் என்ற ஆணையைத் தாங்கள்
பிறப்பிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அரை மணி
நேரம் ஒத்திவைக்கப்படுகிறது. 9-30 மணிக்கு பேரவை
மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை காலை 9-04 மணிக்கு ஒத்திவைக்கப்
பெற்றது.

* * * *

முற்பகல் 9-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத்
தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை
மீண்டும் கூடியது.

## 1. ஒழுங்குப் பிரச்சினை—தொடர்ச்சி.

### வினா-விடை நேரத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவையில் இல்லாதது·

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர்கள் கால தாமதத்தைத் தவிர்க்க வேணடும் என்பதற்கு
ஒரு குறள் சொல்லி அவையை ஆரம்பியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறள் எல்லாம் முன்பே
சொல்லி அவையை ஆரம்பித்தாகிவிட்டது. அமைச்சர்கள்
இல்லை என்று ஒரு அரை மணி நேரம் தள்ளி வைக்கப்பட்டதே
தவிர வேறு ஒன்றும் இல்லை. திரும்பவும் குறளுடன் ஆரம்பிக்க
வேண்டிய அவசியம் இல்லை.



981 மார்ச் 25]

திரு. ரா. உமாநாத் : Mr. Speaker, Sir, it is a grave
misconduct on the part of the Ministers. என்டையர் ஹவுசுக்
தம் இது இர்ரெஸ்பான்சிபிலிட்டியைக் காட்டுகிறது. The
Ministers owe an explanation to this House. After all the
Prestige of the House is involved. ஏன் சரியான நேரத்திற்கு
வரவில்லை என்று அமைச்சர்கள் விளக்கம் கூற வேண்டும்.
அவையிடம் அப்பாலஜி வாங்கவேண்டும். Let tnem apologise
to this House.

இரண்டாவது, அவை முன்னவர்கள் அவர்கள் அமைச்சர்
களை சரியான நேரத்திற்கு வரவேண்டும் என்று நீங்கள் கேட்டுக்
கொள்ள வேண்டும் என்று சொன்னார். நாங்கள் வேண்டு
மானால் உங்களைக் கேட்டுக் கொள்ள வேண்டும். But
it is the responsibility of the Leader of the House to ensure
the presence of the Ministers here, and it is also the Chief Minister's
responsibility.

ஆனால் அவர்கள் உங்களைக் கேட்கிறார்கள். ஆனால்
எப்படியும் அமைச்சர்கள் காலதாமதத்திற்கு ஹவுசிடம் அப்பா
லஜி வாங்க வேண்டும் என்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்
கிறேன்.

Thiru N.S.V. CHITHAN : The Ministers must explain
their late-coming to this House. They must apologise.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்கள் கால
தாமதத்திற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டு, பிறகு கேள்விக்
கான விடையை ஆரம்பிக்கலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்
களே, இனிமேல் இப்படி நடைபெறாமல் இருப்பதற்கு தாங்கள்
நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிமேல் இப்படிப்பட்ட
சம்பவங்கள் நடக்காது என்று நானே சொல்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர்களின் காலதாமதத்தினால்தான் ½ மணி நேரம்
அவை ஒத்திவைக்கப் பெற்றது. அதற்கு அவர்கள் விளக்கமும்
சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் அதைத்
தானே சொல்லி வந்தார்கள். அதை நீங்கள் ஏன் இவ்வளவு
காலதாமதமாக எழுப்புகிறீர்கள்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே,
வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கேள்வி இருக்கிறதே.
அவர் வரவில்லையே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் காலை 9 மணிக்கே வந்திருந்தால் இதற்கு விளக்கம் கொடுத்திருப்பதை அறிந்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினாவிற்கு முன்னால், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் வினாக்கள் இரண்டு இருந்தன. அதுவுமல்லாமல் நான் வருகிறபோது, வழியில் என்னைச் சந்தித்து, என் காரை நிறுத்தி, கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் பெடரேஷனைச் சேர்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்னையைப் பற்றி எடுத்துரைத்தனர். அதனால் ஒரு பத்து நிமிடம் கால தாமதம் ஆகிவிட்டது. அதனால் நான் குறிப்பிட்ட நேரத்தில் வரமுடியாமல் போய் விட்டது. இது போன்ற நிகழ்ச்சிகள் இனி மேற்கொள்ளாதவாறு பார்த்துக் கொள்வது அவைக்கு நல்லது என்று நானும் கருத்து தெரிவித்துக் கொண்டு. . . .(குறுக்கீடு).

Thiru N.S.V. CHITHAN : The Hon. Minister must apologise to the House.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நான் இன்னும் முடிக்கவில்லை. அத்தகைய நிகழ்ச்சிகள் மீண்டும் நடைபெறாதவாறு நானும் ஒத்துழைப்பேன் என்று கூறி என்னுடைய பதிலைக் கூறுகிறேன். . . .(குறுக்கீடு, கூச்சல் குழப்பம்).

Thiru N.S.V. CHITHAN : This House is supreme. The Hon. Speaker has directed the Minister to apologise.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவித்துவிட்டு பதிலை ஆரம்பிக்கலாமே.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு முன்னால் உள்ள வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் இரண்டு கேள்விகளும் எடுத்துக் கொள்ளப்பெறவில்லை என்பது எனக்குத் தெரியாது. இடையிலே கன்ஸ்யூமர்ஸ் கோவாப்பரேட்டிவ் பெடரேஷனைச் சேர்ந்த தொழிலாளர்களைச் சந்திக்க நேர்ந்ததினாலும் ஒரு பத்து நிமிடம் காலதாமதம் ஆகிவிட்டது. ஒத்திவைக்கப்பெற்ற கேள்விகளைப்பற்றி எனக்குத் தெரியாது. ஆதலால் என்னுடைய வினாக்கள் வருவதற்குள் வந்துவிட வேண்டும் என்றுதான் நான் வந்தேன். நடுவில் ஏற்பட்ட 10 நிமிட காலதாமதத்திற்கு எனக்கு சம்பந்தம் இல்லை என்றாலும், அவை அதன் காரணமாக ஒத்திவைக்க நேர்ந்ததற்கு வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.



## 2. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம்.

*வினா எண் 474.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் வெங்கடேஸ்வரபுரம் கிராமத்தில் சிறு விவசாயிகள் இறவை நீர்ப்பாசன கூட்டுறவுச் சங்கம் அமைக்க 1972ஆம் வருடத்திலே அனுமதி கொடுத்தும் மேற்படி சங்கம் நாளது தேதிவரை ஆரம்பிக்கப்படாமல் ஏன் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : வெங்கடேஸ்வரபுரம் சிறு விவசாயிகள் இறவைப் பாசன கூட்டுறவு சங்கம் (எஸ்.பி.எல். 17) 12–6–1972 அன்று பதிவு செய்யப்பட்டு, 22–6–1972-லிருந்து வேலை துவக்கப்பட்டது. எனவே சங்கம் இன்னும் ஆரம்பிக்கப் படாமல் உள்ளது என்று கூறியிருப்பது சரியன்று.

திரு. இரா. தாமரைக்கனி : இந்தக் கேள்வியைப் போடும் போது இந்தச் சங்கம் துவக்கப்படவே இல்லை. இப்போது தான் இந்தச் சங்கம் கேள்விக்காக துவங்கப்பட்டிருக்கிறது. ஆதலால், இதுவரை, ஒன்பது ஆண்டுகளாக இந்தச் சங்கம் துவங்கப்படாமல் இருந்ததற்கு காரணமாக இருந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது சரியல்ல. இந்தச் சங்கம் 22–6–1972-லேயே துவங்கப்பட்டுவிட்டது.

### டி.யூ. சி. எஸ். நிர்வாகிகள் தேர்தல்.

*வினா எண் 475.—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டி.யு.சி.எஸ்.-ல் கடந்த சில ஆண்டுகளாக பங்குதாரர்கள் அடங்கிய நிர்வாகிகள் தேர்தல் நடைபெறவில்லை என்பதை அறிந்து தேர்தல் நடத்த அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில் தேர்தல் எப்போது நடத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) மற்றும் (ஆ
1980ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்ட மு
வடிவு சட்டமாக்கப்பட்ட பின்பு கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகிக
தேர்தல் நடைபெறும். அவ்வாறு ஏனைய சங்கங்களுக்குத் தேர்த
நடைபெறும்போது டி,யு.சி.எஸ்.-க்கும் நிர்வாகிகள் தேர்த
நடைபெறும்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே
1904 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட இந்த டி.யூ.சி.எஸ்.-
நிர்வாகிகள் தேர்தல் நடத்தாததால் ஏராளமான நஷ்டம் ஏ
படுவது அரசுக்குத் தெரியுமா ? அதைத் தவிர்ப்பதற்கு உடன
யாக தேர்தல் நடத்தப்படுமா ? பொதுவாக நஷ்டம் ஏற்ப
வதற்குக் காரணம், உதாரணத்திற்காகச் சொல்வேன், சென்னை
பெஸண்ட் நகரில் ஒரு டி.யூ.சி.எஸ். அங்காடி இருக்கிறது
அது ஏற்கனவே நஷ்டத்தில் ஓடுகிறது. பக்கத்தில் ஏறக்குறைய
ஆறாயிரம் ரூபாய்க்கு ஒரு கட்டடத்தை வாடகைக்கு எடுத்து
ஒரு ஆண்டு காலமாக அது மூடிக் கிடக்கிறது. ஏறக்குறைய
மூன்றரை இலட்சம் ரூபாய் செலவில் அதை அலங்கரிக்க ஏற்பாடு
செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இப்படிப்பட்ட
நிர்வாகக் கேடுகள் இருப்பதால்தான் டி.யூ.சி.எஸ். நஷ்டத்தில்
ஓடுகிறது. ஆகவே அதை கவனிப்பதற்காக பொதுமக்களால்
தேர்ந்தெடுக்கப்பட்ட, பங்குதாரர்களைக் கொண்டு, நிர்வாகி
களைத் தேர்ந்தெடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : டி.யூ.சி.எஸ். கிளை
களுக்கு தற்போதுகூட பொது மக்களுடைய மெம்பர்களுடைய
பிரதிநிதிகள் அடங்கிய ஒரு குழு கூட இருந்து வருகிறது.
ஆனாலும் முறைப்படி தேர்தல் நடந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்பின் கீழ் அந்த நிர்வாகத்தைக் கொண்டு வருகிறபோது
தான் மக்கள் எண்ணங்களைப் பிரதிபலிக்கக் கூடிய அளவிற்கு
நிர்வாகம் இருக்க முடியும் என்று அரசும் நம்புகிறது. அதன்
அடிப்படையில் விரைவில் தேர்தல் நடத்த, வர இருக்கிற சட்டம்
நிறைவேற்றப்பட்டவுடன் தேர்தல் நடத்தப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, தற்போது
டி.யூ.சி.எஸ். எவ்வளவு நஷ்டத்தில் நடைபெறுகிறது ? அங்கே
பணியாற்றுகிற ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல், அடிப்
படை ஊதியம் அவர்களுக்கு அளிக்கப்படாமல் இருப்பது அர
சுக்குத் தெரியுமா ? உடனடியாக அந்த ஊழியர்களுக்கு அடிப்
படைச் சம்பளத்தை நிர்ணயித்து அவர்களுக்குண்டான வசதி
களைச் செய்து கொடுக்க அரசு முன் வருமா?





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : டி.யூ.சி.எஸ். அங்காடி
கள் அனைத்துமே நஷ்டத்தில் இயங்கவில்லை. சில அங்காடிகள்
ஆங்காங்கே டர்ன் ஓவர் குறைவாக இருப்பதால் நஷ்டத்தில்
இயங்கலாம். மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடு
வார்களேயானால் தகவல் தரப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : டி.யூ.சி.எஸ்.-ல் கூட்டுறவுத்
துறையில் கடந்த ஏழு எட்டு ஆண்டுகளாக தேர்தல்கள் நடை
பெறாத காரணத்தால்—மிகச் சிறப்பாக தமிழ்நாட்டில் பெயர்
எடுத்த கூட்டுறவுத் துறையில் தேர்தல்கள் நடத்தப்படவில்லையே
என்று மற்ற மாநிலங்களில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள்.
மிகவும் அறிவார்ந்த தமிழ்நாட்டில் அந்தக் குறைபாடு இருக்கிறது.
ஆகவே டி.யூ.சி.எஸ்-ல் உடனடியாகத் தேர்தல் நடத்த அமைச்சர்
அவர்கள் ஆவன செய்வார்களா ?

(முற்பகல் 9-40.)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, புதிதாகக் கொண்டுவரப்படும் சட்டம்
நிறைவேற்றப்பட்டவுடன், 6 மாத காலத்திற்குள் தேர்தல்
நடத்தப்படும் என்று நான் ஏற்கனவே கூறியிருக்கிறேன். அதை
மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்.

திரு. இரா. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தேர்தல் நடத்துவதற்கு இடையில் உடனடியாக
அனைத்துக் கட்சிகளையும், கூட்டுறவாளர்களையும், கூட்டுறவு
இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் கொண்ட ஆலோசனைக்
குழு அமைத்து, இந்த டி.யு.சி.எஸ். நிர்வாகத்தை சிறப்பாக
நிர்வகிக்க அரசு முன் வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் முதலில் கேட்ட துணைக் கேள்வி, பெசன்ட்
நகரில் இருக்கக்கூடிய அங்காடிக்குப் பக்கத்தில் ஒரு அங்காடியை
உருவாக்குவதற்கு ஏறத்தாழ 6,000 ரூபாய் வாடகை கட்டி
டத்தை எடுத்து, ஓராண்டாக அப்படி வாடகைக் கொடுத்து,
அதை அலங்கரிப்பதற்காக 3½ இலட்சம் ரூபாய் செலவழிக்கப்
பட்டு, வீணாக்கப்பட்டிருக்கிறது. இதைப் பற்றி அரசு
கவனிக்குமா ? இதிலே ஈடுபட்டுள்ள அரசு அதிகாரி மீது நட
வடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது பற்றிய தகவல் எனக்கு கிட்டவில்லை.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சற்று விவரமாக இதைப்பற்றித்
தெரிவித்தால், கண்டிப்பாக கௌ குறித்து நடவடிக்கை எடுக்கப்
படும்.

ஆதி திரா[illegible]விடர்கள் மீது இழைக்கப்படும் குற்றங்களை உடனடி
[illegible] விசாரிக்க தனி நீதி மன்றங்கள்.

*வினா எண். 476 : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:
மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்
களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசனங்கள் மீது இழைக்கப்படும் அட்டூழியங்கள்
சம்பந்தமாக வழக்குகளை விரைவில் விசாரிப்பதற்கு விசேஷ
கோர்ட்டுகளை உடனடியாக அமைக்கும்படியாக மத்திய அரசு
மாநில அரசைக் கேட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) ஆம் ஐயா.

(ஆ) குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் படி 1955 ஆம்
ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழும், இந்திய
தண்டனைச் சட்டக் கோவையின் கீழும், ஆதி திராவிடர்கள்,
பழங்குடியினர் மீது இழைக்கப்படும் குற்றங்களை தனிப்படி
விசாரிப்பதற்கென தனி நீதி மன்றங்கள் அமைக்கவும் அல்லது
மாஜிஸ்டிரேட்டுகள் ஒரு சிலரை நியமிக்கவும் ஆலோசனை
கூறி, இவ்வரசுக்கு இந்திய அரசின் உள் துறை அலுவல் அமைச்ச
கம் 1979 மார்ச்சு திங்களில் எழுதியுள்ளது. இது குறித்து
50 சதவீதம் மத்திய உதவியை அளிக்கவும், மத்திய அரசு
கருதியுள்ளது. இது சென்னை உயர் நீதிமன்றத்துடன் கடிதத்
தொடர்பில் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த நீதிமன்ற அமைப்பு சம்பந்தமாக
உயர் நீதி மன்றத்திற்கு எழுதியிருப்பதாக அமைச்சர் அவர்கள்
கூறினார்கள். வெகு விரைவிலே அமைக்க, இது குறித்து துரித
நடவடிக்கை எடுத்து, சீக்கிரமாக இதை அமைப்பதற்கு ஏற்பாடு
செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. சி .பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆந்திர மாநிலத்தில் கூட, இது போன்று
நடவடிக்கை எடுத்து, நடமாடும் நீதிமன்றங்கள் அமைத்து
இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க உத்தரவிட்டிருக்கிறது. அந்த
அடிப்படையில் நடமாடும் நீதிமன்றங்கள் நிறுவுவதற்கு தமிழக
அரசு ஆய்ந்து வருகிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கப்
படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவர் அவர்களே, நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்க இருப்ப
தாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான் கேட்டுக்
கொள்ள விரும்புவது, குறிப்பிட்ட வழக்குகள் இவ்வளவு நாட்
களுக்குள், மாதங்களுக்குள் முடிவெடுக்கும் வகையிலே விசா
ரணை வேண்டுமென்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை
எடுக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை
தலைவர் அவர்களே, குறிப்பாக ஐ.பி.சி., மற்றும் பிரிவென்ஷன்
ஆப் சிவில் ரைட் ஆக்ட்டின் கீழ் ஆதி திராவிட அரிசன மக்கள்
எல்லாம், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளிலிருந்து
பாதுகாப்புத் தருவதற்கு, குற்றவாளிகளுக்கு கடுமையான
தண்டனை வேண்டும் என்று இருக்கின்ற வழக்குகளின் அடிப்
படையில் அந்தந்தப் பகுதிகளில் தனி நீதிமன்றம் அமைப்பதை
மாநில அரசும், மைய அரசும் ஏற்கிறது. ஆனால், எங்கெங்கு
அமைப்பது என்பது குறித்து உயர்நீதி மன்றத்திற்கு அரசு
கேட்டிருக்கிறது. அந்த பதில் வந்தவுடன், விரைவிலே அது
குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகின்றபோது, இன்னும்
உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையை கேட்டிருப்பதாகச்
சொல்லுகிறார்கள். ஆனால், இதற்கு முன்பே சிவில் புரோ
டெக்ஷன் ஆக்ட்டின் கீழ் நீதி உதவி சம்பந்தமாக, இப்படிப்
பட்ட அட்டூழியங்களைத் தடுப்பதற்காக அரசாங்கத்தின் உதவி
கேட்டு, கோர்ட்டு வழக்காடுவதற்காக, பாதிக்கப்பட்ட ஆதி
திராவிட மக்களிடமிருந்து மனுக்கள் வரப்பட்டது உண்மையா ?
அப்படி வந்திருந்தால், அவர்களுக்கு எந்த வகையிலே உதவி
செய்யப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் சொல்வார்
களா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இது குறித்து தகவல் தற்போது என்னிடம்
இல்லை. ஆனால், புரொடெக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட்
டின் கீழ் தவறு இழைக்கப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து
உதவி கோரி அரசுக்கு வருகின்றபோது, கண்டிப்பாக அது குறித்து
பரிசீலிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் இது குறித்து
ஆலோசனை கூறுகிறபோது, அது பரிசீலிக்கப்படும்.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, மாநில அரசு, அரிசனங்களுக்கு இழைக்கப்படும் குற்றங்
களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுப்பதற்காக டி.ஐ.ஜி.
தலைமையிலே ஒரு போலீஸ் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.
அரிசனங்களுக்கு இழைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டு பிடித்து
நீதி மன்றங்களில் எத்தனை வழக்குகள் போடப்பட்டு, எத்தனை
பேருக்கு தண்டனை வழங்கப்பட்டது என்பதை அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர்
அவர்களே, இது ஒரு பெரிய பதிலை தர வேண்டிய வினாவாக
இருக்கிறது. 1975, 1979 முதல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு
கள் முடிவான வழக்குகள் நிலுவையில் உள்ள வழக்குகள், இப்படி
அத்தனையும் கூற அதிக நேரம் ஆகும். ஆகவே தனிக் கேள்வி
போடுவாரேயானால் விளக்கத்தை தருகிறேன்.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே ஆதி திராவிடர்களுக்கு இழைக்கப்படும் அட்டூழியங்கள் என்ற வகையில் ஒரு தனி நீதிமன்றம் அமைத்து அந்த வழக்குகள், விசாரிக்க வேண்டிய அளவிற்கு அதிகப்படியான அளவில் இருக்கிறது என்பதை அரசு அறிந்துள்ளதா ? வட மாநிலங்களில் ஆதி திராவிடர்கள் மீது அட்டூழியங்கள் அதிகமாக நடைபெற்றுள்ளதா ? அதை போன்று தமிழகத்திலும் நடைபெறுகிறதா என்பதை ஒப்பிட்டு அரசு பார்த்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகம் தவிர ஏனைய மாநிலங்கள் எந்நிலையில் உள்ளது என்பதைப் பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. அப்படி ஒப்பிட்டு பார்க்கவும் இல்லை. தமிழகத்திலே 1975 லிருந்து தற்போது 1981 வரை எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டு எவ்வளவு வழக்குகள் நிலுவையில் இருக்கிறது என்பதைப் பார்த்து, அந்த அடிப்படையில் தான் தனி நீதிமன்றம் ஆங்காங்கு அமைக்க வேண்டுமென்ற முடிவை அரசு எடுத்திருக்கிறது.

**திரு. ஜி. மூர்த்தி :** பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் காவல் துறையினர், தீண்டாமையைக் கடை பிடிப்பதாகச் சொல்லி பல புகார்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ? அவர்கள் மீது ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 'புரொட்டெக்ஷன் ஆப் தி சிவில் ரைட்ஸ்' என்ற சட்டத்தின் பிரிவுகள்படி காவல் துறையினர் அந்தத் தவறை செய்தால் அவர்களுக்கும் அது பொருந்தும்.

**திரு. ப. நெடுமாறன் :** தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு இழைக்கப்படும் அட்டூழியங்கள் குறித்து விசாரிப்பதற்கு அமைக்கப்பட்டிருக்கும் விசேஷ நீதிமன்றங்களில், அரிசனங்கள் தனிப்பட்ட புகார்களைக் கொடுத்தால் அவர்களுக்கு இலவசமாக வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 'ஃரீப் லீகல் எய்ட் சொசைட்டி' என்று ஒன்று ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கும் அது உதவியைத் தர வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.



**திரு. நா. சுந்தரராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் எந்தவித கருத்து வேறுபாடு இல்லை. ஆனால், தீண்டாமையைக் கையில் வைத்துக் கொண்டு, தனக்குப் பிடிக்காத சிலரை அந்த தீண்டாமை குற்றச்சாட்டை சுட்டிக்காட்டி வேண்டுமென்றே சில இடங்களில் தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற செய்தி அரசுக்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செய்தி அரசின் கவனத்திற்கு இது வரை வரவில்லை. அப்படிச் செய்திகள் இருக்குமேயானால் அதில் பாதிக்கப்பட்டவர்கள் கூட வழக்குத் தொடர்கிறபோது அது உண்மையில்லை என்று நீதிமன்றத்தில் எடுத்துக் கூறி பரிகாரம் தேடலாம்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலிலே மத்திய அரசாங்கம் ஒரு கோர்ட்டை அமைக்கச் சொல்லி 1979லே உத்தரவு போட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதைக் கால தாமதப்படுத்துகிற காரணத்தாலே மதுரையில் பல கல்லூரிகளில் அரிசன மாணவர்களுக்கும், இதர மாணவர்களுக்கும் கலகங்கள் ஏற்பட்டு, போலீஸ் கேசாக வந்து, கிட்டத்தட்ட 60 வாய்தாக்கள் போட்டும் கூட முடிவு பெறாமல் இருக்கிற சூழ்நிலை என்பதாலே இதற்கு ஒரு கால கட்டம் நிர்ணயித்து 90 நாட்களுக்குள் அல்லது 45 நாட்களுக்குள் என்று முடிவு செய்து இந்த கேஸ்களை முடிவு செய்ய வேண்டுமென்பதற்காக, கோர்ட்டாரிடம் பேசி விரைவிலே நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு இழைக்கப்படுகிற அநீதிகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க அவர்கள் நலன் பாதுகாக்கப் பட வேண்டும் என்ற நோக்கோடு, உயர் நீதிமன்றத்திற்கு இதுபற்றி அரசு கூறி, உயர்நீதி மன்றமும் சீப் ஜுடிஷியல் மாஜிஸ்ட்ரேட்டுக்கு தாக்கீது செய்து இத்தகைய வழக்குகளை முடிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறது. இந்த ஸ்பெஷல் கோர்ட்டுகளைப் போடுவதற்கு முன்னாலேகூட, ஸ்பெஷல் மொபைல் கோர்ட் போட்டு ஆங்காங்கு நடவடிக்கை எடுக்க அரசு ஆய்ந்து வருகிறது. விரைவிலே நடவடிக்கை எடுக்கப் படும். இந்த கோர்ட்டுகள் போடுவதற்கு முன்னாலே ஸ்பெஷல் மொபைல் கோர்ட்டுகள் போட்டு ஆங்காங்கே இது போன்ற பிரச்சினைகளை நீக்கலாம் என்று அரசு ஆராய்ந்து விரைவிலே அது பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-50.)

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களே, தனி கோர்ட்டுகள் ஏற்படுத்துவது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த கோர்ட்டுகளுக்கும் கேஸ் வந்தால்தான் இயங்க முடியும். இன்றைக்குள்ள சராசரி நிலை, அரிசனங்கள் கொடுமைப் படுத்தப்பட்டால் போலீஸிடம் கம்ப்ளெயிண்ட் கொடுத்தால் அவர்கள் கிரிமினல் ஆஸ்பெக்டைத்தான் பார்க்கிறார்கள். அடித்தார்களா இல்லையா என்பதை மட்டும் தான் பார்க்கிறார்கள். மேற்கொண்டு புரசீட் பண்ணமாட்டார்கள். தீண்டாமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் கேஸ் போட்டால் தான் இமீடியட்டாக அரஸ்ட் செய்வார்கள். ஆனால் அதை அவர்கள் உபயோகப்படுத்துவதில்லை. அந்த நிலையை மாற்றி அரிசனங்கள் கொடுமைப்படுத்தப்பட்டால் இந்தச் சட்டத்தின் கீழ் கேஸ் போட வேண்டுமென்று ஸ்ட்ரிக்டாக அரசாங்கம் சொல்லுமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** புரட்டக்ஷன் ஆப் சிவில் ரைட்ஸ் ஆக்ட் 1925 இன் கீழ் வழக்குகள் தொடரப்படுகின்றன. அந்தச் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்படவில்லை என்று சொல்ல முடியாது. அது மட்டும் அல்லாமல் ஐ.பி.சி. யிலே அதற்காக புரவிஷன் இருக்கிறது. இரண்டு சட்டங்களின் அடிப்படையிலே தான் அரிசனங்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிகளையப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

கோவை-பெரியார்-நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஆதார நிலவள வங்கி ஊழியர்கள் சங்கத்தின் மகஜர்.

*வினா எண். 477.—**திரு. கு. ரமணி :** மாண்புமிகு கூட்டுறவு-சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை-பெரியார்-நீலகிரி மாவட்ட கூட்டுறவு பிரதம நிலவள வங்கி ஊழியர்கள் சங்கம், அவர்களுடைய முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி அரசுக்கு 17-10-1980 தேதியிட்ட மகஜர் சமர்ப்பித்துள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில், அக்கோரிக்கைகள் என்ன ?

(இ) அவைகளை நிறைவேற்ற அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன ?



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) ஆம்.

ஊழியர்களுக்கு ஊதிய விகி
(ஆ) ஆதார நிலவள வங்கி அலுவலர்களுக்கு வழங்கப்படுவது
தத்தை மாற்றவும், அரசு கோரியிருந்தது.
போல் பஞ்சப்படி வழங்கவும்

அங்கத்தினர்களுக்கு வழங்கி
(இ) ஆதார நிலவள வங்கிகள் உள்ளதால் நிதி
யுள்ள கடன்கள் பெருமளவில் வசூலாகாமல் தன்னுரிமை
நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வங்கிகள் நிதி நிலைமை
பெற்ற வங்கிகளாக இருப்பதால் அவற்றின் கோரிக்கைகளைப்
சீரானதும் அவ்வங்கிகளே பணியாளர்களின் அரசு இது குறித்து
பரிசீலித்து முடிவு செய்ய வேண்டும்.
ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க உள்ளது.

நிலவள வங்கி
**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, சம்பளம், மற்ற
ஊழியர்களின் கோரிக்கைகள் அவர்களுக்கு வங்கிகளிலே நிதி
உரிமைகள் வழங்கப்பட வேண்டுமானால் அவைகள் நடை
வசதி ஏற்பட வேண்டும். அப்போதுதான் பதிலிலிருந்து தெரிய
பெறும் என்று அமைச்சர் அவர்களுடைய குறைந்தபட்ச
வருகிறது. அப்படியானால் ஒரு மனிதருக்கு வசதிகளைக்
தேவையைப் பூர்த்தி செய்வதற்கான சம்பளம் மற்ற சொல்
கூட கொடுக்க முடியாது என்று எந்த ஒரு ஸ்தாபனமும் நட
வதற்கு நியாயமில்லை. அமைச்சர் அவர்கள் அதன்மீது அவர்களுக்குக்
வடிக்கை எடுத்து குறைந்தபட்ச ஊதியத்தை கோரிக்கைகளைப் பற்றிக்
கொடுக்கிற முறையிலே அவர்களுடைய
கவனிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுடைய உணர்வை அரசு ஏற்கிறது. பிரைமரி லேண்ட்
டெவலப்மென்ட் பேங்க்ஸை பொறுத்தவரையிலும் நான் ஏற்
கெனவே பலமுறை சொல்லியிருக்கிறேன். அதைப்போல்
அவைகள் அரசினுடைய நேரடிக் கண்காணிப்பில் இருக்கிறவை
அல்ல, சொஸைடீஸ் ஆக்டின் கீழ் இருக்கின்ற செப்பரேட்
அடானமஸ் பாடிகள். பணியாளர்களுக்கு ஊதியம் தருகிற
முறையிலே அதற்கான வருமானத்தை அவர்களே ஈட்டிக்கொள்
கிற நிலைமை இருக்கிறது. கடந்த சில ஆண்டுகளாக நிலவள
வங்கிகளில் பெரும் பணக்கார விவசாயிகள் எல்லாம் வாங்கிய
கடன்களைத் திருப்பித் தராமல் இருந்ததால் அந்த வட்டியி
லிருந்து வருகின்ற வருமானத்தைக் கொண்டு ஊழியர்களுக்குக்
கொடுக்கப்படுகின்ற ஊதியம் வழங்கப்பட முடியாமல் தடைக்
கற்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் அந்தப் பணியாளர்கள்
அல்லலுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படை
யிலே நிலவள வங்கிகளுக்கு அட்வான்ஸ் என்ற முறையிலே
கொடுத்துப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை
களை மேற்கொண்டிருக்கிறது. தொடர்ந்து இந்த நிலைமை

இருப்பதால் பணியர்ளர்களுக்கு வசதிகளைத் செய்துதரவேண்டு
மென்ற அடிப்படையிலே 10 ஏக்கருக்கு மேல் வைத்திருக்கின்ற
விவசாயிகள் கடன்களை உடடியாகக் கட்ட வேண்டுமென்று
சொல்லியிருக்கிறோம். அதன் மூலமாக நிலவள வங்கிகள்
வருமானத்தைப் பெற்று அவர்களுக்கு ஊதியத்தைத் தருவதற்கு
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. கருப்பையா : இந்த நில வள வங்கி ஊழியர்
களுக்குப் பதிவாளர் அவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டபடி பஞ்சப்
படி கொடுக்கவில்லை. அது நிறுத்தப்பட்டிருக்கிறது. அவ்வாறு
நிறுத்தப்பட்டிருப்பதை அரசு கொடுக்கச் செய்ய நடவடிக்கை
எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பஞ்சப்படி ஒப்புக்
கொள்ளப்பட்டபடி தரமுடியாத அளவுக்கு நிதிக் கட்டுப்பாடு
சில வங்கிகளிலே இருப்பது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது.
பல ஆண்டுகளாகக் கடன்களைக் கட்டாமல் இருக்கிற விவசாயி
கள்மீது நடவடிக்கை எடுத்து அந்த வங்கிகளை வயபிள் வங்கி
களாக மாற்றி பணியாளர்களுடைய நலன் பேணவேண்டுமென்று
அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திரு. ரு. ரமணி : தலைவரவர்களே, இந்தக் கூட்டுறவுச்
சங்கங்களிலே உள்ள ஊழியர்கள் தங்கள் குறைகளைப்பற்றித்
தெரிவித்துள்ளார்கள். அந்தக் குறைகள் சம்பந்தமாகத் தொழி
லாளர் இலாகா அதிகாரிகள் தலையிட்டு சமரசம் செய்ய முற்
பட்டால், மாநில ரிஜிஸ்தார் அவர்கள் அதற்குக் குறுக்கே நின்று,
பல சமரசப் பேச்சுக்கள் வெற்றி பெறாமல் செய்துகொண்டிருக்
கின்ற இடையூறு இப்பொழுது இருக்கிறது. அதை நீக்கவும்,
தொழிலாளர் இலாகா ஆலோசனை சொல்லக்கூடிய அந்த
ஊழியர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் இந்த மாநில
ரிஜிஸ்தார் தடையாக இல்லாமல் இருக்க நடவடிக்கை எடுப்பார்
களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறுவதைப்
போல ரிஜிஸ்தார் அவர்களால் சட்ட ரீதியாக இத்தகைய
தடைகளை ஏற்படுத்த முடியாது. காரணம், தனிப்பட்ட முறை
யிலே தொழிலாளர்கள் அவர்களுடைய லேபர் டிஸ்ப்யூட்களை
செட்டில் செய்யப் போகும்பொழுது தடையாக இருக்க முடியாது.
தாமதத்திற்கு வேண்டுமென்றால் கூட்டுறவு அமைப்பு காரண
மாக இருந்துவிடலாம். இத்தகைய தாமதம் எங்கு நடந்தாலும்
அவற்றைக் களைய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, கூட்டுறவுத்
துறை நம்முடைய நாட்டில் வளமை பெற்றிருக்க வேண்டிய
துறை. அதில் இடையில் ஏற்படும் சங்கடங்கள் காரணமாக,



இதன் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருக்கக்கூடிய பல்லாயிரக்
கணக்கான ஊழியர்கள் கடந்த ஓராண்டுக் காலத்திற்கும் மேலாகச்
சம்பளம் இல்லாமல் இருக்கக்கூடிய துயர நிலைமையைச்
சமாளிக்க—இப்பொழுது உள்ளாட்சித் துறையிலே பணம் இல்லை
என்றால் நாம் மானியம் கொடுத்து உதவுகிறோம். அதைப்
போல அரசே கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள இந்த ஊழியர்
களுக்குச் சம்பளம் வழங்க மானியம் கொடுக்க முன்வருமா ?
அதைப்பற்றி ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பல கூட்டுறவுச் சங்கங்கள் வயபிள்
யூனிட்டுகளாகத் தற்போது வாங்கிய கடன்களை வசூல் செய்யாத
காரணத்தால் ஏற்பட்ட பிறகு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டு
மின்றி நிலவள வங்கிகளினுடைய கிளைகள்கூட, அரசே அவ்வப்
போது அட்வான்சாகப் பணத்தையும் கொடுத்து அவர்களுடைய
நிலைமைகளைச் சமாளிக்க உதவி வருகிறது.

திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்
களே, அட்டானமஸ் பாடியாக இருப்பதால், அதில் வசூலாகாத
தால் மாதச் சம்பளம் தர முடியவில்லை என்ற கருத்தை
அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். இதைப் போன்று, வேறு
பல அட்டானமஸ்பாடிகளில் வருமானம் இல்லை என்பதால்
அந்தப் பாடியிலே பணி புரிகின்றவர்களுக்குச் சம்பளம் தரப்
படாமல் இருக்கிறதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கூட்டுறவைப் பற்றி
மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்க வேண்டும். வேறு
பல அட்டானமஸ்பாடிகள் இருக்கின்றன ; அவைகளுக்குள்
போகக் கூடாது.

திரு. தி. கா. நல்லப்பன் : பேரவைத் தலைவரவர்களே,
இந்தக் கூட்டுறவு நிறுவனங்களில் இருக்கின்ற ஊழியர்களுக்கு,
ஆதார நிலவள வங்கிகளில் இருக்கின்ற ஊழியர்களுக்கு, பத்து
ஏக்கராவுக்கு மேல் இருக்கின்ற விவசாயிகளிடம் வசூல் செய்த
பின் பொருளாதாரம் சரியாக இருந்தால் சம்பளம் கிடைப்பதற்கு
உண்டான நிதி நிலைமையை ஒதுக்குவதாகச் சொல்கிறார்கள்.
முறையாக அந்தப் பணத்தை வசூல் செய்கின்ற காலம் வரையில்
அவர்களுக்கு முன் பணமாகக் கொடுத்து அவர்களுடைய சம்பளப்
பிரச்சினையை தீர்ப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முன்பணம் அவ்வப்பொழுது
தரப்பட்டு வந்திருப்பதைப்பற்றி நான் ஏற்கெனவே ஒரு வினா
விற்குப் பதில் அளிக்கும்போது சொல்லியிருக்கிறேன். ஆனால்,
பெரும் பணக்கார விவசாயிகள், டிராக்டர் முதலியவைகளை

வைத்திருக்கின்ற விவசாயிகள், அதிகப்படியான நிலத்தோடு சினிமா தியேட்டர், மில் போன்றவைகளை வைத்திருக்கக்கூடிய விவசாயிகள், அவர்கள் வாங்கிய கடனை நாம் வசூல் செய்தால் பணியாளர்களுக்கு ஊதியம் கொடுத்து, வசதியில்லாமல் இருக்கின்ற அவர்களுடைய நிலைமை கண்டிப்பாக மாறும் என்று கருதி அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு உத்தரவிட்டிருக்கிறது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்து ஏக்கர்களுக்கும் மேல் நிலம் வைத்துள்ள விவசாயிகளிடமிருந்து வசூலித்தால் இப்படிப்பட்ட நிலவள வங்கிகள் சம்பளமாக எடுத்துக் கொள்ளலாம் என்று தெரிவித்தார்கள். ஒன்று, வறட்சி இருக்கிறது. வறட்சி இருக்கிற நேரத்தில் வசூலிக்க வேண்டாமென்று வருவாய்த்துறை அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். அப்படியென்றால் எப்பொழுது சம்பளம் பெறுவது என்பது ஒன்று. இன்னொன்று, தனி அதிகாரிகள் என்ற பெயரால், வேலையே இல்லாமல் இப்படிப்பட்ட நிலவள வங்கிகளிலிருந்து சம்பளமாகவும், பயணப்படியாகவும் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். பணம் அதற்கே போய்விடுகிறது. எனவே இரண்டு மூன்று நிலவள வங்கிகளுக்கு ஒருவர் என்ற முறையில் தனி அதிகாரிகளை நியமித்தால் சிக்கனமாக இருக்கும். அப்படிப்பட்ட சிக்கனத்தை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிப் பகுதிகளில் வசதி படைத்த விவசாயிகளிடம் இருந்து கூட, இந்தக் கடனை உடனடியாக வசூலிக்கவேண்டும் என்ற நடவடிக்கையை அரசு மேற்கொள்ளவில்லை. வறட்சிக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பரிகாரம் அனைவருக்குமே தரப்பட்டுள்ளது. வறட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசதி படைத்த விவசாயிகள் 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் அந்த நிலத்தோடு சேர்ந்து சினிமா தியேட்டர், மில் போன்ற மற்ற தொழில் வருமானம் உள்ள விவசாயிகள், அவர்கள் வாங்கிய கடனைக் கட்டிவிட வேண்டும் என்றுதான் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஸ்பெஷல் ஆபீசர்களுக்கு அதிகப்படியான ஊதியம் போன்றவைகள் எல்லாம், திடீரென நடவடிக்கை எடுத்து அதைத் தடுத்துவிட முடியாது. பல ஆண்டுகளாக சட்ட ரீதியாக அவர்கள் படிப்படியாக பெற்றுவந்த ஊதிய உயர்வு என்ற அடிப்படையில் அவற்றை நாம் நிறுத்த முடியாது. ஆனால் புதிதாகக் கொண்டுவர இருக்கிற சட்டத்திலே (Common Cadre Employment) என்றெல்லாம் நாம் கொண்டு வரவிருக்கிற காரணத்தால் அது வந்தபிறகு இந்நிலை சீராக்கப்படும்.



**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு நாணய சங்கத்தில் பணிபுரியக் கூடிய ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்காததற்கு காரணம் சொல்வது 10 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவர்கள், டிராக்டர்கள் வைத்திருக்கக்கூடியவர்கள் கடனைத் திருப்பிக் கொடுத்தால்தான் கொடுக்க முடியும் என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் கடன் வாங்கிய பெரும்பகுதியினர் பணப்பயிர் கடன்தான் வாங்கி இருக்கிறார்கள். அவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். தமிழகத்திலே, இது தான் அதிகம். டிராக்டர்கள் வைத்திருப்பவர்கள், பெரும் பணக்காரர்கள் என்பது மிகவும் குறைவு. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், அதைக் காரணம் காட்டாமல்....

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : அவையின் முன் அனுமதியுடன் வினா-விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. பொ. உத்திராபதி** : நான் கேட்டுக் கொள்வதெல்லாம் பெரிய பணக்காரர்கள் விவசாயிகள் டிராக்டர்கள் வைத்திருப்பவர்கள் எல்லாம் கடனைத் திருப்பிக் கட்டுகின்ற வரையில் சாதாரண தொழிலாளர்கள் பட்டினி கிடந்து சாக முடியாது. அதைக் காரணம் காட்டுவதைவிட இந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கு இன்னும் எத்தனை மாதங்களில் அவர்களுடைய சம்பளத்தைக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வரும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாக சுட்டிக்காட்டி இருக்கிறேன். டிராக்டர்கள் வைத்திருக்கக்கூடியவர்கள் நிலவளவங்கியில் வாங்கிய கடனை மட்டும் தான் தரவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்கள் வாங்கி இருக்கிற கிராப் லோன் முதலியவைகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டால் சிறு விவசாயிகள் வாங்கி இருக்கிற கடனை விட, பெரிய விவசாயிகள் கிட்டத்தட்ட 60, 70 சதவிகிதம் அதிகமான கடனை, கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேல் வாங்கி இருக்கிறார்கள். எனவே தான் அந்த வசதிபடைத்த விவசாயிகள் வாங்கிய கடனை திருப்பிக் கட்டினார்களேயானால், இந்தப் பிரச்சினை, பணியாளர்களுக்கு ஊதியம் இல்லை என்ற நிலை அறவே நீங்கிவிடும் என்ற காரணத்தால் இது குறித்தும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த நடவடிக்கைகளினால் பணியாளர்களுடைய நிலை சீராக அமையும் என்று அரசு நம்புகிறது.

## தானிப்பாடி கிராமத்திற்கு பாம்பன் ஆற்றிலிருந்து குடிநீர்

*வினா எண் 478— திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் வட்டம், தானிப்பாடி கிராமத்திற்கு பாம்பன் ஆற்றிலிருந்து குடி நீர் கொண்டு வரும் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி அரசுக்கு ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நான் காலை 9.05-க்குத்தான் வந்தேன். உரிய நேரத்தில் வராததற்காக வருந்துகிறேன்.

(அ) மற்றும் (ஆ) பாம்பன் ஆற்றிலிருந்து செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்திற்கு குடி நீர் கொண்டு வரும் சாத்தியக் கூறு உள்ளதா என்று தமிழ்நாடு குடி நீர் வடிகால் வாரியத்தால் ஆவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டம் தானிப்பாடி கிராமத்தில் பாம்பன் ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டத்தின்படி குடிநீர் வடிகால் வாரியத்தால் ஆழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆய்வு எந்தத் தேதியில் இருந்து மேற்கொள்ளப்பட்டது என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வு முடிந்தவுடன் மேற்படி ஆற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வர சாத்தியக்கூறுகள் திருப்திகரமாக இருந்தால், பிரிவு 6-ல் அடங்கியுள்ள சிற்றூர்களுக்குக் குடிநீர் வசதியளிக்கும் காலத்தில் இத்திட்டத்தை மேற்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படும். அல்லது இவ்வூராட்சி இத்திட்டத்துக்கு ஆகும் செலவுத் தொகையை செலுத்த முன்வந்தால் 'முன்வைப்புத் தொகை (டெப்பாசிட்) திட்டத்தின் கீழ் இத்திட்டத்தை செயலாக்குதற்கு எடுத்துக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் தின்று வாரியம் தெரிவித்துள்ளது.

திரு. த. வேணுகோபால் : பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் இன்றைக்கும் கூட ஒரு குடம் தண்ணீர் 10 பைசாவுக்கு விற்கப்படுகிறது. இதனால் அந்த கிராம மக்கள் அவதிப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறியவிரும்புகிறேன்.



மாண்புமிகு திரு: எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, தானிப்பாடி கிராமத்தில் ஒரு மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், தரை மட்டத் தொட்டியும், நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. அது மட்டுமல்லாமல் ஆதி திராவிடர் காலனியிலுள்ள ஒரு துளைக் கிணறும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் 3 கிணறுகள் கட்டுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

## கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம்

*வினா எண் 479—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியில் காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக அரசிடமோ அல்லது வேறு ஸ்தாபனத்திடமோ வாங்கிய தொகை எவ்வளவு ?

(ஆ) கடனைப் பரிசீலித்துத் தள்ளுபடி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்கு காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு கடனாக ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 10.75 இலட்சமும், தமிழக அரசு ரூ. 0.247 லட்சமும் கொடுத்துள்ளன.

(ஆ) குடிநீர்த் திட்டத்திற்காக வழங்கப்பட்ட கடனாதலால் கடன் தள்ளுபடி செய்வதற்கில்லை.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சியின் வருமானத்தில் சரிபாதி பணம் இந்தக் கடனுக்காக வட்டியைச் செலுத்துவதற்கே சென்று விடுவதால் அசலைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை. அதனால் அங்கே எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் செய்ய முடியாமல் தடைபட்டு இருக்கின்றன. ஆகவே அரசே இதனைப் பரிசீலித்து, அந்தக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டாம் என்று தள்ளுபடி செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, கடன் என்றால் அது திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தொகை என்று பொருள். ஆகவே, கடனாகக் கொடுக்கப்பட்ட தொகையைத் திருப்பிச் செலுத்தியாக வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[1981 மார்ச் 25

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர்த் திட்டங்களுக்காக நகராட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்கப்படுகிறது. அதேமாதிரி கிராமப்பகுதியாக இருந்தால் மானியமாக குடிநீர் வடிகால் வாரியத்திற்கு மத்திய அரசு அல்லது மாநில அரசு வழங்கி வருகிறது. அந்த அடிப்படையில் இந்தப் பேரூராட்சிக்கு அளிக்கப்பட்ட கடன் தொகையையும் ரத்து செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, அப்படிச் செய்வதற்கு இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டு வரும் திட்டம்.

*வினா எண் 480 —திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜேடர்பாளையத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் இணைப்புத் திட்டமாக வழியில் உள்ள ஊர்களுக்கும் குடிநீர் வழங்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திருச்சி மாவட்டத்திலுள்ள கட்டளைப் பகுதியிலிருந்து காவிரி நீரை சென்னைக்கு திறந்த ஆழமான கால்வாய் மூலம் கொண்டு வரும் திட்டத்திற்கு அரசு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) இல்லை.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டம் ஜேடர்பாளையத்தில் இருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தை அமல் படுத்துவதற்கான வகையில் அதற்கென தனி அலுவலகம் திறக்கப்பட்டு விட்டதா? திருச்சியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவர ஆய்வு செய்யப்பட்டுவிட்டதா? அதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்களா? அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?



1981 மார்ச் 25]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டு இருக்கிறது. செம்பரம் பாக்கம் வரையில் தண்ணீர் கொண்டு வருவதற்கு ரூ. 259 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அங்கே இருந்து சுத்தம் செய்து சென்னைக்கு 'டிஸ்ட்ரிபியூஷன் லைன்' மூலமாகக் கொடுப்பதற்கு ரூ. 200 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டு இருக்கிறது.

திரு. த. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 459 கோடி ரூபாய் அளவிற்கு மதிப்பிடப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்? அண்மையில் சென்னையிலுள்ள மக்களுக்கு தண்ணீர் எப்போது கொடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. அது ஆய்வு நிலையில்தான் இப்போது இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்றம் தொடங்கியதிலிருந்து நாங்களும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் சென்னைக்கு வருகிறது என்று சொல்லப்படுகிறது. அப்புறம் வீராணம் என்று சொல்லப்படுகிறது. இப்போது ஜேடர்பாளையத்திலிருந்து திறந்த வெளி வாய்க்கால் மூலம் காவிரித் தண்ணீர் வருகின்றது என்று சொல்லப்படுகிறது. இந்தத் திட்டமும் நடைபெறக்கூடாது என்று சொல்லி, அதற்காக திருச்சியிலே மாநாடு நடத்தியிருக்கிறார்கள். அதற்குக் காரணம் தற்போது காவிரியிலிருந்து வருகிற தண்ணீர் தஞ்சை மாவட்ட விவசாயத்திற்குப் போதுமானதாக இல்லை. விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்தத் திட்டத்தினால் பாதிப்பு ஏற்படும்; ஆகவே, இத்திட்டத்தைக் கைவிட வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே, இத்திட்டம் உடனடியாகக் கைவிடப்படுமா? மேலும் சென்னைக்கு தண்ணீர் கிருஷ்ணாவிலிருந்து வருமா? வீராணத்திலிருந்து வருமா? ஜேடர் பாளையத்திலிருந்து வருமா? ஆகாயத்திலிருந்து வருமா? பூமியிலிருந்து வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல், 10—10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல ஜேடர் பாளையம் திட்டம் கைவிடப்படும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்படும் என்று சொல்லிவிட்டார்கள். ஜேடர்பாளையம் திட்டம் என்று கட்டளைக்கால்வாய்த் திட்டம் என்பதற்குப் பதிலாகப் பெயரைமாற்றிச் சொல்வார்கள் என்று சந்தேகப்படுகிறேன். ஆனால், இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கு வழியில்லாத நிலையில் கைவிடப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இது கட்டளைக் கால்வாய்த் திட்டம். ஆகையால்தான் ஜேடர்பாளையம் திட்டம் கைவிடப்பட்ட இருக்கிறது என்று சொன்னேன். கேள்வி கேட்டதிலே கொஞ்சம் மாறுதல். இருந்தாலும் பதில் சொல்லலாம் என்று நினைத்து சொன்னேன். கட்டளைக் கால்வாய்த் திட்டத்தில் 450 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதற்கு 459 கோடி ரூபாய் செலவாகும் என்றும் சொன்னேன். ஆகவே, இந்தத் திட்டத்தை அரசு ஏற்றுக் கொண்டிக்கிறது.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இடையிலே சொன்ன பதிலின் காரணமாக, நான் கேட்ட கேள்விக்கு அவர்கள் சொன்ன பதிலை ஒட்டி மீண்டும் ஒரு கேள்வி கேட்க வேண்டியிருக்கிறது. கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று விரும்பினாலும் கூட அதனால் ஏற்படக்கூடிய இடையூறுகள் எவை எவை என்பதை அந்த வட்டாரத்து மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தத்தில் தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய தண்ணீர் வடக்கே ஆந்திரத்திலிருந்து கிடைத்தால் தான் சென்னைக்கும் தமிழ் நாட்டுக்கும் பயன் படுவதாக இருக்குமே தவிர, சென்னை மாநகருக்கு ஆந்திராவில் இருந்து அந்தத் தண்ணீர் வராமல் வேறு தண்ணீர் வருவதால் தமிழ் நாட்டுக்கு அந்தத் தண்ணீர் பயன் படும் வாய்ப்பு இல்லை. எனவே, ஆந்திரத்திலிருந்து தண்ணீர் கிடைக்க இன்னும் அதிகமாகச் செலவானாலும் தமிழகத்திற்கு அதனால் இலாபம் இருக்கிறது, பயனிருக்கிறது என்ற காரணத்தால், வேறு திட்டங்களைச் செயல் படுத்துவதன் மூலம் எதிர் காலத்தில் நாம் பெற வேண்டிய பயனைப் பெறமுடியாமல் போகும் சூழ்நிலை இருப்பதால் இது பற்றி அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல விளக்கத்தைப் பெறுவதற்காகக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். இந்த அரசு கட்டளைக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றுவது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுக்க அனைத்து சட்டமன்றக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, அதன் பிறகுதான் முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்.

*வினா எண் 481—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பேரூராட்சிக்கு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஆய்வு வேலைகள் தமிழ்நாடுகுடிநீர் வடிகால் வாரியத்தினால் நடைபெற்று வருகின்றன. அவை துரிதப்படுத்தப்படுகின்றன.

நாகர்கோவில் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம்

*வினா எண் 482—திரு. ஜே. எஸ். இராசு : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் கூட்டுறவு வீட்டு வசதி சங்கத்திற்கு வீட்டு மனைகள் வாங்குவதற்காக தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் கடன் வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) மொத்தக் கடனாக ரூ. 31,65,625 வழங்கப்பட்டுள்ளது.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, இரயம் வாங்குவதற்கு முன்பாக சேல்ஸ் அக்ரிமெண்ட் போடப்பட்டதா ? அது மத்திய சங்கத்திற்கு அனுப்பப்பட்டு, ஒப்புதல் பெறப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அவர்கள் அனுமதி மத்திய சங்கத்திற்கு அனுப்பித்தான், ஒப்புதல் பெற்றுத்தான் செயல் பட்டிருக்கிறார்கள். இந்தக் கடன் ஒரே தவணையில் வழங்கப்படவில்லை ; மூன்று தவணைகளில் முறையாக வழங்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் நன்கு செயல்படும் சங்கங்களில் இதுவும் ஒன்றாக இருக்கிறது. கடன் வழங்கப்பட்ட விவரம் :—

25—10—1979 ஆம் தேதி ரூ. 3,87,500.

19—12—1979 ஆம் தேதி ரூ. 1,97,125.

11—4—1980 ஆம் தேதி ரூ. 25,81,000.

இந்த முறையில் கடன் பெற்றிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இன்று அவை கூடிய நேரத்தில் நானும் உரிய நேரத்தில் வராத காரணத்தால் முதலில் என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) இத் திட்டம் தலைமைப் பொறியாள(ஆய்வு)ரின் மறு ஆய்வில் உள்ளது.

(ஆ) விரிவான ஆய்வு முடிந்து தலைமைப் பொறியாளரின் அறிக்கை கிடைத்த பின் அரசு முடிவெடுக்கும்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, இந்த அணைக்கட்டினால் பயன்பெறக் கூடிய நிலங்கள் எத்தனை ஏக்கர், அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டம் தென்காசிப் பகுதியில் அடவிநாயனார் கோயில் அருகில் ஹனுமாநதியின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதற்காக, ரூ. 149 இலட்சத்தில் ஒரு மதிப்பீடு 1972-ல் தயாரிக்கப்பட்டது. ஆனால் 1974—75-ல் விலைப் பட்டியல் உயர்ந்து விட்ட காரணத்தால் திட்டத்தின் மதிப்பீடு 211.50 இலட்சமாக உயர்ந்தது. அதற்குப் பிறகு இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஏறபடக் கூடிய பயன் சரியாக இருக்குமா என்ற சந்தேகம் வந்ததற்குப் பிறகு கரிசல்குளம் அணைக்கட்டுப் பகுதிக்கு மேலே உள்ள இடத்தில் மறு ஆய்வு நடத்தி வருவதாகவும் அதன் மூலம் 3,952 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி பெறுவதுடன், 1,120 ஏக்கர் நிலங்களின் பாசனப் பற்றாக் குறையைப் போக்கலாம் எனவும் தலைமைப் பொறியாளர் கூறியுள்ளார். ஆகவே இந்தத் திட்டம் இப்போது மறு ஆய்வில் இருக்கிறது.

அமராவதி ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 413.—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் கரூர் தொகுதியில் சணப்பிரட்டி-கோயம்பள்ளி கிராமங்களுக்கிடையே அமராவதி ஆற்றில் அணைக்கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

(இ) எப்போது துவங்கப்படும்?

[1981 மார்ச் 2

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) திட்டம் ஆரம்ப ஆய் நிலையில் உள்ளது.

(ஆ) மற்றும் (இ) திட்டம், ஆரம்ப ஆய்வு நிலையில் உள் தால் இவ்வினாக்களுக்கு இடமில்லை.

பாசனத்திற்காக பஞ்சப்பள்ளி அணையிலிருந்து தண்ணீர் விடும் திட்

*வினா எண் 414—திரு. எஸ். அரங்கநாதன்: மாண்புமி நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு வி யளிப்பாரா :

(அ) தர்மபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி அணையிலிருந் இராமக்கான் ஏரி வரை நீர்ப்பாசனத்திற்காக நீர்விடும் செய் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) எப்போது விடப்படும் ?



1981 மார்ச் 25]

தண்ணீர் போய் சேரவில்லை என்ற குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தையும் எடுத்துக் கொண்டு அரசு தீவிரமாக சிந்தித்தே ஒரு முடிவிற்கு வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**வேலைத் தொடங்கி முடிவுறமால் உள்ள அணைக்கட்டுத் திட்டங்கள்**

*வினா எண் 415—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முடிவுறாமல்-வேலை துவங்கி அறைகுறையாய் நிற்கும் அணைக்கட்டுத் திட்டங்கள் ஏதேனும் உளவா ? எவையெவை ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேறும் ?

(இ) என்னென்ன முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) வேலை தொடங்கி முடிவுறாமல் அறை குறையாக இரண்டு அணைக்கட்டுத் திட்டங்கள் உள்ளன. அவையாவன தருமபுரி மாவட்டம் ஒசூர் வட்டத்தில் கெலவரப்பள்ளி அருகே அமைக்கப்பட்டு வரும் கெலவரப்பள்ளி அணைத் திட்டமும் மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் அழகாபுரி கிராமத்தினருகே உள்ள குடகனாறு நீர்த்தேக்கத் திட்டமும் ஆகும்.

(ஆ) மற்றும் (இ) கெலவரப்பள்ளி திட்டத்திற்காக சில நிலங்களை கையகப்படுத்துவதற்கு நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின்கீழ் வெளியிட்ட அறிக்கையினை எதிர்த்து நிலங்களின் சொந்தக்காரர்கள் என்று உரிமை கோருபவர்கள் சென்னை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்துள்ள ரிட் மனுவின் பேரில் உயர் நீதி மன்றம் நவம்பர் 79-ல் தடை உத்தரவு பிறப்பித்துள்ளது. இதனால் அணைக்கட்டும் வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. நீதி மன்றத்தின் தடையுத்தரவு நீக்கப்பட்ட பின் வேலை துவங்கப்படும்.

அநேகமாக கட்டி முடிக்கப்பட்டிருந்த தறுவாயில் குடகனாறு அணையின் மண் அணைப் பகுதி 1977 ஆம் ஆண்டு ஏற்பட்ட புயல் வெள்ளத்தால் உடைந்தது. இவ்வணையை மீண்டும் புனரமைப்புச்செய்வதற்கான பாசனத் தலைமைப் பொறியாளரின் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடையளிக்கும் போது, தர்மபுரி மாவட்டத்தில் இருக்கும் கெலவரப்பள்ளி நில் உள்ள அணைக்கட்டையும், மதுரை மாவட்டத்தில் வேடசந்தூர் வட்டத் அணைக்கட்டையும் மட்டுமே சொன்னார்கள். ஆனால் நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு அணை கட்டுவ தற்கென்று 33 இலட்ச ரூபாய் செலவழித்ததற்குப் பின்னால், அதற்கான அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால் அந்த அணை கட்டப்படாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டு ள்ளதே, அது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது தகவல் வந்ததா? மீண்டும் அந்த அணையைக் கட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட நெல்லை மாவட்ட அணையைப்பற்றிய பிரச்சினை ஏற்கனவே இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டு அதற்குப் பதிலும் அளிக்கப்பட் டிருக்கிறது. ஆனால் நான் இப்போது அணை கட்ட ஆரம்பித்து அணை கட்டப்படாமல் முடிக்கப்பெறாமல் விடப்பெற்ற இரண்டு அணைகளைப் பற்றித்தான் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட நெல்லை மாவட்ட அணை கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அறிவிப்புகள் கொடுத்து, வறட்சி நிவாரணப் பணிகளின் நிதியிலிருந்து ஓரளவு செலவும் செய்யப் பெற்றுவிட்ட பிறகு, அங்கே தண்ணீர் போக்குவரத்து கு றவாக இருக்கிறது என்று தெரிய வந்த காரணத்தினால், அந்த அணை கட்ட ஆரம்பிக்கப்படாமலேயே இருக்கிறது. மற்ற விஷயங்களை பற்றி தனிக் கேள்வி போட்டால் அரசின் நிலையை விளக்கமாகத் தரமுடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. டி. கருப்பையா : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கேள்வி அணைக்கட்டு சம்பந்தமாக இருப்பதால் வாச் ப றை தொகுதியில் உள்ள நீராறு அணை கட்டுவது பற்றி சம்பந் தப்பட்ட அலுவலர்களுக்கு புகார்கள் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தப் புகார்கள் சம்பந்தமாக அரசினுடைய ஆலோசனை என்ன? அந்தப் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி அணைக் கட்டு ஆரம்பிக்கப்பட்டு முடிவுறாமல் நிற்கும் அணைகள் சம்பந்த மானது. துவங்காமல் இருக்கும் அணைக்கட்டு என்றால் தனிக் கேள்வி போட்டு கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த அணையைக் கட்டுகிற வகையில் சில ரூபாய்கள் செலவழிக்கப்பெற்றதாகவும்





நீர் போக்குவரத்து வராத காரணத்தால் தான் நிறுத்தி வைக்கப் பட்டதாகவும் விடை தந்தார். ஆனால் எனக்கு வந்திருக்கிற தகவலின் படி 33 லட்சம் ரூபாய் அளவில் சாலைகள் போட அலுவலகங்கள் கட்ட போன்ற பணிகளுக்காக செலவழிக்கப்பட்ட தாகவும், அந்தப் பகுதியில் இருக்கும் கோடீஸ்வரர் ஒருவர் தன்னுடைய காரில் அந்தச் சாலைகளில் பவனி வருவதற்கு தடையாக இருக்கக்கூடாது என்றுதான் இந்த அணைக்கட்டும் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடுவதாகவும் தகவல் இருக் கிறது. ஆனால் நீர் வரத்து இல்லை என்ற தகவல் என்னிடத்தில் தரப்பட வில்லை. ஆகையினால் அரசு இதில் இன்னும் ஆழ்ந்து சிந்தித்து நல்ல முடிவுக்கு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள் போடுவது போன்ற பணிகள் எல்லாம் அந்த வறட்சி நிவாரணப் பணிக்காக ஒதுக்கப் பெற்ற திட்டத்தின் அடிப்படையில்தான் நிறைவேற்றப் பெற்றன. அந்த அணை கட்டப்பெறாமல் இருப்பதற்குக் காரணம் நீர்ப் போக்குவரத்து குறைவாக இருக்கிறது என்பது தான் என்று என்னிடத்தில் தகவல் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வேறுஒரு புது தகவலைத் தருகிறார். தனிப்பட்டவர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல்கிறார். அணைக்கட்டைப் பொறுத்தவரையில் எந்தவிதமான தனியார்களின் செல்வாக்குக்கும் அரசு இடம் கொடுப்பது இடையாது. அதனால் நிச்சயமாக தீவிரமாக இதைப் பரிசிலனை செய்து தக்க நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் ஹோசூர் அருகில் உள்ள கெலவரப்பள்ளி திட்டம், நிலச் சொந்தக்காரர்கள் உயர்நீதி மன்றத்துக்குப் போய் ஸ்டே வாங்கிவிட்ட காரணத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் பதில் கொடுத்துள்ளார்கள். இன்றைய தினம் வறட்சி மீட்புப் பணித் திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு பல அதிகாரங்களை நாம் கொடுத்திருக்கி றோம். ஆகவே, அந்த அதிகாரங்கள் அடிப்படையில் உடனடி யாக இந்த நிலத்தை எடுத்து இத்திட்டத்தைத் தீட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இது வழக்கு மன்றத்தில் இருக்கிற விஷயம். அரசாங்கம் இதில் அவசரம் காட்ட முடி யாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மூ. ஜான் வின்செண்ட் : கொடுமுடியாறு அணையப் பொறுத்து, தண்ணீர் அளவு பற்றி மூன்றாண்டு கால அறிக்கை கிடைத்தபிறகு செயல்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள்

முன்னால் சொல்லியிருக்கிறார்கள். 1977—78ல் இருந்து 1981 வரை கணக்கு கொடுக்கப்பட்டுவிட்டது. அதன் அடிப்படையில் இந்த அணைக்கட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** 1981 ஆம் ஆண்டுக்கான விவரங்கள் நமக்கு வந்து சேரவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கான நீர் கிடைத்த விவரங்கள் வந்திருக்கிறது. இந்த ஆண்டு முடிவதற்குள்ளாக அந்த விவரம் கிடைத்த பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர் பார்க்கிற அந்கதத் திட்டம் பற்றி அரசு நிச்சயமாக முடிவு செய்யும்.

**திரு. ப. தீர்த்தராமன் :** கெலவரப்பள்ளித் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்தப்படாமல் திட்டம் எப்படித் தீட்டப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. நாம் நிலத்தை கையகப்படுத்துவதற்கான நோட்டீஸ்கள் கொடுத்து அது சம்பந்தப்பட்ட நில உடைமையாளர்கள் பல பேர்கள் அதை ஏற்றுக்கொண்டு பணிகளை நடத்திக்கொண்டிருந்த போது சம்பந்தம் இருக்கிறதோ இல்லையோ ஒருவர் தனக்கு அந்த நிலத்தில் உரிமை இருக்கிறது, தானே உரிமையாளர் எனவே அந்த நிலத்தில் துவங்குவது என்பது தவறு என்ற அடிப்படையில் வழக்கு மன்றத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்கள். அது குறித்து நீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் தாமதப்பட்டுக்கொண்டிருக்கிறது.

**திரு. ப. நெடுமாறன் :** குடகனாறு அணை பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வேடசந்தூர் தாலுக்காவிற்கு பாசன வசதி அளிக்கக்கூடிய வகையில் அந்த அணையைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** அந்த அணைப் பகுதியில் மண் அணைப் பகுதிதான் சேதமடைந்திருக்கிறது. அதைக் கட்டுவது என்பது ஒரு பிரச்சினை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது திரும்ப அணையைக் கட்டுவது என்பதல்ல. அந்த அணையில் தேக்கி வைக்கப்பட்டிருக்கிற நீரைக் கொஞ்சம் கூடுதல் வேடசந்தூர் பகுதிக்குக் கிடைக்க வகை செய்யப்படுமா என்ற வகையில் கேட்கிறார்கள். ரீடிசைனிங் செய்வது போல் அது குறித்து அரசு யோசிக்கும்.

**திரு. சேர். அழகர்சாமி :** நெல்லை மாவட்டத்தில் கொடுமுடியாறு சம்பந்தமாக இந்த மன்றத்தில் பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டு, அமைச்சர் அவர்கள் அங்கே நேரடியாகச் சென்று



அனைத்துக் கட்சி சம்பந்தப்பட்டவர்களையும் அழைத்துப் பேசி முடிவு செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டது. முப்பது லட்சம் ரூபாய் வரை அரசு செலவு செய்திருக்கும்போது செல்வாக்கு படைத்த ஒரு பெரிய மனிதர் தடுப்பதால் அந்த அணை வராமல் இருக்கிறது என்று சொல்லப்பட்டு அத்தனை கட்சிக் காரர்களும் கிளர்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அமைச்சர் அவர்கள் நேரடியாக அந்த இடத்திற்குச் சென்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றவர்களை அழைத்து அந்தத் திட்டத்தைத் துவக்குவதற்கு—செலவு செய்திருக்கும் முப்பது லட்சம் ரூபாய் வீணாகாமல் இருக்கவும், உடனடியாக அந்த அணையைக் கட்ட நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இதே கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜான் வின்சென்ட் அவர்களும் கேட்டார்கள். மூன்றாண்டுகாலம் நீர் இயல் அடிப்படையில் எவ்வளவு நீர் வரத்து இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டு ஆண்டுக் கால அறிக்கை கிடைத்திருக்கிறது. மூன்றாவது ஆண்டு அறிக்கையையும் வைத்து சராசரி எவ்வளவு நீர் வருகிறது. எவ்வளவு தேக்கப்படும் என்று பார்த்து அணைகட்டுவதற்கு அவசரப்படாமல் செய்ய வேண்டுமென்று—மூன்றாவது ஆண்டு அறிக்கை கிடைக்கும் தருவாயில் இருக்கிறது— மற்ற விஷயங்களையும் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

### இராணிப்பேட்டையில் பாரத் கனரக மின்சார தொழிற்சாலைக்கு நில ஆர்ஜிதம்.

*வினா எண். 483—திரு. இல. பலராமன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் இராணிப் பேட்டை சிப்காட் தொழிற்பேட்டை அருகில் மத்திய அரசு நிறுவனமான 'பாரத் கனரக மின்சார தொழிற்சாலை ( BHEL )' நிறுவ நில ஆர்ஜிதம் செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

(ஆ) இதற்கு தேவையான நில அளவு எவ்வளவு?

(இ) இத்தொழிலகத்தின் மதிப்பு யாது?

(ஈ) இதனால் பயனடையும் தொழிலாளர்களின் எண்ணிக்கை யாது?

[1981 மார்ச் 2

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) 1,400 ஏக்கர்

(இ) ரூ. 21.59 கோடி.

(ஈ) 4,000

[முற்பகல் 10-30]

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இந்த பெல் நிறுவனத்திற்கு நிலம் வழங்கப்பட் டிருக்கிறது. அதற்கான உதிரி உறுப்புகள் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு அரசு ஏதாகிலும் திட்டம் வகுத்திருக்கிறதா? இந்த பெல் நிறுவனம் என்ற பெயரால், உதிரி உறுப்புகள் தொழிற்சாலைகளால் எவ்வளவு தொழிலாளர்களுக்கு பயனேற் படும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 1,100 ஏக்கர் அளவிற்கு நில எடுப்பிற்கான உத்தரவுகள் அரசு இதழில் வெளியிடப்பட் டிருக்கிறது. மீதம் இருக்கிற ஏறக்குறைய 200 ஏக்கர் அளவிற்கு நில எடுப்பிற்கான வேலைகள் தீவிரமாக அரசின் பரிசீலனையில் இருக்கிறது. துணைத் தொழில்கள் துவங்குவதற்காக, சிப்காட் டின் மூலம் 350 ஏக்கர் நிலம் தேவைப்படுகின்றது. அதற்கான நில ஆர்ஜித வேலைளும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. துணைத் தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தியதற்குப் பின்னால் தான் எவ்வளவு பேர்களுக்கு வேலை கிடைக்கும் என்பதைச் சொல்ல முடியும். ஆனால், இந்த பெல் நிறுவனம் மூலம் 4,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பிருக்கிறது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நிலத்திற்கு எவ்வளவு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது? அவர்களுக்கு வழங்கிய தொகை மிகவும் குறைவாக இருக்கின்றது என்று விவ சாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை வந்திருக்கிறதா? இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை அறிய விரும்புகிறேன். அது குறித்து மறு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, ஒரு ஏக்கர் விலை ரூபாய் 5,000 என்ற அளவிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. இந்த அளவு விலையை அதிகரித்துத் தரவேண்டுமென்ற கோரிக்கை அல்லது அதுபற்றிய பரிசீலனை இப்போது இல்லை.



1981 மார்ச் 25]

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே பாரத கனரக மின்சாரத் தொழிற்சாலைக்கு நிலம் ஆர்ஜிதம் செய்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி நிலங்களை இழந்துள்ள வர்களுக்கு அந்தத் தொழிற்சாலையில் முன்னுரிமை அளித்து, வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதிகளில் நிலம் முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்ட நில உடைமையாளர்களின் குடும்பத் தில் ஒருவருக்கு வேலை கொடுப்பது என்ற அளவிலே இந்த அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

திரு. துரைமுருகன் : சார், ஒரு ஏக்கர் 5,000 ரூபாய் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது நஞ்சையா, புஞ்சையா? பக்கத்திலேயே ஒரு சென்ட் 60, 50இல் எடுக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே அங்கே கிணறு, பம்பு செட்டு எல்லாம் போடப் பட்டு, பக்கத்திலேயே 250, 300 ரூபாய்க்கு சென்ட் நிலம் போகிறது. அதனால், இப்படி 60 ரூபாய்க்கு எடுப்பது நியாய மாகுமா? 10, 15 கிராமங்களிலே உள்ள சாதாரண மக்களிட மிருந்து ரெப்ரசென்டேஷன் கொடுக்கப்பட்டிருக்கிறதா? உட னடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 100 ஏக்கர்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் கேள்வி யாகக் கேளுங்கள். வேண்டுகோளோ, குற்றச்சாட்டோ வேண் டாம். சென்ட் 60 ரூபாய்க்கு எடுக்கின்றீர்கள், அதை 200 ரூபாய்க்கு எடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தான் நீங்கள் கேட்க வேண்டும்.

திரு. துரைமுருகன் : ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் என்பதை அதிகமாக உயர்த்தித் தர அரசுக்கு உத்தேசம் உண்டா? மக்க ளிடமிருந்து கோரிக்கை வந்திருக்கிறது, அதைப் புறக்கணிப்பது நியாயமா? அது கவனிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் என்கிற அளவிலே ஆர்ஜிதம் செய்கிறபோது, அதனுடைய செலவு மதிப்பு ரூ. 87.5 இலட்சம் அளவிற்கு வருகிறது. அந்தத் தொழிற் சாலை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்தான் வருகிறது. எனவே அந்தப் பகுதியிலே தொழில் வளர வேண்டும் மத்திய அரசு அனுமதி வழங்கியதற்குப் பின்னால், அரசு நில ஆர்ஜிதம் செய்யும்போது மத்திய அரசு 1,2 தொழில்களுக்கு தான் அனுமதி தருகிறது. எனவே அதுவும் வராமல் போகிற அளவிற்கு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் பேச்சு இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே துவங்க இருக்கின்ற இந்த தொழிற்சாலையில் வேலைக்கு ஆட்களை எடுக்கின்றபோது, வட ஆற்காட்டைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிப்பதோடு, பல நேரங்களில் வருந்தத்தக்க அளவிலே இருப்பதுபோல், இல்லாமல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிலே 18 சதவீதம் அளவில் முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் பரிசீலிக்கப்படும்.

திரு. துரை முருகன் : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டுதான். பி.எச்.இ.எல். வருவதை துரைமுருகன் தடுத்துவிட்டார் என்று வந்துவிடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றச்சாட்டு அல்ல. நீங்கள் உட்காருங்கள். I am not going to yield.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, நான் உட்காருகிறேன். பத்திரிகையிலே இதுபற்றி செய்தி வரும். இந்த விவகாரத்தால் மக்கள் மத்தியிலே ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்தும். இந்த நிலைமை வந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வராது. கேள்வி நேரத்திலே முதல் கேள்வி போடுகிறவர்களுக்கு இரண்டு துணைக் கேள்விகள் தரப்படுகின்றன. நீங்கள் துணைக்கேள்வியிலே ஏ, பி, சி என்று மூன்று கேள்வி கேட்டீர்கள். நானும் அனுமதித்தேன். உங்கள் தொகுதியைப் பற்றியது என்று சொன்னீர்கள். இதில் எந்தவிதமான குற்றச்சாட்டும் இல்லை. கேள்வி, பதில் இரண்டையும் கேட்டுக்கொண்டு தான் இருந்தேன். குற்றச்சாட்டாக கருதிக்கொண்டு வாதப் பிரதிவாதங்களை வளர்த்தக் கூடாது. அப்படி உங்களுக்கு விளக்கம் வேண்டுமென்றால் வேறு வகையிலே அணுகவேண்டுமே தவிர, இந்த கேள்வியும், பதிலும் எழும்பொழுது உங்களை பாதிக்கப்போவதில்லை, பாதிக்காது.



திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அது பாதிக்கும் நிலை தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாதிப்பது, பாதிக்காதது மனநிலையைப் பொறுத்தது. நடுநிலையில் இருந்து பார்க்கிறேன். உங்களை பாதிக்காது.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, விடை சொல்கிறபோது அதிலே கூறப்பட்ட கருத்து, கேட்கப்பட்ட கேள்விக்கு அப்பாற்பட்டது. அவர் கேட்டது நஷ்டயீடு தருவதை உயர்த்துவதற்காக அவ்வளவு பெரிய வேண்டுகோளை விடுத்து கேள்வி கேட்டார். அந்த நஷ்ட ஈடு தருவதற்கு வாய்ப்பில்லை. நாங்கள் தீர்மானித்துவிட்டோம் என்று பதில் சொல்லலாமே தவிர மத்திய சர்க்கார் தொழிற்சாலை கொண்டு வருவதை தடுக்கிற வகையில் துரைமுருகன் இங்கே இந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்று சொன்னது, துரைமுருகன் அவர்கள் இந்த கேள்வியை கேட்கிறபொழுது ஒரு நோக்கத்தோடு கேட்டதாக ஒரு தவறான எண்ணத்தை ஏற்படுத்த அது பயன்படுகிறது. அவைத் தலைவர் அவர்கள் அந்த கேள்விக்கு விடை கூறும்போது அந்த உட்பொருள் தேவையில்லை என்று சொல்லியிருப்பாரேயானால் அது நல்லது. அப்படிச் சொல்லவில்லை என்று சொன்னால் துரைமுருகன் அவர்கள் அதை மறுப்பதற்கு தாங்கள் வாய்ப்பு அளிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதி அளித்தால் நானே சொல்லிவிடுகிறேன். தொழிற்சாலை வருகிறது. இதைப் போன்று வருகிற கேள்வியால் வெகுவிரைவிலே ஆரம்பிக்கப்பட வேண்டிய அந்த தொழிற்சாலை காலதாமதப்பட்டுவிடக் கூடாது ; அது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி என்பதாலே அவர்களுக்கும் அது இழப்பு என்கிற காரணத்தாலே அப்படி கேட்க வேண்டாம் என்ற வேண்டுகோளைத் தான் சொன்னேனே தவிர குற்றச்சாட்டோ, அல்லது உள்நோக்கமோ இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். அவர் உதவியாக இருக்க வேண்டும். இந்த தொழிற்சாலை விரைவிலேயே வரவேண்டும். மத்திய அரசு ஒன்றிரண்டு தான் அனுமதி வழங்குகிறது. அதுவும் இது போன்ற கேள்வியால் தடைப்பட்டு போகக்கூடாது என்று என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் மறுப்பதற்காகவோ, அல்லது சொல்லப்பட்ட கருத்தை எதிர்ப்பதற்காகவோ எதையும் சொல்லவில்லை. தொகுதிக்கு நன்மை என்பதற்காக இந்த தொழிற்சாலை வரவேண்டும் என்பதற்கு இடையூறாக இந்த கேள்வி அமைய வேண்டாம் என்ற கருத்து ஏற்படுவது கூட நல்லதல்ல. ஏனென்றால் ஏழை,

[1981 மார்ச் 25

எளிய விவசாயிகளின் நலனைக் கருதி அவர் கேட்ட காரணத்தால் ஒரு நலன், இன்னொரு நலனுக்கு எதிரானது என்று கேள்வி நேரத்திலே சொல்வது கூட பொருத்தமல்ல. அதுவும் அப்படிச் சொல்கிறபொழுது கேள்வி கேட்ட நோக்கத்தைக் குறித்து தவறான எண்ணம் வரக்கூடாது என்பதை நான் மறுபடியும் தங்கள் மூலமாக வலியுறுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த நோக்கத்தோடு சொல்லவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இரண்டு தடவைகளிலும் நான் சொன்னதைத்தான் மூன்றாவது தடவையும் சொல்ல இருக்கிறேன். தாங்கள் அனுமதித்தால், நான் குற்றச்சாட்டே சொல்லவில்லை. மத்திய அரசைச் சேர்ந்த பெல் நிறுவனமோ அல்லது வேறு எந்த நிறுவனமோ எப்போதாவது ஒன்றிரண்டுக்குத் தான் அனுமதி கிடைக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : திருப்பித் திருப்பி அதையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அது எப்படி முறையாகும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் தொழில் அமைச்சர். பலமுறை கேட்டு இப்போது ஒன்றிரண்டு தடவை தான் கிடைத்தது என்று சொல்லியிருக்கிறார். அது தப்பா ? அது ஒன்றும் தப்பில்லை.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் கோபித்துக்கொள்ள வேண்டியதில்லை. இன்னும் அதிகமாக அவருக்கு அந்தக் கட்சியிலே இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்தி அதிகமான தொழில்களை தமிழ்நாட்டிற்கு வாங்கிக் கொடுத்தால் தமிழ்நாடு அதைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை.

வினா எண் 484.—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

தஞ்சை வட்டத்தில் மெரைன் காம்ப்ளெக்ஸ் தொழிற்சாலை அமைக்கும் உத்தேசம் தற்பொழுது எந்தநிலையில் உள்ளது ?



1981 மார்ச் 2…]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : உப்பளங்களில் கிடைக்கும் 'பிட்டர்னஸ்' என்ற உபபொருளைக் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் கடல் சார்புள்ள இரசாயனப் பொருட்களை (Ma ine Complex) தயாரிப்பது பற்றிய செயற்குறிப்பு தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஆய்வில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : தஞ்சை மாவட்டத்திலே கடல் சார்புள்ள ரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை எந்த எந்தக் கடல் பகுதியில் ஆரம்பிக்கப்படும் ? எவ்வளவு கோடி ரூபாய் செலவில் எப்போது ஆரம்பிக்கப்படும்? அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டைக்குப் பக்கத்தில் மறவக்காடு பகுதியில் ஏறக்குறைய 5,500 ஏக்கர் நிலப் பரப்பில் உப்பு எடுப்பதற்கான அந்த வேலைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. உப்பும் உப்பு சார்ந்த ரசாயனப் பொருட்கள் தயாரிக்கும் தொழில்கள் 20 இலட்சம் ரூபாய் முதலீட்டில் நிறுவுவதற்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : வேதாரண்யம் கடற்கரைப் பகுதியிலே வனத்துறையின் சார்பாக பறவைகள் சரணாலயம் வைத்திருக்கிறார்கள். லவ் பேர்ட்ஸ் பறவைகள் இருக்கின்றன. வெளிநாடுகளிலிருந்து வருகின்ற அறிஞர்கள் ஆராய்ச்சிக்கு இது இடையூறாக இருக்கும், ஆகவே அந்த இடத்திலே தொழிற்சாலை வைக்கக் கூடாது என்று அரசுக்கு செயற் குறிப்பு வந்திருக்கிறது. அதை முறியடித்து பல தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கூடிய முறையிலே அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : வேதாரண்யம் பகுதியில் சுமார் 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உப்பு தயாரிப்பதற்கான நிறுவனம் ஏற்படுத்த நிலம் ஆர்ஜிதம் செய்வதாக இருந்தது. அந்தப் பகுதியிலே காதல் பறவைகள் மட்டுமல்ல, பெற்றோர் பறவைகள், குழந்தைகள் பறவைகள் மட்டுமல்ல, மற்ற எல்லா பறவைகளும் இருக்கின்றன. பம்பாயிலே இருக்கின்ற இயற்கை சம்பந்தப்பட்ட அந்த நிறுவனத்திடம் கேட்கப்பட்டிருக்கிறது, அந்தப் பகுதியிலே எந்தப் பகுதிகளை பறவைகளுக்காக வைத்திருக்கிறார்கள், மீதியிருக்கிற எந்தப் பகுதியிலே உப்புத் தொழிற்சாலை வைக்கலாம் என்பதைப் பற்றி கேட்டிருக்கிறோம். அவர்கள் இரண்டு ஆண்டுக்காலமாகும் சொல்வதற்கு என்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் அதை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. து. புருஷோத்தமன்: அமைச்சர்கள் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு முன்னால் காலதாமதமாக வந்ததற்காக வருத்தம் தெரிவித்து விட்டு சொல்லியிருக்கிறார்கள். ஆனால் தொழில் அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவை சார்பில் சொல்லியாகிவிட்டது.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியிலே கோடியக்கரைப் பகுதியில்தான் பறவைகள் வந்து தங்குகின்றன. அந்த இடத்திற்கும் தம்பிக்கோட்டை, மறவக்காடு ஆகிய பகுதிகளுக்கும் 50 மைலுக்கு மேல் தூரம் இருக்கிறது. ஏற்கெனவே திருத்துறைப் பூண்டியில் இது துவங்கப்படுவதாக இருந்தது. அந்த பேக்டரியை பாதிக்கும் என்பதால் இகுவோலாஜிக்கல் கிரைசிஸ் ஏற்படும் என்ற காரணத்தால் மேற்கே தள்ளி இருக்கிறார்கள். இந்த இடம் பொருத்தமாக இருக்கும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது ஒன்று, இரண்டாவது இந்தத் தொழிற்சாலை எப்போது துவங்கப்படும்? எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: திரு. அம்பிகாபதி அவர்கள் நான் சொன்ன பதில்கள் இரண்டையும் இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். ஆய்வு நடைபெறுவது, வேதாரண்யம் பகுதியிலே இருக்கிற 60 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்கனவே நான் சொன்னேன், பட்டுக்கோட்டை பகுதியில் மறவக்காட்டில் ஏற்கனவே வேலைகள் தொடங்கி நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் ரசாயனத் தொழிற்சாலை அமைப்பது சம்பந்தமாக ஏழாண்டுகளுக்கு முன் வேதாரண்யத்தில் அமைப்பதாகச் சர்வே செய்யப்பட்டிருக்கிறதா? அப்படிச் சர்வே செய்யப்பட்ட இடம் எவ்வளவு? வேதாரண்யம் என்பது இந்திய நாட்டிலே சுதந்திரத்திற்காக அண்ணல் காந்தி அவர்கள் உப்பு சத்தியாகிரகம் துவக்கிய இடம் வேதாரண்யம் பகுதி. அந்த இடத்தை நினைவு கூர்ந்து வேதாரண்யத்திலே மீண்டும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சரித்திரத்தையெல்லாம் மாற்றக் கூடாது.



திரு. பொ. உத்திராபதி: காந்தி என்று சொல்லிவிட்டேன்; மன்னிக்க வேண்டும். இராஜாஜி அவர்கள் துவக்கிய இடம். மேலும் வேதாரண்யம் என்பது, கடலோரப் பகுதி பூராவும் அதிகமான உப்பு உற்பத்தி ஆகிற இடமாக இருக்கிறது. ஆகவே, மீண்டும் வேதாரண்யத்திலே இந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதில் மறு பரிசீலனை என்ற பிரச்சினையே இல்லை; ஏற்கனவே பரிசீலனையில்தான் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, நாம் எதிர்பார்க்கிறபடி பம்பாயிலே இருக்கின்ற அந்த நிறுவனத்தினுடைய முடிவு நமக்குத் தெரிந்த பிறகு 60,000 ஏக்கரிலே பறவைகளின் தேவைக்குப் போக மீதியிருக்கின்ற பகுதியிலே நிச்சயமாகத் தொழில் ஆரம்பிக்கப்படும்.

## டயர் தொழிற்சாலை நிறுவும் திட்டம்.

*வினா எண். 485.—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்க டயர் தொழிற்சாலை நிறுவும் யோசனை உண்டா?

(ஆ) உண்டெனில் எங்கே அமையவிருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு தலைவரவர்களே, அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்க டயர் தொழிற்சாலை நிறுவும் யோசனை உண்டா என்று கேட்டதற்கு அத்தகைய உத்தேசம் இல்லை என்று அமைச்சரவர்கள் பதில் அளித்திருக்கிறார்கள். தமிழகத்திலே குமரி மாவட்டத்திலேயும், இன்னும் பிற இடங்களிலேயும் ஏராளமான இரப்பர் மரங்கள் அடங்கிய இரப்பர் தோட்டங்கள் இருக்கின்றன. அதிலும் குறிப்பாக லேட்டர் என்ற இரப்பர் பால் உலகத்திலேயே தலை சிறந்த இரப்பர் பால் என்று ஆய்விலேயிருந்து தெரிய வருகிறது. தற்பொழுது டயர் பஞ்சமும், விலை உயர்வும் இருப்பதால் அரசு மறு பரிசீலனை செய்து டயர் தொழிற்சாலையை ஆரம்பிக்க உத்தேசிக்குமா? மீண்டும் பரிசீலிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு இரப்பர் என்ற அந்தப் பெயரிலே, தமிழ்நாடு இரப்பர் லிமிடெட் என்ற பெயரில் கூட்டுறவுத் துறை நிறுவனம் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்க வேலைகள் நடைபெற்று, இப்பொழுது புராஜக்ட் காஸ்ட் ஏறியிருப்பதால் அந்தத் தொழிற்சாலை துவங்கப்பட்டால் அது வயபிலாக இருக்காது, பொருளாதாரரீதியாக இலாபமாக இருக்காது என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது. எனவே, மீண்டும் அது போன்று அரசு துவங்கும் உத்தேசம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன மாவட்டத்திலே வேண்டுமானால் அது பொருளாதார ரீதியிலோ அல்லது வேறு வகைகளிலோ நமக்கு உகந்ததாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் நான் கேட்பது, இரப்பர் அதிகமாகக் கிடைக்கும் குமரி மாவட்டத்திலே நாலைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக பனைத் தும்பு, பனை நார் ஆகியவற்றில் இரப்பரைச் சேர்த்து டயர் செய்யலாம் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்த விஞ்ஞான அடிப்படையில் குமரி மாவட்டத்திலே அந்தத் தொழிற்சாலையை அமைக்க மீண்டும் பரிசீலனை செய்யப்படுமா என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், குமரி மாவட்டத்திற்கும் தொழிற்சாலை அமைக்கின்ற காஸ்டைப் பொறுத்த வரையில் பெருத்த வேறுபாடு இல்லை. வேண்டுமென்றால் குமரி மாவட்டத்தை விட இராமநாதபுரம் மாவட்டத்திலே இடம் எளிதாக, சீப்பாகக் கிடைக்கும். ஆனால் குமரி மாவட்டத்திலே மூலப் பொருள் கிடைக்கிறது என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். இருந்தாலும் அந்தத் தொழிற்சாலை துவக்கப்பட்டால் அது எகானமிக்கலாக, வயபிலாக இருக்காது ; இலாபகரமாக நடத்த முடியாது என்ற அடிப்படையில், ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் உற்பத்திச் செலவு அதிகமாகி, பொருளாதார ரீதியில் இழப்பு ஏற்படலாம் என்றும் வயபிலாக இல்லை என்றும் கூறுகிறார்கள். இது குமரி மாவட்டத்திற்குப் பொருந்தாது. ஏனென்றால் இந்தியாவிலேயே அதிக இரப்பர் விளையாக்கூடிய இடம் குமரி மாவட்டம். தேவைக்கு அதிகமான மூலப் பொருளை குமரி மாவட்டம் கொண்டிருப்பதால் உற்பத்திச் செலவு கட்டாயமாக அதிகம் வராது. ஆகவே, தொழிற்சாலை இல்லாத



குமரி மாவட்டத்தில் அரசு வாகனங்களுக்குரிய டயர்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலையைத் துவங்குவதற்கு அரசு மறு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் கேட்ட கேள்விக்குச் சொன்ன அதே பதில் தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வின்செண்ட் அவர்களின்கேள்விக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரிசன கல்லூரி மாணவர்களுக்கு உதவித் தொகை.

வினா எண். 374—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விடுதிகளில் தங்கிப் படிக்கும் அரிசன கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் உதவித் தொகையை உயர்த்தித் தரும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(முற்பகல் 10-50).

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, பேரவைக்குக் காலம் தாழ்த்தி வந்ததற்கு என்னுடைய வருத்தத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வினாவுக்கு விடை—இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, விடுதியிலே தங்கிப் படிக்கும் பள்ளி மாணவர்களுக்கு உணவுக்காக வழங்கும் தொகையை சமீபத்தில் அரசு உயர்த்தி இருக்கிறது. அதைக் கருத்தில்கொண்டு கல்லூரிகளில் படிக்கும் அரிசன மாணவர்களுக்கும் அந்த உதவித் தொகையை கூட்டிக் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, அரிசன மாணவர்களுக்கு உதவித் தொகையை வழங்குவதற்கு அந்த மாணவர்களுடைய பெற்றோர்களுடைய வருமான வரம்பு. ரூ. 3000 ஆக இருக்க வேண்டும் என்று இருக்கிறது. அதை உயர்த்தும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தை உயர்த்துவது குறித்தும் அரசு பரிசீலிக்கும்.

திரு. த. மாரிமுத்து : பேரவைத் தலைவர் அவர்களே, பி.யூ.சி. படிப்பு எடுக்கப்பட்டு, பிளஸ் டூ ஆரம்பித்த பின்னர் பி. யூ. சி. மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட உதவித்தொகை பிளஸ்டூ மாணவர்களுக்கும் வழங்கப்படுகிறதா ? இல்லை எனில் அது அவர்களுடைய நியாயம், உரிமை என்பதால் வரும் ஆண்டி லிருந்தாவது அதை வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, உதவித் தொகை வழங்கப்படும்.

திரு. எஸ். இராசாராமன் : தலைவர் அவர்களே, பாப நாசம் பகுதியில் இருக்கிற அரிசன விடுதி மாணவர்களுக்கு சரி யான முறையில் இலவச உடை அளிக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது உதவித் தொகை தருவது பற்றிய கேள்வி.

திரு. சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர்அவர்களே, அரிசன மாணவர்கள் தங்கிப்படிக்கும் விடுதிகளில் அளிக்கப்படும் உதவிகள் போதுமானதாக இல்லை என்பதும்,அவர்கள் செலவு செய்த பின்னரும் அந்தத் தொகை சரியாக அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் சமீபத்தில் 23–2–1981 அன்று திருச்சியில் காஜாமலை அரிசன மாணவர் களின் விடுதியில் அந்த மாணவர்களுக்குச் சரியான உணவு அளிக் கப்படாத காரணத்தால் அவர்கள் மயங்கிவிழுந்து ஆஸ்பத்தி யில் அனுமதிக்கப்பட்டதாக செய்தி வந்துள்ளது............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உதவித் தொகை கொடுப் பதற்கும் மயங்கி விழுவதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. சு. .பாலன் : அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உதவித் தொகை சரியான முறையில் அவர்களுக்கு சேராத காரணத்தால் அவர்களுக்கு உணவு சரியாக அளிக்கப்படவில்லை





அந்த உதவித் தொகை போதுமானதாக இல்லை, அதனால் அவர்களுக்கு அந்த ஹாஸ்டலில் சரியான சாப்பாடு போடாததால் அவர்கள் மயங்கி விழுந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்க நேர்ந்தது. இந்த நிலையைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கனவே இது குறித்து நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரி விடுதிகளில்தங்கி படிக்கும் மாணவர்களுக்கு உதவித் தொகை அளிப்பதற்கு குடும்ப வருமானம் ரூ. 3,000-க்கு மேற் படாமல் இருக்க வேண்டும் என்று இங்கே விதி இருக்கிறது. ஆனால் மத்திய அரசைப் பொறுத்த வரையில் 6,000 ரூபாய் என்று இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அத்தொகைக்கு ஈக்குவலாக' தமிழக அரசும் ரூ. 6,000 என்று அந்த வரம்பை உயர்த்தி, அத்தகைய மாணவர்களுக்கு உதவ அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் பதில் அளிக்கையில் அரசு இது குறித்து பரிசீலிக்கும் என்று தெரிவித்து இருக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, சட்டக்கல்லூரி படிப்பும் ஒரு தொழில் கல்வி தான். மெடிகல் காலேஜ், இனஜி னீரிங் காலேஜ் போன்ற கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு மாதம் ரூ. 150 தரப்படுகிறபோது, சட்டக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டும் ரூ. 85 கொடுப்பது, தொழில் கல்வி படிக்கும் மாணவர்களிடையே இரண்டு விதமான பாகுபாடு ஏற் படுத்துவது போல் இருக்கிறது. ஆகவே, மெடிகல், இன்ஜினியரிங் போன்ற கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு அளிப்பது போல் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் உதவி அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னது போல், அந்தக் கருத்தின் அடிப்படையில் ஆதித் திராவிடர் நல இலாகா இயக்குநர் அவர்களிடமிருந்து ஒரு வரைவுக் கடிதம் அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. அந்த வரைவுக் கடிதத்தை அரசு பரிசீலித்து கூடிய விரைவில் தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று சொன் னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே சொல்லியிருக் கிறார்கள். அந்த உதவித் தொகை போதாது, நிச்சயமாக

உயர்த்திக் கொடுப்போம் என்று. அதே போல் கடன் தொகை கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பிறகும் இந்தக் காலதாமதம் ஏன்? உதவித் தொகையும், கடன் தொகையும் அளிப்பதில் உண்டான காலதாமதத்தால் மாணவர்கள் ஹால் டிக்கட் கிடைக்காமல் அவதிப்படுவது அரசுக்குத் தெரியுமா ? கால தாமதத்திற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உதவித் தொகை அளிக்காததைப் பற்றி குறிப்பிட்டு, அதன் காரணமாக ஹால் டிக்கட் கிடைக்காமல் மாணவர்கள் அவதிப்படுவதைப் பற்றிச் சொன்னார்கள். அது குறித்து அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்து விட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசன கூட்டுறவு நிலக்குடியேற்றம்.

*வினா எண். 375—திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

அரிசன நிலக் குடியேற்ற கூட்டுறவுகளுக்கு உயிரூட்ட மாற்றுத் திட்டம் எதுவும் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாற்றுத் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன நிலக்குடியேற்றக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1960-க்கு முன்பு 5 ஏக்கர், 7 ஏக்கர் நிலங்கள் கொடுத்து அவர்கள் அதில் விவசாயம் செய்து வந்தார்கள். ஆனால் தற்போது வறட்சியின் காரணமாக பல இடங்களில் விவசாயம் செய்ய முடியாமல் இருப்பதால், அந்த நிலங்களை வேறு ஒருவருக்கு விலைக்கு விற்றுவிட்டார்கள். ஆகவே, அந்த நிலங்களை மீண்டும் அவர்களுக்கே கொடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 56 ஆதி திராவிடர் நிலக்குடியேற்றச் சங்கங்கள் இருந்துவந்தன. அவற்றில் ஒரு சில சங்கங்கள் செயல்பட்டன. இவைகள்



நல்ல முறையில் இயங்காத காரணத்தால் இச்சங்கங்களுக்கு 1973 முதல் அரசு உதவித் தொகை வழங்குவதை நிறுத்திவிட்டது. அதன் பின்னால் இப்போது மாண்புமிகு உறுப்பினர் எடுத்துக் காட்டியது போல், இந்தக் குறை அரசுக்கு இதுவரையில் வரவில்லை. குறிப்பிட்டுச் சொன்னால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சி. பழனிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் ராமநாயக்கன் பாளையத்தில் 20 ஆண்டுகாலமாக விவசாயம் செய்து வருகிறார்கள். அதில் பல்வேறு ஜாதிக்காரர்கள் இருக்கிறார்கள். அதனை ஆதித் திராவிட மக்களுக்குப் பட்டா செய்து கொடுத்தால் அவர்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து தமிழ்நாடு ஆதித்திராவிட வீட்டு வளர்ச்சிக் கழகத்தில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஜாரி செய்யப்பட்டுள்ள நிலங்களில் பயன் உள்ள முறையில் பயிர் செய்வதற்கு உதவி செய்யும் வகையில் தனிப் பிரிவு 'லேண்ட் டெவலெப்மெண்ட் செல்' ஒன்று ஏற்படுத்த வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. இந்த ஆணை 4—10—1980-ல் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இப்பிரிவு இச்சங்கத்தின் நிலங்களை நல்ல முறையில் பயிர் செய்வதற்கு வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள் :** தலைவர் அவர்களே, ஆதித் திராவிட மக்களுக்கு வீட்டு மனைகள் கூட்டுறவு முறையில் கொடுக்கப்பட்டு 6 ஆண்டுகாலம் ஆகிவிட்டது. அந்த நிலத்தில் முன்பு இருந்தவர்களே இருந்துகொண்டு இருக்கிறார்கள். பட்டா பெற்றவர்கள் அதை அனுபவிக்கவிடாமல் செய்து கொண்டு இருக்கிறார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதியில் காட்டு நாய்க்கன்பட்டி, ஆதனூர், சந்திரகிரி போன்ற இடங்களில் இருக்கிறது. இது சம்பந்தமாக அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[முற்பகல் 11.00]

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு எடுத்துச் சொன்னால் அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

**திரு. ஜி. மூர்த்தி :** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலக்குடியேற்றத்திற்கு 2-சி புறம்போக்கு நிலத்தை கொடுக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்திலே உறுதி செய்யப்

பட்டிருக்கிறது. அதைக் கைப்பற்றியுள்ள ஆதி திராவிடர் அல்லாதவர்களை வெளியேற்றிவிட்டு, அந்த மக்களுக்கு பட்டா செய்து கொடுக்க, அந்த மக்களைப் பயனடையச் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 3. உரிமைப் பிரச்சினை

### அவை நடவடிக்கையைக் கண்காணிக்க போலீஸ் ஸ்பெஷல் பிரான்ச் அனுப்பிய சுற்றறிக்கை—தீர்ப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ரா. உமாநாத், திரு. என். எஸ். வீ. சித்தன் ஆகியோர் 27–2–1981 அன்று பேரவையில் காவல்துறை (ஸ்பெஷல் பிரான்ச்) கண்காணிப்பாளரின் 31–1–1981 தேதியிடப்பெற்ற சுற்றறிக்கை குறித்து ஒரு அவை உரிமை மீறல் பிரச்சினையை எழுப்பினார்கள். 4–3–1981 அன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இதற்கான விளக்கம் அளித்தார்கள்.

சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் அவர்கள் தந்த விளக்கத்தை மாண்புமிகு பேரவை முன்னவர் பேரவைக்கு அளித்தார். இரு அவைகளிலும் விவாதிக்கப்படுகின்ற பிரச்சனைகளை உடனுக்குடன் தெரிந்துகொண்டு தேவையான, முழுமையான தகவல்களை மாநிலத்தில் எந்த இடத்தோடும் தொடர்பு கொண்டு, அரசுக்கும், அவைகளுக்கும் உண்மையை உடனுக்குடன் தெரிவிக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் அந்த அறிக்கை பிறப்பிக்கப்பட்டது என்றும், எந்த ஒரு கட்சியையோ, எந்த ஒரு உறுப்பினரையோ தனிப்பட்ட முறையில் கண்காணிப்பதற்கு உத்தரவிடப்படவில்லை என்றும், இந்த நடவடிக்கை அவையின் உரிமையைப் பாதிக்கும் என்று சி.ஐ.டி. துறை கிஞ்சித்தும் எதிர்ப்பார்க்கவில்லை என்றும், அப்படிப் பாதிப்பதாகக் கருதப்படும் என்று ஒரு ஐயம் எழுந்ததாலே அந்தக் குறிப்பாணை திரும்பப் பெறப்பட்டது என்றும், இனி இம்மாதிரி எதுவும் நிகழாது என்றும் துறை உறுதியளித்



துள்ளது என்றும், மேலும் எதிர்பாராத விதமாகத் தவறான ஐயத்தை இந்தச் செயல் ஏற்படுத்தியதற்கு சி.ஐ.டி. துறை தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது என்றும் சி.ஐ.டி. அடிஷனல் இன்ஸ்பெக்டர் ஜெனரல் கூறியுள்ளதாக அவைக்குப் பேரவை முன்னவர் அவர்கள் தெரிவித்தார்.

மேலும், உண்மையில் அப்படி யாரும் பேரவையில் அனுமதிச் சீட்டுப் பெறவில்லை என்றும், யாரும் அந்த ஆணைப்படி வந்து கவனிக்கவும் இல்லை என்றும், இனி இம்மாதிரி நடைபெறக் கூடாது என்றும், நடைபெற்றால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என்றும் சி.ஐ.டி. துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டு இருப்பதாகவும், பேரவை முன்னவர் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சுற்றறிக்கை உறுப்பினரின் உரிமைகளைப் பாதிக்கும் என்ற ஐயம் எழுந்தவுடன் அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டதாலும், மேற்கண்ட நடவடிக்கைக்கு சி.ஐ.டி. துறை வருத்தத்தைத் தெரிவித்துள்ளதாலும், இனி இம்மாதிரி எதுவும் நிகழாது என்று அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டு இருப்பதாலும், இம்மாதிரி நடவடிக்கைகள் நிகழாவண்ணம் செயல் புரியுமாறு சி.ஐ.டி. துறையினர் இனியாவது கவனமாக இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தி இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை எதுவும் தேவை இல்லை என நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, ஒரு விளக்கம், விவாதம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமாக இருக்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : ரூலிங்ஸ் கொடுப்பது சம்பந்தமாக நான் உங்களுக்கு ஒரு விஷயத்தை 'சப்மிட்' பண்ண விரும்புகிறேன், உங்கள் தீர்ப்புக்கு முன்னால் ஒரு ப்ரொசீஜரை சொல்ல விரும்புகிறேன். நீங்கள் தீர்ப்பு சொல்வதிலே இரண்டு விதம் உண்டு. எக்ஸ்பங்ஷன் அல்லது பாயின்ட் ஆப் ஆர்டர்— இந்த மாதிரியான விஷயங்களில் உங்களுடைய தீர்ப்பு 'பைனல்'. இட் கெனாட் பி கொஸ்டின்ட்' ஆனால் இந்த விஷயத்தில் அப்படிப்பட்ட நிலை அல்ல என்பதை ரூல்ஸ் வைத்துச் சொல்கிறேன். எப்படி என்றால் இதிலே 'பிரைமா பேசி' இருக்கிறது என்று நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதன் பிறகு அதுகமிட்டிக்குப் போக வேண்டாமா ? அல்லது அவை நிர்ணயிக்க வேண்டுமா என்ற இரண்டில் ஒன்றுதான் முடிவு செய்யப்பட வேண்டுமே தவிர,

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 25

நீங்கள் அவர்களை மன்னித்து விடலாம் என்பது சரியல்ல. மன்னித்துவிடலாம் என்பது உங்கள் தீர்ப்பு. உங்கள் தீர்ப்பு இந்த விஷயத்தில் செல்லாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மேல் நடவடிக்கைத் தேவையில்லை என்பதால்தான் ....(குறுக்கீடு) குறிப்பிட்ட சுற்றறிக்கையில் உறுப்பினரின் உரிமைகளைப் பாதிக்கும் என்ற ஐயம் எழுந்தவுடன் அந்த ஆணை திரும்பப் பெறப்பட்டதாலும் மேற்கண்ட நடவடிக்கைக்கு சி.ஐ.டி. துறை வருத்தத்தை தெரிவித்து உள்ளதாலும் இனி இம்மாதிரி எதுவும் நிகழாது என்று அரசு தரப்பில் உறுதி அளிக்கப்பட்டிருப்பதாலும் இம்மாதிரி நடவடிக்கைகள் நிகழாவண்ணம் செயல்புரியுமாறு சி.ஐ.டி. துறையினர் இனியாவது கவனமாக இருக்க வேண்டுமென்று அறிவுறுத்தி இப்பிரச்சினையில் மேல் நடவடிக்கை எதுவும் தேவை இல்லை என நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே தீர்ப்பிலேயே நீங்கள் கொஸ்டின் பண்ணுவதாக இருந்தாலோ அல்லது இது சம்பந்தப்பட்ட விவாதங்களை மேற்கொண்டு செய்ய வேண்டும் என்றால் அதை வேறு வழிகளில் செய்யலாமே தவிர இப்போது உடனே டிஸ்கஷனை அலவ் பண்ணுவது. என்பது இயலாது. (குறுக்கீடு).

THIRU R. UMANATH : In the Lok Sabha, the rules have been so framed as to get rid of the awkward position (interruption) that arose in the House of Commons and at the same time not to abridge any substantive right of the Members. So all the privilege matters are brought by the Speaker before the House: he takes the sense of the House: either the House determines it then and there or remits it to the Committee of Previleges. Only in cases where the Speaker feels that the matter is patently absurd or hardly worthwhile, under the general powers he withholds his consent to bring such matters before the House.

In 'Practice and Procedure of Parliament' by Kaul and Shakdher page 246, it is stated as follows :—

" As stated earlier, inasmuch as the House alone is the master of its privileges, normally all questions of privilege should be considered by the House. Speaker's power basically is to see whether on the face of it; a matter is such as deserves to be allowed to be raised as a matter of privilege giving it priority over other business



1981 மார்ச் 25] [திரு. ரா. உமாநாத்]

ஆகவே நீங்கள் அனுமதி அளித்துவிட்டீர்கள்.

Once the Speaker has given his consent for the raising of the matter as a privilege issue, it is entirely for the House to decide whether the matter actually involves a breach of privilege of contempt of the House and whether the House should itself take a decision in that regard or refer to the Committee of Privileges.

ஆகவே நீங்கள் அனுமதித்துவிட்ட பிறகு சில தவறுகள் இருந்து அவர்கள் மன்னிப்பு கேட்டிருக்கிறார்கள் என்பதால் இதை இத்தோடு விட்டுவிடலாம் என்று சொல்கிறபோது ப்ரைமா ஃபேசி இருக்கிறது என்று ஒத்துக் கொண்டாகிவிட்டது என்றுதான் அர்த்தம்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** : பேரவைத் தலைவர் அவர்களே, ப்ரைமா ஃபேசி இல்லை என்பதுதான் இப்போது இருக்கின்ற பிரச்சினை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அவர்கள் அனுப்பிய அறிக்கையில் எந்த எண்ணத்தோடு எழுதி அனுப்பினார்களோ அந்த எண்ணத்திற்கு மாறுபட்ட நிலைமை ஏற்பட்டுவிட்டதால், அவர்கள் எதிர்பாராத நிலைமை ஏற்பட்டுவிட்டதால் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் ; இனி இப்படி வராமல் எச்சரிக்கையாக இருக்கிறோம் ; இதை மறந்துவிட வேண்டும் என்று கேட்கிறார்கள். அது தவிர நாங்கள் அந்த நோக்கத்தில் தான் செய்தோம் ; ஆகவே எங்களை மன்னித்துவிடுங்கள் ; என்று அவர்கள் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ப்ரைமா பேசி இல்லை.

**திரு. ரா. உமாநாத் :** அப்படி இல்லை என்றால் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் போலீசின் சார்பாக இனிமேல் இந்த மாதிரி நடந்துக் கொண்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

[முற்பகல் 11–10]

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இங்கே உருவாக்கப்பட்டு, சந்தேகம் ஏற்பட்டு விட்ட பிறகு, இந்தத் தவறைக் கூட அவர்கள தவறான நோக்கம் இல்லையென்றாலும் தெரியாத்தனமாகக் கூட இனிமேல் அப்படிச் செய்யக் கூடாது, செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறப்பட்டது.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த அவை
யினிடம் மன்னிப்பு கேட்பது என்பது அதுவும் ஒரு அதிகாரி கேட்
பது என்பது உண்மையிலேயே பெருமைப்படத்தக்க ஒரு விஷய
மாகத்தான் கருத வேண்டும். அந்த அதிகாரியைப் பொறுத்த
வரையில் எனக்கு பெர்சனலாக எந்த இம்பார்ட்டன்ஸும்
கிடையாது. இன் பேக்ட் சம் ரெப்பரசன்டேஷன் சீப் மினிஸ்டர்
மூலமாக நான் கொண்டு போய் அது பேவரபிளாக கன்சிடர்
பண்ணியிருக்கிறது என்றாலும் கூட, இதிலே பெர்சனல்லாக
கொஸ்டினே இல்லை. எனவே—எந்த ஒரு அதிகாரியாக இருந்
தாலும்—பேரவை என்கிறபோது, அது எல்லாவற்றிற்கும் மேலா
னது என்பது உண்மை.—சப்போஸ் இதிலே அந்த சர்க்குலரை
இஷ்யூ பண்ணியதற்கு அன்-கண்டிஷனல் அப்பாலஜி என்று சொல்லி
யிருந்தால், நாங்களே அதை முன் வந்து வரவேற்று இருப்போம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்
களே, இங்கே ஐயம் ஏற்பட்டது சரிதான் என்று சொல்லியிருந்தால்
மன்னிப்புக்கே இடம் இல்லை. ஐயம் ஏற்படக் கூடிய சூழ் நிலை
உருவாக்கப்பட்டதை எண்ணி வருந்துகிறோம். இதுபோல் இனி
நடவாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுதான் பொருள்
நோக்கம் இருந்திருந்தால், இந்த விவாதமே ஏற்படாதவாறு
அவர்கள் மீது நாங்களே நடவடிக்கையை எடுத்திருப்போம்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே,
நோக்கம் அந்த சர்க்குலரிலே இருக்கிறது. அது வெளியே
தெரியக் கூடாது—இரகசியமாக பண்ணுங்கள் என்று. இப்
பொழுது முழு விவரமும் வந்து விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சி.ஐ.டி. இலாகா என்பதே
இரசியமாக அவர்கள் வேலையைச் செய்வதுதான். ஆகை
யினால் இதிலே ஒன்றும் இல்லை.

திரு. ரா. உமாநாத் : இரகசியமாக அவர்கள் வெளியே
என்ன வேண்டுமென்றாலும் செய்து கொள்ளட்டும். ஆனால்
இங்கே, உள்ளே, நடக்கும் நிகழ்ச்சிகளை அவைக்குத் தெரி
யாமல் புரொசிடிங்ஸ் எடுக்கிறது என்பதை நிச்சயமாக அனுமதிக்க
முடியாது. மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டிக் கொள்
கிறேன், அவையிடம் மன்னிப்பு கேட்டது என்பது பெருமையான
விஷயமாக இருந்தாலும் கூட, சவன் நௌ இப்போது கூட
அந்த சென்டென்ஸை வாங்கி படித்துப் பாருங்கள் தெரியும்.
எங்களுக்கு அச்சம் ஏற்பட்டதற்காகத்தான் அவர்கள் வருந்து
கிறார்களாம். அச்சம் ஏற்படாமல் இருந்தால் வருந்த
மாட்டார்களா ? அந்த சர்குலரை இரகசியமாக இஷ்யூ பண்ணி
யதற்கு மன்னிப்புக் கேட்கிறோம் என்று சொல்லியிருந்தால் விஷ
யம் முடிந்து விட்டதே.



மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத்
அவர்களுடைய திறமையை நான் பாராட்டுகிறேன். குற்றத்தை
ஒப்புக் கொண்டால் தண்டனை உண்டு அல்லது வேறு ஏதாவது
வழிகளிலே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டாக வேண்
டும் என்ற வகையில் கூறுகிறார். குற்றமே செய்ய வில்லை
என்பதையும், நோக்கம் அது அல்ல என்பதையும் தெளிவு படுத்தி
இருக்கிறார்கள். யாரையும் கண்காணிக்க வேண்டும் என்பதற்
ாகவோ, அவர்களைக் கட்டுப்படுத்தி, அவர்களுடைய உரிமை
யைப் பறிக்க வேண்டும் என்ற நோக்கமோ இல்லை. நாங்கள்
அவ்வப்போது செய்திகளைத் தெரிவிப்பதற்காக இந்த நடவடிக்கை
களை எடுக்க விரும்பினோம். அது மற்றவர்களுடைய
மனதில் ஐயத்தை உண்டு பண்ணியதால், அதற்காக நிச்சயமாக
நாங்கள் வருந்துகிறோம். இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேல்
வராமல் பார்த்துக் கொள்கிறோம். அதற்காக வருத்தத்தை
தெரிவித்துக் கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, அவைத் தலைவர் அவர்கள், தங்களுடைய கருத்தாக
இங்கே படித்த அந்த அறிக்கையிலேயே, ஒரு அடிப்படையான
பிரச்சினை எழும்புகிறது. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
கள் எந்த விதமான உள்நோக்கமோ, குற்றமோ இல்லை
என்ற ஒரு கருத்தைச் சொல்லி, பிரைமா பேசி இல்லை என்று
தெரிவித்து, ஆகையினால் இந்தப் பிரச்சினையிலே அவர்கள்
சொன்ன பதிலை கேட்கிறபோது, இந்த உரிமைப் பிரச்சினை
அடிப்படையில் அவையில் விவாதிக்கவோ, அல்லது உரிமை குழு
விற்கு அனுப்பவோ அவசியம் இல்லை என்று முதலமைச்சர் அவர்
கள் கருத்து தெரிவித்தார்கள். அவைத் தலைவர் அவர்கள்
சொன்னதை, முதல் அமைச்சர் அவர்கள் இங்கே சொல்லிவிட்
டார்கள்.

ஆனால் அவைத் தலைவர் அவர்கள் படித்த அறிக்கையிலேயே
ஒரு உரிமைப் பிரச்சினை தொக்கி நிற்கக் கூடிய ஒரு நிலைமை
ஏற்படுகிறது. எந்த ஒரு தனிப்பட்ட உறுப்பினருடைய உரிமை
யையும் பறிக்கத் தக்க வகையிலோ அல்லது எந்த உறுப்பினரை
யும் கண்காணிக்கவோ, எந்த விதமான நோக்கமும் காவல் துறை
யிலே, அதுவும் துப்பறியும் இலாக்காவைச் சேர்ந்தவர்களாலே
அறிக்கை வெளியிடப்படவில்லை என்றும் ஆனால் தவறாக அப்
படிக் கருதப்பட்டு விட்டது என்ற காரணத்திற்காக வருத்தம்
தெரிவித்துக் கொள்கிறோம் என்று இதிலே தெரிவிக்கப்
பட்டிருக்கிறது என்று அவைத் தலைவர் அவர்கள்
படித்தார்கள். படித்ததை வைத்துச் சொல்கிறேன். எழுத்து
மூலமாக என்னிடத்தில் எதுவும் இல்லை.

ஆனால் பொதுவாக இந்த அவையை கண்காணிக்கிறார்கள். பொதுவாக இந்த அவையினுடைய நடவடிக்கைகளைப் பற்றிய குறிப்புகளை அனுப்புவதற்காகத்தான், நாங்கள் இவ்வாறு அனுப்பினோம் என்று தெரிவிக்கிறார்கள். பொதுவாகக் கூட இந்த அவையை கண்காணிக்க, அபபடி நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கத்தினுடைய எந்தத் துறையாக இருந்தாலும், அது துப்பறியும் இலாகாவாக இருந்தாலும் அதிகாரம் இல்லை. முறையும் இல்லை. இது அவை உரிமையை மீறிய காரியம். சபாநாயகர் அவர்களாலேயே அப்படி ஏதாவது ஒரு வகையில் அறிந்து தெரிவிக்கும்படி, எந்த இலாகாவையாவது துணைக்கு அழைக்கப்பட்டால் தவிர.... (மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கனவே இதைப்பற்றி நிறையப் பேசியாகி விட்டது. அன்று நாவலர் படித்த பதிலைத் தான் இன்று நான் படித்தேன்.

**திரு. க. அன்பழகன்:** நான் சொல்வது ஒரு அடிப்படைப் பிரச்சினை. பேரவைத் தலைவர் அவர்கள் ஒன்றிரண்டு நிமிடங்கள் நான் சொல்வதைக் கேட்டுவிட்டு அவர்கள் மறுத்துவிடலாம் மறுக்க வேண்டாம் என்பது என் கருத்து அல்ல. பொதுவாகக் கூட இந்த அவையைக் கண்காணிக்கிற உரிமை காவல் துறையினருக்கு அதுவும் துப்பறியும் இலாகாவிற்குக் கிடையாது. அப்படி ஒரு உரிமை அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டுமானால் பேரவைத் தலைவர் அவர்கள் தெரிவித்தால் தான் அப்படி கண்காணிக்கலாமே தவிர சபாநாயகர் மூலம் அல்லாமல் கண்காணிப்பதாகச் சொல்வது முறையல்ல அப்படிக் கண்காணிப்பதில் வேறு நோக்கம் இல்லை என்று அவர்கள் பதிலில் இருக்கிறது. அந்த துறையின் பதிலில் இருக்கிறது. அப்படிப் பதில் தெரிவித்ததை அவர்கள் மாற்றிக் கொள்கிற அளவிற்கு சபாநாயகர் அவர்கள் தகுந்த முறையில் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டிய கட்டுப்பாடு சபாநாயகர் அவர்களுக்கு இருக்கிறது. அந்தக் கடப்பாட்டினை உணர்ந்து கருத்து திருத்தப்பட்டாலன்று உரிமை ப்பிரச்சினை தீராது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே இதில் உள்ள பிரச்சினை உத்தரவு போட்டவர்கள், அனுப்பியவர்கள் இந்த மாமன்றத்தில் இருக்கிற உறுப்பினர்களுடைய உரிமையைக் கட்டுப்படுத்தவோ கண்காணிக்கவோ செய்தார்களா என்பது முதல் கேள்வி. அந்த எண்ணத்தில், அந்த நோக்கத்தில் அந்த உத்தரவு வெளியிடப்படவில்லை என்பதையும்



இங்கே பதில் சொல்ல வேண்டியவர்கள் உடனுக்குடன் பதில் சொல்ல, ஆவன செய்ய அந்தச் செய்திகளை நிலைமைகளை எல்லாம் தெரிந்து உடனுக்குடன் தகவல்களைத் தெரிவிக்க நடவடிக்கைகள் எடுத்தோம் என்பது அவர்களுடைய விளக்கமாகும். இது முதன்முதலாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இன்றைய தினம் அவைத் தலைவர் அவர்கள் தீர்ப்பு கூறும்போது நோக்கத்தைப் பற்றி சேர்த்துத்தான் இது வருகிறதே தவிர வெறும் வார்த்தைகளை வைத்துக் கொண்டு மட்டும் அந்தத் தீர்ப்பு அளிக்கவில்லை என்பதை இந்த மன்றம் உணரும் என்று நான் நம்புகிறேன். அந்த வகையில் முதல் அமைச்சர் என்ற முறையில், இந்த அரசின் பொறுப்பு என்ற வகையில் கருத்துச் தெரிவிக்கிறேன். இங்கிருக்கிற யாருடைய உரிமையையும் பறிப்பதற்காகவோ கட்டுப்படுத்துவதற்காகவோ அவர்களைக் கண்காணிப்பதற்காகவோ இந்த உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்பதை அவர்கள் உத்தரவாதத்தோடு சொல்வதும் இதற்கு முன் அப்படி இல்லை என்பதையும் இப்படிப்பட்ட சந்தேகங்கள் ஏற்படுகிறது என்று தெரிந்தவுடன் அந்த உத்தரவு திரும்பப் பெறப்பட்டு விட்டதாகவும் இனி இப்படிப்பட்ட சந்தேகங்கள் ஏற்படாத அளவிற்கு எச்சரிக்கையாக இருப்போம் என்று சொல்கிறபோது நோக்கத்தில் எந்தக் களங்கமும் கற்பிப்பதற்கு சூழ்நிலை எதுவும் இல்லை என்ற காரணத்தால் இதை நான் இங்கே தெளிவு படுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உமாநாத் அவர்கள் சொன்னதற்குச் சொல்கிறேன். விதி 250-ல் ஓர் உறுப்பினர், 'உரிமைப் பிரச்சினை ஒன்றை, பேரவைத் தலைவரின் இசைவுடன் எழுப்பினால், பேரவைத் தலைவர் அப் பிரச்சினையை பேரவைக்குப் படித்து காட்டி, அதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும் போது உரிமை மீறல் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதனை முடிவு செய்வார் ' என்று திட்டவட்டமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆக, லோக் சபா வேறு, நம் சட்டசபை வேறு.

**திரு. ரா. உமாநாத்:** ரூல் 249-யைப் படியுங்கள்.

The right to raise a question of privilege shall be subject to the following restrictions, viz.

இங்கே ரெயிஸ் செய்ய கீழ்க்கண்ட இரண்டு நிபந்தனைகளுக்குட்பட்டு என்றிருக்கிறது.

(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence.

(ii) A prima facie case of a breach of privilege must be made out.

[திரு. ரா. உமாநாத்] [1981 மார்ச் 25]

' மேக் அவுட் ' செய்தால்தான் இங்கே ' ரெயிஸ் ' செய்ய முடியும் ' ரெயிஸ் செய்ய உரிமை கொடுக்கிறீர்கள். நீங்கள் படித்ததைத் தான் நானும் படிக்கிறேன். அதுவும் ரூல்ஸ் தான், இதுவும் ரூல்ஸ் தான். காண்ட்ரடிக்ஷன் இருந்தால் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 250 க்ளியராக இருக்கிறது. ' முடிவு செய்கிற அதிகாரம் பேரவைத் தலைவருக்குத்தான் இருக்கிறது '.. அப்பிரச்சினை பேரவைக்குப் படித்து காட்டி அதில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உரிமை மீறல் இருக்கிறதா அல்லது இல்லையா என்பதனை முடிவு செய்வார் ' என்றிருக்கிறது. ஆகவே, நான் தீர்ப்புச் சொல்லிவிட்ட பிறகு அதோடு பிரச்சினை தீர்ந்தது.

[முற்பகல் 11-20]

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமைப் பிரச்னை குறித்த விதிகளிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் ஒரு பிரச்சினையைக் குறிப்பிட்டார்கள். அதுபற்றி தங்கள் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சாதாரணமாக உரிமைப் பிரச்சினை குறித்த ஒரு கடிதத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுக்குத் தருகிறார்கள். அவர்கள் எந்தப் பிரச்சினையைப் பற்றியும் எழுதித் தரலாம். அவற்றை அவையிலே எழுப்புவதற்கு எந்தெந்த நிலைமைகளைப் பார்த்து செய்ய வேண்டுமென்கிற கேள்வி எழுகிறது. தங்களுடைய தீர்மானத்தைத் தருகிறார்கள். அவற்றை அவையிலே எழுப்ப வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்கு அவையில் தாங்கள் எழுப்புவதற்கு எவ்வப்போது விரும்புகிறீர்களோ, அதை எழுப்ப அனுமதி தருகிறபோது, இந்த இரண்டு கண்டிஷன்கள் இருக்க வேண்டும். அதாவது அண்மையில் நடந்த சம்பவமாக இருக்கவேண்டும். மேலெழுந்த வாரியாக எழுப்புவதற்கு அதிலே இடமிருக்க வேண்டும். இந்த நிலைமையிலே உரிமைப் பிரச்சினையை கொண்டுவரலாம். ஆகவே, இந்த உரிமைப் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு, குறிப்பாக மேலெழுந்தவாரியாக 247-வது விதியின் கீழ் வருவதற்காகவே—அதற்கு முன்னால் இந்த இரண்டு கண்டிஷன்கள் இருக்க வேண்டும். அப்போதுதான் அறையிலே தாங்கள் அனுமதிக்கிறீர்கள். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்புகிறார்கள். அது பிரிவிலெஜ் மோஷனாகத் தரப்பட்டிருக்கிறது. இங்கே எழுப்பிப் பேசலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் சொல்வது சரியல்ல. நம்முடைய பழைய முறையைப் பார்த்தாலே தெரியும்.

The right to raise a question of privilege (not in the House) shall be subject to the following estrictions. . . .



1981 மார்ச் 25] [திரு. ச. இராமச்சந்திரன்]

அவைக்கு எப்போது வருகிறது ? அண்மையில்நடந்த சம்பவமாக இருக்கவேண்டும். மேலெழுந்தவாரியாகப் பார்க்கையில் உரிமை மீறல் இருக்க வேண்டும். அப்படிப் பார்த்து உரிமை மீறல் இருக்கிறது என்று தெரிந்த பிறகு,

A member may with the consent of the Speaker 247-வது விதியின்படி கன்செண்ட் தெரிவிக்க, இந்த இரண்டு கைட்லைன்சும் இருக்கிறது என்பதை நான் விளக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : In ' Parliamentary Institutions and Procedures by M. N. Kaul. in page 228 it is stated as follows—

> 'The normal practice is that the Speaker mentions the matter in the House and disallows it after taking the sense of the House.'

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சார், ஒரு நிமிஷம் அவர் சொன்னதையே சொல்லுகிறேன். விதி 249-க்கும், 250-க்கும் முரண்பாடு இல்லை. விதி 249-ன் கீழ் இதை எழுப்பலாமா, கூடாதா என்பதற்கு அனுமதி கொடுத்து, விவாதம். 250 விதி என்ன சொல்லுகிறதென்றால், நீங்கள் அனுமதி கொடுத்து விவாதத்திற்குப் பிறகு, உங்கள் அதிகாரத்தைப் பற்றிச் சொல்லுகிறது. உங்களுடைய பிரத்தியேக அதிகாரத்தைப் பற்றிச் சொல்கிறது. விதி 249-க்கும் 250க்கும் முரண்பாடு இல்லை. 249-வது விதியின்கீழ் எடுத்துக்கொண்டு விவாதிக்கப்படுவது ஒன்று. ஒத்திவைத்து தீர்ப்பு சொல்வதாகச் சொல்லுகிறீர்கள். அதற்கடுத்து விவாதம் அனுமதிக்கப் படுவது நடைமுறையிலே இல்லை. விதிகளிலும் அனுமதிக்கப் படுவதில்லை. ஆகவே, இன்று நீங்கள் அனுமதித்ததைக்கூட நீக்க வேண்டும். அதுவே ஒரு முன்மாதிரியாக வந்துவிடும். அது கூடாது. உரிமைப் பிரச்சினை என்ற பெயராலே எழுப்பி இரண்டு தடவைகள் ஒரு பொருளின்மீது விவாதிக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை யொட்டியே நானும் எம். என். கவுல் புத்தகத்திலே பக்கம் 227-லே, சப் பேரா 2-ஐப் படிக்கிறேன்.

"(ii) Whether the presiding officer should have power to withhold his consent to the raising of a question involving a breach of privilege and if so what should be the effects of such withholding of consent ? In the House of Commons it happened in some cases that when the Speaker had said that there was no prima facie case

and had refused to give precedence, the House on an independent motion by the Member had referred the case to the Privileges Committee which had reported that there was a breach of privilege with the result htat the Speaker was placed in an awkward position, அதனாலே இந்த கான்டெக்ஸ்ட்

In the Lok Sabha, the rules have been so framed as to get rid of the awkward position that arose in the House of Commons and at the same time not to abridge any substantive right of the Member. So all privilege matters are brought by the Speaker before the House; he takes the sense of the House, either the House determines it then and there or remits it to the Committee of Privileges.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விதியின் கடைசி வரிக்கு வாருங்கள். லண்டன் காமன்வெல்த் பார்லிமெண்ட் புரொசீஜரில் சில மாறுபட்டிருக்கின்றன. அதேமாதிரி நாடாளுமன்றத்தில் உள்ள நடைமுறைகள் சில மாறுபட்டிருக்கின்றன. இங்கே சில நடைமுறைகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. பேரவைத் தலைவரின் தீர்ப்பு முடிவானது என்று ஏற்கெனவே எழுதி வைத்திருக்கிறார்கள். நான் எழுதி வைக்கவில்லை.

சட்டமன்ற விதிகள் என்று ஒவ்வொரு சட்டமன்றத்திற்கும் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் சட்டமன்ற விதிகள் மாறுபட்டு இருக்கலாம். ஆனால் இந்தச் சட்டமன்ற பேரவையைப் பொறுத்த வரையில் இந்த விதி தெளிவாக இருக்கிறது. தீர்ப்பிற்குப் பிறகு ஒரு விவாதம் என்பது தேவையில்லாத ஒன்று என்பது தான் முடிவான முடிவு.

## 4. ஒத்தி வைப்புத் தீர்மானம்

### பேரவை எதிர்க்கட்சித் தலைவர் வீட்டு முன்பு நடத்தப் பெற்ற ஆர்ப்பாட்டம்.





ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—3—1981 அன்று எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் வீட்டு முன்பு ஒரு கும்பல் ஆர்ப்பாட்டம் செய்து, அவருடைய குடும்பத்தை சார்ந்தவர்களை கேவல மாகப் பேசியிருக்கிறார்கள். வீட்டினுள் புகுந்து தாக்குகின்ற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். வேலை ஆள் செயல்மணி என்பவரை கடுமையாக தாக்கி, அவர் காயங்கள் அடைந் திருக்கிறார். காலங்கடந்து தான் போலீஸ் வந்திருக்கிறது. மிக மோசமான அம்சம் என்னவென்று சொன்னால் வந்தவாகள் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வீட்டு முன்பு ஆர்ப்பாட்டம் செய்து, ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். போலீஸ் ஆக்ட் அமுலில் இருக்கிறபோது ஊர்வலம் நடத்துவதாக இருந்தால் கூட்டம் நடத்துவதாக இருந்தால் போலீசின் அனுமதி பெற்றுத் தான் வரவேண்டும். ஆனால் இப்படி ஆர்ப்பாட்டம் செய்ய வந்தவர்கள் கோபாலபுரம் வீதிகளிலே வந்திருக்கிறார்கள். அதை எப்படி போலீஸ் அனுமதித்தது என்பது தெரியாமல் இருக்கிறது. உடனே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். 'டிரெஸ்பாஸ்' போன்ற கடுமையான நான்—பைலேபில் காரியங் களை செய்திருக்கிற அவர்கள் அன்று இரவே விடுதலை செய்யப் பட்டிருக்கிறார்கள். வன்முறை சம்பவத்திற்கு அடிப்படை யாக அந்தத் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிற காரணம், எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் முதல் அமைச்சர் அவர்களை கடுமையாக விமர்சித்தார் என்பது ஆகும். அதிலே ஒன்றை நான் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன். பேரறிஞர் அண்ணா அவர்கள் தெளிவாகச் சொன்னார். காருக்கு பிரேக் கும், மாட்டுக்கு மூக்கணாம் கயிறும், ஆற்றுக்கு அணையும் முக்கியமானதென்று, அதேபோல ஜனநாயகத்திலே எதிர்க் கட்சியின் பணி முக்கியமானது. ஆளும் கட்சியை எதிர்க்கட்சி விமர்சிப்பதும், எதிர்க்கட்சியை ஆளும் கட்சி விமர்சிப்பதும் ஜனநாயகத்திலே அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாக இருக்கிறது. இவர்கள் சொல்லியிருக்கக் கூடிய குற்றசசாட்டு எதிர்க் கட்சித் தலைவர், முதல் அமைச்சர் அவர்களை கடுமையாக விமர் சித்தார் என்பதாகும். ஆனால் எதிர்க்கட்சித் தலைவரை ஆளும் கட்சித் தரப்பிலே கூட கடுமையாக விமர்சித்தார்கள். சமூக விரோதி வெறி நாய் என்று சொல்லியிருக்கிறார்கள்: என்று சொல்லியிருக்கிறார்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒருவருக்கொருவர் வெளியில் பேசியதை எல்லாம் சொல்ல வேண்டாம். சம்பவத்தை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து *** என்று சொல்லலாமா? அதை வாபஸ் வாங்கவேண்டும.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** அதை வாபஸ் வாங்கி கொள்ளுங்கள.

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, தாங்கள் ரூலிங் கொடுத்து விட்டீர்கள். அதற்கு அப்புறம் பேசலாமா? அதை முதலிலே அவர் சொல்லி இருக்க வேண்டும். தாங்கள் ரூலிங் கொடுத்த பிறகு பேசக்கூடாது. (கூச்சல்-குழப்பம்).

**திரு. ஆர். மணிமாறன் :** அதைக் கண்டிப்பாக வாபஸ் வாங்கித் தீர வேண்டும், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களின் ஒட்டுமொத்தமான கருத்து அதுதான். (கூச்சல்-குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள். . . . . . . . .

**திரு. ஆர். மணிமாறன் :** தலைவர் அவர்களே, நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன் . . . . . . . . . . . . . . .

**திரு. துரைமுருகன் :** தாங்கள் நின்றுகொண்டிருக்கும்போது திரு. மணிமாறனுக்கு மட்டும் எப்படி மைக்கைப் போடலாம? எனக்குப் போட வேண்டும். (கூச்சல்-குழப்பம்) அதை எக்ஸ் பஞ்ச் பண்ணிவிட்டீர்கள் . . . . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. புருஷோத்தமன் சொன்ன வார்த்தை ரொம்பத் தவறான வார்த்தை. அதைத் திரும்பப் பெறுவது சபையின் கண்ணியத்தைக் காப்பாற்றுவதாக இருக்கும். அதிலே ஒன்றும் தப்பில்லை. பெரியவர்களைக் கும்பிடுவதும், கடுமையான வார்த்தை சொல்லிவிட்டால் வாபஸ் வாங்கிக் கொள்வதிலும் தப்பு இல்லை. அதனால் நம் மதிப்பு தான் உயருமே தவிர யாருக்கும் குறைவு ஏற்பட்டுவிடாது. (குறுக்கீடு). இப்போது வந்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானம் கலைஞர் வீட்டு முன் கலகம் நடந்தது குறித்து. ஏன் நடந்தது என்று உள்ளே போக வேண்டாம், வக்கீல் செய்கிற விவாதம் அல்ல, தாங்கள் பெரிய வழக்கறிஞர். அது எல்லாம் வேண்டாம். இதைப்பற்றி மட்டும் சுருக்கமாக சொல்லி முடியுங்கள். (குறுக்கீடு).

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** அதைத் திரும்பப் பெற்றாக வேண்டும்.

---

* **மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, தாங்கள் சொன்ன
தைப் போல அந்த ** ** என்ற வார்த்தையை சட்ட
மன்ற அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கிவிடுவதை நான் வரவேற்கி
றேன். ஆனால் சொல்லப்பட்ட அந்த வார்த்தையை நீங்கள்
நீக்கியதை நான் ஏற்றுக்கொள்கிறேனே தவிர, அந்தச் சூழ்
நிலையிலே சொல்லப்பட்ட அந்த வார்த்தையின் பொருள்
*** *** *** *** ***
என்ற அடிப்படையில் சொல்லப்பட்டதே தவிர வேறு அல்ல.
(குறுக்கீடு). தாங்கள் அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்ததை
ஏற்றுக் கொள்கிறேன், எடுத்தது வரவேற்கத்தக்கது, அதிலே
ஒன்றும் எனக்கு மாறுபாடு இல்லை. ஆனால் சொல்லப்பட்ட
அந்த வார்த்தை ஏதோ தவறான பொருள் படைத்த வார்த்தை
என்று தயவு செய்து கருத வேண்டாம்.
*** *** *** *** ***
என்பது
*** *** *** *** ***
என்றுதான் பொருள் கொடுக்கும். (குறுக்கீடு) பேரவைத் தலை
வர் அவர்கள் அதை அவைக் குறிப்பிலேயிருந்து எடுத்ததை நான்
ஒத்துக் கொள்கிறேனே. நான் அதை ஒத்துக் கொள்ளவில்லை
என்றால் நீங்கள் கோபித்துக் கொள்ளுங்கள். அந்தச் சொல்
இருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.
*** *** *** *** ***
என்பது அந்தச் சூழ்நிலையிலே பலபேர் எழுந்து நிற்கிறபொழுது
........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவகாரம் எங்கே வரு
கிறது என்றால் எல்லோரும் பேராசிரியராக இல்லாதபொழுது
தான் வருகிறது ; வேறொன்றும் இல்லை. (சிரிப்பு) (குறுக்கீடு).
சபையிலே ஒரு மரபை உறுப்பினர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.
ஏனென்றால் வார்த்தைகளைக் கொட்டிவிட்டால் அள்ள முடி
யாது ; வேறு எதைக் கொட்டினாலும் அள்ளலாம். இதைத்
தெரிந்து கொள்ள வேண்டும். அண்ணா அவர்கள் இதைப்பற்றி
ஆயிரம் தடவை சொல்லிக் கொடுத்துப் போய் இருக்கிறார்கள்.
அதைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் என்ன பிரயோஜனம் ?

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலை
வரவர்களே, ஒரு எதிர்க்கட்சித் தலைவருடைய வீடு தாக்கப்
படுவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. இன்னும்
சொல்லப் போனால் நம்முடைய முதலமைச்சருடைய அறைக்கே
கூட பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. நான் ஒட்டு
மொத்தமாகச் சேர்த்துத்தான் சொல்கிறேன். இது சட்டம்-
ஒழுங்குப் பிரச்னையாகும். காரணம், அரசியலிலே ஈடுபட்டி

* ** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.



ருப்பவர்கள் பொதுவாக விமர்சனம் செய்வது என்பது, ஆளுங்
கட்சியாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி,
அது தவிர்க்க முடியாதது ஆகும். ஆனால் அவர்கள் அப்படிச்
சொல்கிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி, ஆளுங்கட்சியைச்
சார்ந்தவர்கள் எதிர்க்கட்சித் தலைவருடைய வீட்டுக்குப் போவ
தும், அங்கே இருக்கின்ற குடும்பப் பெண்களை எல்லாம் கேவல
மாகப் பேசுவதும், எதிர்க் கட்சித் தலைவரின் வீட்டில் உள்ள
வேலையாளை அடித்துக் காயப்படுத்துவதும், அதிலும் குறிப்பாக
பெண்கள் அணி வகுத்து வருகிறார்கள் என்று சொல்லிக் கொண்டு
ஒரு குறிப்பிட்ட கட்சியின், அகில இந்தியா அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகப் பேச்சாளராகவும், மகளிர் அமைப்பாளராக
வும் இருக்கக் கூடியவர்கள் வருகிறார்கள் என்றால்—அவர்கள்
பெண்களாக இருந்தாலும் அடிக்கின்ற அளவிற்கு அவர்கள்
தைரியம் பெற்றவர்களாக இருப்பது முறையாக இருக்க முடி
யாது. இப்படி ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும்
தவறுதான் ; எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் செய்தாலும்
தவறுதான். ஆனால் துரதிருஷ்டவசமாக இது போன்ற காரி
யங்கள் நடந்திருக்கின்றன. இதனால் சட்ட சபையில் உள்ள
எங்களைப் போன்ற உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பு வேண்டிய
தாக இருக்கிறது. ஆகவே, இது முக்கியமான பிரச்னை ;
சட்டம்-ஒழுங்கு என்ற அடிப்படையிலே உள்ள பிரச்னை. ஆகை
யால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதைப
பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, குறிப்பிட்ட அந்தத் தேதியில் சில
பெண்கள் அங்கே சேர்ந்ததும், தாய்க் குலத்தை இழிவாகப்
பேசிய வார்த்தைகளைத் திரும்பப் பெற வேண்டும் ; மன்னிப்பு
கேட்க வேண்டுமென்று சொன்னதும் செய்தியாக எங்களுக்குத்
தரப்பட்டிருக்கிறது. இரு தரப்பார் மேலேயும் வழக்கு போடப்
பட்டிருக்கிறது. அவர்கள் கைது செய்யப்பட்டு ஜாமீனிலே இரு
தரப்பாரும் வந்திருக்கிறார்கள்— செயல்மணி என்பவரும் அந்தப்
பெண்களும்.

எங்கள் கட்சியைப் பற்றி இங்கே பேச வேண்டியதில்லை
என்றாலும், கட்சி ஒரு முடிவு எடுப்பதற்கு முன் இப்படிப்பட்ட
செயல்களிலே ஈடுபடுபவர்கள் மீது நாங்கள் கண்டிப்பாக நட
வடிக்கை எடுப்போம். அதே நேரத்தில் அங்கே பெண்கள்
போனார்கள் என்பதும், அவர்களுடைய ரவிக்கை போன்ற
உடைகள் கிழிக்கப்பட்டது என்பதும் பற்றி அங்கே அவர்கள்
புகார் மனு கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1981 மார்ச் 25

ஆகவே, இத்தகைய நிலையில் வழக்கு எடுக்க செயல் மணியையும், அந்தப் பெண்கள் 12 அல்லது 11 பேரையும் கைது செய்து ஜாமீனில் அவர்கள் வெளியே வந்திருக்கிறார்கள். ஆகவே, வழக்கு நடந்து முடியும்பொழுது இதன் முழு உண்மையும் தெரியும்.

அதுமட்டுமல்ல, நான் இன்னொன்றையும் சொல்வேன். தமிழக அரசைப் பொறுத்தவரையில் இந்த நிலைமைகளை நாங்கள் ஆதரிக்கவில்லை என்பதையும், இது கண்டிக்கத்தக்கது என்பதிலேயும் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை என்பதையும் இங்கே நான் தெரிவித்து, இதற்காக இந்தச் சட்டப் பேரவையை ஒத்தி வைத்து விவாதத்திலே இறங்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

(5) வரவு-செலவுத் திட்டம் 1981–82—விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம் தொடரும்.

[முற்பகல் 11–40.]

*திரு. ப. நெடுமாறன் : தலைவர் அவர்களே, நான் ஒரு பணிவான விண்ணப்பத்தை உங்களுக்கு மட்டுமல்ல, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், மற்ற முக்கிய கட்சிகளுக்கும் விடுக்க விரும்புகிறேன். இந்தப் பொது விவாதத்திலே தினசரி அந்தப் பக்கத்திலே இருந்து ஆரம்பித்து இங்கே வருவதற்குள் $1\frac{1}{2}$ மணி ஆகிவிடுகிறது. எனவே இந்தப் பக்கத்தில் இருக்கிறவர்கள் பேசுவதற்கு அனுமதி இல்லை. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. பாரமலை அவர்கள் பேசுவதற்காக கடந்த 2 நாட்களாக அவர் பெயர் பட்டியலில் இருந்தும் இங்கே வருவதற்குள் முடிந்து விடுகிறது. எனவே நான் கேட்டுக் கொள்வது ஒரு நாள் அந்தப் பக்கத்திலே இருந்து ஆரம்பிக்கலாம், இன்னொரு நாள் இந்தப் பக்கத்திலே இருந்து ஆரம்பிக்கலாம். எல்லோருக்கும் சமமான வாய்ப்பு தரவேண்டும்.



1981 மார்ச் 25]

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஒரு பெரிய எதிர்க்கட்சியாக இருந்தாலும்கூட இதுவரையில் 2 பேர்களுக்குத் தான் பேச வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. தயவு செய்து தாங்கள் அந்த நேரத்தை வரையறுத்துத் தருகின்ற ஒரு முறையை உருவாக்குவதன் மூலம் எல்லோருக்கும் நியாயம் கிடைக்கின்ற வாய்ப்பு அளிப்பதிலே எனக்கு எந்தவிதமான மாறுபாடும் இல்லை. ஆனால் தினந்தோறும் ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களும் எதிர் கட்சியைச் சேர்ந்தவர்களும் பேசி வருகிற முறை இருக்கிற காரணத்தால், உறுப்பினர் எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற கட்சிகளுக்கு சில நேரங்களில், சில நாட்களில் வாய்ப்பு இல்லாமல் இருக்கக் கூடும். ஆனால் மொத்த விவாதத்திலே அவர்களுக்கு உரிய வாய்ப்பு கிடைக்க தாங்கள் கவனித்துக் கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ரெத்தினராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைகூற நான் முன் வருகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தருகிற நேரத்தில் ஒரு அரசுக்கு அழகு, 'நோயில்லாதிருத்தல், செல்வச் செழிப்பு, விளைபொருள் வளம், இன்பவாழ்வு, நல்ல காவல் ஆகிய ஐந்தும்தான் ஒரு அரசுக்கு அழகு என்று முதலிலேயே கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாடு அரசைப் பொருத்தவரையில் தமிழகத்தில் இருக்கிற நிலைமையை நாம் இந்த நிதிநிலை விவாதிப்பதற்கு முன்பு சுருக்கமாக எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் அண்மையில் வெளிவந்த மருத்துவக் குறிப்பு இந்தியாவிலேயே இருக்கிற புற்று நோயாளிகளில் 5-ல் 1 பங்கு தமிழகத்திலே இருக்கிறார்கள் என்ற குறிப்பு வெளி வந்திருக்கிறது. என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்றாகும். அதற்கு அடுத்தபடியாக திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பிலே இருந்த நேரத்தில் தமிழகத்தில் இருக்கிற தொழு நோயைத் தடுப்பதற்கு, தொழு நோயாளிகளுக்கு பாதுகாப்பாக அவர்களுக்கு என்று இல்லங்கள் கட்டப் பட்டது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில் அந்த இல்லங்களை அதிகப்படுத்தவோ அல்லது காசநோய் மருத்துவமனைகளை அதிக்கப்படுத்தவோ அல்லது புற்றுநோயைத் தடுத்து நிறுத்துவதற்காக தனியாக மருத்துவப் பிரிவினை ஏற்படுத்துவதற்கோ இங்கே எந்த ஒரு திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் தரப்படவில்லை. இது மிகவும் ஏமாற்றத்திற்குரியது.

[திரு. எஸ். ரெத்தினராஜ்] [1981 மார்ச் 25

அதற்கடுத்தபடியாக இருக்கிற செல்வம் என்ற நிலையிலே
பார்க்கிறபோது, வளத்தைப்பற்றிப் பார்க்கிறபோது தமிழ்
நாட்டிலே இன்றைக்கு முழுக்க முழுக்க வறட்சி ஏற்பட்டுள்ள
நிலைமை.

இந்த வறட்சி நிலையில் எல்லா மாவட்டங்களும் வறட்சி
மாவட்டங்களாக அறிவிக்கப்படாமல், வறட்சி மிகுந்த
மாவட்டங்கள் மட்டும் வறட்சி மாவட்டங்கள் என்று அறிவிக்கப்
பட்டு இருக்கின்றன. நான் சார்ந்து இருக்கின்ற குமரி
மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்கவில்லை.
வறட்சி நிலைமை குமரி மாவட்டத்தில் உள்ள நான்கு
தாலுக்காக்களில் இருக்கின்றன. குறிப்பாக, கல்குளம் தாலுக்கா
விலும், விளவங்கோடு, அகஸ்தீஸ்வரம் தாலுக்காவிலும் வறட்சி
நிலைமை அதிகமாக இருக்கிறது. வறட்சியின் காரணமாக
விவசாயம் பாதிக்கப்பட்டு, விலைபொருள்கள் குறைந்து
இருக்கின்றன. இந்த நிலைமையில் தமிழகம் முழுவதும்
விளைபொருள்கள் உற்பத்தி குறைந்து இருக்கிறது என்பதைச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு மின்சாரம் இல்லாமல், போதிய அளவு நிலக்கரி
இல்லாமல் தொழில்துறை முடக்கம் அடையும் நிலை இருக்கிறது.
இந்த நிலைமையில் விளைபொருள்களின் உற்பத்தியும் தமிழகத்
தில் கொழிக்கும் நிலையில் இல்லை என்பதையும் நான் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

காவலைப் பற்றி சொல்கிறபோது, இன்றைக்குத் தமிழ்
நாட்டில் இருக்கிற நிலைமை என்னவென்று சொன்னால்
தனியாக எவருமே தெருவில் நடமாட முடியாத அளவிற்கு
நிலைமை இருக்கிறது. குறிப்பாக, குமரி மாவட்டத்தில்
பாலக்கோடு என்கிற பகுதியில் 1980ஆம் ஆண்டு அக்டோபர்
மாதம் 20-ந் தேதி நள்ளிரவு 28 வயது இளைஞர் புஷ்பாகரன்
என்பவர் குத்தி கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள்.
இதுவரையில் போலீசார் துப்பு துலக்கவில்லை. யார் மீதும்
வழக்கும் பதிவு செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

பாசனத்தைப் பொறுத்தவரையில் 20,500 ஏக்கர் நிலங்
களுக்குப் பாசன வசதி இந்த ஆண்டில் செய்யப்படும் என்று
சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் எந்தெந்த திட்டங்கள்
என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. குறிப்பாகச் சொல்ல
வேண்டுமானால், கோதையாறு இர்ரிகேஷன் சிஸ்டத்தில்
இருக்கிற சகல கால்வாய்களிலும் கடந்த 10—15 தினங்களாகத்
தண்ணீர் கிடைக்காததால் அங்கே விவசாயம் அத்தனையும்
பாழாகி இருக்கிறது. ஆகவே, அங்கேயிருக்கிற இர்ரிகேஷன்



1981 மார்ச் 25] [திரு. எஸ். ரெத்தினராஜ்]

சிஸ்டத்தை ''ஸ்டெபிலைஸ் செய்வதற்கு சில திட்டங்களை
நிறைவேற்ற அரசு முன் வர வேண்டும்'' என்று கேட்டுக்
கொள்கிறேன். அதற்காக இந்த அரசு நிதி எதுவும் ஒதுக்கப்
படாமல் இருப்பது கண்டு வருந்துகிறேன். அந்த நீர்த்
தேக்கத்தை ஸ்டெபிலைஸ் செய்வதற்கு வள்ளியாறு, பன்றி
வாய்க்கால் ஆகியவற்றில் ஓடும் தண்ணீர் வீணாகச் சென்று
கடலில் கலப்பதைத் தடுத்து அணை கட்டும் முயற்சியை
அரசு மேற்கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலோரப் பகுதியில் வாழும் மீனவர்களுக்கு எந்தச்
சலுகையும் இந்த அரசு இதிலே சொல்லவில்லை. இங்கேயுள்ள
மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசு மீனவர்களின் நண்பன்
என்று எல்லாம் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால்
இன்றைக்கு மீனவச் சமுதாயத்து மக்கள் பட்டினியால் மிகவும்
வாடி வதங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குப
போதுமான மீன் கிடைக்கவில்லை. அவர்களுக்கு மீன்
கிடைக்காத காரணத்தால் பட்டினியால் வாடிக்கொண்டு
இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமை குமரி மாவட்டத்தில்
இருக்கிறது. நெல்லை மாவட்டத்திலும் கடலோர பகுதிகளில்
இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில்
இருந்த காலத்தில் இப்படிப்பட்ட பஞ்ச காலத்தில் மீனவர்
களுக்கு இலவச ரேஷன் வழங்கப்பட்டது.

[முற்பகல் 11—50.]

அதைப்போல இன்றைக்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்காமல்
இருப்பது வருத்தம் தரக் கூடியதாக இருக்கிறது. இதற்கு
மேலாக கிராம ஊழியர்கள் குறிப்பாக நெல்லை மாவட்டத்
திலும் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இருக்கிற
கிராம அலுவலர்கள், நீர்ப்பாசன சங்கத்திலே இருக்கிறவர்கள்,
கிராம அதிகாரிகளுக்குகீழ் வேலை பார்த்துப் கொண்டிருக்கிற
அலுவலர்களுக்கு ஒரு பாதுகாப்பான திட்டம் இந்த
பட்ஜெட்டிலே குறிப்பிடப்படவில்லை.

விளையாட்டு ஆசிரியர்கள்— பிசிக்கல் டைரக்டர்ஸ்—
பி.பி.எட்.,எம்.பி.எட்., சி.பி.எல். படித்தவர்களுக்கு வேலை
வாய்ப்பை ஏற்படுத்தும் திட்டங்கள் அல்லது ஆசிரியர்களுக்கு
வேலை வாய்ப்பை அதிகரிக்கும் திட்டங்கள், அல்லது பட்ட
தாரிகளாக இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும்
திட்டங்கள் எதுவும் இந்த பட்ஜெட்டிலே தரப்படவில்லை.
ஆகவே, இந்த பட்ஜெட் ஒரு வறண்ட பட்ஜெட்டாக
இருக்கிறது.

குடி தண்ணீரைப் பொறுத்தவரையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் முட்டம், கருங்கல், கருமம், காரமடை, அம்மாண்டிவிளை, திங்கள்சந்தை போன்ற பகுதிகளில் குடி தண்ணீர் இல்லாத நிலைமை இருக்கிறது. அங்குள்ள மக்கள் விலை கொடுத்து குடி தண்ணீர் வாங்க வேண்டிய நிலை இருப்பது கண்டனத்திற்குரியதாகும். எனவே, இந்த பட்ஜெட்டைப்பற்றி சுருக்கமாக சொல்ல வேண்டுமானால், வறண்ட நேரத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிற, வறட்சி நேரத்தில் வெளியிடப்பட்டிருக்கிற இந்த பட்ஜெட் மிகவும் வறண்ட நிலைமையில் இருக்கிறது என்பதைக் கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. இரா. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் இந்த அவையிலே சமர்ப்பித்திருக்கிற 1981—82ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் இந்த வரவு செலவுத் திட்டத்தை இங்கே சமர்ப்பித்த நேரத்தில், இங்கே பணியாற்றுகின்ற, தேர்ந்தெடுக்கப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிற மாமன்ற உறுப்பினருடைய நிலையை உணர்த்துவதற்காக மக்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் அதிகமாக இருக்கின்றன என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

அடுத்தபடியாக, இந்த அரசு விவசாயிகளுடைய அரசு என்று சொல்வதற்கு முதல் கட்டமாக, முதன் முதலாக நிதிநிலை அறிக்கையிலே கோதுமைக்கு குவிண்டாலுக்கு 117 ரூபாயாக இருந்ததை 130 ரூபாயாக உயர்த்திருக்கிறார்கள்; ஆனால் அதே நேரத்தில் தென்மாநிலங்களிலே பயிரிடக்கூடிய அரிசிக்கு விலை உயர்த்தாமல் இருப்பதை கண்டித்தும், மைய அரசு உடனடியாக அரிசிக்கு விலையை உயர்த்திக் கொடுக்கும் என்ற அரசின் நம்பிக்கையையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். மேலும் விவசாயத்தை நம்பி இருக்கிற தென் மாநில மக்கள் கேட்டும், கோதுமைக்கு அதிக விலை கொடுத்துவிட்டு, வேண்டுமென்றே இதுநாள் வரையில் அரிசிக்கு கட்டுப்படி ஆகக்கூடிய விலை கொடுக்காமல் இருப்பதை நாம் அனைத்து உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து மத்திய ஆட்சிக்கு பொறுப் பேற்றிருக்கிற திருமதி இந்திரா காந்தி அம்மையாரை நிச்சயமாக ஒரு குவிண்டால் நெல்லுக்கு 150 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, ஒரு தீர்மானத்தைப் போட்டுத் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



மேலும் விவசாயப் பெருமக்களுக்கு இந்த அரசு நன்மை செய்ய வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, நல்ல உணர்வோடு இங்கே கொடுத்திருக்கிற தன்னிறைவுத் திட்டத்தை நல்ல முறையிலே செயல்படுத்த 31·50 கோடி ரூபாய் திட்டத்தில் 10.23 கோடி ரூபாயை மின்சாரத்திற்காக ஒதுக்கியிருப்பதை அறிந்து நான் இந்த அரசை பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் இன்றைக்கு தமிழ்நாட்டில் விவசாயிகள் உற்பத்திப் பெருக்கத்திற்கு அதிகமாக நம்பியிருப்பது இந்த மின்சாரத்தைத்தான். மின்சாரப் பற்றாக் குறையினால் இன்றைக்கு அவர்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள். அந்த நிலையில் இப்போது 30,000 பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுத்திருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மேலும் இங்கே இந்த மாநிலத்தில் இருக்கிற பல பெரிய நகரங்களில் இருக்கிற சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு, 1,000 சைக்கிள் ரிக்‌ஷாக்களுக்கு மோட்டார் பொருத்திக் கொடுக்க வேண்டுமென்ற திட்டத்தை நான் வரவேற்று பாராட்டுகிறேன். அதோடு அவர்களுக்கு 1,125 ரூபாய் உதவித் தொகையாக வழங்குவதையும் வரவேற்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழாக 765·5 இலட்ச ரூபாய் ஒதுக்கி 60 ஆயிரம் டன் அரிசியையும் ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் இத்திட்டத்தின் மூலமாக கிராமப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்கிற வகையில் அவர்களுக்குப் போய்ச் சேருகின்றதா என்பதைக் கண்காணிப்பதற்காக அதிகாரிகள் சரியாக இல்லை என்பதை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்குக் காரணம் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்றபோது போதிய பணம் இல்லாத நிலையில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களுக்கு பெரிதும் பயனுள்ளதாக ஆக்கவும் வறட்சி இருக்கின்ற இந்த நாளில் இந்த அரிசியும், ரூபாயும் அங்கே வாழ்கின்ற மக்களுக்கு பேருதவியை அளிப்பதாலும் இதை மேலும் அதிகமாகக் கொடுப்பதற்குரிய வாய்ப்பை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால் கொடுக்கப்படுகின்ற ரூபாய் சரியாகப் பயன்படுத்தப் படவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே அமர்ந்திருக்கின்ற இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் 'தணிக்கை செய்கின்ற பாக்கியத்தை எங்களுக்குக் கொடுக்க வேண்டும்' என்று கேட்கிறார்கள். இதை அருமை நண்பர் திரு சித்தன் அவர்கள் வலியுறுத்தினார்கள். மத்திய ஆட்சியிலே இருந்து கொடுக்கப்படுகின்ற தொகையை ஒரு தனிப்பட்ட கட்சி ஆடிட் செய்ய வேண்டும் என்று கேட்பது எந்த அளவிற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நான் கேட்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. இரா. சண்முகம்] [1981 மார்ச் 25

அடுத்து மின்சாரப் பற்றாக்குறை இருக்கின்ற இந்த சூழ்நிலையில் விவசாயத்திற்கு அதிகப்படியான டீசல் பயன்படுத்தப்படுவதால் தமிழக அரசு டீசல் விலையை நிச்சயமாக உயர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். சமீபத்தில் டீசல், பெட்ரோல் ஆகியவை எவ்வளவுதான் அதிகமாக விலை ஏறி இருந்தாலும், தமிழக அரசு நிச்சயமாக அந்த விலையை ஏற்ற வேண்டாம். அப்படியே ஏற்றினாலும் அதில் விவசாயிகளுக்குச் சலுகை அளிக்கவேண்டும் என்று கேட்டுகொள்கிறேன்.

அடுத்து கல்விக்காக இந்த அரசு 255·35 லட்சங்கள் ஒதுக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன். எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் படித்த பட்டதாரிகளும், ஆசிரியர்களும் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்றும் அவர்களுக்காக இந்த பட்ஜெட்டில் போதுமான நிதி உதவி ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டையும் எடுத்து வைத்தார்கள். ஆனால் நிச்சயமாகச் சொல்கிறேன். இந்த ஆட்சி தான் படித்த ஆசிரியர்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புத் தருவதற்கான அடிப்படையில் 1,650 ஆசிரியர்களை கூடுதலாக நியமனம் செய்வதற்கு ஒப்புதல் அளித்திருக்கின்றது. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் ஆயிரம் பேரையும், உயர்நிலைப் பள்ளிக்கு பி.டி. ஆசிரியர்கள் 200 பேரையும், இடைநிலைப் பள்ளிக்கு பி. டி. நிலையில் உள்ள 200 தலைமை ஆசிரியர்களையும், உடல் பயிற்சி ஆசிரியர்கள் 250 பேரையும், கைத்தறி முழு நேர ஆசிரியர்களாக 250 பேரையும், தமிழாசிரியர்கள் 500 பேரையும் நியமனம் செய்வதற்கு இந்த அரசு உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. மேலும் ஆலயங்களில் தமிழாசிரியர்களை நியமனம் செய்வதற்கு இந்த அரசு உத்தரவு பிறப்பித்திருக்கின்றது. இதை நான் பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்து இந்த நிதி நிலை அறிக்கையில் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகையில் ஆர்ஃப்பனேஜ் மாணவர்களுக்கு உணவுக்காக மட்டும் 18 ரூபாய் அளிப்பதாக இருக்கின்றது. அந்த 18 ரூபாயில் அந்த மாணவர்களுக்கு மூன்று வேளையும் உணவு அளிப்பதற்கு அது போதாததாகையால் இந்த அரசு நிச்சயமாக அதை 50 ரூபாயாக உயர்த்தித் தருவதற்குரிய வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து என்னுடைய திருத்தணித் தொகுதியில் இருக்கின்ற அரசினர் கலைக் கல்லூரியில் பி.ஏ. வகுப்பு வந்திருக்கின்றது. அதுபோன்று பி.எஸ்.சி. மேல் வகுப்பும், பி.காம். வகுப்பும் நிச்சயமாக ஏற்படுத்திக் கொடுப்பதற்குரிய வகையில் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து கிராமப பகுதியிலே இருக்கின்ற சாலைகளைச் செப்பனிடுவதற்கு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். மேலும் இந்தத் திட்டத்தின் காரணமாக



1981 மார்ச் 25] [திரு. இரா. சண்முகம்]

ஏழை மக்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கு சாலை இணைப்புகள் ஏற்பட்டால் அங்கே பேருந்துகள் செல்வதற்கான வாய்ப்புகள் உண்டாகும் என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[நண்பகல் 12-00]

தன்னிறைவுத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 6 கோடி ரூபாயும், இதற்கு அடுத்த ஆண்டு 7 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 5 ஆண்டு காலத்திற்கு 40 கோடி ரூபாயை மொத்தமாக ஒதுக்கியிருக்கிறார்கள். இதன் காரணமாக அடிப்படை அத்தியாவசிய வசதிகளை கிராமப் பகுதிகளிலே செய்து தருவதற்கான வாய்ப்பை இந்த தன்னிறைவுத் திட்டம் ஏற்படுத்தித் தருகிறது. ஆகவே தமிழகம் முழுவதும் இந்த தன்னிறைவுத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றுவார்களேயானால், ஒரு 15 ஆண்டு காலத்திற்குப் பிறகு, கிராமப்பகுதிகளிலே அத்தியாவசியமான அடிப்படை வசதிகள், தேவைகள் அனைத்தும் பூர்த்தி அடையும் என்பதிலே ஐயம் இல்லை. ஆகவே இந்த திட்டத்தை நிச்சயமாக கடைசி வரையில் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய திருத்தணி பகுதியிலே சர்க்கரை ஆலை ஒன்று வேண்டும். சர்க்கரை ஆலை ஒன்றை செங்கல்பட்டு மாவட்டத்தில் ஏற்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எந்த இடத்தில் அந்த ஆலையை நிறுவப் போகிறார்கள் என்று திட்டவட்டமான அறிவிப்பு எதுவும் செய்யபெறவில்லை என்ற காரணத்தால், அந்தப் பகுதி மக்கள், அந்த ஆலையை வட செங்கையிலா தென் செங்கையிலா எந்த இடத்தில் நிறுவுவார்களோ என்ற அச்ச உணர்வுக்கு ஆட்பட்டிருக்கிறார்கள். ஆகவே நிறுவ இருக்கும் ஆலையை வட செங்கையில் உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமீபத்தில் தமிழகத்தில் வறட்சி நிலை ஏற்பட்டிருப்பதை பற்றி இந்த அவையிலே பரபரப்பு ஏற்பட்டு, எனக்கு முன்னால் பேசிய அனைவருமே ஏறத்தாழ அநேகக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆனால் ஒரே ஒரு பருவ மழை தவறியதன் காரணமாகவே இவ்வளவு வறட்சி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதன் காரணத்தை சிந்திக்க வேண்டும். இதற்கு முன்னால் ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினர் மக்களுடைய வரி பணத்தை மக்களின் தேவைகளுக்காக, குடி தண்ணீர் போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக சரிவர பயன் படுத்தாத காரணத்தினாலேயே ஒரு பருவ மழை

[திரு. இரா. சண்முகம்] [1981 மார்ச் 25

தான் தவறியும் கூட இத்தனை பெரிய அளவு பாதிப்பு ஏற்பட்டு
விட்டது.—வறட்சி நிலை உண்டாக்கி விட்டது என்பதை குறிப்
பிட்டுக் காட்டக் கடமை பட்டிருக்கிறேன்.

ஆனால் இது குறித்து அவர்கள் பேசுகிறபோது அடையாளக்
கார்டுகளையெல்லாம் கூட கொண்டு வந்து காட்டி இந்த
அவையில் சச்சரவை ஏற்படுத்தினார்கள். அதற்கு காரணம்
இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசே,
தவிர வேறு அல்ல, என்பதை இங்கே சுட்டிக் காட்டக்
கடமை பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின்
ஆட்சி வந்தபிறகு தான், தன்னிறைவுத் திட்டம் போன்ற நல்ல
பல திட்டங்களைத் தீட்டி, கிராம புற மக்களுக்கு அடிப்படை
அத்தியாவசிய வசதிகளை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள் என்
பதைக் குறிப்பிட்டு பாராட்டி வரவேற்கிறேன். இந்த நேரத்
தில் என்னுடைய தொகுதிக்குரிய ஒன்றிரண்டு கோரிக்கைகளை
எடுத்து வைத்து என்னுடைய உரையை முடித்துக்கொள்ளலாம்
என்று நினைக்கிறேன்.

கிராமப் புறங்களிலே 20 மருத்துவ மனைகளை தொடங்க
திட்டமிட்டிருப்பதாக. இந்த நிதிநிலை அறிக்கையில் கூறப்
பட்டுள்ளது. என்னுடைய தொகுதியில் கனகம்மாள் சத்தி
ரத்தில் ஒரு மருத்துவ மனையை துவங்கி தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன் கனகம்மாள் சத்திரத்தில் குறுக்கே
ஓடும் ஆற்றில் ஒரு பாலம் கட்டித்தரவேண்டும் என்று 3 ஆண்டு
காலமாக கேட்கப்பட்டும், வலியுறுத்தப்பட்டு வந்தும்
கூட இதுவரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்பட
வில்லை என்று குற்றச்சாட்டாக வைக்க விரும்புகிறேன்.
எத்தனையோ மாவட்டங்களில பல லட்சக் கணக்கான ரூபாய்
களை செலவு செய்து பல பாலங்கள் கட்டப் பட்டிருப்பதை
இங்கே இருக்கிற மாமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள். ஆனால்
செங்கை மாவட்டத்தில் 3 பாலங்கள் கனகம்மாள் சத்திரம்,
மனவூர், N. N. கண்டிகை போன்ற இடங்களில் கட்டித்தர
வேண்டும் என்று 3 ஆண்டுகளுக்கு மேலாக கோரிக்கை விடுத்துக்
கொண்டிருந்தும் கூட எந்தவித நடவடிக்கையும் இல்லை.
தயவுசெய்து அரசு அதில் கவனம் செலுத்தி செங்கை மாவட்ட
மக்களுக்கு அந்த பாலங்களை ஏற்படுத்திக் கொடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக திருமழிசை டாசல் தொழிற்சாலை இருக்கிறது
(மணியுடிக்க பெற்றது). 400-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள்
அங்கே பணிபுரிகிறார்கள். அந்தத் தொழிற்சாலை மூடப்
பட்டிருப்பதால் அந்த தொழிலாளர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு
உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கும் யூனிட்
ஆபீஸர் சரியாக இல்லை—அவர் நியாயமான முறையில்



1981 மார்ச் 25] [திரு. இரா. சண்முகம்]

நடக்கவில்லை என்ற காரணத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டி
ருப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே, அரசே அந்தத் தொழிற்
சாலையை ஏற்று நடத்த முயற்சி செய்து, அந்தத் தொழிலாளர்
களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டு, இந்த அரிய
சந்தர்ப்பத்தை அளித்ததற்காக நன்றி கூறி முடித்துக் கொள்
கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. நா. சுந்தரராஜ் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, 1981—82 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்
கையை நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்
இங்கே தாக்கல் செய்திருக்கிறார்கள். அதன்மீது விவாதம்
நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்தில், என்னுடைய கட்சி
யைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளியிட்ட கருத்துக்களோடு,
எண்ணங்களோடு என்னுடைய கருத்தையும் இணைத்துக்
கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு விவாதத்திற்கு
எடுக்கப்பட்டிருக்கிற இந்த நிதி நிலை அறிக்கையில் ஆண்டு
இறுதியில் சுமார் 122·96 கோடி ரூபாய் பற்றாக்குறையாக
காட்சி அளிக்கிற ஒரு அச்ச சூழ்நிலையை தோற்றுவிக்கிற வகையில்
இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிற
காட்சியைப் பார்க்கிறோம்.

ஆக, இருக்கிற சூழ்நிலையில் நிதி ஆதாரங்கள் மூலமாக
இந்த அரசு வேண்டுமானால் கிட்டத்தட்ட ரூ. 1,126 கோடி
அளவில் ஒரு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்கிறோம்
என்று பெருமையோடு இன்று பேசினாலும் கூட அதன் மூலம்
தமிழக மக்களுக்கு ஏற்பட இருக்கிற நன்மைகள் குறித்து
சரியான முறையில் விளக்கங்கள் கூறப்படவில்லை என்று
நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசைப்
பொறுத்தவரையில் இன்று எக்ஸைஸ் வரி மூலமாக நம்
மாநிலத்திற்கு பல ஆண்டுகளாக 20 சதவிகிதம் கிடைத்து
வந்ததன் மூலமாக சுமார் 91 கோடி ரூபாய் அளவிற்கு
ஒதுக்கப்பட்டு வந்தது. ஆனால் 1979-ல் இருந்து
40 சத விகிதம் என்று அதை உயர்த்தி 1980—81 ஆம்
ஆண்டுக்கு சுமார் 192 கோடி ரூபாய் மத்திய அரசு
எக்ஸைஸ் வரி மூலமாக நம் மாநிலத்திற்கு கொடுக்கிறது.
ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்திய நாடு பூராவும்
அதில் மொத்தமாகக் கிடைக்கக் கூடிய தொகை ஆயிரம் கோடி
ரூபாய் தான். ஆனால் தமிழ்நாட்டுக்கு என்று தனித்
தன்மையோடு அதிக அன்போடு கூடுதலாக ஒதுக்கீடு செய்து அது
192 கோடி ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.
ஆக, மத்திய அரசு எங்களைக் கவனிக்கவில்லை என்று மாநில
அரசு பழி போடுவது என்பது எவ்வளவு தவறானதாக இருக்கிறது
என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அப்படி மத்திய அரசு
மூலம் கிடைக்கிற தொகையை நாம் எந்தளவிற்குப் பயன்

படுத்திருக்கிறோம். அதை வைத்து எந்தளவிற்கு தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம் என்று பார்த்தால் எந்தவிதமான முற்போக்குத் திட்டங்களையா அல்லது டெவலப்மென்ட் என்று சொல்லக் கூடிய வகையில் நிர்வாக நடைமுறையில் மக்களுக்கு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் ஏற்படுகிற திட்டங்களை நாம் செயல்படுத்து வதற்கான முனைப்போ அல்லது ஆர்வமோ அல்லது அதற்கான திட்டங்களோ இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை.

இந்த மன்றத்தில் வறட்சி நிலைபற்றி பல நாட்கள் இங்கே விரிவாகப் பேசினாலுங்கூட முதல் அமைச்சர் அவர்கள் மதுரை யில் வு று சொன்னார்கள். நாங்கள் இன்னும் மத்திய அரசுக்கு அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று. காரணம், நாங்கள் அதிகாரிகளை நம்பினோம், அதிகாரிகள் சரியான தகவல்களை கொடுக்கவில்லை. அதே நேரத்தில் நான் நேரடியாகச் சென்று ஒவ்வொரு பகுதியாகப் பார்த்த பிறகு நானே திருப்தியடைந்து அதற்குப் பின்னால், மத்திய அரசுக்கு அறிக்கை தரப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இன்று இந்த நிதிநிலை அறிக்கையில் நாங்கள் மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம் சென்ட்ரல் டீம் அனுப்ப வேண்டும் என்று கேட்டிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக, முதல் அமைச்சர் அவர்கள் கருத்துக்கும் இந்த நிதி நிலை அறிக்கையில் இருப்பதற்கும் இடையே வேறுபாடு இருக்கிறது. இது எப்படி நியாயம்? இதில் எது உண்மை என்பதை நிதி அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு மாவட்டங்களில் இன்றைக்கு வறட்சி நிலை மிகக் கடுமையாக, கொடுமையாக இருக்கிற காட்சியைப் பார்க்கிறோம். ஆனால் இந்த அரசு ஏன் அந்தப் பகுதிகளை பஞ்சப் பகுதிகளாக அறிவிக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. முதலில் சொன்னார்கள், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் மாதம் மும்மாரி பெய்யும். ஆகவே எங்களுக்கு வாக்களியுங்கள் என்று கோஷங்களை வைத்து அதன் மூலம் மக்களின் வாக்குகளைப் பெற்று இங்கே உட்கார்ந்திருக்கும் நிலையில் நாம் ஆட்சிக்கு வந்து விட்டோமே என்று தேர்தல் சமயத்தில் சொன்னதை மீறி சொல்ல வெட்கமாக இருக்கிறதா, வேதனையாக இருக்கிறதா என்று கேட்கிறேன். அதன் காரணமாகத்தான் வறட்சி நிலை ஏற்பட்டிருக்கிறது என்று அறிவிக்காமல் இருக்கிறார்களா? வேறு பல மாநிலங்கள் குறிப்பாக ஆந்திரா மாநிலமும் வேறு சில மாநிலங்களும் வறட்சிநிலை பற்றி அறிக்கைகள் கொடுத்து மத்திய அரசு சென்ட்ரல் டீமை அனுப்பி நிதி ஒதுக்கீடும் கொடுத்துவிட்டு இரண்டாவது முறையாக சென்ட்ரல் டீமை அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டு அதையும் மத்திய அரசு ஏற்றுக் கொண்டு இரண்டாவது முறையாக அவர்கள் பார்வையிட்டு நி



ஆதாரங்கள் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் நடக்கின்றன என்று தெரிகிறது. ஆனால் நாம் வறட்சி நிலைபற்றி அறிக்கையே கொடுக்கவில்லை என்று முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது எவ்வளவு வேதனையைத் தருகிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

உணவு நிலைமையைப் பொறுத்தவரையில் இன்று நம் நிதி நிலை அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கிறது. 92·14 இலட்சம் டன் அளவிற்கு உற்பத்தி செய்யப் போகிறோம் என்று. முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் உணவு தானிய உற்பத்தி 38 இலட்சம் என்றிருந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 50 இலட்சம் டன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 70 இலட்சம் டன். ஆனால் அதே அடிப்படையில் பார்த்தால் இந்த 92·14 இலட்சம் டன் என்பது மிகக் குறைவானதொரு அளவுதான். காரணம், விவசாயத் துறையில் இந்த அரசு போதுமான அக்கறை காட்டாமல், விளம்பரம் மூலம், போஸ்டர்கள் மூலம் உங்கள் கட்சியை நடத்திச் செல்லலாம் என்ற எண்ணத்தில் செயல்படுவதுதான். விவசாயிகள்தான் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று வாய் அளவில் பேசிவிட்டு அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யும்போது அப்படி அதிகப்படியான நிதி ஒதுக்கீடு செய்வதற்கு இந்த அரசு தயக்கம் காட்டுகிறது.

மின் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இந்த அரசு முற்போக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக இந்த அறிக்கையில் சொல்லப்பட்டிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவெனில், தமிழ்நாடு மின்சார இலாகா என்பது ஒரு போட்டி அரசாங்கமாக, ஒரு பாரலல் கவர்ன்மென்டாக இருக்கிறது.

[பிற்பகல் 12·10.]

காரணம், அங்கேயிருக்கின்ற அதிகாரிகளுக்கு கீழே இருக்கின்றவர்கள் யாரும் மரியாதை கொடுப்பதில்லை. கீழேபணி புரிகின்றவர்கள், அவர்கள் சொல்வதை ஏற்றுக் கொள்வதில்லை. அமைச்சர்கூட இந்த இலாகாவிலே தலையிடுவதற்கு தயக்கம் காட்டி வருகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் அந்தத் துறை செயல்படுகின்றது என்று சொன்னால் மிகையாகாது. இது போன்ற சூழ்நிலை காரணமாக, கிராமப்புற பிரச்னைகள், கிராமத்திலே உள்ள சாதாரண ஏழை எளிய மக்களுக்குத் தேவையான வீதி விளக்குகள் எரியாத ஒரு சூழ்நிலை. நகரங்களிலேயும் இன்றைக்கு இத்தகைய சூழ்நிலை, அதேபோல் பெரிய தொழிற்சாலைகளிலும் 3, 4 மணி நேரங்களுக்கு மேல் இயங்க முடியாத ஒரு நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றது

என்று சொன்னால், அதற்குக் காரணம் இந்த அரசாங்கம் இன்றைக்கும் சரி, கடந்த காலத்திலும் சரி அதற்குச் சரியாக திட்டமிடாததன் காரணமாக, சரியான தன்மை இல்லாததன் காரணமாக அவர்களால் சரியாக இதை செயல்படுத்த முடியவில்லை. அதனால்தான், இன்றைக்கு இந்தப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது.

மத்திய அரசாங்கம் நேஷனல் கிரிட் ஏற்படுத்துவது பற்றிய ஒரு யோசனையைச் சொல்லியிருக்கிறது. அப்படி ஒரு நேஷனல் கிரிட்டை வைத்துக் கொண்டால், இந்தியாவிலேயே உள்ள எல்லா மாநிலங்களிலேயும் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்தை எல்லா மாநிலங்களுக்கும் பரவலாக பிரித்துக் கொடுக்கிற சூழ்நிலை உருவாகும், அதை வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். ஆனால், இந்தியாவிலேயே உள்ள நதிகள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறீர்கள். தண்ணீர் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீங்கள் வைத்திருக்கிறீர்கள். ஆனால், மின்சாரத்தை ஒட்டு மொத்தமாக்கி விநியோகிப்பதற்கு நேஷனல் கிரிட் வேண்டுமென்றால் அதை வேண்டாம் என்று சொல்லுகிறீர்கள். ஏன் உங்களுக்கு இந்த இரண்டு கருத்துக்கள். மின்சாரம் குறிப்பிட்ட ஒரு மாநிலத்திலே உற்பத்தி செய்யப்பட்டு, அடுத்த மாநிலத்திற்கு அதிக விலைக்கு விற்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. பற்றாக்குறை உள்ள பக்கத்து மாநிலம் அதை வாங்குகிறது. அதை சீராக விநியோகிப்பதற்கு நேஷனல் கிரிட் ஏற்படுத்த வேண்டுமென்று மத்திய அரசாங்கம் சொல்கிறது. எனவே, இந்தக் கொள்கையை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்னை. என்னுடைய தொகுதியாகிய திருமயம் தாலுகாவில், ரூரல் எலக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் ஒன்றை மத்திய அரசாங்கம் சுமார் 2 கோடி ரூபாய் அளவில் ஒரு திட்டத்தை ஆரம்பிப்பதற்கான மாநில அரசிற்கு அதற்கான செயல்குறிப்புகளை அனுப்பி, அதை நடைமுறைப்படுத்துவதற்கு அனுப்பி, நிதி ஒதுக்கீடு கொடுத்தும்கூட மாநில அரசு தலைமைப் பொறுப்பிலே உள்ளவர்கள் மத்திய அரசாங்கத்திற்கு அங்கீகாரம் அனுப்பாததன் விளைவாக, அந்தத் திட்டம் அந்தப் பகுதியிலே இன்னும் செயல்முறைப்படுத்த முடியாமல் இருக்கிறது. அந்தத் திட்டத்தினால் 2 கோடி ரூபாய் வரும். அதன் மூலம் குறிப்பிட்ட அந்த தாலுகாவிலே மின்சாரம் கொடுப்பதற்கு அந்த கூட்டுறவு சொசைட்டி ஏற்றுக் கொண்டு, அதன் மூலம் சீராக மின்சாரம் விநியோகிக்கப்பட்டால், அதை மேலும் பரவலாக்கலாம், நல்ல முறையிலே மற்ற இடங்களுக்கும் செயல்படுத்தலாம் என்ற திட்டத்தின் அடிப்படையிலே சொன்னால், அதை நீங்கள் தடை செய்கிறீர்கள். ஆகவே, நீங்கள் குறிப்பிட்ட அந்த தாலுகா, ஒரு பகுதி இந்த மாநிலத்திலே இந்த வசதியைப் பெறுவதில் அக்கறை



காட்டவில்லை. ஆனால், நீங்கள் மத்திய அரசாங்கத்தின்மீது ஒரே பழியைப் போடுகிறீர்கள். எங்களை கவனிக்கவில்லை; நிதி ஒதுக்கவில்லை; எங்களுக்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறீர்கள்.

சாலை வசதிகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு வறட்சி நிவாரணம் மூலமாக நடைபெறுகிறது. ஆனால், தமிழ் நாட்டிலே கடந்த பல ஆண்டுகளாக சாலைகள் எல்லாம் வசதியில்லாமல் கார் போக முடியாத அளவுக்கு காட்சியளிக்கின்றன. இன்றைக்கு மாவட்டங்களிலே ரோடுகள் போடுவதற்கு தார் டின்கள் கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. குறிப்பிட்ட தார் டின்கள், ஒரு குறிப்பிட்ட கோட்டத்திற்கு அல்லது குறிப்பிட்ட டிவிஷனுக்கு அனுப்பப்பட்டால் அவைகள் எங்கோ போய் விடுகின்றன. தனியார்கள் எப்படியோ ரகசியமாக அவைகளை வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள். இதைக் கண்காணிக்கக் கூடாதா? சேது சமுத்திரம்.........

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் இந்த தார் டின்களை தனியார்கள் ரகசியமாக வாங்கிக் கொண்டு போய் விடுகிறார்கள் என்ற குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள். நெடுஞ்சாலைத் துறையைப் பொறுப்பேற்றிருக்கின்ற நான் கேட்டுக் கொள்வது தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆதாரத்துடன் இங்கே தந்தால் மிகவும் நலமாக இருக்கும்.

**திரு. நா. சுந்தரராஜ்:** பின்னால் தருகிறேன். நான் பொதுவான குற்றச் சாட்டாகச் சொன்னேன். இந்த அரசாங்கம் இதை முழுமையாக விசாரிக்க வேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அது ரகசியமாக திருடப்பட்டிருக்குமானால், தனியாக குறிப்பிட்டு அமைச்சரிடம் சொன்னால், அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்.

**திரு. நா. சுந்தரராஜ்:** அப்படி கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இப்படிப்பட்ட தவறு நடந்திருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன். (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது பொதுவான குற்றச்சாட்டுப் போல வருகிறது.

1981 மார்ச் 25]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. சுந்தரராஜ் அவர்கள் சொல்லப்படுகிறது, பேசப்படுகிறது, என்று 'வேகாக' சொல்ல முடியாது. ஆதாரம் இல்லையென்றால் அதைப் பற்றி பேச வேண்டாம். (கூச்சல், குழப்பம்).

**டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நண்பர் சுந்தரராஜன் அவர்கள் இலாக்காக்களில் சில இடங்களிலே நடை பெறுகிற தவறுகளை சொன்னார்கள். அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி குறிப்பிட்ட ஆதாரங்களைத் தந்தால் அவைகள் பற்றி தான் பொறுப்பெடுத்து நடவடிக்கை எடுக்க இயலும் என்று குறிப்பிட்டிருக்கிறார். இது குற்றச்சாட்டு: ஒருவர் மீது என்று சாட்டப்படவில்லை. ஒரு அமைச்சர், மீதோ அல்லது ஒரு இலாக்காவில் உள்ள அதிகாரி மீதோ குற்றச்சாட்டு சொல்லப்பட வில் ல. பொதுவாகவே, ஒப்பந்தக்காரர்கள் பற்றி பேசும்பொழுது ஒப்பந்தக்காரர்கள் தவறு செய்கிறார்கள் என்று கூறி, அரசாங்க சார்பிலே கூட இனி அரசாங்கமே தான் அந்தக் காரியங்கள் எல்லாம் நேரடி நிர்வாகத்திலே நடத்த வேண்டும் என்ற காரணத்தால் குறிப்பிட்ட குற்றச்சாட்டை சொல்லவில்லை. என்று அரசாங்கத்தை யாரும் குறை கூற முடியாது. எனவே, பொதுவாகச் சொல்லப்பட்டு ஒரு தவறு சுட்டிக் காட்டப்பட்டது என்ற அளவிலேதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் சொன்னதை பொதுவாகச் சொல்லவில்லை. தார் டின்னை காண வில்லை என்றால் யார் எடுத்து போனது; இதற்கு பொறுப்பு அமைச்சரோ, அல்லது அமைச்சரவையோ என்று தான் வரும். அதனால்தான் அதை சொன்னேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** துணைத் தலைவர் அவர்களே, இப்படிச்சொன்னால் எதுவுமே சொல்ல முடியாது. எதிர் கட்சி வரிசையில் யாரும் எதுவும் பேச முடியாது. பாராட்டித்தான் பேசலாம், அதை விரும்புகிறீர்களா, சொல்லுங்கள். தவறுகள் நடக்கிறது........

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தவறுகள் நடக்கிறது என்பதற்கு உங்களிடம் ஆதாரம் இருந்தால் பேசுங்கள். ஆதாரம் இல்லாமல் பேச வேண்டாம்.

திரு. ஏ. சி. சண்முகம் : சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் நிதிநிலை அறிக்கையிலிருந்து நாவலர் சொன்னார் என்று சொன்னீர்கள். உங்களுடைய உதாரணத்தின் பிரகாரம் பார்த்தால் கூட எதிர்க்கட்சியைக் கேட்க முடியாது. ஆனால் அவர் அரசின்மீது சொல்லியிருக்கிறார்.

திரு. நா. சுந்தரராஜ் : தார் டின்கள் சரியாக விநியோகிக்கப் படவில்லை. சில தனியார்கள் பெற்றுக்கொண்டு தங்களுடைய சொந்த ரோடுகளில் போட்டுக்கொள்கிறார்கள் என்றுதான் சொன்னேன். அதிலே என்ன தப்பு? தப்பு நடந்தால் திருத்துங்கள் என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து 'யூசுவல் புரொசீஜர் இஸ் நாட் பியிங் அடாப்டட் இன் தி டிப்பார்ட்மெண்ட்' என்ற குற்றச் சாட்டு ஏற்படுகிறது. அது மட்டுமல்ல, அதைக் குறைந்த விலைக்கோ அல்லது அதிக விலைக்கோ விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது. இவைகள் எல்லாம் குற்றச்சாட்டுக்கள் இல்லையா? ஒரு இலாகாவின்மீது நீங்கள் சொல்கின்ற கருத்துகளை வைத்துத்தான் அந்த இலாகா எப்படி இயங்குகிறது என்று நாட்டு மக்கள் எண்ணிப் பார்ப்பார்கள். நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆதாரங்கள் இருந்தால் தயவுசெய்து எந்த இடத்திலே எப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இன்னார் தவறு செய்திருக்கிறார் என்பதைச் சொல்லுங்கள், உரிய நடவடிக்கை எடுக்கிறோம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டுக்கள் பற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே விரிவாக அனைத்துக் கட்சித் தலைவர்களோடு பேசப் பட்டு சில வரன்முறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சென்ற கூட்டத் தொடரின்பொது சொல்லப்பட்டு இருக்கிறது. அதாவது அமைச்சர் மீதோ அல்லது மாண்புமிகு உறுப்பினர் மீதோ அவர்கள் குற்றச்சாட்டைச் செய்தார்கள். என்று சொல்வது வேறு. அவர்கள் பொறுப்பு ஏற்றுக்கொண்டிருக்கிற துறையிலே நடக்கிற லாப்சஸ் குறைபாடுகள் என்பது வேறு. நம்முடைய அவையைப் பொறுத்தவரையில் ஒரு உறுப்பினர் மீதோ ஒரு அமைச்சர் மீதோ அவர்கள் தவறுகளை இழைத்து இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு தங்களுடைய அனுமதி வேண்டும். அது சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு கொஞ்

சம் முன்னாலே தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் அவர் தன்னைப் பாதுகாத்துக்கொள்வதற்கு பாதுகாப்புக் கிடைக்கும். ஒரு இலாகா என்கிறபோது ஒரு துறை என்கிறபோது அதிலே பல்லாயிரக் கணக்கான அலுவலர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவே, அதிலே தவறு ஏற்படுவது இயற்கை. அந்தத் தவறை எதிர்க்கட்சிகள் சுட்டிக் காட்டுவது வரவேற்கத்தக்கது. ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். அது எந்த இடத்தில் நடக்கிறது என்று ஸ்பெசிபிக்காகச் சொல்வார்களானால் சம்பந்தப்பட்ட துறையினர் அதைச் சரிசெய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும் உறுதுணையாக இருக்கும். நான் திரு சுந்தரராஜ் அவர்களைக் கேட்டுக் கொள்வது எல்லாம் அவருடைய கவனத்திற்கு வந்திருக்குமானால் எத்தகைய இடம் என்று சொன்னால் அதைச் சரி செய்வதற்கு வாய்ப்பு இருக்கும். பொதுவாக சொல்கிறபோது குறைபாடுகளாகத்தான் நிற்குமே தவிர அந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடும்; அது உதவி செய்தது ஆகாது, ஆகவே ஸ்பெசிபிக்காக சொல்லிவிட்டால் இந்தப் பிரச்சினை எழாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: துணைத் தலைவரவர்களே, அந்தக் குறை உற்பத்தியாகும் இடம் மெட்ராஸ் ரிபைனரீஸ் அங்கே மாவட்டங்களிலேயிருந்து வரக்கூடிய அதிகாரிகள் அதை வாங்குவதாகக் கணக்குக் காட்டி, தனிப்பட்ட நபர்கள் தங்கள் சொந்த வீடுகளுக்கும், நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் ரோடு போடுவதற்காக விற்றிருக்கிறார்கள். ஆகவே அதை விசாரணை செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வருவாய்த் துறையைப் பொறுத்த வரையில், தமிழ்நாட்டிலே வருவாய்த் துறை இருக்கிறதா என்பதே புரியவில்லை. கிராமத்திலே எந்தவிதமான கிராம அதிகாரியும் செயல்பட முடியவில்லை. உங்களுடைய அவசரச் சட்டத்தின் காரணமாக. அதைப்போல மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமானாலும் சரி, ஆர்.டி.ஓ. அலுவலகமானாலும் சரி, தாலுக்கா அலுவலகமானாலும் சரி அங்கேயிருக்கின்றவர்கள் கிராமங்களுக்குப் போய் வேலையைக் கவனியுங்கள்; மாதத்திற்கு 100 ரூபாய் டி.ஏ. தருகிறோம் என்றெல்லாம் சொல்லி அனுப்புகிறார்கள். அவர்களுக்கு மணியக்காரர் வேலை தெரியாது; கணக்குப்பிள்ளை வேலையும் தெரியாது; எந்த வேலையும் தெரியாமல் அதிகாரிகள் என்ற பெயரால் போய்க்கொண்டிருக்கின்ற காட்சியைத்தான் பார்க்கிறோம். மாவட்டங்களிலேயும் வேலை நடைபெறவில்லை. கிராமங்களிலேயும் வேலை நடைபெறவில்லை. ஆனால் இரண்டு சம்பளம் ஒரேயொரு பதவிக்கு வாங்குகின்ற காட்சியைத்தான் உங்களுடைய ஆட்சியிலே பார்க்கின்றோம்.



இன்னொன்றையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். புதிதாக இதற்குத் தேர்வு செய்து கொண்டிருக்கிறீர்கள். அவர்களை எப்பொழுது நியமனம் செய்யப் போகிறீர்கள்? சுப்ரீம் கோர்ட்டில் வழக்காடுவதற்குத் தயார் நிலையில் வந்து விட்டீர்களா? அஃப்பிடவிட் தாக்கல் செய்து விட்டீர்களா? அல்லது அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொண்டீர்களா என்றால் இதுவரையிலேயும் சுப்ரீம் கோர்ட்டிலே அரசாங்கத் தரப்பிலே எந்தத் தாக்கலும் செய்யப்படவில்லை என்றுதான் எங்களுக்குத் தகவல். ஆகவே நீங்கள் எப்பொழுது தாக்கல் செய்யப் போகிறீர்கள்? எப்பொழுது வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, தீர்ப்பு வந்து, தீர்ப்புவந்ததற்குப் பிறகு புதிதாக கிராம அதிகாரிகளை நியமனம் செய்வது? அவ்வாறு நியமனம் செய்யப்படுவது எத்தனை ஆண்டுகளுக்குப் பின்னால் நடக்கப் போகிறது என்று தெரியவில்லை. ஆனால் உங்கள் ஆட்சிக் காலத்திற்குள்ளேயே அவர்களை நியமனம் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு மிக முக்கியமான பிரச்சினையாக, மதுவிலக்கு சம்பந்தமாக இங்கே அதிகமாக விவாதம் செய்யப்படுகிறது. குறிப்பாகப் பல நண்பர்கள் சொன்னார்கள், மதுவிலக்கை ரத்து செய்ய கொண்டுவரப்பட்ட பட்ஜெட் என்று கூடச் சொன்னார்கள். நானும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையை பொறுத்தவரையில் அரசியல் சட்டத்தில் மதுவிலக்கு என்பது கன்கரண்ட் லிஸ்டிலே சேர்க்கப்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல அதுவொரு ஸ்டேட் சப்ஜக்ட். இங்கே ஒரு வாதத்தை வைத்தார்கள். காமராஜ் அவர்கள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த நேரத்தில் இது பற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றெல்லாம் சொன்னார்கள். நான் விசாரித்த வரையில், காமராஜ் அவர்கள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்த நேரதித்ல் மத்தியிலே இம்மாதிரி பிரச்சினை வந்து, அகில இந்தியாவிலும் புரொஹிபிஷனை அமல்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை எழுந்த நேரத்தில், டெக்ஸ்டன் என்ற நிபுணரின் தலைமையிலே ஒரு குழுவை அமைத்து, அகில இந்தியாவிலேயும் மதுவிலக்கை நடத்த வேண்டுமென்ற கோரிக்கையை அந்தக் குழு அன்றைக்கிருந்த [illegible]துறை அமைச்சரவர்களிடம் கொடுத்த நேரத்தில், அது மாநில சப்ஜக்ட், ஆகவே, மத்திய அரசு இதில் தலையிட முடியாது. என்று சொல்லிய நேரத்தில், இதை அமல்படுத்துவது சம்பந்தமான விவாதங்கள், கருத்துக்கள் எல்லாம் பரிமாறப்பட்டு முடிவான தீர்மானம் நிறைவேற்றப்பட்டாத நிலையிலே, தமிழ்நாட்டில் மட்டும் 1946 ஆம் ஆண்டிலேயிருந்து அன்றைக்கிருந்த ஆட்சியாளர்களிலேயிருந்து கடைசிவரையில், முப்பதாண்டுக் காலமாகத் தொடர்ந்து இருந்து

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மார்ச் 25

வந்த மதுவிலக்கு இடையிலே தொய்வு ஏற்பட்டாலும், முழு மூச்சோடு செய்யப் போகிறோம் என்று பறைசாற்றிக்கொண்டிருந்த நீங்கள், உண்மையிலேயே செயல்படுத்தப் போகிறோம் என்று சொன்ன நீங்கள், அது எங்கள் உயிருக்கும் மேலான பிரச்சினை எனறெல்லாம் சொல்லிவந்த நீங்கள், இன்றைக்கு அதைத் தளர்த்தி, குடிப்பதற்கு வழிவகை செய்திருக்கிறீர்களே அது என்ன நியாயம் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

நீங்கள் கேட்பதெல்லாம், மத்தியிலே, மற்ற அரசாங்கங்களிலே இருக்கிறதே அங்கெல்லாம் உங்கள் கொள்கை என்ன என்று கேட்கிறீர்கள். அதைத்தான் முதலிலேயே சொன்னோம். பல்வேறு மாநிலங்களில் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இது மாநிலத்தின் பிரச்சினை, கன்கரன்ட் லிஸ்டிலே இருக்கின்ற பிரச்சினை, எந்த அரசாங்கத்தையும் மத்திய அரசு இதில் கட்டுப்படுத்த முடியாது என்ற முறையில் தான் இது செயல்படுத்தப்படுகிறது.

ஒரு கோடி ரூபாய் செலவில் பிரச்சாரம் செய்யப் போகிறோம் என்று சொல்கிறீர்கள். இது என்ன வேடிக்கையான வேலை. மதுவிலக்குப் பிரச்சாரம் செய்வதற்காக முதல் தவணையாக ஒரு கோடி ரூபாய் என்றால் இதற்காக எத்தனை கோடி ரூபாய் செலவு செய்யப் போகிறீர்கள்? இருபது, இருபத்தைந்து கோடி ரூபாய் செலவு செய்வதாக உத்தேசமா? மதுவிலக்கைப் பற்றித் தீவிரமான பிரச்சாரம் ஒரு புறம், பக்கத்திலேயே சாராயக் கடை, கள்ளுக்கடைகளை விற்பனை செய்ய விளம்பரம் ஒருபுறம். என்ன வேடிக்கை! நீங்கள் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று சொன்னால், உங்கள் ஆட்களுக்கு, உங்கள் கட்சிக்காரர்களுக்கு அதிலே அங்கம் கொடுத்து, சினிமாப்படம் எடுத்து, நாடகம் ஆடி அல்லது கதை வசனம் எழுதி வருமானம் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுகிறதோ என்று நாங்கள் சந்தேகப்படுகிறோம்.

உண்மையிலேயே மதுவிலக்குப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று விரும்பினால், சமூக நலத்திலே ஈடுபட்டிருக்கின்ற அமைப்புக்கள் தமிழகத்திலே ஏராளம் உண்டு, அவர்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படையுங்கள். சோஷியல் வெல்பேர் ஆர்கனைசேஷனிடம் இதை ஒப்படையுங்கள். அவர்கள் அதை நீங்கள் விரும்புகின்ற வகையில் இல்லாவிட்டாலும் இன்னும் கொஞ்சம் கூடுதலாக, வேகமாகப் பிரச்சாரம் செய்ய வழியேற்படும் என்பதை நான் சொல்லி கொள்ள விரும்புகிறேன்.

மாநில அரசாங்கம் கலைப்பு என்ற பிரச்சாரம், பிரமை இந்த அவையிலே பல நாட்களாகப் பேசப்படுகிறது. ஒன்றை நான் தெளிவாக கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதைப்



1981 மார்ச் 25] [திரு நா. சுந்தரராஜ்]

பற்றிப் பேசியவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத் தோழர்களாக இருப்பார்களேயானால் (குறுக்கீடு) அவர்கள் பேசவில்லை; எந்த உறுப்பினரும் பேசவில்லை நான் அறிந்த வரையில். ஆனால் அதைப் பேசுவது கேரளத்திலேயும், மேற்கு வங்காளத்திலேயும் ஆளுகின்ற அந்த கட்சிகளைச் சார்ந்தவர்கள்தான் இந்த அவையிலே வேகமாகக் குரல் கொடுக்கிறார்கள். ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

[பிற்பகல் 12-30]

ஆனால் ஒன்றை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மேற்கு வங்காளத்திலேயும், கேரளாவிலேயும் நடைபெறுகின்ற ஆட்சி, அதன்மூலமாக ஏற்பட்ட கெட்ட பெயர்கள், அதன்மூலம் மக்கள் வெகுண்டு எழுந்து, போராட்டங்கள் நடத்துகிறார்கள். அதைத் திசைத் திருப்புவதற்காக, தங்களுடைய ஆட்சி தானாகவே கலைந்துவிடும் என்ற அச்சத்தின் காரணமாக, இங்கே ஒரு பேரணி நடத்தி, அங்கே ஒரு பேரணி நடத்தி, மத்திய அரசாங்கத்திற்கு எதிராக ''பந்த்'' நடத்தி, மத்திய அரசாங்கத்தின் இலாகாவான இரயில்வே இலாகாவானாலும் சரி, ஏனைய நிறுவனங்களானாலும் சரி, எங்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு தாருங்கள், எங்களுடைய இலாக்காக்கள் பந்திலே கலந்து கொள்ளாது, எங்களுடைய ஊழியர்கள் ''பந்த்''-லே கலந்து கொள்ளமாட்டார்கள், மாநில அரசு ஏற்படுத்தி இருக்கிற இந்த ''பந்த்''-லே நாங்கள் கலந்து கொள்ளவில்லை அதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை, எங்களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள் என்று கேட்ட நேரத்தில் அந்த முதலமைச்சர் அவர்கள் ஜோதிபாசு அவர்கள் சொல்லுகிறார். நாங்கள் பாதுகாப்புத் தரமுடியாது. எங்களுடைய அரசாங்கம் ''பந்த''-ஐ நடத்தும் மத்திய அரசாங்கத்தினுடைய ஊழியர்களுக்கு நாங்கள் பாதுகாப்பு தர முடியாது. ரயில்வேக்கு நாங்கள் பாதுகாப்புத் தரமுடியாது என்று சொல்கிற முதலமைச்சர் அங்கே இருக்கிறார். ஆகவே அந்த அரசாங்கத்திலே ஒரு கிலி. இங்கே மத்திய அரசாங்கம் டிஸ்மிஸ் செய்துவிடுமோ என்று ஒரு கிலி. ஆனால் மத்திய அரசைப் பொருத்தவரையில் பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையாரைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஆளுநர்கள் மாநாட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். Non-Congress States will not b dismissed—என்று திட்டவட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த அணி இந்த தமிழ்நாட்டு அரசாங்கத்தையும் சேர்த்து, இணைத்துப் பிணைத்து மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு மத்திய அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்ற மனோபாவத்திலே பேசப்படும் காட்சியை இங்கே பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

[திரு. நா. சுந்தரராஜ்] [1981 மார்ச் 2l

இன்னொன்றையும் நான் சொல்லிக் கொள்ளவிரும்பு
கிறேன். இந்த அரசாங்கத்தை நான் எச்சரிக்க விரும்பு
வது உங்களுக்கு மாய வலை விரிக்கப்பட்டிருக்கிறது. மாய
வலை....... அந்த வலையில் நீங்கள் சிக்கிக்கொள்ளாதீர்கள்.
இரண்டு பேர்களும் இங்கே இந்த அவையில் உட்கார்ந்திருக்
கிறீர்கள். ஒரு புறத்திலே மாயவலை, இன்னொரு புறத்தில்
பசுத்தோல் போர்த்திய கரடியாக காட்சி அளித்துக்
கொண்டிருக்கிறது. ஏமாந்து விடாதீர்கள். அந்த வலை
யிலே வீழ்ந்துவிடாதீர்கள் என்று உங்களை எச்சரிக்கிறேன்.
காரணம் அந்த வலையில் சிக்கினீர்களேயானால், அவர்கள்
பல்வேறு பிரச்சினைகளைச் சொல்லி, உங்களையும் குழப்பி,
இந்த நாட்டையும் குழப்பி, எல்லோரையும் குழப்பிவிடுவார்
கள். ஆகவே எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினை. எரிசாராயப் பிரச்
சினை (மணி அடிக்கப்பட்டது). எரிசாராயப் பிரச்சினையைக்
குறித்து பாராளுமன்றத்திலே உள்ள உள்துறை இணை அமைச்
சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள், ஒரு கேள்விக்கு
பதில் சொன்ன நேரத்தில். இதில் இரண்டு மாநிலங்கள் சம்
பந்தப்பட்டு இருப்பதால் மத்திய அரசு ஒரு விசாரணைக்
கமிஷனை அமைக்க ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகச்
சொன்னார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் சொன்னார்கள்
யாரையும் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் தாங்கள்
இதைச் செயல்படுத்தவில்லை என்றும் தெளிவாகச் சொல்லி
இருக்கிறார்கள். ஆனால் இங்கே இருக்கின்றவர்கள் எல்லாம்
ஏதோ மத்திய அரசாங்கம் விசாரணைக் கமிஷன் வைத்து
இந்த ஆட்சியின் மீது களங்கம் கற்பித்து விடுவார்கள் என்
பதைப் போல, பல்வேறு துறைகளில் இருந்து அது ஆளும்
கட்சியாக இருந்தாலும் சரி, தோழமைக் கட்சியாக இருந்
தாலும் சரி, எங்களுடைய மாநில சுயாட்சியிலே தலையிட
லாமா மாநில உரிமைகளில் தலையிடலாமா என்று கேட்கிறார்
கள். ஒன்றை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 1972-73
ஆம் ஆண்டுக்கு முன்னால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்
அன்றைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மீது
ஒரு விசாரணை கமிஷன் நடத்த வேண்டும் என்று,
இன்றைக்கு ஆளும் கட்சியாக இருக்கின்ற அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சி.பி.ஐ. என்று
சொல்லக்கூடிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து
ஒரு மெமோரண்டம் கொடுத்தார்கள். அந்த மெமோரண்
டத்தில் கூறப்படுவது......

The demand of the Anna D.M.K. and the C.P.I. is for
appiointing a Commission of Enquiry and the concerned Ministers
stepping down from off ce till they are cleared of charges. This
demand has not been supported by all the important political
parties.



1981 மார்ச் 25]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வரவு-செலவுத்
திட்டத்தில் பேசுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து
விட்டது. அரைமணி நேரம் பேசிவிட்டீர்கள். மற்றவர்
களுக்கு 10 நிமிடங்கள்தான் தரப்பட்டன. இன்னும் ஒரு
நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

திரு. நா. சுந்தரராஜ்: அது மட்டுமல்லாமல் இன்னொன்றை
யும் நான் சொல்ல விரும்புகிறேன். அன்றைக்கு அந்த மனுவில்
கொடுக்கப்பட்ட செய்தி.

If the Central Government delays constitutirg a Commission
of Enquiry to enable proof of the charges it can orly me n that
the Central Goverment is pairirg the wy for grantirg a de-f cto
recognition to Tamil Nadu as a separate St te.

விசாரணைக் கமிஷன் நியமனம் செய்யவில்லை என்றால் மத்திய
அரசாங்கமே தமிழக அரசை ஒரு தனி நாடாக ஆக்குவதற்கான
வழியினைச் செய்கிறது என்று அனைத்திந்திய அண்ணா தி.மு.க.
மற்றும் சி.பி.ஐ. கட்சிகளால் சொல்லப்பட்டது. ஆனால் இன்
றைக்கு அதை மிகைப்படுத்துவதற்குக் காரணம் அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தவறு செய்து இருக்
கிறது, அது மட்டுமல்ல; தவறு நடந்தும் இருக்கிறது. அதே
போல கேரள மாநிலத்திலும் தவறு செய்து இருக்கிறார்கள்.
ஆகவே தான் மத்திய அரசு விசாரணை நடத்துவதை எதிர்க்
கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எல்லோருக்கும்
பேசுவதற்கு 10 நிமிடம் தான் கொடுக்கப்பட்டது. மாண்புமிகு
உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் 30 நிமிடம் எடுத்துக்
கொண்டு பேசியிருக்கிறார்கள். ஆகவே, பேச்சை முடித்துக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். ஏற்
கனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீது அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், கம்யூனிஸ்ட்
கட்சி மட்டும் விசாரணை கமிஷன் மத்திய அரசு மூலம் தேவை
என்று சொல்லவில்லை. இந்திரா காங்கிரஸ் கூட அத்தகைய
கோரிக்கையைக் கொடுத்தது என்பதை உங்கள் கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

திரு. கோ. விஸ்வநாதன்: மாண்புமிகு உறுப்பினர் திரு.
சுந்தரராஜ் அவர்கள் பேசுகிறபோது (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சுந்தரரா[illegible] அவர்கள் ஏற்கனவே பேசி முடித்து விட்டார்கள். அவ[illegible] பேசிய கருத்துக்களுக்கு மறுப்புக் கொடுக்க விரும்புகிற மாண்[illegible] மிகு உறுப்பினர்கள், அடுத்து பேச இருக்கிற மாண்புமிகு உறுப் பினர்கள் மூலம் அந்தக் கருத்தைத் தெரிவிக்கலாம். (குறு[illegible] கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமி[illegible] பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறு[illegible] பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசி முடித்து விட்டார்கள். ஆகவே கருத்து விளக்கம் கேட்க விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் அல்லது மாறுபட்ட கருத்தைத் தெரிவிக்க விரும்புகிற மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தகைய கருத்துக்களை அடுத்து பேச இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களிடத்தில் சொல்லி இங்கே எடுத்து வைக்கலாம். இன்னும் சில நாட்கள் இந்த பொது விவாதம் தொடர்ந்து நடைபெற இருப்பதால், இப்போது எந்தவிதமான குறுக்கீடுகளும் தேவையில்லை, என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12 40)

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டுள்ள 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையினை வர வேற்றுப் பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்கு எனது நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் நாவலர் அவர்கள் கொடுத்துள்ள இந்த நிதிநிலை அறிக்கை ஒரு அட்சய பாத்திரம். இருளில் தவிப்போருக்கு ஒளி கொடுத்து வழி காட்டும் ஒளி விளக்கு. கானல் நீரல்ல, கரை புரண்டோடும் கன்னித் தமிழ் காவிரி. முக்கனியும் சர்க்கரையும் தேனும் பாலும் சேர்த்துப் படைத்துள்ள இன்னமுது. ஏழையர் வாழ்வின் இருளகற்றும் விடிவெள்ளி. பொங்கி வரும் புதுப் புனல், பூத்துக் குலுங்கும் பூக்காடு.

இந்த அரசு தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எப்படி தீவிரமான அக்கறை கொண்டுள்ளது என்பது இந்த நிதி நிலை அறிக்கையின் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது. சொன்ன தைச் செய்பவர் புரட்சித் தலைவர் என்பதை உறுதியாக்கி உள்ள நிதிநிலை அறிக்கையாகும் இது.

ஏழைக் கைம்பெண்களின் மகளிர் திருமணத்திற்கு குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம் வழங்கிட 10 இலட்சம் ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது வர வேற்கத் தக்க அம்சமாகும்.



ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணியாளர்களாக ஆக்கிட்ட பெருமை புரட்சித் தலைவர் அவர்களின் அரசையே சாரும். ஆசிரியர்கள், காவல் துறையில் பணியாற்றுவோர், மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியவர்களுக்காக அளிக்கப்பட்டு உள்ள சலுகைகள், ஊதிய உயர்வுக்காக அவர்களோடு சேர்ந்து நானும் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

நரிக்குறவர்கள், ஒட்டர்கள், முடி திருத்துவோர், சலவைத் தொழிலாளர் ஆகியோர்களுக்கு வீட்டு மனைகள் வழங்க நில எடுப்புச் செய்யும் திட்டத்திற்காக 15 இலட்சம் ரூபாய் ஒதுக்க பட்டிருப்பது நலிந்த பிரிவு மக்களிடத்திலே இந்த அரசு கொண்டு உள்ள அக்கரைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்களை கூட்டுறவு அமைப்பிற்குள் கொண்டு வந்து அவர்களுக்குக் கடனுதவி அளித்து அதன்மூலம் அவர்கள் தங்கள் வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக் கொள்ளும் வகையில் தொழில் செய்ய கூட்டுறவு இயக்கங்கள் மூலம் உதவி செய்ய புதிய திட்டம் ஒன்றினை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருப்பதை நான் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

மேலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு மாணவரில்ல உணவுச் செலவுக்காக கொடுக்கப்படும் தொகையுடன் 15 ரூபாய் உயர்த்தி இருப்பது பாராட்டுக்குரியதாகும்.

கொடுத்த வாக்குறுதிப்படி சிறு விவசாயிகளின் கடன்களில் தள்ளுபடி செய்யப் ஏறத்தாழ 71 கோடி ரூபாய் ஏற்கனவே திருப்பிச் செலுத்தி பட்டுள்ளது. மேலும் சிறு விவசாயிகள் கடன் நிலுவைக்கு இருந்த 23 கோடி ரூபாய் அடுத்த ஆண்டுக் ஈடு செய்யப்படும் என்று அரசு அறிவித்துள்ளதை நான் பாராட்டு கிறேன்.

மேலும் வட்டியும், தண்ட வட்டியும் தள்ளுபடி செய்திருப்பது பாராட்டத்தக்க அம்சமாகும்.

போக்குவரத்துத் துறையிலே இந்த அரசு செய்துள்ள சாதனை இமாலயச் சாதனை என்று சொன்னால் அது மிகையாகாது. நகரப் பேருந்துகள் செல்லும் தூரம் 25 கிலோ மீட்டர் என்று இருந்ததை 30 கிலோ மீட்டராக அதிகரித்துக் கொடுத்திருப்ப தால் மேலும் பல கிராமங்கள் நகரப் பேருந்துகள் வந்து செல்கின்ற வாய்ப்பினைப் பெற்றுள்ளன. தமிழகத்தைப் பொறுத்த வரையில் பேருந்து செல்லாத கிராமமே இல்லை என்ற [illegible] உருவாக்கியிருப்பது மாபெரும் சாதனை. தமிழக

போக்குவரத்துத் துறை இந்தியாவிற்கே வழிகாட்டியாகவு
முன்னோடியாகவும் இருப்பது அனைவராலும் பாராட்டப்ப
வேண்டிய ஒரு அம்சமாகும்.

மாநிலத்தின் முக்கிய நகரங்களில் மோட்டார் பொருத்தப்
பட்ட சைக்கிள் ரிக்ஷா வாங்குவதற்கு விலையில் கால் பங்கு
உதவித் தொகையுடன் கடன் பெறுவதற்கு கூட்டுறவு இயக்கத்
தின் மூலம் ஏற்பாடு செய்து கொடுத்திருப்பது உழைப்பவரின்
உணர்வுகளை புரிந்து கொண்ட செயலென பாராட்டத்தக்க
தாகும்.

இன்றைக்கு எதிர்க்கட்சி நண்பர்கள் எடுத்துக் கொண்டுள்ள
ஆயுதம் வறட்சி. ஏதோ வறட்சிக்கு இந்த அரசு தான் காரணம்
என்ற முறையிலே அவர்களுடைய பேச்சுக்கள் உள்ளன. வறட்சி
இயற்கையால் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு அசம்பாவிதம்
இன்றைக்கு வறட்சிப் பகுதிகளில் நிவாரணப் பணிகள் தீவிர
மாகவும், சிறப்பாகவும் செயல்படுத்தப்படுகின்றன. இன்றைய
தினம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் வறட்சி
பகுதிகளிலே சுற்றுப்பயணம் செய்து, அங்குள்ள நிலை
மைகளை நேரிலே கண்டும், நிவாரணப் பணிகளை விரைவாக
முடுக்கி விட்டிருப்பதும் அனைவராலும் மனமுவந்து பாராட்டப்
படுகிறது.

வானம் பொய்க்கலாம், வான்மழை பொய்க்கலாம்; வற்றாத
காவிரியும் பொய்க்கலாம். ஆனால் இந்த நாட்டு ஏழை
மக்களுக்கு தொண்டு செய்வதிலே, அவர்தம் வாட்டம் போக்கு
வதிலே புரட்சித் தலைவர் அவர்கள் பொய்த்ததில்லை. அவர்
களால்தான் வீடு வளம் பெறும், நாடு நலம் பெறும் என்று
தமிழக மக்கள் நம்பி இருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றா
கும். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி, உறவுக்குக்
கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம், இது எங்கள்
தாரக மந்திரம் உயிர் மூச்சு என்று முழங்கியவர்கள் டில்லிக்குச்
சென்று கமிஷன் போடு என்று கேட்க வேண்டிய நிலைமைக்குச்
சென்றிருப்பது நாடே அறிந்த ஒன்று. தமிழ் எங்கள் உயிர்,
தமிழ் எங்கள் மூச்சு, இதுதான் மேடைதனில் பேச்சு, வீர
முழக்கம். ஆனால் விசாரணைக் கமிஷனுக்கு தமிழ் தெரிந்தவன்
தமிழன் தேவையில்லை; தமிழ் தெரியாத வடபுலத்து நீதிபதி
வரவேண்டுமென்று சொல்லுகின்ற வரலாற்றினை தமிழகம்
பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் புரட்சித் தலைவரின்
அரசு எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற கொள்கையினை
சகல துறைகளிலும் முனைப்போடு அமுல்படுத்தி வருகிறது.



தமிழ் பல்கலைக் கழகம் தொடங்க முடிவு செய்திருப்பதையும்
தமிழ்ப் பற்றுள்ள அனைவரும் பெரிதும் பாராட்டி வரவேற்
றுள்ளனர்.

இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள்
சிலர் மத்திய அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது, மத்திய அரசு
கவனித்துக் கொள்ளும் என்று அச்சுறுத்தும் தொனியிலே பேசி
னார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரை மக்கள்
சக்திக்கு பயப்படுமே அல்லாது வேறு எந்த அதிகார சக்திக்கும்
என்றும் பயப்படாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்
கொள்கிறேன். எடுத்ததற்கெல்லாம் மைய அரசினைத் துணைக்
கழைப்போர் மைய அரசு கோதுமையின் கொள்முதல் விலை
யினை ரூபாய் 117 லிருந்து 130 ரூபாயாக உயர்த்தியும், நெல்
லுக்கு கொள் முதல் விலையினை கூட்டிக் கொடுக்காமல் இருப்
பதையும் கண்டு வாய்மூடி மௌனிகளாக இருத்தல் ஏன்?
என்பது எனக்குப் புரியவில்லை. நெல்லுக்குத் தருகின்ற விலை
போதும் என்று ஒத்துக் கொள்கிறார்களா என்ற ஐயப்பாடு
எழுகிறது. அவர்கள் ஒருகால் ஒத்துக் கொள்ளலாம், அதை
எங்களால் ஒத்துக் கொள்ள முடியாது, தமிழக மக்களும் ஒத்துக்
கொள்ள மாட்டார்கள். கோதுமை உற்பத்தி செய்வதை விட
நெல் உற்பத்தி மிகவும் சிரமமான காரியம். உரவிலை அதிகம்,
மற்ற இடுபொருள் விலையும் மிகவும் அதிகமாக உள்ளது. டீசல்
விலையோ நாளுக்குநாள் ஏறிக் கொண்டிருக்கின்றது. எனவே
உற்பத்திச் செலவைக் கருத்திலே கொண்டு நெல்லுக்கு குறைந்த
பட்சம் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 175 கொள்முதல் விலை
யாகக் கொடுத்திட மத்திய அரசு முன்வர வேண்டும் என்று தமிழக
அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

இங்கே விவசாயிகளின் நண்பர்களாகத் தங்களைக் காட்டிக்
கொண்டு இருப்பவர்கள் நாடாளுமன்றத்திலே நெல் கொள்
முதல் விலையினை அதிகப்படுத்திக் கொடுக்குமாறு குரல் எழுப்
பாமல் வாளா இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இனி
மேலாகிலும் இவர்கள் தமிழக விவசாயிகளின் நலனிலே உண்மை
யான நாட்டம் கொண்டவர்களாக, அக்கரை உடையவர்களாக
விவசாயிகள் பிரச்சினை பற்றி நாடாளுமன்றத்திலே பேசுவார்
கள் என்று எதிர்பார்க்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினைகளை அறிந்து அதனைத் தீர்ப்
பதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் பொருட்டு உயர்
மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதை நான் பெரிதும் வரவேற்
கிறேன். அந்தக் குழுவில் சேர்ந்து பேச்சு வார்த்தைகளில்
கலந்து கொள்ள மறுக்கும் சங்கத் தலைவர்களை அதிலே கலந்து
கொள்ளும் வண்ணம் அவர்களுக்கு நண்பர்களாக உள்ள எதிர்க்
கட்சியினர் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்ச்சி



காங்கிரஸ் கட்சி நண்பர்கள் பேசுகின்றபோது ஏக இந்தியா அகண்டத்திந்தியா, தேசிய நீரோட்டம் என்றெல்லாம் உரத்த குரலிலே பேசினார்கள். ஆனால் மதுவிலக்கு பிரச்சினையில் மட்டும் தமிழகத்திற்கு தனி நிலைமையை ஏற்படுத்திவிடுகிறார்களே, அதன் காரணம் என்ன ? மற்ற பிரச்சினைகள் என்றால் இந்திய தேசிய காங்கிரஸ் என்று கூறுகிறார்கள். மதுவிலக்கு பிரச்சினையில் மட்டும் தமிழ்நாடு காங்கிரஸ்ஸோ ? இது எப்படி இருக்கின்றது என்றால் ஆனைக்கு அறம், குதிரைக்கு குறம் என்ற பழமொழியைப் போல் உள்ளது.

அடுத்து இங்கே என்னுடைய தொகுதியைப் பற்றியும் ஒரு இரண்டு வார்த்தைகள் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன்.

காளிங்கராயன் கால்வாய் எனது தொகுதியில் கடைக்கோடிப் பகுதியாக உள்ளது. ஆகவே அந்த கால்வாய்ப் பாசனத்தின் மூலம் தண்ணீர் கிடைக்காமல் ஆவுடையார் பாறை, சென்ன சமுத்திரம் போன்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். சில காலங்களில் கடை மடைப் பகுதிக்குத் தண்ணீர் வராமல் கால்வாய் வரண்டு கிடக்கின்ற நிலையும் உள்ளது. அந்தப் பகுதி விவசாயிகளின் அவதியைப் போக்கும் விதத்திலே அந்தக் கால்வாயினை சீரமைத்து செப்பனிடும் வேலையினை உடனடியாகத் துவக்கிட அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கீழ்பவானி வாய்க்காலின் கிளைக் காலாகிய சென்ன சமுத்திரம் கால்வாயிலும் இந்தத் தண்ணீர் தட்டுப்பாடு உள்ளது. இந்தக் கால்வாயினையும் சீரமைக்க ஆவன செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

மொடக்குறிச்சி மற்றும் மூன்று பேரூராட்சிகள் சம்பந்தப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலையினை உடனடியாக துவக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கோள்கிறென்.

அதேபோல தேவம் பாளையம், கொளத்துப் பாளையம் அரிசனக் காலனி குடிநீர் திட்டத்தையும் விரைவில் நிறை வேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எனது தொகுதியில் 17 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. அவைகளில் ஏராளமான ஜவுளிகள் தேங்கி உள்ளன. தற்பொழுது அவைகளை விற்பனை செய்யாவிட்டால் நெசவாளர்கள் வேலை வாய்ப்பினை இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகும். எனவே நடக்க இருக்கும் கைத்தறிக் கண்காட்சியில்



அனைத்து ரகங்களுக்கும் 20 சதம் சிறப்புத் தள்ளுபடி வழங்கி தேங்கிக் கிடக்கும் ஜவுளிகளை விற்பனை செய்து நெசவாளர் துயர் துடைத்திட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சிவகிரி ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவ மனையாக ஆக்கித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கொடுமுடி மருத்துவ மனை பாதி கட்டப்பட்டு முடிக்கப்படாமல் உள்ளது. அக்கட்டிடத்தையும் கட்டி முடிக்க நிதி உதவி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஆதி திராவிட மக்களுக்கு அரசு இலவசமாக கட்டித் தந்துள்ள வீடுகளுக்கு பேரூராட்சி, ஊராட்சிகள் விதிக்கும் வீட்டு வரியிலிருந்து விலக்கு வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சில பேரூராட்சி மன்றங்கள் கடைகள் மூலம் தொழில் செய்யும் சவரத் தொழில், சலவைத் தொழில் முதலியவற்றிற்கு விதிக்கும் தொழில் வரியை ரத்து செய்ய அரசு ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

(பிற்பகல் 12.50)

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு சில வார்த்தைகளை குறிப்பிட விரும்புகிறேன். இந்த அரசு தொடங்குவதற்கு முன்பாக, தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று 60 வயது அடைந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு பென்ஷன் கொடுக்கப் பெறுவது என்பது. அப்படி ஒரு திட்டத்தை அமுல் நடத்துவோம் என்று இந்த அரசு ஏற்கனவே அறிவித்திருந்தது. இந்தியாவில் இருக்கக் கூடிய ஏழ்மைக் கோட்டிற்கு கீழே இருக்கக் கூடிய சராசரி எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமான பேர்கள் தமிழ் நாட்டில் இருப்பதாகக் கிட்டத்தட்ட 52·12 சதவீதத்தினர்கள் ஏழ்மை கோட்டிற்குக் கீழே இருப்பதாக புள்ளி விவரக் கணக்கு சொல்கிறது. ஆக அந்த அடிப்படையில் விவசாயத் தொழிலாளர்கள் தான் அதிகமாக வருவார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டும் என்ற வகையில், வருமானம் குறைவாக இருக்கக் கூடிய 60 வயதான விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த பென்ஷன் வழங்கும் திட்டத்தை, ஏற்கனவே அறிவித்துள்ளவாறு, உடனடியாக அமுல் படுத்த வேண்டும் என்று நான் கூற முற்படுகிறேன்.

அதேபோல விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி கொடுக்க வேண்டும் என்று உத்திரவிடப்பட்டுள்ளது. ஆனாலும் வெகு சில இடங்களிலே, எங்கெங்கே இயக்கங்கள் வலுவாக உள்ளனவோ அந்த இடங்களிலே மட்டும் அரசு ஆணையின்படி விவசாயக் கூலிகள் வழங்கப்படுகின்றன. மற்ற இடங்

தமிழ் பல்கலைக் கழகம் தொடங்க முடிவு செய்திருப்பதையும் தமிழ்ப் பற்றுள்ள அனைவரும் பெரிதும் பாராட்டி வரவேற்றுள்ளனர்.

இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் மத்திய அரசு பார்த்துக் கொண்டிருக்கிறது, மத்திய அரசு கவனித்துக் கொள்ளும் என்று அச்சுறுத்தும் தொனியிலே பேசினார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரை மக்கள் சக்திக்கு பயப்படுமே அல்லாது வேறு எந்த அதிகார சக்திக்கும் என்றும் பயப்படாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். எடுத்ததற்கெல்லாம் மைய அரசினைத் துணைக்கு அழைப்போர் மைய அரசு கோதுமையின் கொள்முதல் விலையினை ரூபாய் 117 லிருந்து 130 ரூபாயாக உயர்த்தியும், நெல்லுக்கு கொள் முதல் விலையினை கூட்டிக் கொடுக்காமல் இருப்பதையும் கண்டு வாய்மூடி மௌனிகளாக இருத்தல் ஏன் என்பது எனக்குப் புரியவில்லை. நெல்லுக்குத் தருகின்ற விலை போதும் என்று ஒத்துக் கொள்கிறார்களா என்ற ஐயப்பாடு எழுகிறது. அவர்கள் ஒருகால் ஒத்துக் கொள்ளலாம், ஆனால் எங்களால் ஒத்துக் கொள்ள முடியாது, தமிழக மக்களும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். கோதுமை உற்பத்தி செய்வதை விட நெல் உற்பத்தி மிகவும் சிரமமான காரியம். உரவிலை அதிகம், டீசல் மற்ற இடுபொருள் விலையும் மிகவும் அதிகமாக உள்ளது. எனவே விலைவாசியோ நாளுக்குநாள் ஏறிக் கொண்டிருக்கின்றது. உற்பத்திச் செலவைக் கருத்திலே கொண்டு நெல்லுக்கு குறைந்தபட்சம் குவிண்டால் ஒன்றுக்கு ரூபாய் 175 கொள்முதல் விலையாகக் கொடுத்திட மத்திய அரசு முன்வரவேண்டும் என்று தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே விவசாயிகளின் நண்பர்களாகத் தங்களைக் காட்டிக் கொண்டு இருப்பவர்கள் நாடாளுமன்றத்திலே நெல் கொள்முதல் விலையினை அதிகப்படுத்திக் கொடுக்குமாறு குரல் எழுப்பாமல் வாளா இருப்பது ஏன் என்று தெரியவில்லை. இனியாகிலும் இவர்கள் தமிழக விவசாயிகளின் நலனிலே உண்மையான நாட்டம் கொண்டவர்களாக, அக்கறை உடையவர்களாக நாடாளுமன்றத்திலே விவசாயிகள் பிரச்சினை பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

விவசாயிகளுடைய பிரச்சினைகளை அறிந்து அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறியும் பொருட்டு உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டிருப்பதை நான் பெரிதும் வரவேற்கிறேன். அந்தக் குழுவில் சேர்ந்து பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ள மறுக்கும் சங்கத் தலைவர்களை அதிலே கலந்து கொள்ளும் வண்ணம் அவர்களுக்கு நண்பர்களாக உள்ள எதிர்க்கட்சியினர் வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

களில் அந்தக் கூலி வழங்கப்படுவதில்லை. இன்னும் சொல்லப்போனால் அரசாங்கத்தினுடைய பண்ணைகளில் வேலை செய்யும் விவசாயக் கூலிகளுக்கு கூட அரசு ஆணையின்படி விவசாயக் கூலி வழங்கப் பெறுவது இல்லை என்பதை மிக வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். '' மங்கை சூதக மானால் கங்கையில் குளிக்கலாம் கங்கையே சூதகமானால் எங்கே குளிப்பது ? ''என்பதைப்போலத்தான் இது இருக்கிறது.

அதேபோன்று கோவில்பட்டியில், லேபர் அஸிஸ்டெண்டுகளாக 18 ஆண்டுகளாக வேலை செய்பவர்கள் இருக்கிறார்கள். ஸ்கில்ட் லேபர்கள். அவர்களுக்கு 3 3/4 ரூபாய் தான் தினக் கூலியாக சம்பளம் கொடுக்கிறார்கள். சம்பளம் கூடுதலாக வேண்டும் என்று இப்போது கோரிக்கை வைத்தபோது, அவர்கள் அத்தனை பேர்களும் இப்போது டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல குத்தாலத்தில் உள்ள பட்டுப் பூச்சி வளர்ப்பு பண்ணையில் 12, 13 ஆண்டுகளாக வேலை செய்கிற கூலிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு 2½ ரூபாயிலிருந்து 4 ரூபாய் வரை தான் சம்பளம் அங்கே கொடுக்கப்படுகிறது, நியாயமான கூலி வேண்டும், அரசாங்கம் நிர்ணயம் செய்த கூலி தரப்பட வேண்டும் என்று கேட்டதற்காக, கிட்டத்தட்ட 70 பேர்களுக்கு மேலாக டிஸ்மிஸ் செய்யப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் நீடிக்க வேண்டுமா என்பதை அரசு பரிவோடு நோக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல வேலையில்லாத பட்டதாரிகளுக்கு மாதம் 50 ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று இதே மன்றத்தில் முன்பு கூறப்பட்டது. அதன் அடிப்படையில் 96,000 பேர்களுக்கு இந்த அரசு 50 ரூபாய் மாதம் ஒன்றுக்கு நிவாரணம் அளிக்கப் போகிறது என்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அவையிலேயே குறிப்பிட்டார்கள். அதற்காக கிட்டத்தட்ட 6 கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று கூட சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு வரும் அறிவிப்புகளைப் பார்க்கின்றபோது, சுமார் 15,000 வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு, மாதம் 50 ரூபாய் வழங்கப்படும் என்று பத்திரிகைகளில் வருகிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் வேலையில்லாத பட்டதாரிகளுக்கு என்று மாத்திரம் அல்ல, வேலையில்லாத அனைவர்களுக்கும், எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்து கொண்ட அனைவருக்கும் இந்த 50 ரூபாய் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.



அதேபோல அப்பெரண்டிஸ்ஷிப் என்று ஒரு பயிற்சி வேலை இருக்கிறது. அதில் ஐ.டி.ஐ இரண்டு ஆண்டுகள் படித்து பாஸ் செய்து, சர்டிபிகேட் வாங்கியவர்களை சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் தனியார்களின் கம்பெனிகளிலும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள், கே. டி. சி. போன்ற அரசு நிறுவனங்களில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அப்படி சேர்க்கப்படும் போது 2 ஆண்டுகளுக்கு மாதம் 150 ரூபாய் வீதம் சம்பளம் கொடுத்து கடுமையாக வேலை வாங்குகிறார்கள். அந்த இரண்டு ஆண்டுகள் முடிந்தவுடன், எந்தவித காரணமும் இல்லமல் அவர்களை வெளியே பேகச் சொல்லிவிடுகிறார்கள். வெளியே ஐ. டி. ஐ. படித்து விட்டு வேலைக்கு ரெடியாக காத்துக் கொண்டிருக்கும் புதிய ஆட்களை திரும்பவும் இதே முறையில் வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். ஆக இந்த பயிற்சி வேலை என்பது கடுமையான வேலை வாங்கிக் கொண்டு குறைந்த சம்பளம் கொடுக்கிற ஒரு வேலையாக மாறிவிட்டது. இந்த முறையை மாற்றி அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டியது முக அவசியம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

இதில் இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். வேலை இல்லாதவர்கள் வேலைக்கு மனு செய்து கொள்ளும் காலத்தில், ஒவ்வொரு மனுவிற்கும் 5 ரூபாய் 10 ரூபாய் என்று போஸ்டல் ஆர்டர்கள் வைக்கிறார்கள். தற்போது கூட கிராம அதிகாரிகள் பதவிக்கு விண்ணப்பம் போட 5 ரூபாய் போஸ்டல் ஆர்டர் என்று அரசே கூட நிர்ணயம் செய்திருந்தது. 3 லட்சம் பேர்கள் மனு செய்தார்கள். அரசுக்கு 15 லட்சம் ரூபாய் வரவு வந்து விட்டது. இப்படிப்பட்ட இந்த போஸ்டல் ஆர்டர் முறைகளை நிறுத்த வேண்டும்: அதற்கு ஏற்பாடு செய்ய முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கைத்தறி நெசவாளர்கள் என்று எடுத்துக் கொண்டால், தமிழ்நாட்டில், விவசாயத தொழிலாளர்களுக்கு அடுத்தபடியாக அதிகப்படியான எண்ணிக்கையில் இருப்பவர்கள் கைத்தறி நெசவாளர்கள்தான். இவர்கள் கிட்டத்தட்ட 7 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான சட்ட பாதுகாப்பும் கிடையாது. குறைந்த பட்ச கூலி நிர்ணயம் கிடையாது. அவர்களுக்காக இந்த மன்றத்தில் சட்டம் நிறை வேற்றப்படும் என்று சொன்னார்கள். ஆனால் சொல்லி 2, 3 ஆண்டுகள் ஆகிவிட்டன. சட்டம்தான் இன்னும் நிறை வேற்றப்படவில்லை. இது மிகவும் வருந்தத்தக்க விஷயம். ஆகவே உடனடியாக அவர்களுக்கென்று ஒரு சட்டத்தை நிறை வேற்றி அந்த கைத்தறி தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டியது மிகமிக அவசியம் என்று இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1981 மார்ச் 25

சிவில் சப்ளைஸ் பொறுத்தவரையில், சிமெண்ட் பெர்மிட்ஸ்
வழங்குவது ஊராட்சி ஒன்றியம், தாலுக்கா ஆபீஸ். இப்படி
ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் தாலுக்கா ஆபீஸ் மூலம்
பர்மிட்ஸ வழங்குவதில் முறைகேடுகள் இருக்கின்றன பல
இடங்களில் என்று கூற விரும்புகிறேன். இதைத் தவிர்க்க
வேண்டுமென்றால் யார் யார் மனு செய்தார்கள், எப்போது
எப்போது மனு செய்தார்கள் என்ற வரிசைப்
பட்டியலை மனு செய்த தேதி, பெயரை வரிசையாகக்
குறிப்பிட்டு நோட்டீஸ் போர்டில் பொது மக்களுக்குத் தெரியக்
கூடிய வகையில் போடுவதற்கு ஒரு ஏற்பாடு செய்தால் இப்படிப்
பட்ட ஊழல்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒரு வாய்ப்பு ஏற்
படும், இதை அரசு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதேபோல் அரிசி, சர்க்கரை வழங்குவதிலும் முறை
கேடுகள் இருக்கின்றன. விளாத்திகுளத்தில் ஒரு சம்பவம்
அரிசி, சர்க்கரையை எடுத்துக் கொண்டு போகும்போது அங்குள்ள
சில அரசியல் கட்சிக்காரர்கள் கையும் களவுமாகப் பிடித்து அதி
காரிகளிடம் ஒப்படைத்தார்கள். ஆனால் ஒரு வழக்கும் கிடை
யாது, எந்த நடவடிக்கையும் கிடையாது. இது சம்பந்தமாக
அந்தப் ப்ளாக்கில் அரசியல்கட்சி ரீதியாக மனு கொடுக்கப்பட்
டிருக்கிறது. இதுவரை நடவடிக்கைகள் எதுவும் இல்லை.
இப்படிப்பட்ட மோசமான நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களைப் பொறுத்தவரை
யில் விவசாயிகளுக்கு நியாயமான விலை வேண்டுமென்று
கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அது இன்னும் சரியான முறை
யில் பரிசீலிக்கப்படவில்லை. இன்று ஒழுங்குமுறை விற்பனைக்
கூடங்கள் முறையாகச் செயல்படவில்லை. ஆகவே விவசாயிகள்
உற்பத்தி செய்கிற உற்பத்திப் பொருள்களுக்கு நியாய விலை
கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதைப் பார்க்கிறோம்.
மகாராஷ்டிராவை எடுத்துக் கொண்டால், மகாராஷ்டிரா
ஸ்டேட் காட்டன் மொனாப்பலி கார்ப்பரேஷன் என்றிருக்கிறது.
அதன் மூலம் அங்கே உற்பத்தியாகக் கூடிய பருத்தி அனைத்தை
யும் கொள்முதல் செய்கிறார்கள். தனியார் யாரும் உள்ளே
நுழையமுடியாது. அந்த அளவிற்கு உற்பத்தி செய்யக்கூடிய
பருத்தி அத்தனையும் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு
ஓரளவு நியாய விலை கிடைக்கக்கூடிய ஒரு ஏற்பாடு செய்யப்
பட்டிருக்கிறது. அப்படிப்பட்டதொரு ஏற்பாட்டை தமிழகத்
திலும் உருவாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1981 மார்ச் 25] [திரு. ரா. கிருஷ்ணன்]

அடுத்து, ஹரிஜன நலத் துறையைப் பொறுத்த வரையில்
இன்று அது செயல்படுகிறதா என்பதே ஒரு பெருத்த சந்தேக
மாக இருக்கிறது. ஏற்கனவே இந்தத் துறை தனிப்பட்ட முறை
யில் இயங்க அரசாங்கம் ஒரு ஆணையை, ஜீ.ஒ.எம்.எஸ். 962.
சோஷியல் வெல்பேர் டிப்பார்ட்மெண்ட், டேட்டட் 26 மே 1979,
என்று ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறது. அப்படி இத்
துறையைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்று உத்தரவு இடப்
பட்டிருக்கிறது. அது தூங்குகிறது. இந்த உத்திரவு பிறப்
பிக்கப்பட்டதன் நோக்கம் என்ன? இந்தத் துறை முறையாக
செயல் படவில்லை, ஆகவே தனியாக ஒரு டிப்பார்ட்மெண்ட்
செயல்படக் கூடிய நோக்கோடுதான் இந்த உத்திரவு பிறப்பிக்
கப் பட்டிருக்கிறது. ஆனால் இந்த உத்தரவு அமல்படுத்தப்பட
வில்லை. ஸ்டேட் வெல்பேர் கமிட்டி என்று ஹரிஜன நலத்துறை
மூலமாக மாநில அளவில் ஒரு கமிட்டி ஏற்பாடு செய்யப்பட்டு
ஒதுக்கப்படுகிற பணம் முறையாகச் செலவு செய்யப்படுகிறதா
என்பதைக் கவனிக்க இதற்கு முன்பாக அப்படி ஒரு கமிட்டி இருந்
தது. ஆனால் இந்த அரசாங்கம் வந்த பிறகு இதுவரை இக்கமிட்டி
உருவாக்கப்படவும் இல்லை. செயல்படுத்தவும் இல்லை.
மாவட்ட அளவில்கூட அப்படித்தான். இப்படிப்பட்டதொரு
நிலை தொடர வேண்டுமா?

'தாட்கோ' அலுவலகம் விழுப்புரத்தில் இருக்கிறது. இந்த
மன்றத்திலுள்ள அத்தனை கட்சிகளும் அதை சென்னைக்கு
மாற்றவேண்டும் என்று கோரிக்கைவிட்டும் அது உதாசீனப்படுத்
தப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு 'தாட்கோ' மூலம் வீடுகள்
கட்டிக்கொடுக்க ஒரு பைசா கூட ஒதுக்கப்படவில்லை. இது
இந்த அரசுக்கு நிச்சயமாக ஒரு அவச் சொல்லை ஏற்படுத்தித்
தரும். ஒவ்வொரு ஆண்டும் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்
பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 'தாட்கோ'க்கு ஒரு
பைசா கூட ஒதுக்கப்படவில்லை. இப்போது புதிதாக அரசாங்
கம் ஒன்றைச் சொல்கிறார்கள். கிராமப்புற வீடுகளுக்கு கூட்
டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் கொடுக்கப்படுமென்று சொல்கி
றார்கள். அப்படி கடன் கொடுப்பது என்றால் குறைந்த பட்ச
சொத்து இருப்பவர்களுக்கு மட்டும்தான் அது கிடைக்க வாய்ப்பு
ஏற்படும். ஆனால் 'தாட்கோ' மூலம் வீடுகள் கட்டிக்கொடுக்கிற
போது—சொத்து இல்லாதவர்களுக்குக் கூட வீடுகள் கட்டிக்
கொடுக்கப்படவேண்டும் என்றுதான், அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய
வேண்டும் என்ற வகையில்தான் இந்த 'தாட்கோ' வே ஆரம்பிக்கப்
பட்டது. ஆகவே, இந்த ஆண்டு அதற்கு எந்தவிதமான ஒதுக்கீ
டும் செய்யப்படாமல் இருப்பது வேதனைக்குரியது. இதை அரசு
பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்]

அடுத்து, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில்
கண்ட்ராக்டர்களுக்கு எந்தெந்த வேலைகள் வாய்ப்பாக இருக்
கின்றனவோ அந்த அடிப்படையில்தான் ஒன்றியங்களில் வேலைகள்
தீர்மானிக்கப்படுகின்றன. ஆக, காண்ட்ராக்டர்களும் அங்குள்ள
சில அதிகாரிகளும் தன்னை நிறைவுபடுத்த ஏற்படுத்தப்பட்ட
திட்டமாக இது இருக்கிறது. ஆகவே இந்த தன்னிறைவுத் திட்
டம் பற்றி கண்காணிக்க அந்தப் பகுதிகளில் உள்ள அரசியல்
கட்சித் தலைவர்கள் கொண்ட ஒரு குழுவை அமைத்து—கண்
காணிக்கும் குழு என்று அமைத்து—அதை ஒழுங்குபடுத்த ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று
சென்னை நகருக்கு அடிப்படை வசதிகளான சாக்கடை வசதி,
தண்ணீர் வசதி போன்ற வசதிகளைச் செய்வதற்காக அத்தியா
வசியப் பண்டங்களின் மீது 5 சதவிகிதம் விற்பனை வரி மீது
மேலும் எக்சைஸ் டியூட்டி 10 சதவிகிதம் உயர்த்தப் பட்டிருக்கிறது.
இதனால், அன்றாடம் வாங்கி உபயோகிக்கின்ற அத்தியாவசியப்
பண்டங்களின் விலை உயரும். ஆகவே, இந்த வரி அத்தியாவசியப்
பண்டங்களின் மீது போடப்பட்டுள்ள வரியாகும். 5 சதவிகிதம்
என்பதை 10 சதவிகிதமாக உயர்த்தப் பட்டிருக்கின்றதென்றால்
நிச்சயமாக விலைவாசி உயரத்தான் செய்யும். சென்னை பெரு
நகருக்கு அடிப்படை வசதிகள் செய்யவேண்டியது அவசியம். அப்
படி செய்வதற்கு வருமானம் வேண்டுமென்றால், பிராபர்ட்டி
டாக்சை கொஞ்சம் கூடுதலாகப் போட்டு, அதைச் செய்யலாம்
என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 1.00]

அதேபோன்று, மருத்துவமனைகளில் இன்றைக்கு மருந்துகள்
பல இடங்களில் களவு போவதாகப் பார்க்கிறோம். சமீபத்தில்
கூட, பெரம்பூரில் களவு செய்யப்பட்டிருக்கிறது. மதுரையில்
இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடந்திருக்கிறது. இப்படி நடந்து
கொண்டே இருக்கிறது. இத்தகைய நிகழ்ச்சிகளை கட்டுப்படுத்த
வேண்டும். மருத்துவமனைகளில் மருந்திற்காக அரசாங்கத்தால்
ஒதுக்கப்படும் உதவித் தொகை குறைவு: அதிலும் களவுபோனால்
நிலைமை மிகவும் பரிதாபம். ஆகவே, இதை உடனடியாக கண்
காணிக்க வேண்டியது அவசியம்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், கடந்த 3, 4
ஆண்டுகளாக இதே சட்டமன்றத்தில் சொல்லிக் கொண்டு வருகி
றேன். அதை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். வாசுதேவ
நல்லூர் தொகுதியில், புளியங்குடி 60,000 மக்கட் தொகையைக்
கொண்ட ஒரு முனிசிபாலிட்டி ஆகும். அங்கே ஒரு மருத்துவ
மனை கிடையாது. இப்போது அங்கே ஒரு டாக்டர் இருக்கிறார்;
லேடி டாக்டர் கிடையாது. அந்த நகரம் பெரும் வருமானம்
இல்லாத ஒரு நகரமாகும். அப்படி சாதாரண, ஏழை எளிய
மக்கள் வாழக்கூடிய அந்தப் பகுதியில் மருத்துவ மனை இல்லை



[திரு. ரா. கிருஷ்ணன்]

என்பதை நான் நீண்டகாலமாகவே சொல்லிக் கொண்டு வருகி
றன். ஏற்கெனவே, சென்ற பட்ஜெட்டிலே நான் சொன்னபோது,
அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக வாக்குறுதி கொடுத்தார்
கள். ஆனால் என்ன ஆயிற்று? வாசுதேவநல்லூரில் ஆரம்ப
சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது இடிந்து 8 ஆண்டுகள்
ஆகின்றன. மீண்டும் கட்டப்பட வேண்டுமென்று பலமுறை
கோரிக்கை விடுக்கப்பட்டும்கூட, அந்த இடிந்த கட்டிடத்திலேயே
இருக்கிறது. அதைக் கட்டவேண்டியது மிக மிக அவசியம்.

அதேபோல், சிவகிரி ஒரு சப் தாலுகாவாக இருக்கிறது. அந்த
தாலுகா சென்டரில் ஒரு மருத்துவ மனை கிடையாது. ஆகவே,
வாசுதேவ நல்லூர் தொகுதி மருத்துவமனை இல்லாத தொகுதி
யாக இருக்கிறது. அங்கே ஒரு மருத்துவ மனை கட்ட வேண்டி
யது அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு, அங்கே ஒரு சர்க்கரை ஆலையை உருவாகுவதற்கு
மத்திய அரசாங்கம் உரிமை வழங்கியும், அது ரத்து செயயப்பட்டி
ருக்கிறது. அந்தப் பகுதியில், இராஜபாளையம், சிவகிரி ஆகிய
இடங்களில் கிட்டத்தட்ட 10,000 ஏக்கர்கள் கரும்பு சாகுபடி
செய்யப்பட்டு வருகிறது. எனவே, அங்கே சர்க்கரை ஆலை ஏற்
படுத்துவதற்கான வாய்ப்பு ஏராளமாக இருக்கிறது. தவிர, அந்தப்
பகுதியில் தொழில் வளம் கிடையாது. ஆகவே, இந்த அரசாங்
கம் அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்தித் தருவது மிக
மிக அவசியம். ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
அங்கே சர்க்கரை ஆலை உருவாக்குவது பற்றி இந்த சட்ட
மன்றத்திலே கேள்வி கேட்டபோது, மினி பிளாண்ட் ஏற்பாடு
செய்வதற்கு வசதியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால்,
மினி பிளாண்டுக்கான மிஷினரி இப்போது இல்லை என்று சொல்ல
படுகிறது. பெரிய பிளாண்ட் ஏற்படுத்துவதற்கு 12,000 ஏக்கர்
களில் கரும்பு சாகுபடி செய்ய வேண்டுமென்று சொன்னாலும்,
இப்போது 10,000 ஏக்கர்களில் அங்கே கரும்பு சாகுபடி செய்வ
தால், ஒரு சர்க்கரை ஆலையை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பனை மரம் ஏறும் தொழிலாளர்கள், பனை மரத்திலேஇருந்து
கீழே விழுந்தால், அவர்கள் இறந்தால், அவர்கள் குடும்பத்திற்கு
உதவித் தொகை, நிவாரணம் அளிப்பதற்கு உத்தரவு இருக்கிறது.
ஆனால், நடைமுறையில் பார்க்கின்றபோது, கன்னியாகுமரியில்
நடந்த ஒரு நிகழ்ச்சியில், அரசாங்கத்தின் துணைத் செயலாளர்
திரு. இராஜகோபாலன் ஒரு உத்திரவினை அனுப்பியிருக்கிறார்கள்
அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், திரு. செல்லப்
பன், பனை மரத்திலே இருந்து அதிக உயரத்திலே இருந்து விழுந்
தான், ஆதனால் இறந்தான் என்பது சந்தேகத்திற்கு இடமளிக்

கின்ற வகையில் பிரேத சான்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளதால், நிதி உதவி மறுக்கப்படுகிறது என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகவே, அதிக உயரத்திலே இருந்து விழுந்து இறந்தான் என்று சொல்லவேண்டுமானால், டாக்டர் நேரடியாக பார்த்திருக்க வேண்டும். அப்போதுதான் அதற்கான சர்டிபிகேட் கொடுப்பதிலே அர்த்தமிருக்கிறது. ஆகவே, இந்த அரசாங்கத்தின் ஆணை பாதிக்கப்படக்கூடியதாக இருக்கிறது. அந்தக் குடும்பத்தற்கு உதவித் தொகை வழங்கப்படுவது இன்றைக்கு இந்த உத்திரவினால், உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறது. இதேபோல், குமரி மாவட்டத்தில் 16 பேர்கள் இறந்து, மரத்தின்மேலே இருந்து விழுந்து அவர்கள் குடும்பத்திற்கு நிதி உதவி செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செங்கோட்டைப் பகுதியில் இன்றைக்கு அரிசன பொதுமக்கள் முஸ்லீமாக மதம் மாறியிருகிறார்கள் (மணி அடிக்கப்பெற்றது).

திரு. ஏ. தங்கராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981-82 ஆம் ஆண்டு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி இந்த அரசை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்ற வகையில் ஏழை எளிய நடுத்தர மக்களின் இன்னல்களைத் தீர்த்து இன்பத்தைச் சேர்க்கும் புரட்சித் தலைவரின் புரட்சி பட்ஜெட்டை பாராட்டுகிறேன். இந்த அரசு இவவாரியாக பல சலுகைகளை ஏழை எளிய மக்களுக்காக ஒதுக்கியிருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். சலுகை என்ற பெயரால் உடல் ஊனமுற்றோருக்கு உதவி நிதி, இலவச பேருந்து வசதி, விதவைகளின் குழந்தைகள் படிக்க உதவி; ஆதி திராவிட மாணவர்களுக்கு சலுகைகள்; குறைந்த விலையில் தாலிக்குத் தங்கம்; விவசாயிகளுக்கு கடன் வட்டி ரத்து சலுகை; மதுரையில் தமிழ் சங்கம்; தஞ்சையில் தமிழ் பல்கலைக் கழகம்; என். ஜி. ஓ. வினருக்கு ஊதிய உயர்வு, அரசு ஊழியர்களுக்கு அடுக்கடுக்கான பல சலுகைகள் இப்படி புரட்சித் தலைவரின் அரசின் சாதனைகள் நீண்டு கொண்டு வருவதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

அதற்கடுத்து ஆதித் திராவிட வகுப்பைச் சார்ந்த ஒரு இலட்சம் வேளாண்மைக் குடும்பங்கள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒருவர் வேளாண்மைப்பணி கூட்டுறவு சங்க உறுப்பினராக கொண்டு வரப்படுவர் என்றும், அந்த சங்கங்கள் வழங்கும் கடன் உதவியையும், பிற முன்னேற்ற பணிகளையும் பயன்



படுத்திக்கொண்டு இந்தச் சமுதாயத்தினர் தங்கள் வருமானத்தைப் பெருக்கி வளம் சேர்க்க இந்தத் திட்டம் வகை செய்யும். 1981-82 ஆம் ஆண்டில் 40 ஆயிரம் பேர் இச்சமுதாயத்தினர் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒவ்வொரு உறுப்பினருக்கும் நூறு ரூபாய் உதவித் தொகை வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்துள்ளது. அவர்கள் வாங்குகிற நூறு ரூபாய் வைத்து பயிர் கடன் பெறவும், பால் பண்ணை நடத்துதல், கோழி வளர்த்தல் போன்றவைகளுக்கு நடுத்தர காலக் கடன் பெறவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரவும், அவர்களுடைய இல்லாமையைப் போக்குவதற்கும், இந்த அரசு பல சலுகைகளை வழங்கி உள்ளது.

மேலும் பல சிறந்த திட்டங்களில் கிராமத் தன்னிறைவுத் திட்டமும் ஒன்றாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக பல நலிவுற்ற பஞ்சாயத்து யூனியன்கள். குடிநீர் வழங்குதல் இணைப்புச் சாலைகள் அமைத்தல்; மதகுப் பாலங்கள் அமைத்தல்; ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் இடுகாடுகளுக்கும் பாதைகள் அமைத்தல்; சிறு பாசன ஆதாரங்களை மேம்பாடு செய்தல்; கிராமப்புறங்களில் மருந்தகங்கள் அமைத்தல்; மகப்பேறு — குழந்தை நல நிலையங்கள் அமைத்தல்; பள்ளிக்கட்டிடங்கள் அமைத்தல்; ஆதி திராவிடர்களுக்கு வீட்டு வசதிகளை அமைத்துக் கொடுத்தல் போன்ற சிறிய பணிகளால் 69 வளர்ச்சி வட்டாரங்கள் பயனை அடைந்துகொண்டு வருகின்றன. மேலும் இந்த ஆண்டு 150 வளர்ச்சி வட்டாரங்கள் இந்த நிதி நிலை அறிக்கை வழியாக பயன்பட இந்த அரசு செயல் திட்டம் தீட்டி உள்ளது. அதற்கடுத்து உடல் ஊனமுற்றோர் ஆண்டு கொண்டாடும் இந்த நேரத்தில் உடல் ஊனமுற்றோர் நலனுக்காக திட்டங்களுக்கு 1981-82 நிதிநிலை அறிக்கையில் 59 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, ஊனமுற்றோர்களை பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்ய அனுமதி தந்தமையால் இந்த அரசை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-10]

அடுத்து கைத்தறி நெசவாளர்களைப் பற்றியது. அவர்கள் மீது இந்த அரசு மிகுந்த அக்கரை செலுத்தி வருகிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அண்மையிலே நூலின் விலையை உயர்ந்தபோது 20-ம் நம்பர் நூலிலிருந்து 40-ம் நம்பர் நூல்வரை நியாயமான விலையில் வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்தது. தேங்கிக் கிடக்கும் கைத்தறித் துணியை விற்பனை செய்ய அரசு அவ்வப்போது பல நேரங்களில் சலுகை அளித்து, கைத்தறி நெசவாளர்களுடைய குடும்பங்களை வளப்படுத்துவதற்கு அரசு செயல்பட்டு வருவதை நான் பாராட்டுகிறேன்.

[திரு. ஏ. தங்கராசு] [1981 மார்ச் 25

சிறு விவசாயிகளுக்கு வழங்கிய சலுகையின் விளைவாக இந்த அரசு 71 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி செய்துள்ளது. மேலும் சிறு விவசாயிகள் திருப்பிச் செலுத்தியிருந்த 23 கோடி ரூபாய் அடுத்த ஆண்டு கடன் நிலுவையை அரசு ஈடுசெய்யும் என்றும் அறிவித்துள்ளது. இப்படிச் சலுகைகளை எல்லாம் பார்க்கும்போது இந்த அரசு ஏழை எளிய விவசாயிகளுடைய கடன் சுமையைத் தளர்த்துவதற்கும் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் செயல்பட்டு வருகின்றபோது நான் ஏழை விவசாயிகள் குடும்பத்தைச் சார்ந்தவன் என்கின்ற முறையில் இந்த அரசைப் பாராட்டிப் போற்றுகிறேன்.

என்னுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியிலே உள்ள ஊராட்சி ஒன்றியம் அதனுடைய நிதியிலிருந்து இரண்டு மருத்துவ மனைகளை நிர்வாகம் செய்து வருகிறது. இருக்கின்ற நிதி ஆதாரத்தை வைத்து ஒன்றியம் இரண்டு மருத்துவ மனைகளை நிர்வாகம் செய்ய முடியவில்லை. அங்கே இருக்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் சீராகச் செய்யமுடியவில்லை. ஆகவே குள்ளஞ்சாவடி, குறிஞ்சிப்பாடி மருத்துவ மனைகளை அரசாங்கமே எடுத்து அரசாங்க மருத்துவ மனைகளாக மாற்றி அங்கே இருக்கின்ற மக்களுக்கு மருத்துவ வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெய்வேலியிலே என்னுடைய தொகுதி பூராவும் அமைந்து இருக்கிறது. அங்கே 18 ஆயிரம் தொழிலாளர்கள் வாழ்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் நகரங்களுக்குச் செல்வதற்கும், அருகாமையில் உள்ள நகரங்களுக்குச் செல்வதற்கும் டவுன்பஸ் வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே இருக்கின்ற தொழிலாளர்களுக்கு அத்தியாவசியப்பண்டங்கள் நல்லமுறையிலே கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அங்கே 18 ஆயிரம் தொழிலாளர்கள் இருந்தாலும், 50 ஆயிரம் வாக்காளர்கள் இருக்கிறார்கள். மொத்தம் 2 லட்சம் பேர்கள் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். அங்கே உள்ளவர்கள் அவரவர்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்காக பாலிடெக்னிக் பள்ளி நெய்வேலிக்கு அருகாமையில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி இருக்கின்ற குறைபாடுகளை உடனடியாகச் செய்து தரவேண்டுமென்று சொல்லி வாய்ப்புத் தந்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1981 மார்ச் 25]

* திரு. க. பரமலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1981–82 ஆம் வருட வரவு-செலவு அறிக்கையின்மீது நான் சார்ந்திருக்கின்ற தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு முன்பாக 1980–81 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் நம்முடைய நிதியமைச்சர் நாவலர் அவர்கள் பல்வேறு நல்ல திட்டங்களை எல்லாம் அறிவித்திருந்தார்கள். அவைகளை நாங்கள் மனமாரப் பாராட்டியிருக்கிறோம். குறிப்பாக தக்காவிக் கடன் ரத்து, விவசாயிகளுக்கு கடன் நிவாரணம், நியூஸ் பிரிண்ட் பேப்பர் மில்ஸ், மானாமதுரை, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இண்டஸ்டிரியல் காம்ப்ளக்ஸ் இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்களை அறிவித்திருந்தார்கள். அந்த அளவுக்கு இந்தத் திட்டத்திலே சிறப்பான அம்சங்கள் இடம் பெறவில்லையென்றாலும் மதுரையில் ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழ்ச் சங்கம் நிறுவவும், தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கவும் முன்வந்திருப்பதற்காக நான் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுக்கு வட்டிச் சலுகை, அரசு அலுவலர்களுக்குச் சில சலுகைகள் ஆகியவை இதில் வழங்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக அரிசன மாணவ மாணவியர்க்கான சாப்பாட்டுக் கட்டணத்தை 15 ரூபாய் உயர்த்தியிருப்பதற்காகவும், அதற்கேற்ப நிதி ஒதுக்கம் செய்திருப்பதற்காகவும் உண்மையிலேயே நான் பாராட்டுகிறேன்; அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல படிப்புதவித் தொகை 10 ரூபாய் உயர்த்தப்பட்டிருப்பதற்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும், பெட்ரோல், டீசல் மீது விற்பனை வரி உயர்வு, பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை வரி உயர்வு, விற்பனை வரி உயர்வு ஆகியவை சமுதாயத்தின் அடித்தளத்திலே இருக்கின்ற மக்களைப் பாதிக்கும் என்பதால் அவைகளை விளக்கிக்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் மது விலக்கு தளர்த்தப்பட்டு இருப்பதற்காக உண்மையிலேயே நான் மெத்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மதுவிலக்குக் கொள்கையில் மிகவும் ஆழமான நம்பிக்கை உடையவர்கள் என்பது மட்டுமல்ல, அவர்கள் முதலமைச்சராக

[திரு. க. பாரமலை] [1981 மார்ச் 25

வருவதற்கு முன்பே கூட, மதுவிலக்குப் பிரச்சாரத்தைக் கிராமங்
களுக்குச் சென்று நேரடியாகவே நான் செய்வேன் என்று கூறு
ரைத்திருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல ; இந்த வரவு-செலவுத்
திட்ட அறிக்கையிலே கூட இந்த அரசு மதுவிலக்குக் கொள்கையில்
அழுத்தமான நம்பிக்கை கொண்டிருக்கிறது என்பதையும் வலி
யுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அவர்கள்,
மதுவிலக்குக் கொள்கையில் அழுத்தமான நம்பிக்கை கொண்
டிருக்கின்ற அவர்கள் இப்பொழுது மது விலக்கைத் தளர்த்தி
யிருப்பது எங்களுக்கு மிக்க வேதனையைத் தருகிறது.

ஆனால், மதுவிலக்கைத் தளர்த்தியிருப்பதற்கு சொல்லியிருக்
கின்ற காரணம், மதுவிலக்குச் சட்டம் நடை முறையில் இருக்க
வில்லை என்பது மட்டுமல்ல ; மதுவிலக்கு இருக்கிறதா என்ற
ஐயப்பாடு கொள்ளுமளவிற்கு இன்றைக்குச் சூழ்நிலைகள் இருப்ப
தாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அதைப் பற்றி நான்
ஒன்று சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே இருக்
கின்ற பல்வேறு சட்டங்கள் சரிவர அமல் செய்யப்படுகின்றனவா
என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். விற்பனை வரிச்
சட்டம், வருமான வரிச் சட்டம் மற்றும் குற்றவியல் தடுப்புச்
சட்டம் எல்லாம் இன்றைக்கு ஏகபோகமாக மீறப்பட்டு வரு
கின்றன என்பதை நாம் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.
அதைப் போலவே ஆரோக்கியமான சமுதாய வாழ்விற்குச்
சவாலாக இருந்து கொண்டிருக்கின்ற, அவமானகரமாகக் கருதப்
பட்டு வந்த விபச்சாரத்தைத் தடை செய்வதற்காக விபச்சாரத்
தடுப்புச் சட்டம் இருக்கிறது. அது எப்படி அமல் செய்யப்
படுகிறது ? தங்கும் விடுதிகளிலேயிருந்து இன்றைக்கு நடு வீதிக்கு
விபச்சாரம் வந்து விட்டது. இரண்டு மூன்று தினங்களுக்கு
முன்னால் சென்னை மாநகர வீதியிலே விபச்சாரத்திற்கு அழைத்த
தாக வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்
காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அளவிற்கு இன்
றைக்கு விபச்சாரத் தடைச் சட்டம் அமல் செய்யப்பட முடிய
வில்லை என்பதற்காக அந்தச் சட்டத்தை நீக்கி விட வேண்டு
மென்று சொல்வதை எந்த நாகரீகமான சமுதாயமும் ஒப்புக்
கொள்ளாது என்பதை நான் தாழ்மையோடு கூறிக் கொள்ள
விரும்புகிறேன்.

மதுவிலக்குச் சட்டத்தைத் தளர்த்துவதால் 200 கோடி ரூபாய்
வருமானம் வரும் என்று சொல்கிறார்கள். ஆனால் இதற்காக
லைசென்ஸ் பெற்று, கள், சாராயம் விற்பவர்கள் நிச்சயமாக
ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் சம்பாதிப்பார்கள் என்பதை
மறந்துவிடக் கூடாது. அந்த ஆயிரம் கோடி ரூபாய் யாரிட
மிருந்து வருகிறது என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பார்க்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன் ; சமுதாயத்தில் உள்ள
ஏழை எளிய மக்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தவர்கள்



1981 மார்ச் 25] [திரு. க. பாரமலை]

ஆகியவர்களிடமிருந்து அந்த ஆயிரம் கோடி ரூபாயை அவர்கள்
பெறப் போகிறார்கள். ஆகவே, அதை அடிப்படையாக
வைத்துத்தான் இந்த மதுவிலக்கைப் பூர்ணமாக அமல் படுத்த
வேண்டுமென்று நம்முடைய மதிப்பிற்குரிய பெருந்தலைவர்
காமராஜ் அவர்களும், மூதறிஞர் இராஜாஜி அவர்களும் இந்தத்
திட்டத்தை அமல் செய்தார்கள் என்பதை நான் சுட்டிக் காட்ட
கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மதுவிலக்கு சம்பந்தமாக ஆளும் தரப்பிலேயிருந்து
இங்கேயுள்ள இந்திரா காங்கிரஸ் தரப்பைப் பார்த்துக் கேட்கப்
படும் ஒரே கேள்வி என்னவென்றால், இது சம்பந்தமான
கொள்கை தமிழ்நாடு காங்கிரசுக்கு மட்டும்தானா, அகில
இந்திய அளவில் இல்லையா, மற்ற மாநிலங்களில் இதை அமல்
நடத்தாததன் காரணம் என்ன என்ற கேள்வியைக் கேட்கிறார்
கள்.

இதைப் பொறுத்த வரையில் நான் சொல்வது என்னவென்
றால், எந்தவிதமான சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு, 1969 ஆம்
ஆண்டுக்கு முன்பிருந்த ஒன்று பட்ட காங்கிரசாக இருந்தாலும் சரி
அதற்குப் பிறகு இன்றைக்குப் பிரிந்து பல்வேறு கூறுகளாக
காட்சியளிக்கின்ற காங்கிரஸ் கட்சிகளாக இருந்தாலும்
சரி, மதுவிலக்கு என்பது அகில இந்திய காங்கிரஸ்
ஸ்தாபனத்தின் அசைக்க முடியாத, புனிதமான கொள்கை. மது
விலக்கு பூரணமாக அகில இந்தியாவிலும் அமல் படுத்தப்பட
வேண்டுமென்பது இன்றைக்கிருக்கின்ற நிலை என்பதை நான்
தெளிவாகச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.
ஆகவேதான் அகில இந்திய காங்கிரசிலே தீர்மானம் நிறைவேற்றி
ஒவ்வொரு மாநிலமும் அதைச் செயல் படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தந்த மாநிலங்கள் இதைப்
படிப்படியாக அமல் நடத்தியே தீர வேண்டுமென்று வற்புறுத்தி
யிருந்தார்கள். அதற்கு முன்னோடியாகத்தான் நம்முடைய
தமிழக அரசு இருந்தது ; தலைவர் காமராஜ் அவர்கள் இருந்
தார்கள் ; மூதறிஞர் இராஜாஜி அவர்கள் இருந்தார்கள்.

ஆகவே நான் இன்றைக்குக் கேட்டுக் கொள்வது என்னவென்
றால், இங்கே இருக்கின்றவர்களுக்கு காங்கிரஸ் என்று சொல்லிக்
கொள்ள அருகதை உண்டு என்று சொன்னால் அவர்களுக்கு மது
விலக்கில் பூரண நம்பிக்கை இருக்க வேண்டும் ; மது அருந்துவது
கெட்ட பழக்கம் ; அதை எதிர்க்க வேண்டுமென்ற அடிப்படைக்
கொள்கை இருக்கும். தமிழ்நாட்டில் மட்டுமல்ல ; அகில இந்தியா
விலேயும் மதுவிலக்கு பூர்ணமாக அமல் படுத்தப்பட வேண்டு
மென்று ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் பாடுபட வேண்டும்.
எங்கள் காங்கிரசைப் பொறுத்த வரையில் டெல்லியுடன் [illegible]ருந்த
தொடர்பை அறுத்துக் கொண்டு எங்களுடைய அதிகார எல்லை

நெல் கிடைக்கும். ஆண்டு முழுவதும் அவன் சாப்பிடுவதற்கு
வசதியாக அந்த நெல் இருக்கும். தற்போது விவசாயிகள்
பம்பு செட் போட்டு தண்ணீர் இறைத்துக்கொள்வதால் இந்தப்
பறி உபயோகிப்பது நின்றுவிட்டது. அதன் காரணமாக அந்தத்
தொழில் செய்து வந்தவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.
அதன் காரணமாக அவன் எங்கே போய் எப்படி வாழ்வது என்று
தெற்கு வடக்கு தெரியாமல் தத்தளித்துக்கொண்டு அருகில்உள்ள
பல நகரங்களில் தெருக்களில் போவோர் வருவோரின் பாதங்
களைப் பார்த்து கொண்டு பரிதாபத்துடன் தன் பெண்டு பிள்ளை
களுடன் ஏங்கி தவித்துக் கொண்டு இருக்கிறா... சென்னைப்
பட்டினத்தில் பலர் தெரு ஓரங்களில் இந்தத் தொழிலைச்
செய்து கொண்டு காலத்தைக் கழித்து வருகிறார்கள். இது
வரையிலும் அவர்களுக்கு எந்த அரசும் உதவி செய்யவில்லை.
ஆகவே, அந்த அரிசன மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று
சொன்னால், அவர்களுக்குப் பல இடங்களில் கடன் வசதி
கொடுத்து, கூட்டுறவு முறையில் அவர்களை ஒன்று திரட்டி,
அவர்கள் உற்பத்தி செய்கிற தோல் பொருள்களை வாங்கி,
அதற்கு வணிக வசதியும் செய்து கொடுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். தற்போது செருப்புத் தைக்கும் தொழி
லிலும் பல ஜாதிக்காரர்கள் வந்துவிட்டதால், இந்த அரிசன
மக்களின் நிலையை உயர்த்த அரசு எல்லா நடவடிக்கைகளையும்
எடுக்கவேண்டும் என்று மிகமிகப் பணிவோடு இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையில் பாரிமுனையில் இருக்கிற சாலைக்கு நேதாஜி
சுபாஸ் சந்திரபோஸ் சாலை என்று பெயர் வைக்கப்பட்டு
இருக்கிறது. அங்கே பல்வேறு கடைகள் இருக்கின்றன. ஒரு
பக்கத்தில் வெள்ளைக்காரன் சிலை இருக்கிறது. இந்த நாட்டிற்கு
ராணுவ ரீதியில் விடுதலை வேண்டும் என்று வீறு
கொண்டு எழுந்த தலைவர் நேதாஜி சுபாஸ்சந்திர போஸ் அவர்
களின் பெயரை வைத்து விட்டு, அங்கே ஒரு வெள்ளைக்காரர்
சிலை இருப்பது பொருத்தமுடையதாக இல்லை. ஆகவே,
அங்கே நேதாஜி அவர்களுக்கு ஒரு சிலை வைக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின்
அனுமதியுடன் நேரத்தை சிறிது நீட்டிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. பி. மொக்கையன் : தலைவர் அவர்களே,

வங்காளம் தந்திட்ட சிங்கமாம்
எங்களின் நேதாஜி— உலக
வரலாறு காணாத பெரும்பணி
செய்தவர் நேதாஜி

பொங்கும் கடலென போர்முரசு
கண்ட நேதாஜி— இந்த
பொன்னான தேசங்கள் எல்லாம்
புகழ்ந்திடும் நேதாஜி.

சரித்திரம் கண்ட நெப்போலிய
சக்ரவர்த்திபோல் இருப்பார் நேதாஜி
யாரும் சாதிக்காத வீரப்போர்க்கொடி
தூக்கிய சரித்திரநாயகன் நேதாஜி.

ஐ.என்.ஏ. படைகொண்டு ஆங்கில அரசை
ஆட்டிப்படைத்தவர் நேதாஜி
ஜெர்மன் அமெரிக்க சோவியத்து அரசெல்லாம்
நடுங்கிட அரும்படை கண்டவர் நேதாஜி.

பர்மாவிலே அன்று புதுமை நிலவிட
பணிபல செய்தவர் நேதாஜி
நமது பாரததேசத்தின் மானத்தைக் காத்திட
தியாகம் புரிந்தவர் நேதாஜி

முப்படைபோல் வீரபோர்படை நடத்தி
மும்முனை வென்றவர் நேதாஜி
எங்கள் முத்துராமலிங்கத்தேவர் வணங்கிடும்
அற்புதத் தலைவர் நேதாஜி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 26–3–1981ஆம் தேதி காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது



## 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

239. 25–3–1959ஆம் தேதியிடப்பெற்ற தமிழ்நாடு அரசிதழில் பாகம் 1, பக்கங்கள் 454–455-ல் (ஆங்கிலத்தில்) வெளியான வருவாய்த்துறையின் 23–3–1959ஆம் தேதியிடப் பெற்ற எஸ். ஆர். ஓ. 1797/1959ஆம் எண் அறிவிப்பில் திருத்த மொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 7–1–1981ஆம் தேதியிடப்பெற்ற 26ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வியாழக்கிழமை 1981, மார்ச் 26.

பங்குனி 13, ரௌத்திரி—திருவள்ளுவர் ஆண்டு 2012.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

> " பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
> அவையகத்து அஞ்சா தவர்."

பகைவர் உள்ள போர்க்களத்தில் அஞ்சாமல் சென்று சாகத் துணிந்தவர் உலகத்தில் பலர். கற்றவர் அவைக்களத்தில் அஞ்சாமல் பேசவல்லவர் சிலரே.

### I. தன்னிலை விளக்கம்.

**வினா—விடை நேரத்தில் அமைச்சர்கள் அவையில் இருத்தல்.**

**திரு. ரா. உமாநாத் :** நேற்று நடந்ததின் ரிசல்ட் இன்று எல்லா அமைச்சர்களும் வந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, 23ஆம் தேதியே 11 மணிக்கு நான் கடிதம் மூலமாக அவைக்கு வர முடியாமல் இருப்பது பற்றி பேரவைத் தலைவருக்கு எழுதி இருக்கிறேன். அமைச்சர் முன்கூட்டியே இரண்டு தினங்களுக்கு முன்பே எழுதிக்கொடுத்திருக்கின்றபோது.......................
(குறுக்கீடு)....நான் இந்த அவையிலுள்ள உறுப்பினர்களின் சார்பில் பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். அமைச்சர் வரவில்லை என்றால் கேள்வி வருவதற்கு முன்பே அதைத் தெரிவித்திருந்தால் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்காது..

.. .. ..

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ;** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேற்று நடந்த விவரம் தெரியாது. ஆகவே, அது குறித்து இப்போது விளக்கம் அளிக்க ஆரம்பித்தால் சரியாக

இருக்காது. நேற்றைய தினம் 20 கேள்விகள்: சம்பந்தப்பட்ட எந்த அமைச்சரும் வரவில்லை. நாவலர் ஒருவர்தான் இருந்தார். ஆனால், அவர் சம்பந்தப்பட்ட கேள்விகள் இல்லை. ஆகவே, இதுபற்றிய விளக்கத்தை எல்லாம் நான் இப்போது அனுமதிக்க முடியாது.

## 2. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### டெல்லி—தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் சிலை.

*வினா எண் 486—திரு. கே. எம். தங்கமணி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை வைக்கும் உத்தேசம் உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன் ;** பேரவைத் தலைவரவர்களே தனக்கென வாழாது பிறருக்காகவே வாழ்ந்து மறைந்த மனித குல மாணிக்கம் பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் சிலையை இனியாவது அங்கே வைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே யாருடைய சிலையையும் அங்கே வைக்கின்ற முடிவை அரசு எடுத்துக் கொண்டிருக்கவில்லை என்பதைத்தான் நான் இல்லை என்று குறிப்பிட்டேன். முன்னாள் முதல்வர் அவர்கள் என்ற முறையில் அவர்களுடைய உருவப் படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆந்திரகேசரி திரு. பிரகாசம், திரு. ஓ. பி. ராமசாமி, திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா, மூதறிஞர் ராஜகோபாலாச்சாரி, பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் எம். பக்தவச்சலம், பேரறிஞர் அண்ணா, கலைஞர் மு, கருணாநிதி ஆகியோருடைய உருவப்படங்கள் அங்கே வைக்கப்பட்டிருக்கின்றன.

அங்கே பேரறிஞர் அண்ணாவின் அரை உருவச் சிலையும், திருவள்ளுவரின் முழு உருவச் சிலையும் வைக்கப்பட்டிருக்கின்றன. வேறு யாருடைய சிலையையும் வைக்கின்ற திட்டம் அரசிடத்திலே இல்லை.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே டெல்லியிலே தமிழ்நாடு இல்லம் அமைப்பதுபற்றி பெருந்தலைவர் காமராஜர் அவர்கள முதல்வராக இருக்கும்போது திட்டமிடப்பட்டது. அதற்குப் பிறகு கலைஞர் கருணாநிதி அவர்கள் காலத்திலே அதற்குத் திறப்பு விழா நடத்தப்பட்டது. ஆகவே,



அண்ணாவின் உருவச் சிலை அங்கே வைக்கப்பட்டிருப்பதைப் போல பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் உருவச் சிலையையும் வைப்பது எல்லாவிதத்திலும் பொருத்தமாக இருக்கும். ஆகவே அதை இந்த அரசு பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்த அரசு கொண்டிருக்கிற கொள்கை, உயிரோடு இருக்கிற தலைவர்களுடைய உருவச்சிலையை எங்கேயும் வைக்கக் கூடாது என்பது. மறைந்த பெருந்தலைவரின் உருவச் சிலையை வைப்பது பற்றி மறுப்பு எதுவும் இல்லை என்றாலும், யாருடைய உருவச் சிலையையுமே இப்போது டெல்லியில் இருக்கும் தமிழ்நாடு இல்லத்தில் வைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது அரசினிடம் இல்லை என்றுதான் சொன்னேன். உரியவர்களிடத்தில் இருந்து உரிய கோரிக்கை வந்தால் அரசு அதைப்பற்றி ஆராயும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்பது ஆண்டுக் காலம் தமிழ்நாட்டில் சிறப்பாகப் பதவி வகித்து வட நாட்டிலும் தமிழ் நாட்டைப்பற்றி மரியாதையை ஏற்படுத்திய பெருந்தலைவர் காமராஜ் அவர்களுடைய உருவச் சிலையை, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் வைப்பதற்கான திட்டம் எதுவும் இல்லை என்றாலும் கூட, இனிமேலாவது அதற்குத் திட்டம் இட்டு, அதை நிறைவேற்ற தமிழக அரசு முன் வருமா ? அதை மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை எல்லாம் கோரிக்கைகளாகக் கொண்டு இந்த அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. வேணுகோபால் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் மறைந்த மூதறிஞர் இராஜாஜி அவர்களின் உருவச் சிலையை வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அதையும் உரிய முறையில் அரசு ஆராயும்.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லமும், அதிலுள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலையும் இப்போது நம்முடைய பேரவைத் தலைவராக இருக்கிற உங்கள் முயற்சியினால்தான் உருவாக்கப் பட்டது. ஆனால், வைக்கப்படடிருக்கிற அறிஞர் அண்ணாவினுடைய உருவச் சிலையை தமிழ்நாடு இல்லத்திற்கு வெளியே

வைக்காமல் உள்ளே ஒரு ரூமுக்குள் வைத்து பூட்டியிருக் கிறார்கள். அதை வெளியே பிரம்மாண்டமான முறையில், எல்லோரும் பார்க்கின்ற வகையில் வைக்க அரசு முயற்சி எடுக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணாவினுடைய உருவச் சிலை தமிழ்நாடு இல்லத்தில், எல்லோராலும் மதிக் கத்தக்க வகையில், மரியாதைக்குரிய வகையில் எங்கே வைக்க வேண்டுமோ அங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறது. தவறான இடத்தில் ஒன்றும் அந்தச் சிலை வைக்கப்படவில்லை. எங்கே வைக்கப்படவேண்டுமோ அங்கேதான் வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## பெண் போலீஸ் படை.

*வினா எண் 487—திரு. து. **புருஷோத்தமன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காவல்துறையில் பெண் போலீஸ் படையை விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆம். காவல் துறையில் பெண் போலீஸ் படையை விரிவு படுத்துவதற்கு பின் வரும் கூடுதல் பெண் காவலர்களை நியமிக்க அரசு நிலை ஆணை எண். 2113, உள்துறை நாள் 12—8—80-ல்ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

1. பெண் சப் இன்ஸ்பெக்டர் .. 60 பேர்.
2. பெண் தலைமைக் காவலர் .. 60 பேர்.
3, பெண் காவலர் .. 600 பேர்.

**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் நாவலர் அவர் களுடைய பதிலிலிருந்து பெண் போலீஸ் படையை விரிவு படுத்த அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இப்பொழுது இருக்கிற பெண் போலீசார்கள் சட்டம், ஒழுங்கு துறையில் இருக்கிறார்களா? அல்லது குற்றப் பிரிவில் இருக் கிறார்களா? போக்குவரத்துப் பிரிவில் இருக்கிறார்களா? ஒவ் வொரு பிரிவிலும் எத்தனை பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? இன்னும் விரிவுபடுத்துகின்ற காலத்தில் எந்தப் பிரிவுகளிலே சேர்க் கப்படுவார்கள் என்றும் தெரிவிப்பார்களா? குறிப்பாக சட்டம் ஒழுங்குப் பிரிவிலே அவர்களை சேர்ப்பது சரியாக இருக்கும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்?



**மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மிக அத்தியா
வசியமான, அவசியமான காவல் நிலையங்களில் இப்படிப்பட்ட
பெண் போலீஸ் அதிகாரிகளும், பெண் காவலர்களும் இருப்பது
நல்லது என்ற முடிவு எடுக்கப்பட்டு, கூடுமான வரையில் மிக
அவசியமான காவல் நிலையங்களில் மொத்த பெண் சப் இன்ஸ்
பெக்டர்கள் 60, பெண் தலைமைக் காவலர்கள் 191, பெண்
காவலர்கள் 831 பேர்கள் தேவைப்படுகிறார்கள் என்று திட்டம்
தீட்டப்பட்டு அதிலே ஓரளவிற்கு முறைப்படுத்தி அவ்வப்போது
நியமிக்கப்பட்டவர்களில் 4 பெண் சப் இன்ஸ்பெக்டர்களும்,
4 பெண் தலைமைக் காவலர்களும், 65 பெண் காவலர்களும்
தற்போது இருக்கிறார்கள். இப்போது நியமிக்கப்பட இருப்பது
பெண் சப் இன்ஸ்பெக்டர்கள் 60 பேர், பெண் தலைமைக்
காவலர்கள் 60 பேர், பெண் காவலர்கள் 600 பேர் என்று குறிப்
பிட்டேன். பெண் காவலர்களுக்குக் கீழ்க்கண்ட பணிகள் தரப்
பட்டுள்ளன:—

(1) விரும்பத்தகாத நடவடிக்கைகளை உடைய மகளிர் அடிக்கடி நடமாடக்கூடிய இடங்களில் சுற்றுக்காவல் புரிதல்.



(2) குடும்பப் புகழ் இழந்து, விலை மகளிர்களாகும் அபாய கரமான நிலையில் காணப்படும் இளம் பெண்களை மீட்டுக் காப்பாற்றுதல்.

(3) விபச்சாரத் தடைச்சட்டத்தின்கீழ் திடீர் சோதனை களில் காவலர்களுடன் செல்லுதல்.

(4) பெண் கைதிகளை நீதிமன்றத்திற்குப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல். நீதி மன்றத்தில் அவர்களைக் காவல் புரிதல்.

(5) காவலில் வைக்கப்பட்ட மற்றும் விசாரணை செய்யப் பட்டு வரும் பெண் கைதிகளைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லுதல்.

(6) புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவி செய்தல், சாட்சியம் அளிக்க வரும் மகளிர், சிறுவர்கள், குற்றம், சாட்டப் பட்ட மகளிர் மீது தாக்குதல் போன்ற வழக்குகளில் புகார் செய்தவர்களை விசாரணை செய்தல்.

(7) ஆதரவற்ற சிறார்களைக் கவனித்தல்.

(8) பெண்களுக்கு என்று தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ள பொதுக்கூட்டங்கள் திருவிழாக்கள் போன்ற பெண்கள் கூடியுள்ள பெருங் கூட்டங்களில் பாதுகாப்புப் பணி புரிதல்.

**திரு. து. புருஷோத்தமன் :** பெண் போலீஸ் படையை முழுவதுமாக போக்குவரத்தைச் சரிப்படுத்த, ஒழுங்குபடுத்த போக்குவரத்துப் பிரிவில் பயன்படுத்திக் கொள்ளமுடியுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** போக்குவரத்தைச் சரிப்படுத்த பெண் போலீஸாரா வேண்டுமென்றால் செய்யலாம். ஆனால் போக்குவரத்தைச் சரிப்படுத்த, ஒழுங்குபடுத்த இப்போதிருக்கிற காவலர்களே போதுமானவர்கள் என்பதால் நான் ஏற்கனவே குறிப்பிட்டுக் காட்டியபடி எந்தெந்த வகைகளில் பெண்களோடு சேர்ந்து அவர்களை நீதிமன்றங்களுக்கு அழைத்து வருதல், பெண்களை சோதனையிடுதல், பெண்களுக்குப் பாதுகாப்பு அளிப்பது போன்ற பணிகளை ஆண் காவலர்களிடம் ஒப்படைப்பதைவிட பெண் காவலர்களிடம் ஒப்படைப்பது நமது பண்பாட்டிற்கு ஏற்றதாக இருக்கும் என்று கருதி இப்படிப்பட்ட பணிகள் மட்டும் தரப்பட்டிருக்கின்றன. போக்குவரத்தைச் சீர்படுத்துவது, ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகளை இப்போதுள்ள காவலர்களே கவனித்துவருவார்கள்.

**திரு. ரா. உமாநாத் :** பெண் போலீஸ் படையை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தைப் பொறுத்தவரையில் கனம் அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி விளக்கினார்கள். ஆனால் இப்போது பெண் போலீசாருக்கு பல்வேறு ஸ்டேஷன்களில் பெண்கள் என்ற முறையில் அவர்களுக்கு ப்ரைவஸிக்கான அறைகளோ அல்லது குடியிருப்புகள் பொறுத்தவரையில் தனி லைன்களோ இல்லாமல் மற்ற ஆண் போலீஸ்காரர்கள் இருக்கக்கூடிய லைன்களில்தான் அவர்கள் குடியிருக்கவேண்டியதில் பல ரிஸ்க்ஸ் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. எனவே, பெண் போலீஸ் படையை விரிவுபடுத்துகிற நேரத்தில் அவர்களுக்கென்று தனி லைன்கள், பாதுகாப்போடு உள்ள வீடுகள் அமைப்பதோடு ஸ்டேஷன்களில் அவர்களுக்கு என்று பெண்கள் என்ற முறையில் ப்ரைவஸிக்கு அறைகள் ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஆனை செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பு என்று மட்டுமல்ல, தனியாக அவர்கள் அறையில் இருப்பதற்கும் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விடை அளிக்கும்போது பெண்கள் போலீஸ் படையை விஸ்தரிப்பதற்கான சாத்தியக் கூறுகளைத் தெரிவித்தார்கள். இப்படி பெண் போலீஸ் படையை விஸ்தரிக்கும்போது புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுகிற பெண் காவலர்களுக்கு மாவட்டவாரியாக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் உண்டான விகிதாச்சாரப்படி முக்கியத்துவம் கொடுக்கப்படுமா?



**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாவட்டத்திற்கு என்று பிரித்துக் கொடுக்க முடியாது. தேவைக்கு ஏற்பத்தான் கொடுக்க முடியும்.

**திரு. ப. நெடுமாறன் :** பொதுவாக செவிலியர்கள் போன்ற வேலைகளுக்குப் பெண்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலை மாறி, மென்மையான வேலைகளுக்குத் பெண்களைப் தேர்ந்தெடுக்கிற நிலை மாறி, வன்மை வாய்ந்த போலீஸ் படைக்கு பெண்களைத் தேர்ந்தெடுக்கக்கூடிய நிலை வந்திருக்கிறது. ஒரு வேளை ஆண் போலீஸாருக்கு அடங்காத சட்டம்- ஒழுங்குக்கு கட்டுப்படாத கூட்டங்கள் பெண் போலீஸாரைப் பார்த்தால் அடங்கிப் போவார்கள் என்றஎண்ணத்தின் காரணமாக அரசு செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய சந்தேகம் எந்தக் சூழ்நிலையில் அவர்களுக்கு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. ஆனால் ஒன்றை தான் நிச்சயமாகச் சொல்லமுடியும். வன்மை, மென்மை என்பது பணியின் தன்மையைப் பொறுத்துத்தான் சொல்கிறார்கள். ஆண், சட்டம், பாதுகாப்பு என்கிற எண்ணத்தில் பார்த்தால் நேர்மையைய பெண் இருவரும் சமம் என்பதை நாகரீகத்தையும், மாண்புமிகு உறுப்பினர் யும், சமத்துவத்தையும் விரும்புகிற அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, பெண் போலீஸ் படையில் சேருவதற்கான விதிமுறை, கல்வி, உயரம் சம்பந்தமாக தளர்த்தி அதிகமான பெண்களைப் போலீசில் சேர்ப்பதற்கான வாய்ப்பை அரசு உண்டாக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு பேர் சேர்க்க வேண்டுமென்று கருதுகிறோமோ, அந்த அளவில் 60, 600 என்ற அளவில் சேர்க்க முற்படுகிறோம். மேற்கொண்டு தேவையானால், அந்தப் பணியை மேற்கொள்வோம்.

**திரு. எம். ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் பெண் போலீசை விரிவுபடுத்துவது சம்பந்தமாக ஏற்கனவே போலீஸ் வேலைக்கு ஆள் எடுக்கப்பட்டு, ஈரோடு பகுதியில் பயிற்சிக்கு அழைக்கப்படாமல் இருப்பதாக பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப் போகிறீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி அடிப்படையில் இது தொடர்பில்லை என்று கருதினாலும், ஒன்றைக் கூற விரும்புகிறேன். தகுதி அடிப்

படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று அறிவித்த பிறகு யாரையும் திருப்பி அனுப்பியதாகத் தகவல் இல்லை.

**திரு. ஏ. டி. குலசேகர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வீஸ் அடிப்படையில் மற்றக் காவலர்களுக்குக் கொடுக்கப்படும் பதவி உயர்வு, பெண் காவலர்களுக்கும் கொடுக்கப் படுமா? மற்ற காவலர்களுக்கு அளிக்கப்படும் துப்பாக்கிப் பயிற்சி, ஜூடோ பயிற்சி இவர்களுக்கும் அளிக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, போலீஸ் அதிகாரிகள் என்கிற பதவிக்கு என்னென்ன பயிற்சிகள் தேவையோ, அவை அனைத்தும் இவர்களுக்கும் அளிக்கப்படும்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தகுதி, திறமை எல்லாம் இருந்து, உத்தரவு அனுப்பி, வரவேண்டுமென்று சொல்லி, வந்த பிறகு வேண்டாம் என்று நீக்கிவிட்டார்கள். அதனால் முன்பிருந்த வேலையை விட்டு விட்டு, இதற்கு வந்த பிறகு, இந்த வேலையையும் இழந்து இருக்கிற நிலைமை அரசுக்குத் தெரியுமா? அப்படி இருந்தால் அரசு அவர்களுக்கு ஆவன செய்ய முன்வருமா என்று கேட்கிறேன்

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரத்தோடு தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

காரியாப்பட்டியில் வாசனைத் தைலத் தொழிற்சாலை.

*வினா எண் 488—**திரு. எம். பிச்சை :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருப்புக்கோட்டை தொகுதி காரியாப்பட்டியில் மல்லிகைப்பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கின்ற தொழிற்சாலை ஒன்று நிறுவும் செயற்குறிப்பு தற்போது எந் நிலையில் உள்ளது ?

(ஆ) எவ்வளவு சீக்கிரத்தில் தொழிற்சாலை அமைக்கப் படும் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) மற்றும் (ஆ) : மல்லிகைப்பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையைக் கூட்டுறவுச் சங்கத் திட்டமாகச் செயல் படுத்த தேவையான விபரங்கள் பெறவும், சாத்தியக் கூறுகளை திட்டவட்டமாக ஆராயவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.





**திரு. எம். பிச்சை :** பேரவைத் தலைவர் அவர்களே, காரியாப் பட்டிப் பகுதியில் விவசாயிகள் மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் எடுக்கும் தொழிலை உப தொழிலாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். காரியாப்பட்டியை மையமாக வைத்து, ஏறத்தாழ 1000 ஏக்கர்கள் மல்லிகைப் பூ விவசாயம் செய்கின்ற காரணத்தினால், அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகின்ற காரணத்தால், அதை உடனடியாக ஏற்படுத்துவதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே கோவை மாவட்டத்தில் மேட்டுப் பாளையம் நகரில் மெசர்ஸ் சக்தி எச்ஸ்டாக்ஸ் என்ற பெயரில் தனியார் நிறுவனம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அவர்களை முன்மாதிரியாக வைத்துக்கொண்டு, கூட்டுறவு முயற்சியில் கூட்டுறவு வகையில் காரியாப்பட்டியில் விரைவில் அந்த மல்லிகைப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை உருவாக்க விரைவாக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

**திரு. எம். பிச்சை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காரியாப்பட்டியில் அந்தத் தொழிற்சாலை அமைக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு இப்போது காரியாப்பட்டியில் அமைப்பது என்ற வகையில் ஆராய்ந்து கொண்டு வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் உற்பத்தி செய்யப்படுகின்ற மல்லிகைப் பூவிலிருந்து தயாரிக்கப்படும் ஜாஸ்மின் காங்கிரீட், ஜாஸ்மின் ஆப்சலூட் ஆகிய இரண்டு வகையான எண்ணெய் எடுக்கப்பட்டால், அவைகள் கிலோ 30,000 ரூபாய், 40,000 ரூபாய் என்று வெளிநாடுகளுக்கு விற்கின்ற நிலைமை இருப்பதால், இதை அரசாங்கம் உடனடி யாகப் பரிசீலனை செய்து, வெகு விரைவிலே ஆரம்பிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்வார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனை அனுதாபத்தோடு, விரைவாகப் பரிசீலிக்கப்படும்.

(முற்பகல் 9–20)

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூவிலிருந்து வாசனைத் தைலம் தயாரிக்கப்படுகிற தொழிற்சாலையை வேறு எங்காவது அமைக்

கின்ற யோசனை அரசிற்கு இருக்கிறதா ? திண்டுக்கல் பகுதியில் அதிகமாக மல்லிகைப் பூ பயிரிட்டு வருகிறார்கள். அங்கு இதுபோன்ற தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று அந்தப் பகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதைக்குறித்து பரிசீலனை செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்த ஆத்தூர் தொகுதியில் அதனை அமைக்கின்ற வகையில் அவர் சொன்ன யோசனைகளை இந்த அரசு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும். கோயம்புத்தூர் மாவட்டத்தில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தினால்—நேஷனல் கோ-ஆப்பரேட்டிவ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷன்—உதவியுடன் முப்பது இலட்சம் ரூபாய் செலவில் ஒரு தொழிற்சாலையை அமைக்க துடியலூர் கூட்டுறவு வேளாண்மைப் பணிகள் சங்கம் கோ-ஆப்பரேட்டிவ் அக்ரிகல்ச்சுரல் சர்வீஸ் சொசைட்டி—மூலமாக நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சேலம் மு. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக அதிகமாக மல்லிகைப் பூ விளையக் கூடிய சேலம் மாவட்டத்தில் பனைமரத்துப்பட்டியில் வாசனை தைலம் தயாரிக்கும் தொழிற்சாலையை ஏற்படுத்தும் உத்தேசம் அரசிற்கு உள்ளதா ? பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய எந்த விவரமும் பரிசீலனையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் கவனத்தில் கொள்ளப்படும்.

### தஞ்சை மாவட்டத்தில் உள்ள தீப்பெட்டித் தொழிற்சாலை.

* வினா எண் 489—**திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு ஊரகத்தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் அண்மையில் துவங்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கப் பெறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், மூலப்பொருள்கள் கிடைக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?



**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** (அ) தஞ்சாவூர் சிறு தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் பணி தொழிற் கூட்டுறவு சங்கம் அதன் உறுப்பினர்களாக உள்ள 106 தீப்பெட்டி தொழிற்சாலைகளுக்குத் தேவையான அனைத்து மூலப்பொருட்களையும் வினியோகிக்கின்றது. எந்த மூலப்பொருளும் கிடைக்கவில்லையென சங்கத்திலிருந்து முறையீடு வரவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. ந. சிவஞானம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன். இதனால் ஏறத்தாழ ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, எப்போது இந்த மூலப் பொருள்கள் கிடைக்கும் என்று அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் மூலக்கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்தில் அரசுக்கு மூலப்பொருள்கள் பற்றாக்குறை என்று முறையீடுகள் வரவில்லை என்று சொல்லியிருக்கிறேன். விவரங்கள் இருக்குமானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. கு. பெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் துவங்கப்பட்ட தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு மூலப்பொருள்கள் கிடைக்கவில்லை என்பது கேள்வி. பொதுவாக ஆறு மாதத்திற்கு முன்பு அந்த மூலப்பொருள்கள் கிடைக்காமல் இருந்தது உண்மைதான். இந்த மூலப்பொருள்கள் கிடைப்பதற்கு அரசு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். தஞ்சை மாவட்டத்தில் மாயவரம் பகுதியில் சிறிய கூட்டுறவு தீப்பெட்டித் தொழிற்சாலை இருக்கிறது. அதற்கு அரசு மூலம் உரிமங்கள் வழங்குவதற்கு ஏறத்தாழ ஓராண்டு காலமாகியும் வழங்கப்படாத காரணத்தால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். உரிமங்கள் கிடைக்க அரசு வழிவகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதிலில்லை)

**திரு. மு. சுந்தரராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தீப்பெட்டித் தொழிற்சாலைக்குக் குளோரைட் தயாரிக்கிற தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆங்காங்கு

சில நேரங்களில் கூட்டுறவு முறையிலே நடக்கிற தொழிற்சாலைகளுக்குக் குளோரைட் சரியாகக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே குளோரைட் தயாரிக்கிற தொழிற்சாலைகளிலிருந்து கூட்டுறவு முறையிலே இயங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு முதலில் வழங்கிவிட்டு, பின்னர் தனியார் தொழிற்சாலைகளுக்கு வழங்கவேண்டுமென்று இந்த அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

### சைதாப்பேட்டை சாயத் தொழிற்சாலை.

*வினா எண் 490—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-சைதாப்பேட்டையில் சாயத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** இல்லை.

**திரு. து. புருஷோத்தமன் :** "தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் ஏறக்குறைய 20 ஆயிரம் பேர்கள் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 10 ஆயிரம் பேர்கள் நிரந்தர வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருந்தொகை முதலீடு செய்ய வேண்டியதில்லை. அங்கே உள்ளவர்கள் தற்போது அனகாபுத்தூர் போன்ற இடங்களுக்குச் சாயத்தைத் துவைப்பதற்காகச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே சைதையில் சிறிய சாயத் தொழிற்சாலை அமைப்பது குறித்து இப்போது இல்லாவிட்டாலும் பின்னராவது ஏற்படுத்த முயற்சி செய்வார்களா ?

**மாண்புமிகு. திரு. எஸ். திருநாவுக்கரசு :** ஏற்கெனவே சைதாபேட்டையிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே ஒரு சாயத் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலே 168 சாயத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே ஆங்காங்கே நடந்து வருகின்றன. இதைத் தவிர பெரிய அளவிலே 90 இலட்சம் ரூபாய் செலவிலே 7 சாயத் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிலே 4 முழுமைபெற்று பணியைத் துவங்கியிருக்கின்றன. 3 இன்னும் ஓராண்டிற்குள் பணியைத் துவங்க இருக்கின்றன.



**திரு. து. புருஷோத்தமன் :** துவங்கப்பட்ட இருக்கின்றவற்றில் சைதாப்பேட்டையிலே ஒன்று துவங்கப்பட வேண்டுமென்பது தான் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. இப்போது இருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் வெளியே சென்று சாயம் துவைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொண்டு சாயத் தொழிற்சாலையை அங்கே அமைக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** சிறிய அளவிலே, கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் நடத்துகின்றன. அவை போதுமான அளவுக்கு இருக்கின்றன. அவை தவிர 7 இடங்களில் பெரிய அளவிலே 90 இலட்ச ரூபாய் செலவிலே ஏற்படுத்தப்படுகின்றன என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அவற்றில் 4 ஏற்கெனவே முழுமைபெற்று பணியைத் துவங்கிவிட்டன. இன்னும் 3 விரைவில் ஏற்படுத்தப்படும். சைதாப்பேட்டையிலே கூட்டுறவுச் சங்க சாயத் தொழிற்சாலை ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிறது.

**திரு. எம். ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள பஞ்சாலைகளிலே ஸ்பின்னிங் மில்ஸ்தான் அதிகமாக இருக்கின்றன. காம்போஸ்ட் யூனிட்டுகள் இல்லை. என்.டி.சி. நிறுவனம் பாண்டிச்சேரியிலே ......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது சைதாப்பேட்டையில் உள்ள சாயத் தொழிற்சாலை பற்றியது.

### *Setting up of a Jasmine Oil Factory.*

*Q. No. 491—**Thiru N. KITTAPPA :** Will the Hon. the Minister for Agriculture be pleased to state:—

(a) whether the Agro Industriss Corporation, Tamil Nadu is planning to set up a Jasmine Oil Factory in this State; and

(b) If so, the details there of ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தமிழ்நாட்டில் மல்லிகைப் பூ எண்ணெய் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது. கீழ்க்காணும் சில முக்கிய தேவைகள் நிறைவு செய்யப்பட்டால்தான் மேற்படி தொழிற்சாலை அமைப்பது சாத்தியமாகும் என வேளாண் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

1. உலகச் சந்தையில் இத்தயாரிப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்குத் தேவையான தொழில் நுணுக்கம்.

2. உலகச் சந்தையில் இடம் பெறக் கூடிய தகுதி.

3. தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே குறிப்பிட்ட இடத்திற்குள், உயர்தர மல்லிகைப்பூ கிடைத்தல்.

4. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் கிடைத்தல்.

5. உற்பத்தி வரையறை.

மேலே கூறப்பட்டவைகளை ஆராய்ந்த பின்னர்தான் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமா என்பது பற்றி முடிவு எடுக்க முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப்பூவிலிருந்து தயாரிக்கக்கூடிய ஜாஸ்மைன் எண்ணெய் சிறிய பூவிலிருந்து தயாரிக்கப்படுகிறதா அல்லது குண்டு மல்லி என்று சொல்லுவார்களே, அதிலிருந்து எடுக்கப்படுகிறதா? அந்தப் பூக்களை வயல்களிலிருந்து அரை மணி நேரத்திற்குள் பேக்டரிக்குக் கொண்டுவந்நால்தான் எண்ணெய் எடுக்க முடியும் என்று சொல்கிறார்களே அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தமிழகத்திலே 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே மல்லிகைப் பூச்செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு நம் மாநிலத்திலேதான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. உயர்தர மல்லிகைப் பூக்களிலிருந்துதான் சாறு தயாரிக்கும் முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பறிக்கப்பட்ட பூக்களின் புதுத் தன்மைகள் கெடாமல் இருக்கின்ற வசதிகளை இங்கே பெற்றதற்குப் பிறகுதான் அத்தகைய தொழிற்சாலையை நாம் உருவாக்க முடியும்.

*Research into 'Sorghum' Maize.*

*Q. 492—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any research into 'Sorghum'-Maize is being conducted in this State by the (1) Agriculture Directorate and (2) Agricultural University and

(b) if so, the details thereof.



மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) வேளாண்மைத் துறையாலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாலும் சோளத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) (i) வேளாண்மைத்துறை—

கோயில்பட்டியிலுள்ள பருத்தி மற்றும் சிறுதானிய பரிசோதனை பண்ணையிலிருந்து சமீப ஆண்டுகளில் கோயில்பட்டி 5, கோயில்பட்டி 6, கோயில்பட்டி 7 மற்றும் உயர்ந்த ரகம் ஆகிய ரகங்கள் வெளியிடப்பட்டன.

தவிர, மக்கட்டை தலைவிரிச்சான் சோள சம்மந்தமான ஆராய்ச்சிகள் எடுத்துக்கொள்வதற்கு ஒரு புதிய திட்டம் செயல்பட்டு வருகிறது.

(ii) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

சமீப காலத்தில் கோ. 21, கோ. 22, கோ. 23 மற்றும் கோ. 24 ஆகிய சோள ரகங்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. 1981ஆம் ஆண்டு கோ. எச். 3 என்ற வீரிய ரகத்தை வெளியிடவிருக்கிறது.

**கால்நடை கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை.**

*வினா எண் 504—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால் நடைக் கல்லூரியில் (M. V. Sc.) படிக்கும் கால்நடை டாக்டர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.

## வாணியம்பாடியில் மேம்பாலம்.

*வினா எண் 493—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர்-வேலூர் நெடுஞ்சாலையில் வாணியம்பாடி என்னுமிடத்தில் உள்ள ரயில்வே பாலத்தின் குறுக்கே ஒரு மேம்பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது இந்த திட்டம் ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, இந்த இடம் பெங்களூர், கோயம்புத்தூர் போகின்ற மெயின் சாலையாக உள்ளதால் அந்தச் சாலை இரயில்கள் குறுக்கே வருகின்ற இடமாக இருப்பதால் பஸ்கள் அரை மணி நேரம், முக்கால் மணி நேரம் தாமதமாகப் போகின்றன. ஆகவே, அந்த மேம்பாலத்தை உடனடியாகக் கட்டுவதற்கு உத்தரவிடப்படுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் அந்தப் பாலம் எப்படிப்பட்டது என்பதைக் சபையில் உள்ள எல்லோரும் அறிவார்கள். அந்தப் பாலத்தின் அருகில்தான் இப்பொழுது இரயில் விபத்து உண்டானது. எனவே, இது போன்ற விபத்துக்களைத் தடுப்பதற்கு உடனடியாக மேம்பாலம் கட்டுவதற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, சமீபத்தில் ஏற்பட்ட விபத்து பாலம் இல்லாத காரணத்தால் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆனாலும் கூட, அவசியத்தைக் கருதி, இந்தக் குறிப்பிடப்பட்டுள்ள இருப்புப் பாதை, தேசிய நெடுஞ்சாலை 46-ன் கீழ் கிருஷ்ணகிரி, இராணிப்பேட்டை சாலையில் கிலோமீட்டர் 50/4 வாணியம்பாடியில் குறுக்கிடுகிறது. இதற்காக மாற்றுவழிப் பாதையாகப் போடும் திட்டத்திற்காக நில உரிமைக்காக மட்டும் ரூ. 8,03,400 ஒதுக்கப்பட்டிருக்கிறது



ஆகவே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், இதற்காக மதிப்பீடு 40 இலட்சம் ரூபாய் என்றும் குறிக்கப்பட்டு அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ப. சுந்தரம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் குறிப்பிட்டது எப்பொழுது செயல் முறைக்கு வரும் ? உடனடியாக வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் 1980-லிருந்து 1985 வரை. ஆகவே, மைய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்; மைய அரசின் உதவி கிடைத்தவுடன் நடக்கும்.

திரு. ந. குலசேகர பாண்டியன்: தலைவரவர்களே, பெங்களூர், சென்னை இடையே இருக்கக் கூடிய அந்த நெடுஞ்சாலையில் லெவல் கிராசிங் கேட் இருப்பதால் போக்குவரத்து மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறது ; பல விபத்துக்கள் நடக்கவும் இது ஏதுவாக இருக்கிறது. இதை விரைவுபடுத்தி, மத்திய அரசின் உதவியோடு ஆம்பூர் அருகிலேயும், வாணியம்பாடி அருகிலேயும் இரண்டு இடங்களிலேயும் அந்த லெவல் கிராசிங் அருகில் மேம்பாலம் கட்டும் திட்டத்தை அமல்படுத்த அரசு விரைவாக உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போலத்தான் இந்த மாநில அரசு மைய அரசுக்கு எழுதியிருக்கிறது.

## பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல்.

*வினா எண் 494 :—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?—

(அ) பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளின் தரத்தை உயர்த்துவதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

(ஆ) நகரத்தில் படிக்கும் மாணவனுக்கும், கிராமத்தில் படிக்கும் மாணவனுக்கும் படிப்பில், பொது அறிவில் மிகுந்த வித்தியாசம் உள்ளதைப் போக்க எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சொற்பொழிவு செய்கின்ற நேரம் இல்லை. சுருக்கமாக, கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. செ. சிவசாமி : இதன் காரணமாக சரியான சந்தர்ப் பம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, சரியான சந்தர்ப்பம் கொடுக்க வேண்டுமென்பதற் காக இது போன்ற நிலைகளையெல்லாம் ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பாக, ஒருசில காரணங் களினாலும் கிராமப்புறத்திற்கும் நகரப்புறத்திற்கும் வித்தி யாசம் ஏற்படுகிறது. திறமை பெற்ற ஆசிரியர்கள் நகர்ப்புறத்தி லிருந்து கிராமப்புறத்திற்குச் செல்வதில்லை. அப்படிப்பட்ட சூ சில நிலைகள் ஏற்பட்டு விடுகின்றன. அதே போல், மாணவர்களின் அறிவு திறம்பட அமைவதற்குச் சூழ்நிலை ஒரு முக்கிய காரணம். மூன்றாவதாக, பெரும்பாலான செய்தித்தாள்கள், வானொலி நிலையங்கள் எல்லாம் நகர்ப்புறங்களிலே அமைந்து விடுகின்றன. ஆகவே, அவைகளையெல்லாம் கருத்திலே கொண்டுதான் இந்தத் தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள், தன்னிறைவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக, கிராமப்புறத்தை அபிவிருத்தி செய்ய முனைந்து, நாங்கள் செய்து கொண்டு வரு கிறோம்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, டவுனிலே இருக்கக்கூடிய குழந்தைகள் காலையிலே எழுந்த வுடனே 'மம்மி' என்று கூப்பிடுகின்றன. ஆனால், அதே நேரத்திலே, கிராமப்புறத்திலே உள்ள குழந்தைகள் மாடு எங்கே போய் இருக்கின்றது என்று கேட்கின்றன. அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க சம சந்தர்ப்பம் கொடுக்கக் கூடிய முறையிலே, மீண்டும் அந்தக் குழந்தைகளுடைய படிப்பு பாதிக்கப் படாத நிலையிலே எந்த அளவிற்கு ஏற்பாடு செய்யப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 'மம்மி' என்று கூப்பிடுவதைக் காட்டிலும் அம்மா என்று கூப்பிடு வதே மேலானது. அதுவே தாய்மொழிக்கு நாம் தருகின்ற ஒரு நல்ல மதிப்பு.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர் களே, இங்கே பல்வேறு காரணங்களை எல்லாம் சொன்னார்கள். இந்த ஒன்றியங்களிலே உள்ள துவக்கப் பள்ளிகள் நல்ல முறையிலே நடக்க அரசாங்கம் ஆலோசனை வழங்கி உள்ளதாகச் சொன்னார்கள். பல்வேறு ஒன்றியங்களில் இருக்கிற துவக்கப்

பள்ளிகளில் போதுமான ஆசிரியர்கள் இல்லாமல் குழந்தை
களுடைய கல்வித் தரம் சரியாக இருப்பதில்லை. இரண்டாவ
தாக, இலவசமாகத் தரப்படுகின்ற புத்தகங்கள் காலாகாலத்
திலே வழங்கப்படவில்லை. அவைகளையெல்லாம் போக்க அர
சாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும்.

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களில் படிக்கின்ற
மாணவர்களுக்கும் நகரப்புறங்களில் படிக்கின்ற மாணவர்
களுக்கும் கொஞ்சம் வித்தியாசம் இருக்கிறது என்று ஒத்துக்
கொண்டார்கள். எல்லாத் திட்டங்களையும் கிராமப்புறத்திலே
இருந்து நகர்ப்புறத்திற்குக் கொண்டு வருகின்ற முறையில் அமைந்
திருக்கிற தமிழக அரசு இந்த நிலையில் இந்தக் கல்வித்
தரத்தை, ஆரம்பக் கல்வியை, கிராமப் புறத்திலே இருந்து
துவக்குகிறோம் என்ற அறிவிப்பில், ஏதாவது, தனிப்பட்ட
விசேஷமான திட்டத்தில் இந்தக் கல்வித் தரத்தை உயர்த்து
வதற்கு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, அதற்காக இந்த அரசு பல திட்டங்களைத்
தீட்டிக் கொண்டிருக்கிறது என்பதையும், விரைவில் அது பற்றிய
விவரம் வரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU T. VENKATAREDDY - In the drought d stricts poor
people are getting M d-day Meals in the working days. Is there any
proposal to give them M d-day Meals even during Summer hol days.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, விடுமுறை நாட்கள் பற்றி யோசித்துச்
செய்ய வேண்டுமென்பதை மாண்புமிகு உறுப்பினர் ஒத்து
கொள்வார்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்
களே, சில ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பல மாதக் கணக்
காக ஆசிரியர்கள் லீவு எடுக்கிறார்கள். அதனால் அந்த இடங்
களில் படிக்கின்ற மாணவர்களின் கல்வித் தரம் கெடுகிறது. அந்த
இடங்களில் உடனடியாக ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்
வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
விதிமுறைகளுக்கு ஏற்பத்தான் விடுப்பு கொடுக்கப்படுகிறது.
ஆகவே, அதிலே எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது.
ஆனாலும், அதிகமான நாட்கள் விடுப்பு எடுக்கின்ற நேரத்தில்
இதற்காகத் தற்காலிகமாக ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்
கள்.

## அடையாற்றின் குறுக்கே பாலம்.

*வினா எண் 495—திரு. பம்மல் நல்லதம்பி : மாண்புமிகு
உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதியில் அனகாபுத்தூருக்கும் குன்றத்
தூருக்கும் இடையிலே ஓடும் அடையாறு ஆற்றின் குறுக்கே
பாலம் கட்டும் திட்டம் உண்டா ?

(ஆ) அந்தத் திட்டம் எப்போது நடைமுறைப்படுத்தப்
படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.
(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பம்பல் நல்லத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே அனகாபுத்தூருக்கும் குன்றத்தூருக்கும் இடையிலே
இருக்கிற அடையாறு ஆற்றில்—அந்த அடையாறு ஆற்றுக்குக்
கூட **இருந்தால், எனக்கு இவ்வளவுகாலமாக இந்தப் பாலம்
அமைக்கவில்லையே என்று சொல்லும். அந்த அளவுக்கு நீண்ட
காலமாக அங்கே பாலம் தேவை என்று அங்கேயிருந்து தேர்ந்
தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் பலமுறை சொல்லி
யும் நடைமுறையில் இல்லை, ஆனால் ஆமென்று அமைச்
சரவர்கள் சொல்கிறாகள், எப்பொழுது நடைபெறும் அதற்கு
மதிப்பீடு தொகை அளிக்கப்பட்டு விட்டதா என்று அறிய
விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே,
அந்த பாலத்திற்கு ** இல்லாத காரணத்தினால்தான் மாண்பு
மிகு உறுப்பினர் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவேதான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. குறிப்பாக
இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அனகாபுத்தூருக்கும்
குன்றத்தூருக்கும் இடையிலே ஓடும் அடையாறு ஆற்றின்
குறுக்கே...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாலத்திற்கு * * இருந்தால் என்று அவர் ஆரம்பித்தார். அவரும் ஆற்றுக்கு * * இல்லாததால் சட்டமன்ற உறுப்பினருக்கு இருக்கிறது என்று சொன்னார்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தயவு செய்து பேசிய வார்த்தையைக் கவனித்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் சொல்லுகிறபோது ஆற்றுக்கு * * இருந்தால் அந்த ஆறு கூட எனக்குப் பாலம் இல்லையே என்று கேட்டு இருக்கும் என்று அந்த ஆற்றின் குறையை அவர் எடுத்துச் சொன்னார். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது ஆற்றுக்கு * * இல்லாத காரணத்தால்தான் கேட்பவருக்கு * * கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உறுப்பினரைக் கருதிச் சொன்னார்கள். அப்படிச் சொல்லுகிறபோது அதிலே ஏற்படுகிற தாரதம்மியத்தைத் தலைவர் அவர்கள் உணர்வார் என்று நான் நம்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேள்வி கேட்ட நண்பர் மக்களுடைய பிரதிநிதியாக வந்து இந்தக் கேள்வியைக் கேட்டார். ஆகவே ஆற்றுக்கு * * இல்லை அதனாலே பேச முடியாது; மக்கள் அந்த ** உபயோகப்படுத்துங்கள் என்று சொல்லி பேச வைத்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். அது வேண்டாமென்றால் நீக்கி விடலாம்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இந்தப் பணி 1979–89ஆம் ஆண்டு இரண்டாவது பகுதித் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டது. இதற்கிடையிலே இந்த சென்னை புறவழிச் சாலையை மேம்பாடாக்க வேண்டும் என்று ஒரு திட்டம் கொண்டு வரப்பட்டதன் காரணமாகத் தான் இது நிலுவையில் இருந்து வந்திருக்கிறது, ஆனாலும் உடனடியாக வேலையை ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லி 30,80,000 ரூபாய் அதற்கு நிதி தேவை என்று மதிப்பீடு கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. பம்மல் நல்லதம்பி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் என்றைக்கு அந்தப் பாதையை சீராக்க இருக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் நம்முடைய மாநில அரசு அந்தப் பாலத்தை உடனடியாக கட்டுவதற்கு இந்த மதிப்பீட்டை துரிதப்படுத்தி நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: : தலைவர் அவர்களே, உடனடியாக துரிதப்படுத்தப்படுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வியில் வந்த* என்ற வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள்.

*வினா எண் 496—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ் நாட்டில் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்கள் ஏன் செயலிழந்து உள்ளன?

(ஆ) அவர்களிடம் உள்ள டிராக்டர்களை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்கு கொடுக்கும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஊராட்சி ஒன்றியங்களில் டிராக்டர்களை வாடகை விடுவதன் மூலம் கிடைக்கும் வருமானம் டிராக்டர்களைப் பராமரிக்கும் செலவினங்களை ஈடு செய்யவில்லை. தனியார்களும், கூட்டுறவு நிறுவனங்களும் டிராக்டர் மற்றும் விவசாயக் கருவிகளை வாங்கி வாடகைக்கு விடுவதால் ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்களுக்குத் தேவை குறைவாக உள்ளது. அப்படியிருந்தும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நல்ல முறையில் டிராக்டர்கள் செயல்படுகின்றன.

(ஆ) ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சொந்தமான டிராக்டர்கள் குறைந்த வாடகைக்கு விடப்படுகின்றன. மேலும் குறைந்த வாடகைக்கு விடும் உத்தேசம் இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் எவ்வளவு டிராக்டர்கள் இருக்கின்றன? அவைகளில் எத்தனை செயலிழந்து இருக்கின்றன? அதனால் அரசுக்கு வருகின்ற வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, மொத்தமுள்ள 376 ஊராட்சி ஒன்றியங்களில் 340 டிராக்டர்கள் இருக்கின்றன. அதிலே 155 டிராக்டர்கள் நல்ல நிலையில் இருக்கின்றன. 178 டிராக்டர்கள் பழுதடைந்திருக்கின்றன. உபயோகப்படுத்த முடியாத டிராக்டர்கள் 7 இனங்கள் இருக்கின்றன.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே இந்த 178 டிராக்டர்களும் ரிப்பேர் பார்க்கப்படாமல் யூனியன் ஆபீசுக்கு முன்னால் மிகவும் பழுதடைந்து துருப்பிடித்து இருக்கின்றன. ஒன்று அவைகளை விற்று அந்த நிதியை ஊராட்சி ஒன்றியங்களின் நிதியில் சேர்க்க வேண்டும். அல்லது ரிப்பேர் செய்து விவசாயிகள் பயன்படுத்தும் வகையில் செய்ய வேண்டும். இதைத் துரிதப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற பழுதடைந்த இயந்திரங்களை யார் கவனிக்காமல் அதைப் பழுது பார்க்கும் ஏற்பாட்டைச் செய்து உபயோகப்படுத்தாமல் இருக்கிறார்களோ அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதோடு, இதைப்பற்றி எல்லாம் கவனித்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள டிராக்டர்களின் பெரும்பகுதி பழுதடைந்து இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே சொன்னார்கள். அப்படித்தான் இருக்கின்றன என்று நானும் அறிகிறேன். அதில் இருந்து வருகின்ற வருமானம் அதைப் பழுது பார்ப்பதற்குக்கூட போதுமானதாக இல்லை என்று சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் அங்கே நடக்கும் பலவிதமான ஊழல்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? ஆகவே, அந்த டிராக்டர்களை சரி செய்து, லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் சிறு உழவர்களுக்கு உபயோகப்படுகிற வகையில் அளிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் முன் வருமா? ஒரே மாதிரியான கட்டணம் எல்லா இடங்களிலும் வசூலிக்கப்படுவது இல்லை என்றும் சொல்லப்படுகிறது. ஒரு இடத்தில் ஏக்கருக்கு இவ்வளவு வாடகை என்றும், மற்றொரு இடத்தில் மணிக்கு இவ்வளவு வாடகை என்றும் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆகவே, ஒரே மாதிரியான கட்டணம் தமிழகம் முழுவதும் விதிக்கப்படவும், குறைந்த வாடகையில் சிறு விவசாயிகளுக்கு அந்த டிராக்டர்கள் அளிக்க நடவடிக்கை எடுக்கவும், பழுது அடையாமல் ஒழுங்காக அந்த டிராக்டர்கள் செயல்படுவதற்கும் வழிவகை செய்யும் முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, சிறு விவசாயிகள் மேம்பாடு அடைய வேண்டும் என்கிற கருத்தின் அடிப்படையில்தான் இது போன்ற டிராக்டர்கள் வழங்கப்பட்டு வருகின்றன. பணக்காரர்களைப்பற்றி அரசு கவலைப்படவில்லை. அவர்களே டிராக்டர்கள் வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தனியார்கள் நிறுவனங்களில் இருந்தும் அதிகமான வாடகைக்கு வாங்கிக் கொள்ள அவர்களால் முடிகின்றது. சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் அளிக்க வேண்டும் என்கிற வகையில்தான் இத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதுபோல் பழுதுபட்ட டிராக்டர்களைச் சரிப்படுத்தவும், செம்மைப்படுத்தவும் அரசு ஆவன செய்யும்.



**திரு. பு. போ. ஆனூர் ஜகதீசன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, பல டிராக்டர்கள் பயனற்று இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு). அப்படி பழுதுபட்டு பயனற்றுப்போய் இருக்கிற 7 டிராக்டர்களுக்குப் பதிலாக புதிய டிராக்டர்களை அந்த ஒன்றியங்களுக்கு வாங்கித் தர அரசுக்கு உத்தேசம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, அந்த எண்ணமும், ஏற்பாடும் அரசிடம் இருக்கின்றன.

**திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் கொடுக்க வேண்டும் என்கிற அடிப்படையில்தான் ஒன்றியங்களில் அவைகள் வாங்கி வைக்கப்பட்டன. இப்போது பெரும்பான்மையான இடங்களில் அவைகள் பழுது அடைந்து பயனற்றுப் போய் இருக்கின்ற காரணத்தால், சிறு விவசாயிகளுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் கிடைக்கவில்லை. ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் அதிகப்படியான டிராக்டர்கள் வாங்கிக் கொடுக்க அரசு முன் வருமா ? நிதி வசதி இல்லை என்றால், ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் இருந்து அவற்றை வாங்கித் தர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஆண்டிறைவுத் திட்டத்தின் அடிப்படையிலும், இப்போது இருக்கின்ற சூழ்நிலையின் அடிப்படையிலும் இந்த ஏற்பாட்டை அரசு செய்யும்.

**திரு. வெ. அரங்கராசன்:** தலைவர் அவர்களே, யூனியன்களில் உள்ள டிராக்டர்களில் இருந்து வருகின்ற வருமானத்தைவிட அதிக அளவிற்கு பழுதுபார்க்க ஆகிறது என்று சொல்லப்படுகிறது. எனவே அதிகமாகச் செலவு செய்வதற்குப் பதிலாக அந்த டிராக்டர்களை ஏலம் போட்டு விட்டு, புதிதாக டிராக்டர்கள் வாங்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, ஏலம் எடுப்பவர்கள் புத்திசாலிகள் என்று கருதுகிறேன். நமக்கே பயன்படாது என்றால், அவர்கள் எடுத்துவிட மாட்டார்கள். இருப்பினும் முயற்சிக்கலாம்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் இருக்கும் டிராக்டர்களை 'கன்டம்' செய்து, பல வருஷங்களாக அவைகளை ஏலம் போடாமல் பல

இடங்களில் வைத்திருப்பதால், அவைகளில் உள்ள பாகங்களைத்
திருடிக் கொண்டு போகிற நிலைமைகள் இருக்கின்றன. அதன்
காரணமாக அவைகளைப் பின்னர் விற்க முடியாமலும் போய
விடுகின்றன. ஆகவே, அந்த டிராக்டர்களை 'கண்டம்' செய்த
உடனேயே அதை ஏலத்தில் விற்பனை செய்ய அரசு நடவடிக்கை
எடுக்க முன் வருமா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத்
தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட கருத்துக்களை மனதில்
வைத்துதான் முதலில் பதில் சொன்னேன். அப்படிப்பட்ட
வர்கள் மீது நடவடிக்கை எடுப்போம், அதைப் பற்றியும் சிந்திப்
போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூடலூரில் பேருந்து நிலையம்.

*வினா எண் 497—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்பு
மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா —

(அ) கம்பம் தொகுதி கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட
ஆரம்பித்து 10 ஆண்டுகள் ஆகியும் இதுவரை வேலை முடிய
வில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் தாமதத்திற்கு காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும்
(ஆ) : கூடலூரில் பேருந்து நிலையம் கட்ட இடம் தேர்ந்
தெடுத்து 1972 ஆம் ஆண்டு பேரூராட்சி தீர்மானம்
நிறைவேற்றியது. பேருந்து நிலையம் கட்டுமிடம் பேரூராட்
சிக்குச் சொந்தமானபோதிலும், அந்த இடத்திற்குப் பேருந்துகள்
செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தது.
இந்த இடம் நன்கொடையாகப் பெறப்பட்டது. இதற்கு சுமார்
இரண்டு ஆண்டுகள் ஆகியது. இடம் பெறப்பட்ட பின்னர்,
உணவு விடுதி, பயணிகள் தங்கும் விடுதி, காம்பவுண்டு சுவர்,
தளம், குடிநீர், கிணறு, மின் இணைப்பு, கழிவறை வசதிகள்
முதலியன செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. வாகன போக்கு
வரத்து துறை தெரிவித்துள்ளபடி மேற்கொண்டு சில வசதிகள்
செய்ய வேண்டியதாயிற்று. இவ்வேலைகள் தற்பொழுது நடை
பெற்று வருகின்றன. மேற்சொன்ன வேலைகளனைத்தும்
பஞ்சாயத்து நிதியைக் கொண்டே செய்யப்பட்டு வருகின்றன.
வருகின்ற மூன் திங்களுக்குள் அனைத்து வேலைகளும் முடிக்கப்
பட்டு பேருந்து நிலையம் செயல்பட தயாராகலாம் என எதிர்
பார்க்கப்படுகிறது.



[முற்பகல் 9-50]

திரு. ஆர். டி. கோபாலன் : தலைவரவர்களே, சாதாரண
மாக ஒரு பெரிய பாலத்தையே 2, 3 ஆண்டுகளில் கட்டி முடித்து
விடுகிறார்கள். ஆனால் ஒரு சிறிய பேருந்து நிலையத்தைக்
கட்டுவதற்கு 7, 8 ஆண்டுக் காலமாவதற்குக் காரணம் என்ன ?
கம்பம் பஞ்சாயத்து யூனியனில் நிதி கூடுதலாக இருக்கிறது.
அப்படி இருந்தும் இதுவரை வேலை முடிவடையாததற்கு யார்
காரணம் ? அந்த அதிகாரி மீது அரசு தகுந்த நடவடிக்கை
எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே,
நான் ஏற்கனவே சொன்னதைப் போல அது பேரூராட்சிக்குச்
சொந்தமான இடமாக இருந்தாலும் அந்த இடத்திற்குப் பேருந்து
கள் செல்லும் வழி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருக்
கிறது. அது நன்கொடையாகப் பெறப்பட்டது என்றாலும்
அதற்கு இரண்டாண்டுகள் ஆகிவிட்டது. அதனால்தான் இந்தக்
காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

தண்டாரம்பட்டில் அரசு மருத்துவமனை.

*வினா எண் 498—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு
விடையளிப்பாரா—

தண்டராம்பட்டில் அரசினர் மருத்துவமனை ஆரம்பிப்ப
தற்கு தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ரூ. 10,000
கட்டப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே : ஆம்.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தற்போது
அமைச்சரவர்கள் '' ஆம் '' என்று பதில் அளித்தார்கள். அந்தத்
தொகை எப்போது கட்டப்பட்டது, யாரால் கட்டப்பட்டது
என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரர்களே,
தண்டராம்பட்டு பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் அவர்கள்
10,000 ரூபாய் கொடுத்து ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகி
இருக்கின்றன. அதன் பிறகு டைரக்டர் ஆஃப் மெடிக்கல் சர்வீஸ்
பாமிலி வெல்பேர் அவர்கள் ப்ரொப்போசல் அனுப்பியிருக்கிறார்
கள். அதன் அடிப்படையில் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, தண்டராம்பட்டு, தொகுதியின் மைய இடமாக இருப்பதால், அங்கு மருத்துவ வசதிக்கு என்று ஒரு மருத்துவமனை இல்லாத காரணத்தால், அங்கே மருத்துவ மனை கட்டுவதற்காக 10,000 ரூபாய் கட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் அரசாங்க மருத்துவமனை ஆரம்பிக்க அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: : தலைவரவர்களே, மருத்துவமனை அமைப்பதுபற்றி இயக்குநர் இரண்டு பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார். முதலாவதாக, தண்டராம்பட்டில் ஒரு மருத்துவமனை தொடங்கலாம் என்பது. அது மட்டுமல்லாமல், ஏற்கனவே தண்டராம்பட்டில் அதாவது தண்டராம்பட்டுக்கு அருகில் 3 மைல் தூரத்தில் மொத்தக்கல் என்ற இடத்தில் ஒரு ரூரல் டிஸ்பென்சரி இருக்கிறது; அதையும் இந்த மருத்துவ மனையையும், இரண்டையும் ஒன்றாக ஒரே இடத்தில் ஆரம்பித்து செயல்பட்டால் நன்றாக இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆகவே, இந்தச் சிக்கல் ஏற்பட்டது. ஒரே இடத்தில் இரண்டும் செயல்படும் அடிப்படையில் பார்த்தால் இன்னும் தொகை தேவைப்படுகிறது. அதுவும் பெறப்பட்டு, இரண்டு மருத்துவ மனைகளையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறோம்.

இடைப்பாடி தொகுதியில் மினி ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண் 499—திரு. இ. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இடைப்பாடி தொகுதி இடைப்பாடி பஞ்சாயத்து ஒன்றியத்திலுள்ள ஆடையூர் மற்றும் பக்கநாடு பகுதியில் "மினி ஆரம்ப சுகாதார நிலையம்" ஆரம்பிக்கத் திட்டம் உருவாக்கப்பட்டு அதற்கான பங்குத்தொகை செலுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆமெனில் இதுநாள்வரை அதன் பொருட்டு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) இது சம்பந்தமாக ஆரம்பச் சுகாதார நிலைய இயக்குநர் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் தக்க நடவடிக்கை எடுப்பதற்காகத் தொடர்பு கொண்டுள்ளார்.



திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை இந்த நிதி ஆண்டிலே செயல்படுத்தி, அந்தப் பகுதி மக்களுக்கு நல்ல மருத்துவ வசதி கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: தலைவரவர்களே, இது "மினி ஹெல்த் சென்டர்" அமைக்க எழுப்பப்பட்ட கேள்வியாகும். இதற்காக 6,000 ரூபாயை அங்கே இருக்கிற பஞ்சாயத்து யூனியனிலிருந்து கட்டியிருக்கிறார்கள். ஆனால் நமக்கு இருக்கிற விதிகளின்படி இந்தப் பணத்தை ஒரு "வாலண்டரி ஆர்கனைசேஷன்" கட்ட வேண்டும். ஆகவே, முதலில் அங்கே ஒரு வாலண்டரி ஆர்கனைசேஷனை ஏற்படுத்த வேண்டும். அவர்கள் மூலம் 6,000 ரூபாய் கட்ட வேண்டும். அதன் பிறகு மாநில அரசு 6,000 ரூபாய் போட்டு, மத்திய அரசிடமிருந்தும் 6,000 ரூபாய் பெற்று, மொத்தம் 18,000 ரூபாய் செலவில் இதை ஆரம்பிக்கலாம். மாவட்ட கலெக்டரிடம் இதுபற்றி சொல்லப்பட்டிருக்கிறது. வாலன்டரி ஆர்கனைசேஷன் அமைக்கப்பட்டு, அதன் மூலம் 6,000 ரூபாய் கட்டியவுடன் இந்த மினி ஹெல்த் சென்டரை ஆரம்பிப்பதில் எந்தவிதமான சங்கடமும் இல்லை.

திரு. இ. கணேசன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள மினி ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்போது 172 மினி ஹெல்த் சென்டர்கள் இருக்கின்றன. இந்த ஆண்டிலே ஏறத்தாழ 50 மினி ஹெல்த் சென்டர்கள் அதிகமான துவக்க இருக்கிறோம். ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டிருப்பது 172 மினி ஹெல்த் சென்டர்கள்.

திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1979 ஆம் ஆண்டு வேம்பார், ராமச்சந்திரபுரம் ஆகிய இடங்களில் மினி ஹெல்த் சென்டர் ஆரம்பிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதில் வேம்பாரிலே மட்டும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதற்கு போதுமான நிதி ஒதுக்கப்படவில்லை. ராமச்சந்திரபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டதோடு அப்படியே இருக்கின்றது. தொடர்ந்து அது இயங்கவில்லை. ஆகவே அதற்குப் போதுமான நிதி இல்லாத காரணத்தால் தான் இயங்காமல் இருக்கின்றது என்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி சேலம் மாவட்டம் சம்பந்தப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம் சம்பந்தப்பட்ட கேள்வியைக் கேட்கிறார்கள்.

பலநோக்கு சுகாதாரத் திட்டம்.

*வினா எண் 500—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பலநோக்கு சுகாதாரத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு மத்திய அரசு மானியம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் 1979–80-க்கு கிடைத்த மானியம் எவ்வளவு?

(இ) 1980–81-க்கு எவ்வளவு கிடைக்கும் ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ). ஆம்.

(ஆ) ரூ. 23.245 இலட்சம்.

(இ) ரூ. 33 இலட்சம் வரை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த பலநோக்கு சுகாதார நிலையத்தில் என்னென்ன பணிகள் செய்யப் படுகின்றன? தற்போது இருக்கின்ற ஆரம்பச் சுகாதார நிலயம் செய்கின்ற பணியை விட வேறு என்னென்ன அதிகப் படியானப் பணிகளை இவை செய்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, மத்திய அரசு மல்டி பர்பஸ் ஹெல்த் ஓர்க்கர்ஸ் ஸ்கீம் என்று ஒரு பெயர் கொடுத்து அதற்காகச் சிலரைத் தயார் செய்து அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து, ஆன்டி நேட்டல் அன்ட் போஸ்ட் நேட்டல் என்று அதாவது குழந்தை பிறப்பதற்கு முன் பும், குழந்தை பிறந்ததற்குப் பிறகும் அதற்கான வசதிகள் எப்படி எப்படி இருக்க வேண்டும் என்றும், என்னென்ன சாப்பாடு சாப்பிட வேண்டும், எந்தெந்த நிலையிலே தங்களை வைத்துக் கொள்ள வேண்டும் என்றெல்லாம் அவர்களுக்கு விளக்குவதற் காக அந்த ஸ்கீமை ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆகவே அவர் களுடைய வீட்டுக்குச் சென்று அவர்களுக்கு என்னென்ன நோய் இருக்கின்றது என்பதைக்கண்டுபிடித்து உடனடியாக டாக்டருக் குச் சொல்கின்ற வகையில் ஆரம்பச் சுகாதார நிலையத்திலே இருக்கின்ற மருத்துவர்களுக்கும் கிராமங்களில் வாழக் கூடிய மக்களுக்கும் இடையிலே ஒரு பாலமாக இந்த ஓர்க்கர்ஸ் பணி புரிவார்கள்.



திரு. கு. ரமணி : தலைவரவர்களே, இந்த பல நோக்கு சென்டரிலே பயன்படுத்தப்படுவதற்கான மருந்துகள் வெளி நாடு களில் இருந்து நமக்கு நன்கொடையாகத் தரப்பட்டும் அப்படிப் பட்ட மருந்துகள் பயன்படுத்தப்படாமல் பல இடங்களிலே இருந்து வருகின்றன. அவற்றை உபயோகத்திற்குக் கொண்டு வராமல் இருக்கின்றது என்ற புகார்கள் அரசுக்கு வந்துள்ளது. அப்படியானால் அதை முறையாகப் பயன்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் ?

மாண்புமிகு டாக்டர் திரு. எச்.வி. ஹண்டே : தலைவரவர்களே, அங்கே மருந்துகள் தரப்படவில்லை. கிட் என்பது ஒரு பை மாதிரியாக இருக்கும். அதுதான் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 5 மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை அமல்படுத்தி இருக்கி றோம். அங்கே மட்டும்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற எல்லா மாவட்டங்களிலும் இதை நிறைவேற்றுவதற்குத் திட்டம் தீட்டி இருக்கிறோம். ஆகவே எல்லா மாவட்டங்களிலும் விரை வில் செய்ய இருக்கிறோம். அப்போது இந்த கிட் அவர்களுக்கும் கொடுக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர் களே, 5 மாவட்டங்களிலே மட்டும் அமலுக்குக் கொண்டு வந்து இருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த மாவட்டங் கள் எவை எவை ? இனி அடுத்து இத்திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் மாவட்டங்கள் எவை எவை ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, அந்த ஐந்து மாவட்டங்கள், குமரி மாவட்டம், மதுரை மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், செங்கை மாவட்டம், சேலம் மாவட்டம் ஆகியவை.

திரு. கெ. சு. திருவேங்கடம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை தாலுக்கா மருத்துவமனைகளில் செயல்படுத்து கிறார்களா அல்லது தனியாகச் செயல்படுத்தப்படுகிறதா அல் லது ஆரம்பச் சுகாதார நிலையத்தின் மூலமாகச் செயல்படுத்தப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்ன மாதிரி தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் மருத்துவமனைக்கும் இந்தத் திட்டத்திற்கும் சம்பந்தம் கிடை யாது. ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கின்ற ஒன்றியத்தின் எல்லைக்குள்ளே இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால் ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும், அங்குள்ள மக்களுக்கும் தொடர்பு ஏற்படுத்துவதுதான் இந்த மல்டி பர்ப்பஸ் ஹெல்த் சென்டர்ஸ் என்ற திட்டத்தின் நோக்க மாகும்.

திருவில்லிப்புத்தூர் தொகுதி திருவண்ணாமலையில் துளசித் தோட்டம்.

*வினா எண் 501—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் தொகுதி திருவண்ணாமலைக்கு அருகில் சித்த வைத்தியத்திற்கு மூலப் பொருளான (துளசி) துளசித் தோட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இல்லை.

[முற்பகல் 10-00].

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் துளசித் தோட்டம் இல்லாவிட்டாலும் செண்பகத் தோப்பில் துளசித் தோட்டம் ஆரம்பிப்பதாக உத்தேசிக்கப்பட்டது. ஆனால் அதற்காக 40 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டி இருக்கின்றது. அந்த இடத்தைக் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். ஆகவே அந்த இடத்தை உடனே ஆர்ஜிதம் செய்து துளசித் தோட்டம் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் முன் அனுமதியுடன் வினா விடை நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1979 ஆம் ஆண்டு ஜூன் மாதம் திருவில்லிப்புத்தூருக்கு அருகிலே உள்ள அருள்மிகு நாச்சியார் திருக்கோவிலுக்குச் சொந்தமான செண்பகத்தோப்பு என்னும் இடத்தில் ஏறத்தாழ 243.98 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் 63 000 ரூபாய்க்கு சின்னப்ப நாடார் என்பவருக்கு 1—11—80 அன்று குத்தகைக்கு விடப்பட்டிருக்கிறது. தற்போது நாம் அங்கே ஒரு மூலிகைப் பண்ணையை ஆரம்பிக்கலாம் என்ற திட்டத்தை தீட்டி அதற்கு அந்த நிலத்தை கேட்டு அணுகிய போது அந்த நிலம், நான் மேற்கூறியவாறு, குத்தகைக்கு விடப்பட்டதை தெரிவித்தார்கள். ஆகவே இது சம்பந்தமாக நானும் உடனடியாக மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களை அணுகி கேட்டேன். அந்த குத்தகையை தளர்த்தி, ஓர் ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஆக்கி அல்லது அதை ரிலீஸ் செய்து அந்த 40 ஏக்கர் நிலத்தை மருத்துவத் துறைக்கு



கொடுப்பது பற்றி முயற்சி செய்து பார்க்கலாம் என்று அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த மூலிகைப் பண்ணையை அந்த இடத்தில் ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி, அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் நானும் எடுத்து வருகிறேன் என்ற இந்தச் செய்தி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு திருப்தி அளிக்கும் என்று கருதுகிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசி நாட்டில் அழிந்துக் கொண்டே போகிறது. அந்த துளசியின் இலை பாம்புக் கடிக்குச் சிறந்த மருந்தாக இருக்கிறது. வயல் காட்டில் கிராமப் புறங்களில் வேலை செய்பவர்களை திடீரென்று பாம்பு கடித்து விட்டால், மருத்துவமனையும் வயற்காட்டிலிருந்து வெகு தொலைவில் இருக்குமானால், அவர்களை எடுத்துச் செல்வதற்குள் இறந்து விடுகிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட சிறிய நங்கை என்னும் வகைப்பட்ட துளசியை கிராமப்புறங்களில் பயிர் செய்து தோட்டம் அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி தமிழக அரசு மிகவும் அக்கறை கொண்டிருக்கிறது என்று கூறி, நல்ல வேளையாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாம்புக் கடியிலிருந்து தப்பியதற்காக இயற்கைக்கு நன்றி கூறுகிறேன்.

திருவண்ணாமலை—திருப்பதி பல்லவன் பேருந்துப்பணி.

* வினா எண் 502—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலையில் இருந்து வேலூர், சித்தூர் வழியாக திருப்பதி சென்று வந்த பல்லவன் பேருந்து சமீப காலமாக நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன?

(இ) பேருந்தை மீண்டும் இயங்கச் செய்ய அரசு எடுத்து உள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) ஆம்.

(ஆ) ஆந்திர மாநில நீதிமன்ற உத்தரவின் பேரில் இத்தடத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து இயக்கம் நிறுத்தப்பட்டது.

(இ) ஆந்திர மாநில உயர் நீதிமன்ற மறு உத்திரவின்படி 14-11-1980 முதல் இத்தடத்தில் மீண்டும் இக்கழக பேருந்து கள் இயக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, பொதுமக்கள் திருவண்ணாமலையிலிருந்து திருப் பதிக்கு சென்று வெங்கடாசலபதியை தரிசிக்க காலையிலிருந்து இரவு வரை வண்டிகள் போய் வந்துக் கொண்டிருந்தன. இடை யில் நிறுத்தப்பட்டு திரும்பவும் ஆரம்பிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் திருவண்ணாமலையிலிருந்து எந்த வண்டியும் திருப்பதிக்குச் செல்லவில்லை. சேலத்திலிருந்துதான் திருவண்ணாமலை வழி யாக திருப்பதிக்கு வண்டிகள் போகின்றன. அந்த வண்டிகளில் இந்தப் பகுதி மக்களுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, இந்தப் பகுதி மக்கள் பயன்படுத்த திருவண்ணாமலையிலிருந்தே திருப்பதிக்கு வண்டியை விட அரசு முயற்சி செய்து நடவடிக்கை எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்துதான் திருப் பதிக்கு பேருந்துகள் செல்வதாக என்னிடத்தில் தகவல் இருக்கி றது. அப்படித்தான் ஓடிக் கொண்டிருக்கிறது. நீதிமன்றத்தின் உத்தரவை பெற சில காலம் ஓடாமல் இருந்தது. இப்பொழுது ஓடிக் கொண்டிருக்கிறது. அப்படி அவர்கள் சொல்கிற மாதிரி திருவண்ணாமலையிலிருந்து செல்லவில்லை என்றால் மீண்டும் ஓட்டப்படும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே தனியார்களின் பேருந்து வண்டி கள் தான் சென்று கொண்டிருந்தன. அரசு பேருந்துகள், தங் களுக்குத் தான் அந்த பெர்மிட் வேண்டும் என்று கோர்ட்டுக்குச் சென்று வழக்காடி பெர்மிட் பெற்றிருக்கிறது. ஆந்திர மாநில நீதிமன்றம் அப்படி உத்தரவை இட்டிருக்கிறது. ஆனால் பிறகும் கூட திருப்பதிக்கு நேரிடையாக திருவண்ணாமலையிலிருந்து பேருந்துகள் செல்லவில்லை. சேலத்திலிருந்து திருவண்ணாமலை வழியாகத்தான் திருப்பதிக்குச் செல்ல வண்டிகள் இருக்கின்றன. அவைகளில் இந்தப் பகுதி மக்களுக்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், அவைகளை மீண்டும் பழையபடியே ஓட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. திருவேங்கடம் அவர்கள் சொல்லியபடி தனியார்களிடம் இருந்த வழித்தட உரிமையை திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கு மாற்றிய போது தனியார்கள் நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆந்திர மாநில உயர்நீதி



மன்றம் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திற்கே அந்த வழித்தடம் உரியது என்று தீர்ப்பளித்துவிட்டது. அதன்படி இடையில் நிறுத்தப்பட்டிருந்த போக்குவரத்துகள் மீண்டும் திரு வண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு திருவள்ளுவர் போக்கு வரத்துக் கழகத்தின் பேருந்துகள் செல்வதாகத்தான் செய்தி இருக்கிறது. திருவண்ணாமலையிலிருந்து அப்படிப் போக வில்லை என்பதுதான் அவருடைய குற்றச்சாட்டு. அப்படியிருந் தால் அதை நிவர்த்திக்க பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப் படும்.

திரு. ஏ. கி. சண்முகம் : பொதுவாக வட ஆற்காடு மாவட் டத்திலிருந்து திருப்பதிக்கு அதிகமான மக்கள் செல்கிறார்கள். காட்பாடி ரெயில்வே ஸ்டேஷனில் அதற்காக அரைமணி நேரம், ஒரு மணி நேரம் ஆயிரக்கணக்கான மக்கள் காத்துக் கொண்டி ருக்கிறார்கள். ஆகவே ரெயிலில் இடம் கிடைப்பதில்லை. எனவே இந்தக் குறையை போக்க ஆரணி, வேலூர், போளூர், திருவண்ணாமலையிலிருந்து கூடுதல் பேருந்துகள் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : அதுபற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : திருப்பதி ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. அதே போன்று மற்றொரு முக்கியமான இடமாக இருப்பது கன்னியாகுமரி. எனவே கன்னியாகுமரியில் இருந்து திருப்பதிக்கு நேரடியாகப் பஸ் விடப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : திருவண்ணாமலைக்கும் கன்னியாகுமரிக்கும் என்ன சம்பந்தம் என்று தெரியவில்லை. இருந்தாலும் இந்தக் கருத்தை மனதில் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

காஞ்சீபுரம்-திருச்சி விரைவுப் பேருந்துப் பணி.

*வினா எண் 503—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி சென்று கொண்டு இருந்த விரைவு வண்டி ஏன் நிறுத்தப்பட்டது?

(ஆ) மீண்டும் விரைவு வண்டி விடுவதற்கான மக்களின் கோரிக்கைமீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. முத்துசாமி : (அ) இத்தடத்தில் வருவாய் செலவிற்குக் கூட கட்டுமானதாக இல்லாததனால் இத்தடத்தில் பேருந்துகளின் இயக்கம் 1980-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி முதல் நிறுத்தப்பட்டது.

(ஆ) வேறு சில நகரங்களை இணைக்கும் வகையில் இத்தடத்தினை மாற்றி மீண்டும் விரைவுப் பேருந்துகளை இயக்குதல் குறித்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் பரிசீலித்து காஞ்சீபுரத்திலிருந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு இரண்டு பேருந்துகளை 1981ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் தேதி முதல் இயக்க முடிவு செய்துள்ளது.

**கால்நடை மருத்துவமனைகளில் சித்த மருத்துவ முறைகள்.**

*வினா எண் 505—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் சித்த வைத்திய முறைகள் செயல்படுத்தப்படுகிறதா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளிலும், மருந்தகங்களிலும் சித்த வைத்திய முறைகள் முழுமையாக செயல்படுத்தப்படுவதில்லை. எனினும் சித்த வைத்திய முறையில் தயாரிக்கப்பட்ட சில மருந்துகள் கால்நடை மருந்தகங்களில் உபயோகப்படுத்தப்படுகின்றன.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** கால்நடை துறையில் சித்த வைத்திய முறைகளைப் பயன்படுத்துவதினால் குறைவான செலவு ஏற்படும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லி அதையொட்டி அரசாணை பிறப்பிக்கப்பட்டு, சித்த வைத்திய முறையை கட்டாயமாக மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தும் அந்த முறை கிராமங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்கப்படவில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஐம்பது பைசாவில் சுக்கு வாங்கி உபயோகிப்பதை விட்டு நவீன முறையில் பெல்லிஸ் டிங்சர் பத்து ரூபாய்க்குள்ள மருந்தினைப் போடுகிறார்கள். ஆக சித்த வைத்திய முறையை மருத்துவமனைகளில் கடைப் பிடிக்க வேண்டும் என்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே கால்நடை மருத்துவமனைகளில் கட்டாயமாக சித்த வைத்திய முறைகளை அமல்படுத்த வேண்டும் என்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அரசாங்கம் பரிசீலிக்கும்.



**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** கால்நடை துறைக்குத் தேவையான மருந்துகளை சென்ட்ரலைஸ்ட் பர்சேஸ் ஸ்கீம் என்ற முறையில் வாங்குவதற்குப் பதிலாக சென்னையில் உள்ள மதறாஸ் டிப்போவில் வாங்குகிற முறையை மீண்டும் அமல்படுத்த உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** அரசு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சு. பாலன் :** வியாசர்பாடியைச் சுற்றியுள்ள எருக்கஞ்சேரி, புழலேரி போன்றவை தற்போது சென்னையோடு சேர்ந்து விட்ட காரணத்தால் அங்குள்ள கால்நடைகளுக்கு வியாதி ஏற்பட்டால் வேப்பேரிக்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே வியாசர்பாடியிலேயே இடம் இருக்கிற காரணத்தால் அங்கேயே ஒரு மருத்துவமனையை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

(பதில் இல்லை.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துணை வினா மூலக் கேள்வியையொட்டி இருக்கவேண்டும் வினாக்கள்— விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**3. ஒத்திவைப்புத் தீர்மானம்.**

**கர்நாடக மாநிலத்தில் அங்கு வாழும் தமிழர்களுக்கு எதிராக ஒட்டப்பெறும் சுவரொட்டிகள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் பொ. விஜயராகவன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ப. நெடுமாறன் ஆகியோர், ' சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் வாழும் தமிழர்களை அச்சுறுத்தும் விதத்தில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு தேசீய ஒருமைப் பாட்டிற்கு ஊறு விளைவிக்கும் விதத்தில் ஏற்பட்டிருப்பதாலும், தமிழர்களை சமுதாயப் புறக்கணிப்புச் செய்வோம் என்று அச்சுறுத்தும் வகையில் சுவரொட்டிகளும் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டிருப்பதாலும் அங்கு வாழும் தமிழர்களுக்குப் பீதியும் பாதுகாப்பற்றத் தன்மையும் ஏற்பட்டுள்ளதாலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை ' குறித்து விவாதிக்க

பேரவையின் நிகர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' 'என்ற தீர்மானத்தை ... முன்மொழிய என்னுடைய இசைவு கேட்டு ... அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச்சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் (திரு. பொ. விஜயராகவன்.)

*திரு. பொ. விஜயராகவன் : பேரவைத் தலைவர் அவர்களே சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் வாழ்கிற தமிழர்களையும் மலையாள மொழியைச் சேர்ந்தவர்களையும் மற்றவர்களையும் அச்சுறுத்துகிற வகையில் அங்கே சுவரொட்டிகள், ஒட்டியிருப்பது மட்டுமல்லாமல் துண்டுப் பிரசுரங்களையும் அங்கே வெளியிட்டிருக்கிறார்கள். கர்நாடக மாநிலத்தில் ஏறத்தாழ 30 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். பங்களூர் நகரத்தில் மட்டும் உள்ள மக்கள் தொகை 22 லட்சம். அதில் ஏறக்குறைய எட்டு லட்சத்திற்கும் மேற்பட்டு தமிழர்களும் மற்றவர்களும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-10.]

சமீபத்தில் கர்நாடகத்திலே வாழ்கின்ற மைனாரிட்டியினர் என்று சொல்லுகின்ற தமிழர்கள், மலையாளிகள் மீது அடுக்கடுக்காக அச்சுறுத்தல்களும் தாக்குதல் சம்பவங்களும் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதிலும் குறிப்பாக, சொல்ல வேண்டுமானால், அங்கே இருக்கின்ற கர்நாடக சாலிகா கட்சியைச் சார்ந்தவர்கள் இதைப்போல் செய்கிறார்கள். அவர்களுக்கு கன்னடத்தின் மீது இருக்கின்ற பற்றால் செய்கிறார்கள் என்றால், அதை எடுத்துக் கொள்ள முடியும். ஆனால், இதை யார் செய்கிறார்கள் என்று பார்த்தால், இன்றைக்கு இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாணவர்கள் இது போன்ற துண்டுப் பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் ஒட்டியிருக்கிறார்கள். உதாரணமாக, அங்கே வெளியிடப்பட்டிருக்கின்ற துண்டுப் பிரசுரத்தினுடைய ஒரு சில வரிகளை, அங்குள்ள இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாணவர்களால் வெளியிடப்பட்டுள்ள வாசகத்தைப் படிக்க ஏற்கனவே உங்கள் அனுமதியைப் பெற்றிருக்கிறேன். அது பாரதப் பிரதமருக்கு எழுதப்பட்ட கடிதமாகும். அதை இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாணவர் தலைவர் திரு. நாகபூஷண ஆராதியா எழுதிய கடிதம், துண்டுப் பிரசுரமாக வெளியிடப்பட்டிருக்கிறது. அதில்,

We dem nd your Ho ourable self to sent Tamilians and K ralites way from K r at ka......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருத்தை மட்டும் சொன்னால் போதும். முழுவதும் படிக்கத் தேவையில்லை. நோட்டீசைக் கொண்டு வந்து காட்டினீர்கள். அதற்கு என்ன ஆதாரம் என்பது தெரியாது.



திரு. பொ. விஜயராகவன் : முழுவதையும் படிக்கவில்லை. அதில் இருக்கின்ற முக்கியமான ஒரு பகுதியை மட்டும் படிக்க உங்கள் அனுமதியைக் கேட்கிறேன்.

We demand your Hon'ble self to send Tamilians and Keralites away from Karnataka as the heritage of our beloved K rnataka is at stake within one week fa ling wh ch the NSUI w ll stop water/lights/ rat on and social boycott of these anti-eocial elements and lock them up in their respective colonies at the cost of our l ves.

என்கின்ற அளவில், மிகவும் அச்சுறுத்தும் வகையில் இது போன்ற வார்த்தைகளை அவர்கள் எழுதியிருக்கிறார். அது மட்டுமல்ல. அதன் தொடர்பாக. எச்.ஏ.எல். காலனியில், ஐ.டி.ஐ. காலனியில் வாழ்கின்ற தமிழர்கள், மலையாளிகள் குடியிருப்பவர்களுக்கு ஒரு சில தினங்களாக தண்ணீர் கொடுக்கப்படவில்லை. ஒரு சில தினங்களாக மின்சாரம் வழங்கப்படவில்லை. தேசிய ஒருமைப்பாட்டிற்காக, தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவை அமைத்து, இன்றைக்கு மத்தியில் ஆளுகின்ற அரசு, அதே கட்சியைச் சார்ந்தவர்கள் அங்கம் வகிக்கின்ற கர்நாடக மாநிலத்தை ஆளுகின்ற தேசிய கட்சியைச் சார்ந்தவர்கள் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதினால் இந்த நாட்டின் தேசிய ஒருமைப்பாடு என்னவாகும் என்பதை நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அருமைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்ச்சிகள் இன்றைக்கு மட்டும் ஏற்பட்டதல்ல. இதற்கு முன்னாலும்கூட கர்நாடகத்திலேயே வாழ்கின்ற ஏறத்தாழ இரண்டு இலட்சம் கிறிஸ்துவர்கள்மீதும், அதுவும் குறிப்பாக கத்தோலிக்க கிறிஸ்துவர்கள்மீது அடுக்கடுக்காக பல தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. அதிலே பெரும்பான்மையாக 90 சதவிகிதத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழ் கிறிஸ்துவர்கள்மீது அடுக்கடுக்காக தாக்குதல்களும் அச்சுறுத்தலும் நடைபெற்று இருக்கின்றன. அங்கே இருக்கின்ற கிறிஸ்துவர்கள்மீது 1979ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8ஆம் தேதியிலிருந்து 1981ஆம் ஆண்டு மார்ச் மாதம் 1ஆம் தேதி வரையில் ஏறத்தாழ அடுக்கடுக்காக 15-க்கு மேற்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. குறிப்பாக, அதிலே தமிழர்கள்மீது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. பொ. விஜயராகவன்: இது மிக முக்கியமான விஷயம். இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு பங்கம் விளைவிக்கின்ற விஷயம் என்பதைத் தலைவர் அவர்கள் உணரவேண்டும். மேலும், அங்கேயிருக்கின்ற கிறிஸ்துவ மத குரு வீட்டிற்கு முன்னால், ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருக்கிறார்கள். பலவிதமான

தவறான வழிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.
வருத்தம் தெரிவித்து இங்கிருந்து ஒரு வார்த்தைகூட வரவில்லை. இதை எதிர்த்து
கேரள முதல்வர் இது குறித்து வருத்தம் தெரிவித்து, அந்த
அரசுக்கு எழுதி கேட்டிருக்கிறார்.
அங்கே நடந்தபிறகு தமிழக அரசின் சார்பில் இவ்வளவு நிகழ்ச்சிகள்
முதல்வர் சார்பில் இதுபற்றி ஒரு வார்த்தைகூட பேசப்பட தமிழக
வில்லை என்பதுதான் எனக்கிருக்கிற வருத்தம்.
முதல்வர் நயினார் வருந்தும் தெரிவித்து ஒரு கடிதம் எழுதி கேரள
யிருக்கிறார்கள். நாடாளுமன்றத்திலும் இதுபற்றி விவாதம்
நடைபெற்றிருக்கிறது. கேரள சட்டமன்றத்திலும் விவாதம்
நடைபெற்றிருக்கிறது. இவ்வளவு விவகாரங்கள் நடைபெற்ற
போதும் கூட, நம்முடைய அரசின் சார்பாக, அதிலும் உலகத்
தமிழ் மாநாடு நடத்திய தமிழக அரசின் சார்பிலே ஒரு
வார்த்தைகூட கேட்கவில்லை என்ற வருத்தம் எங்களுக்கு
ஏற்படுகிறது, இதுபோன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடை
பெறுமானால், இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த
மொழியைச் சேர்ந்தவர்களும், எந்த இனத்தைச் சேர்ந்தவர்
களும் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழவோ, தொழில்
நடத்தவோ முடியாத நிலைமை ஏற்படும். இன்று தடை
செய்கின்ற செயல்கள் அங்கே நடைபெற்றுக்கொண்டிருக்
கின்றன. அது தடுத்து நிறுத்தப்பட வேண்டிய விஷயம்.

இது மிக முக்கியமான விஷயம். இது குறித்து இந்த அவையின் மூலமாக தீர்மானம் ஒன்றினை போட்டு, அதை மத்திய அரசாங்கத்திற்கும், கர்நாடக அரசாங்கத்திற்கும் அனுப்பக் கோரி, இன்னும் விவாதிக்க இதுபோன்ற பல முக்கியமான பிரச்சினைகள் இருக்கின்றன. சுருக்கமாக சொல்லவேண்டும் என்ற காரணத்தால் எல்லாவற்றையும் சொல்லமுடிய வில்லை. ஆகவே முக்கியமான விஷயம் என்பதால் இந்த அவையின் அலுவல்களை ஒத்திவைத்து இது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய ஒருமைப்பாட்டிற்கே வெடி வைக்கக்கூடிய ஒரு நிலைமை உருவாகி இருக்கிறது, தேசிய நீரோட்டத்திற்கு நாங்கள்தான் மொத்த குத்தகை எடுத்தவர்கள் என்று பேசுகிற இந்திரா காங்கிரஸ்காரர்களால் இப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சி ஏற்படுத்தப்பட்டு இருப்பதை அறிந்து வேதனையாக உள்ளது (குறுக்கீடு) (கூச்சல், குழப்பம்)........

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எதற்காக ஒத்தி வைக்கவேண்டும் என்பதற்கான காரணத்தைச் சொல்லட்டும், பொது மேடையிலே பேசுவதைப் போல பேச வேண்டாம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதத்தில் எந்த விதமாகவும் சொல்லலாம். இங்கே இருக்கிற காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஆட்சேபிக்காத முறையில் பேசுங்கள்.

**திரு. ரா. கிருஷ்ணன் :** பேரவைத் தலைவரவர்களே, அரசியல் அமைப்புச சட்டத்தின்படி. All Citizens shall have the right to move freely through-out the territory of India to reside and settle in any part of territtory of India. என்ற ஒரு அடிப்படை இருக்கிறது. இந்த அடிப்படையில் தான் பெங்களூரில் பல தொழிற்சாலைகளிலும் சிக்மகளூரில் தேயிலைத் தோட்டங்களிலும் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும்: கேரளத்தைச் சேர்ந்தவர்களும் பணியாற்றி வருகிறார்கள். இப்படி எல்லா பகுதிகளுக்கும் போவதற்கும் உரிமை இருக்கிறது. உரிமைகளை கட்டுப்படுத்துகிற முறையிலே ''வால்-போஸ்டர்கள்'', ''நோட்டீஸ்கள்'', ஒட்டப்பட்டிருக்கின்றன. இது ஏதோ தன்னிச்சையாக இன்றைக்கு வந்து விட்டதாக நினைக்க வேண்டாம். ''சன்ஸ் ஆப் தி சாயில்'' அவர்களுக்குத் தான் வேலை வாய்ப்பு என்று கர்நாடகத்து முதலமைச்சர் திரு குண்டு ராவ் அவர்கள் வெளிப்படையாகப் பேசிய காரணத்தால்தான் அதனுடைய தொடர்ச்சிதான் இது என்பதை நான் இங்கே சுட்டி காட்ட விரும்புகிறேன். இந்த நிலைமை தொடருமேயானால், இன்றைக்கு அஸ்ஸாமில் நடக்கக்கூடிய நிலைமை என்ன '' இன்டியன் டாக்ஸ் கெட் அவுட் '' இந்திய நாய்களே வெளியேறுங்கள் என்று சொல்லக்கூடிய அளவிற்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கர்நாடகத்தில் சொல்லப் பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள். இன்னொரு மாநில முதல் அமைச்சர் பெயரைச் சொல்லி இந்த அவையில் பிரச்சினையை எழுப்ப வேண்டாம்.

**திரு. என். சங்கரய்யா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கர்நாடகத்தின் முதலமச்சர் அவர்கள் சொன்னார் என்பது பல பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. யாரும் அதை மறுப்பதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவையிலே இன்னொரு மாநில முதலமைச்சரின் பெயரைச் சொல்லி, அதனால்..

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த அவையிலே கேரளத்து முதலமைச்சர் பெயரை
எத்தனையோ முறை சொல்லி இருக்கிறார்கள். They have men-
tioned the name of Thiru E.K. Nayanar. We have got the right.

திரு. என். சங்கரய்யா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்பு ஒரு விஷயத்திலே எரி சாராயப் பிரச்சனை
யிலே கேரளத்து முதலமச்சர் அவர்களின் பெயரை இங்கே
இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் எத்தனையோ முறை
உபயோகப்படுத்தி இருக்கிறார்கள். . அது பதிவேட்டிலும்
பதிவு செய்யப்பட்டிருப்பதை உங்களின் கவனத்திற்கு
கொண்டு வருகிறேன். உண்மையா, இல்லையா என்பது
தான் பிரச்சினை. மாண்புமிகு குண்டுராவ் அவர்கள்
சொல்லவில்லை ஏன்று சொல்லட்டும். அப்படியில்லை
என்றால் இதை மறுப்பதற்கு என்ன ஆதாரம் என்பதை கேட்க
விரும்புகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாநில முதல் அமைச்சர் அவர்களின் உரிமையை
மீறி நடந்திருக்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின்
ஆர்ட்டிகிள் 14 என்ன சொல்கிறது என்றால்
The State shall not deny to any person equality before the law or
equal protection of the laws within the territory of India. (Art-14).

ஆக ''புரோட்டக்ஷன்'' கொடுக்கவேண்டியது பொறுப்பு. அந்த
பொறுப்பையும், கடமையையும் மீறி இப்படிப்பட்ட ''ஸ்டேட்
மென்ட்'' விடப்பட்டதின் விளைவு தான் இந்த நிகழ்ச்சி.
அதுமட்டுமல்ல தலைவர் அவர்களே, ஏற்கனவே, மகாராஷ்டி
ரத்தில் நடக்கக்கூடிய இனவெறி சிவசேனை என்ற அமைப்பு
இருக்கிறது. அதன் கூட்டத்திலேயே அந்த மாநிலத்தின்
முதலமைச்சர் திரு அந்துலே அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

[முற்பகல் 10-20]

இந்திய நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கே வேட்டு வைக்
கக்கூடிய போக்கு தொடர்ச்சியாக நடந்து கொண்டிருப்பது
மட்டுமல்ல, குறிப்பாக பெங்களூரிலும் (குறுக்கீடு) பம்பாய்
போன்ற நகரங்களிலும் வாழக்கூடிய தமிழர்களுக்குப் பாது
காப்பு இல்லாமல் அரசியலமைப்புச் சட்டத்திற்கு விரோதமாக
இப்படிப்பட்ட நடவடிக்கைகள் தொடருமானால் இந்தியா
வினுடைய ஒருமைப்பாடு என்னாவது என்ற கேள்விக்குறி
இருக்கிறது. அசாமினுடைய படிப்பினை நமக்குத் தெரியும்.



அப்படி இருந்தாலும் காங்கிரஸினுடைய பொறுப்பாளர்கள்
அதைப்பற்றி அக்கறை கொள்ளாமல் இருப்பது வேதனைக்கு
உரியது. இந்த மன்றத்திலே ஏகமனதாக ஒரு தீர்மானத்தை
நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பவேண்டும். தமிழ்
மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டிய பொறுப்பு நமக்கு
இருக்கிறது. இது முக்கியமான பிரச்சினையாக இருப்பதால்
இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து
விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவர் அவர்களே, ஒரு
முக்கியமான பிரச்சினைபற்றி இப்போது ஒத்திவைப்புத்
தீர்மானத்தை எல்லோரும் சேர்ந்து கொடுத்திருக்கிறோம்,
இந்தப் பிரச்சினைப்பற்றி நான் பேசுவதற்கு முன்னாலே
இந்தியன் என்ற ஒரு உணர்வோடும், இமயம் முதல் குமரி வரை
வாழக்கூடிய அத்தனை கோடி மக்களும் ஒரு தாய் வயிற்றில்
பிறந்த மக்கள் என்ற உணர்வோடும், நான் ஒரு தேசியவாதி
என்ற உணர்வோடும் இந்தப் பிரச்சினையை நான் அணுகுகிறேன்.
அண்மையிலே கர்நாடக மாநிலத்திலே ஏற்பட்டிருக்கின்ற அசம்
பாவித நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணம் அந்த மாநிலத்
தில் முதல்வராக இருக்கக்கூடிய என்னுடைய அருமை
நண்பர் திரு குண்டுராவ் அவர்கள் சில மாதங்களுக்கு
முன்னாலே ''சன்ஸ் ஆப் தி சாயில்'' மண்ணின் மைந்தர்கள்''
என்ற கோஷத்தை வைத்தார்கள். அதன் விளைவாக அங்கே
வாழுகின்ற தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் எதிராக
இனவெறியும் மொழிவெறியும் அவிழ்த்துவிடப்பட்டு இருக்கின்றன.
பெங்களூர் நகரத்திலே உள்ள மத்திய அரசாங்கத்தைச் சார்ந்த
தொழிற்சாலையிலே வேலை பார்க்கிறவர்கள் குறிப்பாக தமிழர்கள்
மலையாளிகள் மட்டுமல்ல, எல்லா மொழிகளைச் சேர்ந்தவர்
களும் அங்கே இருக்கிறார்கள். ஆனால் அதிகமானவர்கள்
தமிழ்நாட்டிலே இருந்தும் மலையாளத்திலிருந்தும் சென்றவர்
கள்தான். அவர்கள் அங்கே அவர்களுடைய நியாயமான
கோரிக்கைகளுக்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.
ஆனால் அந்தப் போராட்டத்தை உடைப்பதற்காக தொழிலா
ளர்களுக்கு மத்தியிலே இன வெறியின் அடிப்படையிலே மொழி
வெறியின் அடிப்படையிலே பிரித்தாளும் சூழ்ச்சி செய்து
தொழிலாளர் வர்க்கத்தின் போராட்டத்தை உடைப்பதற்
காக காங்கிரஸ் நண்பர்கள் அங்கே சுவரொட்டியை ஒட்டி
அதன் மூலமாக ஒரு பதட்டமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.
அதன் விளைவாக தமிழர்கள் மத்தியிலே ஒரு பதட்டமான
நிலை உருவாகி இருப்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக்
கொண்டுவருகிறேன். அண்டை மாநிலமான கர்நாடகத்
திற்கும் நமக்கும் நீண்டநாள் தொடர்பு இருந்துவருகிறது.
அங்கே உள்ள கோலார் தங்கச்சுரங்கத்தை வெட்டியெடுக்கின்ற
மகத்தான பணியைச் செய்தவர்கள் தமிழர்கள். மலைத்
தோட்டங்களை செம்மைபடுத்தி தேயிலை, காபி போன்ற
வற்றை உற்பத்திசெய்து குவித்துக்கொண்டிருக்கின்றவர்கள்

தமிழ் தொழிலாளர்கள்.
உணர்வுடன் அங்கே தமிழர்கள் சகோதர
கன்னடியர்களும் இருந்து வருகிறார்கள். தமிழ் மக்களும்
பாராட்டி வாழ்ந்து பல ஆண்டுக்காலமாக சகோதரத்துவம்
தையும் தெலுங்கையும் வருகிறார்கள். இதே அவையிலே கன்னடத்
இருக்கிறார்கள். தாய்மொழியாகக் கொண்டவர்கள்
தெடுக்கப்பட்டு அவர்கள் தமிழ் மாநில மக்களால் தேர்ந்
என்ற அவர்களும் தமிழ் மண்ணின் மைந்தர்கள்
ணின் உணர்வோடு நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். மண்
இருக்கிறார்களோ மைந்தர்கள் என்பது எந்த மாநிலத்திலே இறுதிவரை
தான். அவர்கள் எல்லாம் மண்ணின் மைந்தர்கள்
விளைவாக கர்நாடகத்திலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையின்
என்பதை நான் இந்திய ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்பட்டு இருக்கிறது
மராட்டியத்திலே........ சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கர்நாடகத்திலே இருப்பது
பற்றிப் பேசுங்கள். மகாராஷ்டிரத்திற்குப் போக வேண்டாம்.

திரு. ப. நெடுமாறன் : கன்னடியர்களுக்கு எதிராக கிளர்ச்
சியை நடத்தி கன்னடியர்களுடைய சொத்துக்களுக்கும்
பொருட்களுக்கும் சேதம் ஏற்படுத்தி அதற்காக போதிய
நட்ட ஈடு கொடுக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு கர்நாடக
முதல்வர் திரு குண்டுராவ் அவர்கள் எழுதியிருக்கிறார்கள்.
அது எந்த வகையிலே நியாயம் என்ற உணர்வோடு அவர் எழுதி
யிருக்கிறாரோ அதே நியாய உணர்வோடு நான் அவரைப்
பார்த்துக் கேட்கிறேன். இன்றைக்கு பெங்களூரில் இருக்கக்
கூடிய தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய அந்த நஷ்டங்
களுக்கு, சேதங்களுக்கு, அவர்கள் அங்கே அபாயமில்லாமல்
வாழக்கூடிய நிலைமைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய குந்தகத்திற்கு
பாதுகாப்பு கொடுக்க வேண்டிய பொறுப்பு கர்நாடக
மாநில அரசுக்கு உண்டு. அவர்கள் எப்படி அண்டை மாநில
மான மகாராஷ்டிரத்தில் வாழும் அவர்களது மாநில மக்களைப்
பாதுகாக்க வேண்டுமென்று துடிக்கிறார்களோ அதே உணர்வு
இந்தத் தமிழகச் சட்டப் பேரவையிலுள்ள அத்தனை பேர்
களுக்கும் இருக்கிறது என்பதை கர்நாடக முதலமைச்சருக்கும்,
மத்திய அரசுக்கும் தெரியப்படுத்தும் பணியினை நம்முடைய
முதலமைச்சரவர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். அதிலே
அவர்கள் உறுதியாக இருக்க வேண்டும். நம்முடைய உணர்வு
களை அவர்களுக்குத் தெரிவித்தாக வேண்டும். அண்டை
மாநிலங்களில் வாழ்கின்ற தமிழ் சமுதாயத்திற்கு ஏற்பட்டிருக்கக்
கூடிய அபாயத்தினைத் தவிர்ப்பதற்காக இந்த அரசு முழு முயற்சி
களை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வினை இங்கே
விவாதிப்பதற்காக இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி
வைக்க வேண்டுமென்று நான் இங்கே விரும்பி வேண்டிக் கேட்டுக்
கொள்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, கர்நாடக மாநிலத்தில் நடைபெற்ற
இந்த நிகழ்ச்சி தமிழர்கள் அனைவருக்கும் கவலை தருகின்ற
ஒரு நிகழ்ச்சி என்பதை மன்ற உறுப்பினர்கள் ஒத்தி வைப்புத்
தீர்மானத்தைக் கொண்டு வந்து பேசுகின்ற முறையில் எடுத்துத்
தெரிவித்திருக்கின்றார்கள். இது மிகக் கவலை தருகின்ற ஒன்
றாக இருப்பதாலே அங்கே வாழுகின்ற தமிழர்களுக்கு நாம்
பாதுகாப்பு தேட வேண்டிய எல்லா முயற்சிகளிலேயும் ஈடுபட
வேண்டியவர்களாக இருக்கிறோம். அது போல அங்கே வாழு
கின்ற மலையாளிகளுக்கு எல்லா பாதுகாப்பும் தேடுகின்ற
அத்தகைய முயற்சியில் கேரள அரசும் ஈடுபட்டிருக்கிறது.

இப்பொருள் பற்றி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது.
விவாதத்தின் போது, திரு. யோகேந்திர மக்வானா, உள்துறை
மாநில அமைச்சர் அவர்கள், சிறுபான்மையோருக்கு எதிராக
போஸ்டர்கள் ஒட்டியிருக்கும் சமூக விரோத சக்திகள் கடுமை
யாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்றும், இது குறித்து, சம்பந்தப்
பட்ட மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் ஏற்றுள்ளன,
இனியும் தொடர்ந்து எடுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.
மேலும், கர்நாடக சட்டசபையின் அவைத் தலைவர் இது குறித்து
யாரும் அரசுக்கு முறையீடு செய்யவில்லை என்றும், எனினும்
சம்பந்தப்பட்டவர்களைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்
படும் என்றும் கர்நாடக சட்டசபையில் உறுதியளித்துள்ளார்.
தவிர, கர்நாடக அரசு, காவல் துறையில் இது குறித்து ஒரு
வழக்கு பதிவு செய்து, புலனாய்வு நடத்து வருகிறது என்றும்
அவர் தெரிவித்துள்ளார். கர்நாடக நிதியமைச்சரும், கர்நாடக
சட்டசபையில் போலீசார் இது குறித்து, புலன் விசாரணை
நடத்தி வருகிறார்கள் என்றும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்
படும் என்றும் கூறியுள்ளார். மொழிவாரி சிறுபான்மையினரையும்
மற்ற சிறுபான்மையினரையும் பாதுகாக்க அரசு கடமைப்பட்
டுள்ளது என்றும், அது விஷயமாக அச்சம் வேண்டாம் என்றும்,
பிரசுரங்களை வெளியிட்டவர்கள் மீது, நடவடிக்கை எடுக்கப்படும்
என்றும் அவர் கூறியுள்ளார்.

மேலே கூறியுள்ளவாறு கர்நாடகத்தில் தமிழர்களை அச்
சுறுத்தும் வகையில், போஸ்டர்கள் ஒட்டியிருப்பது குறித்து,
ஏற்கனவே நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டு கர்நாடக
அரசும் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. இனி இவ்வாறு
நேராமல், தடுக்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.
தவிர, பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்படுவது குறித்து, புகார்
கள் ஏதும் இந்த அரசுக்கு வரவில்லை, எனினும் நிலைமையை
அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது.

ஆகவே, அங்கே வாழுகின்ற தமிழர்களுக்குப் பாதுகாப்பு
தருகின்ற அத்தகைய முயற்சியிலே ஈடுபடுவதாக அரசும் தெரி
வித்திருக்கிறது ; மத்திய அரசும் தெரிவித்திருக்கிறது.

இந்த நோட்டீஸ் வெளியிட்டது.

In the name of the President of the State Unit of National
Students Uniton of Ind a.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் வெளி
யிட்டது அங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரசினருக்கோ அல்லது
அங்கேயிருக்கின்ற அரசுக்கோ கூடத் தெரியாமல் இருந்தாலும்
இருக்கலாம். ஆனாலும் அதை யார் செய்திருந்தாலும் கூட
தண்டிக்கப்பட வேண்டிய ஒன்றுதான். நாம் எவ்வளவு கண்டிக்
கிறோமோ அந்த அளவிற்கு அங்கே இருக்கின்ற மாநில அரசும்,
அங்கே இருக்கின்ற இந்திரா காங்கிரசினரும் கண்டிக்கக் கடமைப்
பட்டிருக்கிறார்கள். மாநில அரசு அதற்கான நடவடிக்கை
எடுப்போம் என்றும், ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது
என்றும், அதற்கான புலன் விசாரணை நடை பெற்றுக் கொண்
டிருக்கிறது என்ற காரணத்தினாலே, நாம் அதன் மீது நம்பிக்கை
வைத்து. அந்தத் தன்மையிலே நடவடிக்கை எடுப்பார்கள் என்று
நாம் கருதுகிறோம்.

ஆனால், இது சாதாரணமான பிரச்சினை அல்ல. ஒரு சில
தீய சக்திகள் இப்படிப்பட்ட முயற்சிகளுக்குத் தொடர்ந்து
வித்தூன்றி வருகின்றன என்பதையும், அது அவ்வப்போது
தணிக்கப்பட்டு மீண்டும் தலை தூக்கி வருகின்றன
என்பதையும் நாம் கண்டு வருகிறோம். இத்தகைய நிலைமைகள்
ஏற்படாத அளவிற்குப் பாதுகாப்பு வேண்டுமென்கின்ற உணர்வு
எல்லோருக்குமே இருக்கிறது.

ஒன்றை மட்டும் நாம் நன்றாக உணர்கிறோம். அங்கே
வாழ்கின்ற தமிழர்களுக்கும், அங்கே வாழ்கின்ற கன்னடியர்
களுக்கும் இடையிலே எந்தவிதமான மனமாச்சரியமோ,
பேதமோ இல்லை. மக்களைப் பொறுத்தவரையிலே நல்ல
உறவு முறையிலே பழகிக் கொண்டு வருகிறார்கள். தமிழகத்திலே
இருக்கின்ற கன்னடியர்களும், தமிழகத்திலே இருக்கின்ற தமிழர்
களும் எவ்வளவு நட்புறவு முறையிலே பணிகளையெல்லாம்
இங்கே ஆற்றிக் கொண்டு வருகிறோமோ அங்கேயும் அப்படிப்
பட்ட நிலைமையில் மக்கள் என்று எடுத்துக் கொள்கின்றபொழுது
கன்னட மக்களுக்கும் தமிழக மக்களுக்கும், அல்லது கன்னட
மக்களுக்கும் மலையாளிகளுக்குமோ எத்தகைய மனமாச்சரி
மும் இருப்பதாகத் தெரியவில்லை.





(முற்பகல் 10-30)

ஆனால், ஒரு குறிப்பிட்ட தீய சக்தி அப்படிப்பட்ட பணிகளிலே
ஈடுபட்டு வருகிறது. அந்தச் சக்தியைக் கடுமையான நடவடிக்கை
யின் மூலமாக தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு மாநில
அரசுக்கு இருக்கிறது. அதனை மீறுகின்ற வகையில் மத்திய
அரசுக்கும் அத்தகைய நிலைமைகள் இருக்கின்றன, ஒருமைப்
பாட்டைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு இருப்பதன் காரண
மாக மத்திய அரசும் அது குறித்து விசாரிப்பதன் காரணமாகவும்
அங்கே இருக்கிற மாநில அரசு அது பற்றி விசாரிக்கிறோம்
என்று எடுத்துக் கூறியதன் காரணமாகவும், அது மேலும்
கவனிக்கப்படும் என்றும் நாம் கருதுகிறோம்.

அது மட்டுமல்ல, இந்த மன்றத்திலே உறுப்பினர்கள் தெரி
வித்திருக்கிற கருத்துக்களின் அடிப்படையில் தமிழக அரசும்
தமிழக சட்ட மன்றமும், தமிழக சட்டமன்றத்திலேயிருக்கிற
உறுப்பினர்களும் எந்த உணர்ச்சி கொண்டிருக்கிறார்கள் என்ற
கருத்தினை மாண்புமிகு முதலமைச்சர், கர்நாடக மாநில முதல்
வருடைய கவனத்திற்கும், இந்தியாவினுடைய தலைமை
அமைச்சர் இந்திரா காந்தியினுடைய கவனத்திற்கும் கொண்டு
வர இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. ஆகவே, அந்த உணர்வை
நாம் வெளிப்படுத்துவோம். ஆனால், சுமுகமான உணர்வு
தொடர்ந்து நீடிக்க வேண்டும். ஆனால், இதன் காரணமாக
அது மேலும் மாச்சரியத்திற்கு இடம் அளித்து அங்கே வாழ்கிற
தமிழர்களுக்கு, அங்கே வாழ்கிற மலையாளிகளுக்கு மேலும் கேடு
ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்
கிறது. ஆகவேதான் தீய சக்திகளைக் கண்டிக்கின்ற வகையிலும்,
அதை அடக்கி ஒடுக்குகின்ற முறையிலும் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்கிற அந்த உணர்வை நாம்எண்ணுகின்ற நியாயமான
உணர்வை, நமக்குக் கவலைதருகின்ற அந்த உணர்வை அந்தமாநில
த்தினுடைய முதலமைச்சருக்கும், இந்தியத் தலைமை அமைச்சருக்
கும், இந்த உணர்வு ஏற்பட்டபிறகு, மீண்டும் தெரியப்படுத்துவோம்.
ஏற்கனவே மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அது பற்றிய
கருத்தினைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்தில்
வந்து விட்டதன் காரணமாக, இந்தச் சட்டமன்ற உணர்வுகளைத்
தெரிவிக்க அரசு ஆயத்தமாக இருக்கிறது என்பதை நான் தெரி
வித்து, இது குறித்து விவாதிக்க, அவையின் இதர அலுவல்களை
ஒத்தி வைக்கத் தேவையில்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை
முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்
களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை
யில்லையென்பதால் இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

ஆ. கூடுதல் மானியக் கோரிக்கைகள்—1980–81 (ஆ.தி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1980–81 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்கான கோரிக்கைகளைப் பேரவையில் மொழிவது குறித்து, ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றிருக்கிறது :

In pursu nce of Article 203, Cl use (3) of the Constitution of India, I, Sdq Ali, Governor of T mil N du, hereby give my recommend tion to the mov ng in the T mil N du L gsl tive Assembly of the D m nds for further gr nts for the year 1980-81.

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, தங்களிடத்தில் நான் அண்ணா பத்திரிக்கை மீது உரிமைப் பிரச்னை அறிவிக்கை கொடுத்து நெடு நட்கள் கிவிட்டது. போன தொடர் கூட்டத்திலேயே அதைக் கொடுத்தேன். அது என்ன வருமா, வராதா ? (குறுக்கீடு) நான் இங்கேயும் கேட்கிறேன், அறையிலும் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அது பற்றி கவனித்துச் சொல்கிறேன்.

திருமதி டி. யசோதா : மதுராந்தகம் ஞானசுந்தரி மரணம் பற்றி முன்பே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்தேன். அதை இன்றைக்கு எடுத்துக் கொள்வதாகப் பேரவைத் தலைவர் கூறினார். ஏன் இன்றே எடுத்துக் கொள்ளவில்லை ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. பதில் வந்த பிறகுதான் எடுத்துக் கொள்ளமுடியும்.

திருமதி டி. யசோதா : அரசு பதில் இல்லையென்றாலும் அது ஒரு சமுதாயத்துப் பிரச்சினை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். பேரவை விதிமுறைகளையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் (கூச்சல், குழப்பம்).

திரு. என். எஸ். வி. சித்தன் : நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு என்று 'கமிட்' பண்ண முடியாது. பதில் வந்தவுடன் சொல்லுவேன். அப்பொழுது பேசலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நிதி வேண்டும். (சிரிப்பு.)

திரு. துரைமுருகன் : அங்கே நீதி வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நீதியும் கிடைக்கும். நிதியும் வேண்டும்.

6. இறுதித் துணை நிதி அறிக்கை 1980–81

(விவாதம்—வாக்கெடுப்பு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1980–81 ஆம் ஆண்டுக்கான இறுதித் துணை நிதி அறிக்கையின் மீது பொது விவாதமும் மற்றும் ஆண்டில் கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : "1980–81 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-3-1981-ஆம் நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரிலேயே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு 1980–81-ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்காக அரசுக்கு வழங்கப் பெறப்படாத தொகைகள் அந்தந்த இனங்களுக்கு வழங்கப் பெற வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள் என்றாலும், அவற்றை முன்மொழிய வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், 1981–82 ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை விவாதத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவும் இதிலே இருக்கிற தலைப்புகள் பெரும்பாலும் அதிலேயும் இருக்கிற காரணத்தாலும், இதிலே விரிவாக எடுத்துச் சொல்லுகின்ற கருத்துக்களுக்கு இந்த அவையிலே பொது விவாதத்திலே பதில் சொல்லுகின்ற வாய்ப்பு இருப்பதன் காரணமாகவும் இப்போது அதுபற்றி பேச வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

ஆனால் ஒன்றை மட்டும் நான் கூறக் கடமைப் பட்டிருக்கி றேன். வெட்டுத் தீர்மானங்களிலே குறிப்பிட்டிருக்கிற கொள்கை பிரச்சினைப் பற்றி இந்த விவாதத்திலே பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதிலே, குறிப்பிட்ட சில பல கருத்துக்களைக் கூறி இருக்கிறார்கள். அந்த குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கி கருத்துக்களை அந்தந்தத் துறையினர் கவனத்திற்குக் கொண்டு வந்து அதன் மேல் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொள்ளும் என்பதை மட்டும் இப்போது நான் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் பின்வாங்கிக் கொள்வார்களேயானால் இது விரைவிலே நிறைவேற்றப்படவும், விவாதம் தொடர்ந்து நடப்பதற்கான வாய்ப்பும் ஏற்படும் என்று கூறி இதை நான் மொழிகிறேன்.

*திரு. துரைமுருகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 1980–81 ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் என்ற பெயரில் சுமார் 458 கோடி ரூபாய்க்கு இந்த மன்றத்தில் ஒப்பு தலுக்கு வைத்திருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு பட்ஜெட் போடப்பட்டு அதனுடைய ஒப்புதலும், காத்துக் கொண்டிருக் கிறது. அதற்கு இடையில் இப்படிப்பட்ட, சுமார் 458 கோடி ரூபாய் என்று சொல்லுவது, ஒரு பட்ஜெட்டையே மிஞ்சக்கூடிய அளவுக்கு இந்த மன்றத்திலே வைக்கப்பட்டிருப்பதற்கு நான் உள்ளபடியே வருத்தப்படுகிறேன். இதிலே 210 கோடி ரூபாய் வரு வாய் கணக்கிலும், மீதமுள்ள 248 கோடி ரூபாய் மூலதனக் கணக் கிலும், இவ்வளவு பணங்கள் ஒதுக்கி இருக்கிறார்கள். இந்தப் பணங்கள் எங்கே போயிருக்கிறது என்று பார்த்தால், குறிப்பாக இந்தத் துணை மானியக் கோரிக்கையில் கிட்டத்தட்ட பெரும் பகுதியான பணங்கள் நம்முடைய எலெக்ரிசிடி போர்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். மற்றவர்களுக்கு லட்சக் கணக்கில் ஒதுக்க பட்டிருக்கிறது. வருவாய் 210 கோடி ரூபாயில் எலெக்ரிசிடி போர் டுக்கு 86 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. கேப்பிடல் 248 கோடி ரூபாயில் மற்ற இலாக்காக்களுக்கு லட்சக் கணக்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இதற்கு மட்டும் சுமார் 90 கோடி ரூபாய்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். இதுவரையிலே பெரும் பகுதி இந்த எலெக்ரிசிடி போர்டுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒன்றை நான் இந்த மன்றத்திற்குச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையில் இந்த எலெக்ரிசிடி போர்டுக்காக எவ்வளவு பணத்தைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்.







நாட்டிலே பதுங்கியிருக்கிற கள்ளப்பணத்தைக் கூட துப் பறிந்து பெருமளவுக்குக் கண்டுபிடித்துவிட முடியும். ஆனால், தலைவர் அவர்களே, நானும் கடந்த ஒரு வாரமாக இந்த பட்ஜெட்டைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறேன். அங்கே 'கொஞ்சம் ஒளிந்து இருக்கிறது இங்கே கொஞ்சம் ஒளிந்து இருக்கிறது. எவ்வளவு பணங்கள் என்று பார்த்தால் இன்னும் என்னாலே கண்டுபிடிக்க முடியவில்லை. 1980–81-லே திருத்திய மதிப்பீடு $22\frac{1}{2}$ கோடி எலெக்ரிசிடி போர்டுக்கு. 1981–82-லே கடன் வழங்கியது $73\frac{1}{2}$ கோடி. ஆக மொத்தம் 96 கோடி ரூபாய்., அதே போன்று 81–82-லே ரெவின்யூ அக்கவுண்டிலே 30 கோடி ரூபாய். 1981–82-லே கடன் 70 கோடி ரூபாய். ஆகவே, மொத்தம் 100 கோடி ரூபாய்கள்.

(முற்பகல் 10–40)

ஏற்கனவே சென்ற ஆண்டில் கிட்டத்தட்ட $95\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுவரையில் கொடுக்கப்பட்டதைக் கணக்கெடுத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட 186 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கம் மின்சார வாரியத் திற்குச் செய்யப்பட்டிருக்கிறது. மேலும், வாட்டர் அண்டு பவர் டெவலப்மெண்ட் என்ற பெயரில் 91 கோடி ரூபாய் அளிக்கப் படுகிறது. அது எங்கே போகிறது என்று பார்த்தால் அதுவும் மின்சார வாரியத்திற்குத்தான் போகிறது. அது எப்படிப் போ கிறது என்றால், அதாவது இந்த 91 கோடி ரூபாய், 1977–78 ஆம் ஆண்டின் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்காகத்தான் இந்த இலாக்காவிற்குப் போகிறது. ஆகவே, 1977–78 ஆம் ஆண்டுப் பற்றாக்குறையைச் சரிக்கட்டுவதற்கு இந்த 91 கோடி ரூபாய் என்று சொன்னால் 1978–79-ல் ஏற்பட்டிருக்கக்கூடிய பற்றாக் குறைக்கு இன்னும் எவ்வளவு பணம் தரப்போகிறீர்கள் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இந்த ஆண்டு பட்ஜெட்டில் கூட 100 கோடி ரூபாய் கடன் கொடுத்து இருக்கிறீர்கள். ஆக, 186 பிளஸ் 100 சேர்த் தால் 286 ஆகிறது. இது அன்னியில், 500 கோடி ரூபாய் அதற்குக் கடன் கொடுத்து இருக்கிறீர்கள். இந்த நிலைமையில் இந்த எலெக்ரிசிடி போர்டு எப்படி இருக்கிறது என்று சொன்னால்— நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட் உரையில் சொல்லியிருக்கிறார்கள் " தற்போது மின்சார வாரியத்திற்குக் கிடைத்து வரும் வருவாய் நடைமுறைச் செலவுக்குக் கூட போது மானதாக இல்லை. பராமரிப்புச் செலவு, வெளி நிறுவனங்களிட மிருந்து பெற்றுள்ள கடன்களின் உரிய தவணைத் தொகை, வட்டி ஆகிய செலவுக்கு அரசு நிதி உதவி அளிக்க வேண்டிய நிலையில் வாரியம் இருக்கிறது. அரசிடம் இருந்து கிடைக்கும் உதவியாக 100 கோடி ரூபாயைக் கணக்கில் கொண்ட பிறகும் மின்சார வாரியத்தின் ஆண்டுத் திட்டச் செலவான ரூபாய் 169.59

கோடிக்கு, ரூபாய் 89.31 கோடி அளவில் பற்றாக்குறை இருக்கும்.' ஆகவே, இந்த எலெக்ரிசிடி போர்ட்டில் 89 கோடி ரூபாய் பற்றாக் குறை வருகிறது. ஏற்கனவே 122 கோடி. இதையும் சேர்த்தால் இந்த ஆண்டு பட்ஜெட்டில் 200 கோடி ரூபாய் அளவிற்கு துண்டு விழும் பட்ஜெட்டாகத்தான் இந்த ஆண்டு நிதிநிலை அமையப் போகிறது. இவ்வளவையும் பார்த்துவிட்டு, இன்னொன்றையும் பார்த்தேன்.

சப்ளிமெண்டரி பட்ஜெட் குறிப்பில் பார்த்தால் பக்கம் 64 (ஆங்கிலம்) 'லோன்ஸ்' என்பதிலே எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்று பார்த்தால்—'லோன்ஸ் அண்ட் அட்வான்சஸ்-எலெக்ட்ரிசிடி போர்ட்—I. நான்-பிளான், என்று போட்டு அதில் 'லோன்ஸ் டு தமிழ்நாடு எலெக்ரிசிடி போர்ட்' என்பதில் கிட்டத்தட்ட 30கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். பிறகு 'வேஸ் அண்டு மீன்ஸ் அட்வான்ஸ் டு தமிழ்நாடு எலெக்ரிசிடி போர்ட், என்று போட்டு 35 கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆக. மொத்தம் 65 கோடி ரூபாய் இதில் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதைத்தவிர மின்சார நிறுவனங்களுக்கு இழப்பீடு வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது கிட்டத்தட்ட 77 கோடி அளவிற்கு இருக்கிறது. இதிலே மறுபடியும் இந்த 35 கோடி சேருமானால் அது வேறு ஏறிப்போகிறது. ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால் பெரும் பகுதி பணம் எலெக்ரிசிடி போர்டுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு கொடுத்த பிறகும் அதனுடைய நிலைமை என்னவென்றால் வட்டி கட்ட முடியாத நிலையில் ஒரு வெள்ளையானை நிலைக்கு அது வந்துவிட்டது. நம்முடைய மின்சாரத் துறை அமைச்சரை இதற்காகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னவோ நிதி அமைச்சர் அவர்கள் தாங்கள் எல்லாம் தெரிந்தவர் ஆயிற்றே பார்த்துக் கொள்ளுங்கள் என்று கேட்டால் இப்படி எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, தன்னுடைய இலாக்காவிற்கு ஒதுக்கிக்கொண்டு இருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். உள்ளபடியே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் தான் ஏமாந்துபோய் இருக்கிறார்கள் என்பதை அறிந்து வேதனைப் படுகிறேன்.

இந்த மின்சார வாரியத்திற்கு இவ்வளவு தொகை ஒதுக்கிய பிறகும், என்ன செய்து இருக்கிறார்கள் என்று கேட்டால் ஒட்டு மொத்தமாக எவ்வளவு பணம் தரவேண்டும் என்பதை அவர்கள் தெரிவிக்கவில்லை. அதை அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதிலே சில திட்டங்களுக்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணத்திற்கு மேல் மீண்டும் 11 கோடி ரூபாயை 'வெல்பேர் பார் தி சோசியல் ட்ரைப்ஸ்' என்று காட்டியிருக்கிறார்கள். அதேபோன்று 'கம்யூனிட்டி டெவலப்மெண்ட்' என்பதற்கு 43 கோடி ரூபாய் கேட்டு இருக்



கிறார்கள். மேலும், கிட்டத்தட்ட 85 கோடி ரூபாய் 'மிஸ்ஸலேனியஸ்' என்று காட்டி இருக்கிறார்கள். இவ்வளவும் கேட்டுவிட்டு இந்தப் பணம் முழுவதும் எங்கே போகிறது என்று பார்த்தால் கூட்டுறவுத் துறைக்குப் போய்விடுகிறது. இந்த ஆண்டில் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாய் வட்டியின் மூலம் வருவாய் வருவதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. 100 கோடி ரூபாய் வட்டியின் மூலம் வருகின்ற வரவு எப்படி என்று பார்த்தால் மின்சார வாரியத்தில் இருந்து வருகிறது. அதை மறுபடியும் புக் அட்ஜெஸ்ட்மெண்டில் 'கிராண்ட்ஸ் இன் எய்ட்' என்கிற வகையில் மின்சார வாரியத்திற்கே கொடுத்துவிடுகிறார்கள். இது ஒரு விசித்திரமான பட்ஜெட். வேதனையான பட்ஜெட். கிராண்ட் அண்டு எயிடில் 100 ரூபாய் என்று கொடுத்துவிட்டு வட்டி என்கிற பெயரில் புக் அட்ஜெஸ்ட்மெண்ட் ஆக ஒட்டு மொத்தமாக என்ன நிலைமை என்றால் எப்படி அந்தப் பணம் சொல்லப் பட்டாலும் அது மின்சார வாரியத்திற்கே போகிறது. இதற்கு நிதி அமைச்சர் அவர்கள் துணை நிதி நிலை அறிக்கையில் என்ன கூறுகிறார் என்றால் மின்—வாரியத்தினுடைய நிதி நிலையைச் சீர்படுத்துவதற்காகவும், அதனுடைய பணிகளை விரிவுபடுத்து வதற்காகவும் ரூ. 90.58 கோடி மானியம் வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது'.

இந்த 90 கோடி ரூபாய் முதலிலே 'கிராண்ட் இன் எய்டு' ஆகப்போய், புக் அட்ஜெஸ்ட்மெண்ட் என்று வந்து, அதன் பிறகு பணியை விரிவுபடுத்துவது என்றால் இது என்ன விசித்திரம்! எலெக்ரிசிடி போர்டுக்கு பணம் எங்கே போகும்? ஆக, படிக்கிறவர்கள் என்ன நினைக்க வேண்டும்? 90 கோடி ரூபாய் விரிவுபடுத்தும் பணிக்காகத் தருகிறார்கள். ஆனால், இந்த கையிலே கொடுத்து, அந்தக் கையிலே வாங்குவதாகக்கூட அல்ல; புக் அட்ஜெஸ்ட்மெண்ட் என்று வருகிறது. என்ன விசித்திரம் பாருங்கள்! மற்றொன்று, பவ்வர் இரிகேஷன் என்று சொல்லி அதற்கு 91 கோடி ரூபாய். ஆனால் உள்ளே பார்த்தால்

He knows how to tap the Finance Minister and put the portfolio.

என்பது தெரியும். ஆகவே, செய்யப்படக்கூடிய காரியங்கள் சரியாகச் செய்யப்படவில்லை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொன்று, வெல்பேர் மெஷர்ஸுக்காக 11 கோடி ரூபாய் கேட்டிருக்கிறார்கள். அதற்காக செலவிடப்பட்டது எவ்வளவு? 1980—81 ஆம் ஆண்டு பட்ஜெட்டிலே 20 கோடி ரூபாய் என்றால் ரிவைஸ்ட் எஸ்டிமேட் 24 கோடி ரூபாய்; 4 கோடி அதிகமாகி இருக்கிறது. இப்போது 11 கோடி கேட்கிறார்கள். ஏற்கனவே கொடுத்தது என்னவாயிற்று? 20 கோடி, 24 கோடி ரூபாய்

[திரு. துரைமுருகன்] [1981 மார்ச் 26

கொடுத்தது ஒழுங்காக செலவிடப்பட்டிருக்கிறதா? அப்படி இருக்கும் போது மேலும் மேலும் கொடுப்பது சரியல்ல என்பது என்னுடைய கருத்து.

அதுமட்டுமல்ல, நம்முடைய நிதி அமைச்சரைக் கேட்டால் ''இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்தவகுத்தலும் வல்ல தரசு'' என்று எல்லாவற்றையும் சொல்வார்கள். ஆனால், அவர் கொடுக்கிற பணம் ஒழுங்காகப் போய்ச் சேர்கிறதா, சரியாக வேலை நடக்கிறதா என்று பார்க்கிறாரா என்றால் இல்லை.

அதற்கு ஒரு எடுத்துக்காட்டு, போன கூட்டத்திலே கூட தான் தெரிவித்திருக்கிறேன். தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் என்று ஒன்று இருக்கிறது. அது கல்வி இலாக்காவில் வருகிறது. அந்த இலாக்காவிலே என்ன நடக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அமைச்சருக்கு முன்னாலே தெரியும். நம்முடைய பணத்தைப் போட்டிருக்கிறோம். அங்கே என்ன நடக்கிறது? போட்ட பணம் சரியாக செலவிடப்படவில்லை. நான் இன்னும் கொஞ்சம் டீட்டெயிலாகப் போனால், பல்வேறு இலாக்காக்க ளுக்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுமையாகச் செலவிடப்பட வில்லை. மீதிப் பணம் திரும்ப வந்து கொண்டிருக்கிறது. 1978–79-ல் நமக்குக் கொஞ்சம் மிச்சம் வந்திருக்கிறது. இந்த ஆண்டு வந் திருக்கிற டெபிசிட்டை சரிபண்ணுவதற்குக் கூட அந்த 'காஷ் பாலன்ஸ்' அதாவது மிச்சம் வருகிற பணம் போதும் போலிருக் கிறது. அதை நீங்கள் எதிர் பார்த்துத் தான் டெபிசிட் காட்டி இருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஆக, ஒதுக்கப்பட்ட பணம் சரியாக செலவிடப்படவில்லை. அது மட்டுமல்லாமல் தன்னு டைய கட்சிக்காரர்களுக்கு செலவு செய்வதற்குக் கூட அது பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதற்கு ஒரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம், டெஸ்ட் புக் சொசைட்டி இருக் கிறது. அதற்கு எப்படி எப்படி ஆட்களை வேலைக்கு எடுக்க வேண்டும், எப்படி எப்படி சம்பளம் கொடுக்க வேண்டும், என்னென்ன போஸ்ட் என்பதற்கு சர்வீஸ் ரூல்ஸ் இருக்கிறது. அதன்படி ஜூனியர் அசிஸ்டெண்ட் ஒருவர் இருக்கிறார் என்றால் அவருக்கு 350 ரூபாய் அடிப்படைச் சம்பளம். அவர் அசிஸ்டெண்டாக வரவேண்டுமானால் சர்வீஸ் ரூல்ஸ் படி, 42 வது பக்கத்திலே சொல்லியிருக்கிறார்கள் அக்கவுண்ட் டெஸ்ட் பார்ட் I பாஸ் செய்ய வேண்டும்; டி. ஓ. எம். பாஸ் செய்ய வேண்டும். அக்கவுண்ட்டன்சி லோயர் பாஸ் செய்ய வேண்டும். அதன் பிறகுதான் ஜூனியர் அசிஸ்டெண்ட். அசிஸ்டெண்டாக வரமுடியும். அவருக்கு 450 ரூபாய் சம்பளம். அப்படி வந்த அந்த அசிஸ்டெண்ட், அக்கவுண்ட்டென்சி ஹையர் பாஸ் செய்ய வேண்டும். அதன் பிறகு சீனியாரிட்டி இருந்தால் அவர் சூப்பி



1981 மார்ச் 26] [திரு. துரைமுருகன்]

ரண்டாக வரமுடியும், ஆர். எஸ். ஆகவும் வரலாம். அவருக்கு 675 ரூபாய் சம்பளம். அதற்கு இடையிலே ஸ்டோர் கீப்பர் பதவியும் இருக்கிறது. ஸ்டோர் கீப்பருக்கு 525 ரூபாய் சம்பளம். ஆனால், இந்த விதிகளையெல்லாம் மீறி, விதிகள் தளர்த்தப்பட்டு ஆளும் கட்சிக்காரர்கள் பதவி உயர்வு பெற்றிருக்கிறார்கள். இந்த விதிகள் எல்லாம் இருந்தும். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர் கள் ஜூனியர் அசிஸ்டெண்டாக இருந்தவர்கள் நேரடியாக அசிஸ்டெண்டாகக்கூட அல்ல, சூப்பரின்டெண்டாக வந்திருக் கிறார்கள். அவர்கள் பதவி உயர்வுக்குத் தேவையான தேர்வு களில் பாஸ் செய்யவில்லை என்று சொல்லி இந்த விதிகளிலே 26–11–1979-லே ஒரு திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன் பிறகு 26–11–79-க்குப் பிறகு கடகடவென்று ஆளும் கட்சிக்கு வேலை செய்கிற அண்ணா தி. மு. க. பாடநூல் தொழிற்சங்கத் தலைவர் பத்மநாபன், ஜூனியர் அசிஸ்டெண்டி லிருந்து அசிஸ்டெண்டாகக்கூட அல்ல, நேரடியாக சூப்பிரெண் டெண்டாக வருகிறார். 350 ரூபாய் சம்பளத்திலிருந்து 675 ரூபாய் சம்பளத்திற்குப் போகிறார். அவரைப் போல இன்னொரு வர், இவரும் பத்மநாபன்தான். இவர் ஜி. பத்மநாபன், அவர் க. பத்மநாபன். இந்த ஜி. பத்மநாபனும் 350 ரூபாய் சம்பளத்தில் இருந்து 675 ரூபாய் சம்பளத்திற்குப் போகிறார்.

(முற்பகல் 10–50)

அடுத்து, தியாகராசன் என்பவர் அசிஸ்டெண்டாக இருந்து ஆர். எஸ். ஓ. ஆக, அதாவது டு ஈக்குவல் சூப்பிரண்டண்ட் போஸ்ட்டுக்குப் போகிறார். அவர் ரூ. 350 சம்பளத்திலிருந்து ரூ. 675 சம்பளத்திற்குப் போகிறார். அதே மாதிரி ரகுராமன் என்பவர், அவரும் தொழிற்சங்க உறுப்பினர். அவரும் ரூ. 350-லிருந்து 675-க்கு போகிறார். ஏழுமலை என்பவரும் உறுப்பினர், அவரும் 350-லிருந்து 675-க்கு போகிறார். நடேசன் என்பவரும் உறுப்பினர். அவரும் 350-லிருந்து 675-க்கு போகிறார். புஷ்பம் என்பவரும் உறுப்பினர். அவரும் 350-லிருந்து 675-க்குப் போகிறார். இதற்கு மேலே யாரும் உறுப்பினர் அல்ல. இருந்தால் அவர்களையும் சேர்த்திருப்பார்கள்.

அடுத்து, அக்கவுண்டன்சி தேவையில்லை என்று மாற்றி னார்களே, அதாவது ஜூனியர் அசிஸ்டன்ட்டாக இருந்து, அசிஸ் டெண்டாக ஆகி, சூப்பிரண்டன்டாக ஆவதற்கு அக்கவுண்டன்சி லோயர், ஹையர் தேவையில்லை என்று சட்டத்தையே மாற்றி னார்களே, அதையாவது முறையாகச் செய்திருக்கிறார்களா ? பாடநூல் நிறுவனத்தினுடைய சட்டப்படி ஒரு அமென்ட்மென்ட் வருமேயானால் அதற்காக, அதனுடைய தலைவராக இருப்பவ ரிடத்திலே கையெழுத்து வாங்கவேண்டும். அப்படி கையெழுத்து வாங்காவிட்டால் அந்த அமென்ட்மென்ட் செல்லாது. ஆகவே அப்படி தலைவரிடத்திலே கையெழுத்து வாங்கினார்களா ? வாங்கவில்லை. ஏன் வாங்கவில்லை என்றால், அன்றையதினம்

பணியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு வரும். இது சம்பந்தமாக விளக்குவதற்காகத்தான் நான் முன்னதாக எழுந்தேன். அனுமதி தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எடுத்துச் சொல்லிய அந்தக் கருத்துக்களை மின் துறை அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, அதற்கேற்ப நடவடிக்கையை மேற்கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மின்சாரத் துறையைப் பொறுத்தவரை, அரசு அதற்கு இவ்வளவு பணம் கொடுத்தது என்பதையும், அங்கே நடைபெறுகின்ற தன்மை எவ்வளவு என்பதையும்—இந்த முழு விவரங்களை—இப்போது என்னால் சொல்ல இயலவில்லை என்றாலும், நிதி நிலை அறிக்கை மீதான பொது விவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது இதன் முழுத்தன்மைகளை எடுத்துச்சொல்கிறேன். அரசாங்கமே இதற்குத் தேவையான பணத்தை ஈடு செய்ய வேண்டிய நிலைமை வரும். அந்த நிலைமை வருகின்றபோது, நாம் திட்டங்களை வைத்தால் அப்போது திரு துரைமுருகன் முழு ஒததுழைபபும், ஆதரவும் தந்து, மின் துறையை விரிவுபடுத்துவதற்கு உதவி செய்வார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாடப் புத்தகங்களுடைய வெளியீட்டு நிறுவனத்தில் ஏற்பட்டிருக்கிற பதவி உயர்வு, இன்னும் பல்வேறு பிரச்னைகளைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிய முழு விவரத்தையும் கல்வி அமைச்சர் அவர்கள் கல்வி மானிய கோரிக்கை வரும்போது, அதற்கு விவாதம் வரும்போது அதற்குரிய பதிலை தருவார்கள் என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆகவே, மேலும் பல பிரச்னைகளை இந்த பொது விவாதத்தின்போது எடுத்துச் சொல்கிற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால், அதற்குப் பிறகு தொடர்ந்து ஒவ்வொரு துறையைப் பற்றிய மானியக் கோரிக்கைகள் வரும் போது, அந்தத் துறைகளைப் பற்றி விரிவாக விளக்குவதற்கு வாய்ப்பும், வசதியும் இருக்கின்ற காரணத்தினால், இன்றைக்கு அதிக நேரம் பதிலளிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, இந்தக் கருத்துக்களை எல்லாம் மனதில் கொண்டு முறையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1980—81ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23—3—1981ஆம் நாளிட்ட அறிவிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் அந்தந்த இனங்களுக்கு 1980—81ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவுக்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."







மானியக் கோரிக்கைகள் பேரவையின்முடிவற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

நிறைவேற்றப்பட்டவை.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 1 | நில வரித் துறை .. .. | 23,16 |
| டை | 3 | மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம் .. | 21,33 |
| டை | 5 | முத்திரைத் தாள்கள் நிர்வாகம் .. | 22,69 |
| டை | 7 | மாநில சட்ட மன்றம் .. .. | 14,03 |
| டை | 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் .. .. .. | 31,68 |
| டை | 10 | பால் வழங்கு திட்டங்கள் .. | 1,83 |
| டை | 11 | மாவட்ட நிர்வாகம் .. .. | 1,83,91 |
| டை | 12 | தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு இந்து சமய-அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் .. .. — | 14,60 |
| டை | 14 | சிறைச்சாலைகள் — .. | 38,11 |
| டை | 15 | காவல் துறை .. .. .. | 5,23,78 |
| டை | 16 | இயணைப்புப் பணிகள் | 29,88 |

## A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 17 | கல்வி .. .. .. .. | 8,29,77 |
| ஷை | 18 | மருத்துவம் .. .. .. | 73,38 |
| ஷை | 19 | பொதுச் சுகாதாரம் .. .. | 3,50,65 |
| ஷை | 20 | வேளாண்மை .. .. | 26,89,98 |
| ஷை | 21 | மீனளம் .. .. .. .. | 1 |
| ஷை | 22 | கால்நடை வளர்ப்பு .. .. | 8,58 |
| ஷை | 23 | கூட்டுறவு .. .. .. | 1,07,93 |
| ஷை | 24 | தொழில்கள் .. .. .. | 1 |
| ஷை | 25 | சின்கோனா .. .. .. | 8,48 |
| ஷை | 26 | கைத்தறியும் நெசவுத் தொழிலும். | 3,61,18 |
| ஷை | 27 | கதர்த் தொழில் .. .. | 14,38 |
| ஷை | 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. | 43,20,25 |
| ஷை | 29 | தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. .. | 4,43 |
| ஷை | 30 | சமூக நலன் .. .. .. | 91,70 |
| ஷை | 31 | பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன் .. .. | 11,29,16 |
| ஷை | 32 | பின்தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன் .. .. .. | 8,11 |
| ஷை | 34 | நகர்ப் பகுதி வளர்ச்சி .. | 2,03,44 |
| ஷை | 35 | நுகர் பொருள் வழங்கல் .. | 1 |
| ஷை | 36 | பாசனம் .. | 6,812 |



## A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள். | 73,10 |
| ஷை | 38 | பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும் தளவாடமும் .. .. .. | 2,47,89 |
| ஷை | 39 | சாலைகளும் பாலங்களும் .. | 3,34,76 |
| ஷை | 40 | சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். | 29,88 |
| ஷை | 41 | இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு .. .. | 59,12 |
| ஷை | 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் .. .. | 7,11 |
| ஷை | 43 | பல்வகை .. .. .. | 85,91,60 |
| ஷை | 44 | எழுதுபொருள்-அச்சுத் துறை .. | 2,45,41 |
| ஷை | 45 | காட்டு வளத் துறை .. | 91,75 |
| ஷை | 46 | இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் .. | 59,85 |
| ஷை | 47 | தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. | 37,07 |
| | | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 2,06,85,51 |

## B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | | | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|---|---|
| கோரிக்கை | 48 | வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. .. | 1,74,11 |
| ஷை | 49 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு.. .. .. | 1,63,39 |

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

(ரூபாய் ஆயிரத்தில்.)

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 50 | பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 1 |
| டிட்டோ | 51 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு .. | |
| டிட்டோ | 52 | சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு .. .. | 3 |
| டிட்டோ | 53 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு .. | 2,37,04 |
| டிட்டோ | 54 | காட்டுவள மூலதனச் செலவு .. | 4 |
| டிட்டோ | 55 | பல்வகை மூலதனச் செலவு .. | 4,21,60 |
| | | மொத்தம்—B. மூலதனக் கணக்கு .. | 9,96,29 |

C. கடன்கள், முன் பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | | | |
|---|---|---|---|
| கோரிக்கை | 56 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் .. | 2,38,26,68 |
| | | பெரு மொத்தம் .. | 4,55,08,48 |

4. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

ஆ. நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள்தம் இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



7. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

இ. முன்பண செலவிற்கான மானியக் கோரிக்கைகள் 1981—82 (ஆ. இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப் பெற்றுள்ளது.

"In pursuance of Article 203, clause (3), of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, hereby give me recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Advance Grants during the year 1981-82."

(முற்பகல் 11-10.)

8. செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் 1981—82.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1981—82 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 26—3—1981 ஆம் நாளிட்ட அறிவிப்பில் 1 முதல் 56 முடிய இலக்கமிடப்பெற்ற மானியக் கோரிக்

கைகள் ஒவ்வொன்றிற்கும் அதன் எதிரே குறிப்பிடப் பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1982 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முடிய உள்ள நிதி ஆண்டிற்காக அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''

மானியக் கோரிக்கைகள் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று கோரியதொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

நிறைவேற்றப் பெற்றவை.

A. வருவாய்க் கணக்கில் செலவு.

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| கோரிக்கை 1—நிலவரித் துறை .. .. | 1,46,61 |
| கோரிக்கை 2—மாநில ஆயத் தீர்வைத் துறை | 6,16 |
| கோரிக்கை 3—மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிர்வாகம். | 38,27 |
| கோரிக்கை 4—பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம். | 1,70,85 |
| கோரிக்கை 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம். | 13,96 |
| கோரிக்கை 6—பத்திரப் பதிவு | 76,48 |
| கோரிக்கை 7—மாநிலச் சட்ட மன்றம் .. .. | 20,56 |
| கோரிக்கை 8—தேர்தல்கள் | 6,39 |
| கோரிக்கை 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். | 4,27,78 |
| கோரிக்கை 10—பால் வழங்கு திட்டங்கள் .. | 21,47 |
| கோரிக்கை 11—மாவட்ட நிர்வாகம் .. .. | 6,29,71 |
| கோரிக்கை 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய-அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். | 45,01 |
| கோரிக்கை 13—நீதி நிர்வாகம் | 1,83,44 |
| கோரிக்கை 14—சிறைச்சாலைகள் .. .. | 1,18,85 |



நிறைவேற்றப் பெற்றவை.

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்), |
|---|---|
| கோரிக்கை 15—காவல் துறை .. .. | 12,38,80 |
| கோரிக்கை 16—தீயணைப்புப் பணிகள் .. | 77,19 |
| கோரிக்கை 17—கல்வி .. .. .. | 4,694,01 |
| கோரிக்கை 18—மருத்துவம் .. .. .. | 13,90,48 |
| கோரிக்கை 19—பொதுச் சுகாதாரம் .. .. | 11,78,53 |
| கோரிக்கை 20—வேளாண்மை .. .. .. | 12,31,16 |
| கோரிக்கை 21—மீன்வளம் .. .. .. | 69,02 |
| கோரிக்கை 22—கால்நடை வளர்ப்பு .. .. | 3,22,33 |
| கோரிக்கை 23—கூட்டுறவு .. .. .. | 2,02,30 |
| கோரிக்கை 24—தொழில்கள் .. .. .. | 2,12,67 |
| கோரிக்கை 25—சின்கோனா .. .. .. | 37,14 |
| கோரிக்கை 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும் | 85,30 |
| கோரிக்கை 27—கதர் .. .. | 27,55 |
| கோரிக்கை 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். | 16,98,32 |
| கோரிக்கை 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். | 1,71,27 |
| கோரிக்கை 30—சமூக நலன் .. .. | 3,67,16 |
| கோரிக்கை 31—பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன். | 4,58,21 |
| கோரிக்கை 32—பின் தங்கிய வகுப்பினர் முதலியோர் நலன். | 1,45,15 |

[1981 மார்ச் 26

நிறைவேற்றப் பெற்றவை.

A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி.

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| கோரிக்கை 33—வீட்டு வசதி .. .. | 1,88,03 |
| கோரிக்கை 34—நகர்ப் பகுதி வளர்ச்சி .. .. | 2,15,55 |
| கோரிக்கை 35—நுகர் பொருள் வழங்கல் .. | 98,79 |
| கோரிக்கை 36—பாசனம் .. .. .. | 4,85,15 |
| கோரிக்கை 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 47,19 |
| கோரிக்கை 38—பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும். | 2,77,69 |
| கோரிக்கை 39—சாலைகளும் பாலங்களும் .. | 10,06,75 |
| கோரிக்கை 40—சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்கு வரத்தும். | 10,99 |
| கோரிக்கை 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு. | 72 |
| கோரிக்கை 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும். | 7,60,84 |
| கோக்கை 43—பல்வகை .. .. .. | 11,68,60 |
| கோரிக்கை 44—எழுதுபொருள்-அச்சுத் துறை .. | 1,61,03 |
| கோரிக்கை 45—காட்டு வளத் துறை .. .. | 1,55,60 |
| கோரிக்கை 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் .. | 8,57,69 |
| கோரிக்கை 47—தகவல், சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். | 39,37 |
| மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 2,04,81,06 |



1981 மார்ச் 26]

நிறைவேற்றப் பெற்றவை.

B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு.

| | (ரூபாய் ஆயிரத்தில்.) |
|---|---|
| கோரிக்கை 48—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. | 46,46 |
| கோரிக்கை 49—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு. | 6,48,46 |
| கோரிக்கை 50—பாசனம் குறித்த மூலதனச் செலவு. | 5,51,73 |
| கோரிக்கை 51—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. | 5,66,05 |
| கோரிக்கை 52—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. | 1,32,52 |
| கோரிக்கை 53—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. | 36,85 |
| கோரிக்கை 54—காட்டுவள் மூலதனச் செலவு .. | 1,59,78 |
| கோரிக்கை 55—பல்வகை மூலதனச் செலவு .. | 1,98,58 |
| மொத்தம்—B. மூலதனக் கணக்கு .. | 23,25,43 |

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

| | |
|---|---|
| கோரிக்கை 56—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். | 25,95,84 |
| பெரு மொத்தம் .. .. .. | 2,54,02,33 |

4. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

ஈ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு 1981 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்".

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி).

ஆ. நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (உடனடிச் செலவிற்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

9. வரவு-செலவுத் திட்டம்—1981–82—விவாதம்—(தொடர்ச்சி.)

* திரு. செ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இந்த அரசு இரண்டாவது தடவையாக பதவிக்கு வந்து, ஓராண்டு காலத்திற்குள் தனது இரண்டாவது வரவு-செலவுத் திட்டத்தை அவையின் முன் வைத்துள்ளது. பெ துப்படையாக வறுமைக்கோட்டிற்குக் கீழே 52 சதவீத மக்கள் இருக்கிறார்கள். எங்கும் காணாத அளவிற்கு



வறட்சி, விலைவாசி ஏற்றம், 11 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்
களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், தொழில் வளர்ச்சி
பாதிப்பு, விவசாய உற்பத்தி பாதிப்பு இப்படியாக உருக்குலைந்த
தமிழகத்தைப் பார்க்கிறோம். தேர்தல் நேரத்தில் இருந்த நிலை
வேறு, இப்போது இன்றைக்கு இருக்கிற நிலை வேறு. மத்திய
அரசைத் தழுவியே போய்க்கொண்டிருந்த நிலைமை மாறி
இலேசாக சாடும் நிலைமை வந்திருப்பதை நாங்கள் வரவேற்
கிறோம் என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்தச் சூழ்நிலையில் நிதி ஆதாரங்களைக் கொண்டு வளர
முடியுமா என்றால் வளர முடியாது என்பதுதான் நிலைமை.
வறட்சி தாண்டவமாடுகிற இந்த நேரத்திலே அண்ணாவைக் கூப்
பிட்டிருக்கிறீர்கள். பிரச்சினை தீர்க்க முடியவில்லை. திணற
லான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 1980–81 வரவு-செலவில்
11.47 கோடி பற்றாக்குறை. 1981–82-ல் பற்றாக்குறை
111.49 கோடி. மொத்தம் 122.96 கோடி பற்றாக்குறை ஏற்
பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்த நாட்டிலே மத்திய அரசு
போட்ட வரவு-செலவிலே 2,766.26 கோடி புதிய வரிகள் போடப்
பட்டிருக்கின்றன, இந்த நிலையில் தமிழகத்தில் 122.96 இலட்
சம் புதிய வரிகள் போடப்பட்டிருக்கிறது. நபர் வாரியாக பார்த்
தோமேயானால் ஒரு நபருக்கு 42 ரூபாய் வீதம் அபராதம்
போடப்பட்டிருப்பதை போல வரி போடப்பட்டிருக்கிறது. இந்த
நிலையில் மாநில அரசு நபர் ஒன்றுக்கு 25 ரூபாய்க்கு மேலும் வரி
போட்டிருக்கிறது. ஒட்டு மொத்தமாக 67 ரூபாய்க்கு மேலே
நபர் ஒன்றுக்கு போடப்பட்டிருக்கிறது. அதனால்தான் மது
விலக்கை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று தொடர்ச்சி
யாக நாங்கள் வற்புறுத்தி வந்திருக்கிறோம். ஏனென்றால், இந்த
நிலையிலே மத்திய அரசு ஏதாவது உதவி செய்ய வேண்டும்.
கூட்டுறவுக் கடனைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் ஒரு
சில சலுகைகள் ஏற்படுத்தி, அந்த சலுகைகள் காரணமாக 72
கோடி ரூபாய்க்கு கூட்டுறவாளர்களுக்கு, ஏழை, எளிய மக்களுக்கு
நன்மை செய்தது. அப்படி செய்யக் கூடிய நேரத்திலே எங்
களுக்கு இதன் காரணமாக துண்டு விழுந்த தொகைக்கு உதவிகள்
வேண்டும் என்று கேட்ட நேரத்தில், மத்திய அரசு நாங்கள் உதவி
கள் கொடுக்க மாட்டோம் ; அதுமட்டுமல்ல நீங்கள் ஏன் கொடுக்
கிறீர்கள், இப்படி ஒரு மரபு தமிழகத்தில் உண்டாகக் கூடாது.
அப்படி ஏற்பட்டால் மீண்டும், மீண்டும் விவசாயிகள் கேட்பார்
கள் ஆகையால் கடுமையாக வசூல் செய்யுங்கள் என்று மத்திய
அரசு சொல்லக்கூடிய அளவிற்கு நாட்டு நிலைமை போய்க் கொண்
டிருக்கிறது. ஆகையால்தான் விவசாயிகள் கூட்டுறவுக் கடனைப்
பற்றிச் சொல்லும்போது, நிபந்தனையோடு கூடிய வட்டி பற்றி
சொல்லப்பட்டிருந்தது. நாங்கள் தொடர்ச்சியாகச் சொல்லிக்
கொண்டிருக்கிறோம். இடத்திற்கு இடம், பகுதிக்குப் பகுதி
நிலத்திலே வித்தியாசம் இருக்கிறது, ஆகவே, தமிழகம் முழுவதும்
ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டு 5 ஸ்டாண்டர்ட் ஏக்கர்
என்று கொண்டுவாருங்கள் என்று பலமுறை ரெவின்யூ அமைச்ச

ரிடம் சொன்னோம். இன்று வரைக்கும் அதை ஏற்றுக்கொள்ள வில்லை. தஞ்சையிலும், கோவையிலும் ஒரே நிலைமைதானா? திருச்சியிலும், தர்மபுரியிலும் ஒரே நிலை தானா? இதுபற்றி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அரசு முடிவுக்கு வரவில்லை. 5 ஸ்டாண்டர்ட் ஏக்கருக்குப் பதிலாக 5 ஏக்கருக்கு சலுகை செய்கிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறது, இதனால் ஒரு சிலருக்குப் பாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

விற்பனை வரி உயர்வின் மூலமாக, முத்திரைத்தாள் கட்டண உயர்வின் மூலமாக எவ்வளவு வருமானம் அதிகமாக வரும் என்றும், அதைப்போலவே வரிக் குறைப்பின் காரணமாக எவ்வளவு நட்டம் ஏற்படும் என்றும் தெளிவாகத் தெரிவிக்கவில்லை, இதிலிருந்து இந்த பட்ஜெட் அவசரக் கோலத்திலே அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கிறது வேகம் வேகமாகத் தயாரிக்கப்பட்டு இருக்கிறது என்பது போல் தெரிகிறது.

தொழில், கல்வி, விவசாயம், கூட்டுறவு எல்லாவற்றையும் எடுத்து ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் வித்தியாசம் அதிகமாக இல்லை. கடந்த பட்ஜெட்டிலே தமிழ்நாட்டிலே 36 நூற்பாலைகள் கொண்டுவரப்படும் என்று சொல்லப்பட்டது. இன்றைக்கு வரையில் வருவதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக தமிழ் நாட்டிலே இருக்கின்ற மிகப் பெரிய ஆலையான, 12 ஆயிரம் பேர்களுக்கு மேல் வேலை செய்யக்கூடிய ஸ்தாபனமான, பின்னி மில் மூடப்படக்கூடிய நிலைமைதான் ஏற்பட்டிருக்கிறது.

கூட்டுறவாளர்களுக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிட்டிக்கு முன்னாள் சபா நாயகர் திரு. முனு ஆதி அவர்கள் தலைவர். அவர் தலைமையில் அமைக்கப்பட்ட அந்த கமிட்டி வேலை துவங்குவதற்கு முன்னாலேயே இங்கே லேண்ட் டெவலப்மெண்ட் பாங்கும், கூட்டுறவு பாங்கும் நோட்டீஸ் விட்டிருக்கிறது. விவசாயிகள் பாரபட்சம் காட்டப்படமாட்டார்கள் என்று இங்கே கியாரண்டி கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு வறட்சியின் காரணமாக அவதிப்பட்டுக்கொண்டிருக்கிற நிலையில் நோட்டீஸ்கள் விடப்பட்டிருக்கின்றன. நோட்டீஸ் விடப்படாது என்று மந்திரிகளே சொன்னார்கள். ஆனால், உண்மையான நிலைமை இன்றைக்கு என்னவென்றால், நோட்டீஸ் விட்டு அதன் மூலமாக வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடுமையான வறட்சி ஏற்பட்டிருக்கின்ற நேரத்திலே ஒருவருக்கொருவர் பாதகமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. தண்ணீர் கொடுக்க வேண்டிய நிலைமைக்குப் பதிலாக தொடர்ச்சியாக நோட்டீஸ் வந்துகொண்டிருக்கிறது. வறட்சியைப் பொறுத்த அளவிலே அரசாங்கத்திற்குக் கொடுக்கப்படுகிற புள்ளி விவரங்கள்



சரியானவை அல்ல. தாமதமாக புள்ளி விவரங்கள் கொடுக்கப் படுகின்றன என்பது மட்டுமல்ல, சரியான புள்ளி விவரங்கள் அரசாங்கத்திற்குக் கிடைக்கவில்லை என்பதுதான் எங்களுடைய கணிப்பு. அதன் மூலம் முதலமைச்சர் அவர்கள் சுற்றுப்பயணம் செய்து நிலைமையைப் பார்த்தார்கள். எவரெஸ்ட் சிகரம் எவ்வளவு உயரமோ அதைப்போல் முகவை மாவட்டம் வறட்சிக்கு தலைமை தாங்கிக்கொண்டிருக்கிறது. வறட்சியால், புதுக்கோட்டை, தர்மபுரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாகப் பாதிக்கப் பட்டிருக்கின்றன. எந்தக் காலத்திலேயும் இல்லாத அளவுக்கு வறட்சியால் பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், பார்க்கிறபோது கண்மாய்களில் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை கால்வாய்கள் வெட்டப்படவில்லை. ஆனால் சொல்லப்படுகிறது. வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது என்று. நான் உதாரணத்திற்குச் சொல்கிறேன் கடந்த வாரம் முதல்வர் அவர்களும் நானும் ஆர். எஸ். மங்கலம் கண்மாய்க்குச் சென்று பார்த்தோம். முதலமைச்சர் அவர்கள் அந்தக் கண்மாய் ஆழப்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், அந்த இடத்திலேயே உத்திரவு போடவில்லை. வெட்ட வேண்டியது அவசியம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். எஸ்டிமேட் தயாரிக்கவில்லை என்று சொல்லி அதன் காரணமாக உத்திரவு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், எந்தவிதமான வேலையும் நடக்கவில்லை. இதுதான் நிலைமை. அதைப்போல போன மழையின்போது புயலாலும், வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட கால்வாய்த் திட்டம் வைகைக் கால்வாய்த் திட்டம், அப்போது அந்தக் கால்வாய் அழிந்தது, இன்றைக்கு வரைக்கும் ரிப்பேர் செய்யப்படவில்லை, பழுதுபார்க்கப்படவில்லை.

(முற்பகல் 11:20)

நான் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்பதெல்லாம் உடனடியாக அந்தப் பஞ்ச நிவாரண வேலைகளை ஆரம்பிக்க வேண்டும் என்பது தான். ஏனென்றால் பஞ்ச நிவாரண வேலைகளில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இந்தப் பகுதியிலிருந்து அடுத்த பகுதிக்குப் போகவில்லை என்று மதிப்பிற்குரிய உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், உண்மை நிலைமை என்னவென்றால், இப்பொழுது எடுக்கப்பட்ட புள்ளி விவரத்தின் பிரகாரம் இராமநாதபுரம் மாவட்டத்திலேயும், நெல்லை மாவட்டத்திலேயும், புதுக்கோட்டை மாவட்டத்திலேயும் ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது அதற்குக் காரணம் என்ன? திடீரென்று பெண்கள் அதிகரித்து விட்டார்களா? அப்படி அல்ல; அங்குள்ளவர்கள் பிழைப்புத் தேடி வேறு மாவட்டங்களுக்குச் சென்று விட்டார்கள். அவர்கள் இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பே அவ்வாறு சென்றுவிட்டார்கள். ஆனால், மதிப்பிற்குரிய அமைச்சரவர்கள் சொல்லும் பொழுது வெளியேறவில்லை என்று சொல்லுகிறார்கள். இதில்தான் வித்தியாசம் ஏற்படுகிறது. கணக்கு போடுவதில் ஒருவேளை

தப்பு ஏற்பட்டிருக்கலாம். ஆகவே, உடனடியாக சரியான கணக்கெடுத்து, நிவாரண வேலைகளை விரைவில் செய்வதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிடமிருந்து எந்த அளவிற்கு உதவியை எதிர்பார்க்கிறார்கள் என்று தெரியவில்லை நிச்சயமாக அவர்கள் உங்களுக்கு உதவப்போவது இல்லை அவர்கள் உங்களுக்கு உதவ மாட்டார்கள். ஏனென்று கேட்டால் குடிநீருக்கு இப்பொழுது நம்மிடத்தில் இருக்கக்கூடிய ரிக்குகள் 57 பிளஸ் 15 தான் இருக்கிறது. இந்த நிலைமையில் தற்பொழுது குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையாக இருக்கிறது. ஆழ்குழாய் கிணறுகள் போடுவதற்கு ரிக்குகள் வேண்டுமென்று வற்புறுத்திச் சொல்லப்பட்டது. மத்திய அரசிடம் ரிக்குகள் கொடுங்கள் என்று கேட்கின்ற நேரத்தில், எங்களிடத்தில் ரிக்குகள் கிடையாது, நீங்கள் ரூபாய் கொடுத்தால் நாங்கள் வாங்கிக் கொடுக்கிறோம் என்று சொல்லும் அளவிற்கு இன்றைக்குக் கேலிக்கூத்தாக இருக்கிறது. தண்ணீர் கொடுக்க முடியாத மத்திய அரசாங்கமாக இன்றைக்குக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. எனவே, இந்த மத்திய அரசினிடத்தில் நீங்கள் உதவியை எதிர்பார்க்க வேண்டாம்; உதவி கிடைக்கும் என்று நினைக்க வேண்டாம்; அவர்கள் காலை வாரி விடாமல் இருந்தாலே போதும் என்று நினைத்துக்கொள்ளுங்கள்.

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டம் பஞ்சப் பிரதேசமாக ஆகி அங்குள்ள மக்கள் வெளி மாவட்டங்களுக்குப் போய் இருக்கிறார்கள். பிழைக்கப் போன இடத்திலேயிருந்து தலையிலே கொண்டுவரும் அரிசியைக்கூட, லெவி முறை வந்திருப்பதன் காரணமாகப் பிடித்துப் போகும் நிலைமையிருக்கிறது. எனவே, பஞ்சப் பிரதேசங்கள் இருக்கின்ற இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் கருத்திற்கொண்டு உடனடியாக வேலைகளைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குப் பொருட்கள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக ரேஷன் கடைகளிலே சப்ளை செய்யப்படுகின்றன. ஆனால், அங்கே உள்ள ஊழல்கள் அளவிற்கு மிஞ்சிப் போய்க்கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே, அங்கே ஆடிட் நடந்து கிட்டத்தட்ட ஏழு வருடங்களாகின்றன. ஏழு வருடங்களாக ஆடிட் ஆகவில்லையென்றால் எப்படிப்பட்ட நிலைமை அங்கேயிருக்கும் என்பதைத் தயவு செய்து கணக்கில் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பற்றி மீண்டும் ஒருமுறை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். மதுவிலக்கைத் தளர்த்துவதன் காரணமாக எந்த அளவிற்கு வருமானம் கிடைக்கும் என்பது சொல்லப்பட



விட்டாலும் கூட, மதுவிலக்கை ரத்து செய்வதன் மூலம் கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய் வரையிலும் வருமானம் கிடைக்கின்ற நிலைமையிருக்கிறது. ஆகவே, உடனடியாக எந்தவிதமான தங்கு தடையுமின்றி தமிழகத்திலே மதுவிலக்கு ரத்தைக் கொண்டு வர வேண்டும்; அதன்மூலமாக நாம் நிதி நிலைமைகளை ஓரளவிற்குச் சரிக்கட்ட முடியும். என்னிடத்திலே பல பேர்கள் சொன்னார்கள். (மணியடிக்கப்பட்டது.)

*திரு. மு. ஜான் வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழகத்தில் இதற்கு முன்னர் கொடுக்கப்பட்ட பல நிதிநிலை அறிக்கைகளைப் பார்க்கும் பொழுதும், இப்பொழுது 1981—82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையைப் படிக்கும் பொழுதும் தமிழகத்திலே உள்ள அத்தனை கிராமங்களிலேயும் உள்ள மக்கள் முன்னேறக் கூடிய நல்ல பல திட்டங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, கிராம மக்கள் வாழ வழி செய்யப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்து, அந்த வாக்குறுதியைக் காப்பாற்றும் அளவிற்கு இன்றைக்குத் தமிழக பட்ஜெட்டை இங்கே வைத்திருக்கிறார்கள். அதற்காக தமிழகத்தின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் நிதியமைச்சரவர்களையும் நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக் குடிநீர்ப் பிரச்சினையும், மற்றும் பல்வேறு பிரச்சினைகளும் உருவாகிய நேரத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களும் ஏனைய அமைச்சர் பெரு மக்களும் கிராமங்கள் தோறும் சென்று ஒவ்வொரு கிராமத்திலேயும் உள்ள மக்களின் இன்னல்களைப் போக்குகின்ற விதத்தில் திட்டத்தைத் தீட்டியிருக்கிறார்கள். ஆகவே, மோசமான சூழ்நிலை உருவாகி குடிக்கக் கூட நீர் கிடைக்காத சூழ்நிலை ஏற்படாத அளவிற்கு அங்கே ஒவ்வொரு திட்டத்தையும் உருவாக்கியிருப்பதை இன்றைக்குப் பட்ஜெட்டில் நாம் காண்கிறோம்.

அங்கே விளைச்சல் இல்லாத நேரத்திலே, விளைச்சலுக்கு வேண்டிய மழைத் தண்ணீர் கிடைக்காத நேரத்தில், பம்பு செட் ஆகியவைகளையும், கிணற்று நீர் இல்லாத நேரத்தில் அது கிடைக்கும் அளவிற்குத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆகையினால், அப்படிக் கஷ்டப்படுகின்ற மக்கள், போதுமான அளவு மழையில்லாத, விளைச்சலில்லாத காலத்தில் கூட, ஏழை எளிய மக்களைக் காப்பாற்றுகின்ற அடிப்படையில் இந்த பட்ஜெட்டைப் போட்ட இந்த அரசை தமிழக மக்கள் பெரிதும் பாராட்டுகிறார்கள்.

மத்திய அரசு கோதுமைக்குக் கணிசமான அளவு விலையை உயர்த்திக் கொடுத்திருக்கிறது. ஆனால், இந்தத் தமிழக அரசு பல பரிந்துரைகளின் மூலம் கேட்ட பின்னரும் கூட, நெல்லுக்குப் போதிய அளவு விலை உயர்த்தப்படவில்லை. ஆகையால், மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் போது, அவர்கள் இரண்டு விதமான கருத்தைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். கோதுமைக்கு விலை கூடுதலாகவும், நெல்லுக்கு விலை குறைச்சலாகவும் இருப்பதைப் பார்க்கும் போது, இங்கேயுள்ள விவசாயப் பெருமக்கள் நெல்லுக்குக் கூடுதலாக விலை கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், அன்றாடச் சம்பளம் வாங்குகிறவர்கள் விலை குறைவாக இருக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். ஆனால், மேடையிலே பேசுகின்ற எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள். தமிழக அரசு விவசாயிகள் விற்கின்ற நெல்லின் விலையைக் கூடுதலாக்கவில்லையென்றும், அதே நேரத்தில் மாதா மாதம் சம்பளம் வாங்கிச் சாப்பிடுகின்றவர்கள் விலையைக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்றும் பேசுகிறார்கள். ஆனால், அந்த விலைக்குக் காரணம் மத்திய அரசு தான் என்பதை யாரும் வலியுறுத்த முன் வரவில்லை. ஆகையால், கோதுமைக்கு எந்த அளவு உயர்ந்த விலை கொடுக்கப்படுகிறதோ அதே போல் தமிழக அரசு நிர்ணயிக்கும் நெல்லின் விலையை மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையின் மூலமாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக, உரம் வழங்கும் திட்டம் நல்ல முறையிலே தமிழகத்திலே நடைபெற்று வருகிறது. குறிப்பாக, அக்டோபர், நவம்பர் மாதங்களில், மழைக் காலத்தில் கிடைக்க வேண்டிய உரத்தை அரசு உடனடியாக, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கின்றன. ஆனால் கடந்த காலத்தைவிட, இப்பொழுது விலை அதிகமாக இருக்கும் நேரத்தில், தமிழகத்திலேயுள்ள மக்கள் அந்த விலை உயர்வுக்குக் காரணம் தமிழக அரசு என்று சொல்லும் வகையில் எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்கள், தமிழக அரசுதான் காரணம் என்று மக்களை திசை திருப்புகிறார்கள். ஆனால் தமிழ் நாட்டிலே இருக்கிற உரத்தை, குறிப்பாக, 'ஸ்பிக்' உரத்தை எடுத்துக் கொண்டால், பழைய விலையை விட, இப்பொழுது, மூட்டை ஒன்றுக்கு ரூ. 50 அதிகமாக இருக்கிறது. அந்த விலை உயர்வுக்குக் காரணம் மத்திய அரசு. ஆகவே, கட்சி பேதமற்ற முறையில், மத்திய அரசு உரத்தின் விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

அதே போல், கூட்டுறவு முறையில் ஆயிரம் நபர்களுக்கு நிதி உதவி அளித்து, சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டத்தைத் தமிழக அரசு கொண்டுவந்திருக்கிறது. அப்படிப்பட்ட திட்டத்தின் மூலமாக இன்று கஷ்டப்படும் வேலையில்லாதவர்கள், ரிக்ஷாவின் மூலமாகப் பயன் அடைய முடியும் சூழ்நிலை உருவாகிறது அப்படிப்பட்டத் திட்டத்தை நிதிநிலை அறிக்கையிலே கொண்டு வந்திருக்கிற அமைச்சரவையைப் பாராட்டுகிறேன்.



கால்நடை வளர்ப்பு பற்றித் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அந்தக் கால்நடை வளர்ப்பு பற்றிக் கூறுகிற நேரத்தில், சில சப்-செண்டர்களிலிருந்து, மத்திய செண்டருக்கு நோய் வாய்ப்பட்ட கால்நடைகளைக் கொண்டு செல்ல வேண்டுமென்று நிலையிருக்கிறது. அப்படிக் கொண்டு செல்லும்போது, அவைகள் செத்து விடுகின்ற நிலையிருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு மையக் கால்நடை கேந்திரங்களுக்கும் வாகனங்கள் கொடுக்க வேண்டும். கூடுதலாக சப்-செண்டர்கள் அமைக்க வேண்டும். அதே நேரத்தில், வாகனங்களைக் கொடுத்தால், கிராமங்களிலிருந்து, 10, 20 கிலோ மீட்டர் வரை அந்தக் கால்நடைகளைக் கொண்டு செல்ல வசதியில்லாத கிராம மக்கள் பயன் அடையக் கூடிய வகையில், அந்த வாகனங்களின் மூலமாக, அந்தக் கால்நடை மருத்துவர்கள் வந்து துணை செய்ய வசதியிருக்கவேண்டும்.

அடுத்து, பாசனத்தைப் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பாசனத் திட்டங்களும் கிட்டத்தட்ட 150 கோடி ரூபாயல் பாசனத் திட்டங்களுக்கெனறு ரூ. 18 கோடி ஒதுக்கப் சிறு பாசனத் திட்டங்களுக்கென்று கடமைப்பட்டிருக்கிறேன். பட்டிருப்பதை நான் பாராட்டக் ரூ. 29·62 கோடி பாசனத்திற்காக அதோடு, அடுத்த ஆண்டு செலவிட உத்தேசித்துள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. 1975-ஆம் ஆண்டு வறட்சியின் பொழுது சிறு பாசன திட்டத்தின் அடிப்படையில், எங்கள் நாங்குனேரி தொகுதியில், வள்ளியூர், கொடுமுடியாறு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ரூ. 30 இலட்சம் செலவு செய்யப்பட்டது. ஆனால், அந்தத் திட்டம் இதுவரையில் செயலாக்கப்படவில்லை, பல கேள்விகளுக்குப் பதில் அளித்த அமைச்சர் 3 ஆண்டு தண்ணீர் பிடிப்பு அடிப்படையில் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். 1977–78-லும், 1978–79-லும், 1979–80லும், 3 ஆண்டுகள் செழிப்பான மழை பெய்திருக்கிறது. ஆனால், அமைச்சரவர்கள் நேற்றைய தினம் கூறிய பதிலிலே, 1981 ஆம் ஆண்டு வரத்தை எதிர்பார்க்கிறோம் என்று சொன்னார்கள். 1981 ஆம் ஆண்டு மிகவும் வறட்சியான ஆண்டு. ஆகவே, கடந்த 3 ஆண்டுகளுக்கான கணக்கை நிர்ணயமாக வைத்து, 1981 ஆம் ஆண்டைக் கணக்கில் எடுக்காமல், அத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மீன் வளத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அத்திட்டத்தின் கீழ் ஆயிரம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பது பாராட்டுக்குரியது. அதே நேரத்தில், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் கன்னியாகுமரியிலிருந்து தூத்துக்குடி வரையுள்ள, கடல் பகுதியில் அடிக்கடி மோதல் ஏற்படுகிறது.

ஆகவே ஒரு நேரத்தை ஒதுக்கியாகிலும், இல்லை என்றால் கடலிலே ஒரு இடத்தை ஒதுக்கியாகிலும், அவர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், எஸ்.பி.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1981 மார்ச் 26

(முற்பகல் 11-30)

அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கொண்ட ஒரு குழுவை
அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக அவர்களுடைய பிரச்
னையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு வழி வகை செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

காடு வளர்ப்பைப் பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தக்
காடு வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் இன்று தமிழக
அரசும் மத்திய அரசும் செயலாற்றி வருகின்ற நிலை உண்மை
யிலேயே அழிக்க முடியாத ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கின்றது.
அதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் என்
தொகுதியைப் பொறுத்தமட்டில் அங்கே மலையடிவாரத்திலே
உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயம் செய்கின்ற நெல்
வாழை, கடலை போன்ற பயிர்களை களக்காட்டுப் பகுதியில்
பன்றியும், மிளா கூட்டமும் அழித்து விடுகின்றன. இது
குறித்துப் பல முறை புகார் செய்த நேரத்தில் வன இலாகா அதி
காரிகள் சில கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அங்கே
அந்த அழிக்கின்ற மிருகங்களை விரட்டக் கூடிய அரசாணை
பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது. விரட்டக் கூடிய சூழ்நிலையில்
விரட்ட முடியாமல் அங்கே பிளாக்குகளில் விரட்டுகின்ற நிலை
யில் இல்லாத காரணத்தினாலேயும், குறிப்பிட்டவர்களுக்கு
துப்பாக்கி லைசென்சு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே அப்படி
அழிவு செய்கின்ற கால்நடைகளை, மிருகங்களை உடனடியாக
விரட்ட அரசு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன். அதோடு சுந்தேரி என்ற பகுதியில் சிங்கவால் குரங்குகள்
இருக்கின்றன. இந்தியாவிலே இப்படிப்பட்ட குரங்குகள் வேறு
எங்கும் இல்லை என்று கூறப்பட்டிருக்கின்றது. அதைப்
பாதுகாக்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. ஏனென்றால்
அங்கே பச்சையாறு திட்டத்தை நிறைவேற்றமுடியாத ஒரு சூழ்
நிலை அங்கே இருக்கிற வன அதிகாரிகள் அறிக்கை சமர்ப்பித்து
இருக்கிறார்கள். ஆகவே இங்கே இருக்கிற வன இலாகாவிலே கீழ்
காடுகள் மேல் மட்டத்திலே அழிக்கா விட்டாலும் கூட சூழ்
மட்டத்திலே பச்சையாறு திட்டத்தை உருவாக்குகின்ற சூழ்
நிலையைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டும். அந்தப்
பச்சையாறு திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட 171 குளங்கள்,
பாசனங்கள் பயனடையக் கூடிய திட்டங்கள் உருவாகும். அதை
உருவாக்க வேண்டும் என்று அரசைப் பணிவோடு கேட்டுக்
கொள்கின்றேன்.

அடுத்து, மின் இணைப்பைப் பற்றிக் கூறி இருக்கிறார்கள்.
இங்கே இருக்கின்ற அறிக்கையில் 30,000 மின் இணைப்பு
கொடுக்க இருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும். இதிலே
சீனியாரிட்டி பேசிஸ் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த
சீனியாரிட்டி பேசிஸ் அந்த டிவிஷனிலே என்றும் சொல்லுகிறார்
கள். ஒரு டிவிசனிலே வரிசைக் கிரமமாக, எண்ணிக்கையின்
அடிப்படையாகத்தான் மின் இணைப்பு கொடுக்கப்படுகிறது.



இதிலே என்னுடைய கருத்து என்னவென்றால் ஒரு டிவிசனை
எடுத்துக் கொள்வோமேயானால், சில டிரான்ஸ்பார்மர்களில்
ஒரே ஒரு பம்ப் செட்டுக்குத்தான் சர்வீஸ் கொடுக்க வேண்டியிருக்
கிறது. கொடுக்கக் கூடிய சர்வீசிலே கூடுதலாக மின்சாரம்
அந்த டிரான்ஸ்பார்மரிலே இருக்கிறது. ஆனால் அங்கே
இருக்கின்ற அதிகாரிகள் நாங்கள் சீனியாரிட்டி பேசிஸ்ஸில்தான்
கொடுப்போம் என்று கூறுகிற நேரத்தில் அந்த ஒரு டிரான்ஸ்
பார்மரில் இருக்கிற லோடு அப்படியே இருக்கிற காரணத்தால்,
அங்கே இருக்கிற விவசாயிகளுக்கும் பயனில்லை. மின்சார
இலாகாவுக்கும் பயனில்லை. ஆகவே சீனியாரிட்டி பேசிஸ் கடை
பிடிப்பதிலே கூட, அங்கே இருக்கிற, எக்ஸெஸாக இருக்கிற மின்
சாரத்தை மேலும் ஒரு மோட்டாருக்குக் கொடுக்க வேண்டும்.
அதே நேரத்தில் 2 போல்கள் போட வேண்டும் என்றால் அதிலே
யும் சீனியாரிட்டி பேசிஸ் என்று சொல்கிறார்கள். சீனியாரிட்டி
பேசிஸை அடிப்படையாகக் கொண்ட இந்த அரசு இதைப் பயன்
படுத்த வேண்டும். ஆனால் அதே நேரத்தில் ஒரு மோட்டா
ருக்கு எக்ஸெஸாக இருக்கிற கரண்டை அந்த டிரான்ஸ்பாரமரிலே
இருந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி பற்றி இங்கே நிதிநிலை அறிக்கையில்
தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. நாங்குனேரி வட்டம்
1979–80 ஆம் ஆண்டு பின்தங்கிய வட்டமாக அறிவிக்கப்பட்டது.
அப்படி அறிவிக்கப்பட்ட போதிலும் சில தொழிலதிபர்கள், பெரிய
தொழிலை ஆரம்பிக்க மறுக்கிறார்கள். சிறு தொழிலுக்குத்
தான் அது பின் தங்கிய வட்டமாக இருக்கிறதே ஒழிய, பெரிய
தொழிலுக்கு இல்லை, அதை ஏற்க முடியாது என்று கூறுகிறார்
கள். ஆகவே மத்திய அரசு கொண்டு வந்திருக்கின்ற இந்த
திட்டத்தை அந்தப் பகுதியில் பெரிய தொழிற்சாலை அமைக்கின்ற
வகையில் நாங்குநேரி வட்டத்தை தொழிலில் பின் தங்கிய வட்ட
மாகப் பிரகடனப் படுத்தவேண்டும். ஏனென்றால் நாங்குநேரி
அடுத்த வள்ளியூர் பகுதியில் அங்கே உள்ள சுற்றுப்புறத்திலே
உள்ள கற்களை சிமெண்ட் செய்வதற்காக தாழையூத்து சங்கர்
சிமெண்ட் கம்பெனிக்கு எடுத்துச் செல்கிறார்கள். அந்தச்
சுண்ணாம்பு கற்கள் 60 ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருக்கு
மாம். எனவே இந்தக் கற்களை தாழையூத்து சங்கர் சிமெண்ட்
கம்பெனிக்கு அனுப்பாது, அங்கே இருக்கிற வள்ளியூரில் ஒரு
பெரிய சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும். அதன்
மூலமாக ஏராளமான மக்கள் பயன் அடையக் கூடிய வேலைவாய்ப்பு
உருவாகும். அதனால் அந்தப் பகுதியிலே போக்குவரத்துச்
செலவு குறையும்.

சாலை வசதிகளைப் பற்றிக் குறிப்பிடுகின்ற நேரத்தில்
28.25 கோடி ரூபாய் மூலதனச் செலவில் இன்றைக்கு 4819
கிலோ மீட்டர் சாலைகள் உருவாக்கி அதன் மூலம் 2779 கிராமங்
கள் முன்னேறி இருக்கின்றன. இந்த நிலையில் ஒரே ஒரு பிரச்
சினையை மட்டும் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

சில ஊராட்சி ஒன்றிய சாலைகள், அல்லது சில ஹைவேஸ் ரோடுகள் இவற்றின் குறுக்கே மணிமுத்தாறு பாசனக் கால்வாய் செல்கிறது. ஹைவேஸ் சார்ந்தவர்கள் பொதுப்பணியிடமிருந்து .சின். ஓ. சி. வேண்டும் என்று கேட்கிறார்கள். சில நேரங்களில் என். ஓ. சி. கேட்காமலேயே கட்டிவிடுகிறார்கள். சில நேரங் களில் ஹைவேஸ் சார்ந்தவர்கள் என். ஓ. சி. கொடுக்க வேண்டும் என்று ஒன்றியத்தில் சொல்லி, அதன் காரணமாக அதைப் பார்க் காமல் விட்டு விடுகிறார்கள். இதன் காரணமாக சில சாலை களில் பாலங்களும், அல்லது சாலை பராமரிப்பும் செய்வது த டபடுகிறது. ஆகவே, அரசு இந்துப் பணிகளை இன்னது ற செய்யவேண்டும் என்று தெள்ளத் தெளிவாக ஆணையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பற்றி பேசுகிறபோது நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் பஸ்கள் நல்ல முறையில் ஓடிக்கொண்டிருக்கின்ற ன. மற்ற மாநிலத் தில் இருந்து இங்கே வருகிறவர்கள் எல்லாம் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தில் ஓடுகின்ற பஸ்கள் தான் நல்ல முறையில் ஓடுகின்றன குறிப்பிட்ட நேரத் தில் ஓடுகிறது என்கிற நிலைமை மட்டும் இல்லாமல் பல்வேறு வசதிகளைக் கொண்டதாகவும் இருக்கிறது. ஏராளமான சொகுசு பஸ்கள் ஓடுகின்றன என்றெல்லாம் சொல்லுகிறார்கள். என்னுடைய தொகுதியில் சில கிராமங்களுக்கு மினி பஸ் வசதி வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பெரிய ரோடுகள் இல்லாத இடங்களில் எல்லாம் இந்த மினி பஸ் ஏற்பாட்டினை அரசாங்கம் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மருத்துவ வசதிகள் ஏராளமான நகராட்சிப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கின்றன. கிராமப்புறங்களில், ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அதற்கான நிலைமைகள் சரிவர இல்லை. கட்டிடங்கள் பல இடங்களில் இல்லை. மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சிப் பகுதிகளில் இருக்கின்ற மருத்துவ மனைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அத்திட்டத்தை கிராமப்புறங்களிலும், குறிப்பாக மைனர் பஞ்சாயத்தாக இருந் தாலும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதுவிலக்கைப் பொறுத்தவரையில், இந்த அரசாங்கம் தற்போது எடுத்துள்ள முடிவை நான் வரவேற்கிறேன். மது விலக்கை ரத்து செய்ய வேண்டாம் என்பது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் கருத்தாகும். இருப்பினும் மக்கள் ஒத்துழைக்கவில்லை. கிராமத்தின் ஒரு பகுதியில் சாராயத் தக் கள்ளத்தனமாகக் காய்ச்சி விற்கிறார்கள். அதைக் குடிப்பதால் மக்களின் உடல் நலம் கெடுகிறது. அரசுக்கு வரவேண்டிய வருவாய் இல்லாமல் போகிறது. ஆகவே இந்த முடிவை அரசு





மேற்கொள்ள வேண்டி வந்து இருக்கிறது. இதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையில் கல்வியின் தரம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் நல்ல முறையில் உயர்ந்து இருக்கிறது. அனைத்து மாநிலங்களில் இருக்கின்ற நிலைமைகளைப் பார்க்கிற போது நம்முடைய மாநிலத்தில் பிளஸ் 2 ஸ்கீம் நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. 1 650 ஆசிரியர்கள் இந்த ஆண்டில் கூடுதலாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். உலகத் தமிழ் மாநாடு நடத்தி சிறப்புயர் பெற்ற புரட்சித் தலைவர் அவர்கள் தமிழ் ஆசிரியர்களுக்கு வழிவகை செய்ய வேண்டும் என்கிற அளவில் 500 புதிய தமிழ் ஆசிரியர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். அவர்களுக்கு முதன்மை ஸ்தானம் அளிக்கவும் அரசு வகை செய்திருக்கிறது.

தமிழ், தமிழ் என்று மேடைகளில் பேசிவிட்டு, செயல் முறை யில் அதைக் கடைபிடிக்கும் கொள்கை இல்லாதவர்களைப்போல் இல்லாமல் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இப்படிப் பட்ட திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதற்காக அவரை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட திட்டத்தைச் சொல்கிற நேரத்தில் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் கேலியாகச் சொன்னார்கள், கிண்டலாகச் சொன்னார்கள், இருப்பினும், மாண்புமிகுபுரட்சித் தலைவர் அவர்கள் 'போற்றுவோர் போற்றட் டும், தூற்றுவோர் தூற்றட்டும், என் கடன் மக்களுக்குப் பணி செய்து கிடப்பதே என்ற நிலைமையின் அடிப்படையில் இத் தகைய காரியங்களைச் செய்து வருவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கும், நிதி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

(முற்பகல் 11-40)

திரு. ஏ. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, 1981—82 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையினை வரவேற்று வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தாலிக்கு மலிவு விலையில் தங்கம் என்பதை வெறும் வார்த் தைக்காகவும் சுய இலாபத்திற்காகவும் அல்லாமல் உண்மையி லேயே நடைமுறைப் படுத்துவதற்கு புரட்சித் தலைவர் அரசு எடுத்துள்ள முயற்சி பாராட்டுதற்குரியதாகும்.

வறட்சி தமிழகம் முழுவதும் ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில் மக்கள் குடிநீர்த் தட்டுப்பாட்டினை நீக்குவதற்கு துளைக் கிணறுகள் தோண்டவும், கிணறுகளை ஆழப்படுத்தவும், அரசு தக்க சமயத்தில் முன்வந்து நடவடிக்கை எடுத்திருப்பது அரசு

மக்கள் நலனில் கொண்டிருக்கின்ற அக்கறையினை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது. கிராமங்களில் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதியின் அனைத்து வசதிகளும், வளர்ச்சிகளும் ஏற்பட தமிழக அரசு செயல்பட்டு வருவது மற்ற மாநிலங்களுக்கும் ஓர் முன்னோடியான எடுத்துக்காட்டாகும்.

பெரியார் மாவட்டம் தாராபுரம் தொகுதியில் அமராவதி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கும் இரும்புப் பாலம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. அந்தப் பாலம், 12—8—1913-ம் ஆண்டில் கட்டப்பட்டது. அதை புரட்சித் தலைவர் அரசு கவனித்து உடன் ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

மேலும் தாராபுரம் தொகுதியில் அரசு மருத்துவமனை மிகவும் சீர்கேடு அடைந்த நிலையில் உள்ளது. ஆஸ்பத்திரியில் படுக்கை வசதிகளும், மற்ற முக்கியமான உபகரணங்களும் இல்லாத நிலையில், அது செயல் பட்டு வருகிறது. ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும் நோயாளிகளைக் கவனிக்கும் அளவிற்கு எந்தவித வசதியும் இல்லாத காரணத்தால் 50 மைல்களுக்கு அப்பால் கோயம்புத்தூர் செல்லவேண்டியுள்ளது. ஆகவே, புரட்சித் தலைவர் அரசு இதனையும் கவனித்து ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன்.

மற்றும் பி. ஏ. பி. விரிவாக்கத் திட்டத்தில் அதிக வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் மேலும் பத்தாயிரம் ஏக்கர் அளவில் பாசன வசதியினை அதிகப்படுத்தி, வாய்க்காலின் இரு புறமும் பாசன வசதி ஏற்படுத்தி தர வேண்டுகிறேன். அதைப் போலவே குடிநீர் வசதியும் சாலை வசதியும், பள்ளி வசதியும், பஸ் வசதியும், விவசாயிகளுக்கும், நெசவாளர்களுக்கும், அரிசனங்களுக்கும், மீனவர்களுக்கும், கடன் வசதியும், வீட்டு வசதியும் இந்த அரசு செய்திருப்பதை யாராலும் பாராட்டாமல் இருக்க முடியாது என்று சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு துணைத் தலைவர்களே, 1981—82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கைமீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை கூற முன்வருகிறேன்.

நமது மாண்புமிகு நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையை இரண்டாவது முறையாக இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த நிதி நிலை அறிக்கையைப் பார்ப்பதற்கு 56 பக்கங்கள் அழகாக இருக்கின்றன. பேப்பரும் அழகாக இருக்கிறது. எழுத்தும் அழகாக இருக்கிறது. ஆனால் கருத்து ஏதாவது இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக எள்ளளவும் ஏதொன்றும் இல்லை என்றுதான் கூறுவேன்.





அதுமட்டுமல்ல, நான் ஆரம்பத்திலேயே ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி மாவட்டங்கள் என்று பல மாவட்டங்களை இந்த மன்றத்திலே அறிவித்திருக்கிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று நான் மனுவும் கொடுத்திருக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும் எங்கள் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்காத காரணத்தால் நான் இந்த அரசின் மீதும், இந்த நிதிநிலை அறிக்கைமீதும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் இதைச் சொல்வதற்குக் காரணம், செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏதோ ஒரு பகுதியில்தான் ஓரளவுக்கு மழை பெய்திருக்கிறது. மற்றப் பகுதிகளில், ஊராட்சி ஒன்றியங்களில் குறிப்பிடக் கூடிய அளவுக்கு மழை இல்லை. வறட்சியால் பாதிக்கப்பட்டு, அங்கே குடிக்கக்கூட தண்ணீர் இல்லாமல் கஷ்டமாக இருக்கிற நிலையை நீங்கள் கண்டிருப்பீர்கள்.

இந்த நிதி நிலை அறிக்கையில் விவசாயிகள் கடனைப்பற்றிச் சொன்னீர்கள். சிறிய விவசாயிகள் 42 கோடி ரூபாய் ரத்து செய்யப்பட்டது என்றுசொன்னார்கள். அதே நேரத்தில் 3 ஆண்டு கடனை திருப்பிச் செலுத்திவிட்டால் செலுத்த வேண்டிய வட்டியை தள்ளுபடி செய்வோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டில் சொன்னார்கள் விவசாயிகள் கடனைப்படிப்படியாக தள்ளுபடி செய்வோம் என்று சொன்னார்கள். ஆனால் இப்போது அசலைத் தள்ளுபடி செய்யாமல் வட்டியைத் தள்ளுபடி செய்வோம் என்று சொல்கிறார்கள்? அசலைக் கட்டியவர்கள் வட்டியைக் கட்டாமலா இருப்பார்கள். ஆகவே, நீங்கள் ஏதோ விவசாயிகளுக்குஒரு கண்துடைப்பாக இதைச் சொல்லியிருக்கிறீர்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, விவசாயிகள் நிலையைப் பார்க்கும் போது இன்றையதினம் வறட்சியால் பல மாவட்டங்களில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளுக்கு உங்கள் ஆட்சியில் எந்தவித மான நன்மையும் ஏற்படவில்லை. மின் கட்டணம் கட்டவில்லை என்று சொல்லி, விவசாயிகள் மீது நீங்கள் காட்டு தர்பார் நடத்தியிருக்கிறீர்கள். துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறீர்கள். ஆகவே, இந்தச் சர்க்கார் விவசாயிகளின் பிரச்சினையில் தீர்வு காணத் தவறிவிட்டது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அவர்களிடம் காரணம் விவசாயிகள் அமைதியாக இருந்தார்கள். மின்கட்டண மின்கட்டணத்தை வசூல் செய்ய ஆணையிட்டீர்கள். மின்கட்டண வசூல் என்ற பெயரால் அவர்கள் பலவந்தப்படுத்தப்பட்டார்கள். உண்மையிலேயே அவர்களுக்கு வசதி இருந்தால் அந்த மின் கட்டணத்தை ஒழுங்காகக் கட்டியிருப்பார்கள்.

ஆனால் நீங்கள்தான் விவசாயிகளை இடறிவிட்டிருக்கிறீர்கள். அந்தக் காரணத்தால் தான் இப்படிப்பட்ட நிலைமைகளை நீங்கள் உருவாக்கி இருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல. இந்த நிதி நிலை அறிக்கையில் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதாவது விற்பனை வரியைப் பொறுத்த வரையில் சென்னையைச் சுற்றியுள்ள 32 கிலோ மீட்டர் தூரம் வரை அந்த வரியை 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தி இருக்கிறீர்கள். சென்னையைச் சுற்றியுள்ள தாம்பரம், , திருவொற்றியூர், திருவான்மியூர் போன்ற பகுதிகளில் உள்ள சிறு வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். அதோடுமட்டுமல்ல, அங்கே இருக்கின்ற சிறு விவசாயிகளும், பாதிக்கப்படுகிறார்கள்.

அடுத்து இன்னொரு புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அது என்ன தெரியுமா? ரிக்ஷாக்களுக்கு ரூபாய் பத்து இலட்சம் செலவில் இயந்திரம் பொருத்தப்படும் என்பது. அதை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் எவ்வளவு பேர்களுக்கு அவ்வாறு இயந்திரம் வழங்கப்படும் என்பது தெரியவில்லை. அதிலேயாவது பாரபட்சம் இல்லாமல் வழங்குவதற்கு ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் மனிதனை மனிதன் இழுக்கக்கூடாது என்ற அடிப்படையில் கை ரிக்ஷாவை ஒழிப்பதற்காக நடவடிக்கை எடுத்தார்கள். ஆனால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்றால், கலைஞர் கை ரிக்ஷாவை ஒழித்தாரே நாமும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் இவ்வாறு செய்ய நினைக்கிறீர்கள் என்று கருதுகிறேன். இது எப்படி இருக்கிறது என்றால் புலியைப் பார்த்து பூனையும் சூடு போடுவது போல் இருக்கின்றது. நான் இதைச் சொல்லுவதற்குக் காரணம் ஏதாவது செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் நீங்கள் இதைச் செய்வதுதான்.

அடுத்து, அரிசனங்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பது பற்றி பல முறை இந்த சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறேன் நீங்கள் ஆட்சிக்கு வந்ததிலிருந்து இது வரையில் அரிசனங்களுக்கு எந்த விதமான நன்மையும் செய்யவில்லை. தேர்தல் காலத்திலே நீங்கள் பல வாக்குறுதிகளைக் கொடுத்தீர்கள். அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொன்னீர்கள். ஆனால் நீங்கள் வந்தபிறகு அரிசனங்களுக்கு எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறீர்கள் நீங்கள் சொன்னீர்கள், கலைஞர் ஆட்சிக் காலத்தில் அரிசனங்களுக்கு தனியாக கிராமத்திற்கு அப்பால் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் கிராமத்தின் மத்தியிலேயே அக்ரகாரத்திலேயே அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுப்போம் என்று சொன்னீர்கள். ஆனால் இதுவரையில் ஒரு கிராமத்துல அப்படி வீடு கட்டிக் கொடுக்கவில்லை.



அடுத்து கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கும், அரிசனங்களுக்கும் கிணறு மானியம் வழங்கப்பட்டது. கிராமங்களில் இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அவர்களுக்கு கிணறு வெட்டி பயிர் செய்ய உதவ வேண்டும் என்ற அடிப்படையில் அவ்வாறு செய்யப்பட்டிருந்தது, ஆனால் உங்களுடைய நிதி நிலை அறிக்கையில் அப்படி எதுவுமே இல்லை. நாவலர் அவர்கள் இந்த நிதி நிலை அறிக்கையினை பற்றி நன்றாகத் தெரிந்திருப்பார்கள். அவர் கூட ஏனோ இதை விட்டுவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல அரிசனங்களுக்கு என்று எந்தவிதமான நன்மையும் இதுவரையில் செய்யவில்லை. கலைஞர் அவர்களுடைய காலத்தில் அரிசனங்கள் உயர் நீதி மன்ற நீதிபதிகளாகவும், காவல் துறையிலும் நியமித்தார்கள். ஆனால் இன்று ஒரு தாழ்த்தப்பட்டவருக்குக்கூட உயர்பதவிகள் கிடைக்கவில்லை. அவர்கள் உயர் பதவிக்கு இன்று வரமுடியவில்லை.

**திரு. ரா. கிருஷ்ணன்** : தலைவரவர்களே, ஒரு சின்ன பாயின்ட் ஆஃப் க்ளாரிபிகேஷன். ஐ. ஏ. எஸ். அதிகாரியை கலைஞர் அவர்கள் நியமிக்க முடியுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : ஐ. ஏ. எஸ். அதிகாரியை நாம் யாரும் நியமிக்க முடியாது.

**திரு கெ. சொக்கலிங்கம்** : தலைவரவர்களே, ஐ. ஏ. எஸ் அதிகாரியை நியமிப்பது குறித்து முதலமைச்சர் பரிந்துரை செய்வதற்கு உரிமை உண்டு. அது மட்டுமல்ல, நல்ல பதவிகளை கலைஞர் ஆட்சிக் காலத்திலே அரிசன மக்களுக்குக் கொடுத்தார்கள்.

**டாக்டர் கே. சமரசம்** : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சொக்கலிங்கம், அவர்கள் தற்போது அரிசனங்களுக்கு உயர் பதவிகள் எதுவும் தரப்படவில்லை. என்று சொனார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்தான் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற ரிஜிஸ்ட்ரார் என்ற பதவிக்கு அடுத்தபடியாக டெபுடி ரிஜிஸ்ட்ரார் என்ற பதவியை அரிசன மக்களுக்கு தந்திருக்கிறார்கள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேதனை படமாட்டார் என்று சொன்னாரே ஆனால் அவர் தாய்மார்களை கண்ணீர் சிந்த விட்டுவிட்டார். தாய்க்குலத்தை நடுத் தெருவிலே கொண்டுவந்து நிறுத்திவைத்துவிட்டார். இப்படிப் பட்ட காரியங்களை செய்கின்ற அரசு யோசனை சொன்னாலும் எதையும் எடுத்துக் கொள்வதில்லை. அவர்கள் சொல்வது ஒன்று செய்வது வேறாக இருந்து சொன்னதை செய்வதும் இல்லை. செய் வதை சொல்லவும் மாட்டார்...... (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடு).

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கள்ளுக்கடை திறப்பது சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் கள்ளச்சாராயம் பெருகிக் கொண்டிருக்கிறது. ஆகையினால் கள்ளுக்கடைகளைத் திறந்து விட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கட்சியினர் பேசினார்கள். ஆனால் சாராயத்தை பாட்டிலில் வைத்து. பொதுமக்களின் உடம்புக்குக் கெடுதல் நேராவண்ணம் அரசு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது. முதலில் கள்ளச் சாராயத்தை ஒழிக்க கள்ளுக்கடையைத் திறக்க வேண்டும் என்றார்கள். இப்போது இப்படிப் பேசுகிறார்கள்....(குறுக்கீடு) (கூச்சல்—குழப்பம்)

திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு பரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் ஆர்டர் என்று இப்படி கிளாரிபிகேஷனை கட்டுக் கொண்டே பேசுவது எல்லாம்... (மணி அடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் உட்கார வேண்டும். அவர் தன்னுடைய பாயின்ட் ட முடித்துக் கொள்ளட்டும்.

திரு. இரா. தாமரைக்கனி : நாட்டில் கள்ளச்சாராயம் ஓடிக் கொண்டிருக்கிறது. அதனால் கள்ளுக்கடையைத் திறந்து அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று கேட்டார்கள். இப்போது கள்ளுக் கடையைத் திறந்துவிட் ர்களே என்று ஓலமிடுகிறார்கள்.' * * தான் உறுப்பினர் அவர்கள் பேசுகிறாரா என்று அறிய விரும்புகிறேன். (கூச்சல், குழப்பம்).

---

* * மாண்புமிகு பரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. கெ. சொக்கலிங்கம் : துணைத் தலைவர் அவர்களே, * * என்று சொன்ன வார்த்தையை நீக்க வேண்டும் என்று தங்களை வேண்டுகிறேன். நான் * * தான் பேசுகிறேன். அவர் வேண்டுமானால் * * இல்லாமல் இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திருவாளர்கள் தாமரைக்கனியும், சொக்கலிங்கமும், * * * என்று சொன்ன வார்த்தையை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்

திரு. கெ. சொக்கலிங்கம் : இந்த மதுவிலக்கு கொள்கையில் நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள். என்றால், ஒருபக்கம் மதுக் விலக்குப் பிரச்சாரம் செய்கிறீர்கள். இன்னொருபுறம் மதுக் கடைகளை திறக்கிறீர்கள். இது எப்படி இருக்கிறது என்றால் ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒரு கால் என்று சொல்வார்களே அப்படி இருக்கிறது. ...... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு மேல் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தாய் மேல் ஆணையிட்டேன் என்பதைக் குறிப்பிட்டு, ஆணையிட்டார்களே அது என்ன ஆயிற்று என்று உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண் டிருந்த போது அதைக் கேட்டுக் கொண்டு நான் உள்ளே வந்தேன் இங்கே இன்னொன்றையும் குறிப்பிட்டார்கள். நான் ஆணையிட் டால் அது நடந்துவிட்டால் இங்கு ஏழைகள் வேதனை பட மாட் டார் என்று சொன்னாரே அது என்னவாயிற்று என்றும் கேட் டார்கள் நான் ஆணையிட்டது நடைபெறவில்லை என்று இங்கே இருக்கின்ற மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் குறிப்பாக பேசிக்கொண்டிருக்கும் உறுப்பினரையும் சேர்த்துச் சொல்கிறேன். அனைவரும் அதை ஒரு குற்றச்சாட்டாகவே இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

நான் தாய்மீது ஆணையிட்ட காரணத்தினால்தான் அதை இன்னும் ரத்து செய்யவில்லை என்ற அந்த எண்ணத்தை அவர் புரிந்து கொள்ள வேண்டும். பெர்மிட் இல்லாமல் யார் வேண்டு மென்றாலும் குடிக்கலாம் என்று இருந்தால்தான், மதுவிலக்கு ரத்து என்று பொருள். இன்னார்தான் இப்படித்தான் என்று நிபந்தனைகள் போட்டால் அது ஒரு நிபந்தனைக்குள்தான் இருக் கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நான் இன்னொன் றையும் அவருக்கு மிக மிகத் தாழ்மையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒருபக்கம் நாங்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்கிறோம், ஒரு பக்கம் மதுவிலக்கைத் தளர்த்துகிறோம் என்று சொன்னார்கள் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்த போது என் தலைமையில் மதுவிலக்குப் பிரச்சாரக்குழு அமைக்கப்பட்டது

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க கறப்பெற்றது.



செய்யப்பட்டது என்பதையும் அப்போது மதுவிலக்கு ரத்து செய்யப்பட்டது என்பதையும் உறுப்பினர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்பு கிறேன்.

திரு. கெ. சொக்கலிங்கம்: முதல் அமைச்சர் அவர்கள் அடுத்தபடியாக, மது கொள்கைப்படி நடந்து கொள்ளட்டும். அடுத்தபடியாக, மது விலக்குக் கொள்கையில் நீங்கள் உறுதியாக இல்லை என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அதே போல் இப்போது பெட்ரோலுக்கும் டீஸ இன்னொன்றும் செய்திருக்கிறார்கள். இப்படி உயர்வ லுக்கும் விற்பனை வரியை உயர்த்தியுள்ளீர்கள். எல்லோ தால் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ரும் ஆயில் என்ஜின்கள் வைத்து தண்ணீர் இறைக்கிறார்கள். இப்போது எங்குபார்த்தாலும் மின்வெட்டு இருக்கிறது. மின்சா ரத் தட்டுப்பாடு இருக்கிறது. ஆகவே டீஸலைப் பயன்படுத்து கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதே மாமன்றத்தில்தான் பேசு கிறார்கள். மின்சாரம் கொடுக்கப்பட வில்லை, அதைக் கொடுக் காத காரணத்தால் உற்பத்தி குறைந்து விட்டது என்று, மின்சாரம் கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். சொன்னபடி செய்ய வில்லை என்று சொல்கிறார்கள். அதேசமயத்தில் மின்சாரம் இல்லாத டீஸலைப் பயன்படுத்துகிறார்கள் என்று சொல் கிறார்கள். எதில் அவர்கள் அக்கறை காட்டுகிறார்கள், எது உண்மை என்று சொல்கிறார்கள் என்பதை விளக்கினால்தான் பயன் உள்ளதாக இருக்கும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: மின்சாரம் போதுமான அளவு இல்லை. டீஸலுக்கு விற்பனை வரி 5 சதவீதத்திலிருந்து 10 சத வீதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். ஆயில் இன்ஜினுக்கு ஏழை மக்கள் டீஸலை வாங்கித்தான் ஆயில் இஞ்ஜின உபயோகப்படுத்துகிறார்கள். இன்று மின்சாரம் போதிய அளவு இல்லாததால் ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் இறைக்கிறார்கள். என்று கூறுகிறேன் (மணி அடிக்கப்பட்டது)

திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள 1981–82 ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வரவேற்று எனது சில கருத்துக்களை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழை எளிய மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிற முறையிலும், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கிறவர்கள் நன்மை பெருகிற வகையிலும், எல்லாத்துறையினரும் ஏற்றுக் கொள்கின்ற அளவிற்கு அரசினுடைய திட்டங்களும் நடவடிக்கை களும் நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது தேர்தல் காலவாக்குறுதி களை நிறைவேற்றுகின்ற வகையில் படிப்படியாக புரட்சித் தலைவர் அவர்கள் அரசு பணிகளை மேற்கொண்டு நிறைவேற்றி

[திரு. எம். வி. இரத்தினம்] [1981 மார்ச் 26

வருகிறது. ஆனால் எதிர்க்கட்சியினர் தேர்தல் கால வாக்குறுதிகள் எங்கே என கேட்கிறார்கள். ஒரே ஆண்டில் எல்லாம் நிறைவேற்றப்படும் என்பது எந்த வகையில் முடியும், எந்த வகையில் அது நியாயமுமாகும் என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்து பார்க்க வேண்டும்.

மதுவிலக்குப் பிரச்சினையில் இந்த அரசு மீது குற்றங்குறை சொல்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். சில நேரங்களில் காலத்திற்கு ஒத்தாற்போல் முடிவெடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

மது விலக்கு கொள்கையில் உறுதியாக இருக்கிறோம். முழுமையாக தளர்த்தப்படவில்லை என அரசு திட்டவட்டமாகவும் தெளிவாகவும் சொல்லியிருக்கிறது.

**திரு. ஜே. எஸ். இராசு:** பாயின்ட் ஆப் ஆர்டர். பொதுவாக கன்னிப்பேச்சு நிகழ்த்துகிற நேரத்தில்தான் உறுப்பினர்கள் எழுதி வாசிப்பதை நாம் அனுமதிக்கிறோம். இப்போது உறுப்பினர் அவர்கள் எழுதி வாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** அவர்கள் எழுதி வாசிக்கவில்லை. சில குறிப்புகளை வைத்துக்கொண்டு பேசுகிறார்கள். அவ்வளவுதான்.

[நண்பகல் 12-00]

**திரு. எம். வி. இரத்தினம்:** அப்படியே கட்டுப்படுத்த முடியுமா என்றால், முடியவில்லை. ஆனால், எதிர்பார்த்ததற்கு மாறாக ஏழை எளிய மக்கள், அவர்கள் குடும்பங்கள் நிலையைத் தெரிந்து, இன்று அதைத் தளர்த்தினோம். இந்த நேரத்திலும் நீங்கள் அதைக் குறை கூறுகிறீர்கள். ஆனால், இப்போது மதுவிலக்குச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், சமூக விரோதிகளில் ஒரு சிலர் கைக்குச் சென்று கொண்டிருந்த பணம், அரசுக்கு வருவதற்கு ஏற்ற வகையில், இன்றைய தினத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இதையும், இந்த சூழ்நிலையில் எதிர்க்கிறார்கள். மதுவிக்குப் பிரச்சினையில் இந்த அரசின் மீது குற்றங்குறை சொல்கின்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். குற்றங்குறை சொல்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இப்போது கூட மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி சரி என்றோ, தவறு என்றோ திட்டவட்டமாக அறிவிக்காமல், அரசின்மீது குறை சொல்வது, எந்த வகையில் நியாயமாகும் என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன். அதே போல், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும், இந்தப் பிரச்னையில் இன்றைய தினம் இந்தியா அளவில் தங்கள் கட்சிக் கொள்கையை மறந்துவிட்டு, இந்த மாநிலத்தில் மட்டும் வற்புறுத்திக் குறை சொல்வது மிகவும் வியப்பாக உள்ளது. மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற



1981 மார்ச் 26] [திரு. எம். வி. இரத்தினம்]

பொறுப்பும், கடமையும் மாநில அரசுக்கு இருக்கின்றபடியால் மத்திய அரசு அதிக அதிகாரத்தை மாநில அரசுகளுக்கு தந்து சிறப்பாக செயல்பட வழிவகை செய்ய, மத்திய அரசை வற்புறுத்தி இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

பருவ நிலை தவறியதன் காரணமாக, தமிழகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய வறட்சியை சமாளிக்கின்ற வகையில் அரசு போர்க்கால நடவடிக்கைகளை மேற்கொண்டு துரிதமாக பணிகளைச் செய்வதை மனதாரப் பாராட்டுகிறேன். கிராம வீட்டு வசதி திட்டத்தின் மூலமாக 1981–82 ஆம் ஆண்டிற்கான 4,000 வீடுகள் கட்ட நிதி உதவி செய்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. தொழில் துறை சிறப்பாக செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது.

உதாரணமாக, சிமெண்டு, வெடி மருந்து தொழிற்சாலைகள் இன்றைய தினம் அமைக்கப்பட இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதே போன்று சிறு தொழில்கள் துறையில், அதன் வளர்ச்சிக்காக முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில் நடப்பு ஆண்டில் ரூ 32 கோடி கடன் உதவி அளிக்க இருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. அதே போல, கதர் கிராம தொழில் வாரியத்தின் மூலமாக, கிராமப் பகுதிகளில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் ஊக்கம் அளித்து வருகிறார்கள். இந்த நிதி ஆண்டில் 33,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தும் என எதிர்பார்ப்பது சிறு தொழில்கள், கிராமத் தொழில்கள் ஆகியவற்றை வளர்க்க அரசு எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சியைக் காட்டுகிறது.

அதேபோல். இம் மாநிலத்தில் ஆண்டுதோறும் 103 கோடி தேங்காய் உற்பத்தி ஆகிறது என்றும் இன்னும் ஆண்டுகளில் ஆண்டு தோறும் 153 கோடி தேங்காய்களாக உயர்த்த இவ்வரசு திட்டமிட்டுள்ளதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்; வரவேற்கிறேன். இதில் குறிப்பாக, கோவை மாவட்டம், பொள்ளாச்சிப் பகுதியில் தென்னை சாகுபடி இன்றைய சூழ்நிலையில் அதிகமாக பயிரிடப்பட்டு வருகிறது. காரணம், அந்தப் பகுதி மண் வளமும், தட்ப வெட்ப சூழ்நிலையும் ஆகும். ஆகவே, பொள்ளாச்சி பகுதியில் பெரிய அளவில் தென்னங் கன்று உற்பத்திப் பண்ணைகளும், ஆராய்ச்சிப் பண்ணைகளும் அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே போல், தென்னை மட்டையை மூலப் பொருளாகக் கொண்டு செய்யக்கூடிய சிறு தொழிற்சாலைகளையும் அங்கே அமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல், பெரும் பாசனத் திட்டங்களுக்கும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கும் என்று 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறு பாசனத் திட்டங்களுக்காக 18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

மேற்படி பாசனத் திட்டத்தின் கீழ் பொள்ளாச்சி சட்டமன்றத்
தொகுதியில் பி.ஏ.பி. பாசன வசதியற்ற சுமார் 5,000 ஏக்கர்
நிலங்களை பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வர
வேண்டும். இதனால் குறிப்பாக செம்மனாம்பதி ஓடையகுளம்,
கணபதிபாளையம், மாரப்ப கவுண்டன்புதூர் ஆகிய கிராமங்
களை அடங்கிய விவசாய நிலங்கள் பயன்பெற ஏதுவாக இருக்கும்
என்பதை தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தற்போது பி.ஏ.
பி. பாசன வசதி அளிக்கும் வகையில் மாக்கினாம்பட்டி, ஆவல்
சின்னாம்பாளையம் போன்ற பகுதிகள் சேர்க்கப்பட்டு ஆக்க
பூர்வமான பணிகள் தொடங்கப்பட்டுள்ளதற்கு எனது தொகுதி
மக்கள் சார்பாக அரசுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்
கிறேன். மேலும் பல தனிப்பட்ட நிலச்சுவான்தாரர்கள்,
தேவனூர் ஆறு போன்ற ஆறுளின் குறுக்கே அணைகள் கட்டி
தங்கள் நிலங்களுக்கு பாசனம் செய்து வருகிறார்கள். மேற்படி
அணைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், அப்படி
அந்த அணைகளை அரசு மேற்கொள்கின்ற போது மேலும் பல
விவசாயிகளுடைய நிலங்களுக்கு பாசன வசதி அளிக்க ஏதுவாக
இருக்கும் என்பதையும் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

சுற்றுலாப் பயணிகளை இம்மாநிலம கவர்ந்து ஈர்க்கும் வகை
யில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகம் அயராது பாடுபட்டு
வருகின்ற இந்த நேரத்திலே பொள்ளாச்சிப் பகுதியில் குறிப்பாக
ஆனைமலை வனச் சரணாலயததில் "டாப் சிலிப்" என்ற
பகுதியையையும், மங்கி பால்ஸ் என்ற பகுதியையும் சுற்றுலாப்
பயணிகளைக் கவரக்கூடிய வளம் பெற்ற இடமாக மாற்ற அரசு
நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப் பகுதியில் சுகாதார வசதிகளை செய்து கொடுக்க
வேண்டும் என்கிற கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்
கின்ற வகையில் தற்போது 14 ஆரம்ப சுகாதார நிலையங்களை
82 இலட்சம் ருபாய் செலவில் தரமுயர்த்த திட்டமிட்டுள்ளதை
நான் வரவேற்கிறேன். அதில் என்னுடைய பொள்ளாச்சி
தொகுதியில் சுமார் 25 கிராமங்களில் வாழும் மக்கள் பயன்
அடையும் வகையில், பெரிய பொது ஆரம்ப சுகாதார நிலை
யத்தை, மருத்துவ மனைகளுக்கு உரிய வசதிகளைச் செய்து
கொடுத்து தரமுயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்
எனக் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை வளர்ப்பில் அதிக அக்கறை கொண்டுள்ள இந்த
அரசு அடுத்த ஆண்டில் 20 கால்நடை மருந்தகங்கள் தொடங்க
வும் 4 மருந்தகங்களை மருத்துவ மனைகளாக தரம் உயர்த்தவும்
மூன்று மருத்துவ மனைகளை மேம்பட்ட நிலையங்களாக தரம்
உயர்த்தவும் திட்டங்களை தீட்டியுள்ளதை வரவேற்கிறேன். அதில்
பொள்ளாச்சிப் பகுதியில் பெரியபோது கிராமத்தில் தற்போது
இருக்கக்கூடிய மருந்தகத்தை மருத்துவ மனையாக தரமுயர்த்தி,
அப்பகுதி விவசாயிகளுக்கு உதவி செய்ய அரசு நடவடிக்கை



எடுக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். மக்களின் அத்தியா
வசியத் தேவையான குடிநீர்ப் பிரச்சினையை சமாளிக்க
வேண்டிய நிலையில் அரசு உள்ளது. தமிழ் நாட்டில் உள்ள
அனைத்து இடங்களிலும் நீர் ஏற்று முறையின் மூலம் குடிநீர்
வழங்கப்படுகிறது. மின்சாரப் பற்றாக்குறை தற்போது இருக்
கின்ற நிலையில், மேற்படி அனைத்து நீர் ஏற்று முறைகளுக்கும்
மின்சாரம் முழு நேரமும் அளிக்க விதிவிலக்கு அளிக்க வேண்டும்.
அல்லது ஆயில் என்ஜின்கள் மூலம் எல்லா நேரங்களிலும் குடிநீர்
வழங்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

இங்கே பேசிய எதிர்க்கட்சி நண்பர்களில் சிலர் மத்திய அரசு
பார்த்துக் கொண்டிருக்கிறது. மத்திய அரசு கவனித்துக் கொள்
ளும் என்று அச்சுறுத்தல் தொனியிலே பேசினார்கள். இந்த
அரசைப் பொறுத்த வரையில் மக்களுக்காக எந்த தியாகத்தையும்
செய்ய புரட்சித் தலைவருடைய அரசு தயாராக இருக்கிறது.
ஏற்கனவே இப்படிப்பட்ட அச்சுறுத்தலையும், மிரட்டலையும்
புரட்சித் தலைவருடைய அரசு சந்தித்து விட்டு மறுபடியும்
ஆட்சியிலே அமர்ந்துள்ளது என்பதை அந்த நண்பர்களுக்கு பணி
வன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனாலும் புரட்சித்
தலைவருடைய இந்த அரசு மத்திய அரசை பொறுத்தவரை
உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம்
என்ற அண்ணாவினுடைய தத்துவத்தை தான் பின்பற்றுகிறது
என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-10].

இப்படிப்பட்ட அச்சுறுத்தல்களை இ. காங்கிரஸ் முதலமைச்
சர்களே ஒத்துக் கொள்ளமாட்டார்கள் என்பதை அக்கட்சி நண்
பர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வதோடு, இப்படிப்பட்ட
பேச்சுகள் சீரான உறவிற்கு ஏதுவாக இருக்காது என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியைப் பொறுத்தமட்டில் பொள்ளாச்சி நகரில்
ஒரு பெண்கள் கல்லூரியை அரசு அமைக்க வேண்டும் என்றும்
பொள்ளாச்சியின் மேற்குப் பகுதியில் பெரியபோது கிராமத்தில்
அரசு உயர்நிலைப்பள்ளி அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும் பொள்ளாச்சி என்றாலே சந்தை தான் ஞாபகம்
வரும். தென் இந்தியாவிலேயே தலை சிறந்த சந்தையாக அது
விளங்குகிறது. பொள்ளாச்சி நகராட்சிக்கு அந்த சந்தை அதிக
வருமானம் தருவதால் மேற்படி சந்தையை விரிவுபடுத்த அரசு
சகல உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு புரட்சிகரமான பல திட்டங்களை நாட்டு மக்களுக்கு
நன்மை பயக்கின்ற வகையிலே ஏழை, எளிய மக்களின் வாழ்

விலே ஒளி ஊட்டுகின்ற வகையிலே தமிழக அரசு நிதி நிலை அறிக்கையை உருவாக்கியுள்ள மாண்புமிகு என் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களையும் நிதியமைச்சர் அவர்களையும் பாராட்டி வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, 1981–82 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை யிலே பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றிகூறி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய இரண்டாவது புதிய அமைப்புக்குப் பின்னால் இரண்டாவது ஆண்டு நிதிநிலை அறிக்கையாக இந்த ஆண்டு வைத்திருக்கிறார்கள். 1980–81 ஆம் ஆண்டு நிகர ரி ரூ. 5·39 கோடி அளவுக்கும், நடப்பு ஆண்டு, 1981–82 ஆம் ஆண்டு வருவாய்க் கணக்கில் 1,128 27 கோடி ரூபாயும், நிகரச் செலவு 1,137 84 கோடி ரூபாயும், நி ர இழப்பு 13 30 டி ரூப யும் இந்த நிதிநிலை அறிக் க யிலே காட்டப்பட்டிருக்கிறது. ஆனால் ஆண்டு இறுதியிலே இழப்பு ரூ. 122.96 கோடி ரூபாய்க்கு வரும் என்ற முறையிலே டெபிசிட் பட்ஜெட்டாக இதைத் தந்திருக்கிறார்கள். ஆனால் மக்களை நல்வாழ்வுத் திட்டங்கள் ஏதாகிலும் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கிறதா என்று பார்த்தால் 1 முதல் 56 பக்கங்கள் கொண்ட பெரிய அறிக்கையாகத்தான் வைக்கப் பட்டிருக்கிறதே தவிர பெரு நோக்கோடு, தொலை நோக் கோடு இருக்கிற திட்டங்கள் ஏதாகிலும் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூறமுடியும்.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஏதாகிலும் திட்டம் இருக்கிறதா என்று கேட்டால், அதுவும் இல்லை. வளர்ச்சியைப் ஊக்குவிப்ப தற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டம் இருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்றுதான் கூற வேண்டும்.

11 லட்சம் பட்டதாரிகள் வேலைவாய்ப்புப் பெறுவதற்கு வேலைவாய்ப்புத் திட்டங்கள் இதிலே இருக்கிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை. தேர்தல் அறிக்கையிலே நீங்கள் பல வற்றைக் கூறினீர்கள். இதிலே ஏதாகிலும் அதைப்பற்றி இருக்கிறதா என்று தேடிப்பார்த்தால் இல்லை. வீட்டுக்கு ஒருவருக்கு வேலை தருவோம் என்ற வாக்குறுதி தந்தார்கள். அந்த வேலைவாய்ப்பு யாருக்கு எப்போது வரும் என்றுதான் கிராமப்புறங்களிலே உள்ள ஏழை எளிய மக்கள், படித்தவர்கள் பட்டதாரிகள் மத்தியிலே கேள்வி எழுந்திருக்கிறது. மலிவு விலை யில் 22 கேரட் தங்கம் தரப்படும் என்று சொன்னீர்கள். அதற் காக 10 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். 14 கேரட்டா 22 கேரட்டா என்ற நிலை எதிர்காலத்திலேதான் தெரியப் போகிறது





பிரசவகாலத் தாய்மார்களுக்கு சத்துணவு, 150 எங்கே என்றுதான் கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஒவ்வொரு தாய் மாரும்—பிரசவம் ஆக இருக்கக்கூடிய தாய்மார்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

முதியோருக்கு உதவித் தொகை, வாரம் ஒரு கிலோ அரிசி எங்கே தருகிறீர்கள், எந்த ஊரிலே தந்து கொண்டிருக்கிறீர்கள் என்ற கேள்வி கிராமப்புறங்களிலே எழுந்துகொண்டிருக்கிறது.

கைம்பெண்ணுக்கு உதவித்தொகை, இதுவும் இல்லை.

உடல் ஊனமுற்றவர்களுக்கு எங்கேயாகிலும் தந்திருக்கிறீர் களா என்று பார்த்தால் இல்லை. கண்ணொளி அற்றோருக்கு உதவி.

இப்படி ஏதோ மக்களை ஏமாற்றுவதற்காக, அவர்களைத் திசை திருப்புவதற்காக அறிக்கை விட்டுக்கொண்டு, இதை யிதைச் செய்வோம் என்று கூறுகிறீர்களே தவிர, இன்னின்னவை செய்தோம், அதனால் இவ்வளவு மக்கள் பலன் அடைந்தார்கள் என்று குறிப்பு இரண்டாவது அறிக்கையிலே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையிலே பிரதானமாக இருப்பது, இன் றைக்குக் காலச் சூழ்நிலையில் வறட்சி அதிகமாக இருக்கிறது என்பதாகும். அது இயற்கையின் கோளாறாக இருக்கலாம். கட்சி பேதமற்ற முறையில் போர் நடவடிக்கை போல எடுக்கப் பட வேண்டுமென்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொண்ட கொள்கையாக இருந்தாலும் கூட, இதில் ஆளுங்கட்சிக்குப் பெரும்பொறுப்பு இருக்கின்ற காரணத்தால் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று பார்த்தால் அது மிகவும் வருத்தமாக இருக்கிறது.

வறட்சி நிலையைப் பொறுத்தவரையில் கடந்த ஆறு மாதங் களுக்கு முன்பே, கடந்த ஜூன் மாத காலத்திலே இயற்கையாக பெய்ய வேண்டிய மழை பெய்யவில்லை. வறட்சி ஏற்படும் என்பதை அன்றைய தினத்திலேயிருந்தே நாம் உணர்ந்தோம். நவம்பரில் வர வேண்டிய புயல், காற்றும் அடங்கி விட்டது. அதற்குப் பிறகும் அறிக்கை விட்டோம். எதிர்காலத்திலே வறட்சி ஏற்படப் போகிறது. ஏழை எளிய மக்களுக்கு உண்ண உணவு கிடைக்காத சூழ்நிலை ஏற்படும் என்று எதிர்க்கட்சி வரிசையிலே இருந்தவர்களும், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் ஒரு சிலரும் கூறிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த அரசாங்கம் அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் தான் இதையிதைச் செய்கிறோம் என்று கூறக்கூடிய அளவிற்கு இருக்கிறதே தவிர அந்த

மக்களுக்கு, குடிதண்ணீர்கூடக் கிடைக்காத அந்த மக்களுக்கு எந்த ஏற்பாடாவது செய்திருக்கிறீர்களா என்று பார்த்தால் இல்லை என்று தான் நான் கூற முடியும்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 700 போர் வெல்கள்—நகர் மன்றங்களிலே 200, கிராமப்புறங்களிலே 500 என்று ஒதுக்குவதாகக் கூறினார்கள். ஆனால் அவை போடப்பட்டதே தவிர, ஒரு சிலவற்றில் தண்ணீரே வருவது கிடையாது; போட்டவைகளில் தண்ணீர் கிடைக்கக் கூடிய நிலைமையிலும் இல்லை என்பதைத்தான் பார்க்க வேண்டியிருக்கிறது.

போளூர் தொகுதியிலே இன்றைக்கும் பல கிணறுகளில் வறண்ட நிலைமை இருக்கிறது. அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் உள்ள மக்களுக்குக் குடிக்க கூடத்தண்ணீர் கிடைக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பத்திரிகைகள் கூட, பத்திரிகா தர்மம் என்ற முறையில் பத்திரிகை நிருபர்கள் வடாற்காடு மாவட்டத்திலே சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு, அந்தப் பகுதியில் உள்ள வறட்சி நிலைமையைப்பற்றி யதார்த்தமாக அரசுக்கும் மற்றவர்களுக்கும் தெரிவித்தார்கள். எதையாகிலும் பரிசீலித்தார்களா என்றால் அதுவும் இல்லை.

தமிழக முதல்வராக இருக்கின்ற மதிப்பிற்குரிய திரு எம்.ஜி. ஆர். அவர்கள் நவம்பர் மாதம் 7ஆம் தேதி ஆனந்தவிகடன் விழாவிலே கலந்து கொள்ள இருந்தபொழுது, வடாற்காடு மாவட்டத்திற்கு வருவதாக எங்களுக்கெல்லாம் அறிக்கை அனுப்பி, நாங்களும் அவர்கள் வருவார்கள்; சுற்றிக் காண்பிப்போம்; ஏழை எளிய மக்களுக்குப் பரிகாரம் காண முடியும்; குடிப்பதற்கும் குடிநீர் கிடைக்கும், மக்கள் சுபிட்சமாக இருப்பார்கள்; உணவுத் தட்டுப்பாடு நீங்கும் என்றெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். ஆனால் அவர்கள் கடைசி நிமிடத்திலே வராத ஒருநிலைதான் அன்றைக்கு ஏற்பட்டது.

அதற்குப் பிறகு, நவம்பர் மாதம் கழித்து ஐந்து மாதங்களுக்குப் பிறகு மார்ச் 9—ந் தேதி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்பொழுது அந்த ஜில்லாவில் இருக்கின்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிவித்தார்களா என்றால், இல்லை. ஏதோவொரு பகுதியைச் சுற்றிப் பார்த்துவிட்டு, பல தவறுகள் நடந்திருக்கின்றன என்பதை அவர்களே நேராகப் பார்த்து, சாலையை இரண்டு மைல் அளவிற்குப் படம் எடுக்கச் சொல்லி, ஒரு ஆணையாளர் அவர்களை வேலைநீக்கம் செய்திருக்கிறார்கள்.



அதுபோன்ற ஒரு நிலை, ஊழல் நிலை, ஒரு அமைச்சரவையிலே ஏற்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆறு மாதங்களுக்குப் பின்னும், பெரும் வறட்சி ஏற்பட்ட பின்னும் எந்த நிலையையும் அரசு எடுக்காததன் காரணமாக அந்த மாவட்டத்தில் மிக மோசமான தண்ணீர்த் தட்டுப்பாடு இன்றைய வரையில் இருக்கிறது என்பதை இந்த அவையில் உள்ளவர்களும், அமைச்சரவையும் உணர்ந்து, அதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணவுப் பங்கீட்டுக் கடைக்குச் சென்றதாகவும், அங்கே அதிகாரிகள் பல தவறுகள் இழைத்திருப்பதாகவும் கூறினார்கள். இந்தத் தவறு ஏதோ ஒன்றிரண்டு அலுவலகங்களில், ஏதோ ஒன்றிரண்டு விற்பனைக் கூடங்களில்தான் ஏற்பட்டன என்றில்லாமல், உங்கள் ஆட்சியில் அது பரவலாக இருக்கின்றது என்ற குற்றச்சாட்டையும் சொல்ல நான் ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஊழலாட்சியாக இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது என்பதை நிருபணமாகச் சொல்ல முடியும்.

[பிற்பகல் 12-20]

நான் ஒரு ஆணையாளர் பற்றி, குறிப்பாக, போளூர் ஆணையரைப் பற்றி அமைச்சரிடம் கூட பல பிராதுகளைக் கொடுத்தேன். நானே தனிப்பட்ட முறையில் கொடுக்கவில்லை. பொது மக்களிடமிருந்து வந்த பிராதுகளை நான் சுட்டிக்காட்டி அதன்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னேன். ஆனால், அந்த ஆணையர் அங்கேயே இருந்து கொண்டு இயன்ற வரையில், முதலமைச்சர் சுட்டிக்காட்டிய குறைபாடுகளைக் காட்டிலும் ஆயிரக்கணக்கான குறைபாடுகளைச் செய்து வருகிறார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நண்பர்கள் கூடக் கடந்த வாரம் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள், பல ஊழல் பட்டியல்கள் கொடுத்து. அது போன்ற ஒரு நிலை ஊராட்சி ஒன்றியங்களிலே ஏற்படுகின்றது என்றால் நிர்வாக சீர்கேடு உங்கள் ஆட்சிக்காலத்தில்தான் ஏற்பட்டிருக்கிறது. குடி தண்ணீருக்கு வேண்டிய பரிகாரம் ஏதாவது கண்டிருக்கிறீர்களா என்று கேட்டால் இல்லையென்றுதான் கூறமுடியும். கிணறுகள் பொட்டலாகிக் கிடக்கின்றன.

மதிய உணவுகூட வழங்க முடியாத நிலையங்கள் ஒன்றியத்தில் ஏற்பட்டிருக்கின்றன. கடந்த ஒரு மாத காலமாக, மதிய உணவே, ஏழை, எளிய மக்களுக்கு, ஏழை எளிய குழந்தை

களுக்கு வழங்க முடியாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம் தண்ணீர் இல்லையென்ற நிலை. இது மாவட்ட அளவிலே பரவலாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறீர்களா என்றால், இன்றைய வரையில் இல்லையென்றுதான் கூறமுடியும்.

அங்கு பள்ளிக்குச் சென்றால், எந்த ஒரு பள்ளியிலும் ஒன்றைப் பார்க்கலாம். அந்த வாயிலில் செல்லும்போதே ஒரே நாற்றம். குழந்தைகள் எப்படி இருக்கின்றன என்று பார்க்கும் போது, குடிக்கவே தண்ணீர் இல்லை. குளிப்பதற்கு தண்ணீருக்கு எங்கேபோவது என்ற நிலை இருக்கிறது. அந்தப்பகுதியிலே. ஏன் நாற்றம் என்று கேட்டபோது, குளிக்காததன் காரணமாக நாற்றம் வருகிறது என்று ஆசிரியர்கள் சொல்கிற அளவில் வருந்தத்தக்க, வெட்கத்திற்குரிய நிலை எங்கள் பகுதியிலே இருக்கிறது. அடிப்படைத் தேவையான குடிதண்ணீர் தேவையை நிறைவு செய்யாத ஒரு அரசு இருக்கிறதென்றால் அது அனைத்திந்தியஅண்ணா திராவிடமுன்னேற்றக்கழக அரசாகத்தானிருக்கும் என்று இந்த நேரத்திலே நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும் இந்தப் பங்கீட்டில் 500 குழாய்த் துளைக் கிணறுகள் எங்கள் மாவட்டத்தில் போடுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கை விட்டார்கள். ஆனால், ஒரு பகுதியில் அதிகமாகவும் ஒரு பகுதியில் 4 என்ற அளவிலும் ஏதேச்சதிகாரமாக நடைபெறுகிறது. அங்கே கேட்பதற்கு ஆள் இல்லை என்ற முறையில் ஏதோ ஒன்றிரண்டு பஞ்சாயத்து யூனியன்களுக்கு இரண்டு மூன்று என்ற அளவிற்கு மட்டுமே கூடக்கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மக்கள் இல்லையா? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வாக்களித்த மக்கள் பெருவாரியாக இருக்கிற பகுதிகளும் புறக்கணிக்கப்படுகின்றன, என்றால் நிர்வாகச் சீர் கேடுதான் அதற்குக் காரணம் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் அது போன்ற நிலைகள் இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

குடி நீர் வடிகால் வாரியம் என்ற நிறுவனம் இருந்துகொண்டிக்கிறது. அந்த நிறுவனம் இன்றைய வரையில், ஏஜன்சி என்று கூறிக்கொண்டிருக்கிறது. அரசுக்கும், பஞ்சாயத்து யூனியனுக்கும் மற்றவர்களுக்கும் அவர்கள் ஏஜண்டுகளாம். இது வேடிக்கையான ஒரு நிறுவனம். மக்கள் தொடர்பில்லாத நிறுவனமாக, ஏதோ மத்திய தரகர்கள்போல் அரசுப் பணத்தை செலவுசெய்ய, ஏதோ அவர்களுக்கு கான்ட்ராக்ட் கொடுத்ததைப் போல் அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாகக் கூறவேண்டுமென்றால், அவர்கள் நிர்வாகம் மிகமோசமாக இருக்கிறது. எங்கள் மாவட்டத்தில் குடி நீர் வடிகால் வாரியம்



மாநாடு போட்டு, அங்கே பல திட்டங்களைக் கூறியது. ஆனால், இதுவரையில் ஏதாவது செய்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லையென்றுதான் கூற முடியும். குழாய்க் கிணறுகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. ஆனால் இன்றைய வரையில் அவை பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாகக் கூற வேண்டுமென்றால் எங்கள் பெரம்பலூர் நகரத்தைப் பொறுத்தவரையில் ரூ. 17 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு திட்டம் தீட்டி, அந்த நகர மக்களுக்கு குடிநீர் விநியோகிப்பதாகக் கூறினார்கள், ஆனால், இப்பொழுது விநியோகம் செம்மையாக இருக்கிறதா என்று பார்த்தால் மூன்றாவது கிணறு போடக் கூடிய அளவுக்கு அங்கே கடன் வழங்கவில்லை. பல தகராறுகள், இன்றைக்கு குடிநீர் வடிகால் வாரியத்தினால் ஏற்பட்டிருக்கிறது. ஏதோ அன்றைக்குப் பஞ்சாயத்து ஒன்றியத் தலைவராக இருந்தவர் வெட்டிய கிணறுதான் இன்றைக்கு $\frac{1}{4}$ டம்ளர், $\frac{1}{2}$ டம்ளர் அளவுக்கு தண்ணீர் வழங்குகிறது.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த மட்டில் தண்ணீர் விற்கப் படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் சவாலாக அன்றைக்குக் கூறினார்கள். விற்கவில்லை. எங்கேயும் விலை போகவில்லை. தண்ணீர் எங்கள் ஆட்சியிலே தாராளமாகக் கிடைக்கிறது. என்று சொன்னார்கள். ஆனால் விற்கப்படுகிறது என்பது உண்மை அது யதார்த்த உண்மை. அதை ஒத்துக் கொண்டு, அந்தப் பகுதி மக்களுக்கு இருக்கிற குடி தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கும், நாம் திட்டமிடவேண்டுமென்றுச் சுட்டிக் காட்டுகிறேன்.

அடுத்து உணவு பிரச்சினை. அடுத்த தை மாதம் வரையில், ஜனவரி வரையில்,உணவுத் தட்டுப்பாடு இருக்கத்தான் செய்யும். தை மாதம் சம்பா விளைந்தால்தான் எங்கள் மாவட்டத்திலே உணவு கிடைக்கும். அதுவரையில் அந்தப் பகுதி மக்களுக்கு என்ன செய்யப்போகிறீர்கள்? உணவுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி தாராளமாகக் கிடைக்கிறதா, என்று பார்த்தால் ஒரு கடைக்கும் இன்னொரு கடைக்கும் விலையில் வித்தியாசம் இருக்கிறது. ஒருகிலோ ரூ. 2.15 என்ற விலைக்கும், ஒருகிலோ ரூ. 2—45 என்ற விலைக்கும் விற்கப்படுகின்றன. என்ன காரணம் என்று கேட்டால், ஏதோ அரசியல் காழ்ப்புணர்ச்சியால் அதிக விலை விற்கப்படுகிறது என்று கூறினார்கள், இந்த அவையில் அதனைக் கூற விரும்பவில்லை. அந்த அளவு அங்கேயெல்லாம் நிர்வாகச் சீர்கேடு இருக்கிறது. பிராஞ்சு மேனேஜர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் மிக மோசமாக இருக்கிறார்கள். முதலமைச்சரே அதற்கு சாட்சியமாக இருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொண்டு, இவைகளையெல்லாம் போக்க நீங்கள் திட்டமிட வேண்டு மென்று கூறிக்கொண்டு, இந்த நிதி நிலை அறிக்கை யிலே மக்களுக்குத் தேவையான திட்டங்கள் ஏதும் இல்லாமல் ஏதோ வறட்சியாக பல பக்கங்களைக் கொண்ட ஓர் அறிக்கை

யாகத்தான் இது இருக்கிறதே தவிர, மக்களுக்கு நல்ல பலனை உருவாக்கக்கூடிய அறிக்கையாக இல்லையென்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1981—82 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை வழங்கியதற்கு என்னுடைய வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுக்கும். எங்களுடைய கட்சிக் பொறுப்பாளரான அண்ணன் மணிமாறன் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி இரண்டொரு கருத்துக்களை பேச ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே அனைத்து மக்களுக்கும் நலம் ஈட்டித் தருகின்ற வகையிலே ஒவ்வொரு துறையிலேயும் இந்த அறிக்கை நன்மையைச் செய்திருக்கிறது. ஆனால் இதை என்ன காரணத்தாலோ மற்றக் கட்சியிலே இருக்கின்ற அருமை உறுப்பினர்கள் அனைவரும் இதைக் குறை சொல்ல வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு சொல்லுகின்ற கருத்து தானே தவிர நிதி நிலை அறிக்கையிலே குறையுள்ளதாக இல்லை என்று தெளிவாகத் தெரிகிறது. புரட்சித் தலைவருடைய ஆட்சியில் மக்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய வேண்டுமோ அனைத்தையும் செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கோடு மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் அண்ணன் டாக்டர் நாவலர் அவர்களும், அவரோடு துணைநின்று செயலாற்றிய நிதித் துறை செயலாளர் அவர்களும் நல்ல முறையில் இந்த நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கும் அவரைச் சார்ந்த நிதித்துறையினருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கோதுமையின் விலையை மத்திய சர்க்கார் 117 ரூபாயில் இருந்து 130 ஆக உயர்த்தி இருக்கிறது. ஆனால் நம் மாநிலத்தில் விளைகின்ற நெல்லுக்கு குறைந்த விலையை நிர்ணயித்து இருக்கிறார்கள். இந்த இரண்டுக்கும் இடையே உள்ள விலை மாற்றத்தை மாற்றுவதற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு மத்திய அரசை வற்புறுத்தி அந்த விலையைப் பெற்றுத் தருவதற்கு முன்வர வேண்டும். கோதுமை விளைவதற்கு தண்ணீர் அதிகம் தேவையில்லை. ஆனால் நெல் விளைவதற்கு காலையிலும் மாலையிலும், தண்ணீர் அதிகம் தேவை. மனைவி குழந்தையைக் கவனிக்காவிட்டாலும், நட்டு இருக்கின்ற வயலைப் பார்த்தே ஆக வேண்டும். இந்த நிலை இல்லாவிட்டால் நெல்லை மக்களுக்கு விநியோகம் செய்ய முடியாது. எனவே கோதுமைக்கும் நெல்லுக்கும் உள்ள வேறுபாட்டை எந்த தியாகத்தைச் செய்தாகிலும் புரட்சித் தலைவர் அரசு பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டு பெற்றுத் தருவார் என்றும் கூறுகிறேன்.



அடுத்து நம்முடைய புரட்சித் தலைவருடைய சர்க்கார் மோட்டார் பொருத்தப்பட்ட ரிக்ஷாக்கள் வழங்குகின்ற நல்ல அம்சத்தை இந்த வரவு செலவுத் திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். அதை வரவேற்பதோடு, தற்போது சென்னையிலும், கோவையிலும், மதுரையிலும், திருச்சியிலும் இருப்பது போன்று இந்த சைக்கிள் ரிக்ஷாக்களை தர்மபுரி போன்ற பின்தங்கிய மாவட்டங்களிலும் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த சர்க்கார் செய்கின்ற நன்மைகளை அந்த மாவட்டங்களில் உள்ள மக்களும் கண்டு களிக்கவேண்டும்.. அவர்களும் அனுபவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த சர்க்காரில் கோழி வளர்ப்பதற்கு ஏறத்தாழ 30 கோடி ரூபாய் கடன் வழங்க இருக்கிறார்கள். அதில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இவ்வளவு தொகை என்று ஒதுக்கிடும் போது இங்கே இருக்கிறவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் கிடைக்கவில்லை என்றால் அது காலாவதியாகிவிடுகிறது. ஆகவே எந்தெந்த அடுத்த மாவட்டத்திற்குச் சென்றுவிடுகிறது. அந்தத் மாவட்டத்திற்கு எவ்வளவு தொகை என்று குறிப்பிட்டு, அந்த மாவட்ட மக்களுக்கு துறை அதிகாரிகளிடம் உறுதிப்படுத்தி அந்த மாவட்ட மக்களுக்கு செயல்பட வேண்டும் என்று அதைக் கொடுக்கின்ற வகையிலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—30]

மின்சார வாரியத்திற்கு தமிழக அரசு மொத்த நிதிநிலை அறிக்கையிலே கிட்டத்தட்ட மூன்றிலே ஒரு பங்கு நிதியை ஒதுக்கி இருக்கிறது. இது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இதை ஒரு முறை பாராட்டினால் மட்டும் போதாது, பலமுறை எல்லோரும் பாராட்ட வேண்டும். இதய சுத்தியோடு பாராட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவுக்கு பணம் ஒதுக்கியதற்கான காரணம் பஞ்சத்தைப் போக்க உணவு உற்பத்தியைப் பெருக்க உதவி செய்யும் மின்சார பம்பு செட்டுகளுக்கு இணைப்பு வழங்கவும் தொழில் துறைக்கு தேவையான மின்சாரத்தை அளித்து நாட்டிலே உற்பத்தியைப் பெருக்கவும் உறுதுணையாக இருக்கவும் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கியிருப்பதற்காக நான் தமிழக மக்கள் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் என்னுடைய பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே சிமெண்ட் தொழிற்சாலை துவங்க இருப்பதற்காக ரூ. 32 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. தருமபுரி மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே படித்தவர் கள் மிகவும் கம்மி, அப்படி இருந்தும் அங்குப் படித்த வாலிபர் களுக்கு வேலை கிடைக்காமல் இருக்கிறது. அதன் காரணமாக

[திரு எஸ். ரங்கநாதன்] [1981 மார்ச் 26

அவர்கள் நிய வழியில், சமுதாயத்திற்குத் தேவையில்லாத வழியில் நடந்துவருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை தருமபுரி மாவட்டத்தில் ஏற்படுத்த வேண்டும் என்று என்னுடைய தொகுதி சார்பாகவும், என் சார்பாகவும் நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் தருமபுரி மாவட்டத்தில் மைய நூலகம் கட்ட அமைக்க ரூ. 49.7 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதற்காக நான் இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மனதார பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் 1-6-1981 முதல் அரசு ஊழியர்களாக ஆக்கப்படுவார்கள் என்கிற செய்தியை கேட்டு உள்ளபடியே பெருமிதம் கொள்கிறேன். அதற்காக அந்த ஆசிரியர்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் இந்த அரசைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இது நீண்டகாலமாக ஆசிரியர்கள் எண்ணிக்கொண்டு இருந்த பிரச்சினை. இந்த அறிவிப்பு தமிழக அரசின் முதலமைச்சர் புரட்சித் தலைவரின் நல்ல எண்ணத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்து இருக்கிறது என்பதற்காக மறுபடியும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் காரைக்குடியில் ஒரு பல்கலைக் கழகம் நிறுவுவதற்காக என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால் எம். ஏ., எம். எஸ். சி., பி. எல். போன்ற பட்டப்படிப்பு படிக்கும் வகையில் கல்வி நிலையங்களில் வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவுவதற்காக 1 கோடி ரூபாய் இந்த நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கி இருப்பதற்காக உள்ளபடியே இந்த அரசை நான் பாராட்டுகிறேன். ஆயிரம் காலமாகத் தவமிருந்து பெற்றெடுத்த தவப் புதல்வர்கள் செய்ய முடியாத காரியத்தை, நம்முடைய தமிழகத்தின் புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்து இருப்பதற்காக இந்த அரசையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களையும் பாராட்டி, நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உடல் ஊனமுற்றோர் நலனுக்காக இந்த அரசு நிதி ஒதுக்கம் செய்து இருப்பதை நான் மனதார வரவேற்கிறேன். அந்த உடல் ஊனமுற்றவர்களும் சமுதாயத்தில் நல்ல நிலைமையில் வாழ வேண்டும் என்கிற அடிப்படையில் இந்த உதவிகளைச் செய்ய முன்வந்த இந்த அரசுக்கு நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். தருமபுரியில் 15 படுக்கை உள்ள மகப்பேறு இல்லத்தைப் புதுப்பித்து, அதை 15 படுக்கைகள் கொண்ட



1981 மார்ச் 26] [திரு எஸ். ரங்கநாதன்]

மருத்துவமனையாக மாற்றுவதற்கான திட்டத்தை அறிவித்து இருப்பதற்காக உள்ளபடியே நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து குடும்பக் கட்டுப்பாடு என்பதற்கு இதிலே நிறைய நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இருந்தாலும் கொஞ்சம் மாறுபாடான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். நிதி ஒதுக்கியதிலே மாறுபாடு இல்லை; செயல் படுத்துவதிலே தான் மாறுபாடு. குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயராலே உழைக்கின்ற வர்க்கத்தை — வேலை செய்கின்ற வர்க்கத்தை ஆசிரியர்கள் அழைத்து வந்து — ஆசிரியருக்கு இவ்வளவு பேர்களை அழைத்து வரவேண்டுமென்று இலக்கு வைத்திருக்கிறார்கள். குடும்பக்கட்டுப்பாடு செய்து அனுப்பிவிடுகிறார்கள். இந்த முறையை மாற்ற வேண்டும். யாராக இருந்தாலும், எவ்வளவு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், பணம் படைத்தவராக இருந்தாலும் ஏழையாக இருந்தாலும் குடும்பக் கட்டுப்பாடு எல்லோருக்கும் சமம் என்ற நிலையில் சட்டத்தை இயற்றி, செயல்படுத்த வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் இந்த உழைக்கின்ற வர்க்கத்தை ஏதோ காசுக்கு ஆசை காட்டி, அழைத்து வந்து கட்டுப்பாடு செய்து அனுப்பிவிடுகிறார்கள். இந்த முறையை மாற்றி அமைக்க சர்க்கார் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

